https://telegram.me/aedahamlibrary

பிறிதொரு மரணம்

உதயசங்கர்

Contents

முன்னுரை
1 டேனியல் பெரியநாயகத்தின் புல்லாங்குழல்
2 சக மனிதன்
3 உறவு
4 ஒரு பிரிவுக் கவிதை
5 மனிதர்கள்
6. பெயிண்டர் பிள்ளையின் ஒருநாள் காலைப்பொழுது
7. நிலை
8. பால்ய சினேகிதி
9. யாவர் வீட்டிலும்
10. விடியுமா?
11. வெயில்
12. உள்ளும் வெளியும்
13. எதிர்கொள்ளல்
14. டேவிட் செல்லையாவின் கலைப்பயணம் - சில குறிப்புகள்
15. வானம் எல்லையில்லாதது
16. வழி தேடி
17. புறாக்களும் தண்டவாளங்களும்
18. அன்புள்ள சித்திக்கு
19. ஐந்து ராஜகுமாரர்களும் ஆவுடையப்ப பிள்ளையும்
20. மார்ட்டின் ஹைடேக்கரும்* மத்தியானச் சோறும்
21. போர்வை
22 அய்யம்பெருமாள் என்றொரு மனிதர்
23. மின்னல் பொழுது
24. கருப்பு மதியம்
25. பழி
26. சாட்சி
27. மறதியின் புதைசேறு

28. சோமையாவின் பாட்டு
29. சரசுவும் சரசுவும்...
30. வாசலில் ஒரு பெட்டி
31. தூரம்
32. அசைவு
33.மண்ணாங்கட்டி
34 அந்நியம்
35. சிந்தியது
36. வீடும் வெளியும்
37. சித்திரக்குள்ளர்களின் கலகம் ஒரு வரலாற்றுக் குறிப்பு
38. வியூகம்
39. குமாரபுரம் ரயில்வே ஸ்டேஷனில் ஓரிரவு
40. வாசனை
41. பிறிதொரு மரணம்
42. பூனை வெளி
43. புதிர்வழிகளில் சுற்றித்திரியும்
44. அடி
45. இது ஒரு ரவிச்சந்திரனின் கதை (சுகந்தியின் கதையும் கூட)
46. அண்டாகா கசும்...
47. ஒரு விளக்கும் இரண்டு கண்களும்
48. ஊழி

முன்னுரை

காலத்தின் வழியே கதைகளும்... - உதயசங்கர்

பெரும்பாலான எழுத்தாளர்களைப் போல நானும் கவிதையில் தான் என் பயணத்தைத் தொடங்கினேன். அந்தக் காலகட்டத்தில் கோவில்பட்டியில் கி.ரா, பூமணி, கௌரிஷங்கர், ச.தமிழ்ச்செல்வன், சுவடி, சோ.தர்மன் என்று புனைவு எழுத்தாளர்கள் அதிகமாக இருந்ததினால் இயல்பாகவே கதைகள் எழுதத் தொடங்கினேன். என்னுடைய முதல் கதை 'மஞ்சு' 1980ஆம் ஆண்டு மார்ச் மாதம் செம்மலரில் வெளியானது. அந்தக் கதையை யாருக்கும் காட்டாமல் ரகசியமாகவே செம்மலருக்கு அனுப்பி வைத்திருந்தேன். அந்தக் கதை பிரசுரமான பிறகே நான் கதையும் எழுத முயற்சிக்கிறேன் என்று எல்லோருக்கும் தெரிந்தது. என்னுடைய சமவயது நண்பர்களான நாறும்பூநாதன், சாரதி, திடவைபொன்னுச்சாமி, அப்பணசாமி ஆகியோரும் கதைகள் எழுதத் தொடங்கியிருந்தனர். இடதுசாரி இயக்கம் எழுச்சி பெற்றிருந்த காலம் அது. தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து நானும் நண்பர்களும் பணியாற்றிக் கொண்டிருந்தோம். இலக்கியம், தத்துவம், அரசியல் என்று தீராத விவாதங்களில் பார்வையாளர்களாகவும் சிலசமயம் பங்கேற்பாளர்களாகவும் இருந்தோம்.

தினம் ஒரு கதையை யாராவது எழுதிக் கொண்டு வருவார்கள். வாசிப்பும் விமரிசனமும் பயங்கரமாக நடக்கும். அநேகமாக எல்லோரின் ஒருமித்த அங்கீகாரத்தை யாருடைய கதையும் முதல் வாசிப்பில் பெற்றதில்லை என்பதிலிருந்தே விமரிசனம் எப்படியிருக்கும் என்று புரிந்து கொள்ளலாம். கோணங்கி எழுதத் தொடங்கிய பின்னர் அவனோடு ஊர் ஊராய் சுற்றித்திரிந்தேன். என் மீது இனம்புரியாத அன்பையும் அக்கறையையும் வைத்திருந்த மறைந்த எழுத்தாளர் ஜோதிவிநாயகம் என் இலக்கியப்புரிதலை விரிவுபடுத்தினார். வேலையில்லாமல் இருந்த கொடுமையான ஐந்து வருடங்களே இப்போதும் என்வாழ்வில் பொற்காலம்.

விதவிதமாகக் கதைகள் எழுதிப் பார்த்த காலம். அப்போது வாசித்த எல்லா எழுத்தாளர்களின் பாதிப்பும் என்னுடைய கதைகளில் இருந்தது. தொகுப்பாக வெளியிடும்போது அத்தகையக் கதைகளை ஒதுக்கி விட்டோம். எழுத்தாளர் தமிழ்ச்செல்வன் உதவியினால் என்னுடைய முதல் 'தொகுப்பு யாவர் வீட்டிலும்' 1988ஆம் ஆண்டு சென்னை புக்ஸ் வெளியீடாக வெளிவந்தது. அப்போது நான் ரயில்வேயில் உதவி

நிலைய அதிகாரியாக திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள வேளானந்தல் ரயில்வே ஸ்டேஷனில் சேர்ந்திருந்தேன். அந்தத் தொகுப்புக்குப் பரவலான வரவேற்பும் கிடைத்தது. இலக்கிய விமரிசகர் க.நா.சு. அந்தத் தொகுப்பைப் பாராட்டி தினமணியில் எழுதியிருந்தார். அது அமைப்புக்கு உள்ளேயும், வெளியேயும் பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

அதன்பிறகு நான்கு வருடங்கள் கழித்து என்னுடைய இரண்டாவது தொகுப்பான 'நீலக்கனவு' 1992ஆம் ஆண்டு சவுத் விஷன் வெளியீடாக பிரசுரமானது. 1995-ஆம் ஆண்டு என்னுடைய மூன்றாவது தொகுப்பான 'மறதியின் புதைசேறு' ஸ்நேகா பதிப்பக வெளியீடாக வெளிவந்தது. அந்தக் காலகட்டம் என்பது தமிழ் இலக்கியத்தில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த காலம். லத்தீன் அமெரிக்க இலக்கியம், பின்நவீனத்துவ இலக்கியம், ஸ்ட்ரக்சுரலிசம், மேஜிகல் ரியலிசம் என்று ஏராளமான புதிய போக்குகள் அறிமுகமான காலம். யதார்த்தவாத எழுத்துகளை புறந்தள்ளிய காலம். ஏற்கனவே எழுதிக்கொண்டிருந்த ஏராளமான எழுத்துலக ஜாம்பவான்களே திகைத்துப் போயிருந்தனர். எனக்கும் அத்தகைய திகைப்பு ஏற்பட்டது என்பது உண்மை. அதனால் கிட்டத்தட்ட ஐந்தாறு வருடங்கள் சிறுகதைகள் எழுதவில்லை அல்லது ஒன்றோ இரண்டோ கதைகள் எழுதியிருப்பேன். கவிதைகள், மலையாள இலக்கிய மொழிபெயர்ப்பு, ஹோமியோபதி மருத்துவ நூல்கள் வாசிப்பு என்று காலம் கடந்தது.

2000-க்குப் பின் எனக்கு சிறுகதை எழுதுவதில் ஏதோ ஒரு பிடி கிடைத்தது. 2008ஆம் ஆண்டு வாசல் பதிப்பகத்தின் வெளியீடாக 'ஒரு விளக்கும் இரண்டு கண்களும்' என்ற தொகுப்பு வெளியாகி பரவலான கவனம் பெற்றது. 2009ஆம் ஆண்டு வம்சி பதிப்பகம் அதுவரை நூல் வடிவில் வெளியாகியிருந்த என்னுடைய கதைகளை 'பிறிதொரு மரணம்' என்ற மொத்தத் தொகுப்பாக வெளியிட்டது. ஒட்டு மொத்த கதைகளின் வழி என்னுடைய கதை உலகம் என்னவாக இருக்கிறது என்று எனக்கே தெரியவந்தது.

நான் தொகுப்பாக வெளியிட்ட கதைகளில் பாதியளவு கதைகள் வேண்டாம் என்று ஒதுக்கியவை. அதில் வருத்தப்படுவதற்கு எதுவும் இல்லை. எழுத்தாளன் எழுதுவதெல்லாம் பொன்முட்டை என்ற பிரமை எதுவும் எனக்குக் கிடையாது. அதோடு எல்லா எழுத்தாளர்களுக்கும் நல்ல தணிக்கையாளர் வேண்டும் என்ற நம்பிக்கை கொண்டவன். எனவே இப்போது வரை நான் எழுதுகிற எந்தக் கதையையும் உறுதியாக நல்ல கதை எழுதிவிட்டேன் என்று சொல்ல முடியாத

அளவுக்குப் பலவீனமானவாக இருக்கிறேன். அப்படிச் சொல்கிற எழுத்தாளர்களைப் பார்த்துப் பொறாமைப்படவும் செய்கிறேன். எப்போதும் என் கதைகளின் மீது சந்தேகம் இருந்து கொண்டேயிருக்கும்.

இதை எல்லாவற்றையும் தாண்டி பல நண்பர்கள் என்னுடைய கதைகளைப் பற்றி சிலாகித்திருக்கிறார்கள். பாராட்டியிருக்கிறார்கள். பல தொகுப்புகளில் என்னுடைய கதையும் இடம் பெற்றிருக்கிறது. தமிழின் காத்திரமான எழுத்தாளரும் என் அன்பிற்குரிய நண்பருமான கீரனூர் ஜாகிர்ராஜாவின் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளின் தொகுப்பாக 'குமாரபுரம் ரயில்வே ஸ்டேஷனில் ஓரிரவு' என்ற தொகுப்பு பாரதி புத்தகாலயத்தின் வெளியீடாக வந்து கவனம் பெற்றது. என்னுடைய கதைகளுக்கு இலக்கிய விமரிசகர் ம.மணிமாறன், எழுத்தாளர் அப்பணசாமி, பேராசிரியர் ரத்தினசாமி, எழுத்தாளர் கார்த்திகைப்பாண்டியன் ஆகியோர் விரிவான விமரிசனங்களை எழுதியிருக்கிறார்கள் அவர்களுக்கு மிக்க நன்றி. என் சிறுகதை நூல்களை வெளியிட்ட சென்னை புக்ஸ், சவுத் விஷன் புக்ஸ், ஸ்நேகா பதிப்பகம், வாசல் பதிப்பகம், வம்சி பதிப்பகம், கலைஞன் பதிப்பகம், பாரதி புத்தகாலயம் ஆகியோருக்கும் நன்றி.

இந்த நூலை இரண்டாவது பதிப்பாகக் கொண்டு வரும் நூல்வனம் பதிப்பக உரிமையாளர் அன்புத்தம்பி மணிகண்டனுக்கு என் பிரத்யேகமான அன்பும் நன்றியும்.

நான் இப்போது கு.அழகிரிசாமியின் கதைபெற்ற ஸ்தலமான குமாரபுரம் ரயில்வே ஸ்டேஷனில் பணி புரிந்து வருகிறேன். காலங்காலமாக நான் அங்கேயே இருப்பதைப் போன்ற உணர்வு தோன்றுகிறது. கு.அழகிரிசாமி எழுதிய 'குமாரபுரம் ரயில்வே ஸ்டேஷன்' கதையில் வருகிற வேப்பமரம் இன்னும் சலசலத்துக் கொண்டிருக்கிறது. அந்த ஸ்டேஷன் மாஸ்டர் குடியிருந்த குவாட்டர்ஸ் இடிந்துவிட்டதென்றாலும் அதைப்பார்க்கும்போது அதிலிருந்து ரயில் வரும் நேரத்தில் கிளம்பி வருகிற ஸ்டேஷன் மாஸ்டரைப் பார்க்க முடிகிறது. எந்த ரயிலும் இப்போது நிற்காத குமாரபுரம் ஸ்டேஷனில் இப்போதும் பயணிகள் ஏறிக் கொண்டிருக்கிறார்கள். குக்குக்கூ என்று ரயில் கிளம்புகிறது. நான் பச்சைக்கொடி அசைத்து வழியனுப்புகிறேன். பயணிகளில் இரண்டு பேர் மட்டும் ஏறவில்லை. சற்று தூரத்திலிருந்து என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் குமாரபுரம் ரயில்வே ஸ்டேஷனை காவியமாக்கிய கு.அழகிரிசாமி, மற்றவர் அவருடைய உற்ற தோழர் கரிசல் இலக்கியத்தின் முன்னத்தி ஏர் எங்கள் நைனா கி.ரா.. லேசான

புன்முறுவல். சிறுகையசைப்பு. அவர்கள் அங்கே கிடந்த சிமிண்ட் பெஞ்சில்

உட்கார்ந்து இலக்கியம் பற்றி உரையாடிக்கொண்டிருக்கிறார்கள். அந்த வாசனை என்னுடைய அறைக்கும் வருகிறது. குருமலையின் கணவாய்க்காற்று என்னைத் தழுவுகிறது. அவர்களுடைய பேச்சின் வழியே எனக்குள் சன்னதம் பெருகுகிறது... உடம்பெல்லாம் நடுங்குகிறது. நான் எழுதிக்கொண்டிருக்கிறேன்... தொடர்ந்து...

கு.அழகிரிசாமியின் ஆவி என் விரல்களில் இறங்கிக் கொண்டிருக்கிறது...

1 டேனியல் பெரியநாயகத்தின் புல்லாங்குழல்

“ஏல... ஏசு... கொள்ளைல போறவனே... இங்கவால... ஓங் கையை முறிச்சு அடுப்பில் வைக்கேன்...”

தண்டியான உடம்பைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு குணசீலியம்மாள் ஓடி வந்து வாசலில் நின்று கத்தினாள். டேனியல் பெரியநாயகம், - குணசீலியம்மாளின் கடைசிப் புத்திரனான ஏசுராஜ் கை நிறைய சீனியை அள்ளி நக்கிக் கொண்டே ஓடினான். அளி போட்ட வராந்தாவில் உட்கார்ந்து ஆபீஸ் கணக்கைப் பார்த்துக்கொண்டிருந்த டேனியல் பெரியநாயகத்திற்கு பத்து தடவை கூட்டியும் டேலி ஆகாத மன்த்லி ஸ்டேட்மெண்டை பதினோராவது தடவையாகக் கூட்டிக் கொண்டிருந்தபோது, குணசீலியம்மாளின் ஆங்காரக் குரல் கேட்டது. அந்தத் திடுக்கிடலில் கூட்டி வைத்திருந்த டோட்டல் மறந்து விட்டது. இனி மறுபடியும் முதலிலிருந்து தொடங்க வேண்டும். மூக்கின் நுனிக்கு நழுவிக் கொண்டிருந்த கண்ணாடியைக் கழட்டிக் கொண்டே,

“ஏண்டி எருமமாடு மாதிரி கத்தறே... மனுசன் ஒக்காந்து வேல பாத்துக்கிட்டிருக்கானேன்னு... அறிவிருக்கா...”

“ஆமா... எம்மேலே பாய்ங்க... அந்த தடிப்பயல கண்டிக்கத் துப்பில்ல...”

“கடசி காலத்தில உசிர எடுக்க பொறந்திருக்கு அது...” என்று சொல்லி விட்டு, ஈஸிசேரில் சாய்ந்தவர் தலைவலிக்கிற மாதிரி உணர்ந்தார். உடனே,

“குணா... கொஞ்சம் காபி இருந்தா கொடேன்... தலைய... வலிக்கி...”

குணசீலியம்மாளுக்கு இன்னும் கோபம் தீரவில்லை. மெல்ல ஆடி அசைந்துகொண்டே கோபத்துடன்,

“எடுப்பு எடுத்த முடிவான்... வரட்டும்...” என்று முணு முணுத்துக் கொண்டே உள்ளே போனாள்.

டேனியல் பெரியநாயகம் அப்படியே நெற்றியில் கைவைத்தபடி ஈஸிசேரில் சாய்ந்து கொண்டார். ரிடையர் ஆன பிறகாவது நிம்மதியாகக் காலத்தைக் கழிக்கலாம் என்று ஒரு காலத்தில் நினைத்திருந்தார். ஆனால், இப்போது அவர் வேலை பார்த்து ரிடையரான நெடுஞ்சாலை பராமரிப்புத் துறையிலேயே தினசரி சம்பளத்துக்கு என்.எம்.ஆராக வேலைபார்த்தார். மூத்தவன் ஞானராஜுக்கு இன்னும் நல்ல வேலை கிடைக்கவில்லை. அவன்

பெட்ரோல் பங்க் ஒன்றில் மாசம் இருநூத்தம்பது ரூபாய் சம்பளத்தில் இருந்தான். நடுவான் ஜெபராஜ் காலேஜில் படித்துக் கொண்டிருந்தான். கடைசியில், அவர் எதிர்பாராமல் பிறந்த ஏசுராஜ் பள்ளிக்கூடத்தில் அஞ்சாவது படிக்கிறான். போன வருடம் அவருடைய மகள் ஜூலியட் சசிகலாவை கட்டிக் கொடுத்ததில், பி.எப்., கிராஜூட்டி பணமெல்லாம் புயலில் சிக்கிய துரும்புபோலக் காணாமல் போய்விட்டது. குடும்ப காலட்சேபத்திற்காக அவரும் அவருடைய முப்பது வருட ராஜவிசுவாசத்தைக் காட்டி ஏ.இ.யிடம் மன்றாடி மறுபடியும் சுண்ணாம்பு பெயர்ந்த அந்தக் கறுப்புக் காரைக் கட்டடத்தின் இருண்ட மூலையில் நகல் எடுத்துக் கொடுத்து நம்பர்களை கூட்டிக்கூட்டி சரிபார்த்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அவருக்கு வாழ்க்கையில் பெரிய ஆத்தாமை ஒன்று உண்டென்றால் அது அவர் ரிடையராவதற்குள் நான்காவது சம்பள கமிஷன் வராமல் போய் விட்டதில்தான். எல்லோரிடமும் இதைப் பற்றி வாய் தீராமல் சொல்லி கடைசியில் எப்போழுதும் சொல்வதைப்போல "எல்லாம் ஏசுவின் கிருபை" என்பார். சொந்த ஊரான திருநெல்வேலியை விட்டு வந்து முப்பத்தஞ்சு வருஷங்களுக்கும் மேலாகி விட்டது. அவருக்கே அவருடைய பூர்விகம், பால்யகால வாழ்க்கை எல்லாம் அநேகமாக மறந்துவிட்டது. எப்பவாவது அவருடைய ஒரே ஆப்த நண்பரான சுந்தரம்பிள்ளையிடம் பேசிக் கொண்டிருக்கும்போது,

"வேய்... அந்த வாழ்க்கையே தனி சுகம்தான்... சிந்துபூந்துறை அழகும், தாமிரபரணி ஆத்து தண்ணியும், ம்ஹூம்... இதென்ன ஊரா... சவத்துப்பய ஊரு... என்ன வேய்... தூங்கிட்டீரா..."

அவ்வளவுதான் அதற்கு மேல் ஏதும் சொல்லமாட்டார். மனசுக்குள்ளேயே அசை போடுவார். எப்போதும் ஆபீஸ் விஷயங்கள்தான். ஆபீஸில் அவர் இருந்த நாற்காலிகள் மூன்று தடவை மாற்றப்பட்டன. புதிய நாற்காலிகள் வந்தன. ஆனால், அவர் மட்டும் அந்த இருண்ட மூலையை விட்டு மாறவேயில்லை. காலையில் எட்டு மணிக்கே வந்து மேஜை நாற்காலியெல்லாம் துடைத்துவிட்டு ஒரு சுத்து வெத்திலையைப் போட்டுவிட்டு வேலையை ஆரம்பிப்பார். இடையில் வெத்திலைச் சாற்றை துப்புவதற்கு எழுந்து வந்தால் உண்டு. சில சமயம் நகல் எடுக்கும் ஆர்வத்திலோ, நம்பர்களைக் கூட்டும் அவசரத்திலோ அதையும் முழுங்கி விடுவார். ஸ்டேட்மெண்ட் மட்டும் டேலி ஆகவில்லையென்றால் பாகவதர் கிராப்பைக் கலைத்து இழுத்து சுருட்டி மடக்கி படாதபாடுபடுத்துவார். எழுதி எழுதி பெருவிரலின் உள்ளங்கைப் பக்கம் பேனாவின் வடிவம் பதிந்துவிட்டது. ஆபீஸ் என்றில்லாமல்

வீட்டிலும் அதே பைல்கள்தான். ஏ.இ.யின் டி.ஏ. பில் முதற்கொண்டு இவர்தான் எழுதிக் கொடுப்பது வழக்கம். அவருக்குப் பிடிக்காத ஒரு பழக்கம் ஆபீஸுக்கு லீவு போடுவதுதான். சனி, ஞாயிறு லீவில் கூட அவர் ஆபீசுக்கு ஒரு தடவையாவது போய் விட்டு வருவார். முதலில் குணசீலியம்மாளுக்கு கொஞ்சம் எரிச்சலாய் இருந்தது. அப்புறம் போகப் போக அவருடைய சுபாவத்தைப் பற்றி கவலைப்படுவதை விட்டுவிட்டாள்.

அன்று சாயந்தரம் டேனியல் பெரியநாயகம், சுந்தரம் பிள்ளையுடன் வெளியே ஒரு நடை போய் விட்டு வீட்டுக்குள் வந்தபோது புல்லாங் குழலின் ப்பூ... ப்பூபூபூ... ப்பூபூ சத்தம் கேட்டது. உள்ளே நடுவான் ஜெபராஜ் கையில் புல்லாங்குழலை வைத்துக்கொண்டு அப்படியும் இப்படியும் உருட்டிப் பெரட்டி ஊதிப் பார்த்துக் கொண்டிருந்தான். டேனியல் பெரியநாயகத்திற்கு புல்லாங்குழலைப் பார்த்ததும் கண்கள் பளிச்சிட்டது. அதற்குள் ஜெபராஜ்,

“யெப்பா... நீதான் நல்லா புல்லாங்குழல் வாசிப்பியாமே... எனக்கு கொஞ்சம் சொல்லித் தாப்பா... மியூசிக் கிளாசில சேந்திருக்கேன்...”

“ம்... சரி...”

என்றவர் அமைதியாக வெளியே ஈஸிசேரில் உட்கார்ந்தார். வெளியே நிலவு உதித்துக் கொண்டிருந்தது. தெருவின் அரவம் இப்போது ஓயத் தொடங்கியிருந்தது. அவர் மனசில் என்னென்னவோ பழைய ஞாபகங்கள். வாய் தன்னையறியாமல்,

“ஜெபராஜ்” என்றது.

ஜெபராஜ் கொடுத்த புல்லாங்குழலை நடுங்கிய விரல்களால் வாங்கி மெல்ல வாயில் வைத்து, விரல்களால் சுரவரிசையை மூடித் திறந்து ஊதிப் பார்த்தார். முதலில் ஜெபராஜ் ஊதின மாதிரி ப்பூபூ... என்றது. மறுபடியும் ஊதினார். லேசாய் சீரான சத்தம் வந்தது. மீண்டும் மூச்சுவிட்டு ஊதினபோது சுரவரிசையில் விரல்கள் தாளமிட ஆரம்பித்தன. கண்களை மூடிக்கொண்டு நிமிஷத்துக்கு ஒரு தரம் மூச்சு வாங்கிக் கொண்டு விடாது வாசித்தார் டேனியல் பெரியநாயகம்.

அமைதியான இரவு. சின்னச் சின்ன இரவுப் பூச்சிகளின் கீச்சொலி விடாது முழங்குகிறது. தாமிரபரணி சின்ன சிரிப்புடனும், அந்தரங்கமான குசுகுசுப்புடனும் ஓடிக் கொண்டிருக்கிறது. மேலே நிலவின் வெள்ளையொளி நீரின் மீது பட்டுத் தெறித்தது. அந்த ஒளியைத் தின்ன நீரின் மேற்பரப்பிலிருந்து மீன்கள் துள்ளி விழும் ‘சளப் சளப் ’என்ற

சத்தம் இடையிடையே கேட்டது. அப்போது அந்த இரவின் இழைகளை மீட்டிக் கொண்டு, இசைக்கீற்று சிந்துபூந்துறை படித்துறையிலிருந்து மிதந்து வருகிறது. நீரில் ரெண்டு கால்களையும் தொங்கவிட்டபடி டேனியல் பெரியநாயகம் உட்கார்ந்திருந்தான்.

அவன் விரல்கள் புல்லாங்குழலின் சுரவரிசையில் தாளமிட தாளமிட புதிய இசை கிளம்புகிறது. அவன் பாதிக் கண்களை மூடி ஆனந்த போதையில் இருக்கிறான். காற்று கலைத்த அந்த சுருண்ட கேசம் அவன் நெற்றியில் விழுந்து கிடக்கின்றது. அவனது புல்லாங்குழலிலிருந்து வந்த இனிய கீதம் தாமிரபரணியிடம் சேதி சொல்கிறது. அந்தச் சேதி நிலவை, மேகங்களை, சிந்து பூந்துறையின் சுற்றுப்புறத்தை நிறைக்கிறது. அந்த இசையில் ஒழுங்கு இல்லை. ஆனால், சுதந்திரமான கற்பனை இருந்தது. அது பெயர் தெரியாத காட்டு மலரின் வன்மையான மணம்போல, காட்டுப் பறவையின் வினோத அழகுபோல புதுமையாக இருந்தது. தூரத்தில் நகரத்தின் அடங்கிய ஓசை. அவன் எல்லாவற்றையும் மெய் மறந்திருந்தான். அவனே இசையாக இருந்தான்.

திடீரென மூச்சடைத்த மாதிரி நின்றது இசை. அதுவரை அவர் முகத்தை, முகத்தில் ஊறிய எத்தனையோ உணர்ச்சிகளைக் கவனித்துக் கொண்டிருந்தான் நடுவான் ஜெபராஜ். அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. அப்பாவா இது! தொண்டையில் ஏதோ அடைத்துக்கொண்ட மாதிரி டேனியல் பெரியநாயகம் இருமினார். கண்களில் கண்ணீர் வரும்படி இருமினார். வேட்டித் தலைப்பால் கண்களைத் துடைத்துவிட்டு நிமிர்ந்த போது டேனியல் பெரிய நாயகத்திற்குப் பழைய முகம் வந்திருந்தது. ஒன்றும் பேசாமல் நடுவான் ஜெபராஜிடம் புல்லாங்குழலைக் கொடுத் தார். கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொண்டே அவரிடம் ஏதோ கேட்க வந்த நடுவான் ஜெபராஜிடம்,

“ஒழுங்கா படிச்சி, முன்னேறதுக்கு வழியப்பாரு... இதெல்லாம் நமக்கு வேண்டாம்...” என்று சொல்லிவிட்டு இன்னமும் டேலி ஆகாத அந்த மன்த்லி ஸ்டேட்மெண்டை எடுத்து நம்பர்களைக் கூட்ட ஆரம்பித்தார்.

2 சக மனிதன்

மணி ஒன்பதுக்கு மேல் இருக்கும்... கடைகள் ஒவ்வொன்றாய் அடைபடத் துவங்கியிருந்தன. பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தான் விவேகானந்தன். ரொம்ப நேரமாகிவிட்டது. இனிமேல் டவுன்பஸ் அவன் தங்கியிருக்கும் இடத்திற்கு அடிக்கடி கிடையாது. இன்றைக்கு நேரமானதற்குக் காரணம் சுந்தர்தான். அவனுடன் ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டான். இன்னும் பகலின் கசகசப்பு அடங்கித் தீரவில்லை. கழுத்தைச் சுற்றிலும் வியர்த்து ஒட்டியது. கர்ச்சீப்புக்காக பேண்டின் இடது பைக்குள் கையை விட்டவனுக்கு சுரீரென்று ஞாபகம் வந்தது. ஊருக்குப் பணம் அனுப்பவில்லை. அனுப்ப வேண்டுமென்று எடுத்து வைத்த பணம் உள்ளே அப்படியே மடிந்து கிடந்தது. முந்தாநாள் சம்பளம் வாங்கிய உடனேயே அனுப்பியிருக்க வேண்டியது எப்படியோ தட்டிப் போய்விட்டது. எப்படி இப்படி அநியாய மாய் மறந்து போனது! நேற்று ஆபீஸில் ஏதோ சச்சரவு காலையிலிருந்து ஒரே வாக்குவாதம். சாயந்திரம் அறைக்கு வரும் வரை அதைச் சுற்றியே யோசனைகள்.

பணத்தை எதிர்பார்த்து அப்பா போஸ்ட்மேனிடம் ரெண்டு நாளாய் விசாரித்திருப்பார். அப்பா சுபாவி. அவர் எதிர்பார்க்கிறபடி மற்றவர்கள் அவர் சொல்லாமலேயே நடந்துகொள்ள வேண்டும் என்று நினைப்பவர். அப்படி நடக்காவிட்டால் வெளியே எதையும் காட்டிக்கொள்ளமாட்டார். உள்ளுக்குள்ளேயே நொந்து கொண்டிருப்பார். நாளைக்கு எப்படியும் அனுப்பிவிட வேண்டும். இப்படி நினைத்துக்கொண்டிருக்கும்போதே இவனுடைய அதிர்ஷ்டம் 29-டியே வந்து கொண்டிருந்தது. கூட்டம் சுமாராக இருந்தது.

டிக்கெட்டையும் சில்லறையையும் சட்டைப் பையில் திணித்து விட்டு கொஞ்சம் சிலாத்தியாய் நிற்கலாம் என்று கால்கள் அகட்டி நின்றான். காற்று சுகமாக வந்தது. ரெண்டு மூன்று ஸ்டாப்பிங் கடந்திருக்கும். விவேகானந்தன் நின்று கொண்டிருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் இருந்த சீட்டில் இருந்த ஒருவர் அடுத்த ஸ்டாப்பில் இறங்க இருந்தார். டவுன் பஸ் மனித வாழ்க்கையின் வழக்கமான மனோ சாஸ்திரப்படி இவனும் அவசர அவசரமாய் சீட்டில் உட்கார்ந்து கொண்டு பின்னர் பஸ் முழுவதையும் வெற்றிக் களிப்புடன் ஒரு தடவை நோட்டமிட்டான். அப்போது திடீரென அவனுடைய இடது தொடையில் பைக்குப் பக்கத்தில் கை உரசின மாதிரி தெரிந்தது. குபீரென்றது.

சடாரென்று திரும்பி பக்கத்திலிருந்தவரைப் பார்த்தான். அவர்

சாதாரணமாய் அவருடைய தொடைமேல் கையை வைத்துக்கொண்டு பஸ்ஸுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தார். இவன் உறுத்துப் பார்த்தான். பெரிய தொங்கு மீசை மேலே கொஞ்சமாய் முன் வழுக்கை. அவ்வளவு வயசிருக்காது. ஆனால், வலது கண் பட்டைக்கு மேலே இருந்த வெட்டுக்காயத் தழும்புதான் அவ்வளவு நல்ல பார்வையைக் கொடுக்கவில்லை.

விவேகானந்தனுக்கு பயம் சுருண்டு எழுந்தது. உள்ளுக்குள் எச்சரிக்கை. கவனமாய் இருக்க வேண்டும். ஆள் பார்வைக்குச் சரியில்லை. பையிலிருக்கும் பணம் போய்விட்டால்... அவ்வளவுதான். இதை யோசிக்கும்போதே மூளை கொஞ்சம் அவசரப்பட்டுவிட்டது. படாரென்று கையை பேண்ட் பாக்கெட்டின் மேல் வைத்து தடவிப் பார்த்துக் கொண்டான். உடனே அவனுடைய மடத்தனத்தை நினைத்து நொந்து கொண்டான். அவசரமாய் தடவிப் பார்த்ததை அவர் கவனித்திருந்தால் அவருக்கு உறுதியாகிவிடும். பயல் கிட்டே தேட்டை இருக்கு! இனிமேல் கவனமாய் இருக்க வேண்டும். இவனும் கையை இவனுடைய இடது தொடைமேல் பணம் விரல்களின் ஸ்பரிசத்தில் இருக்கிற மாதிரி அதே நேரத்தில் சாதாரணமாய் சந்தேகப்படும்படியாக இல்லாமல் வைத்துக் கொண்டான்.

தொங்கு மீசைக்காரர் வெளியே பார்த்துக் கொண்டிருப்பது போல் பாவனையில் இருந்தார். அவரும் பார்த்துக் கொண்டிருக்கிறார். வந்து உட்கார்ந்ததிலிருந்து ஒரு இடத்தில் அசையாமல் இருக்க மாட்டே னென்கிறான். அங்கிட்டும் இங்கிட்டும் உழத்திக் கொண்டேயிருக்கிறான். பேண்ட் பாக்கெட்டில் ஐநூறு ரூபாய் பணம் இருக்கிறது. இன்றைக்கு மளிகைக் கடைக்காரன் இப்படி திடீரென்று கடையை அடைத்துவிட்டுப் போவானென்றா நினைத்தார். சாயந்திரம் டவுனுக்குப் போகும்போதே கொடுத்திருக்கலாம். அவர் பஸ்ஸை விட்டு இறங்கின இடத்திலிருந்து ஒரு பர்லாங் நடக்கணுமே என்று சோம்பேறித்தனப்பட்டு, அப்படியே சினிமா பார்த்துவிட்டு வரும்போது கொடுக்கலாம் என்று நினைத்துப் போய்விட்டார். சினிமா விடும்போது அப்படி ஒன்றும் நேரமாகி விடவில்லை. மணி எட்டரைதான் ஆகியிருந்தது. வழக்கமாய் கடை பதினொரு மணி வரைக்கும் திறந்திருக்கும். இன்றைக்கு எட்டு மணிக்கே பூட்டிவிட்டுப் போய்விட்டான். பக்கத்தில் விசாரித்ததில் அந்த ரோட்டில் ஏழு மணிக்கு ஏதோ தகராறாம். அதனால் எல்லோரும் பூட்டிவிட்டுப் போய்விட்டார்கள் என்று சொன்னார்கள்.

பக்கத்திலிருக்கிறவன் வேறு அடிக்கடி பையை உரசுகிறான். பெரிய

கில்லாடிதான். அவன் கால்மேல் கையை வைத்திருப்பதைப்போல பாசாங்கு செய்கிறான். மற்றவர்களுக்கு சந்தேகம் வராதாம். அவர் டவுன் பஸ்களில் பாக்கெட் அடிப்பதைப் பற்றி எவ்வளவு கேள்விப் பட்டிருக்கிறார் மெல்ல பஸ்ஸுக்குள் திரும்பிப் பார்ப்பதைப்போல அவனைப் பார்த்தார். ஆள் நல்ல கறுப்பு. முகத்தில் எண்ணெய் வழிந்து தலைமுடி கலைந்து கிடந்தது. முகத்தைப் பார்த்தால் சுபாவமாய்தான் இருந்தது. இந்தக் காலத்தில் இப்படிக் கொஞ்சம் டீசண்டாகவும், பார்க்க அப்பாவியுமாகத்தான் திருடர்கள் இருக்கிறார்கள் என்று ஏதோ ஒரு பத்திரிகையில் படித்த ஞாபகம் வேறு இப்போது வந்தது. கவனமாய் இருக்க வேண்டும். அவர் மறுபடியும் வெளியே அப்படியே பார்க்கிற மாதிரி திரும்பிக் கொண்டு அதே நேரம் கையைத் தொடைமேல் வைத்துக் கொண்டார். இப்போது அவர் கை அவன் கையை உரசிக் கொண்டிருந்தது.

பஸ் ஏதோ ஒரு ஸ்டாப்பிங்கில் நின்றது. மொலேரென்று கூட்டம் ஏறிக் குவிந்தது. கண்டக்டருக்கு உற்சாகம்.

“ஏறி வாங்க... உள்ளே வாங்க... சார் உங்களத்தான... உள்ளே வாங்க... இல்ல வழியவிடுங்க... நடுவுல நிறய்ய இடமிருக்கு... உள்ளே வாங்கய்யா... பெரியவரே என்ன நகர மாட்டீரா... உள்ளே வாயான்னா...” கூட்டம் நெருக்கி நின்றது. சரியாக விவேகானந்தன் மீதே ஒரு ஆள் சாய்ந்துகொண்டு நின்றார். இவன் கொஞ்சம் அசைந்து பார்த்தான். அவர் மேலும் சாய்ந்துகொண்டே வந்தார். இதுதான் சங்கடம் ஓரத்தில் உட்கார்ந்தாலே அச்சலாத்திதான். இவன் அசைந்ததில் இவனுடைய தொடையும் பக்கத்திலிருந்த தொங்கு மீசைக்காரரின் தொடையும் ஒட்டியது. அவர் கைவிரல்கள் இவன் பாக்கெட் பக்கத்தில் அகஸ்மாத்தாய் உரசியது.

அவன் உஷாரானான். இப்படி கூட்ட நேரம் ரொம்ப வசதி. கவனம் பூராவும் கூட்ட நெரிசலிலும் ஏறி இறங்குகிற முகங்களிலும் இருக்கும்போது ரொம்ப சவுகரியம். ரொம்ப சுவாதீனமாய் காரியத்தை முடித்துக்கொண்டு படாரென்று அடுத்த ஸ்டாப்பிங்கில் இறங்கிவிடுவார்கள். அயோக்கிய ராஸ்கல்கள். மனசுக்குள் வைதுகொண்டே பாக்கெட்டை அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

தொங்கு மீசைக்காரர் திடீரென்று நெருக்கம் அதிகமானதை உணர்ந்ததும் திரும்பிப் பார்த்தார். கூட்டம் ஏறியிருந்ததென்னவோ உண்மைதான். ஆனால், இதுதான் சாக்கென்று பயல் ஒரேயடியாய் மேலேயே சாய்கிறான். அவர் திரும்பி அவனைப் பார்த்து கொஞ்சம்

முறைப்பாகவே,

“சார்... கொஞ்சம் தள்ளியிருக்கீகளா... கசகசன்னு இருக்கு...” அவன் எதிர்த்திசையில் கொஞ்சம் நகர முயற்சித்துக் கொண்டே,

“நிக்கிறவங்க... மேலேயே சாய்றாங்க...” என்று கடுப்புடன் சொன்னான். அப்புறம் அவர் அந்தப் பக்கமாய் திரும்பிக் கொண்டார். இவனும் இந்தப் பக்கமாய் திரும்பிக் கொண்டான்.
விவேகானந்தனுக்குத் தூக்கம் வந்தது. ஆபீஸ் விட்டதிலிருந்து நல்ல அலைச்சல். அப்படி கண்கள் இறுகக் கட்டிக்கொண்டு வந்தது. தூங்கக் கூடாது. தூங்கினால் அவ்வளவுதான். பணம் இல்லையென்று நினைத்துக் கொள்ள வேண்டியதுதான். கண்களைக் கசக்கிக் கொண்டான். எதையாவது யோசிக்கலாமென்று முயற்சி செய்தான். ம்ஹூம். மற்ற நேரமெல்லாம் கண்டதும் யோசனைக்கு வரும். சப்பு சவறு எல்லாம் மூளையைக் குடையும். இப்போது மூளை வெறுமனே ஆஃப் பண்ணின மிஷின் மாதிரி அமைதியாய் இருந்தது. சிரமப்பட்டு கண்களை மூடிமூடித் திறந்தான்.

திடீரென டிரைவர் எதிரே விலகாமல் வந்த சைக்கிள்காரனுக்காக சடன் பிரேக் போட்டு நாலைந்து கெட்ட வார்த்தைகளால் வைதார். பிரேக் போட்டதில் எல்லோரும் முன்னே சாய்ந்தார்கள். விவே கானந்தன் எந்தப் பிடிமானமுமில்லாமல் இருந்ததால் சடாரென கையை அகப்பட்ட இடத்தில் வைத்துப் பற்றினான். தொங்கு மீசைக்காரர் முட்டியில்தான் ஒரு கையை வைத்தான். உடனே கையை எடுத்துவிட்டான். வாய்க்குள் ‘சாரி’ என்று முணுமுணுத்தான்.

அவர் மறுபடியும் திரும்பிக் கொண்டார். ஒவ்வொரு வழியாக முயற்சி செய்து பார்க்கிறான் பயல், சும்மா மேலே சாய்கிறான். தொடையில் கை வைத்துப் பார்க்கிறான். பாக்கெட் அடிக்கிறவன் தொட்டுப் பார்த் தாலே தேறும் தேறாது என்று கண்டுபிடித்து விடுவானாம். அதுதான் தடவிப் பார்க்கிறான்போல. இனி ஒரு தடவை கையை வைத்தால் கண்டிப்பாக கையைப் பிடித்து நாலு மாத்து மாத்திர வேண்டியதுதான்.

பஸ் நின்று ஆட்களை இறக்கி விட்டது. இன்னும் ரெண்டே ஸ்டாப்பிங் தான். அப்புறம் பிரச்சினையில்லை.

அவர் முறைத்ததைக் கண்டதும் அவன் பயந்துவிட்டான். அவர் பார்த்தபோது கண் பட்டைக்கு மேலே இருந்த தழும்பு இன்னும் கோணலாகி முகத்தை இன்னும் விகாரமாய்க் காண்பித்தது. ஒருவேளை அந்த ஆளுக்கு இதுவரையில் சந்தர்ப்பம் கொடுக்காமல் வருவதற்காக

முறைக்கிறானோ. இனிமேல் ஏதாவது செய்தானானால் அப்படியே மூஞ்சியோட சேர்த்து அறைஞ்சிர வேண்டியதுதான்.

அடுத்த ஸ்டாப்பிங்கில் நின்று பஸ் கிளம்பியதும் தொங்கு மீசைக்காரர் எழுந்து கொண்டார். கொஞ்ச தூரம்தான் நிற்கலாம். எதற்கு உட்கார்ந்துகொண்டு அவஸ்தை. எழுந்து வாசலுக்கருகில் வந்து நின்று பையைத் தடவிப் பார்த்துக் கொண்டார். நீண்ட பெருமூச்சு வந்தது. நாளைக்கு முதல் வேலையாக பணத்தைக் கொண்டுபோய் மளிகைக் கடைக்காரனிடம் கொடுத்துவிட வேண்டும். அவனிடம் வேடிக்கையாக, “உம்ம பணம் பறி போகப் பார்த்ததய்யா நேத்திக்கு...” என்று சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

அவன் அவர் எழுந்ததும் முதலில் பைக்குள் கையை விட்டு விரல்களால் மடிந்து கிடந்த நோட்டுகளை நீவி விட்டான். நிம்மதி, ஜன்னல் பக்கத்தில் நகர்ந்தான். காற்று வேகமாய் அடித்தது. கண்டக்டர் விசில் அடித்தார். பஸ் வேகம் குறைந்து நின்றது.

தொங்குமீசைக்காரர் இறங்கினார். பஸ் போவதற்காக நின்றார். அவனும் வேகமாய் இறங்கி, ஒரு விநாடி நின்று அவரைப் பார்த்தான். பின் நடக்கத் தொடங்கினான். பயங்கர அசதி, போய் விழுந்தால் சவமாய் தூக்கம் வரும். பஸ் கிளம்பிப் போகும் சத்தம் கேட்டது. பின்னால் திரும்பி பஸ் போவதைப் பார்த்தவன் கண்ணில் நல்ல வெளிச்சத்தின் கீழே நின்று அந்தத் தொங்கு மீசைக்காரர் அவனையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. ஒரு கணம் உற்றுப் பார்க்கையில் அவர் சிநேகிதமாய் சிரித்தமாதிரி கூட இருந்தது. அவனும் உதடுகள் நெளிய “வீணாப் பயந்துட்டோம்” என்று வாய்விட்டு முணுமுணுத்துக்கொண்டே அறையை நோக்கி நடந்தான்.

3 உறவு

“இதுக்காவத்தான் எல்லாவனும் சேர்ந்து வந்தீகளோ” அம்மாவின் கண்களில் கோபம் கொப்பளித்தது. பீரோவின் கைப்பிடியைச் சுற்றிக் கொண்டிருந்தான் சின்னவன். கீழே கிடந்த புஸ்தகத்தைக் கையில் எடுத்து மறுபடியும் போட்டபடிக்கே நடுவான்,

“இப்பம் அதெல்லாம் எதுக்குளா. இதுக்கு நீ என்ன சொல்லுதே...”

பெரியவன் பேசாமல் இறுகின முகத்தோடு மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கையில் பிடித்து வைத்து சின்னச் சின்னதாக எல்லோரையும் அதன் வழியே பார்த்துக் கொண்டிருந்தான். நடுவான் திரும்பி,

“என்ன அண்ணே சொல்லு நீ... நாம் மட்டும் பேசிட்டிருந்தா...?”

“அதா சொல்லீட்டில்ல...”

அப்பாவைக் கிடத்தியிருந்த பட்டாசலிலிருந்து மூத்திர நாற்றம் ரெண்டாங்கட்டையும் மூழ்கடித்துச் சென்றது. அப்பா படுத்து ஐந்தாறு வருஷங்கள், அவர் பற்றிய நம்பிக்கைகளைப்போலவே கழிந்துதான் போயிற்று. ரெண்டாங்கட்டு மௌனம் சாதித்தது. அம்மா எழுந்து எதுவும் பேசாமலே அடுக்களைக்குப் போய் கொதித்துக் கொண்டிருந்த அரிசியைக் கிண்டிவிட்டு வந்தாள். அவள் முகமும் பாறையாயிருந்தது. ரெண்டாங்கட்டில் மூன்று பேரும் இதுதான் இப்படித்தான் என்கிற மாதிரி செய்ததைச் செய்து கொண்டு பார்வைக்கு மட்டும் உட்கார்ந்திருந்தனர். அம்மா மறுபடியும் நிலைவாசற் படியில் வந்து உட்கார்ந்தாள்.

“ஏளா நீதான் ஊர்ல இல்லாத புதுப் பழக்கமா அக்காவுக்கும் பத்துவுக்கும் சேத்து உயில்லே எழுதி வச்சே. சரி. மகன்க மூன்று பேரும் தடி மாடு மாதிரி இருக்கானுவளே அவனுகளை ஒரு வார்த்தை கேட்டுட்டுச் செய்வோம்னு செஞ்சியா... இல்ல... அது ஒனக்குத் தோணாமப் போச்சி... ஏன்னா ஒன்னச் சுத்தியிருக்கிற கூட்டம் அப்பிடி. சரி அதான் போகட்டும். உயில எழுதி முடிச்சே, உடனே ஒரு ரெண்டு வரி... ஒரு ரெண்டு வரி... ஒரு பதினைஞ்சி பைசா கார்டுல... அதுக்குக் கூடவா வக்கத்துப் போயிட்டீக... யெப்பா... இன்னின்ன மாதிரி வெவகாரம்... இப்பிடியிப்படி வெவரம்னு எழுதினா என்ன... இல்ல பக்கத்தில் யாரும் எழுதத் தெரிஞ்சவன் இல்லையா... யாரோ மூணாம் மனுஷன் சங்கரங்கோயில் வெறியாண்டி சொல்லி அப்புறம் கேட்டா ஆமான்றே... என்னம்மாது உனக்கு நெயாயமாருக்கா... நீயே

சொல்லு...”

சின்னவன் பேசி முடிக்கும்போது அம்மா தகித்திருந்தாள். விடைத்த மூக்கு அடங்காமலும் அம்மாவை நேருக்கு நேர் பார்க்க முடியாமலும் தவித்தான் சின்னவன். நடுவான் மட்டும் அம்மா என்ன செய்யப் போகிறாள் என்பதில் ஆவலுடையவனாய் முகத்தையே நோக்கியிருந்தான்.

“ஆமாப்பா- எனக்கு நெயாயந் தெரியாதுதான். நான் நெயாயங்கெட்டவ தான்... நீங்க ரொம்ப நெயாயவான்க... அவுஹளுக்கு... சீரிஸா இருக்கு... ஒடனே வாங்கன்னு லெட்டரு போட்டப்ப இல்லாத உறுத்து... எவனோ உயில் எழுதியாச்சின்னு சொன்னவுடனே வுழுந்தடிச்சி ஓடியாரச் சொல்லுது. உங்களுக்குத்தான் அப்பா மேல எம்புட்டு பாசம்... ஹ போங்கடா... வந்து நெயாயம் கேக்கிறானாம் நெயாயம்...” யாரையும் பார்க்கப் பிடிக்காமல் வெளியே பார்த்துக்கொண்டே பேசினாள்.

“பாசம்னா அந்த லட்சணத்தில் வளர்த்திருக்கீக...” பெரியவன் உச்சஸ்தாயியில் சொன்னான். அவனுக்கு எப்பவும் பேசினால் பெரிய குரல்தான்...

“ஏம்பா நாங்க வளத்ததில என்ன கொறை கண்டீக... சாப்பாடு போடாம பட்டினி போட்டோமா... சட்டத் துணி இல்லாம ரோட்டு வழியே அலைய விட்டோமா... இல்ல சொல்லப்பா... நாங்க எதில கொறை வச்சோம்... அவுஹ ராவும் பகலும் ஒங்களுக்காகத்தான் எழுதி யெழுதி குறுக்கொடிஞ்சி வாதம் பிடிச்சி இப்படி சீவனத்துப் போயி கெடக்காக...”

“ஆமாமா ரொம்ப செஞ்சீக... தெரியும்...”

“ஒங்களுக்க என்னத்த செய்யல... அங்க இங்கன்னு அலைஞ்சி கண்டவன்ட்டயும் பல்லக்காட்டி வேல வாங்கிக் கொடுக்கலியா... அதனால்ல இப்ப நீங்க பெரிய ஆப்பீசருன்னு சொல்ல முடியுது... கலியாணத்துக்குத் தான் கொஞ்சப் பாடா பட்டிருக்கு... இன்னும் என்னத்தச் செய்யணும்கிறே...”

“ஆமாமா... ஊர்ல உலகத்தில இல்லாதத செஞ்சி கிழிச்சிட்டே... போம்மா... ரொம்பப் பேசாதே... ஒரு அஞ்சி பைசா குடுத்திருப்பியா நீ... அத்தனை பேரும் பள்ளிக்கூடத்தில் வாங்கித் திங்கயில நாங்க மட்டும் விரலைச் சப்பிக்கிட்டு அலைஞ்சோம்... அதெல்லாம் மறந்துடும்னு நெனச்சியா... சாகற வரைக்கும் மறக்காது...”

நடுவான் பேசினபோது சின்னவனும் பெரியவனும் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். அப்பா இருமும் சத்தம் கேட்டதும்,

பெரியவன்தான் எழுந்து போய் பார்த்து விட்டு ஒண்ணும் சொல்லாமலே வந்து உட்கார்ந்தான்.

“மறக்க வேண்டாப்பா... மறக்க வேண்டாம்... அவுஹ சம்பாத்யம் பூராவையும் நானேதான் தின்னேன். உங்களை பட்டினி போட்டு கொடுமப்படுத்தினேன். நீங்க யார் யார்ட்டயோ வரம் வாங்கி படிச்சிக் கிழிச்சி ஆப்பீசரா வானத்திலேர்ந்து குதிச்சிட்டீக...”

“சரி அதெதுக்கு இப்பம்... விடுண்ணே... அதுதான் தெரிஞ்ச கதை யாச்சே. பேசிப்பேசி இனியென்ன நடக்கப்போவுது... யெம்மா அந்த உயிலுக்கு நகல் வச்சிருப்பில்ல அத எடுளா...”

அம்மா சாவியை எடுத்துக் கொடுத்தாள்... சின்னவன் பீரோவைத் திறந்து அப்பாவின் பழைய கேஸ் கட்டுகளின் மேல் புதிதாகக் கிடந்த கவரை எடுத்தான். பெரியவன் அதைக் கையில் வாங்கிப் பிரித்து எல்லோர் பொறுமையையும் சோதிக்கும்படி படிக்க ஆரம்பித்தான். சத்தமாய் வாசிக்க வேண்டிய இடம் வந்ததும், நிறுத்தி ஒருமுறை நிமிர்ந்து நடுவானையும், சின்னவனையும் பார்த்துவிட்டு,

“மக்கள் ஐவரும் வீட்டைச் சரி பங்காக அம்மாவின் காலத்திற்குப் பிறகு பிரித்தெடுத்துக்கொள்ள வேண்டியது. இதில்தான் சிக்கல். சரி அத அப்புறம் பேசுவோம். முதல்ல உன்னோட நகைங்க, கடற்கரையா பிள்ளகிட்ட ஒத்திக்கு வாங்கின வீட்டு மேலே உள்ள ரூவா இதெல்லாம் இதில காட்டல...”

“பெறகு நான் என்னத்த திங்கறது... பச்சை மண்ணையா... அவுஹளுக்கு சிச்ருஷை பாக்கணும்... எத... நீங்க கொடுக்கிற பிச்சக்காசு பதினைஞ்சி ரூவாய நம்பியா... மாத்திரை வாங்கணும் மருந்து வாங்கணும்... ஒரு நல்லது பொல்லது... வீட்டுக்கு வந்த ஆட்களுக்கு ஏண்டத செய்யணும். இந்தாபாரு... நேத்திக்கு நெஞ்சில் சளிகட்டி இந்தா அந்தான்னு ரொம்பப் பயமுறுத்திப் போட்டாக... ஒடனே டாக்டருக்கு ஓடிப்போயி கூட்டிட்டு வந்து ஒரு ஊசி போட்டுருக்கு... மாத்திரை வாங்கிருக்கு... முப்பது ரூவா காலி... இதுக்கெல்லாம் நான் எங்க போறது... இல்ல அருமாந்த பிள்ளக நீங்கதா அள்ளிக்கிள்ளிக் கொடுக்கீகளா...”

“சரி... சரி... நீ மருந்து வாங்குவியோ... மாத்திரை வாங்கு வியோ... நல்லது பொல்லதுக்கு செலவழிப்பியோ வச்சுக்க... முடிவில் அதுக்கு என்னதான் வழி...”

சீக்கிரம் எல்லாத்தையும் முடித்துவிட வேண்டும் என்ற அவசரத்துடன் நடுவான் சொல்லி முடித்ததும்,

“அத அப்ப பார்த்துக்கலாம்...” அம்மா அசால்ட்டாக சொன்னாள். படாரென நிமிர்ந்த சின்னவன்,

“அப்ப எங்கள ரோட்டில குடுமியப் பிடிச்சிட்டு நிக்கச் சொல்றியா...”

“என்னமும் பண்ணுங்க...”

“இங்க பாரு இப்படி விட்டேத்தியா பேசாத... நீ பாட்டுக்கு ஒன் இஷ்டத்திற்கு ஒனக்கு பிரியமானவங்களுக்கா வாரிக் கொடுப்பே... நாங்க அதப்பாத்துக்கிட்டு ‘ஈ’ன்னு இளிச்சிட்டு நிக்கவா...”

“ஏலேய்... எப்படிடா இதெல்லாம் பேசக் கத்துக்கிட்டீக... ஒங்களாலே எனக்கோ அவுகளுக்கோ... என்னமாச்சும் பிரயோசனமுண்டா... சொல்லுங்க பாப்போம்... நகைநட்ட கேட்கறீங்களே... உங்க ஆத்தாளுக்கு அரும ஆத்தாளுக்கு ஒரு மிஞ்சாடித் தங்கம் உருக்கியிருப்பீகளா... இல்ல ஒரு தம்பிடிக்கு ஒங்களால லாபமுண்டா... ம்ஹூம்...” பெரிய பெரு மூச்சுவிட்டு பொருமினாள்.

“இங்க பாரு... இப்படியெல்லாம் பேசாத... சரி விடு... எல்லாத்தையும் ஒன் இஷ்டப்படியே செலவழிச்சி நாசமாக்கு... நாங்க ஒண்ணும் கேக்கலை... அப்புறம் ஆத்தாடி யம்மாடின்னா யாரு வந்து கேக்கப் போறா...”

“யாரும் வந்து கேக்க வேண்டாம் என் கண்ணுகளா... யாரும் வந்து கேக்க வேண்டாம். நான் செத்துப் போனா வந்து எட்டிக்கூட பார்க்க வர வேண்டாம்பா... வர வேண்டா...” அவளுக்கு கண்ணீர் முட்டி நின்றது.

“சரி... உயில்ல பெண் மக்களுக்கு சேத்து வீட்டில் பங்கு எழுதியிருக்கையே அப்படின்னா ஒரு நல்லது பொல்லதுக்கும் அவுக சேந்துக்குவாகளா...”

“என்ன கேக்க நீ...”

“இல்லம்மா அண்ண என்ன சொல்லுதுன்னா... சொத்துல பங்குக்கு வர்றாகள்லியா... அப்பம் அப்பாவோட சாவுச் செலவுக்கு மத்த, கிழம, திதி செலவுகளுக்கும் சேந்து செய்வாகளான்னு கேக்கறான்... அப்படித்தானேண்ணே...”

“அடப்பாவிகளா... உங்கள பெத்த வயத்தல பெரண்டயத்தான் வச்சிக் கட்டணும். பெத்த அப்பனுக்கு செய்ய வேண்டியது புள்ளங்க கடம. மருமகன்களுக்கென்ன ஆத்திரம் வந்தது?”

“அங்... அப்ப சொத்துல மட்டும் பங்குக்கு வர்றாக நாங்க என்ன

இளிச்சவாயன்களா...” வேகமாய் பொரிந்து தள்ளினான் பெரியவன். நிலைகொள்ளாமல் கண்ணாடியை மாட்டுவதும் கழற்றுவதுமாக இருந்தான்.

“யப்பா இங்க பாருங்க... என்னால ஒங்களோட வாதாட முடியாது... நெஞ்சு வலிக்கு... ஒங்களுக்கு இஷ்டமின்னா செய்ங்க... இல்லைன்னா அவுஹென்ன போய்ச் சேராம இருந்திரப் போறாஹளா... புள்ள கொள்ளி இல்லாதவுகள்ளாம் போய்ச் சேராமலா கெடந்திட்டாக... அப்படி நாங்களும் நெனச்சிக்கிறோம். திருநெல்வேலி குமாஸ்தா புள்ளக்கு கொள்ளி வைக்க புள்ளையில்லைன்னா, அவுக கட்டை என்ன எரியாமலா போயிரும், அடப்போங்கடா...”

“அப்ப எங்ககிட்டேருந்து ரூபாய எதிர்பார்க்காத... அன்னைக்கு வந்து எங்க மூஞ்சியைப் பார்த்துட்டு நிக்காத...”

“அடச்சீ... மூதேவிகளா... உங்கள நம்பியாடா... அவுஹ பொறந்து இருக்காக... நீங்கள்ளாம் புள்ளங்களாம்... உங்கள பாக்குறப்போ பெத்த வயிறு அப்படியே பத்திகிட்டு எரியுது... புள்ளங்களாம் புள்ள...” முடிக்குமுன் அழுகை முந்திக் கொண்டது.

அப்போது அம்மாவைப் பார்க்க ரொம்பவும் விகாரமாய் இருந்தது. அவர்களுக்கே கஷ்டமாயிருந்ததுபோல முகத்தைச் சுளித்துக் கொண்டார்கள். இவ்வளவு நேரமும் வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருந்தவன் போல சின்னவன்,

“அதா... அழுதழுதுதான்... குடும்பமே சீர் கெட்டுப் போச்சே இன்னுமென்ன அழுக...”

நடுவான் கடைசியாகச் சொல்வதுபோலச் சொன்னான்.

“ஏளா... இங்க பாரு நாங்க சொல்ல வேண்டியதை சொல்லிட்டோம். இந்த உயிலு நியாயமில்லே. நீயும் எதுக்கும் சரிப்பட்டு வரமாட்டீங்க... இப்படியே இருந்தா கோர்ட்டுக்கு போக வேண்டித்தான் வரும்...”

இதைக் கேட்டதும் அம்மா இன்னமும் உடைந்து போனாள். பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்காமலேயே,

“போங்கடா... போங்க... கோர்ட்டுக்குப் போயி குடும்பத்த சந்தி சிரிக்க வைங்க... எத்தனையோ கேசுகள குமாஸ்தாபுள்ள தீத்து வைச்சாக... அவுஹ புள்ளக சொத்துதாவால கோர்ட்டுக்கு போனாத்தான் ஊரு நல்லாச்சிரிக்கும்... எல்லாத்தையும் நீங்களே வாரிக்கட்டிக்கீங்க. நீங்க எம் புள்ளகளே இல்ல... இனிமே எம் முகத்திலேயே முழிக்காதீங்க...”

அழுகைக்குள் வார்த்தைகள் வெடித்துச் சிதற அழுகையை அடக்கமாட்டாமல் அடுக்களைக்குள் எழுந்து போனாள். சோறு குழைந்து போய் அடுப்பெல்லாம் அணைந்திருந்தது.

“அதான் என்னிக்கோ முடிவு பண்ணியாச்சே. அம்மா, அப்பா, அக்கா, தங்கச்சி, யாருமில்லைன்னு” என்று பெரியவன் சொல்லியது அடுக்களைக்குள் எட்டிப் பார்த்துப் போயிற்று. கொஞ்ச நேரம் அப்படியே நின்றிருந்தவள் முகத்தைத் துடைத்துக்கொண்டு பட்டாசலை நெருங்கும் போது சின்னவன் சொல்லிக் கொண்டிருந்தான்,

“சரிண்ணே... சட்டுபுட்டுன்னு சொல்லிட்டு கிளம்புவோம். இப்ப கௌம்பினாத்தான் கடையநெல்லூர் முருகேச பிள்ளைகிட்ட அவர் தங்கச்சி செத்ததுக்கு துஷ்டி கேட்டுட்டு போக முடியும்.”

“அதெல்லா ஒண்ணும் அவசரமில்ல. இருந்து சாப்பிட்டுட்டு சாயந்தரம் வெயில் தாழ புறப்பட்டா போறும்...” அம்மா ஆணியறைந்த மாதிரி சொல்லிட்டு அடுக்களைக்குள் போனாள். யாருக்கும் அவள் வார்த்தையைத் தட்ட வேண்டும் என்று தோன்றவில்லை.

4 ஒரு பிரிவுக் கவிதை

அன்று காலையில் அடித்த நல்ல வெயிலுக்கப்புறம் இடையில் சிறிது நேரம் மழை பெய்திருந்தது. ரொம்ப நிதானத்தோடு வீசிய ஈரக்காற்று ஒருவித விநோத மனோநிலையை ஏற்படுத்தியது. அது சிறிய ரயில்வே ஸ்டேஷன். கொஞ்சம்பேரே அங்கும் இங்கும் நின்றிருந்தார்கள். அவர்கள் மூன்று பேரும்-அவள், ஆனந்த், சேது - கிளப்புக் கடைக்கு சற்றுத் தள்ளியிருந்த ஒரு வேப்பமரத்தின் அடியில் நின்று கொண்டிருந்தார்கள். ரயில் வருவதற்கு இன்னும் நேரம் இருந்தது. கொஞ்ச தூரத்தில் தெரிந்த ரோட்டில் கார்கள் போகிற சத்தம் கேக்கிற அளவுக்கு இங்கே அமைதி தன் இழைகளை நூற்றிருந்தது. அதனால் அங்கே ஏற்பட்ட சிறு சலனமும் எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது.

அவர்களில் அவள் மிகவும் குழம்பிப் போயிருந்தாள். நிறையப் படித்தவள். அவள் படித்து தெரிந்த உலகத் திற்கும், அநுபவித்து உணர்ந்து கொண்டிருந்த உலகத் திற்குமான இடைவெளி அவளைத் திகைப்பில் ஆழ்த்தி விட்டது. அவளுடைய குழந்தைத்தனமான முகம் அவள் உள்ளே உணர்கிற உணர்ச்சிகளை விநாடிக்கு விநாடி வெளிப்படுத்தியது. அதிலும் முக்கியமாய், மிகவும் மெல்லியது போல தோற்றமளிக்கும் அவளுடைய விரிந்த மூக்கு அடிக்கடி விடைத்துக் கொண்டேயிருந்தது. இது ஏன்? எதற்காக இப்படி எல்லோரும் இங்கே நிற்கிறோம்? அவளுடைய ஆசையெல்லாம் தற்சமயம் நடந்து கொண்டிருப்பது சில நிமிடங்களில் முடிந்துவிடும் போல தோன்றினாலும் உண்மையில் அது முடியாது என்று முன்னமே உணர்ந்திருந்தாள். அவள் உணர்ச்சிகளை அவர்கள் முன்னால் வெளிக்காட்டாமல் இருக்க பெருமுயற்சி செய்தாள். வேண்டு மென்றே இடது கையை மார்பின் குறுக்கே கட்டிக்கொண்டு வலது கையை இடதுகை மீது வைத்து விரல்களால் முகத்தை வருடிக் கொண்டி ருந்தாள். ஆனால், உண்மையில் அவள் இதில் தோற்றுப் போய்க் கொண்டிருப்பதை மற்ற இருவரும் உணர்ந்தார்கள். அதனால் கொஞ்சம் கலக்கமடையவும் செய்தார்கள்.

ஏதாவது பேசினால் எல்லாம் சரியாகிவிடும் என்று முதலில் அவளுடைய கணவன் ஆனந்த் நினைத்தான். எவ்வளவோ இக்கட்டான சூழ்நிலையிலும் வார்த்தைகள் மனதின் காயங்களை சொஸ்தப்படுத்திவிடும் வல்லமை கொண்டவை இல்லையா. அவனுக்கு இதொன்றும் சுலபமாயில்லை. ஆனால், முன் வழுக்கை விழுந்த சதுரமான மண்டையின் கீழுள்ள அநுபவ அறிவு எதையும் வெளிக்குக்

காட்டாத ஒரு அசட்டுக் கம்பீரத்தை அவனுக்குக் கொடுத்திருந்தது. அவன் சாதாரணமாய் இருப்பவன்போல பிரியும் லேசான சிரிப்புடன் நின்றாலும் உள் ஒளிந்த அவனுடைய பழுப்பு நிறக்கண்களில் அவன் படுகிற அவஸ்தை தெரிந்தது. அதனால் அவன் மற்றவர் முகங்களைப் பார்க்கக் கூடாதென்று தவிர்த்தாலும் சேதுவின் முகத்தை மட்டும் அடிக்கடி கூர்ந்து பார்த்தான்.

சேதுவோ நிலைகொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தான். மனம் இன்னதென்று தெரியாத ஒரு நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்தது. அவனுடைய உளி திருத்திய சிலை முகத்தில் துக்கம் இருட்டாய் கவிந்திருந்தது. அவனால் தாங்க முடியவில்லை லேசாய் தொட்டால், யாராவது அவனிடம் ஒரு வார்த்தை பேசினால் அல்லது மென்மையான குரலில் அவன் பெயரைச் சொன்னால்கூட அழுதுவிடுவான்போல இருந்தான். அதனால் ஒரு பக்கமும் பார்வையை நிறுத்தாது பாய்ந்து பாய்ந்து செல்ல விட்டான். இந்த ஊருக்குள் அவன் முதன் முதலாய் வந்திறங்கின காலை நேரமும், அவன் மன நிலையும் ஞாபகத்திற்கு வந்தது. வாழ்க்கை, பாவம் அவனுக்கு முதலில் சற்றுக் கடினமான பாடத்தையே கற்றுக் கொடுத்துவிட்டது. இனி அவனால் இந்தச் சிறு ஊரின் பெயரை மறக்கவே முடியாது. ஊரின் பெயரைக் கேள்விப்பட்டாலே போதும் தனக்குப் ப்ரியமான கையால் அடிவாங்கிய விந்தையான முகபாவம் வந்து போகும். அதற்கு என்ன செய்ய முடியும்?

உயரே வானம் தெளிவில்லாமல் மெல்லிய இருட்டைப் பரப்பிக் கொண்டே வந்தது. ஆனால் இன்னும் பூமியை விட்டு வெளிச்சம் போகவில்லை. அடிவானமெங்கும் கடைசி ஒளியின் பிரகாசம் தங்கக் கோடுகளால் மேகங்களை அலங்கரித்தது. அந்தப் பிரகாசத்தை நோக்கியே பறப்பதுபோல பறவைகள் அங்கும் இங்கும் அலங்கோலமாய் பறந்து கொண்டிருந்தன. அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஆனந்த் முகத்தை அதிருப்தியுடன் சுளித்தான். அவனுக்கு இந்த நிகழ்ச்சி ஒன்றும் உவப்பாயில்லை. ஆனால் இதைத் தவிர வேறு வழியில்லை என்று அவன் முடிவாய் உணர்ந்த இரவில் தூங்கவில்லை. இருட்டை முறைத்துப் பார்த்துக்கொண்டே கிடந்தான். பக்கத்தில் படுத்திருந்த அவளும் உறங்கவில்லை என்று திடீர் திடீரென்று அவள் விடும் பெருமூச்சுகளினால் அவன் அறிந்து கொண்டான். தண்டவாளங்களுக்கு அந்தப்புறம் காய்ந்த மட்டைகளுள்ள தென்னை மரங்களும் நீரற்ற பெரிய கம்மாயும் தெரிந்தன. கம்மாய்க் கரை வழியே ஆட்கள் தனித்தனியே ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாத மாதிரி போய்க் கொண்டிருந்தார்கள். மனிதர்களைத் தனியாய் பார்ப்பதே

ஆனந்துக்கு சங்கடத்தை உண்டு பண்ணியது. முகத்தைத் திருப்பி சேதுவைப் பார்த்தான்.

சேது ரயில் வருகிறதாவென்று சும்மாவேணும் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான். ரயில் கம்பிக்கிராதிகள் வழியே வெளியே பார்க்கும்போதுதான் ஆனந்தின் கண்களை நேருக்குநேர் சந்திக்க நேர்ந்தது. உடனே தலையைக் குனிந்து சரளைக் கற்கள் பாவிக்கிடக்கிற தரையை பெருவிரலால் ஊன்றி அழுத்தினான். அன்றைக்குக் காலையில் அவனுடைய அறைக்கு ஆனந்த் வந்தபோது இருந்த ஆழ்ந்த முகத்தோற்றமே இப்போதும் இருந்தது. நட்சத்திரங்கள் இப்போது மங்கலான முகவிலாசங்களோடு ஒன்றிரண்டாய் எட்டிப் பார்ப்பதைப் பார்த்தான். இப்படி ஒவ்வொரு முறை அங்குமிங்கும் திரும்பும்போது அவள் முகத்தின் மீது அவன் பார்வை வழுகி ஓடியது. அவள் முகத்தைப் பார்க்கும்போதெல்லாம் கண்களில் ஒரு பிரகாசமும் பெரிய துயரமும் வெளிப்படையாக தெரிந்தது. இதெல்லாம் சீக்கிரம் முடிந்துவிடாதா என்றிருந்தாலும் கடைசி வரையில் எல்லாம் நல்லபடியாய் முடியவேண்டும் என்று நினைத்தான்.

ஆனந்த் இப்படி இருப்பது சரியில்லை என்று நினைத்தவன் போல ரொம்பச் சிரமப்பட்டு முதலில் மௌனத்தைக் கலைத்தான்.

“போய் லெட்டர் போடு சேது...”

சேது பதில் எதுவும் சொல்லாமல் தலையை ஆட்டினான். அவன் ஆனந்த் சொன்ன வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டுதான் தலையாட்டினானா என்று தெரியாது.

அவள் அந்த நேரம் இயல்பாய் சேதுவின் முகத்தைப் பார்த்தாள். ரத்தமின்றி வெளுத்திருந்தது. உயிரின் உணர்ச்சித் துடிப்பு எதுவும் அந்த முகத்தில் இருப்பதற்கான அறிகுறியே தென்படவில்லை. அவன் அவர்களைப் பார்க்காமல் உயரே பார்த்துக் கொண்டிருந்தான். தனியே ஒரு பறவை மட்டும் பறந்து கொண்டிருந்ததைப் பார்க்கவும்தான் அவன் முகத்தில் உயிர் வந்தது. அப்போது அவன் நினைத்தான். ஒன்றும் நடந்துவிடவில்லை. எல்லாம் பிரமை அல்லது மத்தியானத் தூக்கத்தில் ஏற்படும் கெட்ட கனவு இல்லையில்லை அவர்கள் மூன்று பேரும் சும்மா வேறு யாரையோ நண்பரை வழியனுப்ப வந்திருக் கிறார்கள். முன்னால் அவர்கள் சாயந்திர நேரங்களில் நடந்து திரியும் போதெல்லாம் அடிக்கடி இந்த ரயில்வே ஸ்டேஷன் பெஞ்சில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்திருக்கிறார்களே அப்படித்தான், இல்லையென்றால் யாரோ ஒரு நண்பருக்காக இங்கே காத்துக் கொண்டிருக்கிறோம்.

அவ்வளவுதான். வேறொன்றுமில்லை. ஆனால், அவள் கண் கலங்குகிறாளே. மெல்ல, நாசூக்காய் மூக்கின் மேல் விரல்களைக் கொண்டு போய் கண்களில் ததும்பி நிற்கும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். முதல் மணி அடித்த பின்னரே மணியின் ஒலி நெஞ்சில் உறைத்தது. இன்னும் சில நிமிடங்கள்தான். வெகு காலத்திற்குப் பிறகு வாயைத் திறந்து பேசுகிறவனைப் போல, சேது,

“ஊருக்கு ரெண்டு பேரும் வாங்க...”

இதை ஆனந்தைப் பார்த்துச் சொல்ல வேண்டும் என்று நினைத்தும் அவளைப் பார்த்துத்தான் சொன்னான். ஆனந்த் சேதுகிட்டே நெருங்கி அவன் முதுகில் வாஞ்சையுடன் தட்டிக் கொடுத்தான். அதற்குள் ஏதோ நினைத்தவன் போல ஆனந்த் மெல்ல அங்கிருந்து கொஞ்ச தூரத்திலிருந்த வெத்திலை பாக்குக் கடைக்குப் போனான். அதை அவன் இயல்பாகவே செய்தான்.

ஆனந்த் போவதையே சேதுவும் அவளும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். திடீரென சேதுவும் அவளும் சொல்லி வைத்த மாதிரி திரும்பி ஒருவரை ஒருவர் நேருக்கு நேர் பார்த்துக் கொண்டனர். உடனே ஒருவித அசூயை உணர்வு இருவர் மனதிலும் ஏற்பட்டது. ரெண்டு பேரும் மற்றவர் மனதில் ஓடும் ரகசிய எண்ணங்களை ஊகித்தவர்களைப் போல அருவறுப்படைந்தனர். சேது வெட்கத்தால் கூசிக் குன்றிப் போனான். ஆனால் அதே நேரம் அவள் ஆனந்தின் நடத்தையை பெரிய அவமானமாக நினைத்தாள். இதை விட பெரிய அவமானத்தை இதுவரையில் அவன் அவளுக்கு இழைத்ததில்லை. அவளுக்கு ஆனந்தின் மீது தீராத கசப்பு அந்தக் கணத்தில் தோன்றியது. உண்மையில் அவன் எதையுமே புரிந்து கொள்ளவில்லையோ, அவள் குனிந்த தலை நிமிரவேயில்லை. ஆனந்த் சிகரெட் புகைத்துக் கொண்டே திரும்பி வந்தான்.

அருகில் வந்ததும், சேது எதுவும் பேசாமல் ஆனந்தின் இடது கையைப் பிடித்துக் கொண்டான். ரெண்டாவது மணி அடித்தது. அந்த சத்தத்திலேயே தங்களை விட்டு சேது வெகுதூரம் போய்விட்டதைப்போல அவர்களும், அவர்களைப் பிரிந்து வெகுகாலமாகி விட்டதைப்போல சேதுவும் உணர்ந்தார்கள்.

இப்பொழுது வானம் சாம்பல் கலந்த கறுப்பாய் விரிந்து கிடந்தது. நட்சத்திரங்கள் தூசி துடைத்த மாதிரி பளிச்சென்று தெரிந்தன. பிரயாணிகள் கொஞ்சம் சுறுசுறுப்பானார்கள். சேதுவும் தன்னுணர்வு இல்லாமலேயே ரெண்டு கைகளிலும் பெட்டிகளைத்

தூக்கிக்கொண்டான்.

“கொஞ்சம் தள்ளி நிப்பமா...”

ஆனந்த் சொன்னதைப் புரிந்தோ புரியாமலோ அவன் பின்னாலேயே நடந்தார்கள் அவளும் சேதுவும். இப்போது அவர்கள் நின்றிருந்த இடம் சற்று இருட்டானது. தற்செயலாகவோ அல்லது தெரிந்தோதான் அந்த இடத்தை ஆனந்த் தேர்ந்தெடுத்தான் போலும் என்று சேது நினைத்தான். ஒருவர் முகம் ஒருவருக்குச் சரியாகத் தெரியவில்லை. இதுவும் ஒரு வகையில் நல்லதுதான். இல்லையென்றால் ஒன்று செய்ய ஏலாது... பிரியும்போது அவள் முகத்தையும், ஆனந்தின் முகத்தையும் பார்த்துவிட்டால் ஒருவேளை ரயிலின் முன்னால் பாய்ந்தாலும் பாய்ந்துவிடலாம்.

சேதுவுக்கு எதிரே தூரத்தில் அழுது வடியும் ரயிலின் வெளிச்சம் தெரிந்தது. அதைப் பார்த்ததுமே அவர்கள் மூன்று பேருக்கும் பெருந் துயரமும், நிம்மதியும் ஏற்பட்டது. ஆனந்த் சிகரெட்டைக் கீழே விட்டெறிந்தான். அப்போது அவள் நிமிர்ந்து சேதுவைப் பார்த்தாள். அவனுக்கு அவள் முகம் சரியாகத் தெரியவில்லை. ஆனால், அவள் கண்கள் ஒளி வீசியதைப் பார்த்தான். அந்தப் பார்வையில் அவன் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டான். இல்லை உணர்ந்து கொண்டான். அவள் இதுவரை சேதுவிடம் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. ஆனால் இப்போது எவ்வளவு சொல்லிவிட்டாள். ஆமாம். அவன் எதற்காக இத்தனை அவஸ்தைகளையும்படுகிறானோ அதைத் தெரிந்து கொண்டாள். அதுபோதும், இனி என்ன நேர்ந்தாலும் கவலையில்லை.

பெரிய ஓலத்துடன் ரயில் வந்து நின்றது. சேது, “போயிட்டு வரேன்...” குரல் தழுதழுத்தது. அவர்கள் முகத்தைப் பார்க்க முடியாமல் விறுவிறுவென்று நடந்தான். அவன் இரண்டடிதான் போயிருப்பான். ஒரு பெரிய விம்மலைக் கேட்டான். ஐயோ திரும்பி விடுவோமா. மனசை கணத்தில் உறுதிப்படுத்திக்கொண்டு ரயிலில் ஏறினான். ஆனந்த் அவள் கையைப் பிடித்துக்கொண்டு நின்றான். ரயில் கனத்த முனகலுடன் கிளம்பியது. சேதுவுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது. அவள் எதையும் பொருட்படுத்தாமல் முன்னால் ஓடிவந்து நின்று கையசைத்தாள். அவள் முகம் கண்ணீரால் நிறைந்திருந்தது. ஆனந்தும் கண்கலங்கி ஆனால் அவனுடைய வழக்கமான அமைதியான தோற்றத்தில் நின்று கையை ஆட்டினான்.

அவர்கள் ரயில் மறையும்வரை நின்று கொண்டிருந்தார்கள். ஆனந்த்

அவளுடைய கையை ஆதரவுடன் பிடித்துக் கொண்டு ஸ்டேஷன் விட்டு வெளியேறினான். கடைசி ரயிலும் போனதால் ஸ்டேஷன் வெறிச்சென்று துன்பம் தரும் அமைதியில் ஆழ்ந்துகொண்டிருந்தது.

5 மனிதர்கள்

அவருக்கும் அவர் வந்த காரியத்தின் சிரமம் தெரிந்திருந்ததால் உடனே எதுவும் பேசவில்லை. நாற்காலியில் இன்னும் சரிந்து உட்கார்ந்துகொண்டு மூக்குக் கண்ணாடியைத் தூக்கிவிட்டுக் கொண்டார். வந்து நிலைகொள்ளாமல் தவிப்பதைவிட வராமல் இருந்திருக்கலாம். இன்னும் நிலைமை சுமூகமாகவில்லை. லேசாய் ரெண்டு வார்த்தைகள் அவள் பேசிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும். எவ்வளவோ சங்கடத்தை லகுவாக்கிவிடும். அவளை நேராய்ப் பார்க்காமல் பார்த்தார்.

அம்மா பட்டாலை நிலைப்படியில் உட்கார்ந்திருந்தாள். அவளுக்கும் அந்த நேரம் திடீரென்று ஏதாவது நடந்தால்கூட தேவலாம்போல இருந்தது. மாமா எதற்கு வந்திருக்கிறார் என்று அவளுக்குத் தெரியும். அந்நிய மனுஷன் என்றால் அக்கறையில்லாத இரண்டு வார்த்தைகளில் பதில் சொல்லி அனுப்பி விடலாம். மாமாவிடம் முடியுமா. ஒரு காலத்தில் அவருக்கு வாழ்க்கைப்படக்கூட அம்மா விருப்பம் கொண்டிருந்தாள். அது இப்போது நினைத்துப் பார்க்க அர்த்தமில்லாததுதான். என்றாலும் பொதுவாகவே அம்மா வாழ்க்கையில் ரொம்பவும்பட்டிருந்தாள். மனதில் சங்கடம் பரவ அவரை நிமிர்ந்துபார்த்தாள். அவர்தான் பேச ஆரம்பித்தார்.

“என்ன... கௌரிட்டருந்து லெட்டர் ஏதும் வந்திச்சா...”
பேசாமலேயிருந்து பேசியதால் தொண்டை பிசிறடித்தது. அதோடு அவருக்கு அங்கிருக்கும் ஒவ்வொரு கணமும் மிகுந்த மனசஞ்சலத்தை உண்டு பண்ணியது. அம்மாவும் மாமாவிடமிருந்து பேச்சு தொடங்கி இருண்ட அமைதியை அழித்ததும், இனி வார்த்தைகளினால் எத்தகைய கொடூரம் நடந்தாலும் பொறுத்துக்கொள்ளலாம் என்று நினைத்தாள்.

“ஆமா... வந்திச்சி... போன வாரம் ரெண்டு பேரும் திருச்செந்தூர் போய்ட்டு வந்தாகளாம்...”

“உண்டாயிருக்காளா...”

“இல்ல... அப்படியொன்னும் தெரியல... ஆமா... நீங்க ரொம்ப எளச்சிப் போன மாதிரி இருக்கீகளே...”

“இடையில ஜாண்டிஸ் வந்து ரொம்ப சிரமப்படுத்திருச்சி... இப்ப தேவல...”

“ஆபீஸுக்கு லீவு போட்டிருக்கீகளா...”

“ம்... நாங்கூட வரவேண்டாம்னுதான் இருந்தேன். ஒங்க அக்காதான் போய் லீவ இன்னுங் கொஞ்ச நாளைக்கு எக்ஸ்டண்ட் பண்ணிட்டு அப்படியே ரெங்காவப் பாத்துட்டு வாங்கன்னு அனுப்பி வச்சா...” அம்மா இதைக் கேட்டதுமோ என்னவோ ரொம்ப இயல்பாக எழுந்தாள். பட்டாலை அடுக்களையெல்லாம் இருள் கவிந்து வந்தது. விளக்கேற்றுவதற்காக எண்ணெய்க் கிண்ணத்தை எடுத்துக்கொண்டு குத்து விளக்கருகில் போனாள். இதை அவள் எதார்த்தமாகச் செய்தாலும், அவருக்கு அவள் எழுந்து சென்றது விபரீதமாகத் தோன்றியது.

அவள் குத்துவிளக்கில் எண்ணெய் விட்டு, முதிர்ந்து பச்சை நரம்போடிய கைகளினால் திரியை ஏற்றினாள். இருளைச் சற்றே விலக்கியது மாதிரியும், வெளிச்சத்துக்கும் இருட்டுக்கும் இடையில் மங்கலான திரை விரிந்த மாதிரியும் சுடர் ஆடாமல் அசையாமல் அமர்ந்திருந்தது. அந்த அமைதியான, பொன்மயமான ஒளியில் அம்மாவின் முகம் அளவு கடந்த சோகத்துடனும், வாஞ்சையுடனும் இருந்தது.

அம்மா சுடரைச் சேவித்தாள். அந்தக் கணத்தில் அவர் ஒரு முறை அவள் முகத்தைப் பார்த்தவர் மறுபடியும் பார்க்க முடியாமல், பார்க்கப் பிரியமில்லாமல் திரும்பிக் கொண்டார். ஒருவேளை இன்னும் ஒரு முறை பார்த்திருந்தால் அவர் சொல்ல நினைத்த வார்த்தைகளைச் சொல்லாமல் போயிருக்கக்கூடும். அம்மா நீண்ட பெருமூச்சுடன் குத்து விளக்கின் முன்னாலிருந்து நகர்ந்து எலக்ட்ரிக் லைட்டுக்காக ஸ்விட்சைப் போட்டாள்.

“கரண்ட் இல்ல போலிருக்கு...” இது அவருக்காக இல்லை. அவள் அவளை நிதானப்படுத்திக் கொள்ளவும், உணர்வுடன் இருப்பதை அவளே உணர்வதற்காகவும் சொல்லிக் கொண்டாள்.

அவர் இருப்புக்கொள்ளாமல் நிமிர்ந்து உட்கார்ந்தார். நடு உச்சி எடுத்துச் சீவியிருந்த தலையைக் காரணமில்லாமல் தடவி விட்டுக்கொண்டார். முகம் தீவிரமாகியது. எதனாலேயோ அவர் இதுதான் சரியான நேரம் என்று நினைத்தார். ஒருவேளை அந்த அரைகுறை இருட்டில் அம்மாவின் முகம் சரியாகத் தெரியாமலிருந்தது ஒரு காரணமாயிருக்கலாம். தொடைக்கருகில் பேண்டை இழுத்துவிட்டு மெல்ல நாற்காலியிலிருந்து உடம்பை முன்னுக்குச் சாய்த்து, இதுவரை பேசிக்கொண்டிருந்த பேச்சின் தொடர்ச்சி போல,

“ரங்கா... நீ கௌரி கல்யாணத்துக்குக் கேட்டு வாங்கறப்ப என்ன சொல்லி வாங்குனே... யாவுகமிருக்கா... எவ்வளவு நாளாச்சு... வட்டி

யாவது ஒழுங்கா கொடுக்கலாம்... அதுவும் இல்ல... நீங்க செய்யறது ஒங்களுக்கே சரின்னு படுதா...”

கடைசியாய்ச் சொன்னதைச் சொல்லியிருக்க வேண்டாம் என்று சொல்லி முடித்ததும் நினைத்தார். எப்படி இந்த மாதிரி பேச முடிந்தது என்று அவருக்கே வருத்தமாய் இருந்தாலும் ஒரு வழியாய் பேசி முடிந்ததே என்ற நிம்மதியுடன் பெருமூச்சு விட்டுக்கொண்டே நிமிர்ந்து உத்திரக் கட்டையைப் பார்த்தார். இனிக் கவலையில்லை. அவள் என்ன சொன்னாலும் கேட்டுவிட்டுப் போக வேண்டியது. அவ்வளவுதான்.

அம்மா தலையைக் குனிந்தவள் நிமிரவே இல்லை. கௌரி கல்யாணத்திற்குப்பட்ட எவ்வளவோ கடன் தீரவில்லை. மாமாவிடம் வாங்கினது சிறு தொகைதான். ஆனால், இதுவரை கொஞ்சமும் அடைக்க முடியவில்லை. அவள் என்ன செய்வாள். தரையில் எதையோ தேடிக் கொண்டிருப்பவள் மாதிரி விரல்களை அலைய விட்டாள். அப்புறம் ஏறிடாமலேயே,

“அவுகளும் பணவிசயமாத்தான் மதுரை வரைக்கும் போயிருக்காக... அவுக ரிடையராகி ரெண்டு மூணு மாசமாகப் போவுது... இன்னும் ஒண்ணயும் வரக் காணும்... கண்ணனுக்காவது எதாச்சும் வேல கெடைக்குதான்னா... நம்ப தரித்திரம் நம்பள விடுவனாங்குது... எப்படியும் அடுத்த வாரம் கொடுத்துருதேன்... மாமா...”

“இப்படி எத்தனையோ மாசம் போச்சி...” என்று மாமா வாய்க்குள்தான் முனகினார். அதுவும் அம்மாவுக்குக் கேட்டிருக்கும்போல. உடனே அவசரமாக,

“இல்ல... அடுத்த வாரம் கண்டிசனா நானே திருநெல்வேலி கொண்டு வந்து தாரேன்...”

அம்மாவுக்கு அழுகை கண்ணில் கட்டிக்கொண்டது. மாமாவிடம் இப்படிக் கேட்க நேர்ந்ததுவிட்டதே. சட்டென்று எழுந்து உள்ளே போய் குத்துவிளக்கில் எண்ணெய் விட்டு மறுபடியும் திரியை ஏற்றிவிட்டாள். இரண்டு சொட்டுக் கண்ணீர் அவளை மீறி விழுந்தது. இன்னும் என்னவெல்லாம் நடக்க இருக்கிறதோ, பிரியமானவர்களிடமிருந்து இன்னும் என்னென்ன வார்த்தைகளைக் கேட்க வேண்டியிருக்கிறதோ, முந்தானையால் கண்ணைத் துடைத்துக் கொண்டாள். தன்னைத் தேற்றிக்கொள்ள லேசாய் செருமிக் கொண்டாள். பிறகு வாசலுக்கருகில் வந்தபோது அவரும் நிமிர்ந்து கிளம்புகிற மாதிரி தயாரான, ஆனால் வருத்தமான முகபாவத்தில் இருந்தார். என்ன செய்வதென்று

தெரியவில்லை. இந்த இடத்தை விட்டுச் சீக்கிரம் கிளம்பிவிட வேண்டும். ஆனால் அது நல்லமுறையில் நடக்க வேண்டும் என்று நினைத்தார்.

“ரெங்கா... கொஞ்சம் தண்ணி கொடம்மா...” அம்மா சொம்பில் கொண்டுவந்த தண்ணீரை வாங்கி நிதானமாய் பரபரப்பில்லாமல் குடித்துவிட்டு அவளை நேரே பார்க்கப் பிரியப்படாமல் பக்கத்திலிருந்த தையல் மிஷின் மீது சொம்பை வைத்துவிட்டு எழுந்தார்.

“இப்பவே ஊருக்கு கிளம்பிட்டீகளா... இருந்துட்டு காலைல போலாமில்ல...”

“இல்லம்மா... கௌம்ப வேண்டியதுதான்... ஊர்ல நிறைய்ய சோலி கெடக்கு...”

“அக்காவ விசாரிச்சதா சொல்லுங்க...”

“சரி... நான் வரட்டுமா... கண்ணன எங்க...”

“இன்ஸ்ட்யூட்டுக்கு டைப்படிக்கப் போயிருக்கான்...”

“சரி நான் போய்ட்டு வரேன்... ரெங்கா...” என்றவாறே செருப்புகளில் கால்களை நுழைத்தார். படியிறங்கும்போது “ரெங்கா... மறந்துராத...” என்று சொல்லலாமா என்று யோசித்தவர் சொல்லாமலேயே விருட்டென்று இறங்கி நடந்துவிட்டார். அம்மா வாசல் படியில் நின்று அவர் வேகவேகமாக தலையை ஆட்டிக்கொண்டே போவதைப் பார்த்தாள்.

6. பெயிண்டர் பிள்ளையின் ஒருநாள் காலைப்பொழுது

அடுக்களை நடைப்படியில் உட்கார்ந்து கொண்டிருந்த பெயிண்டர் பிள்ளை ஒரு தடவை பீடியைச் சுண்ட கன்னம் குழிய இழுத்துவிட்டு தூர எறிந்தார். அடுக்களைக்குள் இட்லி அவித்துக் கொண்டிருந்த மரகதம் அவர் கேட்ட கேள்விக்குப் பதிலை அசட்டையாக,

“யாரு கண்டாக... மாமா... திதிய... மக்கமாரு வந்து பேசினாகளோ என்னமோ...”

சொல்லிக்கொண்டே இட்லித் தட்டிலிருந்து இட்லியை எடுத்துவிட்டு மறுபடியும் மாவை ஊற்றிக் கொண்டிருந்தாள். லேசாக உள்ளே எட்டிப் பார்த்தார் பெயிண்டர் பிள்ளை. இன்னைக்கு காலைப் பொழுதை இங்கனேயே கழித்து விட்டால் வேகாத வெயிலில் சுத்த வேண்டியதில்லை. மெல்ல சாயலச்சை எழுந்து பார்த்துக் கொள்ளலாம். சந்திரனுக்கு பகல் ஷிப்ட் என்பதால் எப்படியும் காலையில் பலகாரம் இருக்கும் என்று நேற்றிரவே யோசனையில் வந்து சேர்ந்திருந்தது. அதனால காலம்பரயே வந்து உட்கார்ந்து விட்டார்.

“ஆமா... அதென்ன அப்பிடிப் பேசுதட்டீ... மக்கமாரு வந்து பேசுவாகன்னு... நீயும் ஒரு பிள்ளைதான்... உங்கம்மை ஓன்ட்ட எது சொல்லலியா...” மெல்லப் பேச்சை வளர்த்தார்.

பிள்ளைகள் எல்லோருக்கும் காப்பி கொடுத்தபோது அவருக்கும் கிடைக்கும் என்று நினைத்தார். ஒருவேளை இட்லியுடன் சேர்த்துத் தரலாம். இப்பத்தானே ரெண்டு மூணு தட்டு அவித்திருக்கிறாள். பொதுவாய் அவர் யார் வீட்டுக்குப் போனாலும் பொம்பிளையாள் இருக்கிற நேரம் பார்த்துதான் போவார். பொம்பிளகளுக்கு அவ்வளவு உறுதியான ஈயப் பத்தவைப்பு மனசில் கிடையாதென்கிற நம்பிக்கை. ஆம்பிளைகள் இருந்துவிட்டாலோ பேருக்கு ரெண்டு வார்த்தை பேசிவிட்டுத் திரும்பிவிடுவார். எல்லாம் அவர் முன்னால வளர்ந்த பிள்ளைகள்தான் என்றாலும் என்ன செய்ய முடியும். வெளியே வெயில் வளர ஆரம்பித்தது. மரகதம் அடுக்களையிலிருந்து வெளியே வரும்போதே,

“நானா... பேச்சியம்மாளுக்கும் மொட்டையா பிள்ளைக்கும் நாலு பிள்ளகதான அவுகளுக்கு இந்த மரகதந்தான் எப்பயோ செத்துப் போயிட்டாளே...” கையில் கொண்டு வந்த தட்டுகளைக் கழுவி எடுத்துக்

கொண்டிருந்தாள். நல்ல வேளைதான். எப்படியும் இன்னும் கொஞ்ச நேரந்தான் பெயிண்டர் பிள்ளை முகத்தில் சுருதி கூடி அக்கறை மிகுந்திருந்தது. உரிமையோடு,

“அடச்சீ... கூறுகெட்ட கழுத... குடும்பம்னா... சண்ட சடவு வரத்தான் செய்யும்... அதுக்காவ தாயிபிள்ளை அண்ணந்தங்கச்சி இல்லாமயா போயிடுவாக...” சொல்லிக் கொண்டார்.

வயிறு சத்தம் கொடுத்தது. அடிவயிறு ஒட்டிப்போய் அந்த இடத்தில் நிரப்ப முடியாத பள்ளம் விழுந்த உணர்வு வரவே மறுபடியும் ஒரு பீடியை எடுத்துப் பத்த வைத்தார். இடுங்கிப் போய் பஞ்சடைந்து போன கண்களும் பல்லில்லாது டொக்கு விழுந்து போன வாயும், நட்டக்குத்தலாய் நிற்கும் மீசையும் தாடியும் அவருடைய இயல்பான வயதையும் மீறின தோற்றம் தந்தது. அவருக்கு அன்னிக்கன்னிக்கிப் பொழுது தவிர வேறு வேலையே கிடையாது. கிடைத்த இடத்தில் சாப்பாடு. எதுவும் வழியில்லையென்றால் பஸ் ஸ்டாண்டுக்குப் போய்விடுவார். வரும்போது எப்படியோ திருப்தியாய் சாப்பிட்டுவிட்டு ஒரு கட்டுப் பீடியோடு வந்து எங்கேயாவது ஒதுங்கி உறங்கிவிடுவார்.

தட்டுகளை கையில் எடுத்தவள் நின்று திரும்பி,

“மாமா அப்படியெல்லாம் இருந்திருந்தா... எங்கய்யா செத்த வீட்டுக்குள்ளே நாலு பேருஞ்சேந்து குசுகுசுன்னு பேசி அம்மயவும் ஐசு வச்சி இருந்த பித்தள வெங்கலப் பாத்திரங்களையெல்லாம் ஒதுக்கிட்டாகளே... எல்லாம் எப்படிங்கீக... ஏல, கணேசா திங்க வாயேம்ல... பள்ளிக்கடம் போணுமா... வேண்டாமா...”

பெயிண்டர் பிள்ளைக்கு மரகதம் கடைசியாய் சொன்னது உற்சாகம் தந்தது. மீண்டும் எஞ்சியிருந்த பலத்தைத் திரட்டி தாடியைச் சொறிந்துகொண்டே,

“போறானுக... போ... போகும் போதென்ன... நீயா நானா... கட்டிக்கிட்டுப் போப்போறம்... சுடுகாட்டில தீய வைக்கும்போது என்ன தெரியும் கழுதகளுக்கு... இருந்தாலும்... ஒங்கம்மைக்கி இது ஆகாது... பேச்சியம்மா இப்படிப் பண்ணுவான்னு நான் நெனக்கல...”

அவருக்கு அவருடைய பேச்சு திருப்தியளித்தது. இதுக்கும் மேலேயா பேசிர முடியும். இதுபோதுமே. அவர் உள்ளேயிருந்து வரும் மரகதத்தின் பதவிசான குரலுக்காகக் காத்திருந்தார். ஆனால், அவர் எதிர்பார்த்ததுக்கு மாறாக மரகதம் பிள்ளைகளுக்கு மட்டும் இட்லி வைத்தாள். மூத்தவன் கொஞ்சம் விவரம் தெரிஞ்சவன். ஆனால்,

அப்பனைப்போல சிடுமூஞ்சி.

“வாங்க தாத்தா” என்று கிட்டே நெருங்காமல் கூப்பிடத் தெரிந்திருந்தான். சின்னதுகள் ரெண்டுக்கும் அவரைக் கண்டு பயம். அவரது வார் வாரான மீசைக்குள் ஒளிந்து கொண்டு பீடி எப்படி புகை விடுகிறது என்று தூரத்தில் நின்று வேடிக்கை பார்ப்பார்கள்... அவர் வீட்டை விட்டு கிளம்பினதுக்கப்புறம் வாசலில் நின்று தாத்தா என்று கூப்பிட்டுவிட்டு உள்ளே ஓடிவிடுவார்கள். அவர்கள் இட்லியைச் சட்னியில் குழப்பிப் பிசைந்தது நாக்கில் எச்சில் ஊறித் தொண்டை நனைந்தது. வயிற்றுக்குள்ளிருந்து கூக்குரல் வந்தது. இருந்தாலும் நிதானத்தைக் கைவிடாமல் பாதி எரிச்சலோடும், தாபத்தோடும்,

“ஏல, கொஞ்சமாத் தொட்டு தின்னேம்ல... ஏம்போட்டு கொழப்பிப் பிசையுத... பின்ன உஸ் உஸ்ஸுன்னு தண்ணியக் குடிக்க... இப்படித் தின்னா... ஒடம்புல சேருமா... ஆமாட்டி மரகதம் சாத்தூரா மகனுக்கு மருதைல பொண்ணு பார்த்திருக்காகளாம்ல... ஒனக்கேதும் தெரியுமா...?”

“எனக்கொண்ணும் தெரியாது மாமா... என்னமோ பத்து பவுன் நகையும், ஆயிரரூவா ரொக்கமும் கொடுக்கதாப் பேசிட்டாகளாம்... யாரு கண்டா கழுதய... அடுத்தவுக. பொறணி நமக்கெதுக்கு மாமா... நம்பபாடே தீரமாட்டேங்கு...”

“அது சரிதான்...”

மறுபடியும் தலையை நீட்டினார் அடுக்களைக்குள். மரத்தூள் அடுப்பில் தூள் கனிந்து உடைந்து விழத்தொடங்கியிருந்தது. இட்லிச் சட்டியை எடுத்துவிட்டு, கொஞ்சம் எருவையும், சிராய்த் தூளையும் போட்டு மறுபடி தீப்பத்த வைத்தாள். இட்லிச்சட்டி மீண்டும் அடுப்பில் ஏறுவதைப் பார்த்ததும் நிம்மதியுடன் தாடியைச் சொறிந்து சிக்கலை எடுக்க ஆரம்பித்தார். நேரமாகிக் கொண்டிருந்தது. கை கால்களும் சோர்வடைய ஆரம்பித்தன.

“ஆமா... சந்திரனுக்கு என்ன பகல் ஷிப்டா... காலையிலிருந்தே இட்லி அவிக்கிறியே...” ஞாபகப்படுத்தினார்.

“இந்தப் பகல் ஷிப்டு வந்தாத்தான் கொஞ்சம் சிரமம்... காலைல அஞ்சு மணிக்கு எந்திரிச்சி அடுப்பு பத்த வைக்க வேண்டிருக்கு...”

“சிரமந்தான்... என்ன பண்றது...” என்றவர் தடுமாறி நின்றுவிட்டார்.

மேற்கொண்டு என்ன பேச என்று தெரியவில்லை. ரொம்ப நேரம் பேசின

களைப்பு மனசிலும் உடம்பிலும் வந்திருந்தது. வயிறு தீனமான குரலில் ஈளக்கம் போட்டது. நேற்றைக்கு மத்தியானம் விருதுநகர் மூக்கையா நாடார் வாங்கிக் கொடுத்த சாப்பாடு. பீடிப் புகையின் காரத்திலேயே ராத்திரியைச் சமாளித்துவிட்டார். இன்னைக்கு எழுந்திரிச்சதிலிருந்து ஒரு வாய்த் தண்ணீர்கூட குடிக்கவில்லை. குழந்தைகளும் சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டன. அதுகள் தட்டில் ஒழப்பிப் போட்டதே கண்ணில் இன்னும் ஆசையை வளர்த்தது. எப்படியும் மரகதம் தருவாள். எதையோ புதிதாய் யோசித்தவர்போல,

“மரகதம் வெலவாசி போற போக்கப் பாத்தியா. இந்த லட்சணத்துல போனா... என்னத்த குடும்பம் நடத்தறது... ஆயிர ரூபா வந்தாலும் காணாதெ...”

பெரிய குடும்பத்தை நிர்வகிக்கிற தோரணையில் பேசினார். உள்ளேயிருந்து பதில் வரலை. திடீரென விக்கல் சத்தம் மட்டும் கேட்டது. அதைக் கேட்டதும்தான் திடுக்கிட்டு நிமிர்ந்து எட்டிப் பார்த்தார். தட்டில் இட்லியைப் பிசைந்து கொண்டே அண்ணாந்து தண்ணீரைக் குடித்துக் கொண்டிருந்தாள் மரகதம். அட, சண்டாளி... கெடுத்தாளே. அரவமில்லாமல் இப்படிச் செய்வாளா? ஆனாலும் பெயிண்டர் பிள்ளைக்கு நப்பாசை விடவில்லை. அவள் சாப்பிட்ட பின் கொடுப்பாளோ...

ஆனால் இவருடைய எல்லா நம்பிக்கைகளையும் நசுக்கிக் கொண்டு இட்லிச் சட்டி, தட்டு ஏனங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு வந்து வெளியே போட்டு வெளக்க ஆரம்பித்துவிட்டாள். அவருக்கானால் தாங்கமுடியவில்லை. வயிறும் இரைஞ்சியது. இனிப் பொறுக்க முடியாது என்று தோன்றியதும் முடிவில் வாய் திறந்து கேட்டுவிட வேண்டியதுதான் என்று நினைத்து லேசாகச் செருமினார்.

“மரகதம்” என்று தயங்கினார். அவள் திரும்பிப் பார்த்தாள். அவளுடைய இளக்காரமான முகத்தைப் பார்த்தாரோ இல்லியோ உடனே அவருக்குள் எதுவோ இனம்புரியாத ஒரு வெறுப்புணர்ச்சி தோன்ற சட்டென,

“கொஞ்சம் தண்ணி கொடேன்...” என்றார்.

அவள் தண்ணீர் மோந்து கொடுத்துவிட்டு மறுபடியும் உட்கார்ந்தாள். அவள் கொடுத்த சொம்பை வாங்கி ஒரே மூச்சில் குடித்துவிட்டு,

“நீ உங்கய்யா செத்த வீட்டுக்குள்ள ஒப்பாரி வைக்கும்போதே அவுக கையிலிருந்த மோதிரத்தைக் கழத்தி அருவமில்லாம சந்திரங்கிட்டே

கொடுத்தனுப்பிட்டியாமே... எல்லாரும்... சொல்தாகளே...”

அவள் உடம்பெல்லாம் நடுநடுங்கி மூக்கு விடைக்க கோபத்தோடு திரும்பி,

“யாரு சொன்னா...” என்று கனத்த பிசிறலான குரலில் கேட்டதற்கு பதில் சொல்ல, பெயிண்டர் பிள்ளை அங்கில்லை.

அவர் பஸ் ஸ்டாண்டைப் பார்த்துப் போய்க்கொண்டிருந்தார்.

7. நிலை

அவ்வளவு சுபாவமாய் அவன் அறைக்குள் வந்துவிட்டது அவருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவர் உட்கார்ந் திருந்ததற்கு நேர் எதிரே கிடந்த பெஞ்சில் உட்கார்ந்தான். மிகச் சாவதானமாக இரண்டு கைகளாலும் தலைமுடியை மேல்நோக்கி கோதிவிட்டுக்கொண்டே ஜன்னல் வழியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவர் அவன் மேல் வைத்த கண் வாங்கவில்லை. இடுங்கிய கண்கள், முகத்தின் விகாரத்தை இன்னும் அதிகப்படுத்திய தாடி, சின்னதாய் சுரித்துப் போன மூக்கு, உணவை வெறுத்து எவ்வளவோ நாட்களானது போல பூஞ்சையான உடம்பு, ஒருவித அச்சத்தையும் சந்தேகத்தையும் உண்டு பண்ணியது. முதலில் அவன்,

“ராமகிருஷ்ணன் இருக்கிறாரா?” என்ற கேள்வியுடன் அறை வாசலில் நின்றபோதே பிடிக்காமல் போய்விட்டது. அதற்கு அவனது, ஒழுங்கற்று அங்கங்கே குத்திட்டுக் கொண்டு நிற்கும் தாடியாகவோ, அல்லது சட்டையில் பட்டனில்லாது மாட்டிக் கொண்டிருந்த ஊக்காகவோ கூட காரணமாய் இருக்கலாம். அவர் இல்லை என்று சொன்ன பிறகும் உள்ளே நுழைந்ததானது அவரைக் கொஞ்சம் திடுக்கிடச் செய்ததுதான். அவரால் அதற்கு மேல் ஆபீஸ் வேலையாக கொண்டுவந்திருந்த ஸ்டேட்மெண்டை எழுத முடியவில்லை.

அவன் சற்றும் அவரிருப்பது பற்றிக் கவலைப்படாது சட்டையைக் கழற்றிவிட்டு பெஞ்சில் படுத்து கண்களை மூடிக்கொண்டான். அவனுடைய ஒவ்வொரு செய்கையிலும் தன்நிலை மீறிய நிதானம் இருந்தது. வாழ்க்கை வாழ்வதற்கான ஆதார ஸ்ருதியை இழந்து வெறுமனே அலைபவன்போல அசட்டையாய் வாழ்கிறான் என்பது பார்வையிலேயே யாவரும் அறிந்துகொள்ளக்கூடிய வகையில் இருந்தான். மற்றொரு முறை அவன் கண்களைத் திறந்து மூடும்போது அவர்,

“நீங்க யாருன்னு...” மெல்லிசான குரலில் கேட்டார். ஆனால், அது அவரின் இயல்பான குரலில்லை என்றும் அவன் தெரிந்து கொண்டான். அவனது தோற்றம் அவருள் ஏற்படுத்திய வின்ளவே அது.

“ராமகிருஷ்ணனுக்கு ஃப்ரெண்ட்” மறுபடி கண்களை மூடிக்கொண்டான். அவர் அவனைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று அவனுக்குத் தெரியும். பக்கத்து அறைகளிலிருந்து பேச்சுச் சத்தங்கள் தெளிவில்லாமல் கேட்டது. கண்களை மூடி காட்சிகளை

மறைத்தாலும் காதில் விழும் சப்தங்கள் காட்சியாய் மனதுள் விரிவதை மறுக்க முடியவில்லை. திருநெல்வேலிக்கு எப்போது வந்தாலும் நீ அறைக்கு வந்து இருக்கலாம் என்று சொல்லிவிட்டுப் போயிருந்தான் ராமகிருஷ்ணன். அவன் ரெப்ரசென்டேட்டிவ்வாக வேலை பார்ப்பதில் இந்த அறையை நிழல் தங்கலுக்காக அமர்த்தியிருந்தான். அது அவனுக்குப் பிரயோஜனப்படுவதை விட நண்பர்களுக்குத்தான் அதிகம் பயன்பட்டது. இவரும் கூட அவனுடைய நண்பனாயிருப்பார். அவனால் யாரோடும் ஒட்டிக்கொள்ள முடியும். அவன் போன தடவை கோவில்பட்டி வந்திருந்தபோது சொல்லி விட்டுப் போனான்.

“ஒருவாரம் வேணா திருநெல்வேலிக்கு வாயேன். கொஞ்சம் மாறுதலாய் இருக்கும்.”

என்றாலும் எங்கும் ஒரே மாதிரி காற்றே இல்லாது புழுக்கமாய் இருந்தது. திரும்பி ஒருக்களித்துப்படுத்தான். அப்போதும் அவனையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்தான்.

அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவர் இப்படியொரு நிலைமை ஏற்படும் என்று நினைக்கவேயில்லை. ராமகிருஷ்ணனுக்கு இப்படியும் நண்பர்கள் இருப்பார்களா, ஒருவேளை ராமகிருஷ்ணனைப் பற்றிய விபரம் தெரிந்து வந்திருக்கும் வேற்றாளோ, உடனே பெட்டியைப் பூட்ட வேண்டும் என்று தோன்றியது. மெதுவாய் எழுந்து பெட்டியைத் திறந்து எதையோ எடுக்கிறாப்போல எடுத்து மீண்டும் அதை வைத்து விட்டு மூடிப் பூட்டினார். பூட்டியபின் சாவியைப் பைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டார். அறைக்குள் சுற்றுமுற்றும் பார்த்தார். ஷெல்ஃபில் ஒரு கண்ணாடி, இரண்டு சீப்பு, அங்கங்கே எண்ணெய், பவுடர் சிந்திய பழைய கறைகள், ஒரு பழைய எண்ணெய் பாட்டில், பல்பொடி பாக்கெட், அறையின் இடது பக்க மூலையில் சுருண்டு கிடந்த பாய், கொடியில் கிடந்த ஜட்டி, சாரம், நாற்காலிக்குக் கீழே கிடந்த புல்வாரியல். சிறிய பெருமூச்சுடன் நிம்மதியடைந்தார். ஜன்னலில் காயப் போட்டிருந்த பனியனை எடுத்து மடித்து வைத்தார். மறுபடியும் எழுத உட்கார்ந்தார். விரித்து எழுத ஆரம்பித்தபோது அவன் புரண்டு படுத்தான். அவரால் அவன் மேலிருந்த பார்வையை எடுக்கவே முடியவில்லை. யாரையும் நம்பக்கூடாது என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டார். அவருடைய கட்டுப்பாடற்ற சுதந்திரத்தில் அவன் இடைஞ்சல் பண்ணியதுமில்லாமல் அவரிருக்கிற நினைவே இன்றி அவன் அந்தச் சுதந்திரத்தை அநுபவித்தது அவருக்கு எரிச்சலாய் இருந்தது. பொய்யாக இருமிக்கொண்டார். ஏதோ ஒரு வகையில் அவன் மேல் வெறுப்பும் சுமூகமற்ற மனநிலையும் ஏற்பட்டுத் தீவிரமடைந்தது.

அவனை எப்படியும் வெளியேற்றிவிடுவது என்று உறுத்தலாய் தோன்றியே விட்டது. இதனாலொன்றும் ராமகிருஷ்ணன் வருத்தப்பட மாட்டான் என்றும் நினைக்கத் தொடங்கினார்.

யாரிடமோ, சொல்ல முக்கியமான விஷயத்தோடு அவசரமாய், பரபரக்கும் விழிகளோடு ஓடிக்கொண்டிருந்தவன் பாப்புலர் பெண்கள் தையல் பயிற்சிப் பள்ளி வாசலில் கிடந்த அளியில் விழுந்துவிட்டான். ஏதோ குளிர்ச்சியான உணர்வும், உயிர் போகிற வாதையும் ஏற்பட அடிவயிற்றிலிருந்து குரல் கொடுத்தான். தொண்டைவரை காற்று வந்து நின்றுவிட்டது. கனவறுந்து கண்விழித்து எழுந்து உட்கார்ந்தான். அவர் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டிருந்தார். நினைவுகள் மறக்க இடம் மாறினால் போதாது போலிருக்கிறது. கொக்கிர குளம் பாலத்திற்குக் கீழேயுள்ள ஆற்று மண்டபத்தில் இன்றைக்குக் காலையில் ரொம்ப நேரம் அமைதியான ஆற்றின் ஓட்டத்தையும், அதற்குச் சற்றும் சம்பந்தமில்லாத படிக்கு பாலத்தில் விரைந்துகொண்டிருந்த மனித சஞ்சாரங்களையும் பார்த்தபடி ஆச்சரியமடைந்தான். அந்த நேரத்தில் மட்டும்தான் அவனே வியக்கும்படி எந்தப் பழைய நினைவுகளற்றும் இருக்க முடிந்தது. கொஞ்சம் நாளாய் மிகுந்த தனிமையை விரும்பி நேசித்தான். இதிலொன்றும் பலனில்லை. அதிக நாள் இந்த நிலைமை நீடிக்காதென்றும் கூட அவன் தெரிந்திருந்தான்.

அவர் தலையை வாரிவிட்டுக் கொண்டிருந்தார். அப்போது தான் அவரைச் சரியாக நிமிர்ந்து பார்த்தான். உப்பிய கன்னங்களும், பயமும் சந்தேகமும் அவசரமும் நிறைந்த பரபரவென அலையும் சாம்பல் நிறக்கண்களும், அகன்று விரிந்த மூக்கும் சற்றே பூரித்த உடம்புமாய் இருந்தார். இப்போதுதான் கல்யாணம் முடிந்திருக்கலாம். எல்லோருக்கும் கல்யாணத்திற்கப்புறம் வருகிற இனம் புரியாத திருப்தி உடம்பில் இருந்தது.

செருப்புக்குள் காலை நுழைத்தவர் கொஞ்சநேரம் எதையோ யோசிப்பவர்போல நின்றிருந்தார். எப்படிச் சொல்வது. அவன் முன்னே எது நடந்தாலும் எதுவும் தெரியாத பாவனையில் உட்கார்ந்திருக்கிறான். சரியான பித்துக்குளியாய் இருப்பான் போலிருக்கிறது. கடைசியில் மனம்தேறி,

“நான் சாப்பிடப் போறேன்... அப்படியே சினிமாவுக்குப் போனாலும் போவேன்... நீங்க...” என்று அவனையும் வெளிக்கிளப்பும் தொனியுடன் நிதானமாய் சொன்னார். எப்படியும் கிளம்பிவிடுவான். பையிலிருந்த அறையின் சாவியைத் தடவிப் பார்த்துக்கொண்டார். அவன் லேசான

புன்னகையுடன்,

“பரவால்ல... நீங்க போங்க... ராமகிருஷ்ணன் என்ட்ட ஒரு சாவி கொடுத்திருக்கான்...” சொல்லி முடித்ததும் அவர் முகம் கறுத்துப் போய்விட்டது. அவர் எப்படியும் இதை எதிர்பார்க்கவில்லை. அவர் போட்டிருந்த திட்டம் கணத்தில் இடிந்து நொறுங்கியதில் செய்வதறியாது திகைத்துப் போனார். அவர் மனசில் ஓடிய சிந்தனை களுக்கேற்ப முகமும் கண்களும் பரபரத்தன. சுற்றும் முற்றும் பார்த்தார். நெற்றியைப் பிடித்துக்கொண்டார். சொல்ல முடியாத அவஸ்தையுடன் கொஞ்சநேரம் நின்று கொண்டிருந்தவர் நம்பிக்கையிழந்த பார்வை ஒன்றை அவன் மேல் வீசி விட்டு ஒன்றுமே சொல்லாமல் வேகமாக அறையைவிட்டு போய்விட்டார். அவனுக்கு அவர்மேல் பரிதாப உணர்ச்சி பொங்கி வர, அறைக்கதவை மூடித் தாழ்ப்பாளிட்டான்.

அவன் எதிர்பார்த்தபடியே கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. செயற்கையான சிரிப்புடன் அவர் உள்ளே வந்தார். முகபாவம் சற்றும் ஆரோக்கியமில்லாமல், பெட்டியை எடுத்து நாற்காலியின் மேல் வைத்து நிதானமாய் தூசியைத் துடைத்தார். பின்னர் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு,

“சினிமா பார்த்துட்டு அப்படியே பஸ் ஏறிரலாம்... எதுக்கு மெனக்கெடுவானேன்னுதான்...” அவசரமாய் சொன்னார். அவன் ஏதும் பதில் சொல்லாது லேசாய் சிரித்தான். மறுபடியும் ஒருமுறை அறையைச் சுற்றிப் பார்த்துவிட்டு மிக அவசரமான காரியம்போல வேகமாக வெளியே சென்றுவிட்டார். அவனும் வராண்டாவில் வந்து நின்று அவர் போவதையே பார்த்துக்கொண்டிருந்தான். பின்னர் அறைக்குள் வந்து நிதானமாய் தாழ்ப்பாளிட்டான்.

8. பால்ய சினேகிதி

அப்போது நான் எட்டாங் கிளாஸ் பரீட்சை எழுதியிருந்தேன். அது கோடை விடுமுறை என்பதால் நான், தம்பி, தங்கச்சி எல்லோரும் வீட்டில் கும்மரிச்சம் போட்டுக் கொண்டிருந்தோம். நான் சின்னப் பையனாகவே அப்போது இருந்தேன். அப்பா மில்லில் வேலை பார்த்தார். அவர் வீட்டி லிருக்கிற நேரங்களில் அமைதியாக தீப்பெட்டிக் கட்டைகள் அடுக்கிக் கொண்டிருப்போம். இந்தக் கட்டைகளை தீப்பெட்டி ஆபீஸிலிருந்து நானும் என் தம்பியும் சுமந்துகொண்டு வருவோம். எனக்குத் தெரிய எல்லா வீடுகளிலும் எதாவது ஒரு தொழில் நடந்து கொண்டிருந்தது. தீப்பெட்டிக் கட்டைகள் அடுக்கிக்கொண்டோ தீப்பெட்டிக் கட்டுகளை ஒட்டிக்கொண்டோ, பட்டாசு செய்துகொண்டோ இருந்தார்கள். இப்படி ஏதாவது செய்யாவிட்டால் வாழ்க்கை நொடித்தடத்திலிருந்து தடுமாறிவிடும். அதனால் என் வீட்டிலும் வருடம் முழுவதும் கட்டை அடுக்கிக் கொண்டிருந்தோம்.

அப்பா நோஞ்சலானவர். கூர்ந்த மூக்கும் மீசையில்லாத சிறிய உதடுகளும் கொண்டவர். இதனால்தானோ என்னவோ மூக்கு நுனியில் எப்பொழுதும் கோபம் உட்கார்ந்திருக்கும். அவர் இருக்கும்போது பலத்துச் சிரித்துவிட்டால்கூட கோபம் எழுந்து ஆடித் தீர்த்துவிடும். பின்னர் நீண்ட மூச்சுகளை விட்டுக்கொண்டே ஆழ்ந்து உறங்கிவிடுவார். மெலிந்த நெஞ்சு மூக்கின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் அவசர அவசரமாக ஏறி இறங்கும். அப்போது பார்க்கப் பாவமாயிருக்கும். அதனால் எவ்வளவு உற்சாகமான மனநிலை இருந்தாலும் அப்பா இருக்கிற சமயங்களில் மூச்சு விடமாட்டோம்.

அதே நேரம் அப்பா இல்லாவிட்டாலோ வீட்டை உண்டு இல்லை என்று ஆக்கிவிடுவோம். அம்மா ஓயாமல் கத்திக்கொண்டே இருப்பாள். அவளுடைய வசவுகளைக் காதில் வாங்கிக்கொண்டதே கிடையாது. அவளுக்கும் அடக்க முடியாத கோபம் வந்துவிட்டால் “அப்பாவிடம் சொல்லுவேன்” என்று மிரட்டுவாள். உடனே நாங்கள் ஒருவருக்கொருவர் கோள் சொல்லிக்கொண்டே நல்ல பிள்ளைகளாகிவிடுவோம். அவள் திரும்ப வேண்டியதுதான். மறுபடியும் கலாட்டா ஆரம்பமாகிவிடும்.

எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தீப்பெட்டிக் கட்டை அடுக்கும் வேலைகளை முடித்தபிறகு எங்களுக்குத் தீராத சுதந்திரம் காத்திருக்கும். அந்த ராஜ்ஜியத்தில் பெரியவர்களுக்கு இடமில்லை. அவர்களால்

எங்களுடைய பரிபாலனத்தைப் புரிந்துகொள்ள முடியாது. இதில் எங்களுடைய சின்ன அத்தை மட்டும் விதிவிலக்கு. அவளை நாங்கள் பெரிய பெண்ணாகவே நினைக்கவில்லை. அவளுடன் சேர்ந்து 'ராஜா ராணி', 'அம்மா அப்பா', 'எம்...ஜி...ஆர்... சிவாஜி' விளையாட்டுகள் விளையாடுவோம். எங்களுடைய சின்ன அத்தை ரொம்பவும் மென்மையானவள். விளையாட்டிலேயே அழுதுவிடுவாள். உண்மையான கண்ணீரே கண்ணில் பளிச்சிடும்.

எங்களுடைய சின்ன அத்தை அம்மாவைவிட ரொம்பச் சின்னவள். எனக்கு அந்தச் சமயத்தில் அவளையும், அவளுடைய சிறிய அழகான முகத்தையும் பார்க்கும்போது பெரிய பொம்பிளை என்ற எண்ணமே தோன்றியது கிடையாது. என் அம்மாவின் தம்பியைக் கல்யாணம் செய்திருந்தாள். மாமா தாலுகா ஆபீசில் வேலை பார்த்து வந்தார். எனக்கு பரீட்சை நடந்துகொண்டிருந்த சமயத்திலோ அதற்குக் கொஞ்சம் முன்னாலேயோ ஊர் மாற்றி வந்திருந்தார்கள். எனக்கு மாமாவைக் கண்டாலே பிடிக்காது. எப்பவும் ரொம்ப டாம்பீகமாகவும் அதட்டலாகவும் இருப்பார். ஒரு நாள் முடியை முன்னால் இழுத்துச் சீவி மங்கி கிராப் வைத்திருப்பார். இன்னொரு நாள் கிருதாவை எடுத்துவிட்டு 'குருவிக் கூடு கர்லிங்' வைத்து மீசையை முறுக்கி வைத்திருப்பார். நாடகங்களெல்லாம் போடுவார். அதனால்தானோ என்னவோ எப்பவும் நாடகத்தில் பேசுவது போல நீட்டி முழக்கிப் பேசுவார். இதையெல்லாம் விட சின்ன அத்தையைக் கண்ட நேரமெல்லாம் விரட்டிக் கொண்டே இருப்பார். இப்படிப்பட்டவர் எங்களிடம் மட்டும் வேற மாதிரியா நடக்கப் போகிறார்? அவரை எங்களுக்குப் பிடிக்காமற் போனதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

எப்பொழுதும் சிரித்த முகமுள்ள என் சின்ன அத்தை தினசரி அவள் வீட்டு வேலைகளை முடித்துவிட்டு எங்கள் வீட்டுக்கு வருவாள். எங்களோடு சேர்ந்து தீப்பெட்டிக் கட்டை அடுக்கிக்கொண்டும் அம்மாவுக்கு ஒத்தாசைகள் செய்து கொண்டும் விளையாடிக்கொண்டும் பொழுது போக்குவாள். திடீர் திடீரெனப் புதுப்புதுப் பண்டங்கள் செய்து கொண்டு வந்து எங்கள் விளையாட்டை உன்னதமாக்குவாள். அதனால் சின்ன அத்தையை எல்லோரும் விரும்பினோம். எல்லோரையும் தன் பிரியத்துக்கு வசப்படுத்தும் வசிய சக்தி என் சின்ன அத்தையிடம் இருந்ததே.

என் வயதையொத்த பையன்கள் எல்லோரும் வெளியே ஓடியாடி விளையாடினாலும் எனக்கு அப்படி உடல்வலு கிடையாது. சவலைப் பிள்ளையைப்போல நறுங்கிப் போயிருந்தேன். இதனால் வெளியே

போய் விளையாடுவதில் விருப்பமில்லை. வீட்டிற்குள்ளேயே உட்கார்ந்து என் கற்பனையில் கண்டுபிடித்து விளையாடுகிற விளையாட்டுகள்தான் மிகவும் பிடிக்கும். சின்னச்சின்ன சொப்புகள் வைத்து சோறு பொங்கி, கறி வைத்து, குழந்தையைத் தாலாட்டி, தூங்கப் பண்ணி, குழந்தை எழுந்தவுடன் பால் கொடுத்து ஒண்ணுக்கு, வெளிக்கு எடுத்துப் போட்டு விளையாடுகிற விளையாட்டுத்தான் எனக்குப் பிரீதி. அதில் எப்பொழுதும் என் சின்ன அத்தைதான் அம்மா. நான்தான் அப்பா. இதில் இந்த விளையாட்டை விளையாட நான் வெட்கப்பட்டு நிறுத்தின நாள்வரை எந்த மாற்றமும் கிடையாது. நான் சொல்கிறதையெல்லாம் என் சின்ன அத்தை கேட்க வேண்டும். நான்தான் அப்பாவாச்சே.

“ஏய்... என்ன இன்னும் இட்லி ஆகலியா... ஆபீசுக்குப் போக வேண்டாம்...”

“என்ன குழம்பிலே உப்பே இல்லை.”

“குழந்தைக்கு மருந்து கொடுத்தியா...”

நான் எது சொன்னாலும் முகங்கோணாமல் உள்ளுக்குள் கள்ளச் சிரிப்புடன் செய்வாள் என் சின்ன அத்தை. சில சமயம் அவளும் எங்களோடு விளையாட்டில் ஒன்றிப் போய் நாங்கள் செய்வதுபோலவே பொய்யாக வக்கணை வழிப்பாள். அழுவாள், கோபப்படுவாள். அந்தச் சமயத்தில் அவளைப் பார்க்கிற யாருக்கும் கல்யாணமானவள் என்று தோன்றவே தோன்றாது.

நாங்கள் எல்லோரும் சேர்ந்து விளையாடிக் கொண்டிருக்கும்போது யாராவது வந்துவிட்டால் எங்களை விட சின்ன அத்தையே ரொம்பவும் வெட்கப்பட்டுக் குனிந்து கொள்வாள். அப்பொழுது அவள் முகத்தைப் பார்க்க வேண்டும். அவ்வளவு அழகாக இருக்கும். நான் அவளைப் பார்ப்பதை அவள் பார்த்துவிட்டால் உடனே என்னை இழுத்து அணைத்து முத்தமிடுவாள். எனக்கும் வெட்கம் பிடுங்கித் தின்ன அவளிடமிருந்து பிய்த்துக்கொண்டு ஓடி விடுவேன். அந்த நாளில் என் சின்ன அத்தையும் நாங்களும் விளையாடிக்கொண்டே வாழ்நாள் முழுவதும் இருக்க வேண்டும்போல பைத்தியக்கார நினைப்புகள் எல்லாம் சமயா சமயங்களில் தோன்றியது. சின்ன அத்தை எங்களுக்கு அவ்வளவு பிரியமானவளாக இருந்தாள். சில நாட்களில் அவளில்லாமல் ஏங்கிப் போயிருக்கிறோம்.

எங்கள் விளையாட்டுக்களின் விளைவாக என் மனதில் சின்ன அத்தை

என் அங்கீகாரத்துக்குட்பட்டவளாகவே தோன்றினாள். இந்த எண்ணம் ரொம்ப நாளைக்கு என் மனதில் ஆழப் பதிந்துவிட்டது. ஏதோ ஒரு விசேஷ நாள் என்று நினைக்கிறேன். அன்று சின்ன அத்தை அம்மாவுடன் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள். அப்பா, மாமா, நாங்கள் எல்லோரும் சாப்பாட்டிற்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம். எனக்கானால் அவ்வளவு பசி அவர்களுக்கு இது தெரிந்ததாகவே தெரியவில்லை. விறுவிறுவென்று அடுக்களைப் பக்கம் போனேன். "ஏ... பத்து என்ன இவ்ளோ நேரம்... ஆபீசுக்குப் போ வேண்டாமா? சீக்கிரம்... வயிறு பசிக்கி..." என்று கோபமாகக் கத்தினேன். அதைக் கேட்டவுடன் எல்லோரும் சிரித்தார்கள்.

அப்பா "என்ன அதியாரம் கொடி கட்டிப் பறக்குது..." என்று சிரித்துக்கொண்டே சொன்னார். மாமா இன்றைக்கு மீசையில்லாமல் இருந்தார்.

"டேய் அவ எனக்கு பொண்டாட்டியா... ஒனக்கு பொண்டாட்டியா... ம்?" என்று கேட்டுவிட்டு சுற்று முற்றும் எல்லார் முகத்தையும் பார்த்துக்கொண்டே அதிர்வேட்டுபோலச் சிரித்தார். எனக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. ஆனால், நான் ஏதோ வேடிக்கையாகச் சொல்லிவிட்டேன் என்பது மட்டும் புரிந்தது.

பின்னுங்கூட சின்ன அத்தையை என் வயதை ஒத்த பிள்ளைகளைப் போலவே நடத்தி வந்தேன். சின்ன அத்தையும் கொஞ்சமும் மாறாமல் சின்னப் பெண் போலவே செட்டாகக் காரியம் பண்ணுவாள்.

இதற்கிடையில் வகுப்புகள் மாறிப் போகப் போக பழைய விளையாட்டு மனோபாவம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வந்தது. எனக்கு விவரம் தெரிய ஆரம்பித்தது. சின்ன அத்தையும் இரண்டு பிள்ளைகள் பெற்றெடுத்தாள். ஆனால், சின்ன அத்தை மீதுள்ள பிரியம் குறையவில்லை. அவளுடன் ஏதாவது பேசிக்கொண்டோ பாடம் படித்துக்கொண்டோ இருப்பதில் அலாதியான விருப்பம் இருந்தது. அந்தக் காலங்களில் என் மாமாவுக்கும் சின்ன அத்தைக்கும் இடையில் சின்ன சின்ன சச்சரவுகள் விளைந்தன. அப்பொழுது சின்ன அத்தை அடிக்கடி அம்மாவிடம் வந்து அழுது கொண்டே எதேதோ சொல்லிக் கொண்டிருப்பாள். அம்மாவும், சமாதானம் சொல்லி அனுப்பி வைப்பாள். அவர்கள் பேசிய பேச்சுக்களிலிருந்து நான் தெரிந்து கொண்டது, மாமா வேறு யாரோ ஒரு பொம்பிளை கூட சிநேகமாக இருக்கிறார் என்பதுதான். சின்ன அத்தையின் முகத்திலிருந்த பழைய பாவம் திரும்பவே இல்லை.

உடம்பு மெலிந்து, முகம் சுருக்கம் விழுந்து மேலும் சின்னப் பெண் போலாகிவிட்டாள் என் சின்ன அத்தை. முன்போல சிரித்தாள் என்றாலும் அதில் உயிரில்லை. நாங்கள் ஒன்றிரண்டாய்த் தொலைத்துவிட்ட செப்புகளோடு அவளுடைய சிரிப்பும் தொலைந்து போய்விட்டது என்றே தோன்றுகிறது. என் சின்ன அத்தை அழுது கொண்டே வருகிற நேரங்களில் எனக்கு மனது சிரமமாக இருக்கும். மாமாவைக் கண்டபடி மனதுக்குள்ளேயே திட்டுவேன். என் அத்தைகிட்டே உட்கார்ந்து அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு இருப்பேன். சின்ன அத்தை அவளுடைய இப்பொழுது காய்த்துப் போயிருந்த விரல்களால் என் தலைமுடியைக் கோதி விடுவாள்.

ஒருநாள் ராத்திரி சின்ன அத்தை அழுதுகொண்டே ஓடி வந்தாள். தலைமுடி விரிந்து கிடக்க மண்டையிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. முழங்கைகள் சிராய்த்திருந்தன. இந்தக் கோலத்தில் அவளைப் பார்த்ததும் அம்மா, “அடிப்பாதகத்தி... என்னட்டி நடந்தது... இப்படி வந்து நிக்கே...?” என்று கதறியழுதுவிட்டாள். என் தம்பியும் தங்கச்சியும் அழுதுவிட்டனர். எனக்கும் என் பிரியமான சின்ன அத்தையை இந்த நிலையில் பார்த்ததும், அழுகை பொங்கி வந்தது. அழுகையை அடக்கிக்கொண்டு புஸ்தகத்தை எடுத்து திரும்பி உட்கார்ந்து கொண்டே என்னையும் மீறி வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தேன். இடையிடையே திரும்பி சின்ன அத்தையைப் பார்த்தேன். இந்த உலகத்தில் என் சின்ன அத்தையைப் பிடிக்காமல் போகிறவர்களும் இருப்பார்களா? என்னால் நம்பவே முடியவில்லை. அன்றிலிருந்து என் மாமாவை முழுமனதோடு வெறுத்தேன். இன்னமும் அந்த வெறுப்பு மாறவில்லை.

அதற்கப்புறம் அடிபட்ட இடங்களில் மருந்து வைத்துக் கட்டி விட்டு வந்தார்கள். அந்த நேரம் சின்ன அத்தை ஒரு ஆவேசத்தோடு இருந்தாள்.

“இந்த சீரழிஞ்ச வாழ்க்கை என்னால வாழமுடியாது மயினி. பேசாம தீத்துவைங்க. நான் ஒத்தக் கட்டக்கி எங்கயும் போயி பொழச்சிக்கிடுவேன்...”

“அடச்சீ... கூறுகெட்டதனமா பேசக்கூடாது... ஒனக்கென்ன... பேசாம இங்கென இரீ... அவ்வளதான...” என்று அம்மா சொன்னாள். வெளியே போயிருந்த அப்பா வந்ததும் இதையெல்லாம் கேள்விப்பட்டு மாமாவை அடிக்கவே கிளம்பி விட்டார். எல்லோரும் சேர்ந்து தடுத்து நிறுத்தினார்கள். எனக்கு அப்பொழுது என் அப்பாவைப் பார்க்க ரொம்ப சந்தோஷமாக இருந்தது. ஆனால், நான் இவற்றுக்கெல்லாம்

சம்பந்தமில்லாதவன்போல இருக்க ரொம்ப கஷ்டப்பட்டேன். அதோடு என் சின்ன அத்தைக்குச் சொல்ல எவ்வளவோ இருந்தது. ஆனால், எதையும் நான் வெளிக் காட்டிக் கொள்ளாததைப்போலவே என் சின்ன அத்தையும் ஒன்றும் சொல்லவில்லை. முன்பு போலவே என்னுடைய பாடங்களைப் பற்றிப் பேசினாள், சிரித்தாள் என் சின்ன அத்தை. எவ்வளவு உயர்ந்தவள் என் சின்ன அத்தை.

சின்ன அத்தை என் வீட்டிற்கு வந்த மூன்றாவது நாள் எல்லோரும் சினிமாவுக்குப் போனார்கள். சின்ன அத்தை வரவில்லை என்று சொல்லிவிட்டாள். எனக்கும் மறுநாள் பரீட்சை இருந்த காரணத்தினால் போகவில்லை. நானும் சின்ன அத்தையும் மட்டுமே இருந்தோம். அது கார்த்திகை மாதம். வானத்தில் நட்சத்திரங்கள் அவ்வளவு பெருகிக் கிடந்தன. குதித்தால் பிடித்துவிடலாம் போன்ற தூரத்தில் மின்னிக் கொண்டிருந்தன. குளிர்ந்த காற்றின் ஈரப்பதவல் ரொம்ப சுகமாக இருந்தது. என் படிப்புக்குத் தொந்திரவு வேண்டாம் என்று வாசலில் உட்கார்ந்து வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் என் சின்ன அத்தை. எனக்குப் படிப்பு ஓடவில்லை. நான் நினப்பதையெல்லாம் சொல்லிவிட வேண்டும் என்ற ஆவல் என்னைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தின்று கொண்டிருந்தது. ஆனால், பேசலாம் என்று வாயைத் திறந்தாலோ வாய் உலர்ந்து போய்விடுகிறது. இதற்குக் காரணம் என்னுடைய கட்டுக்கடங்காத உணர்ச்சிகள், நான் பேச நினைத்த விஷயங்கள். லேசாக இருமினேன். சின்ன அத்தை திரும்பிப் பார்க்கவில்லை. நான் மீறும் உணர்ச்சியை அடக்க, மட்டியைக் கடித்துக்கொண்டே,

“அத்த...”

“என்னடா... சாப்பிடுறியா... சோறு வச்சித்தரட்டா...”

“இல்ல வேண்டாம். எனக்கு கொஞ்சங்கூட மாமாவப் பிடிக்கல... நீ இனிமே மாமா வீட்டுக்கு போக வேண்டாம்... இங்கேய இருந்துடு... நான் ஒன்னயக் கல்யாணம் முடிச்சிக்கிருதேன்... நான் ஒன்னய அடிக்க மாட்டேன் அத்த... நீ இங்கேயே இருந்துடு அத்த...” சொல்லி முடிக்குமுன்பே அழுதுவிட்டேன். என்னால் அடக்க முடியவில்லை. அதோடு எனக்கு அன்னியோன்யமானவள் முன்னால் எனக்கு மறைப்பதற்குத் தோன்றவேயில்லை. நான் அழுவதைப் பார்த்ததும் பதறிப் போய் ஓடிவந்து என்னைக் கட்டிக் கொண்டாள். என் தலையை அவளுடைய கூடான மார்பில் அணைத்துக் கொண்டாள். அவள் உடம்பும் வேகமாக விம்மித் தணிந்து கொண்டிருந்தது. என் பிடரியில்

கண்ணீர் விழுந்ததை நான் உணர்ந்தேன். அவளும் அழுதாள். அந்தச் சமயத்தில் என்னுடைய சின்ன அத்தை மீது நான் கொண்டிருந்த காதலை உணர்ந்தேன். அந்தக் கணத்தில் என் மனம் களங்கமற்ற அன்பை ஸ்பரிசித்துக் கொண்டிருந்தது. நான் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் பேசின வார்த்தைகளும் மாமாவும் அப்பாவும் அம்மாவும் எல்லாமும் மறந்து போய்விட்டன. நானும் என் சின்ன அத்தையும் மட்டும் இருக்கிறோம். என்னால் அவளைப் பிரிந்து இனிமேல் இருக்க முடியாது. அவளும் அப்படித்தான் நினைத்திருக்க வேண்டும். கொஞ்சநேரம் அப்படியே இருந்தோம். நான் உணர்ந்த பரிசுத்தத்தை இதைச் சொல்லும் போதும் உணர்கிறேன். சாகும்வரை என் சின்ன அத்தையை நினைக்கும்போதெல்லாம் உணர்வேன்.

பின்னர் ஒரு நீண்ட பெருமூச்சுடன் என்னை நிமிர்த்தினாள். அப்பொழுது அவள் முகத்தைப் பார்த்தேன். அன்பும் நம்பிக்கையும் ஆசையும் அதில் பொங்கி வழிந்தது. கண்கள் ஈரத்தில் நனைந்திருந்தன. என் முகத்தைத் தன் இரு கைகளால் பிடித்துக்கொண்டு நெற்றியில் முத்தமிட்டாள். பின் என்னை ஒரு முறை கூர்ந்து பார்த்துவிட்டு சிரிக்க முயற்சி பண்ணிக் கொண்டே எழுந்து அடுக்களைக்குப் போய்விட்டாள். நான் சினிமா விட்டு எல்லோரும் வரும்வரையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். பிரமை பிடித்தது போலிருந்தது. அன்று இரவு சரியாகத் தூங்கவில்லை. மறுநாள் பரீட்சையும் ஒழுங்காக எழுதவில்லை.

நான் சாயந்திரம் பள்ளிக்கூடம் விட்டு வந்து பார்க்கிறேன். சின்ன அத்தையைக் காணவில்லை. அம்மாவிடம் கேட்டேன். மாமா வந்து அழைத்துக்கொண்டு போய்விட்டதாகச் சொன்னாள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என் சின்ன அத்தை எப்படிப் போனாள்! என்னவெல்லாமோ சொன்னாளே! செத்தாலும் முகத்தில் முழிக்க மாட்டேன் என்றாளே! எனக்குக் கொஞ்சம் புரியவில்லை. என் சின்ன அத்தைமேல் கோபம் கோபமாய் வந்தது.

இரண்டு நாள் கழித்து மாமாவும் சின்ன அத்தையும் சிரித்துக் கொண்டே வந்தார்கள். வீட்டில் உட்கார்ந்து என்னென்னவோ தமாஷாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். எனக்கு ரொம்பவும் அவமானமாகிவிட்டது. வெளியே போய் விட்டேன். இதற்குப் பின்னர் என் சின்ன அத்தை மேலும் இரண்டு பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டாள். இப்பொழுதும் மாமாவுடன் சச்சரவிட்டுக்கொண்டே வேறு ஊரில் வாழ்க்கை நடத்துகிறாள் என்றாலும் எனக்கு சமயத்தில் என் சிறு வயதுத் தோழியின் ஞாபகங்கள்

மனசில் பொங்கி தீராத ஏக்கத்தைக் கொடுக்கும்.

9. யாவர் வீட்டிலும்

காலையில் கண் முழித்ததும் அவள் கேட்டது நாதசுர சத்தம். முதலில் மனசில் ஒரு உற்சாகம் வந்தது. இவ்வளவு காலையில்... இந்தச் சத்தம்... புரிந்து போயிற்று. கல்யாணம்... பிள்ளைமார் சத்திரத்தில் யாரோ தன் கனவுகளை பூக்க வைக்கப் போகிற வைபவம். முகம் தெரியாத அந்தப் பெண்ணின் மேல் பொறாமை வந்தது. இன்று கடைசி வெள்ளி. சீக்கிரமே குளித்து அடுப்படியெல்லாம் கழுவிவிட்டு துர்க்கை ஸ்தோத்திரம் படிக்க வேண்டும் என்று நினைத்திருந்தாள். யாரோ துர்க்கை ஸ்தோத்திரம் கல்யாணம் நிச்சயிக்கும் என்று சொல்லியிருந்தார்களாம். அவர்களை இப்போது அவசியம் பார்த்து குசலம் விசாரிக்க வேண்டும். ஒண்ணா, ரெண்டா, பனிரெண்டு வருஷம் வந்து போன வெள்ளியெல்லாம் படித்து தலைகீழாய் மனதில் இறுகப் பதிந்து போனது. எழுந்திரிக்க வேண்டும் என்று நினைப்பே சோம்பல்படுத்தியது. இப்படியே கண்ணை மூடிக் கொண்டு கிடக்கலாம்போல் தோன்றிக்கொண்டேயிருந்தது.

அந்த இருட்டுக்குள்ளும் அம்மா பளிச்சென இருந்தாள். என்னதான் ஆனாலும் அம்மா அம்மாதான். இவள் அம்மாவைவிட நிறம் ஒரு படி கம்மி. தாட்டியம் குறைவு. அம்மாவைப்போல பல்வரிசை கிடையாது. இதனாலேயே பல நேரங்களில் அம்மாவுடன் எரிச்சல் பட்டிருக்கிறாள். அம்மா களையே தனிதான். திடீரென்று எல்லா இயக்கமும் நின்று போனதுபோல நிசப்தம். மறுபடியும் மெல்ல பாட்டுச் சத்தம் நினைவுகளின் பின்புலமாக கிளம்பியது. ஏதோ முருகன் பாட்டு. முருகன் பாட்டைக் கேட்கிறபோதெல்லாம் அவள் பார்த்த கடைசி சினிமா நினைவிற்கு வரும். அப்பம், பாளையங்கோட்டையிலிருந்து ரமாவும், கிருஷ்ணாவும் வந்திருந்தார்கள். அவர்கள் வந்து எத்தனை வருஷம் இருக்கும்... ம்ம்... எட்டு வருஷம். யப்பா எட்டு வருஷமாக வீட்டை விட்டு வெளியே போகவே இல்லை. இல்லையில்லை. இடையில் தாத்தா செத்ததுக்கு களக்காடு போய்விட்டு வந்தது. அப்புறம் ஒரு தடவை மதுரைக்கு ஏதோ ஒரு சடங்கு வீட்டுக்குப் போனது. அதுக்கப்புறம் வெளியே போனதில்லை. யாரையும் பார்த்ததில்லை. இப்படியும் ஒரு வாழ்க்கை வாழ்ந்துதானிருக்கிறோம் என்று பெருமிதத்துடன் நினைத்துக்கொண்டு எழுந்தாள்.

கொஞ்ச நாளாகவே ஒரு சலிப்பு, மனசை விரட்டிக் கொண்டி ருந்தது. எது செய்தாலும்; பேசினாலும் ஒன்றுமில்லாதது போல ஒரு உணர்வு. சுற்றிச் சுற்றி பட்டாசல், அடுக்களைக்குள் மட்டும் வளைய வளைய

வருவதால் கூட இருக்கலாம். வெளியே போக வேண்டும். காற்றைச் சுவாசிக்க வேண்டும். இப்போது மெயின்ரோடு எப்படி இருக்கும். தியேட்டர்கள் மாறி இருக்குமா. பழைய நினைவுகளின் மேலேறி எல்லா இடங்களிலும் புகுந்து புகுந்து வந்தாள். பனிரெண்டு வருஷமாய் பார்த்துக் கொண்டிருக்கிற இந்த ஓட்டு முகடு. அதில் குடும்பம் நடத்தும் பல்லிகள், எப்போதும் சோகம் வழியும் வீட்டு முகங்கள், வாய் ஓரம் நெளிந்து எத்தனை தரம் தேய்த்தாலும் கரி போகாத காப்பிச்சட்டி, இட்லி எடுக்கும் போதெல்லாம் ஆவியடிக்கிற இட்லித்தட்டு, கோடுகள் வரைந்து கிடக்கும் சிப்பிலித்தட்டு, காம்புமுனை குறைப்பட்ட சட்டகப்பை, அழகான அவளுக்குப் பிரியமான முட்டைத் தட்டு, அரைக்கும்போதெல்லாம் கேட்கத் தூண்டுகிற சத்தம் வரும் ஆட்டுரல், புகை வெளியே போக முடியாத அடுக்களை, இவைகளுக்கிடையே இந்த வாழ்க்கை முடிந்து விடுமோவென்று அடிக்கடி பயந்தாள்.

பட்டாசல் கதவை இழுத்துச் சாத்திவிட்டு அங்கணக் குழிக்குள் வந்து குளிக்க ஆரம்பித்தாள். தலையில் தண்ணீர் விட்டவுடன் மூச்சிழுத்தாற்போல நடுக்கிற்று தண்ணீரின் சத்தம். உடம்பின் சூடு, அந்த இருட்டு மனசை லேசாக்கியது.

மெல்ல ஆரம்பித்திருந்தது பகல். நெற்றியில் திருநீறு பூசி குத்துவிளக்கில் எண்ணெய்விட்டு தீபம் ஏற்றி விட்டு உட்கார்ந்தாள். கண்களை மூடினவுடன்,

“திருவுருவானவள் துர்க்கா

திரிசூலி மாயவள்

திருநீற்றில் என்னிடம்

திகழும் துர்க்கையே

தேவி துர்க்கையே

ஜெயதேவி துர்க்கையே”

தானாகவே பொங்கி வந்தது. ஒரு தடவை படித்து முடித்ததும் மனம் அலைய ஆரம்பித்தது. திரும்பினபோது தம்பி ராகவன் இன்னும் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான்.

வீட்டுக்குள் நுழைபவரை வரவேற்றுச் சிரித்துக் கொண் டிருந்தார் அப்பா போட்டோவில். அப்போது இருபத்தைந்து வயதிருக்கலாம். நேற்றைக்குச் சாயந்திரம் ஊருக்குப் போயிருக்கிறார். திருநெல்வேலி போய் யாரோ சொன்ன ஜாதகம் பார்த்துக் கொடுத்துவிட்டு அப்படியே

சேர்மாதேவி போய் ஜானகியத்தை கிட்டே ரூபாய் வாங்கணும் என்று முடிவெடுத்திருந்தார். இப்படியே நினைவுகள் அலைக்கழிக்க ஒரு வழியாக நமஸ்கரித்துவிட்டு எழுந்தாள். நேற்றைக்கு இராத்திரி செல்வி வந்து ஜெகதா வந்திருக்கிறாளென்று சொல்லியிருந்தாள். செல்விக்கு இவளைவிட நான்கு வயது குறைவு, இரண்டு பிள்ளைகள் கையில் வைத்திருந்தாள். ஜெகதாவுக்கு போன ஐப்பசியில்தான் கல்யாணம். இவளுடைய கிளாஸ்மேட். காப்பியைக் கொதிக்க வைத்துவிட்டு துவைப்பதற்கான துணிகளை எடுத்து வைக்க பட்டாசலுக்கு வந்தாள். ம்ஹூம்... தினமும் இதேதான். காலையில் எழுந்ததிலிருந்து அடைகிறவரை, ஒரு மாற்றமும் இல்லாமல், நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்தாற்போல்,

“சார்... சார்...” வாசலிலிருந்து உள்ளே சத்தம் நுழைந்து கொண்டிருந்தது. இவள் பட்டாசல் மறைவில் நின்றபடி,

“அப்பா இல்ல... ஊருக்கு போயிருக்காங்க...”

“எப்ப வருவாங்கன்னு தெரியுமா...”

“தெரியல...”

“சரி நான் போய்ட்டு சாயந்திரம் வர்றேன்...”

தலையை மட்டும் ஆட்டினாள். இவர் அடிக்கடி அப்பாவை வந்து பார்த்துப் போவார். இவர் கூட நல்ல களைதான். ஆனால், ஆள்தான் கொஞ்சம் கறுப்பு. ச்செய்... இன்னிக்கு என்னாச்சு... கண்டமானிக்கு நெனப்பு ஓடுது... மறுபடியும் அடுக்களைக்குள் போய் தீயைத் தள்ளி விட்டு, துணிகளை வாளியில் நனைத்தாள். அம்மா தண்ணிக்குப் போயிருந்தாள். அம்மா வீட்டு வேலை எதுவும் செய்ய மாட்டாள். ஆனால், தண்ணீர் மட்டும் எதிலும் துளிக்கூட குறையாமல் பார்த்துக் கொள்வாள். அப்பாவுக்கு அடிக்கடி கோபமூட்டுவாள்.

“அங்கேயிங்கேன்னு அலைஞ்சி பெறக்கிப் பாக்கணும். எங்கனயும் அலையாம இப்படியே வீட்ல ஒக்காந்திருந்தா தேடிக்கிட்டு வருவாக... நெனச்சிட்டு இருங்க...”

அப்பா அதற்குப் பிறகு அலைவார். சோர்வார். பாவம் அப்பா என்னமாய் ஆகிவிட்டார். உள்ளே திரும்பிப் பார்த்தாள். ராகவனும் எழுந்து வெளியே போய்விட்டிருந்தான். அவள் மட்டும்தான் இருந்தாள். அப்போதுதான் அது நடந்தது.

“யம்மா... தாயே... இரக்கப்பட்ட தாய்மாரே... ஏழை கலியாணமுங்க...

ஏதாவது ஒதவி செய்யுங்க... ஒங்க மகளாட்டம்... ஒடம்பிறப்பாட்டம் நெனச்சி கருணை காட்டுங்க... மகாலட்சுமி நீங்க நல்லாருப்பீக...”

வாசலில் ஒரு பெண் திருமணப் பொலிவு, வயது எல்லாமும் தாண்டியவள் தட்டைக் கையிலேந்தியடி அவளுக்குப் பின்னால் ஒரு வயதானவள் - அவள்தான் குரல் கொடுத்திருக்க வேண்டும் - நின்று கொண்டிருந்தாள். இருவருமே எல்லாமும் கடந்து ஏதோவொரு விரக்தியான நிலையில் இருந்தார்களெனப்பட்டது. கணத்தில் இவளுக்கு வேண்டாத கற்பனை மனசில் உருவாகிவிட்டது. அப்பா கூட இப்படித்தான் ஊர் ஊராக அலைவதாகவும், அப்பாவும் அவளும் ஒரு காலத்தில் இப்படி வீடு வீடாக ஏறி இறங்கிப் போகிறதாயும் நினைத்த மாத்திரத்தில் துக்கம் பெருகி கண்ணீர் முட்டியது. அலமாரியிலிருந்து ஒரு ரூபாயை எடுத்துத் தட்டில் போட்டாள். அவர்களும் முதலில் இவள் கண்ணீரைக் கண்டு திகைத்தாலும் பின்பு சாதாரணமாக அடுத்த வீட்டுக்கு அதே குரலுடன் போய்விட்டனர். ஆனால், இவளால் அப்புறம் அழுகையை நிறுத்தவே முடியவில்லை. முகம் விகாரமாகி நினைத்து நினைத்து கண்ணீர் பெருகியது. எங்கோ மேளச் சத்தம் கேட்டது. திடீரென துர்க்கைப் பாட்டு நினைவில் வந்தது. யம்மா... யம்மா... என்று வாய்விட்டு அரற்றினாள். அம்மா வந்தாள். ராகவன் வந்தான். யாருடைய எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லமுடியாதபடி அழுதாள். கொஞ்சம் நேரத்தில் அம்மா எதை உணர்ந்தாளோ, அவளும் அழ ஆரம்பித்தாள். ராகவன் என்ன செய்வதென்று தெரியாமல் நின்றிருந்தான்.

10. விடியுமா?

“ஏ... வள்ளியம்மா... நாளைக்காச்சும் வட்டி ரூவாய் கொடுத்து விடு... நாளைக்கும் அப்படியிப்படின்னு... சால்ஜாப்பு சொன்னே அப்புறம்...”

“ஒன் ரூவாயக் கொண்டுட்டு யாரும் ஓடிர மாட்டாக, ரூவா கொடுத்திட்டாளாம்... ரூவா...”

வெளியே அவசரமாய் காலடிச் சத்தம் கேட்கவே வாசலில் நின்று கொண்டிருந்த மதுரையம்மாள் திரும்பிப்பார்த்தாள். சின்னத் தம்பியின் பொண்டாட்டி பேச்சியம்மாள் ஓடி வந்து கொண்டிருந்தாள். அவள் ஓடிவருவதைக் கண்ட மதுரையம்மாள் கொஞ்சம் பதட்டத்துடன்,

“என்னட்டி பேகொண்டவ மாதிரி ஓடி வாரே...” அவள் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் அவளைத் தாண்டி வள்ளியம்மாளைப் பார்த்து,

“மயினி... மயினி... கனகு மாப்பிள்ளை இருக்கானா...”

“இல்லியே... அந்த முடிவான் எங்கே தொலைஞ்சானோ யாரு கண்டா...”

“இல்ல மயினி... நம்ப ராக்காச்சி கோயில் முக்கிலே ஏழெட்டு ஆளுக ஒன் வீட்டை விசாரிச்சிட்டு இருந்தாகளாம்... இவுக அங்கிட்டு தற்செயலா போனவுக... என்னய்யான்னு கேட்டதுக்கு... வாங்கின கடனுக்காக இவ்வளவு நாள் இருந்து இருந்து பார்த்துட்டோம்... அவன் மாமியா வீட்டில் கெடக்கிற சாமாங்களை பெறக்கிட்டுப் போக வந்தோம்னு... சொல்லியிருக்காங்க... எல்லாம் கடம்பூரு ஆளுகளாம்...”

மூச்சு இரைக்க இரைக்கச் சொல்லி முடித்தாள் பேச்சியம்மாள்.

“அடச் சனியனே என்னட்டி சொல்லுத... எனக்கு வயத்தில் புளிய கரைக்குதே... அந்தத் தேவடியாமகனோட இதே பாடாப்போச்சே... என்ன வேணும்னாலும் அவங்கிட்டே போய் கேக்கச் சொல்லு...”

“இவளப்பாரு அதெல்லாம் கேக்கிற மாதிரியா இருக்காங்க... அவனுக... கனகு மாப்பிள இப்ப அவங்க கையில கெடச்சான் தொலிய உரிச்சிடு வாங்க... அவனால கொஞ்சத்தும்பமா... அண்ணாச்சிக்கு பாண்டிக்கு ஆளனனுப்புங்களேன்... வீட்டுல தைரியத்துக்காச்சும் ஒரு ஆம்பிள இருக்கட்டும்...”

“சின்னத்தம்பிய எங்கட்டி...”

“மார்க்கெட்டுக்கு போயிருக்காக...”

“மார்க்கெட்டுக்கு தொலஞ்சிட்டானா...”

வள்ளியம்மாளின் ஒடப்பிறந்தவன் சின்னத்தம்பி நல்ல தவசுப்பிள்ளை என்பதால் மெஸ் ஒன்று ஆரம்பித்து நடத்திக் கொண்டிருக்கிறான். வள்ளியம்மாளுக்கு எதுவும் தோணவில்லை. யோசிக்க யோசிக்க பயமே கூடியது. மதுரையம்மாளுக்கும் இதைக் கேட்டதும் சங்கடமாகி விட்டது. மகளிடம் வட்டி ரூபாய் கேட்டுவிட்டு அய்யர் வீட்டுக்கு ஏனம் வெளக்கப் போவணும் என்று நினைத்து வந்தாள், பேச்சியம்மாள் வள்ளியம்மாளையும் மதுரையம்மாளையும் மாறிப் மாறிப் பார்த்தாள். அவர்கள் ஏதும் பதில் சொல்லாததைக் கண்டு மெல்ல அசைந்து அசைந்து போய்விட்டாள்.

வெயில் இறங்கிக் கொண்டிருந்தது. பக்கத்திலிருந்த பள்ளிக் கூடம் விட்ட மணிச் சத்தம் கேட்டது. மதுரையம்மாள் மெல்ல முணு முணுத்தபடி உட்கார்ந்து விட்டாள். வள்ளியம்மாளுக்கு கனகு மாப்பிள்ளை கணேசனை நினைக்கும்போதே தொண்டையில் கசப்பூறி ஆத்திரத்தையும் வெறுப்பையும் உண்டு பண்ணியது.

கனகுவுக்கு கல்யாணம் முடியும்போது ரொம்ப சாதுவாய் தெரிந்தான் கணேசன். கடன் வாங்குவதில் அவனை மிஞ்ச முடியாது. அவன் பேச்சு அமைதியான குரலில் மெதுவாக இருக்கும். அருகில் நிற்காவிட்டால் கேட்கக்கூட செய்யாது. இதை நம்பித்தான் நிறையப் பேர் கடன் கொடுத்திருக்கிறார்கள். அவன் எங்கெல்லாம் வேலை பார்த்தானோ அங்கெல்லாம் கடன். கடன் நெருக்கடி தாங்காமல்தான் ஒவ்வொரிடத்திலிருந்தும் வெளியேறினான். ஆட்கள் வீடு தேடி வர, போக இருந்தார்கள். அப்புறம் அவன் கனகுவை அவள் அம்மா வீட்டில் இரண்டு குழந்தை களோடு விட்டுவிட்டு அலைய ஆரம்பித்தான். இப்பவும் திடீர் திடீரென்று வருவான். நாலுநாள் இருப்பான். அப்புறம் வந்த மாதிரியே போய்விடுவான். சில நேரம் போகும்போது கூடவே ஏதாவது சாமான் அல்லது பணம் சேர்ந்து போயிருக்கும். வள்ளியம்மாளுக்கு அவனிடம் இருந்த மரியாதை யெல்லாம் உருத்தெரியாமல் போனது. “இனிமே இந்தப் பக்கம் வராதே...” என்றுகூடச் சொல்லிவிட்டாள். இதற்கு மேல் என்ன செய்ய முடியும். வள்ளியம்மாளின் ஏலாமை கோபமாகி, ஆத்திரமாகி அழ ஆரம்பித்து விட்டாள்.

“ஐய்யோ... நான் என்ன பண்ணுவேன்... இப்படி செய்வானா பாவி... நான் யாருக்கும் எந்தக் கெடுதலும் நெனக்கலயே... ஒருத்தரப் பாவின்னேனா... பரப்பான்னேனா...” அவள் அழுது புலம்புவதைக் கண்டதும் மதுரையம்மாளுக்குப் பொறுக்கவில்லை.

“அடச்சீ... வெறுவாக்கட்ட மூதி... என்னட்டி புலப்பம் வேண்டிக் கெடக்கு... ஒங்காத்தாள பாடையில் கொண்டு போறா மாரி... இப்பமென்ன வரட்டுமே... வந்து கேக்கட்டும்... அப்புறம் பாத்துக்குவம்...”

அவள் சொல்லி முடிக்கவும் கனகுவும், அவள் மகள் அன்னத்தாயும் தீப்பெட்டி கம்பெனி வேலை முடித்து சந்துக்குள் நுழைந்து கொண்டிருந் தார்கள். சந்தில் இரண்டே வீடுதான். வள்ளியம்மாள் கடைசியில் இருந்தாள். முதலில் கற்பகம் இருந்தாள். கனகு பார்க்கும்போது கற்பகம் வீடு பூட்டிக் கிடந்தது. ஒருவேளை சினிமாவுக்குப் போயிருக்கலாம்.

இன்றைக்கு கனகு கூட சினிமாவுக்குப் போகலாம் என்றுதான் கொஞ்சம் சீக்கிரமே தீப்பெட்டிக் கட்டைகளை அடுக்கி முடித்துவிட்டு, அன்னத்தையும் இழுத்துக்கொண்டு வந்து விட்டாள். அன்னமும் இப்போதெல்லாம் பதினைஞ்சி கட்டைகளுக்கு மேல் அடுக்குகிறாள். நல்ல சுறுசுறுப்பு. மூணாங்கிளாசில் நன்றாகத்தான் படித்தாள். படிக்க வைக்கணும் என்று கனகுவுக்கும் ஆசை. ஆனால் வீட்டில்தான் நிலைமை சரியில்லையே. அன்னம் வருகிறாளா என்று திரும்பிப் பார்த்தாள் கனகு. அப்படிப் பார்த்துக் கொண்டே ஏறும்போதும் படி தட்டியது. வாசலைத் தாண்டி உள்பக்கமாக உட்கார்ந்திருந்த மதுரையம்மா ஆச்சியைப் பார்த்துக்கொண்டே நுழைந்தாள். ஏதோ வித்தியாசமாய்பட்டது. அவளைக் கண்டதுதான் தாமதம். வள்ளியம்மாள் ஆங்காரத்துடன்,

“தேவடியா முண்டை... எல்லாம் ஒன்னாலதாண்டி.. அன்னைக்கே செத்துத் தொலஞ்சிருந்தா... ஒரேயடியா தலை முழுகியிருப்பேன்... இந்தா பாரு... நீயமாச்சி... ஒம்பிள்ளைகளுமாச்சி... எங்கிட்டாவது கங்காணாத இடத்துக்குத் தொலஞ்சி போங்க...”

கனகுவுக்கு முதலில் உடம்பெல்லாம் நடுங்கியது. ஒன்றும் புரியவில்லை. பதட்டத்துடன், “என்ன...”

மதுரையம்மா ஆச்சி எல்லாவற்றையும் சொன்னாள். அதைக் கேட்டுவிட்டு கனகு, “யாரு சொன்னா...”

“நம்ப பேச்சியம்மா...”

“அப்படி வெவரத்தை சொல்ல வேண்டிதான... வெவரங்கெட்டதனமா அழுதா என்ன இழவு தெரியும்... அந்த ஆளு இங்க ஒண்ணும் கொண்டாந்து கொட்டலியே...”

கனகு சொல்லிக் கொண்டிருக்கும்போது அன்னத்தாய் உள்ளே

நுழைந்தாள். வள்ளியம்மா ஆச்சி அழுது கொண்டிருப்பதையும், அம்மாவின் ஆத்திரத்தையும் பார்த்து பயந்து போய்விட்டாள். கனகு கேட்டாள்.

“அவங்க இங்கன வந்து ஏதும் கேட்டாங்களா...”

“யாரும் வரல்லடி... அவங்க நின்னு விசாரிக்கும்போது சின்னத்தம்பி கேட்டிருக்கான்...”

மதுரையம்மாள் காலை நீட்டி கைகளால் நீவிவிட்டாள்.

“இதுக்குத்தானா... இந்தக் கூத்து...” கனகு இப்படிச் சொன்னதும் எல்லாருக்கும் ஆசுவாசமாகியது. ஒன்றும் இல்லாததைத்தான் பெரிதுபடுத்துகிறோமோ. ஆனாலும் இருட்டு கவியக் கவிய பயம் கனத்து வந்து கனகுவையும் அமுக்கியது. அவளும் வெறித்தபடி உட்கார்ந்துவிட்டாள். அப்போதுதான் கனகுவின் மகன் சண்முகம் விளையாண்டு முடித்து வீட்டிற்குள் பைக்கட்டுடன் வந்தான். அவனைப் பார்த்ததும் மதுரையம்மாள்,

“ஏ... ஐயா... சம்முகம்... போயி தாத்தாவ... அச்சாபிஸிலிருந்து கையோட ஆச்சி கூட்டிட்டு வாய்யா... ஒரு ஓட்டத்தில வா... பாப்பம்...” என்று சொல்லி அனுப்பிவிட்டு உள்ளே திரும்பி,

“ஏய்... எந்திரிச்சி... விளக்கு பொருத்துங்கடி... வள்ளியம்மா... ஏய் ஒன்னத்தானே...” அன்னத்தாய் இதை எதையும் கண்டவளாகத் தெரியவில்லை. அடுக்களைக்குப் போய் சாப்பிட்டுவிட்டு வந்து விளக்கைப் பொருத்திக்கொண்டு மேல் பெட்டி கட்டுகளை எடுத்துப் போட்டு ஒட்ட ஆரம்பித்துவிட்டாள். அவளுக்கு தினமும் தீப்பெட்டி கம்பெனி போய்விட்டு வந்து ஐந்து கட்டு ஒட்டிவிட வேண்டும். பட்டாலையில் எல்லோரும் இருந்ததால் அவள் அடுக்களையிலேயே உட்கார்ந்துவிட்டாள். வெளியே கசாபுசலாய் சத்தம் கேட்டதும் இருந்த வாக்கிலேயே எட்டிப் பார்த்தாள். தாத்தா வந்திருந்தார்.

சிவபெருமான் பிள்ளைக்கு வேகமாய் நடந்து வந்ததில் இளைப்பு அதிகமானது. இளைப்பு அடங்க கொஞ்சம் உட்கார்ந்து ஆசுவாசமானார். வாசலிலேயே சின்னத்தம்பி சொல்லியிருந்தான். ஏதோ சொல்ல வந்தவர் இரும ஆரம்பித்தார். அவர் அச்சாபீஸ் வேலைக்குச் சேர்ந்ததில், மெஷினை மிதித்து மிதித்து ஆஸ்த்மாவும் குத்திருமலும்தான் அவருடைய நீங்காத சம்பாத்யம். தரித்திரம் விட்டபாடில்லை. சுருண்டு வந்த சளியைத் துப்புவதற்காக எழுந்து அடுக்களையைத் தாண்டி வாய்க்காலில் துப்பிவிட்டு திரும்பும்போது

அன்னம் விளக்கைப் பொருத்தி வைத்து கட்டு ஒட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். ஒரு கணம் அதிர்ந்துவிட்டார். நெஞ்சில் ஏதோ அடைக்க விருட்டென பட்டாலைக்கு வந்துவிட்டார். யாரும் எதுவும் பேசவில்லை. வள்ளியம்மாள் அழுது கொண்டேயிருந்தாள். கனகு எல்லாவற்றையும் அடக்கி அப்படியே உட்கார்ந்திருந்தாள். முகம் கல்லாய் இறுகியிருந்தது. கடைசியில் சிவபெருமான் பிள்ளை இவ்வளவு நேரம் பேசின தொடர்ச்சி மாதிரி,

“சரி... நமக்கென்ன... அவனுக்கும் நமக்குந்தான் எந்த சம்பந்தமுமில்லை... எங்ககிட்டே வந்து கேக்கறதிலே எந்த நாயமும் இல்லைன்னு அவங்ககிட்ட...”

சந்தில் திண்டு திண்டு என்ற சத்தம் கேட்டதும், நிறுத்திவிட்டார். பாண்டி வந்தான். சிவபெருமான் பிள்ளையின் கடைசிப் பையன் தொழிற்பேட்டையில் வேலை பார்க்கிறான். மூத்தவன் லாரியில் டிரைவராக ஓடுகிறான். அவன் இருந்தால் சமாளித்து விடுவான். பாண்டி கோபத்துடன்,

“யாரந்தத் தேவடியா மகங்க... மானாங்கண்ணியா வந்து தொடுவாங்களோ... வரட்டும் எவனாச்சும் தொடட்டும்... கொலதான் விழும்...”

அவன் பேசியதைக் கேட்டதும் கொஞ்சம் தைரியமாயிருந்தது. இதைத்தான் அவர்கள் எதிர்பார்த்தார்கள். இனிக் கவலையில்லை. தாட்டிக்கமான ஆம்பிளை ஒருத்தன் வீட்டில் இருக்கான். அவன் வள்ளியம்மாளைப் பார்த்துக் கேட்டான்.

“ஆமா தெரு முக்கில ஒரு பயலக் காணோம்...” வள்ளியம்மாள் கொஞ்சம் தெளிஞ்சாலும் பதில் பேசுகிற நிலையில் இல்லை. மதுரையம்மாள் கேட்டாள்.

“ஒனக்கு யாரு சொன்னா...”

“வெங்கடாசலம்... சின்னத்தம்பி மாமா சொல்லி விட்ருக்காக...”

“ஏய்யா... நீ போயி போலீசில எழுதி வையேன்...”

“இவ ஒருத்தி... அநயம் தெரிஞ்சவ... போலீசுக்குப் போனா அம்புட்டுதான்... வேற வினையே வேண்டாம்... நான் மணியாச்சி வரைக்கும் போயி வேலுப்பாண்டியையும் மாரிமுத்தண்ணனையும் பார்த்து கூட்டிட்டு வாரேன்... இன்னக்கி ரெண்டுல ஒண்ணு பாத்துருவம்... நீ எதுக்கும் கற்பகத்தக்கா வீட்டில சாமாங்களைப்

போட்டு வை...”

“எல எதுக்கு வீணா வம்பு...” சிவபெருமாள்பிள்ளை சொல்லுமுன்பே அவன் போய்விட்டான். எழுந்து எட்டிப் பார்த்தார். ஒன்றும் தெரியவில்லை. அமாவாசைக்கு இன்னும் ஒரு நாளே இருந்ததால் நல்ல மையிருட்டு பரவியிருந்தது. திடீர் திடீரென நினைத்து வள்ளியம்மாள் அழுதாள். கனகு பித்துப் பிடித்த அமைதிபோல அப்படியே ஆடாமல் அசையாமல் இருந்தாள். கொஞ்ச நேரம் யாருமே எதுவுமே பேசவில்லை. வெற்றமைதி.

அடுக்களையிலிருந்து அன்னத்தாய் கடவாய்ப் பெட்டி, பசைச்சட்டி, தாள் கட்டுக்களை கொண்டுவந்து வைத்தாள். திரும்பப் போய் விளக்கை எடுத்துக்கொண்டு வந்தவள் பட்டாலை வாசலில் ஒரு ஓரமாய் விளக்கை வைத்துவிட்டுப் போய் ஏற்கனவே தூங்கியிருந்த சண்முகத்தின் பக்கத்தில் கையையும், காலையும் குறுக்கிக்கொண்டு சுவரைப் பார்த்தபடி முடங்கிவிட்டாள். மதுரையம்மாள் கேட்டாள்.

“சாப்பிட்டியாடி...”

“ம்...”

“அந்தப் பய சம்முகந்தான் சாப்பிடாம படுத்துக்கிட்டான்... ஏன் முடங்கிக் கிடக்கே... நல்லா விரிச்சிப் படு...”

இதற்கு அன்னத்தாய் ஏதும் பதில் சொல்லவில்லை. கண்களை அழுத்திக்கொண்டு அசதியும் தூக்கமும் வந்தது. வாசலில் யாரோ நிற்பதுபோல தோன்றவே, மதுரையம்மாள் குரல் கொடுத்தாள்.

“யாரது...”

“நாந்தான் கற்பகம். நான் இப்பத்தான் ஊத்துப்பட்டி சித்தாப்பாவைப் பாத்துட்டு வாரேன்... வந்ததும் வாசல்ல பேச்சியமக்கா சொன்னா... இருக்கிற தும்பம் போதாதுன்னு இது வேறயா...” என்று சொல்லிக் கொண்டே எல்லோரையும் தாண்டி கனகுவின் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள். கற்பகத்தின் புருஷன் மிலிட்டரியில் இருக்கிறான். பெரிய பேச்சுக்காரி. ரொம்ப இளகின மனசு, அவள் வள்ளியம்மாளைப் பார்த்து,

“பெரிம்மா... சாமாங்கள வேணா எவ்வீட்டில போட்டு வைங்க... நாம்பாத்துக்கிறேன்...” வள்ளியம்மாளோ கனகுவோ அசையவில்லை. மதுரையம்மாள்தான் விளக்கை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தாள்.

“என்னத்த எழவு சாமாங்க... எல்லாந்தான் போச்சே...” என்றபடி, இருந்த

ரெண்டு தவலைப்பானையில் இருந்த தண்ணீரைத் தொட்டியில் கொட்டிவிட்டு வாசலில் வைத்தாள். தட்டுச் சீட்டில் எடுத்த சின்ன எவர்சில்வர் குடத்தையும் முதலில் கொண்டு போகச் சொன்னாள். மற்ற சாமான்கள் எதை எதைக் கொடுப்பது என்றே தெரியவில்லை. எல்லாச் சாமான்களுமே முக்கியமாய் பட்டது. வீட்டையே காலி பண்ணிவிட்டால் கூட தேவலாம்போல இருந்தது.

“ஏட்டி கனகு... காதில கெடக்கிற கம்மலக் கழட்டிக் கொடு... அந்தப் பிள்ள காதில் என்ன கிடக்கு...”

“அது கவரிங்தான்...” என்று சொன்னவள் எழுந்து அலமாரியைத் திறந்து பாண்டி வாங்கி வைத்திருந்த அவன் சேக்காளி வாட்சையும் எடுத்துக் கொடுத்தாள். கற்பகம் வந்து கம்மலையும் வாட்சையும் வாங்கிக்கொண்டு பட்டாலைக்குள்ள எட்டிப் பார்த்து சொன்னாள்.

“பெரீம்மா... நெனச்சி... நெனச்சி கலவரப்படாதீக. அதெல்லாம் ஒண்ணும் நடக்காது... நிம்மதியாப் படுங்க...”

கீழே இறங்கிப் போய்விட்டாள். சிவபெருமான் பிள்ளை எப்பயோ சாய்ந்து தூங்கிவிட்டார். நேரம் ரொம்ப ஆகியிருக்கும் போல. வள்ளியம்மாள் உட்கார்ந்தபடியே தூங்கித் தூங்கி விழுந்தவள் சேலை முந்தானையை விரித்துப் படுத்தாள். தூக்கத்திலும் கண்ணிலிருந்து நீர் வழிந்தது உற்றுப் பார்க்கையில் தெரிந்தது. மதுரையம்மாளும் சுவரில் தலை சாய்த்து உட்கார்ந்திருந்தாள். தூங்கிவிட்டாளா என்று தெரியவில்லை. கனகு எதையெதையோ யாசித்துக் கொண்டிருந்தாள். சிம்னி விளக்கின் வெளிச்சத்தில் நிழல் பெரிதாய் ஆடியது. சோகமான மஞ்சள் ஒளி பரவி சூழ்நிலையை வரைதாள் சித்திரம்போலத் தீட்டியது.

கொஞ்சநேரத்தில் சந்துக்குள் தடுமாறிக்கொண்டே பாண்டி வரும் சத்தம் கேட்டது.

“டேய்... எவனாச்சும் வந்தீக... தலைய எடுத்திருவேன்... யாருமத்த அனாதைப் பயகன்னு நெனச்சீகளா...” முன்வாசல் படியைத் தாண்டியவன் அப்படியே விழுந்துவிட்டான். மதுரையம்மாளும், கனகுவும் புரட்டினார்கள்.

“டேய்... உள்ளே வந்து படுறா...”

“தொடாத... வெட்டிருவேன்... எந்தப் பயமவன் வாரான் நாம் பாக்கேன்... நீ போ... போன்னா... போ உள்ளே...” கொஞ்ச நேரம் எதெதுவோ முனங்கிக் கொண்டிருந்தவன் தூங்கிவிட்டான். அவன் போட்ட சத்தத்தில் வள்ளியம்மாளும் சிவபெருமான் பிள்ளையும் எழுந்து

விட்டார்கள். வள்ளியம்மாள் மீண்டும் அழுகை பொங்கிவர அழுதாள். சிவபெருமான் பிள்ளை எதோ வாய்க்குள்ளேயே சொல்லிக் கொண்டு மறுபடியும் படுத்துவிட்டார். கனகு மட்டும் ரொம்ப நேரத்துக்குத் தூங்கவில்லை. என்னென்னவோ நினைவுகள் யோசனைகள், எப்பொழுது எப்படித் தூங்கினாள் என்று அவளுக்கே தெரியாது.

வெளியே பால்காரனின் மணிச்சத்தம் கேட்டது. பழக்கத்தினால் முழிப்பு கொடுத்து வள்ளியம்மாள் எழுந்தாள். எழுந்து வீடு கிடக்கிற கோலத்தைப் பார்த்ததும் நேற்றைக்கு நடந்தது எல்லாம் நினைவில் வந்தது. பொங்கி வந்த விம்மலை அடக்கி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். வெளியே லேசாய் ஊதல் காற்று வீசியது. வராண்டாவில் பாண்டி வேட்டியை இழுத்து மூடிப் படுத்திருந்தான். வானம் இருளைக் கரைத்து சாம்பல் நிறத்தில் வெளுத்துக் கொண்டிருந்தது. இனியொன்றும் பயமில்லை. எல்லோரும் இருக்கிறார்கள். அதுவுந்தவிர வெளிச்சம் வேறு வந்துவிட்டது.

வள்ளியம்மாள் பால் வாங்க ஏனம் எடுத்துக்கொண்டு போனாள்.

11. வெயில்

கொஞ்ச நேரத்திற்கு முன்னால் கூட நன்றாகக் காற்று வீசியதுபோல இருந்தது. இப்போது வியர்வை ஊற்றெடுத்து ஒழுகியது. இத்தனைக்கும் வெயிலில் ரொம்ப தூரம் அலைய வில்லை. போஸ்ட்மேனைப் பார்க்கப் போகிற சந்தைப் பேட்டைத் தெருவில் தூத்துக்குடி மாமாவைப் பார்த்ததுமே வேறெங்கும் போக வேண்டிய அவசியமே இல்லாது திரும்பி விட்டான். மாமாவும் எல்லாம் சொல்லி முடித்ததும்,

“போனாப் போகுது மக்கா... அடுத்து வர்ற ஜூன்ல அட்டெண்டர் போஸ்ட்டுக்கு ஆள் எடுக்கறாங்க... அதில கண்டிப்பா போட்டுருவோம்னு ஆபீஸரே சொன்னாரு... ரொம்ப வருத்தப்பட்டாரு... பரவால்ல மக்கா... அதில பாத்திக்கிடுவோம்...” என்றவர் கொஞ்சமும் தாமதியாமல்,

“நல்ல வெயில் இல்ல...” என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அவர் அப்படிச் சொல்லிவிட்டுப் போன பின்தான் திடீரென வெயில் உறைத்ததாக உணர்ந்தான். மூச்சுத் திணறும்படியான வெக்கையும், முதுகில் பிசுபிசுத்த சட்டையும் அவனை முத்தானந்தசாமி மடத்திற்கு விரட்டியது.

முத்தானந்தசாமி மடத்திற்குள் அகல விரிந்து பரந்திருக்கும் அந்தப் புளியமரத்திற்குக் கீழே உட்கார்ந்திருப்பது புஸ்தகங்கள் படிப்பது என்று பழக்கமான இந்த ஆறு மாதத்தில் இதுவரையில் பெரிய கேட் வழியே உள்ளே போனதில்லை. இருபுறமும் திறக்கும் கொஞ்சம் பெரிய ஜன்னலை ஞாபகப்படுத்தும் சின்னக் கேட்டைத் தள்ளிவிட்டு குனிந்து செல்வதுதான் இதுவரை நடந்திருக்கிறது. துருப்பிடித்த பெரிய பூட்டோடு வெகு காலத்திற்கு முன்பே திறந்து மூடுதலை மறந்துவிட்ட அந்தப் பெரிய கேட்டைச் செவிட்டுச் சாமியிடம் சொல்லித் திறக்க வேண்டும். மரத்தடியில் வந்து உட்கார்ந்ததும், இன்றைக்குக் கிளிச் சத்தம் கேட்கிறதா என்று கூர்ந்து கவனித்தான். மிக அபூர்வமாய் கிளியின் சத்தம் கேட்ட ஒரு நாளில்தான் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சிலிருந்து இண்டர்வியூ வந்திருந்தது. அவன் ஆச்சரியமடைந்து எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சிலிருந்துதானா என்று நிச்சயப்படுத்தினபோது மாமாவும் தற்செயலென நினைக்க முடியாதபடி வந்தார். அவர் வேலை பார்க்கிற அதே டிபார்ட்மெண்டில்தான் வேலைக்கான இண்டர்வியூ என்றும், ஆபீசருக்கு வலது இடது கைகள் மாமாதான் என்பதாலும் எப்படியும் வாங்கிவிடலாம் என்று உறுதியாய்

சொன்னார். அப்பா மறுபடியும் மறுபடியும் விசாரித்து பணம் கொடுக்க வேண்டுமா என்றெல்லாம் உறுதிப்படுத்திக் கொண்டார். அப்பா இப்படிக் கேட்டதற்கு மாமா சிரியோ சிரியென்று சிரித்துவிட்டார். அக்கா உடனே குத்து விளக்கை ஏற்றி சாமி கும்பிட்டாள். அவளுக்கும் விமோசனம் பிறந்துவிடும் என்ற ஆசையில் அவனுக்காகவும் சேர்த்துக் கும்பிட்டாள்.

“மக்கா... வேல கெடச்சதும் மாமாவை மறந்துராதே... நம்ப கறுப்புத் தங்கம் மகேசு ஒனக்காகத்தான், ரெண்டாங்கிளாஸ் படிச்சிட்டிருக்கா... சொல்லிட்டேன்...”

“மருமகப்பிள்ளைக்கு வேல வாங்கிக் கொடுத்து இப்பவே செட்அப் பண்ணுதியளோ...” என்று அண்ணன் கேட்டதும், எல்லாரும் கண்ணில் நீர்முட்ட என்றைக்குமில்லாதபடி அபூர்வமாய் மிகுந்த சந்தோஷத்துடன் சிரித்தனர். அவனும் கூட அன்றைக்கு மனம் விட்டுச் சிரித்தான்.

மாமா சொல்லியிருந்தபடி இண்டர்வியூவுக்கு முதல் நாளே திருநெல்வேலி போய்விட்டான். ஆபீஸருக்கு ரொம்பவும் இவனைப் பிடித்துவிட்டது. அவர் வேலைகளைப் பற்றி எல்லாம் சொன்னார். கிளார்க் ரமணி கொடுத்த கொஞ்சம் பேப்பரை டைப் அடித்துக் கொடுத்தான். அதிலிருந்த தப்புகளைச் சொல்லித் திருத்திக்கொண்டே எல்லாம் போகப் போக சரியாயிடும் என்றார். எல்லோருமே பிரியமாய் இவனை விசாரித்துத் தெரிந்துகொண்டனர்.

“நீங்க வாங்க ஜமாய்ச்சிடுவோம்...” என்று பியூன் ராமசாமி சர்பத் வாங்கிக் கொடுக்கும்போது சொன்னார்... இவனுக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறதென்று உணர்வேயில்லாதபடிக்கு வெறுமே சந்தோஷத்துடன் மட்டும் இருந்தான். இண்டர்வியூ முடிந்ததும் இன்னும் ரெண்டு நாளில் ஆர்டர் வந்துவிடும் தயாராய் இரு என்று மாமா சொல்லியனுப்பினார். எல்லோரிடமும், வரும்போது கட்டாயமாய் ஸ்வீட்டோடு வருகிறேன் என்று சொல்லிவிட்டு சிவ சக்தியில் ஒரு சினிமாவும் பார்த்துவிட்டு வந்தான்.

கோவில்பட்டி வந்தது முதல் நிறைய்ய யோசனைகள் எங்கே தங்குவது, ஓய்வாய் இருக்கும்போது என்னென்ன செய்யலாம். அன்றைக்கு ரொம்பவும் புதிதாக எல்லோரும் நிலா வெளிச்சத்தில் உட்கார்ந்து சாப்பிடும்போது அவனுக்கு என்ன வேண்டியது இருக்கும் என்று அவனிடம் விசாரித்தும், தங்களுக்குள் விவாதித்தும் தெரிந்து கொண்ட போது எவ்வளவு சந்தோஷமாயிருந்தது. வாழ்க்கை இப்படியான அழகோடும் பிரியத்தோடும் இருக்கும் என்று அதுவரையில் நினைத்துப்

பார்த்ததில்லை. சாவித்திரி கூட அவள் முன் சொன்னதற்காக மன்னிப்பு கேட்டுவிடுவாள் என்று தோன்றியது. அம்மா பேச்சோடு பேச்சாய் பேங்கில் மூழ்கிக் கொண்டிருக்கும் கல் வைத்த மாங்காய் நெக்லசைப் பற்றி ஞாபகப்படுத்தினாள். அக்கா ரெண்டு நாட்களில் கொஞ்சம் தெளிவடைந்த மாதிரி இருந்தாள். அண்ணன் மிகுந்த மரியாதையுடன் எல்லாவற்றையும் கேட்டு விசாரித்து ஆலோசனைகள் சொன்னான்.

அவனும் பார்க்கிற நண்பர்களிடமெல்லாம் சந்தோஷமாய் சொல்லி அவர்களுக்கும் இதுபோல் ஏதாவது திடீரென நடந்துவிடலாம் என்று தேற்றினான். காலை மாலை ரெண்டு நேரமும் சோப்பு போட்டு முகம் கழுவினான். கண்ணாடியில் பார்க்கிற நேரம் தன் நிறம் மாறி வருவதாய்க் கூட நினைக்கத் தொடங்கினான்.

நேற்றைக்கு ராத்திரி சாவித்திரி வரும்போது அவளுக்கு கேட்க வேண்டும் என்றே சத்தமாய் சுப்பிரமணியனிடம் சொல்லி அவள் நின்று திரும்பிப் பார்த்துவிட்டுப் போனதைக் கண்டதும் "அன்பே வா" இரண்டாம் பிளே போனான். அப்பா மெல்லிய குரலில் ஏதும் தவறாகிவிடக் கூடாது என்ற ஜாக்கிரதையுடன்,

"ராத்திரி முழிச்சி உடம்பை ஏன் கெடுத்துக்கிடுதே... சரி... சரி... போய்ட்டு பத்திரமா வா... கூட யாருவாரா... சுப்பிரமணியா... சரி..."

தான் ரொம்பவும் மெலிந்து சிறு பையனைப்போல் ஆகி வருவதாக நெஞ்சுக் கூட்டை குனிந்து பார்த்துவிட்டு நினைத்தான். தன் முகம் கூட சகிக்க முடியாதபடி கறுத்துப் போய்க் கொண்டிருப்பதாகவும் அதனாலேயே எங்கு போனாலும் இவனை மட்டும் ரொம்ப நேரம் காக்க வைத்து விடுவதாயும் இந்த நேரத்தில் அவன் நினைத்தது துரதிருஷ்டம்தான். எல்லோருக்கும் இருக்கும் ராசி அவனிடம் இல்லையென்றும், இல்லையென்றால் வேலை இப்படிக் கடைசி நேரத்தில் யாரோ ஒரு எம்.எல்.ஏ.வால் தட்டிப் பறிக்கப்பட்டிருக்காதென்றும் யோசித்தவுடன் தொண்டை அடைத்து அழுகை வந்தது. எப்பவும் நிழல் தரும் மரம் இன்றைக்கென்னவோ கலக்கங்கலக்கமாய் வெயில் முழுவதையும் உள்ளே விட்டுக் கொண்டிருப்பதுபோல் பட்டது. அதனாலேயே அங்கிருப்பதும் அவனுக்கு நசநசத்தது.

அவன் வீட்டுக்குள் நுழைந்ததும், அக்கா பானையிலிருந்து குளிர்ந்த தண்ணீர் எடுத்துக் கொடுத்தாள். அவன் தண்ணீரை வாங்கிக்கொண்டே,

"சரியான வெயில்... ஸ்ஸ்... அப்பா..." சிரிக்க முயற்சி செய்தான்.

தண்ணீரைக் குடித்ததும் இன்னும் வியர்வை பொங்கியது. சட்டையைக் கழட்டி கொடியில் எறிந்தபோது அம்மா வந்தாள்.

“டேய் துவைக்க வேண்டியதெல்லாம் எடுத்துப் போடேன்... வெயில்ல சீக்கிரம் காய்ஞ்சிரும்ல... ஆமா போஸ்ட்மேனை பார்த்தியா...”

“பாக்கல...”

“சரி வந்தாத்தான் வீட்டுக்கு கொண்டு வந்துருவாரே... ஒருவேள மத்தியானம் வருமோ என்னவோ...”

“இல்லம்மா வராது...” அவனுக்கே இது தன் குரல் இல்லை என்று தெரிய ஆரம்பித்தது.

“ஏண்டா...”

“இல்ல வராது...” முழுவதும் உடைந்து போய் கண்ணில் நீர் கோர்க்க அப்படியே சுவரோடு சாய்ந்தான். மத்தியானம் சாப்பிட அப்போதுதான் உள்ளே நுழைந்திருந்த அப்பா,

“சரி... இப்ப என்ன... போனாப் போகுது... இது இல்லைன்னா இன்னொண்ணு... நாம மட்டுமா இப்படி இருக்கோம்... லட்சக்கணக்கில் படிச்சிட்டு சும்மா இருக்காங்க... இதுக்காக வருத்தப்பட்டா முடியுமா... ரங்கா இந்த விசிறிய எடு... யப்பா பயங்கர வெயில்...”

அம்மா கொஞ்ச நேரம் அவனையே பார்த்துக்கொண்டு அப்படியே நின்றிருந்தாள். அப்புறம் விசிறியெடுத்து அப்பா கையில் கொடுத்துக்கொண்டே,

“இப்பவே வெயிலடிக்கிற அடி தாங்க முடியல... இன்னும் அக்கினி நட்சத்திரம் வேற இருக்கு...” சொல்லிவிட்டு அடுக்களைக்குள் போய்விட்டாள். அவனுக்கு அழுகிற நினைவில்லாமலே கண்ணீர் வந்தது. அது நல்லதுதான் என்றுகூட நினைத்தான். ஆனால், அது இப்போது தவறிப்போன வேலைக்காக மட்டும் என்றில்லாமல் ஒரு மாதத்திற்கு முன்னால் ஒரு நட்சத்திரங்களற்ற இரவில் சாவித்திரி சொல்லிவிட்ட இன்றளவு பொய்க்காகவும்தான் என்று நினைத்ததும், இன்னுமொரு முறை அழுகையும் வியர்வையும் பொங்கி வெயிலை நினைவுபடுத்தியது.

12. உள்ளும் வெளியும்

அன்றைக்கு வெயில் சகிக்க முடியவில்லை. அவன் ஆபீசிலிருந்து சாப்பிட வந்திருந்தான். முதுகில் பிசு பிசுத்த சட்டையைக் கழட்டி ஹாங்கரில் மாட்டிவிட்டு திரும்பியவன்,

“பாக்கியம்... ஏ... பாக்கியம்... இதென்ன வீடா லட்சணமா... அந்தச் சாக்கை எடுத்து வெளியில் காயப்போட்டான்ன... இந்த டம்ளர் பாரு வாசல்ல கிடக்குது... என்ன புஸ்தகம் அது... எத்தன தடவ எடுத்து வச்சாலும் அறிவுங்கிறதே கிடையாது... அவள எங்கே... பெரியவள...” என்று கேட்டுக் கொண்டே பேண்டை கொடியில் மடித்துப் போட்டான். பாக்கியம் அடுக்களையிலிருந்து வெளியே வந்தவள்,

“அந்தக் கீரை முண்டையக் காணும்... பள்ளிக்கூடம் விட்டு வர வேண்டியதான்... அவள பாக்கப் போறேன்... இவள பாக்கப் போறேன்னு வீடு வீடா ஏறி இறங்கிட்டு வருவா... கொஞ்சமாவது நெஞ்சில் பயமிருந்தாத்தான சரி... ஒரு நாலணா இருந்தாக் கொடுங்க மோர் வாங்கணும்...” விருட்டெனத் திரும்பியவன்,

“காலயிலதான ரெண்டு ரூபா கொடுத்தேன்...”

“ஆமா... யார் இல்லைன்னாக... துட்ட வச்சிகிட்டா ஒங்ககிட்ட கேக்காக... காகறி வாங்கிருக்கு... சின்னவளுக்கு ஒரு சிலேட்டு வாங்கிக் கொடுத்திருக்கு... ஒங்களுக்குத் தெரியாம என்ன சேத்து வச்சிரவா போறேன்...”

கடைசியாக அவள் சொன்னது அவனுக்குப் பிடிக்கவில்லை.

“ஒனக்கு முதல்ல நெஞ்சில பயமிருந்தால்ல ஓம் பிள்ளைகளுக்கு இருக்கும்... அறிவு கெட்டவளே தேதி என்ன... தேதி என்னன்னு பாத்தியா... இன்னும் பத்து நாளக்கி என்ன பண்ணுவே... காலைல கொடுக்கும்போதே படிச்சிப் படிச்சிச் சொன்னேன்ல... அறிவு எங்கடி போச்சி...”

சட்டைப் பையிலிருந்து பீடியை எடுத்துப் பற்ற வைத்தான். மாசக் கடைசியாக ஆக சிகரெட் பீடியாக உருமாறிவிடும்.

“சரி... இப்ப அதுக்கென்ன... அதுக்கு இப்ப ஏன் நாய் மாதிரி மேலே வுழுதீக...”

பீடி மரக்கட்டையாய் இழுக்க இழுக்க புகையே வரவில்லை. பீடியைத் தரையில் தேய்த்து வாசலுக்கு வெளியே வெறுப்புடன் எறிந்தான்.

“ஆமடி... உக்காந்து... குறுக்கொடிய வேல செஞ்சிட்டு வர்றவனுக்கில்ல தெரியும்... அம்ம மக்களுக்கென்ன தெரியும்... துட்டோட அரும... நாந்தன்னால... என்ன பண்றதுன்னு தெரியாமக் கிடந்து கண்ணு முழி பிதுங்கிகிட்டு வாரேன்... சிறுக்கி முண்டைகளுக்கு கொஞ்சமாச்சும் ஓர்ம இருந்தாத்தான... என்னவோ புருஷன் பெரிய லாண்ட்லார்டு ரிச்சர்டுன்னு நெனப்பு... ஒண்ணொண்ணையும் நாலு நாளைக்காச்சும் ஒண்ணுமில்லாம போடணும்... அப்ப தெரியும்...”

அப்போதுதான் தொட்டிலிலிருந்து முழித்த கடைக்குட்டி தலையைக் கீழே தொங்க விட்டுக்கொண்டு அப்பாவைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள். அவன் அவளைக் கவனிக்கவேயில்லை.

“இப்ப என்னத்துக்க இந்த வரத்து வாறீக... பேசாம ஒங்க சோலியப் பாத்துட்டு கிளம்புங்க... எப்பப் பாத்தாலும் வசவு... வாயில ஒரு நல்ல வார்த்த உண்டா... பெறகெப்படி வீடும் வாசலும் வெளங்கும்... நீங்க முதல்ல சிகரெட் பீடியை விட முடியுதா... இதில ஆத்தா மக்க திங்கறதுனாலதான் இவுக சேத்து வைக்கிற சொத்து தேஞ்சி போகுதாம்... என்னமோ சொலவடை சொன்னாப்ல... நல்லா வாயில வருது...”

அவள் தட்டில் சோற்றை எடுத்து வைத்துக்கொண்டே சொன்னாள். அவளிருக்கிற அடுக்களைக்கும் பட்டாலைக்கும் ஒரு சிறு சுவர்தான் அடைப்பு. பட்டாலையில்தான் எல்லா சாமான்களும் அடைந்து கிடந்தன. பட்டாலையை விட்டு இறங்கினால் சின்னதாய் ஒரு ஆள் போகிற மாதிரி வராண்டா. அதில்தான் அவன் சைக்கிளை நிறுத்தியிருந்தான். பட்டாலை நடுவில் கடைக்குட்டிக்கு ஒரு தொட்டில், ரெண்டு மரபீரோ, ஒரு துணிக்கட்டில், இடது பக்க மூலையில் மேஜை நாற்காலி. பக்கத்தில் குத்துவிளக்கு வைக்கிற மாடப்புறை. மேலே ஸ்வாமிப் படங்கள். அறையே அடைந்து கிடப்பதுபோல ஒளியிழந்து இருந்தது. இந்த வீட்டுக்கு வாடகை எழுபத்தைந்து ரூபாய். இதற்கு முன்னால் இருந்த வீடு சாக்கடைகளுக்கு நடுவில் இருந்தது. அதற்கு இது பரவாயில்லை. ஆனால், அதைவிட வாடகை அதிகம்தான். எல்லாச் செலவுகளையும் குறைக்கணும். இந்த அறிவெல்லாம் இருந்தா இப்படிப் பேசச் சொல்லுமா.

“ஏண்டி சொத்து சேத்து வைக்க ஒங்கப்பன் தஞ்சாவூர் ஏட்டு அள்ளிக் கொடுத்தாம்பாரு... வாயில வருதாம்ல... வாயில... அந்த வாயைக் கிழிச்சா...” என்று பொதுவாய் சுவரைப் பார்த்துச் சொன்னான் அவன். அவள் சோற்றுத் தட்டுடன் வெளியே வந்தாள். தட்டை ‘ணங்’கென்று

வைத்துவிட்டு அவனை ஒரு முறை முறைத்தாள்.

“எங்கய்யாவப்பத்தி ஏம் பேச்செடுக்கீக... அவுக கொடுத்தது போதாதாக்கும்... கொடுத்ததையே கொறையில்லாம வைக்கதுக்கு வக்கில்ல... இன்னம் வேணுமாம்... ஏன்... உங்கப்பா அம்மா அண்ணந்தங்கச்சிகிட்டே போயி... கேட்டு... ஒரு ரூபா... ரொம்ப வேண்டாம்... ஒத்த ரூபா வாங்கிருங்க பாப்பம்... பெரிசா கிழிக்காக... எனக்குத்தான் கிழிக்கத் தெரியும்னு...”

திரும்பியவள் பிடரியில் அடி விழுந்து தடுமாறி அடுக்களைச் சுவரில் முட்டிவிட்டாள். என்ன என்று அறியுமுன் இன்னோர் அறை கன்னத்தில் விழுந்தது. குப்பென இருட்டாய்த் தெரிந்தது. அவள் பின்வாங்கி காலைச் சோற்றுத் தட்டிலேயே வைத்துவிட்டதால் சூடு பொறுக்க மாட்டாமல் துள்ளி விழுந்தாள்.

“என்ன மயித்துக்கு... இப்ப அடிக்கீக...”

வேதனையும் ஆத்திரமும் பொங்கக் கத்தினாள். அவன் இன்னமும் வெறியேறி, “நல்லா வாய் துளுத்துப் போச்சி... தேவடியா முண்டைக்கி...” என்று காலால் இடுப்பில் மிதித்தான்.

“ஐயய்யோ... கொல்றானே... கொல்றானே... சண்டாளப்பய... தேவடியா மகனே... விடுடா...”

அவன் அவள் தலைமயிரைப் பிடித்துக் கரகரவென இழுத்து முதுகில் ஓங்கி ஓங்கிக் குத்தித் தள்ளினான்.

“வாயத் திறக்காத... சிறுக்கி... வாயத் திறக்காத... திறந்தே அப்படியே கொன்னுடுவேன்...”

இந்தச் சத்தத்தில் தொட்டிலில் கிடந்த கடைக்குட்டி கதறினாள். அப்போதுதான் வீட்டுக்குள் நுழைந்த பெரியவள் இதைக் கண்டதும் அப்படியே செய்வதறியாது நின்றுவிட்டாள். அவளைப் பார்த்ததும்,

“இங்க வாடி... பலவட்டரைச் சிறுக்கி... எங்கே போன... பள்ளிக்கூடம் விட்டா வீட்டுக்குள்ளதான இருக்கணும்... எங்கடி தொலஞ்சி போன...” என்றபடி கன்னத்தில் ஓங்கி அறைந்தான். விழுந்த அடியில் மூலையில் போய் சுருண்டு விழுந்து அப்படியே மயங்கிவிட்டாள். நடுவீட்டில் விழுந்த வாக்கில் உட்கார்ந்திருந்த பாக்கியம் விறுவிறுவென்று எழுந்து வெளியே போகப் போனாள். அவன் எட்டி அவள் தலைமயிரைப் பிடித்து,

“எங்கடி போற... துப்புக் கெட்டவளே...”

“கைய எடு... முதல்ல... நான் எங்கயும் போறேன்... எனக்கு ஒரு கட்டைக்கு எங்கயும் சோறு கெடைக்கும்... இப்படிக் கெடந்து தெனமும் சித்ரவதைப்பட வேண்டாம்... அதுவும் உன்ன மாதிரி மிருகத்துக்கிட்ட...”

சொல்லி முடிக்குமுன்னர் மூக்கோடு சேர்த்து அடி விழுந்தது. அலறினாள். அவனைப் பிடித்துத் தள்ளினாள். கையைக் கடித்தாள். அவன் கடைசியில் சோர்ந்து போய்,

“போடி, தேவடியாச் சிறுக்கி... வெளியில போயி தேவடியாத் தனம் பண்ணு... ஒனக்கு அதுதான தொழில்... கல்யாணத்துக்கு முன்னால ஒங்காத்தா அப்பிடித்தான் ஒன்ன வச்சிப் பொழச்சா... இல்லாட்டா அப்பிடி ஒருத்தன் லட்டர் போடுவானா... சிறுக்கிப் புள்ள... ஒன்னயும் வச்சி வாழுறன் பாரு... என்னச் சொல்லணும்... போடி... வெளியே போடி... நானுமாச்சி... எம்பிள்ளகளுமாச்சி... தாலிய அறுத்துக் கொடுத்துட்டு போய்த் தொலை... நீ தொலஞ்சாத்தான் நிம்மதி...”

“யாரு தேவடியாத்தனம் பண்ணினா, ஒங்கக்கா பண்ணிருப்பா... ஒங்காத்தா பண்ணிருப்பா... நீ எதுக்கு மாசாமாசம் சங்கரங்கோவில் போய்ட்டு வாரேன்னு தெரியாது... ஊரெல்லாம் எச்சிக்கலை கணக்கா பெறக்கறது தெரியாது... நீதான் தேவடியாத்தனம் பண்ற...”

இன்னும் அடி விழுந்தது. ரோட்டில் கூட்டம் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. யாரும் எதுவும் செய்ய முன் வரவில்லை. ஆனால், எல்லோர் முகத்திலும் பரிதாபம் மிகுந்திருந்தது.

அவள் திமிறிக்கொண்டு வெளியே வரப் போனாள். அவன் அவள் கழுத்தைப் பிடித்துக் கீழே தள்ளினான். தள்ளியதில் தாலிக்கயிறு கையில் கிடைத்து அறுந்தது. தாலிப் பிள்ளையாரும், சிறகுகளும் சிதறின. அவன் வெளியே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவர்களைக் கோபமாய் முறைத்துக்கொண்டே வாசல் கதவை ஓங்கிச் சாத்தினான். அவள் அதற்குள் டிரங்குப் பெட்டிக்குள் இருந்த சேலை, சட்டை எல்லாவற்றையும் ஒரு பையில் திணித்துக் கொண்டிருந்தாள். கடைக்குட்டி அழுது அழுது ஓய்ந்து அப்படியே தலையைத் தொங்கவிட்டவாறே தூங்கிப் போயிருந்தாள். அவன் தொட்டிலுக்குள் அவளை நிமிர்த்திப் போட்டான். தூக்கத்திலும் ஏங்கிக் கொண்டிருந்தாள். பெரியவள் இப்போதுதான் நினைவு வந்து லேசாய் கண்ணைத் திறந்து பார்த்தாள். வீடெல்லாம் சோறு சிந்தி விதைத்திருந்தது. தாறுமாறாய் சாமான்கள் இரைந்து கிடந்தன. அவள் அப்பாவைப் பார்த்ததும் மறுபடியும் கண்களை மூடிக்கொண்டு அப்படியே கிடந்துவிட்டாள். அவன் கதவருகில் நின்று

கொண்டிருந்தான். அவள் கையில் பையுடன் நேரே வந்தாள்.

“எங்கே போறே...”

“எங்கேயும் போறேன்...”

படாரென அவள் கையிலிருந்த பையைப் பிடுங்கிக் கதவைத் திறந்து ரோட்டில் விட்டெறிந்தான். அவளையும் பிடித்து வெளியே தள்ளினான்.

“இனிமே வந்துராதே... சொல்லிட்டேன்...”

ரோட்டில் போய்க் கொண்டிருந்தவர் திகைத்துத் திரும்பினார். அவள் கோலத்தைப் பார்த்ததும் பேசாமல் போய்விட்டார். அவள் சிதறிய துணிகளை பைக்குள் திணித்து பின் கொஞ்சநேரம் அப்படியே நின்றாள். அவன் படாரென கதவைச் சாத்திக்கொண்டான்.

கொஞ்ச நேரத்தில், பெரியவள் கதவைத் திறந்துகொண்டு பைக்கட்டுடன் பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பினவள் எதிரே இருக்கிற சர்வேயர் வீட்டுத் திண்ணையில் அம்மா உட்கார்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு பேசாமல் போய்விட்டாள். சின்னவள் பள்ளிக் கூடத்திலேயே சாப்பிட்டு விட்டு இருந்துவிட்டாள்போல. வரவேயில்லை. பின்னும் சிறிது நேரங்கழித்து அவன் கதவை விரியத் திறந்து கொண்டு சைக்கிளை எடுத்து வெளியில் வைத்தவன், அவளைப் பார்த்தான். கதவை லேசாய் ஓரஞ்சரித்து வைத்துவிட்டு சைக்கிள் ஸ்டாண்டை எடுத்துக்கொண்டே,

“ஏய்... ஒழுங்கா வீட்ல போய் இரீ... இல்ல எங்கயாவது கண்காணாம போயிரு... நான் சாயந்திரம் வரும்போது இந்த இடத்தில் பார்த்தேன்... இங்கனேயே சமாதி வச்சிடுவேன்... சொல்லிட்டன்...”

அவள் யாருக்கோ சொல்வதுபோல முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவன் போய்விட்டான்.

சாயந்திரம் வெயில் குறைந்து காற்று வீசியது. அவன் கையில் பீடியுடன் சைக்கிளை உருட்டிக்கொண்டே மெதுவாக நடந்து வந்தான். அப்பொழுதும் அவள் அதே இடத்தில்தான் உட்கார்ந்திருந்தாள். நமுத்தலான சிரிப்புடன் அவள் முகத்தை ஆராயும் பாவனையில் பார்த்தான். அவள் அவனைப் பார்த்ததும் வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவன் உள்ளே போனான். கடைக்குட்டி இப்போதும் தூங்கிக் கொண்டிருந்தாள். ஆனால், முகமெல்லாம் கழுவி சீவிச் சிங்காரித்து விட்டிருந்தது. அவன் ஏதும் பேசாமல் வாசல் கதவை விரியத் திறந்தான். காப்பி போட்டான். பெரியவளும், சின்னவளும்

டியூசன் முடித்து வந்தார்கள். இரண்டு பேரிடமும் காப்பியைக் கொடுத்துவிட்டு,

“ஒங்காத்தாளுக்கு காப்பி வேணுமான்னு கேளுட்டி” என்று சத்தமாய்ச் சொன்னான். மெல்லிய சிரிப்பு இழையோட பெரியவள் மெல்ல இறங்கி அம்மாவிடம் போய்,

“யெம்மா காப்பி வேணுமா...”

“நீயும் ஒங்கப்பாவுமே குடிங்க...”

பெரியவள் வீட்டிற்குள் வந்துவிட்டாள். காப்பி குடித்த ஏனங்களையெல்லாம் அங்கணக் குழியில் போட்டு கழுவியெடுத்துவிட்டு அடுக்களையைவிட்டு வெளியே வந்தாள். சின்னவள் பாடப் புஸ்தகத்தை எடுத்துக் கொண்டு உட்கார்ந்தாள். அப்பா அம்மாவுக்கு நேர் எதிரே வீட்டிற்குள் உட்கார்ந்து பீடி குடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு பெரியவளும் பேசாமல் உட்கார்ந்து பாடம் படிக்க ஆரம்பித்தாள். வீட்டுப் பாடமெல்லாம் எழுதி முடித்ததும், எழுந்து சின்னவளுக்கும் அவளுக்குமாய் சோறு வைத்து சாப்பிட்டுவிட்டு சரித்திர பூகோளப் புஸ்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள். சின்னவள் படுத்துவிட்டாள். அவளுக்கும் தூக்கம் தூக்கமாய் வந்தது. அப்படியே புஸ்தகத்துடன் தூங்கிவிட்டாள்.

அவன் யோசனையிலிருந்து திரும்பியபோது பெரியவளும் சின்னவளும் தூங்கியிருந்தனர். கடைக்குட்டி மட்டும் தனக்குத்தானே ஏதோ நினைத்துக்கொண்டே தொட்டிலுக்குள்ளேயே சிரித்துக் கொண்டிருந்தாள். மணியைப் பார்த்தான். மெல்ல எழுந்து ரோட்டுக்கு வந்தான். ரோட்டில் ஒரு சுடுகுஞ்சி கூட கிடையாது. அவள் இன்னும் அந்தத் திண்ணையில் உட்கார்ந்திருந்தாள். அவன் அவளருகில் வந்தான்.

“ஏய்... பாக்கியம்... ஒன்னத்தான வீட்டுக்குள்ள... வா...”

“வரலை... நீங்க... போங்க...”

“இதான வேண்டாங்கிறது... பேசாம எந்திரிச்சி வாம்மா...”

“நான் எப்படியும் தொலையுறேன்... நீங்களும் ஒங்க பிள்ளைகளுமாச்சி... நல்லா இருங்க...”

“சரி நாங்க... நல்லா இருக்கிறது இருக்கட்டும்... வீட்டுக்கு... வா...” என்ற படியே கையைப் பிடித்து இழுத்தான். அவள் கையை உதறினாள்.

கொஞ்சநேரம் அப்படியே நின்றவன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு திடீரென அவள் கக்கத்தில் கையைக் கொடுத்து பரபரவென இழுத்துக் கொண்டு வந்து பட்டாலையில் உட்கார வைத்தான். பின் விறுவிறுவென வந்து பையை எடுத்துக் கொண்டு போனான். வெளி வாசலை நாதாங்கி போட்டுவிட்டு உள்ளே வந்து பட்டாலை கதவைத் தாழ்ப்பாள் போடும்போது மெல்லச் சொன்னான்.

“நான்... என்ன சொல்லிட்டேன்னு நீ அப்படி பேசுதியே... மனுசனுக்கு ஆத்திரம் வருமா வராதா... தன்னால கிடந்து நான் படுறபாடு நாய்ப் பாடா இருக்கு... அந்த நேரத்தில் வந்து நீ துட்டு துட்டுன்னு நச்சரிச்சதும் கோவம் வந்திருச்சி... சரி சரி... எந்திரிச்சி சாப்பிடு...”

இளகிய குரலில் மன்னிப்பு கேட்கும் பாவனையில் சொன்னான். அவளும் தலைமயிரை ஒதுக்கிக் கொண்டை போட்டுக்கொண்டே,

“நானும் என்ன எனக்கா கேக்கேன்... ஒங்களுக்கும், பிள்ளைகளுக்கும் செய்யத்தான கேக்கேன்... அதுக்கு... அப்பிடிப் பேசுதீகளே... சரி தாலிச் சிறகெல்லாம் எடுத்து வச்சீகளா...”

“ம்... எடுத்து வச்சிட்டன்... சாப்பிடலியா நீ...”

“வேண்டாம்... சாயந்திரம்தான் சாப்பிட்டேன்...”

அவன் விளக்கை அணைத்தான். அதுவரைக்கும், அப்புறமும் ரொம்ப நேரம் இருட்டுக்குள்கூட ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கக் கூச்சப்பட்டுக்கொண்டு இருந்தனர்.

13. எதிர்கொள்ளல்

சூழ்நிலையில் இறுக்கமும் அமைதியும் சேர்ந்திருந்தது. அடுக்களையில் ராஜேசுவரி பாத்திரங்களைக் கழுவி எடுத்து வைக்கிற சத்தம் பட்டாலை வரை துல்லியமாகக் கேட்டது. அவர் பட்டாலையில் இருந்த ஒயர் நாற்காலியில் பட்டும் படாமல் உட்கார்ந்திருந்தார். அடுக்களையில் ஒவ்வொரு பாத்திரத்தை எடுத்து வைக்கும்போதும் ஏற்பட்ட அதிருப்தி வெளியே தெளிவாகத் தெரியும்படியாக இருந்தது. அவர் உட்கார்ந்திருந்த ஒயர் நாற்காலி கூட அவரைத் தாங்குவதில் தனக்கிருக்கும் அதிருப்தியைத் தெரிவிப்பது போல விறைப்பு காட்டியது. பக்கத்திலிருந்த அறைக்குள் அவர் கண்ணுக்குத் தெரியும்படியாகவே சந்திரன் நின்றுகொண்டு கொடியில் கிடந்த துணிகளை எடுத்து கட்டிலில் போட்டு ஒவ்வொன்றாய் எடுத்து நீவி விட்டு மடித்துக் கொண்டிருந்தான். அவன் ஒவ்வொரு துணியை மடிப்பதற்கும் அசாதாரண நேரம் எடுத்துக் கொண்டதாக அவர் நினைத்தார். அவர் வராமல் இருந்திருந்தால் அவன் இந்த வேலையைச் செய்வானா? தெரியவில்லை. அவர் வந்ததிலிருந்து ஏறிட்டுப் பார்க்கவில்லை. கல்லாயிருந்தது முகம்.

முதலில் கதவைத் தட்டியபோது திறந்தது ராஜேசுவரிதான். கதவைத் திறந்தவளின் முகத்தில் யாரையோ எதிர்பார்த்து வந்த வியப்பு கணத்தில் மாறி சகிக்க முடியாத வெறுப்பு தோன்றியது. ஒன்றும் பேசவில்லை. விறுவிறுவென்று உள்ளே போனாள். போகும்போது வலதுபக்கம் தலையைத் திருப்பி,

“ஒங்க பெரியப்பா வந்திருக்கு...”

சந்திரன் வாசலுக்கு வருமுன்பே அவர் வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தார். அவ்வளவு சுவாதீனமாய் அவர் உள்ளே வந்தது அவனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

“எங்கே... வந்தீங்க...”

அவர் என்ன பதில் சொல்ல முடியும் இந்தக் கேள்விக்கு. வலுக் கட்டாயமாக நுழைகிற காற்றே போல உள்ளே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தார். சந்திரன் கேள்வி கேட்டதாகவோ, அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்றோ அவர் நினைக்கவில்லை. ‘‘ஸ்... அப்பா...” என்று பெருமூச்சு விட்டார். சந்திரன் மேலும் ஏதும் பேசாமல் திரும்பி அறைக்குள் போய்விட்டான்.

அவருக்குப் பசித்தது. காலையில் உளுந்தூர்பேட்டை பஸ் ஸ்டாண்ட் ஹோட்டலில் கணேசன் வாங்கிக் கொடுத்த நாலு இட்லியைச் சாப்பிட்டது. பஸ்ஸுக்கு காசு கொடுத்து அனுப்பி விட்டான். முதலில் அங்கேயே ஏதாவது வேலைக்கு ஏற்பாடு செய்யச் சொன்னார். அறுபத்தைந்து வயதான கிழவரை அதுவும் நீரிழிவு நோயால் காலெல்லாம் சொதசொதவென்று ஆறாத புண் வேறு யார் எந்த வேலைக்கு வைத்துக் கொள்வார்கள். பஸ் ஏறி இந்த ஊரில் வந்திறங்கி விட்டார். வந்து உட்கார்ந்து ஒரு மணி நேரமாகி விட்டது. இதுவரை யாரும் எதுவும் பேசவில்லை.

சாயங்கால வெளிச்சம் வாசல் வழியே வீட்டுக்குள் யாரும் விரும்பாமலேயே உள்ளே விழுந்தது. கால்கள் ரண வேதனையெடுத்தன. கால்களைக் கீழே வைக்காமலிருக்க ரொம்ப கவனம் எடுத்துக் கொண்டார். ஊரிலேயே இருந்திருக்கலாமோ...! முடியாது. அவர் யாருக்கும் வேண்டாதவராகி விட்டார். அவரால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. வீடு வீடாக இரந்து சாப்பிடப் பிடிக்கவில்லை. எங்கேயாவது கண்காணாத இடத்தில் செத்துப் போகவும் மனசில்லை. இன்னமும் வேலை பார்த்துப் பிழைத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை இருந்தது.

சாயங்கால பால் வரவும் ராஜேசுவரி வந்து வாங்கிக் கொண்டு போனாள். சந்திரன் துண்டை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு புழக்கடைக்குப் போனான். ரெண்டு பேரும் அவர் இருக்கிற மாதிரியே பாவிக்கவில்லை. அவர் கண்களை மூடினார். நீல இருட்டு. அசந்தால் அப்படியே சாய்ந்துவிடுவார். பசியும் களைப்பும் உடம்பில் தீவிர அசதியை ஏற்படுத்தியிருந்தது. சந்திரன் குளித்துவிட்டு வந்து வெளியே புறப்படத் தயாரானான். அவர் அவன் போகிற போதும் வருகிறபோதும் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால், அவன் அவரைத் திரும்பிப் பார்க்கவேயில்லை. முகத்தைப் பார்த்து ரெண்டு வார்த்தை பேசினால் எல்லாம் சுமுகமாகிவிடும்.

திடீரென தலை சுற்றுகிற மாதிரி இருந்தது. நாற்காலியின் கைப்பிடியை இறுகப் பிடித்துக்கொண்டு தரையில் கால்களை ஊணினார்! கொஞ்சம் பரவாயில்லை. வாயில் கசப்பாய் ஊறிய எச்சிலை எழுந்து வாசலுக்குப் போய் துப்பிவிட்டு வந்தார். அப்போது சந்திரன் அடுக்களையில் அவளுடன் பேசிக் கொண்டிருந்தான். பேச்சில் விரோதம் தொனித்தது. அவர் மறுபடியும் நாற்காலியில் உட்காரும்போது காலிலிருந்து நீர் வடிந்திருப்பதைப் பார்த்தார். உடனே படபடப்புடன் கீழே உட்கார்ந்து வேஷ்டியால் துடைத்தார். சந்திரனோ அவளோ கவனித்தார்களா என்றும் பார்த்துக் கொண்டார்.

அடுக்களையிலிருந்து சந்திரன் முன்னால் வர, கையில் காப்பியுடன் வந்தாள் ராஜேசுவரி, காப்பித் தம்ளரை அவரிடம் நீட்டிக்கொண்டே,

“எங்கே போறீங்க...”

அவருக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. எதுவும் யோசிக்காமலே,

“மெட்ராஸ்.”

“மெட்ராஸுக்கு எதுக்கு... எங்கனயாவது விழுந்து செத்துக்கித்து வச்சீகன்னா... என்ன செய்ய... பேசாம உண்டானத தின்னுகிட்டு ஊரில கிடக்க வேண்டியதான...”

அவர் தலையைக் குனிந்து கொண்டார். காப்பி கையில் சுட்டது! குடிக்கலாமா என்று காப்பியைப் பார்த்தார்.

“எப்ப போறீங்க...”

“போக வேண்டியதான்...”

“அப்ப கிளம்புங்க... அவுக... டவுணுக்குப் போறாக... போம்போது பஸ் ஏத்தி விட்ருவாக...”

அவர் தடுமாறி காப்பித் தம்ளரைக் கீழே வைக்கப் போனார். சூடு பொறுக்க முடியவில்லை. இருள் சீக்கிரமே வந்தது. அவர் காப்பியைக் கீழே வைப்பதைப் பார்த்துவிட்டு,

“காப்பியைக் குடிங்க... ஈ விழுந்துரப் போது... வேற காப்பி இல்ல...”

அவர் காப்பியைக் கையிலெடுத்து சிறிது நேரம் வைத்திருந்தார். சந்திரன் புறப்பட்டுத் தயாராய் வந்தான்.

“கால் மூஞ்சி கழுவணும்னா கழுவிக்கோங்க.”

“பரவால்ல இருக்கட்டும்...”

அவர் காப்பியை அண்ணாக்க குடித்தார். காப்பி தொண்டையில் இறங்கியதும் கொஞ்சம் தெளிச்சியாயிருந்தது.

“மெட்ராஸ் போறதுக்கு காசு இருக்கா...”

அவர் இல்லை என்று தலையாட்டினார். உடனே அவன் அறைக்குள் நுழைந்தான். பின்னாலேயே நுழைந்த ராஜேசுவரி அவர் காதில் விழும்படியாகவே,

“ஒங்கள யாரு அதெல்லாம் கேக்கச் சொன்னா. எப்படி வந்தாரோ

அப்படிப் போறாரு இருக்கிற கஷ்டத்தில இதுவேற...”

சந்திரன் ஒரு நிமிடத்தில் வெளியே வந்தான்.

“சரி வாங்க போகலாம்...”

அவர் அவளிடம் சொல்லிக்கொள்ளத் திரும்பினார். அதற்குள் அவளே,

“இந்த உடம்போட ஏன் அங்கிட்டு இங்கிட்டு அலையுதீக... முதல்ல ஒடம்ப கவனிங்க...”

அவருக்கு இதற்கு எந்த மாதிரி முகபாவம் வைத்துக் கொள்வது என்று தெரியவில்லை.

வெளியே வந்ததும் இருபது ரூபாயை பையிலிருந்து எடுத்துக் கொடுத்தான். அவர் வாங்கி பைக்குள் வைத்துக் கொண்டார். தெரு விளக்குகள் எரிந்தன. பள்ளிக்கூடத்துக் குழந்தைகள் பாடம் படிக்கும் சத்தம் கோரஸாகக் கேட்டது. டியூசன் போல. அவருக்கு எல்லா சத்தங்களுமே எங்கோ தூரத்திலிருந்து கேட்பதுபோலிருந்தது. மெயின் ரோட்டுக்கு வந்ததும் சந்திரன்,

“அங்க மெட்ராஸ் பஸ் வரும்... ஏறிப் போயிருங்க... போயிருவீங்கல்ல...”

“போயிருவேன்.”

“ஒரு இடத்தில் இருங்க அங்க இங்க அலஞ்சி எல்லாரையும் சிரமப் படுத்தாதீங்க... சரி வரட்டா...”

“ம்ம்...”

அவன் போகவில்லை. ஏதோ சொல்ல பாக்கி இருந்தது போல நின்றான். ஒரு நிமிடம் அவர் முகத்தை உற்றுப் பார்த்தான். பிறகு என்ன நினைத்தானோ “சரி வர்றேன்...” குரல் பிசிறியது. அவர் தலையாட்டினார். கொஞ்ச நேரம் கழித்து தூரத்தில் பஸ் வருவதைக் கண்டு திரும்பிப் பார்த்தபோது, பஸ் ஸ்டாப்பிலிருந்து கொஞ்ச தூரத்தில் சந்திரன் நின்று கொண்டிருந்த மாதிரி தெரிந்தது.

அவருக்குப் பசியையும், கால் வலியையும் மீறி சிரிப்பு வந்தது.

14. டேவிட் செல்லையாவின் கலைப்பயணம் - சில குறிப்புகள்

டேவிட் செல்லையா வேதஞானபுரம் ரயில்வே ஸ்டேஷனுக்கு பாயிண்ட்ஸ்மேனாக வந்து பத்து நாளாகியிருந்தது. வந்த புதிசில் அந்த ஸ்டேஷனும் அதைச் சுற்றியிருந்த காடும் மனசில் பயத்தையும் தனிமையுணர்வையும் ஏற்படுத்தியது. நிரந்தர குடிகாரன் கிடையாது என்றாலும் மனசு சமானமில்லாத பொழுதுகளில் குடித்துவிட்டு வருவான். பின் வழுக்கை விழுந்திருந்த தலையில் தீவுகளாக மயிர் இருந்தது. தினசரி சவரம் செய்கிற மீசையில்லாத முகத்தில் எப்போதும் ஒரு சோக பாவம் குடியிருந்தது. அன்றைக்கு நாள் அபூர்வம். பௌர்ணமி போல. சாயந்திரமே நிலவு பெரிசாய் உதித்தது. அவன் எழுந்து ஊருக்குள் போனான்.

அந்த ஸ்டேஷனைக் கடந்து போகிற ரெண்டு எக்ஸ்பிரஸ் டிரெய்ன்களும் கடந்து போன பிறகு விளக்குகளையெல்லாம் பூச்சிகளின் தொந்திரவிற்காக அணைத்துவிட்டு வெளி வராண்டாவில், சேரைப் போட்டு, எதிரே முழு நிலவின் ஒளியில் முழுகிக் கொண்டிருந்த காட்டிலிருந்து வீசிய குளிர்ந்த காற்றை அனுபவித்தவாறு ஸ்டேஷன் மாஸ்டர் உட்கார்ந்திருந்தார். ஆளரவம் கேட்டு திரும்பிப் பார்த்தார். டேவிட் செல்லையா வந்து அவருக்கு கொஞ்சம் தள்ளி நின்றுகொண்டு,

“குட்நைட் சார்...”

“வாங்க என்ன தூங்கலியா...”

அவன் ஒன்றும் சொல்லாமல் சிரித்தான். நிசப்தம். மங்கலான வெள்ளையொளி நதியென பாய்ந்து கொண்டிருந்தது. ராப் பூச்சிகளின் இன்னிசை. எதிரேயிருந்து வீசும் காற்று தண்ணென குளிர்ந்திருந்தது. நிறைந்து ததும்பி அசைந்து கொண்டிருந்த ஆலமர இலைகள், டேவிட் செல்லையா வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். நினைவை எங்கோ தொலைத்த மாதிரி. திடீரென்று ஸ்டேஷன் மாஸ்டருடன் எதிர்பாராத வகையில் பேச ஆரம்பித்தான்.

டேவிட் செல்லையாவுக்கு சிறு வயசிலிருந்தே நாடகக் கோட்டி உண்டு. அவனூரிலோ அல்லது பக்கத்து ஊர்களிலோ நாடகம் எங்கு நடந்தாலும் சரி போய்பார்த்து விடுவான். அப்போது டாக்கீஸ் பெரிய பெரிய பட்டணங்களில் மட்டுமே இருந்தது. பள்ளிக்கூடம் போக துணியில் கட்டிக் கொடுத்த புளிச்சோற்றை எடுத்துக் கொண்டு நாடகம் கூத்து

என்று அலைவான். செல்லையா பள்ளிக்கூடம் வராததற்காக இவனுக்கு அடிக்கடி நிமிட்டாம்பழம் கொடுத்து உக்கிபோடச் சொல்லும் வெத்திலை சக்கு வாத்தியார் வாயில் வெத்திலையை அதக்கிக் கொண்டே பேசுவதைப் போல நடித்துக் கொண்டிருக்கும்போது பிடிபட்டுக் கொண்டான். அன்று வாங்கிய அடியில் காய்ச்சல் வர, கசந்த பள்ளிக்கூடத்தை காய்ச்சலோடு தொலைத்து விட்டான். கூத்து பார்த்துவிட்டு வந்தால் அதில் நடித்த எல்லோரையும் போல நடித்துக் காண்பிப்பான். அதைப் பார்க்க அவன் வீட்டு முன்பு கூட்டமே கூடிவிடும்.

பவளக் கொடி ராஜமாணிக்கத்தைப் போலவே நிமிஷத்துக்கு ஒரு தடவை குண்டியைத் தடவி விடுவான். ஹரிச்சந்திராவில் வரும் லோகிதாசனைப் போல அழுது கொண்டே பாடிக் காண்பிப்பான். அம்மாவும் அய்யாவும் பார்த்து பார்த்துச் சிரித்தார்கள். ரொம்பப் பெருமையாயிருந்தது. யாராவது கடுப்பாய் பேசினால் அவர்கள் மாதிரியே பேசிக் காண்பித்து சிரிப்பு மூட்டி விடுவான். அதனால் ஊரில் எல்லோருக்கும் அவன் மேல் பிரியம்.

திடீரென்று ஒரு நாள் காணாமல் போய்விட்டான் செல்லையா. அய்யாவும் அம்மாவும் அலமந்து போனார்கள். தவியாய்த் தவித்து அவனைத் தேடியலைந்தார்கள். கடைசியில் எங்கேயோ மதுரையில் நாடகக் கம்பெனியில் இருப்பதாகக் கேள்விப்பட்டு போனார்கள். அங்கே செல்லையா ஸ்திரி பார்ட் வேஷம் கட்டி நடித்துக் கொண்டிருந்தான். அய்யா அம்மாவின் எந்தக் கெஞ்சலுக்கும் மனமிரங்கவில்லை. சாமதான தண்ட பேதங்கள் செல்லையாவின் கலை உறுதிக்கு முன்னால் சக்தியிழந்தன. கடைசியில் எக்கேடும் கெட்டுத் தொலையட்டும் என்று விட்டுவிட்டு வந்தார்கள், அய்யாவும் அம்மாவும்.

இப்படித்தான் செல்லையா தன் லட்சியக் கலைப் பயணத்தை ஆரம்பித்தான்.

எல்லா கலைவாணர்களின் கனவு பூமியான சென்னைப் பட்டணம் நோக்கி செல்லையா போகிறபோது கைவசம் நிறையவே லட்சியங்கள் ஸ்டாக் இருந்தன. ரோஜாப் பூக்கள் தூவிய மலர்ப் பாதையை எதிர்பார்த்துப் போன செல்லையாவை கல்லும் முள்ளும் கீறிக் காயப்படுத்தின. கலைப் பசியை வயிற்றுப் பசி முழுங்கி ஏப்பம் விட்டது. கூலி வேலை பார்த்தான் செல்லையா. கொஞ்சநாள் ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்திலும் அப்புறம் பக்கத்திலிருந்த ஒரு குப்பத்திலும் இருக்க இடம் தேடிக் கொண்டான். எப்பொழுதும்

துடிப்புடன் இருந்த செல்லையாவின் கலைத் தாகம் புலவர் சிவசாமி என்ற செகண்டரி கிரேடு வாத்தியாரின் கலைத் தாகத்தோடு இணைந்து காட்டாறாய்ப் பெருகி சென்னையைச் சுற்றியுள்ள குப்பங்களையும் கிராமங்களையும் மூழ்கடித்தது. புலவர் எழுதிய நாடகங்களில் அவன் முக்கிய வேடங்களில் நடித்தான். அவ்வப்போது வெளிவந்த சினிமாக் கதைகளையொட்டி சுயமாக புலவரின் கற்பனையில் உதித்த கலைச் சிகரங்களாக வந்தன.

சாதாரண ஜனங்களின் பேராதரவு பெற்றதும் நாடகத்தில் சாதித்த கலை உன்னதங்களை சினிமாவிலும் சாதிக்க வேண்டும் என்ற ஆசை தோன்றியதில் வியப்பில்லை. இப்போதே முப்பதை எட்டிக் கொண்டிருந்த செல்லையா எப்படியும் தன் முகத்தை சினிமாவில் பார்த்துவிட உறுதி பூண்டான். அதுமட்டும் நடந்துவிட்டால் அவன் கீர்த்தி பூரணமடைந்துவிடும். உடனே சினிமா ஸ்டுடியோக்களை முற்றுகையிட்டான்.

பல தடவை பகீரதப்பிரயத்தனங்கள் செய்து ஸ்டுடியோவுக்குள் எடுபிடி ஆளாய் சேர்ந்தான். அவன் வெகு காலமாக கண்டுகொண்டிருந்த கனவு கைக்கருகில் தொங்கிக் கொண்டிருந்தது. எட்டிப் பறித்துவிட தகுந்த சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். எப்படியாவது ஒரு சின்ன ரோலில் தலையைக் காட்டிவிட்டால் போதும். அப்புறம் அவன் வேண்டாம் என்றாலும் விடவாபோகிறார்கள். ஆனால், அவன் துரதிருஷ்டம் அவன் வேலை பார்த்த டைரக்டர்களும் முதலாளிகளும் அவன் எடுபிடி ஆளாக இருப்பதிலேயே மகிழ்ச்சி அடைந்தார்கள். நாலைந்து வருடமாய் எதுவும் திகையவில்லை. ஒரு பெரிய நடிகருக்கு டைரக்டர் சீனை விளக்கிக் கொண்டிருக்கும்போது அதிகப் பிரசங்கித்தனமாக தலையை நீட்டி கூடுதல் விளக்கமளிக்க ஆரம்பித்த கணத்தில் செல்லையாவின் சினிமா மோக காதை பிரேக் ஆனது.

மறுபடியும் குப்பத்து ஜனங்களை கலைவெள்ளத்தில் மூழ்கடிக்க நினைத்தபோது அய்யா செத்துப்போன சேதி வந்தது. செல்லையாவும் லட்சியப் பயணத்தில் களைப்புற்றிருந்தான்.

அம்மா கூட மாறியிருந்தாள். ஏலியாள். அய்யா லாரன்ஸ் அய்யாசாமியாய் செத்துப் போனார். கர்த்தரின் ஆசீர்வாதத்தாலேயே இந்த ரயில்வே போர்ட்டர் உத்தியோகம் அய்யாவுக்குக் கிடைத்ததென்றும் அதுவே செல்லையாவுக்கும் கிடைக்கும் என்றும் அம்மா சொன்னதோடு மட்டுமல்லாமல் புதிதாய் அவனூரில் முளைத்திருந்த புனித மேரி ஆலயத்துக்குக் கூட்டிப் போய் ஞான அப்பம்

வாங்கி புனித நீர் தெளித்து டேவிட் செல்லையாவாக்கினாள். அதே கையோடு பக்கத்திலிருந்த வின்சென்ட் பெரியசாமியின் குமாரத்தியான ரோசலின் செல்வியைக் கல்யாணம் முடித்து வைத்தாள். ரோசலின் இதுவரை நாடகம் பார்த்ததில்லை. சினிமாதான் பார்த்திருக்கிறாள். அதற்கும் கர்த்தரிடம் பாவமன்னிப்பு வாங்கி விடுவாள். அதனால் கணவரின் கலைப்பித்தம் அவளுக்குப் புரியவில்லை.

இந்தக் கட்டத்தில் டேவிட் செல்லையாவின் கலைப்பயணம் முடிந்ததாக நினைப்பவர்கள் ஏமாந்து போவார்கள். அவன் வேலை பார்க்கிற ஊர்களின் தன்மையைப் பொறுத்து கூத்து அல்லது நாடகம் போட முயற்சி செய்வான். எப்பொழுதும் கைக் காசு செலவழியும். கடனும் வாங்குவான். கலைக்கும் கடனுக்கும் ரத்த சம்பந்தம் உண்டுபோல. ரிகர்சல் ஆரம்பித்தால் வேலைக்குப் போக மாட்டான்.

ரோசலின் எத்தனை நாள் வேண்டுமானாலும் நாடகக் கிறுக்கின் அட்டகாசங்களைப் பொறுத்துக் கொள்வாள். அந்த சாத்தானை ஒழித்துக் கட்டுவதற்காக கர்த்தரிடம் ஜபிக்கவும் செய்வாள். ஆனால், பசியை எப்படி பொறுத்துக் கொள்ள முடியும்? டேவிட் செல்லையா வீட்டுக்கு வராமலேயே இருந்த நாட்களில் ரோசலினுக்கு பசியை அமர்த்தி ஆதரவளித்த பாயின்ட்ஸ்மேன் சுப்பிரமணி நிரந்தரமாகவே அவளை அழைத்துக் கொண்டு போய்விட்டான். அதற்கடுத்த ஒரு மாசம் டேவிட் செல்லையா எங்கேயும் போகவில்லை. சம்பளத்தை வாங்கிக் கொண்டு ரோசலினைத் தேடிப் போனான். அவனைப் பார்க்கக்கூட முடியாது என்று சொல்லிவிட்டாள்.

இன்னமும் அவளுடைய ஞாபகம் தீராத ரணமாக இருக்கிறதென்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே திடீரென எழுந்து நின்றான். கைகளிரண்டையும் முன்னால் கட்டிக் கொண்டு,

“கொண்டவனை வஞ்சித்த குலக்கொடியே! உன் கணவனைக் கொல்லாமல் கொன்ற கொலைகாரியே. கண்ணே, கரும்பே, கண்மணியே என்று பாராட்டி, சீராட்டிய மணவாளனை துரோகித்த பாதகியே நீ குடித்தது பழரசமல்ல... விஷம்... ஹ்ஹா... ஹாஹா... ஹாஹாஹ்ஹ்... ஹாஹாஹ்ஹ்...

அப்போது அவன் உருவமே பிரமாண்டமாய் தெரிந்தது. அந்த நிலவின் ஒளியில் நிசப்தமாய் இருந்த காடே அலறியது. ஸ்டேஷன் மாஸ்டர் திடுக்கிட்டுப் போனார். டேவிட் செல்லையா மனசை கீழே சிந்திவிட்டவன்போல அப்படியே குனிந்து உட்கார்ந்தான். முழங்கிய அவன் குரல் இழுவையாய் இழுத்து கார்வையாய் இறங்கி குலுங்கி

குலுங்கி அழ ஆரம்பித்தான். அவ்வளவு பெரிய மனிதனின் அழுகைச் சத்தம் மனசை என்னவோ பண்ணியது. ஆறுதல் சொல்லலாமென்று ரெண்டடி எடுத்து வைத்தார் ஸ்டேஷன் மாஸ்டர். அதற்குள் டேவிட் செல்லையா எழுந்து சிரித்துக் கொண்டே,

“இது ஒரு நாடகத்தில் வந்த வசனம், சும்மா பேசிக் காட்டினேன். நாம ஒரு நாடகம் போடுவோமா? ஸ்கிரிப்ட் எல்லாம் ரெடியாயிருக்கு. நீங்க ஹீரோவா ஆக்ட் பண்ணுங்க, நான் அப்பா வேஷம் போடறேன்.”

இன்னமும் அவன் முகத்தில் கண்ணீர் காயவில்லை. நிலவில் பளபளத்தது. ஸ்டேஷன் மாஸ்டர் ஏதோ சொல்ல வாயெடுக்கும்போது அவன் மறுபடியும்,

“எனக்கிருக்கிற ஆசையெல்லாம் நான் நடிச்சிக்கிட்டிருக்கும் போதே செத்துரணும் சார்... நான் கலைஞன் சார்... கலைஞன்” என்று அவன் சொல்லும்போது அவன் முகத்தில் இருந்த பாவத்தை வார்த்தைகளில் சொல்வது கஷ்டம். ஸ்டேஷன் மாஸ்டர் அவனருகில் வந்து நின்றார். சில கணங்களுக்குப் பிறகு நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டே ஸ்டேஷனுக்குள் போய்விட்டார்.

நிலா இப்போது உச்சிக்கு வந்திருந்தது. குளிரும் அதிகமாகிக் கொண்டே போனது. டேவிட் செல்லையா இன்னமும் எதிரேயிருந்த காட்டையும் நிலவையும் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

15. வானம் எல்லையில்லாதது

விடியற்காலையிலேயே முழிப்பு வந்துவிட்டது. முதலில் கேட்டது பால்க்காரனின் மணிச் சத்தம். அப்புறம் இருளோடு மெலிதாக வந்தது. பள்ளிவாசலில் ஓதும் சத்தம். இளம் குளிர் வீட்டுக்குள் வீசியது. வெளிச்சம் புகையென பரவி வரவர கண்களுக்குப் பொருள்கள் துலங்க ஆரம்பித்தன. முதலில் எதுவும் ஞாபகத்துக்கு வரவில்லை. அவன் படுக்கையில் படுத்தபடியே யோசித்துக் கொண்டிருந்தான். அப்போதுதான் அந்த விசில் சத்தம் கேட்டது... இரவு காவல் படையினரின் நீண்ட விசில் சத்தம்... திடுக்கிட்டான் அவன், உடனே வயிற்றைப் பிசைகிறமாதிரி உணர்வு. முகமே மாறிவிட்டது. முகத்தைச் சுளித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான்.

நேற்று ராத்திரி பத்து மணி இருக்கும். அவன் பேங்கிங் சர்வீஸ் எக்ஸாமுக்காக தெய்வசிகாமணியிடம் புத்தகம் வாங்க, மாரிச் சாமியிடம் சைக்கிளை வாங்கிக் கொண்டு போய்க் கொண்டிருந்தான். மார்க்கெட் ரோட்டைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தபோது போலீஸ்காரர் விசில் சத்தம் அவனுக்கருகில் பக்கத்திலிருந்து கேட்டது. அப்போதுகூட அவனுக்கு ஒன்றும் நேரவில்லை. ரொம்ப இயல்பாய் திரும்பி விசில் சத்தம் வந்த திசையை நோக்கினான். ரெண்டு போலீஸ்காரர்கள் அவனைப் பார்த்து கீழே இறங்கும்படி கையைக் காட்டினார்கள். அவனுக்கு முதலில் எதுவும் புரியா விட்டாலும் அனிச்சையாய் இறங்கினான்.

“இங்கே வா...”

சத்தத்திற்குப் பணிந்து போலீஸ்காரர்களின் அருகில் போனான்.

“சைக்கிளை இங்க ஓரமா நிறுத்து.”

அப்போதுதான் அவனுக்கு சைக்கிள் லைட்டைப் பற்றி ஞாபகம் வந்தது. உடனே சைக்கிளின் முன்னால் குனிந்து டைனமோவைப் பார்த்தான். எரியவில்லை. உடனே கைககால்கள் நடுங்க ஆரம்பித்தன. முகமெல்லாம் வியர்க்க சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி பெடலைச் சுற்றினான். விளக்கு எரியவில்லை. பின்னால் பேட்டரி வயரைப் பிடித்து லேசாக ஆட்டினான். இப்போது எரிந்தது. உடனே படபடப்புடன்,

“சார்... சார்... லைட் எரியுது... சார், லேசா... வயர் கனெக்ஷன் விட்டிருக்கு.”

அவர்கள் அவன் பக்கம் திரும்பவில்லை. உடனே அவன் சைக்கிளை அவர்கள் பக்கம் திருப்பி பெடலைச் சுற்றி சைக்கிளில் லைட் எரிவதைக் காண்பித்தான். அவர்கள் பார்த்தாலும் பார்க்காத மாதிரி இருக்கவே அவன் மறுபடியும் மறுபடியும் சுற்றிக் கொண்டேயிருந்தான். அவனுக்கே திருப்தி ஏற்படும் வரை.

“அதெல்லாம் கேக்க மாட்டாங்க... ப்ரதர்...”

பக்கத்தில் குசுகுசுப்பு கேட்டது. திரும்பிப் பார்த்தான்; அவனை மாதிரியே நாலைந்து பேர் சைக்கிளை ஓரமாக வைத்துவிட்டு நின்று கொண்டிருந்தார்கள். இவ்வளவு நேரம் கவனிக்கவேயில்லையே. அவர்களும் அவனைப் போலவே பிடிபட்டவர்கள்தான். லேசாய் சோர்வு வந்தது. முதலில் இருந்த படபடப்பு தணிந்திருந்தது. பேசாமல் அவனும் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரம் ஆக ஆக அடுத்து பிடிபடப் போவது யார் என்கிற ஆர்வம் கூடிவிட்டது.

ரோட்டில் சைக்கிளின் நடமாட்டம் குறைந்துவிட்டது. போலீஸ்காரர்கள் ரெண்டு பேரும் திரும்பி,

“இங்க வாங்க... எல்லோரும் அட்ரஸ் குடுத்துட்டு போங்க... காலைல வெஸ்ட் ஸ்டேஷன்ல வந்து ஆஜராகணும்...

தெரிஞ்சிதா...”

அவன் தயங்கி நின்றான். அவனுக்கு முன்னாலும் பின்னாலும் வந்தவர்கள் அட்ரஸ் கொடுத்துவிட்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். அவன் கடைசியில் போய் நின்றான்.

“சார் லைட் எரியுது... வயர் விட்ருந்துச்சு... அதை கவனிக்கலை சார். இந்த ஒரு தடவை...”

“அட்ரஸ் கொடுத்துட்டு சைக்கிளை எடுத்துட்டுப் போறியா இல்ல... காலைல கோர்ட்டுல வந்து எடுத்துக்கறியா... என்ன செய்றே...”

அவன் அட்ரசைக் கொடுத்துவிட்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு நேரே மாரிச்சாமியிடம் விஷயத்தைச் சொன்னான். உடனே மாரிச்சாமி,

“இதுக்குத்தான் நான் யார்ட்டயும் சைக்கிளே கொடுக்கறதில்லை...”

இதைக் கேட்டதும் குபுக்கென அழுகை வந்துவிட்டது. தலையைக் குனிந்துகொண்டான்.

“கரெக்ட் அட்ரஸ் கொடுத்தியா?”

“ம்...”

“ஏண்டா ஏதாச்சும் ஒரு அட்ரஸைக் கொடுத்துட்டு வர வேண்டியதான... அவங்களுக்கென்ன தெரியவாபோது.”

அவனுக்கு பெரிய சங்கடமாக இருந்தது. தனக்குக் கொஞ்சங்கூட சாமர்த்தியம் இல்லை என்று நினைத்தான். அதனால்தான் அவனுக்கே மாறி மாறி கஷ்டங்கள் வந்து கொண்டிருந்தன என்றும் இந்த நேரத்தில் நினைத்தது துரதிருஷ்டமானது. மெலிந்து குச்சியாய் வெளுத்துப் போயிருந்த அவனை யாரும் ஒரு மனுசனாய் மதிக்கவில்லை. நான்கு வருடங்களுக்கும் மேல் வேலைக்காக இன்னமும் பரீட்சைகளும், இண்டர்வியூக்களும் போய்க்கொண்டிருக்கிற அவனுக்கு எந்த விதத்திலும் அதிர்ஷ்டம் இல்லை. இல்லாவிட்டால், அவனுடன் படித்த செண்பகராஜ் சிங்கணன் எல்லோரும் வேலைக்குப் போய் கல்யாணம் முடித்து விட்டார்கள். அவனுக்கு, அப்பாவின் அதிருப்தியான முகச்சுளிப்பும், அம்மாவின் சோகை பிடித்து வெளுத்த சோகமான முகமும், அண்ணனின் இளக்காரமான வார்த்தைகளும், தம்பிமாரின் அலட்சியமும்தான் கிடைத்த அனுபவங்கள். ரெண்டு வருடங்களாக அவனைக் காதலிப்பதாகச் சொன்ன வசந்தா இப்போது முகத்தைத் திருப்பிக் கொண்டாள். இப்போது அவளுடன் டியூட்டோரியலில் வேலை பார்க்கிற கைலாசத்துடன் பழகுகிறாள். அதுமட்டுமல்ல. அவனைப் பார்க்கிறபோது ‘ஒட்டடைக் குச்சி’ என்று கிண்டல் பண்ணுகிறாள்.

அவன் தெருவிலே நடமாட்டத்தைக் குறைத்துக் கொண்டான். வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தான். சர்வீஸ் கமிஷன் புஸ்தகங்களாக வாங்கி திரும்பத் திரும்பப் படித்தான், ஒரு வெறியுடன்.

அன்று தெய்வசிகாமணி மதுரையிலிருந்து புதுசாய் ஒரு புத்தகம் வாங்கி வந்து படித்துக் கொண்டிருப்பதாய் சொன்னான். அதை வாங்கத்தான் புறப்பட்டுப் போனான்.

காலையில் போயிருக்கலாம் அவனைத்தான் துரதிருஷ்டம் பிடறியில் கை வைத்துத் தள்ளுகிறது. அவனுக்கு கண்களில் நீர் தளும்பிற்று. மனசு நீராகிவிட்டதுபோல உணர்ந்தான். தொட்டால் உடைந்துவிடும். அவன் முகத்தைப் பார்த்துத்தானோ என்னவோ மாரிச்சாமி இறங்கிய குரலில்,

“காலைல ஸ்டேஷனுக்குப் போயிப் பாரு... அம்பது ரூபா ஃபைன் கட்டச் சொல்வான்னு நெனக்கிறேன்” என்றவன் ஒரு கணம் கழித்து,

“சரி பார்க்கலாம்” என்று சொல்லிவிட்டு வீட்டுக்குப் போய்விட்டான்.

அவன் வீட்டை நோக்கி நடந்தான், மனசில் வெறுமை. ஏதுமில்லாத

உணர்வு, யாரிடமாவது அழவேண்டும் போல, மனசு விட்டு கதறி அழவேண்டும். அவன் எல்லா விஷயங்களிலும் அவமானப்பட நேர்கிறதன் காரணத்தைக் கேட்டு அழவேண்டும். இப்போது அம்பது ரூபாய் வேண்டும். வீட்டில் சொல்ல முடியாது. தெரிந்தால் வீட்டில் இருக்க நீதமிருக்காது. வேறு யாரிடம் என்ன சொல்லி புரட்ட. யார் தருவார்கள் அவனுக்கு. நேற்று அப்பா ரயில்வே சர்வீஸ் கமிஷனுக்கு தபால் அனுப்ப கொடுத்த இருபது ரூபாய் இருக்கிறது. அதை வைத்துத்தான் ஏதாவது செய்ய வேண்டும்.

எழுந்து உட்கார்ந்தவன் மாறி மாறி தலைமுடியைக் கோதி விட்டான். பல் தேய்த்துக் குளித்துவிட்டு சட்டைப் பையில் இருபது ரூபாயை எடுத்து வைத்துக் கொண்டு புறப்பட்டான். போலீஸ் ஸ்டேஷன் கட்டடம் கண்ணுக்குத் தெரிய ஆரம்பித்ததுமே மனசு படபடவென்று அடித்தது. லேசான நடுக்கம் உடலெங்கும் பரவியது. சிவப்பு கலரில் கட்டம் கட்டமாக வரைந்த அந்தக் கட்டடம் எப்போதுமே பயத்தை ஏற்படுத்தியது. அருகில் நெருங்க நெருங்க வயிற்றைக் கலக்கியது. போலீஸ் ஸ்டேஷனுக்கு வெளியே யாரையும் காணவில்லை. அவனைப் பிடித்த போலீஸ்காரரின் முகத்தை ஞாபகப்படுத்தினான். நரை கலந்த பெரிய மீசைதான் முதலில் நினைவுக்கு வந்தது.

அவன் எதிரே இருந்த வேப்பமரத்தின் கீழே நின்றான். உள்ளே போக மனசு வரவில்லை. அந்தப் பிரதேசம் மயான அமைதியுடன் இருந்தது. இன்னும் வெயில் வராமல் மூடாக்காய் இருந்தது. காக்கைகளின் கரைச்சல் அலறலாய்க் கேட்டது.

அப்போதுதான் அந்த போலீஸ்காரர் சைக்கிளில் வந்து இறங்கினார். அவன் ஓடிப்போய் அவர் முன்னால் நின்று விஷ் பண்ணினான். அவர் வெறுமனே தலையை ஆட்டிவிட்டு அவனை ஞாபகமில்லாத மாதிரி “என்ன” என்றார்.

அவன், “சைக்கிள்...”

“மத்தவங்களயெல்லாம் எங்க...”

“தெரியாது சார்...”

அவர் அவருடைய சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு விட்டு ஸ்டேஷனுக்குள் படியேறினார். அவன் பின்னாலேயே போய்க்கொண்டே,

“படிச்சு முடிச்சு அஞ்சு வருஷமாச்சி சார். இன்னும் வேல கெடைக்கல சார். வீட்ல சோறு போடறதே பெரிய விஷயம். இதில கோர்ட்

பைன்னா, வீட்டை விட்டு துரத்திடுவாங்க சார். சைக்கிள் கூட என்னோடது இல்லை. வேறொருத்தர்கிட்டே வாங்கிட்டு வந்தது. நீங்கதான் தயவு செஞ்சி இந்த தடவை மட்டும் விட்றணும் சார் ப்ளீஸ். சர்வீஸ் கமிஷன் போடறதுக்காக வைச்சிருந்த பணம் சார். இத வைச்சிக்கிட்டு என்ன விட்ருங்க சார்... சார்...”

அவன் குரல் தழுதழுத்தது. ஒருகணம் முன்பின் தெரியாதவர் முன்னால் அம்மணமாய் நிற்கிற மாதிரி அவமானம் பிடுங்கியது. அவன் தலையைக் குனிந்து கொண்டான். கண்ணீரை அடக்க சிரமப்பட்டான். அவர் ஒரு தடவை அவனை ஏறிட்டுப் பார்த்தார்! அவர் முகம் இளகியிருந்தது.

“என்ன படிச்சிருக்க...”

“பி.எஸ்.ஸி...”

'பரீட்சையெல்லாம் எழுதறியா...”

“எழுதறேன் சார்...”

ஒரு கணம் பேசாமல் நின்றார். எதிரேயிருந்த வேப்பமரத்தை வெறித்துப் பார்த்தவரின் கண்களில் என்ன தெரிந்ததோ, இரக்கத்துடன் அவனைப் பார்த்து,

“நீ போய் அந்த ஆளுக்கு பத்து இட்லி மட்டும் வாங்கிக் கொடுத்துட்டுப் போ. சீக்கிரம் வேலைக்குப் போற வழியப்பாரு...”

குரல் இழைந்திருந்தது. அவர் கைகாட்டிய திசையில் கறுப்பாய் ஒரு ஆள் முட்டங் கால்களைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். உடனே திரும்பி,

“ரொம்ப தேங்ஸ் சார்...” என்று சொல்லிவிட்டு ஹோட்டலைத் தேடிப் போனான். போய்க் கொண்டிருக்கும்போது அவனுக்குத் திடீரென்று சற்று நேரத்திற்கு முன்னால் பார்த்த போலீஸ்காரரின் முகபாவம் நினைவுக்கு வர அவருக்கும் அவனைப் போலவே ஒரு பையன் வேலை தேடிக் கொண்டிருக்கலாமோ என்று யோசித்தான். உடனே நீண்ட பெருமூச்சு வந்தது.

16. வழி தேடி

கடைசியில் ஒரு வழியாக சுந்தரிக்குக் கல்யாணம் நிச்சய மானது. அடுத்த மாதத்திலேயே கல்யாணத்தை வைத்துவிட வேண்டும் என்று மாப்பிள்ளை வீட்டில் சொல்லி விட்டார்கள். மாப்பிள்ளை மிலிட்டரியில் இருக்கிறார். லீவுக்குள் கல்யாணம் முடிக்க வேண்டும் என்ற அவசரம். பரமசிவம் பிள்ளைக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. ஒரு மாசத்திற்குள் என்றால் எவ்வளவு பாடு இருக்கிறது. ஆனாலும் சம்மதித்துவிட்டார். சங்கரன்கோயில் மச்சினப் பிள்ளை கோவிந்தனைக் கூப்பிட்டால் எல்லாம் முடிந்துவிடும். ஆள் அவ்வளவு சூட்டிகை. அதோடு இந்தச் சிரமங்களைக்கூட தாங்கிக் கொள்ளலாம். ஆனால், சமைஞ்ச கொமரியை வீட்டில் வைத்துக் கொண்டிருக்கிற கஷ்டம் சகிக்க முடியவில்லை.

சுந்தரியும் பெரியவளாகி பத்து வருஷங்கள் கண் மூடித் திறப்பதைப்போல ஓடி விடவில்லை. மெல்ல நிதானமாக சுந்தரியின் மனசிலும் உடலிலும் தழும்புகளை விட்டுப் போயிருந்தன. இதற்குள் எத்தனை மாப்பிள்ளை வீட்டார்கள்? எத்தனை பேர் நிச்சயம் வரை வந்து போனார்கள். ஒவ்வொரு முறை பெண் பார்க்கிறபோதும் சரி, எப்படியும் இது முடிந்துவிட வேண்டும், முடிந்துவிடும் என்று சுந்தரி நினைப்பாள். எல்லாக் கடவுள்களையும் பிரார்த்திப்பாள். தினமும் துர்க்கை ஸ்தோத்திரம் படிப்பாள். வருஷம் தவறாமல் மார்கழி மாதக் கடுங்குளிரில் எழுந்து செல்வி எங்கிருந்தோ பறித்து வந்த பூசணிப்பூவை மாட்டுச் சாணியில் வைத்து கோலத்தின் நடுவில் வைப்பாள். அந்தக் குளிர் காற்றில் நடுங்கிக் கொண்டே ஆண்டாள் திருப்பாவையை முணுமுணுப்பாள். கௌரி நோன்பை பக்தியுடன் கொண்டாடினாள். அவளுக்கும் இவை எவற்றின் மீதும் சிரத்தையில்லாத ஒரு வசந்தகாலம் இருந்தது. அந்த ரவிச்சந்திரனுக்கு இப்போது ரெண்டு குழந்தைகள் இருக்கின்றன. அது எப்போதோ அவளைக் கடந்து போய்விட்டது.

ஒவ்வொரு முறை பெண் பார்க்க வந்து போனபிறகு சுந்தரி ஒவ்வொரு வரைப் பற்றியும் மனசுக்குள் சித்திரம் போட்டு அவளுடைய குணாதிசயங்களைப் புரிந்து கொண்டவள் போல சில நாட்களுக்கு லேசாய் தலையாட்டிக் கொண்டே யோசிப்பாள். அவளும் அம்மாவும் தனியாயிருக்கிற நேரங்களில்,

“ஏம்மா, அந்த சிவப்பு கல்லுல பேசரி போட்டிருந்தாளே, அவதான் நாத்தனாரா என்ன நீட்டு நீட்டுதா, அவகிட்ட ரொம்ப ஜாக்ரதையாக

இருக்கணும்மா...”

அம்மா அவளைப் பார்த்துச் சோகமாய் சிரிப்பாள். சில நாட்கள் கழித்து அப்பா திடீரென்று உம்மென்று இருப்பார். சகட்டுமேனிக்கு எல்லோரிடமும் எரிந்து விழுவார்.

“பெத்து வச்சிருக்கா பாரு எல்லாம் பொட்டக் கழுதகளா ஒரு பைசாவுக்கு பிரயோசனமுண்டா... இருக்கிறதயெல்லாம் வாரிச் சுருட்டத்தான் பொறந்திருக்குக. ஒண்ணைக் கரையேத்தவே இந்தப் பாடா இருக்கு ம்ஹூம்...”

பெருமூச்சு விடுவார்.

அவள் புரிந்து கொள்வாள். அவள் மட்டுமல்ல. அம்மா ஜானகி, சரசுவதி, செல்வி எல்லோருக்கும் புரிந்துவிடும். சுந்தரி பொங்கி வந்த விம்மலை அப்படியே நெஞ்சுக்குள் புதைத்து விடுவாள். அப்புறம் ஒரு வாரமோ ரெண்டு மாசமோ கழித்து மறுபடியும் பெண் பார்க்க வருவார்கள். சுந்தரியின் மனசில் ஈரம் வற்றிப் போய்விட்டது. நெஞ்சு கூடு விழ ஆரம்பித்தது. இத்துப்போன மனசை கண்ணில் பிடித்து வைத்திருந்தாள். இப்போது கல்யாணம் முடிவானதை அப்பா வந்து சொன்ன நேரம் இருட்டுகிற நேரம். பொங்கின ஏதோ ஒரு உணர்வை மறைக்க, மெலிந்து நீண்ட கைகளால், பாத்திரங்கள் தேய்த்துத் தேய்த்து காய்ப்பேறி கோடுகள் விழுந்து போன உள்ளங்கை படபடக்க கண்ணில் நீர் முட்ட குத்துவிளக்கை ஏற்றினாள்.

அப்பாவின் முகத்தில் உடனே பரபரப்பு வந்து ஒட்டிக் கொண்டது. வெளியே கிளம்பி விட்டார். கலியாண வேலைகளை ஆரம்பிக்க அம்மா பெரிய நிம்மதியுடன் சுந்தரியைப் பார்த்தாள். ஜானகியும், சரசுவும் அப்போதுதான் படிக்க உட்கார்ந்தவர்கள் எழுந்து சிரித்துக் கொண்டே அக்காவின் கையைப் பிடித்துக் கொண்டார்கள். அதற்குள் தகவல் வளவு பூராவுக்கும் காற்று போல போய்விட்டது. எங்கேயோ விளையாடிக் கொண்டிருந்த செல்வி மூச்சிரைக்க ஓடிவந்து அக்காவின் மடியில் விழுந்தாள். அக்காவின் முகத்தை ஏந்திக் கொண்டு,

“சப்பை மூக்கா குண்டா இருந்தாரே, அவராக்கா நம்ம அத்தான்...”

அம்மா சத்தம் போட்டாள்.

“ஏய் கொரங்கு அப்படியெல்லாம் சொல்லக் கூடாது.”

உடனே செல்வி ரகசியமான மெல்லிய குரலில்,

“யெக்கா அவராக்கா நம்ம அத்தான்...”

அவள் தலையசைத்தாள். மனசில் எங்கிருந்தோ ஊற்று பொங்கின மாதிரி சந்தோஷம்! சிலிர்ப்பு, ஒரு புதிய கலகலப்பு ஒளியுடன் அந்த வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தது.

அதற்கப்புறம் அம்மா அவளை வேலை செய்ய விடவில்லை. ஜானகியும் சரசுவதியும் கூட ஏதோ இந்தக் காரியத்தின் முக்கியத்துவம் தெரியும் என்பதுபோல, அவர்களே அக்காளுக்கு தினசரி விதம்விதமாக அலங்காரங்கள் செய்தார்கள். அவளை இதுநாள் வரை இல்லாத அன்போடு பார்த்தார்கள். சுந்தரியும் இந்த வித்தியாசத்தை வீட்டின் ஒவ்வொரு அணுவிலும் உணர்ந்தாள். வீடு முழுவதும் ஒரு விநோதமான இனிய உணர்வு பரவியிருந்தது. அநேகமாக நாளில் முக்கால்வாசி நேரம் அவளைச் சுற்றியே காரியங்கள் நடந்தன. இந்த நேரத்தில் அவளுடன் ஒண்ணாப்பு படித்த எஸ்.வரலட்சுமியைப் பார்த்தது ரொம்ப சந்தோஷமாய் இருந்தது. அவள் ஒரு குழந்தை வைத்திருந்தாள். ரெண்டு பேரும் ரொம்ப நேரத்துக்குப் பேசிக்கிட்டே இருந்தார்கள். பேசப் பேசத் தீரவில்லை!

சங்கரங்கோயில் கோவிந்த மாமாவும் வந்துவிட்டார். அவ்வளவுதான். வீடு களை கட்டிவிட்டது. ஒரே சிரிப்பும் கூத்தும்தான். சுந்தரி இதுவரை கவனியாத எவ்வளவோ விஷயங்களை கவனிக்க ஆரம்பித்தாள். அவளுக்குப் பிடித்தமான பொருள்களை எடுத்து தனியே வைத்தாள்.

“யெம்மா அங்க எப்படியெப்படி இருக்கோ தண்ணி ஊத்தி வைக்க ரெண்டு ஏனம் வேண்டாமா ஒரு செப்பானையும், கொப்பரையும் வேணும்மா...”

கொஞ்சினாள். அம்மாவும் சரிசரியென்று தலையாட்டினாள். சுந்தரிக்கு என்னென்ன வேணுமோ எல்லாத்தையும் வாங்கிக் கொடுத்தாள். கல்யாண விஷயத்தில் எதுவும் குறை இருக்கக் கூடாது. கட்டையோ நெட்டையோ கஷ்டங்களை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். தினசரி வீட்டுக்கு புதுசு புதுசாய் சாமான்கள் வந்து கொண்டேயிருந்தன. ஜானகிக்கும், செல்விக்கும் ஆச்சரியமாய் இருந்தது. அவர்கள் எல்லாவற்றையும் தொட்டுப் பார்த்தார்கள். அப்போதெல்லாம் சுந்தரி,

“ஏட்டி இப்ப அதயேன் எடுக்கிற... வேணும்னா என்ட்ட கேளேன் நான் காமிக்கிறேன். அழுக்காக்கிராதே...”

அப்பாவும், கோவிந்த மாமாவும் பம்பரமாய் சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

தவசுப்பிள்ளை, பந்தல் மேளம், வாழை, பால், விறகு என்று தினமும் ராத்திரி உட்கார்ந்து எல்லாவற்றையும் கணக்கு பார்த்து எழுதி இன்னும்

என்னென்ன காரியங்கள் என்று குறித்து வைப்பார்கள். திடீர் திடீரென ஏதாவது ஒன்று முளைத்துக் கொண்டேயிருக்கும். வீட்டில் எல்லோருக்கும் ஆச்சரியமும் பிரமிப்புமாக இருக்கும். கல்யாணம் என்றால் இவ்வளவு காரியங்களா!

சொன்ன பிரகாரம் காலையில் ஆசாரி வந்துவிட்டுப் போனார். பாலீஷ் போடக் கொடுத்திருந்த பழைய நகைகளையும், புதுசாய் செய்யக் கொடுத்திருந்த ரெட்டை வடம் முருக்குமாலையையும் சுந்தரிக்குப் போட்டாள். அவளுக்கே பெருமை தாங்காமல் முகத்தைக் கைகளால் தடவி திருஷ்டி கழித்தாள். செல்வி, அக்காளிடமிருந்து ஒவ்வொன்றாய் வாங்கி கழுத்தில் போட்டாள். எல்லாவற்றையும் கொண்டு வந்து கொடுத்தார் அம்மா. எல்லாவற்றையும் போட்டுக் கொண்டு அம்மாவிடம்,

“நல்லாருக்காம்மா...”

பல் தெரிய சிரித்துக்கொண்டே கேட்டாள். உடனே சுந்தரி,

“எல்லாம் எனக்குத்தான் ஒனக்கு அப்பா பிளாஸ்டிக்தான் வாங்கிப் போடுவாங்க.” என்று சிரித்துக் கொண்டே சொன்னாள். செல்வி அப்படியே சுந்தரியை முறைத்துப் பார்த்தாள். அப்புறம் மெல்ல உதட்டைப் பிதுக்கினாள். சுந்தரி அதைக் கவனிக்காமல் போய் நகையைக் கழட்டப் போனாள். உடனே பெரிய்ய சத்தத்துடன் அழ ஆரம்பித்தாள்.

சுந்தரி,

“சரி... சரி... கொஞ்ச நேரம் போட்டிரு போட்டிரு...” அப்படியும் அழுகை நிற்கவில்லை. அம்மா அடுக்களையிலிருந்து வந்து,

“என்னட்டி மொளைக்கதுக்குள்ளே செல்லம்... எல்லாம் அவுக அப்பா எளக்காரம். நாலு சாத்து சாத்தினா குருடியும் கொடம் கொண்டுட்டு தண்ணிக்கு ஓடுவா...”

அந்தச் சமயத்தில் அப்பாவும் உள்ளே வந்தவர்,

“என்ன என்ன சத்தம்...”

“என்ன இழவு வந்ததோ ஒப்பாரி வைக்குது அப்பத பிடிச்சி...”

அப்பா செல்விகிட்டே போய்,

“என்னம்மா என்ன வேணும் செல்விக் கண்ணுக்கு...” அவள் அப்பாவின் மேல் முகத்தைப் புதைத்துக் கொண்டே,

“நீ எல்லாத்தையும் அக்காளுக்கே கொடுத்திருவே. எங்களுக்கெல்லாம் பிளாஸ்டிக்தான்னு அக்கா சொல்றா. அப்புறம் எங்களுக்கு கல்யாணமே முடியாது.”

மறுபடியும் ஈளக்கம் போட்டாள்.

“அட கிறுக்கு இதுக்குத்தானா அழுதே” சிரிப்புடன் அப்பா சொன்னாலும் உடனே சிரிப்பு மங்கி அதிர்ந்து போய் அப்படியே உட்கார்ந்து விட்டார். யாரும் பேசவேயில்லை. ரொம்ப நேரம் கழித்துத்தான் அப்பா ஒரு பெரிய பெருமூச்சுடன் எழுந்தார். அந்தப் பெருமூச்சு சுந்தரியின் கல்யாணத்திற்கு அப்புறமும் வீட்டிற்குள்ளே சுற்றிக் கொண்டேயிருந்தது.

17. புறாக்களும் தண்டவாளங்களும்

காலையில் மணி ஏழாகியும் இன்னும் சூரியன் வரவில்லை. மெல்லிய பனி, காற்றுபோல இறங்கிக் கொண்டிருந்தது. கொஞ்ச தூரத்திற்கு மேல் எதுவும் தெரியவில்லை. பனிப்புகை அடர்த்தியாய் மிதந்தலைந்து கொண்டிருந்தது. குளிர் உடம்பை நடுக்க சேலைத் தலைப்பை முகத்தைச் சுற்றி இறுக்கிக் கொண்டு நின்றாள், பார்வதியம்மாள். ரயில்வே ஸ்டேஷனில் கூட்டம் அதிகமில்லை. பனியின் ஈரம் பொதுமிய தரை, ஏற்கனவே பித்த வெடிப்பு விழுந்த பாதங்களில் நமைச்சலை ஏற்படுத்தியது. அவள் பற்களை இறுகக் கடித்துக் கொண்டு நின்றாள். கொஞ்ச நேரத்திற்கு முன்னால்தான் காட்பாடி வண்டிக்கு மணி அடித்தார்கள். பக்கத்தில் இருந்த வேப்பமரங்களிலிருந்து மைனாக்களின் இரைச்சலும், இடையிடையே காக்கைகளின் அதட்டலான குரலும் கேட்டது. வேப்பமர இலைகளிலிருந்து பனி கொட்டிக் கொண்டிருந்தது. அங்கே இருந்த கொஞ்சம் பிரயாணிகளும் ரொம்ப விட்டேத்தியாய் ஏதோ சும்மா காலாற நடப்பதற்கு இங்கே வந்தமாதிரி நடை பழகிக் கொண்டிருந்தார்கள். ரயில்வே போர்ட்டர் அரைக்கண் மூடி ஆனந்தமாய் பீடியைப் புகைத்துக் கொண்டிருந்தான். பார்வதியம்மாள் வண்டி வரும் திசை நோக்கிய பார்வையை தூரச் செலுத்தியிருந்தாள்.

பால்ய காலத்தில் தலைமுடி நிறைய இருந்ததற்கான அடையாளங்களை விட்டுச் சென்றிருக்கும் எண்ணெயே சமீபத்தில் காணாத தலையும், துவைத்து கசங்கலான சேலையும், முகம் முழுவதும் சிறுத்து, முக்கியமாக சுருக்கம் நிறைய இருந்த சாந்தமான கண்களில் நிராசையும் ஒருவித எதிர்பார்ப்பும் தெரிந்தது. அவளுடைய மகன் தர்மு இந்த வண்டியில்தான் வருவான். அவனை மாதாமாதம் இதே தேதியில் இந்த நேரத்தில் சந்திப்பது பழக்கமாகிவிட்டது. சூரியன் மெல்ல முகம் காட்டினான். சுற்றிலும் இருந்த காற்று கதகதப்பாகியது. தண்டவாளங்களுக்குப் பக்கத்தில் எங்கிருந்தோ கூட்டமாய் புறாக்கள் வந்திறங்கின. அவள் திரும்பி அந்தப் புறாக்களைப் பார்த்தாள். அவளுக்குப் புறாவை ரொம்பப் பிடிக்கும். குதூகலமான அதன் கண்களும் கெத்தான நடைபழகலும் பட்டுப்போன்ற அதன் வழவழப்பான இறகுகளும் அவளுக்கு எப்போதும் தர்முவின் அப்பா எம்பெருமாளையே ஞாபகப்படுத்தும். எம்பெருமாளுக்கு புறாக்கள் பிள்ளைகளுக்குமேல். விதவிதமான புறாக்களை எங்கிருந்தோ பிடித்து வந்து வளர்ப்பார். முறுக்கிவிட்ட மீசையும், கடுகடுத்த பழுப்புநிறக் கண்களும் கொண்ட எம்பெருமாள் பார்வதியம்மாளையும் அந்த

புறாக்களை வைத்து வளர்ப்பதுபோல வளர்த்து வந்தார். அவளும் அவர் கைகளுக்குள் எந்த பயமுமில்லாமல் அலைந்து திரிந்தாள். அவருக்கு சந்தோஷம் பெருகின நேரங்களில் எம்பெருமாள் அவளை அப்படித்தான் கூப்பிடுவார்; "என் மயில்புறாவே!"

யாரோ விட்டெறிந்த கல், புறாக்களை சிதறடித்தது. அவள் திரும்பிப் பார்த்தாள். ஒரு சின்னப் பையன் புறாக்கள் அலைக்கலைந்து பறப்பதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான். அவளுக்கு ஏனோ தர்முவின் ஞாபகம் வந்தது.

தூரத்தில் ரயிலின் விசில் சத்தம் கூகூவென்று அலறியது. பார்வதியம்மாள் கொஞ்சம் முன்னால் வந்து நின்றாள். இடுங்கிப் போன கண்களில் ஒருவித பரபரப்பு வந்திருந்தது. இன்னமும் அவளுக்கு மூச்சுவிட சற்று சிரமமாக இருந்தது. ஆனால், வேறு வழியில்லை. ரயில் பெரிய சத்தத்துடன் உள்ளே வந்தது. அவள் அவளைக் கடக்கும் ஒவ்வொரு ஜன்னலையும் உற்றுப் பார்த்தாள். யாருடைய முகமும் தெளிவாய் தெரியவில்லை. அந்த நிமிஷத்தில் ஸ்டேஷன் உயிர் பெற்று பரபரப்பாய் இயங்கியது. ஆட்கள் வண்டியிலிருந்து இறங்குவதும் ஏறுவதுமாய் இருந்தார்கள். எங்கிருந்தோ ஒருவன் வண்டியை தவற விட்டு விடுவோமோ என்கிற தவிப்பில் தலைதெறிக்க ஓடிவந்து கொண்டிருந்தான். ரயில்வே போர்ட்டர் வண்டியிலிருந்து கடமுடவென சத்தத்துடன் ஏதேதோ சாமான்களை பிளாட்பாரத்தில் எறிந்து கொண்டிருந்தான். பார்வதியம்மாள் அருகில் வருகிற ஒவ்வொருவரையும் கூர்ந்து பார்த்தாள். அவளுக்கு தர்மு தென்படவில்லை. ஒருகணம் நெஞ்சு விட்டுத்தான் போயிற்று! அப்போது பின்னாலிருந்து 'ந்தா' என்ற சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

தர்மு நின்று கொண்டிருந்தான். அவள் அவனுக்குப் பக்கத்தில் போனாள். அவன் சட்டைப் பையிலிருந்து பணத்தை எடுத்து எண்ணி அவள் கையில் கொடுத்தான். அவள் அதை வாங்கி உள்ளங்கையில் மடக்கி வைத்துக்கொண்டு,

"பிள்ளைகள் எல்லாம் சௌக்கியமா?"

"ம்ம்... ம்ம்..."

அவன் அவளைப் பார்க்காமலேயே எங்கோ பார்த்துக்கொண்டு சொன்னான். இப்போது லேசாய் வெயில் அடிக்க ஆரம்பித்து இருந்தது. அவன் அவள் முகத்தைத் தவிர்த்து இந்தப் பக்கமாய் திரும்பினபோது

ஒரு குழந்தையை பிளாட்பாரத்திலேயே வெளிக்கிருக்க வைத்துக் கொண்டிருந்தாள், ஒரு பெண். குழந்தை கையால் அதை எடுப்பதைப் பார்த்தும் சும்மா நின்று கொண்டிருந்தாள். அவன் முகத்தைச் சுளித்தான். மூக்கு விடைக்க பெரிதாய் மூச்சை இழுத்தபோது முகம் விகாரமாகியது. பார்வதியம்மாள் அதை கவனிக்காமல்,

“சரோஜா எப்படி இருக்கா...”

“எல்லாம் நல்லாத்தான் இருக்காக, முதல்ல ஒனக்கு பணமே கொடுக்கக் கூடாதுன்னு நெனச்சேன்...” என்று சொல்லி நிறுத்திக் கொண்டான்.

சத்தமில்லாமல் ஆனால் முழு வெறுப்புடன் சொன்னான். அவள் எதுவும் புரியாமல் அவனை நிமிர்ந்து பார்த்தாள். கொஞ்ச நேரம் ரெண்டு பேரும் பேசவில்லை. அவன் பேண்ட் பாக்கெட்டில் விட்டிருந்த கைகளை வெளியே எடுத்தான். வேகமாய் கை விரல்களில் சொடக்குப் போட்டான். மூக்கைப் பலமாய் உறிஞ்சினான். அப்புறம் திடீரென்று அவளைப் பார்த்து,

“என்ன நீ ஊரெல்லாம் சொல்லிட்டு திரியுத...”

“எம்மகன் கொடுக்கிற பணம் வாய்க்கும் காணல வயித்துக்கும் காணலன்னு... ஊரெல்லாம் புலம்பியிருக்க... ஊர்ப்பட்டவனெல்லாம் என்னை வந்து கேக்கான்.”

“நான் யார்ட்ட சொன்னேன்...?”

“இதப்பாரு என்னால இவ்வளதான் தரமுடியும் எனக்கிருக்கிற சங்கடத்தில இதே பெரிசு...”

“ஆமா பெத்து வளத்ததுக்கு இது பெரிசுதாம்பா... பெரிசுதான்.”

“இதுல ஒண்ணும் கொறச்சல் இல்ல... போனமாசம் அண்ணன் வந்து ஒரே அழுகையா அழுது அம்பது ரூவா வாங்கிட்டுப் போனான். போன வாரம் கரிசகுளம் சித்தப்பா குடும்பத்தோட நாலுநாள் வந்துட்டுப் போனாக... இதுல பிள்ளைகள பள்ளிக்கூடத்துக்கு அனுப்பணும்... நோய் நொடி பாக்கணும். ஒனக்கென்ன தெரியும் நாம்படுற கஷ்டம்...”

“யாருக்குத்தாம்பா இல்ல கஷ்டம்... ஒனக்கு இஷ்டமிருந்தா கொடு... ஏதா இந்தக் கட்டை உசிரோடிருக்கிற வரைக்கும்... ஒங்கப்பா பேரு கெட்டுடக் கூடாதுன்னு பல்லக் கடிச்சிட்டிருக்கேன். கூட ஒரு பொட்டக் கழுத வேற கடந்து தட்டழியுது... இல்லன்னா ஒங்க தயவை எதிர்பார்த்திருக்க மாட்டேன்... அவ்வளவுதான் அப்புறம் ஒன்னிஷ்டம்...”

அவள் கண்களில் கண்ணீர். சேலைத் தலைப்பை இழுத்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். யாரோ ஒரு ஆள் அவர்களை நோக்கி எதுவோ கேட்க வந்தவர் ரெண்டு பேரும் நிற்கிற நிலைமையைப் பார்த்ததும் வேறெதோ தோன்றியது போலவே திரும்பித் திரும்பி பார்த்துக்கொண்டே போனார். ரயில் காரலான குரலில் கூவியது.

“சரி சரி அழ ஆரம்பிச்சிராத... அண்ணனப் பாத்தா அடிக்கடி அங்கே வரவேண்டான்னு சொல்லு. தாமரை எப்படி இருக்கா... நல்ல படிக்குதா...”

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டே தலையாட்டினாள். ரயில் மெல்ல நகர ஆரம்பித்தது. அவன் அவசர அவசரமாய் பையிலிருந்து இருநூறு ரூபாயை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

“அந்தப் பிள்ளைக்கு ஏதாச்சும் வாங்கிக் கொடு. போய்ட்டு வரேன்...” என்று சொல்லிக் கொண்டே நடக்க ஆரம்பித்தான். அவள் திடீரென நினைப்பு வந்ததுபோல, “அடுத்த மாசம் அவளுக்கு பரீட்சை... பணம் கட்டணுமாம்” என்று கத்தினாள். அவன் ஓடிக் கொண்டே ரயிலில் ஏறிக் கொண்டான். அவள் இங்கு இருந்தபடியே அவன் தாவி ஏறும்போது,

“பாத்துப்பா... பாத்து... பாத்து...” அவள் சொல்வது அவனுக்குக் கேட்கும் என்பதுபோல சொன்னாள். அவன் படியில் நின்று அவளைப் பார்த்து கையை ஆட்டிவிட்டு உள்ளே போய்விட்டான். அவள் பதிலுக்கு கை ஆட்டியதை அவன் பார்க்கவில்லை. அவள் ரயில் மறையும்வரை நின்றிருந்துவிட்டு, அப்புறம் வாய்க்குள் ஏதோ முணுமுணுத்தபடி திரும்பி நடந்தாள்.

18. அன்புள்ள சித்திக்கு

நேற்று விஜயா சித்தியிடமிருந்து கடிதம் வந்திருந்தது. நான் தமிழ்நாட்டின் வட கடைசியில் கவர்மெண்ட் வேலைக்குச் சேர்ந்த பிறகு வந்த முதல் கடிதம், அவளுடையது. எப்படியோ விசாரித்து என் விலாசத்திற்கு எழுதியிருக்கிறாள். கடிதத்தில் நாலே வரி. நாலும் என்னைப் பற்றித்தான். அவளைப் பற்றி செம்பா, மாரியம்மாளைப் பற்றி, சித்தப்பாவைப் பற்றி ஏதும் இல்லை. எவ்வளவு நாளாயிற்று சித்தியைப் பார்த்து.

இந்த மாதிரி மழை கொட்டுகிற ஒரு ராத்திரியில்தான் விஜயா சித்தி செம்பாவையும் மாரியம்மாளையும் கூட்டிக் கொண்டு சிவகாசிக்கு பஸ் ஏறினாள். இப்பொழுது செம்பாவும், மாரியம்மாளும் என்னைப் போல வளர்ந்து பெரிய கொமருகளாகயிருப்பார்கள். என் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் அவ்வளவாக என் சித்தியையும், முழுசுமாக என் சித்தப்பாவையும் பிடிக்காது. சித்தப்பா எந்த வேலையிலும் நிரந்தரம் கிடையாது. ஓர் நாள் ஹோட்டலில் சப்ளை செய்து கொண்டிருப்பார். மறுநாள் பலசரக்குக் கடையில் பொட்டலம் கட்டிக் கொண்டிருப்பார். இன்னொரு நாள் சைக்கிள் கடையில் பஞ்சர் பார்த்துக் கொண்டிருப்பார். குடும்பத்தைப் பற்றிக் கவலைப்பட்டதே இல்லை. குஷியான ஆள். எல்லாம் விஜயா சித்தி தலையில்தான் விடியும். அவள் ஊருக்கு வெளியே இருந்த ஒரு தீப்பெட்டியாபீசுக்கு பக்கத்தில் குறைந்த வாடகையில் ஒரு வீட்டை அமர்த்தினாள். செம்பாவையும், மாரியம்மாளையும் தீப்பெட்டியாபீசில் தீப்பெட்டிக் கட்டை அடுக்க அனுப்பினாள். காலையில் இட்லி அவித்து தீப்பெட்டியாபீஸ் முன்னால் வியாபாரம் செய்தாள். மீந்த நேரம் அவளும் குறுக்கொடிய உட்கார்ந்தே கட்டை அடுக்கினாள்.

கன்னிப் போயிருந்த சித்தியின் சிவந்த முகத்தில் வலது கண்ணுக்குக் கீழே இருந்த கறுப்பு மரு அவளுக்குத் தனி சாந்தத்தைக் கொடுத்தது. நான் ரொம்பச் சின்னப் பையனாயிருந்தபோது சித்தியின் மடியில் உட்கார்ந்து கொண்டு அவள் மருவையே தடவிப் பார்த்துக் கொண்டிருப்பேன். எப்பவாவது சித்தி செம்பாவையும், மாரியம்மாளையும் கூட்டிட்டு என் வீட்டுக்கு வருவாள். அநேகமாக அப்போதெல்லாம் அஞ்சோ, பத்தோ அம்மாவிடம் கேட்பாள். அது நிலைமை ரொம்ப மோசமான பிறகுதான் என்று நினைக்கிறேன். செம்பாவும், மாரியம்மாளும் அம்மா சாப்பாடு வைக்கும்போது “அவக் அவக்”கென்று தின்பார்கள். சித்தியின் முகம் சங்கடப்படும். ரொம்ப

வற்புறுத்தினால்தான் அவள் கொஞ்சம் சாப்பிடுவாள். அவள் பணம் கேட்பதற்குள் படுகிற சிரமம் இருக்கிறதே! ஏதேதோ பேசிக் கொண்டிருப்பாள். திடீரென நிறுத்தி பெருமுச்சு விடுவாள். கேட்டுவிட முயற்சிப்பாள். அம்மாவுக்கு ஒவ்வொரு தடவையும் இது தெரிந்தாலும், தெரியாத மாதிரி மணிக்கணக்கில் சித்தியைப் பற்றி, சித்தாப்பாவைப் பற்றி, சித்தப்பாவைக் கைக்குள் போட முடியாத சித்தியின் ஏமாளித்தனம் பற்றி பேசிக் கொண்டேயிருப்பாள். கடைசியில் சித்தி கேட்ட பிறகு இன்னும் கடுமையாக அறிவுரை சொல்வாள். சித்தி எல்லாவற்றையும் பொறுமையாக கண்ணீர் விட்டபடியே விரலில் அகப்பட்ட துரும்பை தரையில் தேய்த்தபடி கேட்டுக் கொண்டிருப்பாள்.

அப்பா ஆபீஸ் விட்டு வந்ததும் சொல்லுவாள். அதற்கு அப்பாவும்,

“அவ எதுக்கு வந்தா... இப்பிடி ரூவா கொடுத்துப் பழக்கப்படுத்தாதே.”

“என்ன செய்ய... கழுதக ரெண்டு நாள் சாப்பிடாம வந்து நிக்கிதுக. பாவமாவும் இருக்கு...” அம்மா பெருமூச்சு விடுவாள்.

அம்மாவும் நானும் மாதம் ஒரு தடவையாவது சித்தி வீட்டுக்குப் போவோம். எனக்கு சித்தி வீட்டுக்குப் போவது என்றால் ரொம்ப பிரியம். என்னைப் பார்த்ததும் சித்தி அப்படியே நெஞ்சோடு சேர்த்துக்கொள்வாள். அப்பொழுது அவள் சேலையில் இருந்து தீப்பெட்டி மெழுகின் புழுக்கமான வாடையும், கற்பூர வாடையும் கலந்து வரும். எனக்குக் கூச்சமாகவும், பெருமையாகவும் இருக்கும். அப்படியே மடியில் இருத்தி என் தலைமுடியை சும்மாவேனும் பிரித்துப் பிரித்து பேன் பார்த்துக் கொண்டிருப்பாள். அநேகமாக செம்பாவும் மாரியம்மாளும் தீப்பெட்டியாபீஸ் போயிருப்பார்கள். அப்படியே அவர்கள் சில சமயம் இருந்தாலும் ஏதும் பேசமாட்டார்கள். விளையாட வரமாட்டார்கள். தீப்பெட்டிக் கட்டை அடுக்கிக் கொண்டேயிருப்பார்கள் வீட்டிலும். செம்பாவாவது என்னை விட வயசு மூப்பு. மாரியம்மாளுக்கு என் வயசுதான். அவளும்கூட பெரிய மனுஷி மாதிரி இருப்பாள். ஆனால், அவர்கள் ரெண்டு பேரும் குசுகுசுவென்று சினிமாக் கதை சொல்லிக் கொண்டிருப்பார்கள். நான் அருகில் போனால் நிறுத்தி விடுவார்கள். அதனால் சித்தி கூடவே ஒட்டிக் கொள்வேன்.

சித்தி என்னை கூட்டிட்டு பலசரக்குக் கடைக்குப் போய் அங்கிருந்த தண்டியான முஸ்லிம்பாயிடம் கெஞ்சி மன்றாடி அரிசி, பருப்பு, புளி எல்லாம் வாங்கிக் கொண்டு வருவாள். மறக்காமல் எனக்கு ரெண்டு முறுக்கு ஒரு டீ வாங்கிக் கொடுப்பாள். என் வீட்டில் அம்மா வைக்கிற குழம்பு, கறிகளை விட ஒரு காயும் தொட்டுக்க இல்லாமல் விஜயா சித்தி

வைக்கிற குழம்பு அப்படியே மணக்கும்! நான் அம்மா அதட்டுவதன் விவரம் புரியாமல் ரெண்டு மூன்று முறை வாங்கிச் சாப்பிடுவேன்.

அப்புறம் புறப்படுகிற சமயம் அம்மா பணத்தைக் கேட்பாள். சித்தி ஏதோ சமாதானம் சொல்லுவாள். நான் சித்தப்பாவை ஒரு தடவை கூட வீட்டில் பார்க்கவில்லை. என் வீட்டிற்கும் வந்தது கிடையாது. எங்கேயாவது ரோட்டில் பார்த்தால்,

“என்னடா... ஒங்கப்பன் எப்படியிருக்கான்... பொண்டாட்டிக்கு ஒழுங்கா பயப்படறானா...” என்று கரகரத்த குரலில் கத்துவார். எனக்கு என்ன சொல்வதென்று தெரியாது. பேசாமல் வந்துவிடுவேன்.

நான் ஹைஸ்கூலில் சேர்ந்த பிறகு சித்தி வீட்டுக்குப் போவது குறைந்துவிட்டது. பள்ளிக்கூடம் ஒரு மைல் தூரத்திலிருந்தது. நானும் பலஹீனமாயிருந்ததால் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் பேருக்குப் படித்துவிட்டுத் தூங்கிவிடுவேன். அப்போது பள்ளிக்கூட லீவில் ஒரு நாள் அம்மா என்னை சித்தி வீட்டுக்குப் பணம் கேட்டு போய் வரச் சொன்னாள். எனக்கும் சித்தியைப் பார்க்க வேண்டும்போல் ஆசை. அம்மா பணம் கேட்டு வாங்கி வரச் சொன்னதைவிட சித்தியைப் பார்க்கிற ஆவல் மேலெழுந்து நின்றதால் அப்போது பணம் கேட்கிற விஷயத்தை பெரிய காரியமாய் நினைக்கவில்லை.

என்னைப் பார்த்தவுடன் சித்தியின் முகத்தில் சந்தோஷம் பொங்கியது.

“வாய்யா... என் ராசா... இப்பதான் சித்தியைப் பார்க்க நெனப்பு வந்ததா...” சிரித்துக்கொண்டே சொன்னாள். எனக்கு வெட்கமாக இருந்தது. சித்தி மெலிந்து ஓடாய் இருந்தாள்.

வீட்டில் ஏற்கனவே இருந்த ஒன்றிரண்டு பாத்திரங்களை இப்போது பார்க்க முடியவில்லை. சித்தி உள்ளே எதையோ போட்டு உருட்டிக்கொண்டே,

“அம்மால்லாம் சௌக்கியமா... நீ ஹைஸ்கூல் போறியா... ரொம்ப தூரமாடா கால் வலிக்குமே... அப்பாட்ட ஒரு சைக்கிள் கேக்கக்கூடாது. புள்ள என்னமாத்தான் இருக்கு... மெலிஞ்சு... கறுத்து...”

எனக்கு அந்த வீடும் சூழலும் புரிகிற விவரம் வந்திருந்ததால் அங்கே இருக்கவே ரொம்ப சிரமமாக இருந்தது. அப்போதுதான் அம்மா சொன்ன காரியத்தின் கஷ்டம் புரிந்தது. சித்தி ஒரு ஈய டம்ளரை எடுத்துக்கொண்டு வெளியே கிளம்பினாள். கட்டியிருந்த பழைய சீலை சாயம் போன நிலையில் இத்துப் போயிருந்தது. சித்தியின் கண்களிரண்டும் குழிக்குள் கிடந்தாலும், கன்ன எலும்புகளின் துருத்தல்

கூட என் சித்தியின் கண்களில் அளவற்று பொங்கிக் கொண்டிருந்த அன்பை, சாந்தத்தை ஏதும் செய்ய முடியவில்லை.

நான் எழுந்து அவள் கையைப் பிடித்துக்கொண்டே,

“எங்கே போறே... சித்தி...”

“சும்மா... இந்தா வாறேன்...”

அவள் எனக்கு டீ வாங்கி வரத்தான் கிளம்பினாள் என்று தெரியும். அவளிடம் கையில் பைசா கிடையாது. அவள் போய் டீக்கடைக் காரனிடம் எப்படியெல்லாம் மன்றாட வேண்டும் என்பதையும் என்னால் யோசிக்க முடிந்தது.

“நீ எங்கேயும் போக வேண்டாம்... இங்க இரு...” என்று கொஞ்சம் வலுவாகவே அவள் கையைப் பிடித்துக் கொண்டேன். அவள் அழுதாள். எனக்கும் கண் கலங்கி விட்டது. மெல்ல சீலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டே சாதாரணக் குரலில்.

“என்னடா... ராசா அம்மா ரூவா கேட்டு விட்டாளா, நான் என்ன செய்வேன்...”

“இல்ல சித்தி... சும்மாதான் வந்தேன்...”

அவள் என் கணநேர தடுமாற்றத்தில் தெரிந்து கொண்டுவிட்டாள். வேறு ஏதும் பேசவில்லை. திடுமென நெடுமூச்சு விட்டாள். என்னை நம்பலாமா என்பதைப் போல கூர்ந்து பார்த்தாள். அப்புறம்,

“ராசா... புதங்கிழம ராத்திரி எல்லோரும் சிவகாசி போறோம். உங்க சித்தப்பா வரச் சொல்லியிருக்காக.”

“வீட்டை காலி பண்ணிட்டா...”

“ஆமா... ராசா... இனிமே இங்க இருக்க முடியாது... யாருக்கும் தெரியாமத்தான் போறோம்... நீ யார்ட்டயும் சொல்லாத... அம்மாட்ட கூட சொல்லக் கூடாது... இன்ன...” நான் தலையாட்டினேன். இப்போது ஏக்கம் என்னைக் கவ்விக் கொண்டது. கொஞ்ச நேரம் சித்தியையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் எதிர்கால நினைப்பில் எங்கேயோ வெறித்துக் கொண்டிருந்தாள்.

“சரி... சித்தி நான் வரட்டா...”

“சரி ராசா...” என்றவள் ஒரு நிமிஷம் கழித்து “புதங்கிழமை ராத்திரி பஸ் ஸ்டாண்டுக்கு வருவியா...”

கெஞ்சலாய்க் கேட்டாள். நான் ‘சரி’ என்று தலையாட்டி விட்டு வந்தேன். வீடு எப்போது வந்து சேர்ந்தேன் என்று எனக்கே தெரியாது.

நேற்று என் சித்தியின் கடிதத்தைப் படித்ததும் அவள் ஞாபகங்கள் பெருகி விட்டன. நாட்கள், வருடங்கள், யுகங்கள் கழிந்து கொண்டேயிருக்கின்றன. ஆனால், மனித வாழ்க்கைக்கு ஆதாரமான ஜீவ ஊற்று எங்கோ மனசின் அடியாழத்தில் சலனமின்றி ஓடிக் கொண்டிருக்கிறது. அதனால்தான் இந்த வாழ்க்கை கொடும்பாலையில் உயிரை நனைத்துக் கொள்ள முடிகிறது. அது வற்றிவிடக் கூடாது. நான் சித்திக்குக் கடிதம் எழுத உட்கார்ந்தேன்.

19. ஐந்து ராஜகுமாரர்களும் ஆவுடையப்ப பிள்ளையும்

ரெண்டு நாளாய் ஆவுடையப்ப பிள்ளைக்கு சாயந்திரமானால் தலைவலி வந்துவிடுகிறது. வலி என்றால் அப்படி வலி. நெற்றிப் பொட்டு விட்டுப் போய்விடும்போல அடித்தது. மாத்திரை, அய்யர் கிளப்பு காப்பி இவையெதுக்கும் அடங்கவில்லை. வீட்டிற்குப் போனால் தேவலாம்போல இருந்தது. செட்டியாரிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினார். செட்டியாருக்கு பிள்ளைவாளை விட மனசில்லை.

“காலையிலே சீக்கிரம் வந்துரும்... நேத்திக்கி வந்த சரக்கை பிரிக்கணும்...”

ஆவுடையப்ப பிள்ளை தலையை ஆட்டிவிட்டு எழுந்து வேட்டியை உதறிக் கட்டினார். கடைக்கு வெளியே பக்கத்திலிருந்த சந்துக்குள் வைத்துப் பூட்டியிருந்த பழைய அட்லஸ் சைக்கிளை எடுத்து குறுக்குத்துறை ரோட்டில் ஏறி மிதித்தார். ஜவுளிக்கடை செட்டியாருக்கு பிள்ளைவாள் ஒரு வாரமாகவே முகம் குராவிப் போயிருந்ததாக நினைத்தார். பிள்ளைவாள் மாதிரி கணக்குப் புலி திருநெல்வேலி டவுண் ஏரியாவிலே ஜவுளிக் கடைகளில் யாரும் கிடையாது. சின்னாளப்பட்டியிலிருந்து வந்து முதன்முதலாக ஜவுளிக்கடை ஆரம்பித்ததிலிருந்து ஆவுடையப்ப பிள்ளை அங்கே வேலை செய்கிறார். எந்தக் குத்தமும் சொல்ல முடியாது. சுபாவியான ஆள். சதாநேரமும் மூக்குப் பொடியை ‘சர்ர்ட்’ என்று உறிஞ்சிக்கொண்டு, தொடர்ந்தாற்போல ஏழெட்டு தும்மல்களைச் சிறு சாரலோடு வெளியேற்றுகிற சிரமத்தைத் தவிர மற்றெந்த விதத்திலும் யாருக்கும் உபத்திரவம் தராத சாது.

பத்து நாட்களுக்கு முன்னால், அவருக்கு ஐந்தாவதாகவும் ஒரு பெண் குழந்தை பிறந்திருந்தது. அதிலிருந்தே அவர் முகம் மாறிவிட்டார். தலையெல்லாம் நரைத்துப் போய், மத்திமவயசின் கடைசி எல்லையில், நிரந்தரமாகிவிட்ட தொந்தியும் வயதுக்கு வந்த மூத்த பெண்ணும் இருக்கிற காலத்தில் ஐந்தாவதும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆவுடையப்ப பிள்ளையின் மனசில் பேரிடியாய் விழுந்து விட்டது. ஆண் குழந்தை பிறந்திருந்தால் எல்லாவிதத்திலும் சந்தோஷப்பட்டிருப்பார். ஆனால், இப்பொழுது மனச் சஞ்சலமடைந்தார். கேட்பவர்களிடம் பதில் சொல்லி முடியவில்லை. கேலியான பார்வையும், கிண்டல் பேச்சும் சகிக்க முடியவில்லை.

“இந்த வயசில... பிள்ளைவாளுக்கு இப்படி ஒரு ஆசையா...”

“மன்மத லீலையை வென்றவர் உண்டோ...” இப்படி வேண்டுமென்றே அவர் காதுபடப் பேசியதைக் கேட்ட பிள்ளைவாள் மனம் நொந்து போனார். ஏண்டா காலமான காலத்தில் இப்படியொரு நெனப்பு வந்தது என்று அவருக்கு அவர் மீது கோபம் வந்தது. எல்லாம் அந்த இரும்புலியூர் சித்தன் மதனகாமராஜன் என்ற ஜோசியரால் வந்த வினை.

யாரோ சொன்னார்களென்று அந்த ஜோசியரைப் போய் பார்த்தார் ஆவுடையப்ப பிள்ளை. அந்த ஜோசியருக்கு ஹடயோகம், மிருக பாஷையெல்லாம் தெரியும் என்ற செய்தி அவர் மீதுள்ள மரியாதையைக் கூட்டியிருந்தது. அவர் பிள்ளைவாளின் ஜாதகத்தைப் பார்த்துவிட்டு ரொம்ப நேரம் கட்டங்கள், கோடுகள், முக்கோணம், நட்சத்திரம் என்று எழுதிவிட்டு நிமிர்ந்து பிரகாசமாய் பிள்ளைவாளைப் பார்த்தார்.

“உங்க கிரகராசிகள் இப்ப ஒண்ணு சேந்திருக்கு... நல்ல நேரம் ஆரம்பிக்குன்னு சொல்லலாம். புதன் பார்வை இப்பதான் ஒரு நிலைக்கு வந்திருக்கு. இவ்வளவு நாள் பட்ட கஷ்டம் மெல்ல தீரும். உமக்கு ஜாதகத்தில் ஒரு ஆண் வாரிசு உண்டு...”

“நெசமாவா... ஆம்பிளப் பிள்ள இருக்கா...”

“இருக்காவா... கண்டிப்பா இருக்கு. அடுத்தது ஆண்தான் சந்தேகமேயில்லை. பையன் பிறந்ததுக்கப்புறம் உமக்கு சுக்கிர திசை ஆரம்பம்வோய். நீர் தொட்டதெல்லாம் துலங்கும்... விட்டதெல்லாம் கைவரும்... இது இரும்புலியூரான் வாக்கு... தப்பாது...”

பிள்ளைவாள் மெய்மறந்துவிட்டார். அன்றைக்கு வீட்டுக்கு எப்பவும் போவதைவிட இன்னும் தாமதமாக லட்சுமி விலாஸில் நூறு அல்வாவையும் வாங்கி மடியில் கட்டிக்கொண்டு போனார். சுக்கிர திசையும், அவருடைய சொந்த ஜவுளிக்கடை கல்லாப் பெட்டியில் உட்கார்ந்திருக்கிற காட்சியும் இருளுக்குள் கண் முன்னால் விரிந்தது.

எதிர்காற்று அடிக்கிற அடியில் சைக்கிள் நகரவேயில்லை. தூசியும் புழுதியும் கண்ணடைக்க, வேட்டியை வேறு காற்று கலைத்து விட பிள்ளைவாள் சைக்கிளைவிட்டு இறங்கினார். “தாயளி காத்தப் பாரு...” சைக்கிளை ஸ்டாண்ட் போட்டுவிட்டு வேட்டியை இடுப்பில் இறுக்கிக் கட்டிவிட்டு சைக்கிளை உருட்டிக்கொண்டே நடக்க ஆரம்பித்தார். வீட்டிற்குப் போகவும் மனசில்லை. தெருவுக்குள் நுழைந்தால் எல்லோரும் அவரையே பரிதாபமாகப் பார்ப்பதுபோல் குற்றவுணர்வு. நேற்று குழந்தையைப் பார்க்க வந்த அவருடைய அத்யந்த நண்பர்

மணியா பிள்ளை,

“அஞ்சு பொண்ணு இருந்தா அரசனும் ஆண்டியாவான்னு சொல்லுவாகளே... என்னய்யா பண்ணப் போறீரு... எப்படிய்யா ஒவ்வொண்ணையும் கரையேத்தப் போறீரு...” என்று புலம்பிவிட்டுப் போனார்.

அதிலிருந்தே ஆவுடையப்ப பிள்ளையின் மனசில் என்னென்னவோ எண்ணங்கள். கற்பனைகள் வளர்ந்தன. அதையும் இதையும் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தார். குறுக்குத் துறையில் கொஞ்ச நேரம் உட்கார்ந்துவிட்டு போகலாம் என்று நினைத்தார். அப்பவாவது மனசுக்கு நிம்மதி கெடைக்குமா?

இசக்கியம்மன் கோயில் படித்துறையில் போய் உட்கார்ந்தார். தாமிரபரணி மெலிந்து ஒழுகலாய் ஓடிக்கொண்டிருந்தது. இருட்டுகிற நேரம். குளிக்கிறவர்களும் அதிகமில்லை. இருட்டிவிட்டால் இசக்கியம்மன் கோயில் பக்கம் யாரும் வருவதேயில்லை. ஆவுடையப்ப பிள்ளையும் இதுவரை வர நேர்ந்ததேயில்லை. ஆனால் இன்று அதையெல்லாம் யோசிக்கிற நிலைமையில் அவர் இல்லை. அவருடைய மனசில் ஒரு விஷயம் உறுத்திக் கொண்டேயிருந்தது. அதன் தெளிவான முகம் இன்னும் கிடைக்கவில்லை. ஆனால் அதைப் பற்றி யோசித்தும், யோசிக்காமலும் படித்துறையில் உட்கார்ந்து எதிர்க்கரையை வெறித்துக் கொண்டிருந்தார்.

இருள் கவிந்து வந்தது. தூரத்தில் மினுங்கலாய் ஒரு நட்சத்திரம் உயிர் பெற்றது. சுற்றிலும் மின்விளக்குகள் எரிய ஆரம்பித்தன. அப்போதுதான் திடுக்கென அந்த விஷயம் ஞாபகத்துக்கு வர பிள்ளைவாளின் உடம்பு ஒரு தடவை நடுங்கி நின்றது. இருட்டிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் மேலும் இருண்ட முகத்துடன் உட்கார்ந்திருந்த பிள்ளைவாளின் மனசில் எண்ணற்ற நினைவலைகள் முந்தாநாள் அய்யர் கிளப்பில் காப்பி சாப்பிடும்போது தினந்தந்தி பேப்பரில் போட்டிருந்த செய்திதான் அவருக்குள் உறுத்திக் கொண்டிருந்தது. அந்தச் செய்தியைப் படித்ததும் முகத்தைச் சுளித்தார் பிள்ளைவாள். மனம் அருவறுப்படைந்தது. ஆனால், அதற்கப்புறம் அந்த எண்ணம் அடிக்கடி மனசின் அடிமட்டத்திலிருந்து தலையை நீட்டிக் கொண்டிருந்தது. அவரும் செட்டியாரிடம் சொல்லும்போது,

“இப்படியும் செய்யுமா ஜனம்... கழுத அதுபாட்டுக்கு வெந்ததோ வேகாததோ தின்னுட்டு கிடக்குது. ஊர்ல உலகத்தில வழியில்லன்னு எல்லாமா செத்துப் போகுது... இருந்தாலும் இது வங்கொடும என்ன...

சொல்தீக...”

கொஞ்ச நேரம் கழித்து,

“இப்ப எனக்கும் அஞ்சு பொட்டை கெடக்கு அதுக்காக எல்லாத்தையும் விஷம் வைச்சி கொன்னுரவா முடியும்... எப்படித்தான் மனசு வந்ததோ படுபாவிகளுக்கு...”

இப்படி அடிக்கடி ஏதாவது சொல்லிக் கொண்டேயிருந்தார். சொல்லச் சொல்ல மனசில் அந்த எண்ணம் வலுப்பெற்றுக் கொண்டே வந்தது. முதலில் அதை நினைக்கவே பயந்தார். நேரம் ஆக ஆக அதன் பலாபலன்களைப் பற்றி மனசுக்குள் தர்க்கம் பண்ண ஆரம்பித்துவிட்டார்.

இருள்மூடிவிட்டது. நட்சத்திரங்களின் மெல்லிய ஒளி தவிர வேறு வெளிச்சம் ஆற்றில் இல்லை. வயக்காடுகளிலிருந்து மெல்ல ராப்பூச்சிகளின் ரீங்காரம் ஓங்கி எழ ஆரம்பித்துவிட்டது. அடைந்த மரத்திலிருந்து கலைந்து திரும்பும் நீர்க்காகங்களின் அலறல், முன்னால் எந்த அசங்கலுமில்லாமல் ‘களக்களக்’ என்ற ஓசையுடன் ஓடிக் கொண்டிருக்கும் தாமிரபரணி. சுற்றிலும் இருள், இருள். அந்த இருளே திரண்டு அவருக்குள் புகுந்த மாதிரி அந்த எண்ணம் புகுந்து ஆட்டி வைத்தது.

அவரும் அருள் வந்தவர்போல் அதன் அத்தனை இழுப்புகளுக்கும் ஈடு கொடுத்தார். மனசில் கொந்தளிப்பு. அமைதியில்லாமல் இருட்டுக்குள் உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த எண்ணத்தின் கோரப்பிடியிலிருந்து தப்பிக்க முடியுமா என்று சில கணம் நினைத்தார். மறுபடியும் அதன் ஈர்ப்பு விசைக்குள் விழுந்தார். கண்ணை மூடி எல்லாவற்றையும் மறக்க நினைத்தார். குடும்பத்தை மனைவியை, பெண்களை, ஐந்தாவதாகப் பிறந்த பெண் குழந்தையை எல்லாவற்றையும் மறக்க நினைத்தார்.

அப்போதுதான் அந்தச் சத்தம். தண்ணீரின் சத்தம். யாரோ நடக்கிற மாதிரி கேட்டது. கண்ணைத் திறந்து பார்த்தார். முதலில் யாரும் தெரிய வில்லை. உடனே லேசாய் மனசில் பயம் கவ்வியது. உடம்பு வியர்க்க ஆரம்பித்தது. சத்தம் வரவர அருகில் கேட்டது. ஆற்றில் உற்றுப் பார்த்தார். தண்ணீரிலிருந்து ஒரு நாய் வாயில் எதையோ கவ்வியபடி கரையேறியது. முதலில் அது என்னவென்று தெரியவில்லை. “ஞ்நூ.ஞ்நூ” என்ற முனகல் கேட்டது. நாய் அதன் குட்டியை மணலில் விட்டது. உடம்பெல்லாம் நக்கிக் கொடுத்தது. பரபரவென்று

அங்குமிங்கும் திரும்பி நின்று காதுகளை விடைத்துக் கொண்டு பார்த்தது. பின்னர் தண்ணீரில் வேகமாக இறங்கி எதிர்க்கரைக்குப் போய்விட்டது.

மணலில் கிடந்த நாய்க்குட்டியின் முனகல் தவிர வேறு எதுவும் கேட்கவில்லை. மறுபடியும் தண்ணீரில் சத்தம் கேட்டது. நாயின் வாயில் இப்போதும் ஒரு குட்டி இருந்தது. மூச்சுவிடாமல் சகலத்தையும் மறந்து நாயையும், நாயின் குட்டிகளையும் பார்த்துக் கொண்டிருந்தார். நாய் நான்கு குட்டிகளை அதே மாதிரி கொண்டுவந்து சேர்த்தது. ரொம்ப சோனியாய் இருந்த அந்த பெரிய நாய் கொஞ்ச நேரம் குட்டிகளை நக்கிக் கொடுத்துவிட்டு சேர்த்து அணைத்துக் கொண்டு படுத்துவிட்டது.

ஆவுடையப்ப பிள்ளை நீண்ட பெருமூச்சு விட்டார். நேரம் அதிகமாகி விட்டதுபோல் தோன்றியது. அண்ணாந்து பார்த்தார். வானத்தில் எக்கச்சக்கமான நட்சத்திரங்கள். எழுந்து அரவமில்லாமல் நடந்து வந்து மணலில் சரிந்திருந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு ரோட்டுக்கு வந்தார். எதுவும் தோணவில்லை. ரோட்டில் சைக்கிளை நிறுத்தி, இடுப்பில் நெகிழ்ந்திருந்த வேஷ்டியை இறுக்கிக் கட்டிக்கொண்டு, சட்டைப் பையிலிருந்து மூக்குப் பொடி டப்பாவை எடுத்து ‘சர்ர்ட்’ என்று உறிஞ்சினார். இப்போது தலைவேதனை குறைந்திருந்தது. சைக்கிளில் ஏறி வீட்டைப் பார்க்க அழுத்தினார். மனசு லேசாகியிருந்தது. லேசான ஈரிப்புள்ள காற்று வீசியது. அவர் நல்ல நம்பிக்கையான கனவுகளைக் கூட காண ஆரம்பித்தார். ஐந்து ராஜகுமாரர்கள் வந்து தம் பெண்களைக் கல்யாணம் முடித்துக்கொண்டு போகிற மாதிரி. அதில் ஐந்தாவது ராஜகுமாரன் ஒரு பெரிய சக்கரவர்த்தியின் மகனாம்.

20. மார்ட்டின் ஹைடேக்கரும்* மத்தியானச் சோறும்

* மார்ட்டின் ஹைடேக்கர் (1889 - 1976): இருத்தல் நிலை தத்துவ கர்த்தாக்களில் முக்கியமானவர். ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த அவருடைய நூற்றாண்டு 1989. மானிட நிறைவை அடைவதற்கான வழிகாட்டிகளை வாழ்க்கையிலேயே காணமுடியும் என்று கருதியவர். மனிதவாழ்க்கையை மட்டுமே வாழ்க்கை என்று கொண்டவர். இருத்தல் என்ற சொல்லை, தன்னைக் கடந்து சென்று கொண்டேயிருக்கும் என்ற பொருளைக் கொண்டதாகும் என்று சொல்பவர்.

வீட்டின் நிலைவாசல் ரொம்ப தாழ்வாக இருந்தது. முன்னால் போன பரந்தாமன் “பாத்து வா” என்று சொல்லியதை அவன் கவனிக்கவில்லை. கவனிக்க முடியாதபடி பசி காதை அடைத்திருந்தது. நிலை உத்திரம் நச்சென்று தலையில் இடித்ததும்தான் பரந்தாமன் சொன்னது, ஸ்மரணையில் ஓடியது. இருட்டிக்கொண்டு வந்த கண்களை மூடிக்கொண்டு “யம்மா...” முணுமுணுத்தான். பரந்தாமன் சத்தம் கேட்டு திரும்பி,

“பாத்து பாத்து நான் சொன்னேன்ல...”

“பரவால்ல...” கண்ணைத் திறந்து பரந்தாமன் போன திசையில் நடந்தான். வீடு இருட்டாகவே இருந்தது. முன்னால் போய்க் கொண்டிருந்த பரந்தாமன் கூட மங்கிய வெளிக் கோடாகவே தெரிந்தான். வீட்டிற்குள்ளேயே ரொம்ப தூரம் நடந்து கொண்டிருப்பது மாதிரி பிரமை. ஒருவேளை நேற்று ராத்திரியில் இருந்து சாப்பிடாமல் இருந்ததனால் இருக்கலாம். ஒரு பெரிய ஹாலுக்குள் அந்த ஹாலுக்கு கொஞ்சமும் சம்பந்தமில்லாமல் ஒரு ஓரத்தில் கிடந்த சின்ன மேஜைக்குக் கூட்டிப் போய் அங்கிருந்த பழைய நாற்காலியில் உட்காரச் சொன்னான். “இரி... இந்தா வரேன்...” என்று சொல்லிவிட்டு உள்ளே போய் மறைந்துவிட்டான். நாற்காலி ஜில்லென்று இருந்தது. எத்தனையோ தலைமுறைகளை பார்த்திருக்கலாம். எவ்வளவோ பேர் அவனைப்போல பசியுடன் உட்கார்ந்து விசாரம் பண்ணியிருப்பார்கள். அதற்கு மேல் யோசிக்க முடியவில்லை. உள்ளே குடல் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டுவிட்டது. காற்று போகிற வழியெல்லாம் ‘கொட கொட’வென சத்தம் கேட்டது. அவன் திரும்பி பரந்தாமன் வருகிறானா என்று பார்த்தான். இருளுக்குள் அவன் வருகிற மாதிரியோ, கையசைத்து கூப்பிடுகிற மாதிரியோ பிம்பம் தோன்றியது. மறுபடியும் திரும்பி

நாற்காலியில் சாய்ந்தான். மேஜையின் மேல் கிடந்த 'எ சர்வே ஆப் லட்டீன் - அமெரிக்கன் லிட்ரேச்சர்' புத்தகத்தை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தான். அவனால் ஒரு வரி கூட படிக்க முடியவில்லை. அவன் புலன்கள் எல்லாம் பரந்தாமனையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. - ஒரு சத்தத்தை எதிர்பார்த்து சுற்றிலும் நிகழ்கிற சிறு சலனத்தையும் எங்கும் திரும்பாமல் கவனித்துக் கொண்டிருந்தான்.

சென்னைக்கு வந்த ஒரு மாத காலத்தில் இந்த மாதிரியான நுண்ணுணர்வுகளைப் பழகிக் கொண்டான். சிறு அசைவு அல்லது பாவனை மூலம் எதிராளியின் எண்ணங்களை யூகிக்க அறிந்து கொண்டான். வேலை தேடிக் கொண்டிருக்கிற இந்த நாள்களில் இன்று போல நிலைமை வந்ததில்லை. தி.நகர் அறையில் நேற்றிலிருந்தே யாருமில்லை. டைரக்டர் நெல்லை பாண்டியன் எங்கேயோ கதை டிஸ்கஷனுக்குப் போய்விட்டான். கணபதி அவன் கட்சியின் செயலாளரை வரவேற்கப் போனவன் என்ன ஆனானோ தெரிய வில்லை. கவிஞர் செந்தேனி கவியரங்கத்துக்குப் போயிருந்தார். யாராவது வருவார்கள் என்று காலையிலிருந்து காத்திருந்தான். பத்து மணிவாக்கில் அறையைப் பூட்டி சாவியை வழக்கமான இடத்தில் வைத்துவிட்டு சைதாப்பேட்டை அடையாறு, மந்தைவெளி வழியாக மயிலாப்பூருக்கு நடையைக் கட்டினான். மயிலாப்பூரில் அவன் ஊர்க்காரர் ஒருவர் இருந்தார். நெருக்கடியின் உச்சத்தில் மட்டுமே அவரிடம் போவது என்று நினைத்திருந்தான்.

அடையாறு பிலிம் இன்ஸ்டிடியூட் போகிற ரோட்டைக் கடக்கிறபோது ரப்பர் செருப்பின் வார் அறுந்துவிட்டது. ஒரு அஞ்சு நிமிஷம் அங்கேயே நின்று என்ன செய்வது என்று யோசித்தான். மூளைக்கு வெளியேயும், உள்ளேயும் டவுண் பஸ் இரைச்சல்தான் கேட்டது. ரெண்டு செருப்பையும் கையிலெடுத்தான். பக்கத்தில் கீழே சாக்கடை ஓடிக் கொண்டிருக்கிற பாலத்திற்கு அடியில் விட்டெறிந்தான். தூக்கி சுமப்பது முடியாது. திரும்பி வரும்போது எடுத்துக் கொள்ளலாம். அவனூரில் என்றால் செருப்பில்லாமல் நடப்பதற்கே கூச்சமாக இருக்கும். சென்னையில் அவனைக் கவனிக்க யார் இருக்கிறார்கள். அவன் தூசியின் தூசி.

மயிலாப்பூர்க்காரர் அவன் துரதிருஷ்டத்திற்கு இல்லை. அவனூருக்குப் போயிருந்தார். பசியும் சோர்வும் ஆளை மெல்ல விழுங்கிக் கொண்டிருந்தது. ஆனாலும் மனம் தளரவில்லை. லட்சியத்தை மனசில் ஒதப்பிக்கொண்டே வந்த வழியே நடந்தான். மந்தைவெளி பஸ் ஸ்டாண்டைத் தாண்டும்போது பரந்தாமனைப் பார்த்தான். நெருங்கிய

பழக்கமில்லையென்றாலும் நாலைந்து முறை பார்த்துப் பேசியிருக்கிறான். பார்த்ததும் கூச்சமில்லாமல்,

“சாப்பிடணும் பரந்தாமன்... ராத்திரியிலிருந்து சாப்பிடலை...” என்று சொன்னான். கூச்ச நாச்சமெல்லாம் சென்னைக்கு வந்ததும் மறந்துவிட்டது. பரந்தாமன் இளகிய முகத்துடன்,

“அடப்பாவி...”

ஒரு கணம் கழித்து,

“கையில் பைசா இல்லயே... சரி வீட்டுக்கு வா...” சரியென்று கிளம்பிவிட்டான். பரந்தாமனும் இன்னும் மதியச் சாப்பாடு சாப்பிடவில்லை. வந்து கொஞ்ச நேரமே ஆகியிருந்தாலும் அவனுக்கு காலம் உறைந்து போன மாதிரி இருந்தது. உள்ளே போன பரந்தாமனை இன்னும் காணவில்லை. லேசாய் பேச்சுச் சத்தம் கேட்டது. பரந்தாமனும் அவன் அம்மாவும் போல. என்ன பேசுகிறார்கள் என்று தெளிவாகக் கேட்கவில்லை. கண்களை மூடினான். திறந்தான். சிறிது நேரத்தில் பின்னால் காலடிச் சத்தம் கேட்டது. திரும்ப வேண்டுமென்று நினைத்தாலும் அவ்வளவு வேகமாய் திரும்ப முடியவில்லை.

“வா... சாப்பிடலாம்...”

பின்னாலிருந்து வந்த பரந்தாமன் குரலுக்கு நாற்காலியிலிருந்து அவசரம் காட்டாமல் எழுந்திருக்க நினைத்தான். பரந்தாமனின் பின்னால் போனான். அளிக்கதவு போட்ட புழக்கடையில் பரந்தாமன் கொடுத்த சொம்பை வாங்கி கை கழுவினான். உள் அறையில் பரந்தாமனுடன் உட்கார்ந்தான். அந்த அறை ஹாலைவிட இருட்டாயிருந்தது.

அவன் கை அவனுக்கு முன்னால் இருந்த தட்டை தேவையில்லாமல் இழுத்து அருகில் வைத்தது. அவன் ஏதாவது பேசலாமா என்று நினைக்கும்போது, அடுக்களையின் உள்ளேயிருந்து பரந்தாமனின் அம்மா காற்றில் மிதந்து வருவதுபோல வந்து கொண்டிருந்தாள். மெலிந்து கறுத்த உருவத்தின் நீர் நிறைந்த கண்களை அவன் பார்த்தான். அந்தக் கண்களில் ஏதும் இல்லாத ஒரு பாவம் இருந்தது. அன்னக் கரண்டியை பாத்திரத்தில் ஒரு தட்டுத் தட்டி சோற்றைப் போடும்போதே,

“வாங்கற சம்பளம் முந்நூறு ரூபா... அதில புஸ்தகம் வாங்குறேன்... அங்கே போறேன்... இங்கே போறேன்னு செலவு பண்ணுனா... எப்படிக் காலந்தள்ளறது... நீயே சொல்லு...”

அவனுக்கு பரந்தாமனின் அம்மா சொன்னது புரியவில்லை. திடுக்கிட்டு

நிமிர்ந்து பார்த்தான். அதற்குள் பரந்தாமன்,

“யெம்மா... பேசாம இருக்கியா...”

“சொன்னா கோபம் மட்டும் பொத்துக்கிட்டு வருது... வீட்ல இருந்து நிர்வாகம் பண்றவளுக்குத்தானே தெரியும்! கஷ்டம்... ஒனக்கென்ன... புஸ்தகம்... பிரண்ட்ஸ் வேற! எதப்பத்தியாச்சும் கவலப்படப் போறியா... ம்ஹூம்...”

அவன் பரந்தாமனையோ, அவன் அம்மாவையோ பார்க்கவில்லை. தட்டில் விழுந்த ஒரு கரண்டி சோற்றை அளைந்து கொண்டிருந்தான். எங்கேயோ தூரத்தில் கேட்கிற சத்தம் போல முகத்தில் எந்தச் சலனமும் இல்லாமல் இருந்தான். தலையில் குளிர்ந்த நீர் ஊறுவதுபோல இருந்தது. எரிச்சல் மாதிரியான ஒரு உணர்வு. ஆனால், அது எரிச்ச லில்லை. அடுத்த கரண்டி சோறு விழுமா என்று தட்டிடம் கேட்பது போல தட்டையே பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று காது ஜவ்வு கிழிகிற மாதிரி பெரிய குரல் கேட்டது.

“எப்ப பார்த்தாலும்... இதே பாடாப் போச்சி... நிம்மதியா மனுசன் சாப்பிட முடியுதா... நீயெல்லாம் ஒரு மனுசியா...”

“ஆமாண்டா... நான் பேய், பிசாசு... நீ கொடுக்கிற காசையெல்லாம் முந்தியிலே முடிஞ்சு வைக்கிறேன், என் எழவுக்கு...”

“எல்லோருக்கும் எழவு வராமலா போயிரும்... வா ராமலிங்கம்... வெளியே போய் சாப்பிடலாம்...”

“நீ போறதானா போ... அவன ஏன் கூப்பிடற... வாயத் திறக்க விடமாட்டேங்கிறான்...”

பரந்தாமன் விறுவிறுவென்று எழுந்து போய் சட்டையை மாட்டினான். ஆங்காரமாய் ஒரு கையை சட்டைக்குள் நுழைக்கும்போது தையலை கிழித்த சத்தம் கூட அவனுக்குக் கேட்டது. இத்தனைக்கும் அசைய வில்லை. என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதே புரியாத மாதிரி விழித்துக் கொண்டிருந்தான். வாசலுக்கருகில் பரந்தாமன் நின்று கொண்டிருந்தான்.

அவன் மூளையில் அத்தனை செல்களிலும் சோற்றின் படிமமே நிறைந்திருந்தது. அவனுக்கு வெகு அருகில் சாப்பாடு இருந்தது. விரல்களில்கூட சோற்றுப் பருக்கைகள் ஒட்டிக் கொண்டிருந்தன. அங்கே வாசலில் பரந்தாமன் அமைதியில்லாமல் அவன் வருவதற்கான காத்திருத்தல் போல தலைமுடியைச் சீவிக் கொண்டிருந்தான். அவன்

என்ன செய்வான்.

அவனையுமறியாமல் அவன் வாய் அசைந்தது.

“பரந்தாமா வீட்ல கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணித்தான் போகணும். கன்னாபின்னான்னு ஏன் செலவழிக்கிறே... அம்மா சொல்றதில என்ன தப்பு...”

“நல்லா படும்படியா சொல்லு தம்பி! தடிமாடு கணக்கா வளந்ததுதான் மிச்சம்...”

பரந்தாமனின் அம்மா குனிந்து மேலும் சோறு போட்டாள். அவன் வெறுஞ்சோற்றை ஒரு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டே திரும்பிப் பார்த்தான். பரந்தாமனைக் காணவில்லை. பாதி சாப்பிட்டான். அவன் சாப்பிட்டு முடித்தபோது பரந்தாமனின் அம்மா பாத்திரங்களை எடுத்துக்கொண்டு உள்ளே போயிருந்தாள். சொல்லிக் கொள்ளக்கூடத் தோன்றாமல் சாப்பிட்ட கையோடு வெளியில் ஓடிவந்தான்.

கொஞ்ச தூரத்திற்கு முன்னால் பரந்தாமன் போய்க் கொண்டிருந்தான். பரந்தாமன் காலையில் சாப்பிட்டிருக்க வேண்டும். அதனால்தான் இவ்வளவு வேகமாக நடக்க முடிகிறது. தட்டில் விழுந்த முதல் கரண்டி சோற்றை அளையும்போது விரல்களில் ஒட்டிக் கொண்டிருந்த பருக்கைகளை ஒவ்வொன்றாக நாக்கில் நக்கிக்கொண்டே பரந்தாமனுக்குப் பின்னால் நடந்தான். சென்னை வந்த பிறகுதான் அவன் மார்ட்டின் ஹைடேக்கரையும் தெரிந்து கொண்டிருந்தான்.

21. போர்வை

அவளுக்கு அடிபட்ட இடங்களிலெல்லாம் வேதனை எடுத்தது. எழுந்து கண்ணாடியில் முகத்தைப் பார்த்தபோது வேறு முகம் எடுத்து மாட்டியதுபோல தோன்றியது. அப்படியே சுவரோடு சாய்ந்தாள். வெளியே நல்ல வெளிச்சம் போட்டிருந்தது போல. அறை வீட்டுக்குள்ளும் இருட்டு கரைய ஆரம்பித்திருந்தது. அம்மா அடுக்களையில் எதையோ உருட்டிக் கொண்டிருந்தாள். அவளுடைய வாய் முணுமுணுப்பு பட்டாலையைத் தாண்டி அறை வீட்டுக்குள் கேட்டது. அப்பாவைக் காணவில்லை.

அவன் இன்றைக்கு ஏமாந்திருப்பான். இதை நினைத்ததும் பரிதாபமாய் இருந்தது. கோவில் வாசலில் நின்று தேடிக் கண் சலித்திருப்பான். புத்தம் புதுசாய் அவனை பூ நனைகிற இந்த மார்கழிப் பனியில் பார்த்துவிட்டால் போதும், அன்றைக்கு எல்லாமே சரியாய்ச் சீராய் நடக்கும். இது ஒரு பழக்கமாய்கூட மாறிவிட்டது. ‘அம்மா’ அது என்ன அப்படி. நரம்புகளில் சில்லிடும்படியாக அவனைத் தேடியடைகிற முதல் பார்வை.

சாதாரணமாய் புருவத்தை உயர்த்தியபோது கண் பட்டையில் வலித்தது. அம்மா சுவரில் தலைமுடியைப் பிடித்து முட்ட வைத்ததனால் இருக்கும். எல்லாமே புகை மண்டலக் கனவு போலத்தான் நினைவில் இருந்தது. நிஜமென்று உடம்பு சொல்லிற்று. என்ன கோபம்? அதுக்கும் மேலே வெறி, இதுவரை கைநீட்டாத அப்பா அடித்தது கொஞ்சம் ரணமாய் மனசில் கொதித்தது. இருந்தாலும் இதையெல்லாம் எதிர்பார்த்தவள்தான். கொஞ்ச காலம் போயிருக்கலாம். அவனுக்கு ஒரு வேலை கிடைத்து ஸ்திரப்படுத்தும் வரையிலாவது தெரியாமல் இருந்திருக்கலாம். ஐயோ பாவம் அவன். அப்பா அவனையும் போய் ஏதாவது ஏடாகூடமாய் செய்துவிடக் கூடாது. ஏற்கனவே மணியாச்சி ஆட்களையெல்லாம் தெரியும் என்று சொல்லியிருந்தது நினைவுக்கு வந்து பயமுறுத்தியது.

நேற்றிரவு ஜில்விலாஸ் அருகிலுள்ள சின்னதான இருட்டில் சிரித்துக்கொண்டே கையை அழுத்தி ‘ஒரு கவிதை’ என்று முணுமுணுத்துக் கொடுத்த லெட்டரின் வினையிது. அவசரமாகப் புஸ்தகத்துக்குள் ஒளித்து வைத்த கள்ளன் தற்செயலாய் பிடிக்கப்பட்டதன் விளைவு. முதலில் சாதாரணமாய் யாரவன்? எந்த ஊர்? என்ன ஜாதி என்று ஆரம்பித்து பின்பு கொதித்து ஆவியாய்

போனது. அவள் நிச்சயத்தில் இருந்தாள். வாழ்க்கை அவனுடன்தான் என்பதில். அவன் சாதாரணமாய் இன்ஸ்டிடியூட் வாசலில் நின்றிருந்ததில் ஆரம்பித்தது. அது என்ன என்றுகூட சொல்ல முடியாது. ஒரு பயம், சந்தோஷம், கர்வம், கசப்பு எல்லாமும் சேர்ந்த மாதிரி அல்லது தனித்தனியே முடிவில் ஜாடைமாடையாய் அவனுடன் பேசிப் பழகி இப்படி வந்தது. இது சினிமாக் கதைகளின் பாதிப்பாய்க் கூட இருக்கலாம். ஆனாலும், அவனை, அவன் பேசும்போது பண்ணும் பாவங்களை, வலதுபக்க வகிடைப் பிடித்திருந்தது.

தலை கனத்துப்போன மாதிரி விண்விண்னென்றது. இப்போது எழுந்தால் புகையும் அடுப்பில் மண்ணெண்ணெய் ஊற்றியது போலாகிவிடும். நாரசாரமான வார்த்தைகளைக் கேட்டுப் பழக்கப்படாதவள் அவள். நேற்றைக்கு அம்மா பேசும்போது 'அம்மாவா இப்படி' என்றுகூட தோன்றியது. எது இப்படி இவர்களைச் சாமியாட வைத்தது என்பதை முன்பே உணர்ந்திருந்தாள். இனி என்ன நடக்கும் என்பது மர்மமாகவே இருந்தது. இருந்தாலும் எதுவும் அவளை மீறி விடாது என்பதில் நம்பிக்கை வைத்திருந்தாள். அதென்ன இப்படி? எவனோ ஒருத்தனுக்காக இவ்வளவு ஹிம்சைகளையும் தாங்கிக்கொண்டு பொறுத்திருப்பது. பிரமை, சர்வமும் அவன்தான் என்ற அதீதம். இந்த அப்பா, அம்மா, ஸ்நேகிதிகள், இவர்களிடம் கிடைக்காத அல்லது இவர்களுக்குச் செலுத்த முடியாத ஒரு ஒர்ஷிப்.

வாசலில் சத்தம் கேட்டது. அப்பாதான், கூடவே என்றைக்கும் போல பழனியாபிள்ளை. அவருடைய குரல் வீட்டை முழுங்கி ஏப்பம் விடும். அறை வீட்டிற்கு நேர் எதிரே பட்டாலையில் இருந்த மேஜைக்கு முன்னால் உட்காருவதை உணர முடிந்தது. நிமிர்ந்துகூட பார்க்கவில்லை இவள். பயமாய் இருந்தது. எவ்வளவு நேரம் இப்படியே கிடக்க முடியுமோ, கிடக்கலாம் என்றே நினைத்தாள். கண்ணை மூடித் திறந்தாள். அப்பா தான் விட்ட இடத்தைத் தொடருவதாய்,

"...அது சரி. இத கலியுகம்னுதான். பெரியாட்கள் அப்பவே சொல்லி வச்சிருக்காகளே. சரி அதவிடு... ஒம்பையனுக்கு ரிசல்ட் வருதுன்னியே. அடுத்து என்ன செய்யப் போறதா உத்தேசம்?"

"என்ன செய்ய... எப்பவும்போல ஆளக்கீள பிடிச்சி எதிலயாச்சும் தள்ளிவிட வேண்டியதுதான்..."

"யேய் நீ கொடுத்து வச்சவம்பா மூணும் ஆணா வச்சிருக்க உக்காத்தி வச்சி ராசாக்கணக்கா சோறு போடுவான்களே... என்னப் பாரு... பொட்டைக் கழுதகளை பெத்துச் சீரழிதேன் என்ன பண்றது... எல்லாம்

தலையெழுத்து...”

“தலையெழுத்தென்ன... தலையெழுத்து. எல்லாம் நமக்கு மேலே ஒர்த்தன் இல்லியா... அவம் பாத்துக்குவாம்பா... சரி... நம்ப விமலாவுக்கு ஏதும் மாப்பிள்ளை பாத்தியா...”

“அதயேங்கேக்கிற... சீரழிஞ்ச பொழப்ப... இப்ப இருக்கிற இருப்பில நம்ப ஜாதில மாப்பிள்ள கிடைக்குதா... அப்படியே பார்த்தாலும் துட்டு... துட்டு பெருந்துட்டு கேக்கிறானுக... பொண்ணு வீட்லேர்ந்து சக்கையைக்கூட விடாம முழுங்கிருவாங்க போலருக்கு... என்னத்த சொல்ல போ...”

இதைக் கேட்டதும் அடிவயிற்றிலிருந்து பொங்கிக்கொண்டு வந்த சிரிப்பை அடக்கிப் பார்த்தாள். ம்ஹூம்... முடியவில்லை. சத்தம் போட்டு சிரித்தே விட்டாள். உடம்பெல்லாம் அதை மீறின வலி. பட்டாலையில் பேச்சு தரை தட்டி நின்றிருந்தது. அம்மா விறுவிறுவென்று வந்து இவளைப் பார்த்து சந்தேகத்தோடு முறைத்தாள். அம்மாவின் முறைப்பிலும் உடம்பு வலியிலும் சிரிப்பு மெல்ல மெல்ல உள்வாங்கியது.

22 அய்யம்பெருமாள் என்றொரு மனிதர்

வழக்கம்போல நானும் நண்பர் சாரதியும் ரோட்டோரமாய் இருந்த டீக்கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தோம். ஆபீஸ் விட்டு வந்த பிறகு ரெண்டு பேரும் சந்திப்பதும் ஒருவர்க்கொருவர் தவிர்க்க முடியாத துணையாகிப் போனதும் நேர்ந்து வெகு நாட்களாகிவிட்டது. சில நேரம் நடை, அல்லது நகராட்சிப் பூங்காவின் சூடு ஆறத் துவங்கியிருக்கும் பெஞ்சில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்போம். பல கதைகள், பால்ய நாட்கள், குடும்ப வாழ்க்கை, பிரச்சினைகள், பத்திரிகை செய்திகள், படித்த புத்தகங்கள், வேதாந்த விசாரம், சமூக விமரிசனம் என்றுமே எங்களுக்கு பேச விஷயம் இல்லாது போன நாளேயில்லை. இதில் சலிப்பு தோன்றுகிற மாதிரி ரெண்டு பேரும் உணர்கிற நேரம் ரெண்டு நாட்கள் முழுக்க சந்திக்க மாட்டோம். மறுபடியும் அந்த ஆவல் கிளர்ந்து வரும். நெடுநாள் கழிந்த மாதிரி பேசத் துவங்குவோம். இத்தனைக்கும் பால்யத்திலிருந்து இருவரும் ஒரே தெருவில் வளர்ந்தவர்கள். இடையில் சில வருஷங்கள் படிப்பின் பேரிலும், வேலையின் நிமித்தமும் நண்பர் வெளியூரில் இருந்தார்.

டீ குடித்ததும் நண்பர் சிகரெட் வாங்கப் போனார். அவர் வரும்வரை நான் ரோட்டை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது, எங்கிருந்தோ முளைத்த மாதிரி, ஓலைப் பாயில் சுருட்டிக் கட்டிய ஒரு அனாதைப் பிணத்திற்கு மலிவான கதம்பமாலை போட்டு நாலைந்து பேர் மட்டும் தூக்கிக்கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள். எனக்கு எப்போதும் சவ ஊர்வலங்களைக் கண்டாலே மனசில் ஒருவித துயரம் சுரக்கும். அது ஏனென்று தெரியாது. இன்றைக்கும் அந்த அனாதைப் பிணம் மனசை என்னவோ செய்தது. நேற்றுதான் சிவராமகாரந்தின் ‘அழிந்த பிறகு’ நாவலைப் படித்திருந்தேன். மனிதன் உயிருடன் இருக்கும் வரை அவனுக்கு எத்தனை விதமான முகங்கள். அவன் காரியங்களுக்கு எத்தனை விதமான வியாக்கியானங்கள். செத்த பிறகு என்ன விநோதம். மனிதனின் பல வருட வாழ்க்கையும் சில மணி நேரங்களில் அபிப்ராயங்களாக, கணிப்புகளாக விமரிசனங்களாக காற்றில் கரைந்து விடுகின்றன. அதன் பிறகு கொஞ்ச காலம் அந்த மனிதர் அபிப்ராயங்களிலும் அவர் செய்த காரியங்களின் எதிர் விளைவுகளிலுமாக வாழ்கிறார். அதன்பிறகு... அதன்பிறகு...

அநாதைகளென்றால் அதுவும் இல்லை. இறந்த மறுகணமே இந்த உலகில் நினைவுகளேதும் விட்டு வைக்காமல் சூனியமாகி விடுகிறார்கள். அப்புறம் இந்த வாழ்க்கைக்கு என்ன அர்த்தம்?

வாழ்விலே என்ன விநோதமிருக்கிறது?

“போகலாமா...”

நண்பர் அருகில் நின்று கொண்டிருந்தார். இருவரும் நடந்தோம். சாயங்கால மஞ்சள் ஒளி ரோட்டை முழுக்காட்டியது. முடிவேயில்லாத அந்தத் தார் ரோட்டில் பிரகாசித்த ஒளி மனிதர்களுக்கும் வாகனங்களுக்கும் கூட அபூர்வ சோபையளித்தது. நான் என் மன விசாரத்திலும், வேடிக்கை பார்ப்பதிலுமாக வந்து கொண்டிருந்ததில் நண்பரின் மௌனத்தைக் கவனிக்கவில்லை. சாதாரணமாய் அவர் அப்படி இருக்க மாட்டார்.

“என்ன யோசனை...”

“இப்போ கொஞ்ச முன்னால ஒரு பொணம் போனதைப் பாத்தீங்களா... அது யாருன்னு தெரியுமா...”

நான் குறுக்குமறுக்கும் தலையை ஆட்டினேன்.

“அய்யம்பெருமாள்...”

அதைக் கேட்டதும் எனக்கு ஒரு விநாடி நடுக்கமெடுத்தது. யாரோ என்றிருந்த வரைக்கும் நிதானமாயிருந்த மனசு தெரிந்தவர் என்றதும் நிலை தவறியது. சரியாகக் கவனிக்கவில்லையே என்று வருத்தப்பட்டேன். நீண்ட பெருமூச்சு எழுந்தது.

பூங்காவுக்குள் சென்று ஆளரவமற்ற இடத்தில் உட்கார்ந்தபோது நண்பர் சாரதி சொன்னார்.

“இப்படி அநாதையா போவோம்னு கனவுல கூட நெனச்சிருக்க மாட்டாரு இல்ல. ஒங்களுக்கு பழசெல்லாம் ஞாபகமிருக்கா...”

எப்படி மறக்க முடியும்? அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே நான் ஞாபகச் சுவடுகளூடே பின்னோக்கிப் பயணம் செல்ல ஆரம்பித்துவிட்டேன்.

அய்யம்பெருமாளுக்குப் பையன்களைக் கண்டாலே ஆகாது. அது ஏனோ அவர் சுபாவத்திலேயே இருந்தது. யாரைக் கண்டாலும் விரட்டுவார். பையன்களுக்கு அவரை அருகில் கண்டாலே பயம். தூரத்தில் நின்றால் எக்காளம், கிண்டல், கேலி எல்லாம்.

அவருடைய அட்டைக் கறுப்பு நிறத்திற்கும், வெளியே எத்தி நின்ற பற்களுக்கும், நடுவில் சொட்டை விழுந்த தலைக்கும் சற்றும் பொருத்தமில்லாமல் அவர் பெண்டாட்டி இருந்தாள். மெலிந்த உடம்பு

காதுகளில் கல் வைத்த பெரிய கம்மலும் மூக்குத்தியும் போட்டு கோடாலிக் கொண்டை போட்டு சாந்த சொரூபியாய் இருந்தாள். பேச்சும் மெலிசு. எப்பவும் வியர்க்காத முகம். தலையில் பூ எப்பவும் இருக்க வேண்டும். எட்டு வருஷமாகியும் இன்னும் குழந்தையில்லை.

நாங்கள் அந்த அம்மாள் தீப்பெட்டிக் கட்டைகள் அடுக்க கூட மாட இருந்து ஒத்தாசைகள் செய்வோம். சமயங்களில் கடலைப் பிண்ணாக்கு திங்கக் கிடைக்கும். அப்போது செதுக்குமுத்து விளையாடுவதுதான் வழக்கத்திலிருந்தது. செதுக்குமுத்து விளையாட புளியமுத்து வேணுமே. அந்த அம்மாள் புளியமுத்து கொடுப்பார்கள். திடீரென்று புளியமுத்துக்கு ஏகப்பட்ட கிராக்கி. யார் யாரோ வந்து படிபடியாய் வாங்கிக் கொண்டு போனார்கள். அப்போதெல்லாம் நாங்கள் ஒரு தீப்பெட்டிக் கட்டை அடுக்கிக் கொடுத்தால் மாகாணிப் படி புளியமுத்து கொடுப்பாள். இது அய்யம்பெருமாளுக்குப் பிடிக்காது.

“கண்ட கண்ட நாய்களையெல்லாம் உள்ள விட்டு வேடிக்கை பார்க்காத... திருட்டுப் பசங்க... திருடிட்டு போயிடுவாங்க...”

கோபம் அதிகமானால் அந்த அம்மாளை அடித்துவிடுவார். அந்த அம்மாள் இப்படி அடி வாங்கினாலும் மறுபடியும் எங்களைக் கண்டால் இழுத்து இழுத்து வைத்துப் பேசும்.

பக்கத்திலிருந்த பெரிய வேப்ப மரத்தில் அடைந்த பறவைகள் நினைவுகளை அறுத்தன. நண்பரும் தூக்கத்திலிருந்து முழித்தவர்போல சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு என்னைப் பார்த்து லேசாய் சிரித்தார்.

“அய்யம்பெருமாள் அப்ப அடாவடிக்கு ரொம்ப பேமஸில்ல...”

“ஒங்களுக்கு ஞாபகமிருக்கா... அவர் வீட்ல பின்னாடி அடிபம்பு ஒண்ணு இருந்திச்சி... அப்பவே ஒரு கொடம் தண்ணிக்கு அஞ்சு பைசா வாங்குவார்... அது மட்டுமில்ல... பம்பு ரிப்பேரானால் அதுக்கும் தனியாக காசு வசூலிப்பார்...” நான் சொன்னதும் நண்பருக்கும் ஆர்வம் திரண்டது.

“அப்ப ஒங்களுக்கு வைசூரி போட்டிருந்தது... நீங்க வீட்ல இருந்தீங்க... அய்யம்பெருமாளோட அண்ணன்... வந்து பிச்சை கேக்காத கொறைதான்... கொஞ்சங்கூட மசியல என்ன ஜென்மமோ...”

இருளை சேர்த்திழுத்துக்கொண்டு திரள் திரளாய் மேகங்கள் வந்து குவிந்தன. நான் மேகங்களை விளிம்பிடும் கடைசி ஒளியை வெறித்துக் கொண்டிருந்தேன்.

அய்யம்பெருமாள் அவர் குடும்பத்தில் கடைசிப் பிள்ளை. இரண்டு அண்ணனும் ஒரு அக்காவும் உண்டு. அப்போது யாரும் ஒருவேளைச் சோறுகூட போடவில்லையாம். அவருடைய மூத்த அண்ணன் ஒரு சீப்பு வாழைப் பழம் வாங்கி ஒத்தையிலேயே உரித்துத் தின்றுவிட்டு தொலியை அய்யம்பெருமாளின் மீது வீசுவாராம். அதை மறக்கவேயில்லை. அய்யம்பெருமாள். அய்யம்பெருமாளின் பேரில் யாருக்கும் எந்த நல்லபிப்பிராயமும் கிடையாது. நிறையப் பேர் அவருக்கு ஏதாவது கஷ்டம் வராதா என்று ஏங்கினார்கள். ஆனால் எல்லோருக்கும் சவால் விட்டு ஒத்தைக் கோவணம் அதற்குமேல் ஒரு துண்டோடு ஊர் பூராவும் அலைவார். வேட்டி சட்டையோடு பார்க்கிற நாட்கள் அபூர்வம். அப்படி அவரைப் பார்த்தேயிராத ஆட்களும் தெருவில் இருந்தார்கள். கடுகடுப்பான அவரது சுபாவம் எல்லோரையும் விலகச் செய்தது. சில சமயங்களில் யாரோ சொன்னதுக்கு பதில் சொல்வதுபோல,

“ஆமாய்யா... நான் ஏமாத்தறேன்... பால்ல தண்ணி ஊத்தறேன்... யார் இல்லன்னா... முடிஞ்சா நீயும் செய்யி... இந்தக் காலத்திலே பொழைக்கணும்னா இதுதான் வழி. இல்லன்னா கையில சட்டி ஏந்த வேண்டியதுதான்...”

இப்படி இறுமாப்புடன் பேசிக் கொண்டிருந்த அய்யம்பெருமாள் கஷ்டப்படும் காலமும் காற்றைப் போல கடுகி வந்தது. அப்போது நாங்கள் வளர்ந்து கொண்டிருந்தோம். எதிலும் பட்டுக் கொள்ளாமல் எங்கள் பிரத்யேகமான உலகத்தின் கனவுகளுக்கு நாங்கள் விரும்பிய வர்ணம் பூசிக் கொண்டிருந்த காலம்.

“அதுக்கப்புறம் என்னாச்சி... எங்க அப்பாவுக்கு டிரான்ஸ்பர் வந்து நாங்க கடையநல்லூர் போயிட்டம்ல... அந்த அம்மா ஓடிப் போயிருச்சாம்ல...”

நண்பர் கேட்டார். பூங்காவின் வானொலியில் ஏழேகால் செய்தி கேட்டது. வி.பி.சிங் ராஜினாமா வாபஸ் என்று சொல்லியதை மட்டும் கேட்டுவிட்டுத் திரும்பினேன்.

“ஆமா... டீக்கடைக்கு பால் எடுக்க வரும் மாடசாமி கூட ஓடிப்போயிருச்சி...”

“அது மனசில என்ன நடந்ததோ...”

“அதோடயே அய்யம்பெருமாள் ஆள் தளர்ந்துட்டாருன்னு சொல்லலாம்... அந்த அம்மா போகும்போது இருந்த நகை, பணம்

எல்லாத்தையும் எடுத்துட்டுப் போனதும் ஒரு காரணமாயிருக்கலாம். ஆனா நிறைய பேருக்கு அய்யம்பெருமாளுக்கு இப்படி நடந்ததில சந்தோஷம்...”

“அது எப்பவும் உண்டானதுதான்... அப்புறம்...”

“அஞ்சாறு மாசமிருக்கும் இருந்த மாடுகளையும், வீட்டையும் நெலத்தையும் வித்துட்டு திடீர்னு அவரும் காணாமப் போயிட்டாரு...”

பூங்காவிலிருந்து கூட்டம் லேசாய் வடிய ஆரம்பித்தது. நட்சத்திரங்கள் எக்கச்சக்கமாய் பூத்திருந்தன. மெலிதான காற்று கேசத்தைக் கலைத்தது. நண்பர் அந்தச் சூழ்நிலையை இடைஞ்சல் செய்யக்கூடாத மாதிரி கொஞ்சம் நெருங்கிக் கேட்டார்.

“அப்புறம் நீங்க பாக்கலியா...”

“பார்த்தேன்...” என்று சொல்லிவிட்டு நிமிர்ந்த என் கண்களுக்கு பிரகாசமாய் ஒரு எரிகல் எரிந்து வானத்திலிருந்து கீழே சரிந்தது.

“அங்கே பாருங்க...” நண்பர் நிமிர்வதற்குள் புள்ளியாகி மறைந்துவிட்டது. நண்பர் ஏமாற்றத்தடன் என் முகத்தைப பார்த்தார்.

அய்யம்பெருமாளை பல வருடங்கள் கழித்து நான் பார்த்தேன். அப்பொழுது எனக்குக் கல்யாணமான புதுசு. எனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ மற்றவரின் சுதந்திரத்தில் அநாவசியமாய் குறுக்கிடக் கூடாதென்ற என் ஜனநாயகப் பண்புப்படி மனைவியின் வற்புறுத்தலுக்காய் கோயிலுக்குத் துணையாய் போகும்படி ஆனது. எப்போதும் இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் நழுவிவிடும் நான் அன்று எக்குத்தப்பாய் மாட்டிக்கொண்டதும் ஒரு வகைக்கு நல்லதுதான். இல்லாவிட்டால் அய்யம்பெருமாளை மறுபடி சந்திக்க நேர்ந்திருக்காது. தெப்பக்குளம் பிள்ளையார் கோயிலில் தேங்காய் விடலை போடவேண்டும் என்ற என் மனைவியின் வேண்டுகோளுக்கிணங்க, தேங்காயை வாங்கி கோயில் படிக்கட்டில் ஓங்கி அறையப் போனபோது அந்த முகத்தைப் பார்த்தேன். விடலைத் தேங்காய் பொறுக்குகிற சிறுவர்களுக்கு மத்தியில் அய்யம்பெருமாளும் விடலை பொறுக்க தயாராய் இருந்தார். ஒருகணம் என் கை நடுங்கியது. எப்படியோ தேங்காயை வீசிவிட்டுத் திரும்பினேன். சிதறி ஓடிய தேங்காய்ச் சில்லுகளைப் பொறுக்குவதில் அவருக்கும் பையன்களுக்கும் சண்டை. அவர் கெட்ட வார்த்தைகளால் திட்டிக் கொண்டிருந்தார். பையன்கள் அதைச் சட்டை செய்யாமல் அவர் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டிருந்தார்கள். அய்யம்பெருமாள் ஆள் தளர்ந்து கண்களில்

பித்துப்பிடித்தது போலிருந்தார்.

அதற்கப்புறம் அய்யம்பெருமாளைப் பார்க்கிற சந்தர்ப்பம் நேரவில்லை. கடைசியில் இன்று பிணமாகப் பார்க்கும்படி ஆகிவிட்டது. நாங்கள் இருவரும் ஒரே மாதிரி யோசித்துக் கொண்டிருந்ததாலோ என்னவோ ஒன்றுபோல் நீண்ட பெருமூச்சு விட்டோம்! நண்பர் மெல்லிய கசப்பான குரலில்,

“என்ன வாழ்க்கை... என்ன உறவுகள்...”

நான் சிறிது நேரம் எதுவும் பேசவில்லை. மெல்ல வாயைத் திறந்து வார்த்தைகளை அளந்தேன்.

“மனிதன் வாழும்போது எவ்வளவோ ஆசைகளோடு வாழ்றான்... ஆனால், வாழ்க்கையோ... அவனறியாமல் அவன் பிடரியில் கை வைத்தோ... காலை இடறி விடும் கல்லாகவோ இருந்து தலைகுப்புற தள்ளி விடுகிறது. விழுந்து எழ முடியாம பைத்தியம் பிடித்தலைகிறான்... அய்யம்பெருமாளை பொறுத்தவரையில் அவர் செஞ்சதுக்கு அநுபவிச்சிட்டாரு...”

“எனக்கு இந்த வேதாந்தத்திலே நம்பிக்கை கிடையாது... நாம ஒவ்வொருத்தரும் வாழ்க்கை தரும் ஏமாற்றங்களை ஒவ்வொரு விதமா எதிர்கொள்கிறோம். அய்யம்பெருமாளின் எதிர்கொள்ளல் கொஞ்சம் கடினமானது என்று வேணா சொல்லலாம்...”

“சமூகமும், மனிதர்களும் பாதிக்கப்படறாங்களே...”

“உண்மைதான். உணர்வுகளின் தீவிர கதியில் எல்லா மனுசங்களுமே பைத்தியமாகி விடுகிறார்கள்... சமயங்களில் நமக்கே அந்த மாதிரி மனோநிலை வருகிறதே. பழிக்குப் பழி, ஆத்திரம், கோபம், ஏன் பணம் சம்பாதிக்கணும்கிற வெறி...”

“அப்படின்னா இந்த வாழ்க்கை... சமூகம்... உறவுகள்... இதுக்கெல்லாம் என்ன அர்த்தமிருக்கு... அய்யம்பெருமாள் என்கிற மனிதர் அநாதையாய் செத்துப் போனார்... அவர் எதற்காக பிறந்தார்... அவருக்கும் சமூகத்திற்கும் என்ன சம்பந்தம். உண்மையில் அவர் வாழ்ந்தாரா எதற்காக வாழ்ந்தார்... ஏன் வாழ்ந்தார்?”

நண்பர் எதனாலோ திடுக்கிட்டவர்போல பேசுவதை நிறுத்திவிட்டார். மௌனம் எங்கள் மீது கவிந்தது. இருவரும் ஏதேதோ யோசனைகளில் இருந்த மாதிரி இருந்தோம். ஏனோ துக்கமாயிருந்தது. என்ன காரணம் என்று தெரியவில்லை. தூரத்தில் பூங்காவின் காவலாளி வந்து

கொண்டிருந்தான். நாங்கள் இருவரும் எழுந்து மேற்கொண்டு அதிகம் பேசாமலேயே பிரிந்துவிட்டோம்.

இரண்டு நாளாய் நான் நண்பரைப் பார்க்கவில்லை. மூன்றாவது நாள் அவரே வீடு தேடி வந்துவிட்டார். அவர் வீடு தேடி வந்தால் ஏதாவது விசேஷம் இருக்கலாம் என்று நினைத்தேன். ஆனால் அது அய்யம்பெருமாள் சம்பந்தப்பட்டது என்று கடுகளவு கூட நினைக்கவில்லை. ரெண்டு பேரும் வீட்டில் காப்பி குடித்துவிட்டு வெளியே கிளம்பினோம். வீட்டை விட்டு வெளியே வந்ததும்,

“என்ன விசேஷம்” என்றேன்.

நண்பர் தலையாட்டிக்கொண்டு பேசாமல் வந்தார். அவர் பரபரப்படைந்திருந்தது முகத்தில் தெரிந்தது. ஒரு சிகரெட் எடுத்துப் பற்ற வைத்தார். நான் பொறுமையிழந்து மறுபடியும்,

“என்ன...”

“அய்யம்பெருமாள் கதையில விடுபட்ட ஒரு விஷயம்.” நான் ஆவலுடன் காத்திருந்தேன். நண்பர் சாரதி சிகரெட்டை மறுபடியும் ஆழ்ந்து இழுத்தார்.

கையில் இருந்த மாடுகளையும், சொத்தையும் வித்து மனைவியைத் தேடி ஊர் ஊராக அலைந்தார் அய்யம்பெருமாள். ஊண் உறக்கம் மறந்து திரிந்தார். அங்கே இங்கே என்று துப்புச் சொன்ன இடத்துக்கெல்லாம் போனார். நெஞ்சில் வெறுப்பும் ஆங்காரமும் தீயாய்ப் பற்றியெரிந்து ரத்தத்தைக் கருகச் செய்திருந்தது. நாளாக நாளாக ஆக்ரோஷம் அவிந்தது. ஆனால், தேடுதலை விடவில்லை. அவர் எப்படியாவது அவளைப் பார்க்க வேண்டும். பார்த்து ஒரே ஒரு கேள்வி. ஏன்? இதுதான் இப்போது அவர் விருப்பப்பட்டது. வருஷங்களின் ஓட்டம் மனதைத் தளரச் செய்த நேரத்தில் மறுபடியும் கமுதி பக்கமாய் யாரோ பார்த்ததாகச் சொல்ல, பஸ் ஏறினார். கமுதிக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தில் கண்டுபிடித்தார். மாடசாமி கிளப்புக்கடை வைத்து நடத்திக் கொண்டிருந்தான். இரண்டு பிள்ளைகள், அய்யம்பெருமாள் நேரே வீட்டுக்குப் போனார். அந்த அம்மாள் அவரைப் பார்க்கக்கூட பிரியப்படவில்லை. அய்யம்பெருமாள் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். மூத்த பெண்ணிடம் அம்புட்டு நகைகளையும் எடுத்துக் கொடுத்துவிட்டது. மூத்த பெண் அம்மாவைப் போலிருந்தது. முழித்துக் கொண்டே அம்மா சொன்னபடி அத்தனையையும் அய்யம்பெருமாளின் முன்னால் கொண்டுவந்து வைத்தது. ஒரு கணம்

அதை வெறித்துப் பார்த்தவர் அப்படியே திரும்ப அந்தப் பெண்ணின் கையிலேயே கொடுத்து தலையைத்தடவி ஆசீர்வதித்துவிட்டு விழுந்தார். அப்போதுதான் திண்ணைக்கு அருகிலிருந்த ஜன்னலிலிருந்து விசும்பல் சத்தம் கேட்டது. உடனே அவருடைய உடல் நடுங்கியது. அதைத் தாங்க முடியாமல் வேகமாக அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டார். அதற்கப்புறம்தான் ஆள் கோட்டி பிடித்த மாதிரி ஆகிவிட்டார்.

எனக்கு உடம்பு புளகாங்கிதமடைந்தது. நண்பர் அர்த்த பாவத்துடன் அமைதியாக இருந்தார்.

“அய்யம்பெருமாள் வாழ்ந்திருக்கிறார். அதுவும் ஒரு உன்னத கணத்தில் வாழ்ந்திருக்கிறார். மனிதனிடம் இன்னமும் அன்பு, பெருங் கருணை, பெருந்தன்மை அழியவில்லை...”

உடனே நான்,

“உண்மையில் மனிதன் மகத்தானவன்.”

சிகரெட்டைக் கீழே போட்டு அணைத்துக்கொண்டே சாரதி,

“அவன் அசிங்கங்களையும் சேர்த்தே...” என்று முடித்தார். குளிர்ந்த காற்று வீசத் துவங்கியது. எங்கள் இருவரின் மனசிலும் அய்யம்பெருமாளின் ஆகிருதி நிறைந்திருந்தது.

23. மின்னல் பொழுது

உட்காராமல் அங்குமிங்கும் அலைந்தான். எல்லோரும் உட்கார்ந்துகொண்டோ படுத்தோ நித்திரை வசப்பட்டு விட்டார்கள். பஸ் இனிமேல் காலையில்தான். நிச்சயப்பட்டு விட்டது. பெருக்கி கழுவிவிட்டது மாதிரி பஸ் ஸ்டாண்ட். மழை வந்தாலும் வரலாம். அவனைப் போல தூக்கம் வராமல் ஒன்றிரண்டு பேர் டீக்கடை ஓரங்களில் வடிந்திருந்தனர். அவன் தூங்குகிற ஒவ்வொரு முகத்தையும் முகபாவத்தையும் பார்த்துக் கொண்டே நடந்தான்.

இன்னமும் ஆறு மணி நேரம் இருந்தது, முதல் பஸ் வர. பஸ் ஸ்டாண்ட் ரொம்பவும் சின்னது. நாலைந்து முறை சுற்றி விட்டான். ரெண்டு டீயும் குடித்தாயிற்று. இனி என்ன செய்யலாம்? திரும்பியபோது எதிர்ப்பட்ட முகம் கௌரியை நினைவுபடுத்தியது. கௌரி... கௌரி... வாய் முணுமுணுத்தபோது முகம் வியர்வையில் நனைந்தது. அவன் வேகமாக பஸ் ஸ்டாண்டை விட்டு வெளியே நடந்தான்.

தெரு கொஞ்சம் மாறியிருந்தது. புதிதாய் வீடுகள் முளை விட்டிருந்தன. ஆனால், எப்போதும் போலவே தெரு விளக்குக் கம்பம் குப்பைகளுக்கிடையில் பூத்திருந்தது. புதிதாய் டியூப்லைட் தெருவுக்குள் பிரகாசித்தது. தலைமாடு கால்மாடாய் குடும்பங்கள் பரவிக் கிடந்தன. அவர்களின் சுதந்திரம் சந்தோஷம் தருவதாய் இருந்தது. வீட்டை அடையாளம் கண்டு கொண்டான். அவன் முன்பு பார்த்த மாதிரியே சந்தனக்கலரில் பார்டர் அடிக்கப்பட்ட வாசல் மாறாமலிருந்தது. வீட்டைக் கண்டதும் படபடத்தது நெஞ்சு. வீட்டின் முன் நின்றான். இப்படியே திரும்பிவிடுவோமா? கதவைத் தட்டக் கையை ஓங்கியபோது எங்கோ காவல் படையின் விசில் சப்தித்தது. குற்றவாளிபோல் அங்குமிங்கும் பரபரவெனப் பார்த்தான். திரும்பிவிடலாமா? கூண்டில் ஏறிவிட்டு தப்பிக்க நினைப்பதா? தண்டனை என்னாவது?

“கௌரி... கௌரி...”

தொண்டையிலிருந்து வெறுங்காற்றாய் வந்தது. என்ன ஆச்சு. பேச்சு நின்றுவிட்டதா? இதுதான் தண்டனையா? பயத்தில் கொஞ்சம் சத்தமாகவே ‘கௌரி’ என்று கத்திவிட்டான். வீட்டுக்குள்ளிருந்து குரல் கேட்டது - ‘யாரது?’

‘கௌரி இருக்காளா?’

இது எல்லாரையும் கொஞ்சம் அவசரமாக எழுப்பிவிட்டது போல் தோன்றியது. லைட் ஒளிர்ந்தது. வாசல் கதவைத் திறந்தவர் இவனைப் பார்த்ததும் அகலமாய் கண் விரித்து,

“வாங்க தம்பி வாங்க... வாங்க...” பரபரப்புடன் உள்ளே நடந்தார் அந்தப் பெரியவர்.

“கௌரி... கௌரி யார் வந்திருக்கான்னு பாரு...”

குரலில் ஆனந்தம் இழையோடியது. அவள் வந்தாள். முதலில் சரியாகக் கவனிக்காதவளே போல கண்களைக் கசக்கிக் கொண்டாள். சட்டென ஒரு வலி இதயத்தில்! உடம்பு சிலிர்த்தது. முகம் சுருங்கி விரிந்தது. ‘பிரார்த்தனை பலித்துவிட்டது...’

“வாங்க.”

குரல் தழுதழுத்து சோகமாய் ஒலித்தது. அழுகை பீறிடும் போல முந்தானையால் அடக்கினாள். கண்கள் அருவியாய் கொட்டியது. அவனுக்கு முகம் விகாரமானது. நிலை கொள்ளாமல் தவித்தான். முள்ளின் மேலே இருப்பதைப் போல துடித்தான். உள்ளேயிருந்து

அவளுடைய அம்மா வந்தாள்.

“வாங்க தம்பி...”

அழுத்தமாய் அழைத்தாள். யாருக்கும் அடுத்து என்ன பேசுவதென்றே தெரியவில்லை. அமைதி. ஒரு நிமிஷம் இறுக்கம். வியர்வையில் நனைவது போல உணர்வு அவனுக்கு. சட்டைப் பித்தானைக் கழற்றிவிட்டான். கர்ச்சீப்பால் முகத்தைத் துடைத்தான். எல்லோர் முகத்தையும் தவிர்க்க விரும்பினான். குறிப்பாக கௌரியின் முகம். அதுவும் அந்த முகத்தில் தோன்றிய உணர்ச்சிகள்... அவனால் தாங்க முடியவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தான். வீடு கொஞ்சமும் மாறவில்லை. பேசாமல் ஏதாவது பத்திரிகையில் பயணம் போய் நேரத்தைக் கழித்திருக்கலாமோ. முள்ளாயிருந்தது உட்கார்ந்திருந்த நாற்காலி. இவள் ஏன் இப்படி ஆகிவிட்டாள். இருபத்தெட்டு வயதில் ஐம்பதைத் தாண்டியவள் போல். அந்தக் களை எங்கே போச்சு? அதைத்தான் நீ பறித்துக் கொண்டாயே. ஈனஸ்வரத்தில் குரல் கேட்டது. இந்த அமைதியை சகிக்க முடியவில்லை. ஏதாவது பேசியே ஆகவேண்டும். அவன் வாய் திறந்தான்.

“எல்லோரும் சௌக்கியந்தானே...”

இந்தக் கேள்விக்கு பதிலும் அவனுள்தான் இருந்தது.

“சௌக்கியமா... எப்படி தம்பி சௌக்கியமா இருக்க முடியும்... நீங்க எப்படி இருக்கீங்க...”

“ஏதோ இருக்கேன்.”

“ஆமா தம்பி என்னதான் நினைச்சிட்டிங்க மனசிலே... முழுசா மூணு வருசமாச்சு... எட்டியே பார்க்கல... எந்த ஊர்ல இருக்கீங்கன்னு தகவலும் கிடையாது... இந்தப் பொண்ணு இங்க தெனமும் அழுதழுது சாகுது... எப்பதான் கூட்டிட்டுப் போறதா உத்தேசம்...”

கௌரி திரும்பி அம்மாவை முறைத்தாள். அவன் வாய் திறக்க முயன்றான். தொண்டைக்குள் கல் அடைத்தது போல் இருந்தது. வாய்க்குள் முனங்கிய மாதிரி பேசினான்.

“எதுக்கும் ஒரு நல்ல நேரம் வரவேண்டாமா?”

பேசாமல் நின்றிருந்த பெரியவர் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு கையில் ஏனத்துடன் வெளியே கிளம்பினார்.

“என்ன நேரமோ... காலமோ தம்பி இவ தலைல என்னதான்

எழுதியிருக்கோ...”

“ஆமா ஏங்க போட்ட லெட்டருக்கெல்லாம் பதிலே போடலே...?”

கௌரியின் கேள்வி முகத்திலறைந்தது. ஒருகணம் திடுக்கிட்ட முகத்தை கர்ச்சீப்பால் துடைத்துக்கொண்டே,

“ஒரு லெட்டர் கூட வரலியே...” மனம் தொண்டையை இறுக்கியது.
“பொய்... பொய்...” என்று சுசீலா அங்கே நின்றாள்.

“ஏங்க லெட்டர் மேலே லெட்டரா போட்டுட்டுருக்காங்களே ஒரு பதில் போடுறதானே...”

“அட சும்மா இரு... பதில் போட்டா அம்புட்டுதான். எல்லாந் தெரிஞ்சுடும்...”

“தெரிஞ்சா என்ன... இப்படி பயந்து பயந்து எத்தனை நாளைக்கு... ஊர்லேருந்து யாராவது வந்தா ஒளிஞ்சுகிடுறீங்க... இப்படி பயப்படுறவுக எதுக்கு அன்னிக்கு எம்பின்னால சுத்தணும்... கெஞ்சி கூத்தாடணும்... இல்ல நேரடியா அவங்ககிட்ட சொல்லி தீத்திர வேண்டியதானே...”

“அது முடியாது சுசீலா...”

“ஏன்?”

“அவ முகத்தை பார்த்தே என்னால பேச முடியாது. அப்புறம் என்ன காரணத்தை சொல்லுவேன் தீக்கறதுக்கு...”

“சரி, அவங்களை இங்கே கூட்டிட்டு வாங்க ரெண்டு பேருமா இருக்கோம்னு ஆயிரந்தடவை சொல்லியாச்சு...”

“வேண்டாம்...”

“அதுவும் வேண்டான்னா என்ன செய்யறது...”

“நீ ஒண்ணுஞ்செய்ய வேண்டாம்... ஒஞ்சோலிய பாரு...”

அவன் கையிலிருந்த பால் சுட்டது. இந்த நேரத்தில் எங்கே போய் அலைஞ்சி பால் வாங்கிட்டு வருகிறார். நிமிர்ந்தான். கௌரி அழுது கொண்டிருந்தாள். பெரியவர் ஏதும் செய்யத் தோன்றாமல் கொடியில் கிடந்த வேஷ்டியைத் திரும்பவும் எடுத்து மடித்துப் போட்டார்.

“நா வேற ஊருக்கு மாத்திட்டம்ல... இப்ப புதுக்கோட்டையில் இருக்கேன். அதான் நீ போட்ட லெட்டர் வராம இருந்திருக்கும்...”

மறுபடியும் பொய். அவன் இருமினான். கௌரி நிமிர்ந்தாள். அழுகை

நின்றிருந்தது. இதற்குமேல் எதுவும் பேச வேண்டாம் போல் முகட்டைப் பார்த்தாள்.

“சரி சரி எல்லாத்தையும் காலைல பேசிக்குவோம்... தம்பிக்கு படுக்கை கொடு கௌரி... இல்லைனா ரூம்ல வேணா படுத்துக்கிறீங்களா?”

பெரியவர் சொன்னதைக் கேட்டதும் அவனுக்கு ஆசுவாசமாக இருந்தது.

“இல்ல... நா வெளியில படுத்துக்கிறேன்...”

“லேசா குளிர் இருக்கு...”

“பரவால்ல...”

“சரி. தம்பிக்கு அந்த புது போர்வையை கொடு...”

படுக்கையைக் கொடுக்கும்போது ஒரு பார்வை பார்த்தாள். இவன் கூசினான். நிமிரவே முடியவில்லை. “அடேய் சண்டாளா வாழ்க்கையைக் கெடுத்திட்டியே பாவி” என்று சபிக்கிற அர்த்தத்தை கற்பனை பண்ணிக் கொண்டான். படுத்து வானத்தில் மனசை பொருத்த இடம் தேடிக் கொண்டிருந்தான். உள்ளே பேச்சுச் சத்தம் கேட்டது. தீர்ப்பெழுதுவதாய் நினைத்தான். மனசை நாலுபேர் சேர்த்து ஏறி மிதித்துப் பிசைவதுபோல வலி. அழுகையில்லாத சோகம் தொண்டைக்குள் பரவியது. செருமிக் கொண்டான். ‘கௌரி’ வாய் நிறைய முணுமுணுத்தான். பேசாமல் இங்கேயே இருந்துவிட்டால்... துணையை பிரிந்த கொக்கு ஒன்று “சுசீலா” என்று கத்திக்கொண்டே இவனைக் கடந்தது. சுசீலா கௌரி... சே எது இப்படியெல்லாம் நடத்திச் சென்றது. சைத்தான் பிடித்துவிட்டதா...? பிசாசுகளின் வசம் மனது போய்விட்டதோ... ஒருவேளை இதுதான் வாழ்க்கையின் முடிவா? இதோடு இப்பவே முடிந்துவிடுமோ. இழுக்கிற மூசசே இறுதி மூச்சாய் இருக்காதா என்று ஏங்கினான்.

சுசீலாவைப் பார்த்தது, திருட்டுத்தனமாய் கல்யாணம் முடித்தது, எல்லாமே கனவாய் உதிர்ந்து விடாதா? உடனே ‘துரோகி’ என்ற அலறல் உடல் பூராவும் கேட்டது. மண்டையைப் பிளப்பதுபோல இருந்தது. கண்களை மூடி மூடித் திறந்தான்.

எழுந்து கடிகாரத்தைப் பார்த்தான். அவசரமாக படுக்கையைச் சுருட்டி கதவருகில் வைத்தான். கால்களில் செருப்பை நுழைத்துக்கொண்டு திரும்பினான். தலை முடியைக் கோதி விட்டுக்கொண்டான். எங்கிருந்தோ அகாலமாய் கோயில்மணி ‘கௌரி’ என்றடித்தது. தப்பியோடும் குற்றவாளியைப்போல் ஜாக்கிரதையாகக் கதவைத்

திறந்து வெளியே நடந்தான். இன்னொரு முறை வருவேன் என்று ஏனோ நினைத்தான்.

பஸ்ஸிற்குள் ஒரே சலசலப்பு! இளங்காலையின் குளிர் நடுக்கியது. “டிக்கெட் எடுத்த ஆள் மட்டும் ஏறுங்க. டிக்கெட் எடுக்காம உக்காந்தா இறக்கி விட்ருவேன்...” குளித்து நெற்றி நிறைய திருநீறும் குங்குமமும் அப்பியிருந்த கண்டக்டர் கத்தினான். அவன் ஜன்னல் ஓரமாய் உட்கார்ந்தான். பையில் டிக்கெட்டை பத்திரப்படுத்திக் கொண்டான். அவசரப்பட்டான். பொறுமையிழந்தான். இன்னும் ஏன் பஸ் கிளம்பவில்லை. முகம் சவக்களையைப் பெற முயற்சித்தது. பஸ் போகும்போது சில்லென்ற குளிர் காற்று முகத்திலறைந்து தலைமுடியைக் கலைத்தது. வெளியே இரண்டு பக்கமும் கரியிருட்டு. தூரத்து விளக்குகள் மின்மினிப் பூச்சிகள். மனசில் சில்வண்டு இரைந்து தப்பிக்க வழி தேடியது. வெளியே இருட்டு அவனுக்குப் பிடித்திருந்தது. கண்களை மூடினான். உள்ளேயும் இருட்டு. எல்லாமே கனவு என்று சொல்லிக் கொண்டான். அது மனசுக்கு இதமாயிருந்தது.

24. கருப்பு மதியம்

“எலேய் முருகா... மோட்டார் சத்தம் கேக்குது. மணியான்னு... பாருலேய் மக்கா...”

“மணி இல்லப்பா... வேற யாரோ போறாக. வந்தா வீட்டுக்கு வரமாட்டானா... ஏம் போட்டு தொண்டைத் தண்ணிய வீணாக்கிறீக...”

“இல்ல மக்கா வீடுகீடு தெரியாம போயிறக் கூடாதுல்ல அதுதான்...”

“மாசாமாசம் வர்றவனுக்கு வீடு தெரியாமல் போயிருமா...”

என்ற முருகனின் அதட்டலான குரலுக்கு உள்ளேயிருந்து பதில் எதுவும் வரவில்லை. பொன்னையா பிள்ளையும் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டார். மணிக்கு வீடு தெரியாமல் போவதற்கு வாய்ப்பில்லை. ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்னிக்கு பொன்னையா பிள்ளையைக் கூட்டிட்டுப் போவதென்று ஏற்பாடு. அன்று மதியம் அவருடைய தம்பி பரமசிவம் வீட்டில் சாப்பாடு. அதுவும் விரதச் சாப்பாடு. பொன்னையா பிள்ளைக்கு நிலை கொள்ள வில்லை. காலையிலிருந்தே சாப்பிடவில்லை.

பொன்னையா பிள்ளை காத்திருந்தார், மொபட்டின் மோட்டார் சத்தத்திற்காக, அந்தச் சத்தத்தினூடாக பாவு போல வரும் தம்பி மகன் சுப்பிரமணியின் குரலுக்காக. அந்தக் குரலைக் கேட்டதுமே அவருக்கு அமாவாசைச் சாப்பாடு சாப்பிட்டது போலவே ஆகிவிடும். வழக்கமாக சுப்பிரமணி வருகிற நேரம் தாண்டிவிட்டது. இப்போது கொஞ்ச நாளாகத்தான் இந்த ஏற்பாடு. அதுவும் அவருக்கு உடம்பு முடியாமல் படுக்கையில் போட்ட பிறகு. லேசான நடமாட்டத்தைத் தவிர வேறு எதுவும் பொன்னையா பிள்ளையால் செய்ய முடியாது.

பொம்பளைப் பிள்ளைகள், ஆவுடையம்மாளும் மரகதமும், உயிரின் நெருப்பைத் திரட்டி தீக்குச்சிகளில் சேர்க்க தீப்பெட்டியாபீசுக்குப் போயிருந்தார்கள். தீக்குச்சிகளுக்கு நெருப்பின் சூட்சுமத்தைத் தந்ததுக்குப் பிரதிபலனாக மெழுகின் மக்குவாசமும், பழைய சோறும், சாய்பு கடை புரோட்டா சால்னாவும் கிடைத்தன.

முருகன், பொன்னையா பிள்ளையின் கடைசி மகன். திரையரங்கில் சீட்டு கிழித்தான். சினிமாவின் மாயம் போல் வந்தான். போனான். பொன்னையா பிள்ளை மட்டும் நோய்களைச் சீராட்டி சீராட்டி தனியே கிடந்தார். கிழிந்த ஜமுக்காளத்தில் வாழ்ந்த வாழ்வின் திரடுகளை விரல்களால் உருட்டிக்கொண்டே ஓட்டுச் சாய்ப்பின் வீறல்களை,

ஓட்டைகள் வழியே தரையில் விழும் ஒளிச்சதுரங்களை வெறிப்பார். பாய்ந்து ஏறும் ஒளிப்புகையில் அலையும் தூசிகளைப் பிடித்துக்கொண்டே ஏறி, ஓட்டுச் சாய்ப்பின் மீது நின்று தன் பழைய வாழ்க்கையை மீண்டும் பார்ப்பார். தகிக்கும் சூரிய வெள்ளத்தை, அலைமோதும் ஒளிக்கடலை கண்களால் தாங்க முடியாமல் இமைகளை மூடி விரிப்பார். எப்போதும் யோசிப்பது போன்ற நிழல் கவிந்த முகம். நீண்ட தாடியும் வழுக்கை விழுந்து பிடரியில் மட்டும் வளர்ந்த முடியும் வளைந்து கிடக்கும். விரல்களினால் வலது, இடது பக்க மீசைகளை கண்களை மூடி மெய்மறந்து உருவி விடுவதும், திடும்திடுமென விழித்துப் பார்ப்பதுமாக பொழுதைக் கழித்தார் பொன்னையா பிள்ளை.

அவர் யோசனையெல்லாம் வகை வகையான சாப்பாடு பற்றித்தான். எந்தச் சிந்தனையும் எந்தப் பேச்சும் உணவு வகைகளைச் சுற்றியே இருக்கும்படி பேச்சின் திசைகளை இழுத்துக்கொண்டு வந்து முடிப்பார். அவர் ஒரு காலத்தில் பிரபலமாக நடத்திய கிளப்புக் கடை கண்ணில் ஆடும். அப்போதுதான் எத்தனை வகையான பலகாரங்கள், எத்தனை வகையான சித்ரான்னங்கள், சாப்பாடு வகைகள். அவர் மனைவி சீதாம்மா மட்டும் கொறைச்சலா என்ன. சீதாம்மா கையினால் செய்த சொதியை நினைத்தாலே இப்பவும் அவருக்கு எச்சில் ஊறும். கடை நொடிந்துபோன பிறகும் வீட்டில் என்ன கொஞ்சமாகவா நடந்தது. தினசரி கல்யாணப் பந்திச் சாப்பாடு மாதிரிதான். யார் வந்தாலும் பொன்னையா பிள்ளை வீட்டில் கை நனைக்காமல் போனதில்லை. கடைசியில் வீட்டிலும் காரை பெயர்ந்து உதிர்ந்து விழுந்தபோது, இரயில்வே நிலையக் கடையில் பொட்டலம் கட்டிக் கொடுக்கப் போனார். நினைத்தபோது வீட்டிற்கு வந்து, தான் ஒருத்தன் உயிரோடு இருப்பதை வீட்டாருக்குத் தெரிவித்துவிட்டுப் போவார்.

இப்போது உடம்புக்கும் வந்து எங்கேயும் போக முடியாமல் ஆனபிறகு வகையான சாப்பாட்டுக்கே கஷ்டமாகிவிட்டது. கிடைத்த ஒரே ஒரு ஆறுதல் தம்பி பரமசிவம் வீட்டில் சாப்பிடுகிற அமாவாசைச் சாப்பாடு. பித்ருக்களின் புண்ணியத்தினால் அவருக்கு இந்தச் சாப்பாடாவது கிடைக்கிறதே என்று திருப்திப்பட்டுக் கொள்வார். ஆனால், இன்று என்னாச்சுன்னு தெரியல. இன்னமும் சுப்பிரமணியைக் காணவில்லை. வயிறு கடாமுடாவென்று இரைந்தது. காலையில் விரதம் என்பதால் ஒன்றும் சாப்பிடவில்லை. ஒரு மடக்கு காப்பி குடித்ததோடு சரி. மத்தியானம் தம்பி வீட்டில் சேர்த்து ஒரு பிடிபிடிக்கலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தார். வெயில் அக்கினி மழையைப் பொழிந்தது. உடல் சோர்ந்துகொண்டே வந்தது. கண்களை மூடினார். என்ன இந்தப்

பயலைக் காணலை. கண்ணுக்குள் சுப்பிரமணி நடந்து வருவதுபோல ஒரு தோற்றம். மறுபடியும் முருகனைக் கூப்பிட்டார்.

“ஏலேய் முருகா... சுப்பிரமணி நடந்து வாரானோ என்னம்மோ. கொஞ்சம் தெரு முக்கு வரைக்கும் போய் பாத்துட்டு வாயேன். நேரமாச்சி இன்னங்காணலை...”

சைக்கிளை ஒக்கிட்டுக் கொண்டிருந்த முருகன், கோபத்தோடு

“வேற வேலைக் கழுதயில்லை. பேசாம இருக்க மாட்டியளா... சும்மா தொண தொணன்னுகிட்டு...”

முருகனுக்கு மட்டுமில்லை. பொம்பளைப் பிள்ளைகளுக்கும்கூட அவர் சாப்பாட்டுக்காகத் தம்பியின் வீட்டுக்குப் போவதில் விருப்பம் இல்லை.

“அதென்ன எச்சிக்கலத்தனம்... கஞ்சியோ கூழோ இருக்கதக் குடிச்சிட்டு இங்கனேயே கெடக்க வேண்டியதானே... நாக்கு ருசி கேக்குதோ... குடும்பத்தை சீரழிச்சதே இந்த நாக்கு ருசிதானே...”

இந்த மாதிரியான வசவுகள் கிளம்பி வரும்போது அவர் முற்றும் துறந்த யோகியாகவோ, ஒன்றும் அறியாத குழந்தையாகவோ ஆகி, கண்களை மலங்க மலங்க மூடி விழிப்பார். ஏதாவது பதில் பேசி ஏடாகூடமாகி தம்பி வீட்டுக்குப் போவதோ அல்லது ஏலாத காலத்தில் வீட்டில் கிடைக்கிற பழையதும், காமாசோமான்னு வைக்கிற குழம்பு கறிகளும், சாய்பு கடை இட்லியும் புரோட்டாவும், குமட்டிக் கொண்டு வரும் சால்னாவும் கிடைப்பதோ அரிதாகிவிடக் கூடாதே என்று நினைத்து வாயே திறப்பதில்லை.

ஒவ்வொரு அமாவாசையிலிருந்து அடுத்த அமாவாசை வரைக்கும் பொழுது போகாத நேரங்களில் இதுவரைக்கும் அமாவாசைகளில் சாப்பிட்ட சாப்பாடு, கறி வகைகள் பற்றிச் சிந்திப்பார். கைவிரல்கள் சுவாரசியமாய் மீசையை நீவிவிட இதை இப்படிச் செய்திருந்தால் நன்றாக இருக்கும் அதை அப்படிச் செய்திருந்தால் நன்றாக இருக்கும் என்று மனசுக்குள் கணக்குப் போட்டுக் கொண்டிருப்பார். சில சமயங்களில் வீட்டில் பொம்பளைப் பிள்ளைகள் மனோநிலை சுமூகமாக இருக்கிற சமயம் வாய்விட்டுச் சொல்லி சிலாகிப்பார். சாப்பாட்டுக்கு ரொம்ப ஏங்கிப்போய் மனசு மயங்கியிருக்கிற பொழுதுகளில் மாசத்திற்கு ஏன் ஒரே ஒரு அமாவாசை வருகிறது என்றுகூட பைத்தியக்காரத்தனமாய் நினைப்பார். ஆனால், வெளியே இதுவரை சொன்னதில்லை. அமாவாசை நெருங்க நெருங்க முகத்தில் ஒளி கூடிவரும். பேச்சு தெளிவாய் இருக்கும். தேதி காலண்டர்

பார்க்காமலேயே ஒவ்வொரு அமாவாசையும் என்ன கிழமை வருகிறது என்று அவராகவே கணக்குப் போட்டு வைத்திருப்பார். ஆனாலும், ஆவுடையம்மாளிடம்,

“ஏளா... இந்த மாசம் என்னக்கி வருது அமாவாசை...”

“ஞாயித்துக்கிழமைப்பா...”

“ஞாயித்துக்கிழமையா... என்ன எளவு கணக்குத் தெரியுது... வயசாச்சில்ல... ஒண்ணும் புரிய மாட்டேக்கு...”

என்று குரல் சலிக்கும்... உள்ளுக்குள் அவர் கணக்கு சரிதான் என்று சந்தோஷம் பொங்கும். தவிப்பு கூடி இந்த அமாவாசைக்கு என்னென்ன காய்கறி இருக்கும் என்று யூகமாய் கற்பனை செய்வதில் அலாதி விருப்பமுடையவராய் இருந்தார் பொன்னையா பிள்ளை. மாங்காய் பச்சடி, காரட் பொரியல், முருங்கைக்காய் சாம்பார் இந்தத் தடவை இருக்கும் என்று நினைத்தார். ஆனால், இன்னமும் மணியைக் காணவில்லை. பொதுவாய் இவ்வளவு தாமதம் ஆவதில்லை. தலை கனத்து பாரமாய் இருந்தது. கை கால்கள்கூட மரத்துப் போய்விட்டன. மறுபடியும் முருகனைக் கூப்பிடலாமென்றால் திட்டினாலும் திட்டுவான். ஏன் இவ்வளவு லேட் பண்ணுதான் சின்னப்பயல் என்று மணியைச் செல்லமாக மனசுக்குள் வைது கொண்டார். கடுமையாகத் திட்டப்போய், ஒருவேளை வராமல் போய்விட்டால்... ஒருவேளை வரவே மாட்டானோ. அதை நினைத்தே பார்க்க முடியவில்லை. பசி ஏப்பம் விட்டார். ஒட்டிச் சுருங்கிய குடல் வழியே காற்று புகுந்து வந்ததில் வலித்தது. மந்தித்துப் போயிருந்த காதுகளைக் கூர்மையாக்கினார். ஏதாவது மோட்டார் சத்தம் கேட்டால் அது சுப்பிரமணிதான் என்று நினைத்தார். வாசலில் நிழலாடுகிறது என்று கற்பனை செய்தார்.

சுப்பிரமணி புறப்பட்டு வந்து கொண்டிருப்பான், ரவுண்டானா தாண்டியிருப்பான். ஓடைப் புளிய மரத்தின் கீழ் வந்து கொண்டிருப்பான். இன்னும் ஐந்து நிமிடத்தில் வந்துவிடுவான். இன்னும் ஐந்து நிமிடம்... இன்னும் ஐந்து நிமிடம்... நேரம் ஊர்ந்தது. கண்ணுக்கு முன்னால் திரை விரிந்த மாதிரி தோற்றம். மூடினாலும், திறந்தாலும் ஒரே மாதிரி இருந்தது. மயக்கம் வரும்போல் இருந்தது. லேசாய் தலைவலியும் ஆரம்பிக்க, தம்பி காலாகாலத்தில் அனுப்பியிருப்பான். இந்தப் பயல்தான் எங்கேயோ ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறான் என்று திடமாக நம்பினார். சின்னப் பயகளுக்கு நம்ம நிலைமை தெரியுதா? அவருக்கு நேரம் ஆக ஆக நம்பிக்கை குறைந்தது. இன்னமும் வரவில்லையென்றால்...

“எலேய் முருகா... இன்னியும் மணியக் காணல... என்னன்னு தெரியல... எங்கியாச்சும் ஊர் சுத்தறானோ என்னவோ... நீ கொஞ்சம் சைக்கிள்ள என்னைய அங்கன விட்டுறல... லேய் ராசா...”

முருகன் வாசல் திண்ணையிலிருந்து வேகமாக எழுந்து வீட்டுக்குள் வந்தான்.

“கொஞ்சமாச்சும் அறிவிருக்கா... வர்றதா இருந்தா இதுக்குள்ள வந்திருப்பானே... வரலைன்னா பேசாம வீட்ல உண்டானதை தின்னுட்டு கெடக்கணும்...”

“இல்ல அவம் பல சோலிக்காரன். ஒருவேளை மறந்திருப்பான். அமாவாசை விரதம் பெரியவங்களுக்கு செய்ற கடமை. அத தவறவிடக் கூடாது... பாவம்...”

“எனக்கு நல்லா வாயில வருது...” என்று முருகன் முடிக்குமுன்பே வீட்டுக்கு முன்னால் மோட்டார் சத்தம் கேட்டது. முருகன் திரும்பிப் பார்த்தான். சுப்பிரமணி மொபெட்டை நிறுத்திவிட்டு வந்தான். அவனைக் கண்டதும் பொன்னையா பிள்ளைக்கு அருள் வந்ததுபோல் ஆகிவிட்டது.

“ஏய்யா இவ்வளவு லேட்டு... இந்தப் பனாதிப்பயகிட்டே கொண்டுபோய் விடுடான்னா பெரிய மயிரு கணக்கா எக்காளம் பேசுறான்... சின்னச் சாதிப்பய... தலைப்பிரட்டுத்தனம் அதியமாயிருச்சி...”

கணீரென்று கத்தினார் பொன்னையா பிள்ளை. முருகன் அதிர்ந்து போனான்... அப்படி அவர் எந்நாளும் பேசியவரல்ல.

“பெரிப்பா... அப்பா ஊரில இல்ல. நேத்திக்கு யாரோ அவுக பிரண்டு செத்துட்டார்னு துஷ்டிக்கு போயிட்டாக... அம்மைக்கும் உடம்புக்கு முடியல. இன்னக்கு சமையலே பண்ணல... அதான் அம்மை போய் சொல்லிட்டு வாடா... அவுக காத்திட்டிருப்பாகன்னு சொல்லிவிட்டா...”

சுப்பிரமணி என்ன சொன்னான் என்றே பொன்னையா பிள்ளையால் கிரகிக்க முடியவில்லை. கண்ணுக்கு முன்னால் பொறி பறந்தது. உடல் நடுங்கியது. மயங்கி கீழே சாயப் போனார். சுப்பிரமணி ஓடிப்போய் அவர் கையைப் பிடித்துக்கொண்டான். அப்படியே தலை சாய்த்துப் படுத்தார். திடீரென வீட்டுக்குள் முருங்கைக்காய் சாம்பார் மணம் வீசியது. பொன்னையா பிள்ளையின் பஞ்சடைந்த கண்களிலிருந்து கண்ணீர் கோடுகளாய் இறங்கியது. முருகன் அப்பாவையேப் பார்த்துக்கொண்டிருந்தான்.

25. பழி

இருளப்ப சாமியைப் பார்க்கும்போது அப்பாவின் ஞாபகம் வருகிறதா அல்லது அப்பாவைப் பார்க்கும் போது இருளப்ப சாமி நினைவு வருகிறதா என்று இதுவரை தெளிவாகப் புரிந்ததில்லை ஆறுமுகத்துக்கு. பங்குனி உத்திரக் கொடை நடக்கும்போது சன்னதம் கொண்டு பார்க்கக் கொடூரமாய்க் காட்சி தரும் இருளப்பசாமி கோயில் அவன் வீட்டுக்கு அருகிலேயே இருந்தது. பகலிலும்கூட அந்தக் கோயிலைத் தாண்டிப் பள்ளிக்கூடம் போகும் போதெல்லாம் அடி வயிற்றிலிருந்து பயம் எழுந்து நெஞ்சைக் கவ்வும். நிமிர்ந்து பார்க்கும் தைரியம் என்றைக்குமே வந்ததில்லை. ஆறுமுகத்துக்கு அப்பாவைப் பிடிக்கவில்லை. எவ்வளவோ காரணங்கள் இருந்தன. அப்பா ஊரில் பேர் பெற்ற குஸ்தி பயில்வான். பல ஊர்களில் மல்யுத்தம் செய்து பரிசுகள் வாங்கியிருந்தார். ஓங்குதாங்கான உருவமும், வீச்சருவாள் மீசையும், வெடிச் சிரிப்பும், தொடைக்கு மேலே அன்டிராயர் தெரிகிற மாதிரி கட்டுகிற வேட்டியும், அவரை அருகில் நெருங்கவே விடாமல் பயமுறுத்தின.

எப்போதும் கூடவே ரெண்டு பேர்-அப்பாவின் பின்னால் பவ்வியமாய் அப்பாவின் தலை திரும்புகிற திசையெங்கும் அவர்களும் திரும்பிப் பார்ப்பார்கள். தொழில் என்னவோ பெட்டிக்கடை வியாபாரம்தான். கடையில் மிக அபூர்வ மாகவே பார்க்க முடியும். அவர் பஞ்சாயத்துப் பண்ணி தீர்த்து வைப்பதற்காக நிறைய சண்டைகள் ஊரில் நடந்தன. சில சண்டைகளை அவரே வளர்த்தார். அண்ணன் தம்பி, பங்காளிகள், புருஷன் பொண்டாட்டி என்று எல்லா வகையான தகராறுகளையும் பஞ்சாயத்துப் பண்ணி தீர்த்து வைப்பார். போலீஸ்காரர்களும் அவரும் பரஸ்பரம் சலாம் வைத்துக் கொள்வார்கள். வாயில் எப்போதும் கெட்ட வார்த்தை நாற்றம். எந்த விஷயத்தையும் எந்த மனோநிலையில் பேசினாலும் கெட்ட வார்த்தைகளை முன்பின் பாரா போட்டுப் பேசினால்தான் திருப்தி அவருக்கு. சுற்றிலும் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அதைப் பற்றிக் கவலை கிடையாது. எல்லா வாக்கியங்களின் இடைவெளிகளிலும் ஒரு சிரிப்பு. சீனிவெடி மாதிரி அர்த்தம் அர்த்தமின்மையைக் கடந்த சிரிப்பு.

வெளியில் எப்படி சண்டியராக இருந்தாரோ, வீட்டிலும் அப்படியே இருந்தார். அம்மா, அப்பாவைக் கண்டாலே நடுங்கினாள். அவர் குரலைக் கேட்ட மாத்திரத்தில் வாய் ஏதேதோ முணுமுணுக்கும். சரியாய் செய்துகொண்டிருக்கிற காரியங்களும் தடுமாறும். மெலிந்த அவளுடைய சரீரத்திலிருந்து பெருமூச்சுகள் ஒன்றன்பின் ஒன்றாய்

விளைந்து பெருகும். அம்மாவின் முகம் இருண்டு, விநோதமான மிருகத்தை எதிர்பாராமல் சந்திக்க நேரிடும்போது ஏற்படும் சாவின் விதியே போல் உணர்ச்சியற்று இருக்கும். நனவுநிலை கடந்த கண்கள் வெறித்து நிற்கும். அப்பா எப்போதும் அவளைக் கூப்பிட்டுக் கொண்டேயிருப்பதான நினைவில் படபடப்புடன் இருந்தாள். ஆறுமுகம் என்ன சொன்னாலும் சரி, செய்தாலும் சரி, "அப்பாக்கு தெரிஞ்சா கொன்னு போடுவார்... அப்பாட்ட கேட்டுட்டு வாங்கு... அப்பாட்ட சொல்லிருவேன்... அப்பா வரட்டும் இரு..." என்று புலம்பிக் கொண்டே இருப்பாள். அம்மாவைப் பொறுத்தவரை அப்பா எங்கும் நீக்கமற நிறைந்திருந்தார். அசரீரி போல அம்மாவிடம் பேசினார். தன்னுடைய இன்னொரு பிரதிமையை அம்மாவை கண்காணிக்க, ஏவல்கள் இட விட்டு விட்டுத்தான் அவர் வெளியே போகிறார் என்று நினைத்தான் ஆறுமுகம். அவனால் எப்பொழுதும் அப்பாவிடம் நெருங்க முடிந்ததில்லை. அவருடன் வருபவர்கள் யாராவது அவனைப் பற்றி விசாரித்தால்,

"நம்ம பயதான்... சீத்தக்குஞ்சி கணக்கா... முழிக்கதப் பாரு... இருட்டுக்குள்ள அடுத்தவன் பொண்டாட்டிய கையைப் பிடிச்சி இழுத்த மாதிரி..."

கூட வந்தவர்களும் சிரிப்பார்கள். அவனுக்கு அவமானமாக இருக்கும். அம்மாவின் பின்னால் போய் நின்றுகொள்வான். ஆனால் அதொன்றும் அவ்வளவு பாதுகாப்பாய் இல்லையென்று சீக்கிரமே தெரிந்து கொண்டான். அம்மாவே யார் பின்னாலாவது ஒளிந்துகொண்டால் தேவலாம்போல இருந்தாள். அவளே கதவுக்குப் பின்னால்தான் நின்றாள். 'ஏய்' என்ற அப்பாவின் கர்ஜனை, அவளுடைய ஈரல் குலையைக் கவ்வ கை நடுங்கி முகம் வியர்க்கும். ஆறுமுகத்துக்கே பார்க்க பாவமாயிருக்கும்.

ஆறுமுகம் அம்மாவின் சாயலில் நீண்டு மெலிந்திருந்தான். சப்பட்டையான உடம்பும் விரிந்த கண்களுடன் நெஞ்சு நிறைய பயத்துடன் வளர்ந்துகொண்டே வந்தான். அப்பா கடையில் என்ன வியாபாரம் செய்கிறார், எப்படி சம்பாதிக்கிறார் என்று அவனுக்கோ, அம்மாவுக்கோ தெரியாது. ஆனால் வீட்டுச் செலவுக்கு குறை வைப்பதில்லை. அவன் எப்போதாவது கடைப்பக்கம் போயிருப்பான். வியாபாரச் சாமான்கள் மிகவும் குறைவாக உள்ள கடை வியாபாரத்துக்கோ, வேறெதுக்கோ எப்பவும் ஒரு நாலைந்து பேர் நின்று கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறான். கடைக்கு முன்னால், அப்பா மல்லு கட்டுகிற மாதிரி, சிலம்பு ஆடுகிற மாதிரி, பரிசுகள் வாங்குகிற

மாதிரி விதவிதமான ஃபோட்டோக்கள் ஒரே ஃபிரேமில் வைத்து தொங்கவிடப்பட்டிருந்ததைப் பார்த்திருக்கிறான். ஆனால் கடையில் போய் நின்றதில்லை. கடைப்பக்கம் போனாலே இதயம் துடிதுடிக்க ஒரே ஓட்டமாய் ஓடி விடுவான். பள்ளிக்கூட சேக்காளிகளுடன் சண்டை வரும்போது அப்பாவைப் பற்றிப் பீத்திக் கொள்வான்.

“எங்கப்பாகூட ஒங்கப்பாவால சண்டை போட முடியுமா...?”

சேக்காளிகள் தோல்வியை ஒப்புக் கொள்வார்கள். அவன் அப்பாவைப் பற்றி பெருமைப்பட்டது இந்த ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும்தான்.

இருளப்பசாமிக்கு வருஷா வருஷம் சேவல் வாங்கி விடுவார் அப்பா. கொடையன்று சேவலைப் பலியிட்டு சாமிக்குப் படைத்துவிட்டு அம்மா பொங்கல் வைத்து சாப்பாடு போடுவாள். அன்று முழுவதுமே அப்பாவின் கண்கள் கோவைப்பழமாய் சிவந்தே இருக்கும். சேவல் குழம்பு சாப்பிடவென்று கூட நாலைந்து பேர். எல்லோரும் குடித்திருப்பார்கள். ஆறுமுகம், அம்மா வற்புறுத்தலுக்காக இருளப்பசாமியின் முன்னால் நின்று கும்பிடுவான். கலர் கலரான துணிகளில் தைத்த டவுசரும், கதையும் மணிகள் வைத்த வேல் கம்பும் பெரிய அருவாளும் சாத்தியிருக்கும். சந்தனம் அப்பிய முகத்தில் வெள்ளிக் கண்களால் பயங்காட்டுவார் இருளப்பசாமி. முன்னால் பலிபீடமெங்கும் ரத்தம் சிதறி உறைந்து கறுப்பாய் திட்டுத் திட்டாய் கிடக்கும். உண்மையில் இருளப்ப சாமியே இறங்கி வந்து ரத்தம் குடித்ததைப் போலிருக்கும். அன்று அம்மா கொஞ்சம் தெளிச்சியாயிருக்கிற மாதிரி தெரியும். அப்பாவும் அன்று அம்மாவுக்கு சமையலில் கூடமாட ஒத்தாசை செய்வார். சேவலை ரோமம் பிடுங்கி மஞ்சள் தடவி நறுக்கிக் கொடுத்து உதவுவார். அவன் கூட்டாளிகளுடன் ‘தொட்டுப் பிடுச்சி’, ‘கல்லா மண்ணா’, ‘கள்ளம் போலீஸ்’, ‘தாச்சி’ என்று விளையாடிக் கொண்டிருப்பான். ரெண்டாங்கு மேளத்தின், ‘ரண்டனக்கன ரண்டனக்குன ரண்டனக்குன ரண்ட’ ஓசைக்கேற்ப சாமியாடி விளையாட்டும் விளையாடுவான். அப்பாவின் பக்கமோ இருளப்பசாமியின் பக்கமோ மட்டும் போகவே மாட்டான்.

அம்மா அடிக்கடி உதை வாங்குவாள். என்ன காரணம் என்று தெரியாது அவனுக்கு. அம்மா அத்தனை அடி உதைக்கும் அழ மாட்டாள். வலி தாங்க முடியாதபோது எலி கீச்சிடுவதைப் போலக் கத்துவாள். கண்ணீர் தாரை தாரையாய் ஒழுக, வீங்கிய கண்பட்டை அல்லது கைமூட்டு ஆகியவற்றோடு வேலைகளைச் செய்வாள். அப்பாவின் அன்றாடத் தேவைகளில் ஒரு குறையும் வைத்ததில்லை. ஒரு வார்த்தையும்

அப்பாவை எதிர்த்துப் பேசியதில்லை. இப்படி வாழ்வதில் அதிருப்தி அடைந்ததாகவும் தெரியவில்லை. வரமே சாபம் என்றுணர்ந்தவளே போல அமைதியாக இருந்தாள். ஆறுமுகத்துக்கு அம்மாவைப் பார்க்கப் பார்க்க அப்பாவை அடித்து நொறுக்க வேண்டும் என்று வெறிவரும்.

வீட்டில் சண்டை நடக்கிற நாட்களில் அப்பா தாமதமாக வருவார். அநேக நாள் அவனுக்கு எப்போது வருகிறார் என்று தெரியாது. கண் விழித்திருந்த ஒருநாள் அவர் தள்ளாடிக் கொண்டே வீட்டுக்குள் வந்ததைப் பார்த்தான். சில நிமிஷங்களில் மல்லிகைப்பூ, பலகார வாசனை கலந்த கார நெடியொன்று வீடு முழுவதும் வீசியது. அவன் கண்களை இறுக மூடிக் கொண்டான். அப்பாதான் பேசிக் கொண்டிருந்தார். பதில் குரல் கேட்கவில்லை.

“அந்தப் பொண்ணைப் பத்தி ஏம் பேச்செடுக்க நீ... எனக்கு பிடிக்காதுன்னு தெரியுமில்லே... அதான் கோவம் வந்திருச்சி...” என்று கொஞ்சிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது. அம்மா கூட பேசுகிறாளா என்ன? அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. மீண்டும் அவன் கண்களைத் திறந்தபோது கரிய பூதம் ஒன்று அம்மாவின் மேல் படர்ந்திருந்தது. அம்மா மூச்சுத் திணறிக் கொண்டிருந்தாள். ஆனால், அந்தப் பூதம் அம்மாவின் மேல் உட்கார்ந்து குடல் குந்தாணியெல்லாம் வெளியே இழுத்துப் போட்டது. அம்மா ஈனஸ்வரத்தில் முனகினாள். அது அந்த பூதத்துக்கு சந்தோஷமே போல மேலும் மேலும் விழுந்து நசுக்கியது. அவனுக்குப் பயமாயிருந்தது. அவனுக்கு அம்மா வேண்டும். அம்மா இல்லாமல் அப்பாவுடன் வாழவே முடியாது. அவனுக்கு ‘அம்மா’ என்று அலற வேண்டும் போலிருந்தது. நாக்கு உலர்ந்து தாகமெடுத்தது. ஆனால் எழுந்திருக்கப் பயமாயிருந்தது. அதற்கப்புறம் எப்போது தூங்கினான் என்று அவனுக்கே தெரியாது.

காலையில் எல்லாம் கனவே போல அம்மா வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுக்கு பலகாரம் கொடுத்தாள். அந்த நெடி முந்தின நாள் இரவில் வீசிய அதே நெடி. அவனுக்குப் பிடிக்கவில்லை. வேண்டாமென்றான். அப்போதே பள்ளியிறுதி வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். அம்மாவிடம் ஜட்டி வேண்டுமென்று ரொம்ப நாளாய் கேட்டுக் கொண்டிருந்தான். அம்மா, அப்பாவிடம் சொல்வதற்கான நாளைத் தள்ளிப் போட்டுக்கொண்டே போனாள். அன்று அவன் குளித்துவிட்டு இடுப்பில் துண்டைக் கட்டியிருந்தான். அப்பா அப்போதுதான் உறங்கி எழுந்தவர், வெளியே போவதற்காக, அவனிடம் எதுவும் சொல்லாமலேயே அவன் கட்டியிருந்த துண்டை உருவிவிட்டார். அவன் அப்படியே உடம்பெல்லாம் கூசி, குன்னிப்

போய் அப்படியே உட்கார்ந்தான். அவமானமான உணர்ச்சி உடலெங்கும் பரவ, அவனையும் மீறி அப்பாவை கோபத்துடன் முறைத்தான். அப்பா அந்தப் பார்வையைக் கண்டு ஒருகணம் தயங்கியது தெரிந்தது. "என்னல முறைக்க..." என்று சொல்லிக்கொண்டே துணிக் கொடியிலிருந்து டிரவுசரை எடுத்துக் கொடுத்துவிட்டுப் போனார். அவனுக்கு அழுகை அழுகையாய் வந்தது. அவமானம் தாங்க முடியவில்லை. அவனுடைய அந்தரங்கம் இப்படி அவன் வெறுக்கிற ஆளின் முன்னால் அம்பலமானதை நினைத்து மருகினான். நினைத்த நேரமெல்லாம் அழுகை வந்தது. அப்பாவை அவனுக்குத் தெரிந்த கெட்ட வார்த்தைகளால் வைதான்.

மேல்நிலை முதலாமாண்டில் சிகரெட் பிடிக்கக் கற்றுக் கொண்டான். பள்ளிக்கூடம் கட் அடித்து சினிமாவுக்குப் போகப் பழகினான். பீர் குடித்தான். அம்மாவிடம் பொய் சொல்லி காசு வாங்கினான். கிடைக்காத சமயங்களில் திருடினான். தெருவில், சினிமா தியேட்டரில், பள்ளிக்கூடத்தில் சிறுசிறு சச்சரவுகளில் ஈடுபட்டான். மீசையை திரும்பத் திரும்ப மழித்து கறுகறுவென வளர்த்தான். இரவு தூங்கும்போதும் சாப்பிடும் நேரங்களும் தவிர்த்து மற்ற நேரங்களில் வீட்டில் தங்குவதில்லை. ஒல்லியாகவே இருந்தாலும் அப்பாவைவிட அரையடி உயரம் வளர்ந்திருந்தான். பரீட்சை முடிந்துவிட்டது. கண்டிப்பாய் எதிலும் தேறமாட்டான் என்று அவனுக்குத் தெரியும்.

அந்த வருஷமும் இருளப்ப சாமிக்கு சேவல் விட்டிருந்தார் அப்பா. கொடையும் ஆரம்பமாகிவிட்டது. ஆறுமுகத்துக்கு கையிலே காசில்லாமல் ஒரே காய்ச்சப்பாடாக இருந்தது. சிகரெட்டுக்குக்கூட வழியில்லை. அம்மா எங்கேயோ சொந்தக்காரர்கள் வீட்டுக்குப் போயிருந்தாள். அப்பா கோயில் விஷயமாக வெளியே போயிருந்தார். அவன் வீடு முழுவதும் காசுக்காக சல்லடை போட்டுத் தேடினான். அப்போதுதான் அதைக் கண்டுபிடித்தான். பீரோவில் அப்பாவின் சட்டை துணிமணிகளுக்குப் பின்னால் ஒரு குவார்ட்டர் டிப்ளமேட் விஸ்கி இருந்தது. அவனுக்குப் பயமும், சந்தோஷமும் மாறி மாறி வந்தது. ஏற்கெனவே கொஞ்சம் காலியாகியிருந்தது. வெளிவாசல் கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு வந்தான். பாட்டிலை எடுத்து மூடியைத் திறந்து அப்படியே மடக் மடக்கென்று குடித்தான். தொண்டை காந்தியது. அடைத்துக் கொண்டு வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு ஊறுகாயை எடுத்துத் தொண்டையில் தடவினான். பின்னர் முன்பு இருந்த அளவுக்கே தண்ணீரை ஊற்றி பழைய இடத்தில் வைத்தான். ஜிவ்வென்று முகமும், கைகால்களும் மதமதத்து வந்தது.

அவன் சிரித்தான். அவனை அறியாமல் பொங்கி வந்தது சிரிப்பு.

இரவில் அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது அப்பா வந்தார். கூட வந்தவர்களை அனுப்பிவிட்டு கை கால் முகம் அலம்பினார். அவரைக் கண்டதும் அவசர அவசரமாய் எழுந்து போய் வராண்டாவில் படுக்கையை விரித்தான். பீரோ கதவு திறக்கிற சத்தம் கேட்டது. கொஞ்சநேரம் அமைதி. அப்பாவின் குரல் ஒலித்தது.

“யாராவது பீரோவில் இருந்த மருந்து பாட்டிலை எடுத்தீகளா...?”

விஸ்கிக்குப் பேரு மருந்தாம். ‘கெக்கே...’ என்று சிரித்தான் போர்வைக்குள் ஆறுமுகம். அம்மாவின் பதில் கேட்டது.

“இல்லியே... யாரும் எடுக்கலியே...”

அப்பாவின் முகத்தை கற்பனை செய்தான். சந்தோஷமாயிருந்தது. அப்பா வராண்டாவுக்கு நடந்து வந்த சத்தம் கேட்டது. ஆனால், எதுவும் நடக்கவில்லை.

மறுநாள்தான் இருளப்பசாமிக்கு, மூணாந்திருநாள். பொங்கல் வைத்து, படைப்பு சோறு படைத்து பலிகள் தருகிற நாள். கோயிலில் கூட்டம் அலைமோதியது. அக்கினி தாரையாய் பொழியும் வெயிலை ஜனங்கள் கொஞ்சமும் பொருட்படுத்திய மாதிரி தெரியவில்லை. அப்பா காலையிலேயே சேவலை பலியிட்டு எடுத்து வந்து சமையலுக்கு ரெடி பண்ணிக் கொடுத்தார். ஆறுமுகம் காலையில் போனவன் திரும்பி வந்து அம்மாவிடம் என்ன என்று கேட்கவில்லை. ஆனால், கோயிலைச் சுற்றிச் சுற்றித்தான் அலைந்து கொண்டிருந்தான். உச்சிவேளை பூஜை நடந்து கொண்டிருந்தது. அப்போதுதான் அது நடந்தது. இருளப்ப சாமியின் முன்னால் வழிபட்டுக் கொண்டிருந்த கூட்டத்தின் மத்தியிலிருந்து ஒரு பெருங்குரல் கேட்டது. கூட்டம் உடனே சடசடவென விலகி வழிவிட்டது. அங்கே ஆறுமுகம் உடம்பெல்லாம் படக் படக்கென்று உலுப்பிக்கொண்டு மூட்டோடு முன்னாலும் பின்னாலும் சாய்ந்து விடுவதுபோல் ஆடிக்கொண்டிருந்தான். அருள் வந்து ஆறுமுகத்தின் மேல் இறங்கியிருந்தது. உடனே பூசாரி வந்து திருநீறை ஆறுமுகத்தின் நெற்றியில் பூசிவிட்டு திருநீற்றுப் புறையை ஆறுமுகத்தின் கையில் கொடுத்தார். ஒரு நிமிடத்துக்கொரு முறை ‘டேய்... யேய்...’ என்று கத்தவோ, ‘ஸ்ஸ்ஆஆ...’ என்று வாயைத் திறந்து மூச்சு விடவோ செய்தான் ஆறுமுகம். உடனே ஜனங்கள் வரிசையாக அவனிடம் திருநீறு பூசிக் கொண்டார்கள். அவனும் திருநீறை அள்ளி அள்ளி பூசி விட்டான். யாரோ பக்கத்திலிருந்து,

“சாராயத்தைக் குடிச்சிட்டு சாமியாடுறவனுக்குத்தான் இன்னிக்கு மதிப்பு...”

என்று முணுமுணுத்தார்கள். அதை மீறிக்கொண்டு ‘யேய்...’ என்ற சப்தமும், திருநீறும் கூட்டத்தின் மீது நிறைந்தன. திடீரென ஆறுமுகம் கண்களைத் திறந்தான். அவனுக்கு முன்னால் அவனுடைய அப்பா. ஒரு கையைக் கட்டிக்கொண்டு ஒரு கையால் மூக்கின் மீது விரல்களை பவ்வியமாய் வைத்துக்கொண்டு நின்றார். அதைப் பார்த்ததும் அவனுக்கு உடம்பெங்கும் ஒரு வெறி சுரந்து பரவியது. அந்த இருளப்பசாமியே தன் முன்னால் கையைக் கட்டி நிற்பதாக நினைத்தான். இரத்த நாளங்கள் துடித்தன. கை நிறைய திருநீறை அள்ளி அப்பாவின் தலையில் வீசி, நெற்றியில் அழுத்திப் பூசிவிட்டு, “யேய்ஏய்யேய்...” என்று வெறிக் கூச்சலிட்டு சிரித்தான்.

அந்தச் சிரிப்பு அவனுடைய அப்பாவின் சிரிப்பு போலவே இருந்தது.

26. சாட்சி

சூழ்நிலையின் இறுக்கம் தாங்க முடியாமல் நான் மெல்ல செருமினேன். என்னுடைய நண்பர் அருணகிரி சத்தம் கேட்டு தலையை நிமிர்த்தினார். நான் லேசாகச் சிரிக்க முயன்றேன். அவர் சிரிக்கவில்லை. அவருக்கு நேர் எதிரே மேஜையின் அப்பால், இருந்த தண்டியான ஆளை சற்று முன்தான் சுந்தரமூர்த்தி என்று அறிமுகப்படுத்தியிருந்தார். சுந்தரமூர்த்தி குனிந்த தலை நிமிரவேயில்லை. அவரும் நிலைமை தாளாமல் மேஜையின் மேலிருந்த பைலில் ரெனால்டு பேனாவால் தட்டிக் கொண்டிருந்தார். அந்தச் சிறிய இருண்ட ஆபீஸ் அறை அநேகமாக காலியாகிவிட்டது. பழைய வீட்டை வாட கைக்குப் பிடித்திருந்தார்கள் போல. செம்பழுப்பு நிறத்தில் சுவர்கள், காரை காரையாக சுண்ணாம்பு பெயர்ந்து நின்றது. நான் மேலே உத்திரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். எனக்கு நண்பரின் உத்தேசம் என்ன என்று இன்னும் விளங்கவே இல்லை.

திருநெல்வேலிக்கு வருகிற நேரங்களில் எல்லாம் நண்பர் அருணகிரியைப் பார்த்து பேசிவிட்டுப் போவது ஒரு விசேஷமான காரியம். இந்த முறையும் அவரைச் சந்திக்கச் சென்ற நேரம், அவர் சைக்கிளில் புறப்பட ஏதுவாக நின்று கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் ஆரம்ப விசாரிப்பு களுக்குப் பின்,

“வேற எதும் சோலி இருக்கா...”

“ஒங்களப் பாக்கறதுதான்...”

“ம்... சரி, அப்படியே பேசிட்டே ஒரு இடத்துக்கு போயிட்டு வந்துரலாமா...”

“சரி.”

அவர் எப்பவும் வாங்கிக் கொடுக்கிற ஒரு அருமையான டீயைக் குடித்துவிட்டு சிகரெட்டைப் பற்ற வைத்து இழுத்துக் கொண்டே பல விஷயங்களையும் பேசிக்கொண்டே நடந்தோம். நாங்கள் புறப்பட்ட சமயம் மனித வேலை நாள் முடிவடைகிற தருணம். ஆபீஸ், பள்ளிக்கூடம், கல்லூரி விட்டு ரோட்டில் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது.

ஆத்துப் பாலத்தின் மீது நடக்கும்போது குனிந்து பார்த்தேன். எங்கும் மணல் வெளியாய் பெருகி ஒரு சின்ன ஓடை போல தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. எனக்கு பார்க்கப் பார்க்க பாவமாய் இருந்தது.

மற்றவர்கள் யாரும் அதைக் கவனித்த மாதிரி தெரியவில்லை. ஒருவேளை பழகிப் போயிருக்கலாம். தினசரி நம் கையை கவனித்துக்கொண்டா இருக்கிறோம்.

வண்ணாரப் பேட்டைக்குள் உள் அடங்கிய ஒரு தெருவில் பிரம்மாண்ட மான தூங்குமூஞ்சி மரத்தை காம்பவுண்டுக்குள் அடக்கியிருந்த பொது மராமத்துத் துறை அலுவலகத்துக்குள் அழைத்துச் சென்றார் நண்பர் அருணகிரி. நான் வெளியே இருக்கிறேன் என்று சொன்னதை மறுத்து வற்புறுத்தி உள்ளே அழைத்துப் போனார்.

அறைக்குள் இருட்டோடு இருட்டாக இருந்த அந்த பீரோவுக்குப் பக்கத்தில் கன்னத்துச் சதைகள் லேசாய் தொங்க ஆரம்பித்த முகம், கறுத்த, எண்ணெய் வைத்துச் சீவிய சுருள் மயிர் கலைந்த, சட்டைக்கு வெளியே தெரிந்த கையில் ஏகமாய் மயிரடர்ந்த, கண்ணாடி அணிந்திருந்த அந்த மனிதரின் முன்னால் போய் நின்றோம். முகத்தில் உணர்ச்சிகளேயற்று நிமிர்ந்து பார்த்த அவர் மேலும் உணர்ச்சியின்றி,

“வா...”

என்று நண்பரைப் பார்த்துச் சொல்லிவிட்டு குனிந்தவர் அருகில் நிழல் தட்டியதும் என்னை நிமிர்ந்தார். நண்பர் அறிமுகம் செய்து வைத்தார். உதட்டை லேசாகக் கோணினார். நான் சிரிப்பு என்று புரிந்து கொண்டேன். நண்பர் அருணகிரி பேசிக் கொண்டிருந்தபோது நான் சுந்தரமூர்த்தியை நன்றாகக் கவனித்தேன். அவருடைய மூக்கைப் போலவே எங்கோ பார்த்திருக்கிறேன். நீளமாய் கிளம்பி முனை விரிந்து மெல்ல அண்ணாந்த மாதிரியான மூக்கு. யோசித்துக் கொண்டிருந்தேன். நண்பர் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார்.

“அந்நா அன்னிக்கு வீட்டுக்கு வந்தப்போ நீங்க இல்ல. கல்டைக்குறிச்சி போயிட்டீஹன்னு சொன்னாஹ. நீங்களே சொல்லுங்க... நானுந்தான் ஒத்தைல கெடந்து எப்பிடி சமாளிக்கிறது. எனக்கும் நாலு புள்ளைக இருக்கு... ஒங்களுக்குத் தெரியாததொண்ணுமில்லே...”

“கஷ்டம் எல்லாருக்குந்தான்... யாருக்கு இல்ல...” பாறையை நகர்த்துகிற கரகரப்புடன் அவர் பேசினார்.

“அப்படிச் சொல்லப்படாது நீங்க... முந்தா நேத்தி... அப்பாவுக்கு திடீர்னு பிரஸ்ஸர் ஏறிடுச்சி... பேச்சு மூச்சில்ல... ஆட்டோ வச்சி டாக்டர்கிட்ட போயி இன்ஜக்ஷன், மருந்து மாத்திரையெல்லாம் வாங்கிருக்கு... இப்படி ஒண்ணரைவாடம் செலவு வந்தா நான் எப்படி குடும்பத்த கொண்டு செலுத்தறது... சொல்லுங்க பாப்பம்...”

சுந்தரமூர்த்தி எதுவும் சொல்லவில்லை. எனக்கு எதுவும் விளங்கவில்லை என்றாலும் சங்கடமாக இருந்தது. இப்படியான சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட நபர் தவிர மூன்றாவது ஆள் இருப்பது உகந்ததல்ல. நண்பர் அருணகிரிக்கு இதொன்றும் தெரியாத விஷயமுமில்லை. அவர் மிகுதியும் இங்கிதம் தெரிந்தவர். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

“நா பொய் சொல்றேன்னா பாருங்க... இன்னா மருந்து சீட்டு... மெடிக்கல் பில்...”

சுந்தரமூர்த்தி வேண்டாமென்று தலையசைத்தார்.

“அப்படியில்லை... நீங்களும் தெரிஞ்சிக்கிடணுமில்ல... அந்த ரெண்டாவது பில்லில் இருக்கிற மாத்திரை மட்டும் ஒண்ணு நாலு ரூபா அம்பத்தைஞ்சி பைசா... டெய்லி மூணு மாத்திரை சாப்பிடணுமாம்... என்னாச்சின்னு பாத்துக்கோங்க...”

சுந்தரமூர்த்தி வெறுமனே பில்களையும் மருந்துச் சீட்டுகளையும் புரட்டிப் பார்த்துவிட்டு நண்பரிடம் கொடுத்துவிட்டார். எதையாவது பார்த்தாரா படித்தாரா என்று தெரியவில்லை.

“போன மாசம் மட்டும் நான் ரெண்டாயிரம் ரூபா கடம் வாங்கியிருக்கேன்... ஒண்ணு ஒடம்பிறந்தவுங்க ஒதவணும் இல்ல... வேற வழில வருமானம் வரணும்... நாங்கிடந்து அல்லாடிக்கிட்டு வாரேன்...”

“எல்லாம் கணக்கு எழுதி வையேன்... பின்னால பாத்துக்கலாம்...”

“கணக்கு எழுதி என்னத்துக்கு... நாக்கு வழிக்கவா...” வெறிச்சென்று ஒரு அமைதி கவிந்தது. அறைக்குள் ரொம்பவும் புழுக்கமாக இருந்தது. எனக்கு எழுந்து வெளியே போய் நிற்கலாம் என்று தோன்றியது. சுந்தர மூர்த்தி கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்தார். எனக்கு நண்பரின் முகத்தைப் பார்க்கவே சங்கடமாக இருந்தது. கோபம் மெல்ல தணிந்து இயல்புக்கு வந்தார். என்னைப் பார்த்து ஒரு இக்கட்டான புன்முறுவல் பூத்தார். போகலாம் என்கிற மாதிரி தலையசைத்தார். அதற்குள் சுந்தரமூர்த்தியின் குரல் கேட்டது.

“சரி... இப்ப எப்படி இருக்கு...”

“பரவால்ல... கொஞ்சம் கெதியாச்சுன்னா உடனே நான் வயக்காட்டை பாக்கப் போணும்... களக்காட்டு பஸ் ஏத்திவிடுன்னு ஒரே அடம்...”

“அவுஹ முரண்டு தெரிஞ்சதுதான... எனக்கும் பணமுடைதான்... நானே பாக்க வரணும் வரணும்னு நெனக்யேன்... முடிய மாட்டேங்கு... சாருக்கு

என்ன நம்மூர் தானா...”

என்னைப் பார்த்துக் கேட்டார். நான் அவருடைய விசாரிப்பை எதிர் பார்க்கவில்லை.

“இல்ல... இல்ல... தூத்துக்குடி... வேறொரு சோலியாக இந்தப் பக்கம் வந்தேன்...”

“காப்பி சாப்பிடுதியளா...” அவர் இதையும் என்னைப் பார்த்துத்தான் கேட்டார்... நான் உடனே நண்பர் அருணகிரியைப் பார்த்தேன். அவர் மருந்துச் சீட்டுகளை சட்டைப் பையில் பத்திரப்படுத்துவதில் கவனமாயிருந்தார். அதோடு எனக்கும் சீக்கிரம் போனால் போதும்போல இருந்தது.

“இல்ல வேண்டாம்... இப்ப வரும்போதுதான் சாப்பிட்டு வந்தோம்...”

என் பதிலைக் கவனித்தாரோ என்னவோ தெரியவில்லை. உட்கார்ந்திருந்த நாற்காலியை விட்டு எழுந்து பேண்ட் பையில் கையை விட்டு பர்ஸை எடுத்தார். அதிலிருந்து ரெண்டு நூறு ரூபாய் தாள்களை எடுத்து நண்பரிடம் நீட்டினார். அருணகிரி அதைக் கையில் வாங்கிக்கொண்டே அவரை ஏறிட்டுப் பார்த்தார்.

“இப்ப இது இருக்கட்டும்... பின்னால பாப்பம்... வேற யார்ட்டயும் சொல்ல வேண்டாம்... எதுக்கு, வீணாப் பிரச்சினை...”

இதைச் சொல்லும்போது கொஞ்சம் அசட்டுத்தனமாய் சிரித்தார். எனக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறதென்றே புரியவில்லை. அருணகிரி எழுந்துகொண்டே,

“சரி... அப்ப நா வர்றேன்... வீட்டுக்கு ஒரு வாட்டி வந்துட்டுப் போங்க...”

“வரணும்... வேலை தொலைய மாட்டேங்கு... வாறேன்... கண்டிப்பா வாறேன்... அப்பாட்ட சொல்லு...”

சுந்தரமூர்த்தியின் முகம் பெரும் சிரமத்திலிருந்து மீண்ட மாதிரி தெளிவடைந்தது. நானும் அவரிடம் சொல்லிக் கொண்டு வெளியே வந்தேன். வெளியே பெரிது பெரிதாய் காற்று வீசியது. எனக்கு சிகரெட் வேணும் போலிருந்ததால் கடையில் சிகரெட் வாங்கிப் பற்ற வைத்துக்கொண்டே நண்பருடன் நடந்தேன். நண்பர் ஏதோ யோசனையில் இருந்ததைப் போலிருந்தார். எனக்கும் அந்த மௌனம் தேவையாயிருந்தது. இருள் கவிந்து நட்சத்திரங்கள் துலங்கின. சாலை விளக்குகளும், வாகனங்களின் விளக்குகளும் யந்திரகதியிலான மனிதப் போக்குவரத்தும் எனக்கு ஏனோ சலிப்பை ஏற்படுத்தியது. நான்

ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டே நண்பரிடம்,

“எனக்கு எப்படா கௌம்புவோம்னு ஆயிடுச்சு. யாரு சொந்தக்காரரா...”

நண்பர் அருணகிரி ஒருவித கசப்பான தொனியில்,

“ஆமா... எனக்குகூடப் பொறந்த அண்ணன்தான்... நல்லா சம்பாதிக்கான்... ஒத்தைல கெடந்து கஷ்டப்படுதனே... ஒரு பைசா இன்னான்னு கொடுக்க மனசு வராது... இன்னிக்கிக்கூட கொடுத்திருக்க மாட்டான்... நீங்க வந்ததாலதான்... ஒங்க முன்னாடி அவனுக்கு சால்ஜாப்பு சொல்ல முடியல... நீங்க வந்ததும் ஒரு வகைக்கு நல்லதாப் போச்சி...”

கடைசியாக சிகரெட்டை இழுத்துவிட்டு ஆற்றுக்குள் வீசினேன். அது கீழே விழும்வரை மட்டுமல்ல; விழுந்தும் கூட அணையாதிருந்தது. சாக்கடைபோல் ஒடுங்கியிருந்த ஆற்றில் பாலத்திலுள்ள நியான் விளக்குகளின் மஞ்சள் ஒளி ரொம்ப பலகீனமாக தெரிந்தது.

27. மறதியின் புதைசேறு

என் மாமா உலகநாதனைப் பார்க்கப் போகாமலே இருந்திருக்கலாம் என்று இப்போது தோன்றுகிறது. எப்படியோ அது நடந்துவிட்டது. அவரைப் பார்த்து விட்டு வந்ததிலிருந்து என் மனம் பிசகிவிட்டது. குற்றவுணர்ச்சியில் தவித்துக் கொண்டிருந்தேன். பேப்பர்களைக் கையில் பிடித்த படி அழுது விடுவது போலிருந்த மாமாவின் முகம் திரும்பத் திரும்ப நினைவுக்கு வந்தது. நிம்மதியாய் இருந்தவரைப் போய்ப் பார்த்து அவரது நிம்மதியைக் குலைத்த பாவம் என்னைச் சும்மா விடுமா... வாழ்வில் அபூர்வமாய் கிடைக்கப் பெறுகிற அற்புத கணங்கள் சாதாரண நடைமுறை வாழ்க்கையின் கூர்மையான கோரைப் பற்களுக்கிடையில் சவ்வு மிட்டாய் மாதிரி சுவைக்கப்பட்டு மரத்துப் போகிற கொடுமை தீர ஏதாவது வழியுண்டா? என்னை எந்தப் பிசாசு மாமாவைப் பார்க்கச் செல்லும்படி தூண்டியது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஒரு மணி நேர பஸ் பிரயாண தூரத்தில் - திருநெல்வேலியில் - வசிக்கிற உலகநாத மாமாவைப் போய் பார்த்துவிட்டு வரலாம் என்று தோன்றியது. எவ்வளவோ நாளாக என்னை அவருடைய வீட்டுக்கு வரச் சொல்லி அழைத்தும் நான் போனதில்லை. வேலையும், வேலைவிட்டால் புத்தகங்களுமாக கூட்டுப் புழு மாதிரி வெளிக் காற்றே வேண்டாமல் இருந்தேன். சனிக்கிழமை இரவில் மனசில் ஏதோ ஒரு லயம் கூடிய இசைவான நேரத்தில் காபிரியேல் மார்க்யூஸின் 'பால்தஸாரின் அற்புத பிற்பகல் நேரம்' படிக்கும்படி நேர்ந்தது. அதைப் படித்து முடித்தபோது பால்தஸாரின் உன்னதம் பொங்கும் முகமாக என் மாமாவின் முகமே தெரிந்தது. பழைய நாட்களின் ஞாபகங்கள் மறதியின் புதைசேற்றிலிருந்து மீறிக் கிளம்பி வந்தன. அந்தக் கணத்தில் மறுநாள் காலையில் மாமாவைச் சந்திக்க வேண்டும் என்று முடிவெடுத்தேன்.

என் மாமாவை முதல் முதலில் சந்திக்கும்போது எனக்கு வயது பன்னிரண்டோ பதிமூன்றோ இருக்கலாம். என் அப்பாவின் தங்கையான வேம்பத்தைக்கு, மாப்பிள்ளையாக வந்து சேர்ந்தார். மெலிசான உடம்பும், சிவந்த நிறமும், வார்வாரான தலைமுடியும் கொண்ட என் மாமாவின் முகத்தில் லேசான பெண் சாயல் இருந்தது. கூச்ச சுபாவி. நான் முதலில் பார்த்தபோது என்னைப் பார்த்து லேசாய் புன்னகைத்ததோடு சரி. மற்றபடி எதுவும் பேசவில்லை. நான் வீட்டுக்குள் அங்கிட்டும் இங்கிட்டும் அலையும்போதும் ஏதும் கேட்கவில்லை. எனக்குப் புதியவரின் மேலுள்ள சுவாரஸ்யம் குறைய

ஆரம்பித்தது. அப்புறம் அவரைப் பற்றி கவலைப்படவே இல்லை. எம்பாட்டுக்கு ஒரு பொருட்டில்லாமல் இருந்தேன். மாமாவின் முகத்திலும் வருத்தம் ஏதோ படர்ந்த மாதிரி உம்மென்று யாருடனும் பேசாமல் இருந்தார்.

அப்போது வீட்டிலும் ஏதோ பிரச்சனை. பெரியவர்கள் பேசுவது என்ன புரிகிறது. அவர்களுடைய உலகம் ரொம்ப சின்னதுதானே. என் மாமா, வீட்டில் இல்லாத நேரங்களில் என் அப்பாவும், அம்மாவும் வேம்பத்தையும் பேசிக் கொள்வதிலிருந்து எனக்குத் தெரிந்தது சொற்பமே. மாமா, கல்யாணம் உறுதி ஆனதும் அவர் பார்த்துக் கொண்டிருந்த சீட்டுக் கம்பெனியில் பணம் வசூல் பண்ணுகிற வேலையை விட்டுவிட்டார். யாரோ அவருக்கு பொண்ணு வீடு வசதி. வீட்டோடு மாப்பிள்ளையாக வைத்து சோறு போடுவார்கள் என்று விளையாட்டாகவோ, வினயத்துடனோ சொல்லியிருக்கிறார்கள். வெள்ளந்தியான என் மாமாவும் வேலையை விட்டுவிட்டார். இது யாருக்கும் தெரியாது. கல்யாணம் முடிந்து பத்துப் பதினைந்து நாள் விருந்தெல்லாம் முடிந்த பிறகு, இன்னும் எத்தனை நாள் லீவு என்று கேட்டபோதுதான் சேதியே தெரிந்தது. அப்பாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. என் மாமாவை எல்லோரும் ஏளனமாய்ப் பார்த்தார்கள். கேலி பண்ணி பேசியதாகக் கூட ஞாபகம். இப்போது எனக்குத் தெளிவாய்த் தெரிகிற இந்தக் கோர்வையான விஷயங்கள் அப்போது தெரிந்திருக்கவில்லை. ஆனால், மாமா ஏதோ செய்யக் கூடாததை செய்துவிட்டார் என்று மட்டும் புரிந்தது. மாமாவின் முகத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை. குற்றவுணர்ச்சியில் தலை குனிந்தே இருந்தார். யாராவது ஏதாச்சும் கேட்டுவிட்டால் காது மடல் சிவக்க, நிமிர்ந்தும் நிமிராமலும் பதில் சொல்லுவார். உடனே அந்த இடத்தை விட்டு அவசர அவசரமாக கிளம்பிவிடுவார். மொத்தத்தில் கணக்குப் பாடத்தில் தப்பு செய்த பையனைப் போல பம்மிப் பம்மி அலைந்தார். என் அத்தைக்கும் மாமாவுக்கும் ஒதுக்கப்பட்டிருந்த மச்சு அறையை விட்டு அதிகம் கீழே இறங்குவதில்லை. எனக்கே கூட அவரைப் பார்க்கப் பாவமாயிருந்தது.

ஒருநாள் சாயந்திரம் பள்ளிக்கூடம் விட்டு வந்து, அம்மா கொடுத்த மிக்சரை டிரவுசர் பையில் போட்டுக்கொண்டு, காப்பியை மட்டும் குடித்துவிட்டு விளையாடக் கிளம்பியபோது அம்மா கூப்பிட்டாள். நான் காது கேளாத மாதிரி வாசல்படி இறங்கினேன். உடனே அம்மா கத்தினாள். “ஏல மூதி... கத்தறது காதிலே விழுதா இல்லையா நாயி... இப்பம் எந்திச்சி வந்தன்னா பாத்துக்க... போயி மச்சில கட்டிலுக்கு கீழே

டிரங்குபெட்டி இருக்கு... அதிலே அப்பாவோட பழைய நேரியல் மேலால இருக்கும்... அதை எடுத்துக் கொடுத்துட்டு தொலஞ்சி போ...”

திடீரெனத் தோன்றிய பெருந்தன்மையினால் திரும்பி மச்சுக்குப் போனேன். அத்தையும் மாமாவும் மச்சில் தங்க ஆரம்பித்த பிறகு அம்மா மச்சுப் பக்கமே போகமாட்டாள். நான் அவசர அவசரமாக மச்சில் ஏறி கட்டிலுக்கு அடியில் இருந்த டிரங்குப் பெட்டியைத் திறந்து அம்மா சொன்ன நேரியலை எடுத்துக்கொண்டு திரும்பியபோதுதான் பார்த்தேன். ஒரு கணம் எனக்கு எதுவுமே புரியவில்லை. அதிசயமாக இருந்தது. கட்டிலின் மூலையில் அழகழகான பொம்மைகள். கலர் கலராய் பெயிண்ட் அடித்தவை. வர்ணம் பூசியது. பேப்பரில் செய்த பொம்மைகள், ஈக்கி மாரில் செய்தவை, தகரத்தில் செய்தவை, அட்டைப் பெட்டிகளில் என்று பெரிய உலகமே இருந்தது. யானை, சேவல், கப்பல், மணிப்பர்சு, கிளி, மனிதன், நாய், பூக்கூடை, நாற்காலி அது இது என்று ஏராளமான பொம்மைகள். இப்போது ஞாபகத்தின் எல்லைப் பரப்பிலிருந்து தவறிப் போன பொம்மைகள். அப்போது எங்கு பார்த்தாலும் பொம்மைகள் - அவ்வளவுதான் எனக்கு மற்ற எல்லாமும் மறந்து போனது. ஆவலும் ஆச்சரியமும் பொங்க, நேரியலைக் கட்டிலின் மீது வைத்துவிட்டு கட்டில் மேலேறி ஒவ்வொன்றாகச் சோதிக்க ஆரம்பித்தேன். எங்கிருந்தோ எனக்குள் உற்சாகம் பொங்கியது. உடனே சுப்பிரமணி, தேவதாசு, தங்கராசு எல்லோரிடமும் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். மச்சில் அப்போது யாரும் இல்லை. கொஞ்சம் பொம்மைகளைத் தெரியாமல் எடுத்துக் கொண்டு போகவும் யோசித்தேன். நான் ஒவ்வொரு பொம்மையாக எடுத்து வரிசையாகக் கட்டிலின் மீது அடுக்கிக் கொண்டிருக்கிறபோதுதான் என்னைத் தேடி வேம்பத்தை மேலே வந்தாள். நான் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும், மாமா எனக்காகத்தான் இதெல்லாம் செய்தார் என்று சொல்லிவிட்டு நேரியலை எடுத்துக்கொண்டு கீழிறங்கினாள்.

உடனே எனக்கு வெட்கமும், மாமாவைப் பார்க்க ஆசையும் பிரியமும் பொங்கியது. அன்றிலிருந்து மாமாவுடனான தயக்கம் ஒழிந்தது. அவர் எனக்கு விதவிதமான விளையாட்டு பொம்மைகள் செய்து தந்தார். மிகமிகச் சாதாரணப் பொருட்கள் கூட அவர் கையில் அற்புதங்களாய் விளைந்தன. எனக்கு மாமாவுடன் இருந்தால் பொழுது போவதே தெரியவில்லை. நிதமும் பள்ளிக்கூடத்துக்கு பொம்மைகள் கொண்டு போவேன். பையன்களுக்கெல்லாம் பொறாமை. எனக்குப் பெருமை பிடிபடாது. என்னை எப்போதும் இரண்டு மூன்று பையன்கள் சுற்றிக்கொண்டே இருப்பார்கள். நானும் அடிக்கடி என்னுடைய

மாமாவைப் பற்றி பீத்திக் கொண்டேயிருப்பேன்.

கொஞ்ச நாட்களுக்குள் என் அப்பா மாமாவுக்கு உள்ளூரிலேயே ஷாப் கடையில் வேலை வாங்கிக் கொடுத்தார். மாமா வேலைக்குப் போன பிறகு அவருக்கு லீவு கிடைக்கும் நாட்களில் மட்டுமே எங்களுக்கான பிரத்யேக உலகம் உதித்து மறைந்தது. நானும் வகுப்புகள் மாறிக் கொண்டிருந்தேன். வயதாக வயதாக மாமாவின் குணாதிசயங்கள் எனக்கு கொஞ்சம் கொஞ்சமாகப் பிடிபட ஆரம்பித்தது.

அவர் மற்றவர்களைப் போல இல்லை. மென்மையும் கூச்சமும் கொண்ட அவர் குரல் ஓங்கி ஒலித்தது நான் கேட்டதேயில்லை. என் அப்பாவுடனோ அல்லது மற்ற பெரியவர்களுடனோ சகஜமாய் பேசுவதில்லை. ரொம்பத் தயங்கித் தயங்கியே பேசினார். சில சமயம் அவர் பேசுவது அவர்களுக்குப் புரியாது. என்னிடம் மட்டுமே அவர் இயல்பாய் இருந்த மாதிரி தெரிந்தது. வேம்பத்தையுடன் அவர் எப்படிப் பழகினார் என்று தெரியவில்லை. ஆனால், அதிகம் வெளியே சுற்றித் திரியவோ, சினிமா, கோவில் என்று அலையவோ விருப்பமில்லாதவராக இருந்தார். விடுமுறை நாட்களில், அவரும் நானும் வேறொரு உலகத்துக்குப் போய்விடுவோம். அந்த உலகம்தான் அவருக்கான உலகம் என்று பலமுறை நான் உணர்ந்திருக்கிறேன். மற்ற நேரங்களில் அவர் பாதை தவறி இங்கே வந்துவிட்டதாகத் தோன்றும். ஏனெனில் அந்த உலகத்தில் அவர் எந்தவிதக் கூச்சமுமின்றி சுதந்திரமாய், சர்வ சுதந்திரமாய் இருந்தார். அப்போது அவர்பேச்சும் செயலும் ஏதோ ஒரு மாயத்தில் முக்கி எடுத்த மாதிரி இருக்கும். சில சமயம் அவர் பேச்சு எனக்கும் புரியாது. அப்போதிருக்கும் அவருடைய அபூர்வமான முகபாவம் எனக்கு மிகவும் பிடிக்கும். மாமா நிறைய்ய கதைகளும் சொல்லுவார். கதைகளும் மாயக் கதைகள்தான். அதில் அவர் செய்கிற பொம்மைகள் அவர், ஏன் நான் கூட வந்திருக்கிறேன். எனக்கு மாமாவும் திடீரென மாயமாய் மறைந்துவிடுவாரோ என்றுகூட தோன்றியதுண்டு. ஒருநாள் மாமாவிடம் இதைக் கேட்டபோது சிரித்தார். வாய்விட்டுச் சிரித்தார். பின்னர் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு,

“அப்படி நடந்தா எவ்வளவு நல்லாருக்கும்” என்றார். அவர் கண்களில் ஒளி மின்னியது. எப்படியோ நான் பள்ளிப் படிப்பு முடிக்கும் வரையில் மாமாவின் அன்பு ஒளியில் விளங்கிக் கொண்டிருந்தேன்.

கல்லூரிப் படிப்பு வேறு ஊருக்குச் சென்று படிக்கும் படியாயிற்று. பழைய உலகம் மங்கியது. புதிய வர்ணங்கள் தோய்ந்த வேறொரு உலகம் தோன்றியது. அங்கும் சில அற்புதங்கள், சுழித்தோடும் வாழ்வின்

நதிப்பரப்பில் தோன்றாமலில்லை. ஆனால், அவை நீர்க்குமிழிகள்போல கொஞ்ச காலத்துக்குள்ளாகவே ஞாபகத்தின் இருள் கிடங்கில் ஆழ்ந்து புதைந்து போயின. பாலிய காலம் இனித் திரும்பாது உண்மைதான். இழந்தவைகள் விலை மதிக்க முடியாதவை.

கல்லூரி லீவு நாட்களில் வரும்போதும் மாமாவைப் பற்றி புதிய புகார்கள் புதிய கதைகள் பேசப்படுவதைக் கேட்டேன். எந்த வேலையிலும் கால் தரிக்கவில்லை. மனநிலை கொஞ்சம் பிறழ்ந்தவர். தனியே போனால் குடும்பப் பொறுப்பு வரும் அப்படி இப்படியென்று பேசுவதைக் கேட்க நேர்ந்தது. எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ஒருமுறை அம்மாவிடம் பேச ஆரம்பித்தபோது,

“பேசாம ஒஞ்சோலியப் பாரு... எங்களுக்குத் தெரியும்... இல்லாத விஞ்ஞானம் பண்ணாம படிப்பைக் கவனி... மத்தத அப்புறமா பாக்கலாம்...” என்று சொல்லி வாயடைத்து விட்டாள். மற்றொரு முறை வரும்போது வீட்டில் சண்டை போட்டுக்கொண்டு மாமா குடும்பத்தோடு திருநெல்வேலிக்குப் போய்விட்டார் என்று கேள்விப்பட்டேன். அப்போது அவரை நான் தேடவில்லை. அறியாமையோ, இளமைச் செருக்கோ தெரியவில்லை. வெகுநாள் கழித்து அவரை ஏதோ ஒரு கிரகப்பிரவேச வீட்டு விசேஷத்தில் பார்த்தேன். என்னைப் பார்த்ததும் ஓடி வந்து கைகளைப் பிடித்துக் கொண்டார். ஆள்கொஞ்சம் பாரித்து முகம் சற்றுகரடாயிருந்தது. மளிகைக் கடையில் இருப்பதாய்ச் சொன்னார். அன்று முழுவதும் அவருடனே இருந்தேன். பேச்சில் இடையிடையே அவருடைய பழைய வாசனை தெரிந்தது. அவருக்கு என்னைப் பார்த்ததில் ரொம்ப சந்தோஷம். அடிக்கடி திருநெல்வேலிக்கு வரச் சொல்லி வற்புறுத்திக் கொண்டேயிருந்தார்.

திடீரென மாமா வீட்டில் போய் நின்றதும் வேம்பத்தைக்கே ஆச்சரியம். மாமா ஆத்துக்குக் குளிக்கப் போயிருந்தார். குளித்துவிட்டு வந்தவருக்கு என்னைப் பார்த்ததும் சந்தோஷம் தாங்கவில்லை. “வாய்யா... வாய்யா... வா... வா... இப்பதான் என் வீட்டுக்கு வழி தெரிஞ்சிதா” என்று சொல்லிக் கொண்டே ஓடிவந்து கட்டிப்பிடித்துக் கொண்டார். எனக்குக் கூச்சமாயிருந்தது. அன்று அவருக்கும் கடை லீவு என்பதால் வீட்டிலேயே இருந்து பேசிக் கொண்டிருந்தோம். மாமா என்னிடம் பல விஷயங்களைக் கேட்டார். வேலை, சம்பளம், கல்யாணம் என்று நடைமுறை வாழ்க்கை சம்பந்தமாக நிறைய்ய கேள்விகள் கேட்டார். எனக்குப் பிடிக்கும் என்பதற்காக கறி வாங்கிக் கொடுத்து சமையல் செய்யச் சொன்னார். மாமாவின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் ஏதோ ஒன்று அபூர்வமாய் இருந்ததாக நினைத்தேன். மாமாவைக் கூர்ந்து

கவனித்தேன்.

மாமாவின் முகவிலாசம் மிகவும் மாறியிருந்தது. கறுத்து, கன்னக் கதுப்புகளில் முரட்டுத்தனம் ஏறியிருந்தது. கைகளும், விரல்களும் கூட தடித்திருந்தன. விரல் ரேகைகளில் இடுவல்களில் பலசரக்குக் கடையின் அழுக்கு படிந்திருந்தது. அவர் உடம்பிலிருந்தும் ஒரு மாதிரியான மட்டி வாசனை வீசியது. எனக்கு இதெல்லாம் ஒரு பொருட்டாகவே தெரிய வில்லை. நான் இன்னமும் பால்தஸார் கூடவே இருந்தேன். பேசிக்கொண்டே பக்கத்தில் கிடந்த பலசரக்கு சாமான்கள் கட்டி வந்த காகிதங்கள் சிலவற்றை எடுத்து மாமாவின் கையில் கொடுத்தேன். மாமா எதுக்கு என்பதுபோல நிமிர்ந்து பார்த்தார்.

“மாமா முன்னாடி செய்வீங்களே... பொம்மைங்க... ஏதாச்சும் செய்யுங்களேன்...”

“இப்ப எதுக்கு கண்ணா அதெல்லாம்... எல்லாம் மறந்து போச்சே...”

“இருக்கட்டும் மாமா... சும்மா செஞ்சு பாருங்க... எனக்கு திடீர்னு பழைய ஞாபகம் வந்திருச்சி...”

ரொம்பத் தயக்கத்துடனேயே காகிதங்களைக் கையிலெடுத்தார். கொஞ்ச நேரம் எதையோ யோசிப்பவர்போல இருந்தார். தொலைந்த ஞாபகங்களைத் தேடிப் பிடிப்பவர்போல நெற்றியைச் சுருக்கினார். கைவிரல்கள் காகிதத்தை முன்பின்னாக மடிக்க ஆரம்பித்திருந்தன. நான் மாமாவிடம் ஏற்பட்டுக் கொண்டிருந்த ரசாயன மாற்றத்தைக் கவனித்துக் கொண்டேயிருந்தேன். ஆனால் மாமா எதையும் பார்த்தாரா என்று தெரியவில்லை. தலை குனிந்தவர் நிமிரவே இல்லை. ஏதோ செய்ய ஆரம்பித்தார். முகம் குழம்பி வெளுத்தது. மூக்கு விடைக்க பெருமூச்சு விட்டார். பேப்பரை ஒருவிதமாய் மடிக்கிறதும் பின் தலையை உலுக்கிக்கொண்டு மற்றொரு விதமாய் மடிக்கிறதுமாக இருந்தார். அவர் படுகிற சிரமத்தைப் பார்த்ததும் எனக்குச் சங்கடமாகிவிட்டது. கடைசியில் மடித்து காகிதத்தை ஒரு மூலையில் பிடித்துக் கொண்டு விரித்தார். அது ஒரு பலசரக்கு சாமான் போடுகிற பொட்டலப் பையாக விரிந்தது. காது மடல்கள் சிவக்க மறுபடியும் அதைப் பிரித்து வேறுவிதமாக மடித்தார். அதைப் பிரித்தபோது அதுவும் இன்னொரு விதமான பொட்டலப் பையாகவே வந்தது. அட துரதிருஷ்டமே. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மாமாவை தர்ம சங்கடத்துக்குள்ளாக்கிய குற்றவுணர்ச்சி என்னைக் கவ்வியது. மாமா காகிதத்தைக் கையில் பிடித்தபடி அழுதுவிடுவது போலிருந்தார். ஒரு கணம் நிமிர்ந்து என்னைப் பார்த்தார். அந்தக் கண்களில் தெரிந்த

இயலாமை, சோகம், ஏக்கம் என்னைப் பாடாய்ப் படுத்தியது. கசங்கிய அந்த முகத்திலும் கூட பால்தாஸரின் சோகமான அதே நேரம் கம்பீரமான ஜாடை இருப்பதாகவே உணர்ந்தேன். மெதுவாக அவர் கைகளிலிருந்து காகிதத்தை வாங்கினேன். அவரிடமிருந்து தொலைந்துபோன அந்த அற்புதமான உலகத்தை நினைத்தோ என்னவோ அவர் கண்கள் கலங்கியது. என்னைப் பார்ப்பதைத் தவிர்த்து வெளியே பார்த்துக் கொண்டிருந்தார். அற்புதங்கள் தாங்கள் ஒரு காலத்தில் இருந்ததற்கான ஏதாவதொரு அடையாளத்தை விட்டு வைக்காமல் போவதில்லையே. இழந்ததை நினைத்து தவித்துக் கொண்டிருந்த என் மாமாவின் கண்களில் அன்பின் ஒளி மீந்திருந்ததை நான் உணர்ந்தேன்.

28. சோமையாவின் பாட்டு

சோமையாவை முதல் முதலில் பார்த்தபோது எனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்ல முடியாது என்றாலும் ஒருவித அருவறுப்பு ஏற்பட்டது உண்மைதான். எனக்கு அஸிஸ்டெண்ட் ஸ்டேஷன் மாஸ்டராக உத்தியோகமாகி விழுப்புரம் காட்பாடி செக்ஷனில் உள்ள ஒரு காட்டு ஸ்டேஷனில் முதல் முதலாக வேலை பார்க்கப் போயிருந்தேன். மனித சஞ்சாரமே அற்றுப் போன ஸ்தலம் அது. எப்போதாவது ஒன்றிரண்டு பேர் மர்மமாய் வந்து ரயிலேறிப் போனார்கள். மற்றபடி என் கண்ணில் பட்டதெல்லாம் காடு, முள்காடு இடையே திடீர் திடீரென்று காட்டிலிருந்து முளைத்து வருவார்கள் ஆடு மேய்க்கும் பையன்கள். மற்றபடி ஸ்டேஷனுக்கு முன்னாலுள்ள நாலைந்து ஆலமரங்கள். மேலே பரந்தவானம். சுற்றிலும் விரிந்த காடு. எப்போதும் வீசும் காற்று. அவ்வளவுதான்.

முதலில் நான் ஏங்கிப் போனேன். ஊரைவிட்டு அருமையான நண்பர்களைவிட்டு, வீட்டை விட்டு இதுவரையில் கொஞ்சகாலம்கூட பிரிந்ததில்லை. பேசுவதற்குக்கூட ஆளில்லாமல், சகிக்க முடியாத என்னுடைய சமையலை சாப்பிட முடியாமல், திடீரென பிடுங்கி எறியப்பட்ட செடியைப்போல வாடிப் போனேன்.

ஸ்டேஷன் மாஸ்டர் குடும்பஸ்தர். டூட்டி முடிந்ததும் வீட்டுக்குள் அடைந்து கொள்வார். அதிகம் பேசமாட்டார். அதோடு வயசாளி வேறு. அவரிடம் எனக்கு என்ன பேச இருக்கிறது. மற்றபடி அங்கிருக்கும் ரெண்டு பாயிண்ட்ஸ் மேன்களும் சளசளவென்ற பேச்சு. எங்கு சுற்றினாலும் ரயில்வேயைப் பற்றி, மேலதிகாரிகளைப் பற்றி, தன்னுடைய திறமையைப் பற்றி, அடுத்தவனின் குறைகளைப் பற்றியே வந்து முடியும். எனக்கு இவைகளில் சிரத்தையில்லா விட்டாலும் கேட்டுக் கொண்டிருப்பேன். அவ்வப்போது ஏதாவது சொல்லுவேன். இவர்களில் சோமையாதான் சீனியர். அவனைப் பார்த்த முதல் பார்வையிலேயே எனக்கு ஒரு மாதிரி இருந்தது. அதோடு மற்றவர்கள் அவனுடைய வினோதங்களைப் பற்றிச் சொன்ன காரியங்கள் வேறு கூடவே இருந்தன.

எப்போதும் போதையேறி சிவந்திருந்த கண்கள். முக்கால்வாசி நரை விழுந்த கம்பி முடி. எடுப்பான மூக்குக்குக் கீழே ரொம்ப காலமாய் கத்தியையோ பிளேடையோ காணாத மீசையும் தாடியும். தாடிமுடி துருப்பிடித்து கட்டையும் நெட்டையுமாக இருந்தது. கட்டுக்குட்டான

உருண்டை உடம்பு. வேர்த்து வேர்த்து உப்பு படிந்த பழைய ஊதாக் கலர் சட்டையும் டிராயரும் போட்டிருந்தான் சோமையா. எல்லாவற்றுக்கும் மேல் அவன் முகத்தில் கடுமையும் அலட்சியமும் பொங்கிக் கொண்டிருந்தது. கடுமை அலகுகளின் பொருத்திலும் அலட்சியம் கண்களிலும் தெரிந்தது. அவன் என்னை முதலில் பார்த்ததும் ஒரு கணம் தயங்கினாற்போல தெரிந்தது. அவ்வளவுதான். அப்புறம் எதுவுமே நடக்காதது மாதிரி எடுத்து வைத்த சாவியை எடுத்துக்கொண்டு போய்விட்டான். ஒன்றும் பேசவில்லை. டிரெய்ன் போன பிறகு திரும்ப வந்தவன் நான் எந்த இடத்தில் சாவியை வைத்தேனோ அதே இடத்தில் வைத்துவிட்டு வெளியில் போய்விட்டான். அப்போதும் ஏதும் பேசவில்லை. முதலில் எனக்கும் கொஞ்சம் அலட்சியம் தலையெடுத்தது. அப்புறம் யோசித்தேன். அப்போதுதான் இன்னொரு விஷயத்தையும் கவனித்தேன். யாரும் அவனுடன் ஒரு வார்த்தை பேசவில்லை. அவனும் பேசவில்லை. இடையிடையே அவனுடைய செருமல் சத்தம் மட்டும் கேட்டது.

நான் மெல்ல எழுந்து வெளி வராந்தாவிற்கு வந்து நின்றேன். அவன் ஒரு முறை என்னை ஏறிட்டுப் பார்த்துவிட்டு கையிலிருந்த கடைசி வெத்திலையையும் வாயில் அடக்கினான். நான் லேசாய் தொண்டையைச் செருமிக்கொண்டு “நீங்கதான் சோமையாவா...” முதலில் அதை அவன் கவனிக்கவில்லை. திடீரென்று உணர்வு வந்ததுபோல் “ஆ... ம்ம்...” என்று தலையாட்டினான். வாய் நிறைய இருந்த வெத்திலைச் சாறு உதடுகளுக்கு வெளியே ஊறி வந்து கொண்டிருந்தது. வெத்திலைச் சாறை சத்தத்துடன் முழுங்கினான். அப்புறம் மெல்ல எழுந்து லேசாய் தள்ளாடிக் கொண்டே போய் எதிரே இருந்த ஆலமரத்தின் கீழே வேர் முண்டில் தலை வைத்துப் படுத்துக் கொண்டான். அதைப் பார்க்கும்போது எனக்கு ரொம்பச் சங்கடமாக இருந்தது.

ஊரிலிருந்து கடிதம் வந்திருந்தது. சாரதி எழுதியிருந்தான். எனக்கு அந்தக் கடிதத்தைப் படித்ததும் அழுகையே வந்துவிட்டது. சொந்த ஊர் கண்முன்னால் ஆடியது. என் தெரு, நண்பர்கள், கூடிக் கூடிப் பேசின இடங்கள் இன்னும் என்னவெல்லாமோ தோன்றியது. ஒரு கணம் ஆயுள் தண்டனைக் கைதிபோல உணர்ந்தேன். இனி அந்த இனிமையான காலமும் நினைக்க நினைக்க அருமையான நேரங்களும் திரும்பி வருமா?

டூட்டி முடித்துவிட்டுப் போய் படுத்துவிட்டேன். சமைக்கத் தோன்றவில்லை. மனசு வெறிச்சென்றிருந்தது. அப்படியே எவ்வளவு

நேரம் கிடந்தேன் என்று தெரியவில்லை.

ரெண்டு நாட்களுக்கு முகம் குராவிப் போய் சோகமாய் இருந்தேன். முன்னால் கடல்போல் விரிந்திருந்த காடோ, காட்டிலிருந்து எப்பவும் வீசிய மென்மையான காற்றோ, விதவிதமான பறவைகளோ எதுவும் எனக்கு ஆறுதல் அளிக்கவில்லை.

அன்று சாயந்திரம் ஸ்டேஷன் மாஸ்டரோடு ஸ்டேஷனுக்கு வெளியே கிடந்த பெஞ்சில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தேன். பேச்சுவாக்கில் சோமையாவைப் பற்றிச் சொன்னார். அவன் ஆந்திராவின் கடைசியில் எங்கோ ஒரு குக்கிராமத்திலிருந்து வந்தவன். ரொம்ப வருஷங்களாக இதே ஸ்டேஷனில் வேலை பார்க்கிறான். ஆந்திராவில் வந்த ஒரு வெள்ளத்தில் அவன் மனைவியும் ஒரே மகனும் அடித்துப் போனார்கள். அவனுக்கு உறவென்று யாருமே கிடையாது. எங்கும் போவது கிடையாது. எப்போதும் போதையிலேயே நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கிறான். மற்றபடி வேறு ஒரு தொந்தரவும் கிடையாது என்றார். எனக்கு இதைக் கேட்டதும் அவன்மீது ஒருவித அனுதாபம் பிறந்தது.

அன்றைக்கு நைட்டூட்டி நான்தான். ரெண்டு எக்ஸ்பிரஸ் டிரெய்ன்களும் போய்விட்டன. மற்ற வேலையெல்லாம் முடித்துவிட்டு என்னுடைய ஒரேயொரு வெளியுலகத் தொடர்பான இண்டியன் எக்ஸ்பிரஸ் பேப்பரை எடுத்து வாசிக்க ஆரம்பித்தேன். வெளியே கசமாயிருந்தது இருட்டு. திடீர் திடீரென்று நரிகளின் ஊளைச் சத்தம் அருகிலும் தொலைவிலுமாகக் கேட்டது. விடாது ஒலித்த ராப்பூச்சிகளின் 'கொய்ய்ங்' சத்தம் இரவுக்கு பின்னணி இசை மாதிரி. இனி வண்டிகள் ஏதும் கிடையாது என்று கண்ட்ரோலர் சொல்லிவிட்டார். ஆனால் தூங்குவதற்குப் பயம். வெளியே எப்போதோ பாயிண்ட்ஸ்மேன் பெரியசாமியின் குறட்டைச் சத்தம் கேட்டது. சோமையா கேபினில் உட்கார்ந்திருந்தான். அவனும்கூட இப்போது படுத்திருக்கலாம். நானும் நாற்காலியில் உட்கார்ந்தபடிக்கே தூங்கி விழ ஆரம்பித்தேன்.

திடீரென்று உலுக்கி விட்டமாதிரி முழிப்பு தட்டுப்பட்டது. முழித்ததும் நான் முதலில் கேட்டது ஏதோ பாட்டுச் சத்தம். கூர்ந்து கேட்டதில் தெலுங்குப் பாட்டாயிருந்தது. சோமையா பாடிக் கொண்டிருந்தான். மெல்ல எழுந்து வெளியே போய் நின்றேன். அவன் உச்சஸ்தாயியில் பாடிக் கொண்டிருந்தான். குரல் இனிமையில்லை. ஆனால், கரகரத்த அந்தக் குரலில் பொங்கி வந்த பாவம் அப்படியே இரவை நிறைத்தது. கிராமியப் பாடல்களாயிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

பாட்டின் அர்த்தம் எனக்குப் புரியவில்லை என்றாலும் அந்த இசையும் மெட்டும், மனசை என்னவோ செய்தது.

கொஞ்சம்கூட தடங்கலில்லாமல் பிரவாகமாய் வந்து கொண்டேயிருந்தது. ஒரு பாட்டு முடிந்து இன்னொன்று. ஒவ்வொரு பாட்டிலும் கட்டுக்கடங்காத இளமையும் பெரும் நம்பிக்கையும் பெருக்கெடுத்து வந்தது. அவனுடைய பால்ய காலத்தில் அவனுடன் வாழ்ந்த பாடல் களாயிருக்க வேண்டும். நான் அசையவில்லை. லேசாய் அசைந்தால்கூட அந்த இசையின் கிளர்ச்சிகளுக்கு ஊறு வந்துவிடுமோ என்று பயந்தேன். அந்தப் பாடல்களில் அவனுடைய பழைய வாழ்க்கை, அவன் கனவுகள், அவன் சந்தோஷம், துக்கம், ஆனந்தம் எல்லாம் வந்ததென நான் நினைத்தேன். இப்படி இந்த இரவுடன் மெய்மறந்து மனம் விட்டு பேசுகிற சோமையாவைப் பார்க்க வேண்டும். பைய நடந்து கேபினுக்கு அருகில் போய் நின்றேன்.

சோமையா நட்டணக்கால் போட்டு கண்களை மூடித் தியானம் பண்ணுகிற மாதிரி உட்கார்ந்திருந்தான். கை விரல்களால் லேசாய் தரையில் தட்டிக் கொண்டிருந்தான். அவன் என்னைக் கவனிக்கவில்லை. அந்த நிலையில் அவனைப் பார்க்க பரவசமாய் இருந்தது. எனக்கு மனசு இளகியிருந்தது. மனசு பூராவிலும் சோமையாவின் பாட்டு. பாவங்கள் நிறைந்து வழிந்தன. எனக்கும் சந்தோஷமும் துக்கமும் மாறி மாறி வந்தன. நான் அப்படியே அசையாமல் மறுபடியும் உள்ளே போய் உட்கார்ந்திருந்தேன். என்ன யோசித்தேன், எப்படி இருந்தேன் என்று நினைவில்லை. ஆனால் திடீரென்றுதான் சோமையாவின் பாட்டு நின்று போயிருந்ததை உணர்ந்தேன். இப்போது ராப்பூச்சிகளின் சத்தம் கூட இல்லை. அமைதி, பரிபூரண அமைதி எவ்வளவு நேரம் அப்படியே கழிந்திருக்கும் என்று தெரியாது. திடுமென ஒரு குரல் 'ட்வீவீக் ட்வீவீக்' அந்த இரவின் அமைதியில் இசையின் கீற்றை இழைத்ததுபோல மிக அருகில் கேட்டது. ஒற்றைப் பறவையின் குரல். அதில் சோகமில்லை. துன்பமில்லை. இந்த வாழ்க்கையை எப்படி வாழப்போகிறோம் என்ற அச்சமில்லை.

எதிரே மெல்ல ஒளி கசிந்து பரவிக்கொண்டு வரும் வானத்தையும், காடு மெல்ல தன் மேல் பாவிய இருள் திரையை மேலே உயர்த்துகிற கூத்தையும் பார்த்து ஏற்பட்ட ஆனந்தக் குரல். இனி கவலையில்லை. இந்தக் காடு வெறுமனே முள் காடாயிருந்தாலும் இரைதேட முடியும். விளையாட புதிய நண்பர்கள் வருவார்கள். காதலித்து சந்தோஷிக்க காதலி வருவாள். வேறென்ன வேண்டும். 'ட்வீவீக் ட்வீவீக்' ரொம்ப

நம்பிக்கையுடன் கூப்பிடுகிறது. திடீரென வேறெங்கிருந்தோ இன்னொரு குரல் மெலிதாய் 'ட்வீவீக் ட்வீவீக்' கேட்டது. உடனே முதலில் கேட்ட குரல் 'ட்வீவீக், ட்வீவீக் ட்வீவீக், ட்வீவீக்' உற்சாகத்துடன் ஒலித்தது. வானம் தன் கடைசிச் சோம்பலையும் முறித்துக்கொண்டு, மேகங்களைக் கசக்கிக்கொண்டு விழித்தது. இமைப்பொழுதுதான் செலவழிந்திருக்கும். ஒளி புதுவெள்ளமென பாய்கிறது. அது என் ரத்தத்திற்குள்ளும் உற்சாகத்தைச் செலுத்துகிறது. சோமையாவின் பாடல்கள் மாதிரி பல வர்ணங்களைப் பொழிந்தது. இதுவரை சோர்வில் ஆழ்ந்து போயிருந்த ஹிருதயம் ஈரமும் கதகதப்பும் பொங்கும் இந்தப் புதிய காற்றை சுவாசித்ததும் புதுபலம் பெற்றது போல் வேகமாக அடிக்கிறது. காடு விழித்துக் கொண்டது. மறுபடியும் தன் சௌந்தர்யத்தையும், கொடூரத்தையும் உலகத்துக்கு முன்னால் விரித்தது. மரங்களின் இலைகள் குதூகலத்துடன் ஒளியை வணங்குகின்றன. காற்றும் ஒளிக்கு நன்றி சொல்கிறது. காட்டிலிருந்து இப்போது சோமையாவின் பாட்டு கேட்கத் துவங்கியது. இங்கே வந்திறங்கினபோது இருந்த அச்சம், அதன் காரியமான வெறுப்பு எதுவும் கிஞ்சித்தும் எனக்கில்லை. எதிரே பாய்ந்து கொண்டிருந்த ஒளியாய் நானே எனக்கு விளங்கினேன். மனம் முழுவதும் சோமையாவின் பாட்டு. மண்ணின் வாடையோடு என் மனசை நிறைத்த இசையே, ஒளியே உங்களை வணங்குகிறேன். ஒளியின் சிரிப்பு விரிகிறது.

29. சரசுவும் சரசுவும்...

அவனுக்கு இந்த மாதிரி சமயத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தெரியவில்லை. ஆறுதலாய் நாலு வார்த்தை பேசலாமென்றாலும், என்ன சொல்வது என்று புரியவில்லை. சங்கடமாக இருந்தது. அவன் உட்கார்ந்திருந்த ஸ்டூல் வேறு அவனுடைய சிறு அசைவையும் கீச் கீச்சென்று கூப்பாடு போட்டுக் காட்டிக் கொடுத்தது. எல்லோரும் தன்னையே கவனிப்பது வேறு அவன் இயல்பைக் குலைத்தது. எதிரே சரசு பாயில் கிடந்தாள். உப்பியிருந்த வயிறு போர்த்தியிருந்த பழைய சீலைத் துணிக்கு மேலே தெரிந்தது. வாசல் நிலையில் சாய்ந்துகொண்டு சரசுவின் அப்பா நின்று கொண்டிருந்தார். கத்தை கத்தையான தலைமயிரும், ஒடுங்கிய மோவாயும், நூல் போட்டு காதில் கட்டிய பவர் இழந்த பழைய மூக்குக் கண்ணாடியும் போட்டுக்கொண்டு அவன் வீட்டுக்குள் நுழைந்ததிலிருந்து அப்படியேதான் நின்று கொண்டிருந்தார். அவன் உட்கார்ந்திருந்த அறைக்கு அடுத்திருந்த அடுக்களையில் குசுகுசுவென பேச்சுச் சத்தம் கேட்டது. சரசுவின் அம்மாவின் முகம் அவ்வப்போது தோன்றி மறைந்தது.

உள்ளே வரும்போது சுலபமாக வந்துவிட்டான். ஆபீஸில் அவனுடைய நண்பர்கள் சொன்னதைவிட நிலைமை மோசமாக இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. கண்மூடிக் கிடந்த சரசுவின் கோலமும், அந்த வீட்டின் சூழ்நிலையும் அவன் முகத்திலறைந்த மாதிரி ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது. வீடு முழுவதும் இருள்பூசி மெழுகியிருந்தது. சாயந்திரம் அவன் போயிருந்தாலும் அவனுக்கு வியர்த்து ஒழுகியது. அடிக்கடி கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான். கையில் வாங்கிக்கொண்டு வந்திருந்த குளுக்கோஸ் பாக்கெட்டை ஸ்டூலுக்குக் கீழேயே வைத்தான். தனியாக இந்த மாதிரி நோயாளிகளைப் பார்க்கப் போகும்படி இதுவரை நேர்ந்ததில்லை. நோயாளிகளின் நிராதரவான பார்வையும் சூழ்நிலைக்கேற்றபடி பேச, வார்த்தைகளைத் தேடும்படியும் ஆக நேர்கிற தர்மசங்கடத்தை நினைத்தே தனியாகப் போவதைத் தவிர்த்து விடுவான். ஆனால், நண்பர்களுடன், உறவினர்களுடன் யாரையாவது பார்க்கப் போகிற சந்தர்ப்பங்களில் அவர்கள் மிகச் சுலபமாக அன்றைய சினிமாவிலிருந்து அரசியல் வரை உடல்நிலை விசாரிப்புகளூடே பேசி சாமர்த்தியமாக திரும்பி வருவதை ஆச்சரியத்துடன் கவனித்துக் கொண்டிருப்பான். இப்போது அப்படி ஏதாவது பேச ஆரம்பிக்கலாமா என்று யோசித்து குழப்பமடைந்தான். வந்ததிலிருந்து மௌனமாக இருப்பது சகிக்க முடியாத துன்பத்தை

ஏற்படுத்தியது. அவன் சரசுவைப் பார்ப்பதும் வாசல் நிலையில் வெறித்தபடி நிற்கிற அவளுடைய அப்பாவைப் பார்ப்பதுமாய் இருந்தான். அவராவது ஏதாவது சொல்லலாம். அவரும் பேசவில்லை. ஒருவேளை அவனுடைய அலுவலக உத்தியோகம் அவரைப் பயமுறுத்தி அதனால் மரியாதையின் பொருட்டு அவர் பேசவில்லையோ என்னவோ.

வரும்போது யாரையாவது கூட்டிக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால், உடன் வேலை பார்ப்பவர்கள் ஏற்கெனவே போய்ப் பார்த்து விட்டு வந்திருந்தார்கள். அவனுடைய டிரான்ஸ்பர் விஷயமாக அவன் பத்துநாள் லீவில் போயிருந்தான். நேற்று ஆபீஸ் வந்ததும் கேள்விப்பட்டான். பிழைக்கிறது கஷ்டம் என்று சொன்னார்கள்.

சரசு அலுவலக வளாகங்கள் இருக்கிற அந்த ஏரியாவில் காலையில் டிபனும், வடை முறுக்கு போன்ற நொறுக்குத் தீனிகளையும், தூக்கு வாளியில் கொண்டுவந்து விற்றுக் கொண்டிருந்தாள். பன்னிரண்டு பதிமூன்று வயதிருக்கலாம். ஒல்லியான உடம்பில் உயிர் இருப்பதற்கான அடையாளமாய் அகல் விளக்கை ஏற்றிய மாதிரி பிரகாசமான கண்கள். கிழிந்த அல்லது ஒட்டுப்போட்ட சட்டைதான் என்றாலும் துவைத்து சுத்தமாயிருக்கும். குளித்து தலை பின்னி, ரிப்பன் கட்டி சிரித்த முகத்துடன் பாந்தமாயிருப்பாள். அண்ணே, அண்ணே என்று எல்லோரிடமும் சுலபத்தில் பழகிக் கொள்வாள். அவன் வழக்கமாக சரசுவிடமே டிபன் வாங்கிச் சாப்பிடுவான். நகரத்திலிருந்து சற்று தொலைவிலிருந்ததாலும், அநேகம் பேர் அதிகம் வளர்ச்சியடையாத அந்தப் பகுதியில் வாடகை கருதி தங்கியிருந்ததாலும் சரசுவின் வியாபாரம் சுலபமாகவே இருந்தது. அலுவலகத்திலுள்ள எல்லாவித குணங்களையும் அவள் பேசியே சமாளிப்பதைப் பார்த்து அவனுக்கு அவள்மீது தனிப்பிரியம் ஏற்பட்டது. டிபன் வாங்கிச் சாப்பிடும்போது அவள் குடும்ப விஷயங்களை அக்கறையோடு கேட்பான். சரசு தயங்கித் தயங்கியே எல்லாவற்றையும் சொன்னாள்.

மூத்த அண்ணன் ஆளுங்கட்சி வட்டச் செயலாளருக்கு வலது கை. வீட்டுக்கு வருவதில்லை. எப்போதாவது ரேஷன் கடையிலிருந்து அரிசி கொண்டுவந்து போடுவான். அதோடு சரி. சின்ன அண்ணன் ஒர்க் ஷாப்பில் வேலையிலிருந்தான். சுபாவி, அதிர்ந்து பேசாதவன். ஆறு வருடத்தில் தினம் பத்து ரூபாய் சம்பளத்துக்கு இப்போது முன்னேறி யிருக்கிறான். மூத்த அக்காதான் வீட்டு நிர்வாகம். அவள்தான் பலகாரம் சுட்டுக் கொடுத்து அனுப்புவது. சின்ன அக்கா கிறிஸ்தவ ஹாஸ்டலில் சேர்ந்து வேறு ஊரில் படிக்கிறாள். பள்ளிக்கூட விடுமுறைக்கு

மட்டும்தான் வருவாள். அம்மாவுக்கு ஆஸ்த்மா. வேலை எதுவும் செய்ய முடியாது. அப்பா டெய்லராயிருந்தார். கால் நரம்புகளில் வீக்கமும், கண்ணில் இருந்த கொஞ்சநஞ்ச பார்வையும் போய்விட்ட பின்னால் இருந்த தையல் மெஷினை விற்றுவிட்டார். சமையலுக்கு உட்கார்ந்த இடத்திலேயே உதவுவது, தட்டுத்தடுமாறி கடை கண்ணிகளுக்குப் போய் வருவது போன்ற உதவிகளைச் செய்து வந்தார். இதெல்லாம் அவன் கேட்க கேட்க ஒவ்வொன்றாய் சரசு சொன்னவை. இது மட்டுமல்ல. ஒரு நாள் அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது அவள் ஒரு நாள் கூட அந்தப் பலகாரங்களைத் தின்றதில்லை. ஏதாவது விசேஷ நாட்களென்றால் மட்டும் சாப்பிடக் கிடைக்கும். மற்ற நாட்களில் அக்கம் பக்கம் கேட்பவர்களுக்கு விற்று விடுவார்கள் என்று சொன்னாள். அன்று அவனுக்கு அவள் முன்னால் சாப்பிடவே முடியவில்லை.

அதற்குப் பின் சரசுவைப் பார்க்கும் போதெல்லாம் ஒருவித குற்றவுணர்ச்சி வளரும். சம்பளத் தேதியில் சரசு அந்த அலுவலகத்துக்கும் இந்த அலுவலகத்துக்கும் அலைவாள். கடன் சொன்னவர்கள், கணக்கில் வைத்திருப்பவர்கள் என்று தேடியலைவாள். சில சமயம் அவனிடமும் வந்து அவர்கிட்டே சொல்லுங்கண்ணே. இவர்கிட்டே வாங்கிக் கொடுங்கண்ணே என்று சொல்லுவாள். அவன் அவனுக்கு நன்றாகத் தெரிந்த நண்பர்களிடம் சொல்லி வாங்கிக் கொடுப்பான், அவர்கள் கேலி செய்வதையும் பொருட்படுத்தாமல்.

அவன் லீவில் போவதுக்கு முன்தினம் சரசு வரவில்லை. ஏன் என்று தெரியவில்லை. அப்படி இருக்கிறவளும் இல்லை. அன்று மாலை ஆபீஸை விட்டு சீக்கிரமே கிளம்புகிற போதுதான் யாரோ சொன்னார்கள்.

“இனிமே டியனுக்கு வேற ஆளப்பிடிக்க வேண்டியதுதான்... அந்தப் புள்ளைக்கு உடம்பு சரியில்லையாம்.” ஊருக்குக் கிளம்புகிற மும்முரத்தில் அது மனசில் பதியவில்லை. நேற்று வந்த பிறகுதான் விஷயம் தெரிந்தது.

சரசுவின் அப்பா எதுவுமே பேசமாட்டார் போலிருந்தது. வந்து கொஞ்ச நேரமே ஆகியிருந்தாலும் நீண்ட நேரம் ஆனதைப்போல அயர்வு. அவனுக்கு எதுவுமே பேசாமல் எப்படி எழுந்து போகமுடியும் என்று தெரியவில்லை. சரசுவைப் பார்த்தான். முகம் சாம்பல் பூத்து வெளுத்திருந்தாள். மரணம் அவளைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தின்று கொண்டிருப்பது போலிருந்தது. ஆழ்ந்த உறக்கமா மயக்கமா என்று தெரியாதபடி கண்களை மூடிக் கிடந்தாள். இன்னமும் அடுக்களை

யிலிருந்து பேச்சுச் சத்தம் கேட்டது. அவனுக்கு முதுகு நனைந்து சட்டை ஒட்டிக் கொண்டது. வியர்வையை துடைத்துக் கொண்டேயிருந்தான். ஏதாவது பேசியே விடுவது என்று தீர்மானித்து, சரசுவின் அப்பா இருந்த திசையைப் பார்த்து,

“ஆஸ்பத்திரில காமிச்சீங்களா...”

சரசுவின் அப்பா லேசாய் அசைந்தார்.

“என்ன சார் சொன்னீங்க...”

அத்தனை வயதானவர் அவனை சார் என்று கூப்பிடுவது கஷ்டமாக இருந்தது. தம்பி என்று கூப்பிட்டிருக்கலாம். அவருக்கு அலுவலக உத்தியோகஸ்தர்கள் சமூகத்தில் மிகமிக மரியாதைக்குரியவர்கள் என்ற அனுபவ அறிவு காரணமாயிருக்கலாம்.

“இல்ல... ஆஸ்பத்திரில காமிச்சீங்களான்னு கேட்டேன்...”

கொஞ்சம் தடுமாற்றத்துடன் சொல்லி முடித்தான். அவன் பேச ஆரம்பித்ததும் அடுக்களையில் பேச்சுச் சத்தம் நின்றுவிட்டது. ஒருகணம் நிசப்தம். சரசுவின் அப்பா பதில் சொன்னார்.

“காமிச்சாச்சு... டாக்டர் ஒண்ணுமில்லங்கிறாரு. சத்துக் குறைவு, சோகைன்னு டானிக் மாத்திரையெல்லாம் எழுதிக் கொடுத்திருக்கிறாரு... பெரிய பையனுக்கு சொல்லி விட்டிருக்கேன் சார்... அவன் வந்தான்னா பிரைவேட்டா பெட்டில சேத்து கவனிப்பான் சார்... எல்லாம் நம்ப கையில் என்ன இருக்கு... தலை விதிப்படிதான் நடக்கும்...”

அவனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. குளுக்கோஸ் பாக்கெட்டுடன் கூட நாலு ஆரஞ்சுப்பழம் வாங்கிக் கொண்டு வந்திருக்கலாம். அடுக்களையில் மீண்டும் சரசுவின் அம்மா முகம் தோன்றியது. அவன் சரி சொல்லிவிட்டுப் போகலாம் என்று நினைத் தான். சரசுவின் அம்மா கையை அசைத்து சரசுவின் அப்பாவைக் கூப்பிட்டாள். சரசுவின் அப்பா நேரே அடுக்களையைப் பார்த்த மாதிரி நின்று கொண்டிருந்தாலும் அவருக்குத் தெரியவில்லை. சரசுவின் அம்மாவோ விடுவதாயில்லை. கையை அசைத்துக் கூப்பிட்டுக் கொண்டேயிருந்தாள். அவன் கொஞ்ச நேரம் எதையும் கவனியாத மாதிரி இருந்தான். அப்புறம் பொறுக்க முடியாமல் அவரைப் பார்த்து,

“ஒங்கள கூப்பிடறாங்க...” என்றான். அவர் திடீரென நினைவு திரும்பியவர்போல வாசலைப் பார்த்துத் திரும்பி,

“யாரு... யாரு...” என்றார். அதற்குள் அந்த அம்மாவே,

“என்னங்க... நாந்தான் கூப்பிட்டேன்...” அவர் அடுக்களைக்குப் போனார். அவர் திரும்பி வந்ததும் கிளம்பி விடலாம் என்று நினைத்தான். அவர்கள் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டார்கள். கூடவே இன்னொரு பெண் குரலும் கேட்டது. அப்புறம் அவர் ஒரு எவர் சில்வர் தூக்குவாளியைக் கையில் எடுத்துக் கொண்டு வந்தார்.

“சார் காப்பியா... டீயா...”

“அய்யய்யோ... அதெல்லாம் ஒண்ணும் வேண்டாங்க...”

“ஏன் சார்... காப்பி டீ குடிக்கமாட்டீங்களா... பால் வாங்கிட்டு வரவா...”

“எதுவும் வேண்டாங்க... நீங்க பேசாம இருங்க. நான் பத்து நாளா ஊரில இல்ல... நேத்துதான் ஆபீசுக்கு வந்தேன்... வந்ததும் சொன்னாங்க... அதான் பாத்துட்டுப் போலாம்னு வந்தேன்... சரசு கொணமாகட்டும்... இன்னோர் தடவை வந்து காப்பி டீ சாப்பிடறேங்க... இப்ப தயவு பண்ணி வேண்டாம்...”

அவர் தயங்கி நின்றார். அவன் கைக்குட்டையை மடித்து பேண்ட் பையில் வைத்தான். குனிந்து கீழே வைத்திருந்த குளுகோஸ் பாக்கெட்டைக் கையில் எடுத்தான். சரசுவின் அப்பா கையில் கொடுக்கலாமா இல்லை சரசுவின் படுக்கை அருகே வைக்கலாமா என்று யோசித்தான். எதுவும் உசிதமாகப் படவில்லை. மறுபடியும் குளுகோஸ் பாக்கெட்டை ஸ்டூலுக்குக் கீழேயே வைத்துவிட்டு நிமிர்ந்தான்.

“சரி போய்ட்டு வரேங்க... சரசுவை நல்லா கவனிச்சுக்குங்க...”

“சரி சார்... வாங்க சார்...”

வாசல் வரை சரசுவின் அப்பா வந்தார். வானம் கறுத்து மழை வரும் போலிருந்தது. புழுக்கம் அதிகமாக இருந்ததால் அவன் வாயினால் சட்டைக்குள் ஊதிக்கொண்டே நடந்தான். கொஞ்சம் ஆசுவாசமாயிருந்தது.

சரசுவின் வீட்டுக்குப் போய் வந்த நான்கு நாட்களில் திருவண்ணாமலைக்கு மாற்றல் உத்தரவு வந்தது. அதுவரை சரசுவைப் பற்றி எந்தவொரு மோசமான செய்தியும் கேள்விப்படவில்லை. அவள் குணமாகிக் கொண்டிருப்பாள் என்று நம்பினான். ஊரைவிட்டு கிளம்பும்போது போய்ப் பார்த்துவிட்டு வரலாமா என்று நினைத்தான். ஆனால் அவனுடைய நம்பிக்கைக்குப் பங்கம் வர மனசு ஒப்பவில்லை. அதனால் அவளைப் பார்க்கப் போகாமலேயே மாற்றலாகி

வந்துவிட்டான்.

திருவண்ணாமலை அலுவலகத்தில் சேர்ந்த மறுநாள் காலை அவன் இருக்கைக்கு முன்னாள் ஒரு சிறு பெண். அதிகமிருந்தால் பத்து வயசிருக்கும். மெலிந்த உடம்பும், வெள்ளையான சிரிப்பும், இடுங்கிய சிறிய கண்களும் கொண்டவள். கையில் ஒரு தூக்கு வாளியுடன் வந்து கேட்டாள்.

“அண்ணா டிப்பன் வேணுமா...”

30. வாசலில் ஒரு பெட்டி

அவன் நின்று கொண்டிருந்தான். எவ்வளவு நேரமாய் என்று அவனுக்கே தெரியாது. பக்கத்தில் அப்பா எடுத்து வைத்த பெட்டி. பெட்டி இன்னமும் துடித்துக் கொண்டிருந்தது. அப்பாவின் கோபத் தையும், ஆத்திரத்தையும் தாங்க முடியாமல் பெட்டி ஒரு சாய்கோட்டில் நின்று கொண்டிருந்தது. கைப்பிடி எப்போதும் தூக்கிப்போக வசதியாக நட்டமாய் நின்று கொண்டிருந்ததைப் பார்த்தான். அவன் வீட்டுக்குள்ளிருந்து எந்த அரவமும் கேட்கவில்லை. நடந்த சம்பவத்திற்கும் நெடுமரமாய் நின்று கொண்டிருந்த அவனுக்கும் பெட்டிக்கும் பட்டாலையில் பதிந்திருந்த கடப்பைக் கருங்கல் மட்டுமே சாட்சியாய் இருந்தது.

அவனுக்குக் கால் வலிக்க ஆரம்பித்ததும்தான் ரொம்ப நேரமாக நிற்கிறோம் என்று நினைக்கத் தொடங்கினான். மத்தியானம் அவன் வெளியே பாளையங்கோட்டை வரை போய் ஏசுவடியானைப் பார்த்து விட்டு வந்தபோதுதான் நடந்தது அது. சண்டையோ, சச்சரவோ, சத்தமோ, கூப்பாடோ எதுவும் கிடையாது. அவன் முற்றத்தில் ஏறி ஓரத்தில் இருந்த மரத்தூணைப் பிடித்துக்கொண்டு செருப்பைக் கழட்டினான். இப்போதெல்லாம் தூணைப் பிடிக்காமல் செருப்பைக் கழட்ட முடிவதில்லை. அப்போது உள்ளேயிருந்து அப்பா வேகமாய் வந்தார். அவர் கையில் அவனுடைய பெட்டி. அவன் பக்கத்தில் டக்கென்று வைத்துப் பல்லைக் கடித்துக் கொண்டு, இறுக்கமான கரகரப்பான குரலில், “வெளியே போயிரு...”

அவன் எதுவும் சொல்லுமுன்பே அவர் பட்டாலைக்குள் போய்விட்டார். இதை, இப்படி நடக்கும் என்று முன்பே எதிர்பார்த்திருந்தான். ஆனால், இன்று அதுவும் இந்த வெயிலில் பாளையங்கோட்டையிலிருந்து நடந்தே கொக்கிரகுளம் வந்து, கொக்கிரகுளம் ஆத்துப்பாலத்துக்குக் கீழே இறங்கி படித்துறையில் கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்து விட்டு முழங்காலுக்குக் கீழே ஓடிய தாமிரபரணியை அலட்சியமாய்க் கடந்து சோர்ந்து பேய்ப் பசியுடன் வீட்டுக்கு வந்திருந்தான். எதிர்பார்க்கவில்லை. எதிர்பாராதது எதிர்பாராமல் வந்து முகத்தில் அடிக்கிற திகைப்பு அவனிடம். அவன் அப்படியே நின்றான். அப்பா சொல்லிவிட்டுப்போன வார்த்தைகளைக் கேட்டு இன்னமும் பெட்டி நடுநடுங்கிக் கொண்டிருந்தது. அவன் காதுக்குள் பேரிரைச்சல். சுழன்று வீசும் காற்றின் சுழலில் அப்பாவின் வார்த்தைகள் சிக்கின. சுழல் அவன் மூளையை மையம் கொண்டு நகர்ந்து கொண்டிருந்தது.

அப்பாவுக்கு அதுதான் அவன் பெட்டியென்று எப்படித் தெரிந்தது என்று யோசித்தான். அவன் குறிப்பாக நண்பர்கள் வரும்போது அந்தப் பெட்டியைத் திறந்து புஸ்தகங்களை எடுப்பதை, வைப்பதைப் பார்த்திருக்கலாம். பெட்டிக்குள் நாலைந்து புஸ்தகங்களும், ரெண்டு சட்டையும், ஒரு பேண்டும், கைலியும் இருப்பதாக ஞாபகம். அவன் பெட்டியைப் பார்க்க, பெட்டி அவனைப் பார்த்தது. பெட்டியின் இடுவலில் பேண்டின் இடுப்பிலுள்ள வெல்வெட் துணியின் நைந்துபோன நுனி தெரிந்தது. அவன் நின்று கொண்டிருந்த இடத்திற்கு இடது பக்கத்தில் ஒரு பழைய பெரிய நார்க்கட்டில் தொய்ந்து போன உடலோடு கிடந்தது. அவன் தாத்தா வீரசிவம்பிள்ளை போன வருஷம் சாகிறவரை படுத்துக் கிடந்த கட்டில். கட்டிலில் அவர் படுத்துக் கிடந்த குழி நிரப்பப்படாமலேயே இருந்தது. அவன் அதில் உட்கார நினைத்தான். ஆனால், உட்காராமல் உட்கார இன்னும் நேரம் இருக்கிறதென்று ஏனோ தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அப்பா பட்டாலைக்குள் கூண்டுக்குள் பசியுடன் அலையும் மிருகத்தைப்போல அங்கிட்டும் இங்கிட்டும் அர்த்தமில்லாமல் நடந்து கொண்டிருந்தார். அவருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை என்று அவன் நினைத்தான். பட்டாலையில் விளக்குப் புரைக்கு மேலிருந்த அலமாரியைத் திறந்து எதையோ தேடுகிற பாவனையில் அவனையும், பெட்டியையும் பார்க்க நேருவதைக் தவிர்த்துக் கொண்டிருந்தார். இதுவரை வெளியே தலை காட்டாத அம்மா மெல்ல அடுக்களையிலிருந்து வெளியே வந்தாள். இடுப்பில் ஏறக்கட்டின சேலையும் கால்களின் ஈரமும் அவள் அங்கணத்தில் பாத்திரம் விளக்கிவிட்டு வருகிறாள் என்று தெரிந்தது. வந்தவள் அவனையும் பெட்டியையும் யாருமே இல்லாத இடத்தை, யாதொரு சிந்தனையும் இல்லாமல் பார்க்கிற வெற்றுப் பார்வை பார்த்தாள். திரும்பி அப்பாவின் முதுகைப் பார்த்தாள். அப்பாவின் முதுகு என்ன சொல்லியதோ தெரியவில்லை. திரும்பவும் அடுக்களைக்குப் போய்விட்டாள்.

அவன் மத்தியானம் சாப்பிடவில்லை. பசித்தது. சாப்பாடு போட்டுவிட்டு இப்படிச் செய்திருக்கலாம் அப்பா. அப்படிச் செய்திருந்தால் இன்னும் கொஞ்சநேரம் தாக்குப் பிடிக்கலாம். அவனுக்கு இதை நினைத்ததும் சிரிப்பு வந்தது. இந்த நேரத்திலும் தன்னால் சிரிக்க முடிகிறதை நினைத்து ஆச்சரியப்பட்டான். அவனுக்குத் தான் ஏன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு போகவேண்டும் என்பதற்கான காரணமும் தெரியவில்லை.

அவன் பொழுது மங்கி வருவதைக் கவனித்தான். லேசான ஈரிப்பான

காற்று வீட்டின் முன்னால் வீசியது. ஜெயா டீச்சர் வீடிருக்கிற பக்கத்து காம்பவுண்டு சுவருக்கு மேலே தெரிந்த தென்னை மரத்தின் இலைகளை காற்றில் ஆடியதைப் பார்த்தான். பொழுதுகளைக் கவனிக்கிறது எப்போதும் சிலாக்கியமாகவே இருக்கிறது. அவன் திரும்பியபோது அப்பா சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டிருந்தார். இந்த அப்பாவின் மீதுதான் எத்தனை நாள் குதிரை ஏறியிருக்கிறான். எத்தனை தடவை இட்ட ஏவல்களை ஓடிஓடிச் செய்ய வைத்திருக் கிறான். எத்தனை முறை பொய்யாகவும் நிஜமாகவும் அடித்திருக்கிறான். காலம் மாறிவிட்டது. இப்போது அவனைப் பற்றிக் கவலைப்படக்கூட ஆள் இல்லை. அஞ்சு வருஷமாய் பழகிய மரியாள் கூட தூத்துக்குடி ஸ்பிக்கில் வேலை பார்க்கிற டேவிட் ஜான்சனைக் கல்யாணம் செய்துகொண்டு போய்விட்டாள்.

அப்பா வெளியே கிளம்பினார். அவனைத் தாண்டிப்போனவர் அவனைப் பார்க்கவில்லை. ரொம்ப சாதாரணமாய் கடந்து போய்விட்டார். அவனுக்கு அவன் மீதே கோபம் வந்தது. பொருட்படுத்த அருகதையற்ற பொருளாக இவ்வளவு நேரம் நின்றிருப்பதை நினைத்தபோது எரிச்சலாய் வந்தது. அம்மா வெளியே வந்தாள். அவளும் அவனைப் பார்த்துக் கொண்டே பார்க்காத மாதிரி காண்பித்துக் கொண்டு ஜெயா டீச்சருடன் பேசுவதற்குப் போய்விட்டாள். அவளுடைய ஜாமீன் நேரம் இதுதான். அவன் ஆளில்லாத அனாதையாக வீட்டை வெறித்துக் கொண்டிருந்தான். வீட்டிற்குள்ளும் போக முடியாமல் இவன் கையிலும் ஏறாமல் பக்கத்தில் அந்தப் பெட்டி நின்றிருந்தது. பெட்டிக்குள் அவன் டிகிரி சர்டிபிகேட்ஸ் எல்லாம் இருக்கிறதா என்று ஞாபகப்படுத்தினான். அது ஏதோ ரொம்பப் பழைய ஞாபகம் போல இருந்த மாதிரியும் தெரிந்தது இல்லாத மாதிரியும் தெரிந்தது. ஆனால் பெட்டியைத் திறந்து பார்க்க அவன் தைரியப்படவில்லை. விரியத் திறந்து கிடந்த பட்டாலைக்குள் காலைப் பெயர்ந்து வைத்து நடந்தான். நடையில் கொஞ்சம் நடுக்கம் இருந்தது. அடுக்களைக்குள் போய்த் தட்டை எடுத்து வைத்து சோற்றைப் போட்டுச் சாப்பிட்டான். எந்தப் பரபரப்புமில்லாமல் குற்றவுணர்வும் இல்லாமல் அன்று தான் சாப்பிட முடிந்ததையும் அதுவும் நிறைய சாப்பிட முடிந்ததையும் நினைத்து சந்தோஷப்பட்டான். சாப்பிட்டு முடித்து தட்டைக் கழுவி வழக்கமான இடத்தில் வைத்துவிட்டு செப்புப் பானையிலிருந்து ரெண்டு தம்ளர் தண்ணீரை எடுத்துக் குடித்துவிட்டு மறுபடியும் முற்றத்திற்கு வந்தான். பெட்டி இன்னமும் அங்கேயே இருந்தது. எப்போதும் வெளியேறத் தயாராய், பெட்டிகள் மாத்திரம் எப்படியிருந்தாலும் எப்போதும் பயணம் போகிற மனோநிலையைத்

தருகிறது. அவன் முற்றத்திற்கு வந்து கட்டிலில் தாத்தா பாரமாய்க் கிடந்து பதிந்த குழியில் உட்கார்ந்தான்.

அம்மா வீட்டுக்குள் போனாள். அவனுக்கு இப்போது ஒரு சிகரெட் பிடிக்க வேண்டும்போல இருந்தது. வெளியே பெட்டிக்கடை இருக்கிற முக்குவரை போகவேண்டும். எழுந்து போகும்போது பெட்டியைப் பார்த்தான். ரொம்ப ஏங்கிப் போயிருந்தது. சரி போனால் போகிறதென்று பெட்டியையும் ஒரு கையில் பிடித்துக்கொண்டு முற்றத்தை விட்டு இறங்கித் தெருவில் நடந்தான். இப்போது வேண்டியதெல்லாம் ஒரு கோல்ட் பிளேக் பில்டர் அல்லது ஒரு கணேஷ் பீடி, நெஞ்சு நிறையப் புகை, அவ்வளவுதான்.

31. தூரம்

அவர்கள் இரவு முழுவதும் நடந்து வந்திருந்தார்கள். இறுக்கமும் புழுக்கமும் நிறைந்த அந்த இரவில் நடந்து வருவது அவ்வளவு எளிதாக இல்லை. ஊரை விட்டுத் தாண்டி கிட்டத்தட்ட பத்திருபது மைல் வந்துவிட்டார்கள். அவர்கள் ஆறுபேர், ரெண்டு பன்னிக்குட்டி, ஒரு கழுதை, காளி, அவன் பெண்டாட்டி குருவம்மா, காளியின் அப்பன் கலியன்... அது காட்டுப் பாதை. அங்கங்கே பூச்சிகளின் 'ஙொய்ய்ங்' இரைச்சல் விட்டு விட்டும், தொடர்ந்தும் கேட்டது. திடீர் திடீரென்று நரிகளின் ஊளைச் சிரிப்பொலி வேறு. இரவின் கடும் இருட்டு, மேலும் மேலும் பூமியை விழுங்கிக் கொண்டேயிருந்தது.

வழிநெடுக காளிதான் பேசிக்கொண்டும், பாடிக் கொண்டும் உற்சாகமாய் வந்தான். ஊரை விட்டு கிளம்பிய சமயம் எங்கேயோ போய் சாராயம் குடித்துவிட்டு வந்திருந்தான். குருவம்மாவுக்கும், கிழவன் கலியனுக்கும், சப்பாணி கடையில் ரெண்டு டீயும், பொரையும் வாங்கிக் கொடுத்தான். அதுகூட பெரிய பன்னியை வித்து வாங்கிய காசின் கடைசி மிச்சத்தில். குடிக்க கஞ்சி இல்லாமல் எத்தனை நாளைக்கு ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்துக் கொண்டிருப்பது. ஊரைவிட்டுக் கிளம்ப காளியும் குருவம்மாவும் முடிவு செய்தார்கள். இப்போது எங்கே போகிறோம் என்று யாருக்கும் தெரியாது. ஆனால், இதற்கு மேல் ஊரில் இருக்க முடியாது என்பது மட்டும் நன்றாகத் தெரியும். என்ன செய்ய. வாழ்க்கை சுழிக்கிறதே.

கலியனுக்கு நடக்கவே முடியவில்லை. தொறட்டிக் கம்பை ஒரு கையில் ஊணிக்கொண்டு, இன்னொரு கையை குருவம்மாவின் தோளில் போட்டுக்கொண்டு தயங்கித் தயங்கி நடந்து வந்தான். பத்தடி நடந்து நின்று மூச்சு வாங்குவான். வெள்ளை வெளேரென்ற தாடிக்குள் சூம்பிக்கிடந்த முகத்தைக் கோணிக்கொண்டு இருமுவான். ஏற்கெனவே கலியனுக்கு ஒரு மாசமாக உடம்பு சரியாயில்லாமல் இருந்தது. தினமும் குடித்த சாராயம் அவன் குடலை கருக்கியிருந்தது. உடம்பில் கொஞ்சங்கூட திராணியில்லாமல் கிடந்தான். எப்படியோ மூச்சுக் கட்டிக்கொண்டு இவ்வளவு தூரம் நடந்து வந்துவிட்டான். அவன் இருட்டுக்குள் கண்களை மூடிக்கொண்டே நடந்தான். பால்ய காலம் கண்ணுக்குள் ஆடியதுபோல.

முன்னால் போய்க் கொண்டிருந்த பன்னிக்குட்டிகளின் கால்களில் கொச்சைக்கயிறு கட்டியிருந்தது. பன்னிக்குட்டிகள் ரெண்டும் ஒன்றின்

மீது ஒன்று உராய்ந்து கொண்டும், முகத்தோடு முகத்தை இடித்துக் கொண்டும் வந்தன. கழுதையின் முதுகில் ரெண்டு பக்கமும் பழைய உரச்சாக்கு மூட்டைகள் தொங்கிக் கொண்டிருந்தன. கழுதையும், அரைக் கண் போட்டுக் கொண்டே நடந்தது.

அவர்களில் குருவம்மாவுக்கு தாகமெடுத்தது. வறண்டு போயிருந்த தொண்டையை எச்சிலைக்கூட்டி முழுங்கி நனைத்துக் கொண்டாள். கறுத்து மெலிந்த உடம்பு. எண்ணெயை மறந்த செம்பட்டைத் தலை. எப்பவோ சோப்பு கண்ட சேலையும் சட்டையும். கைகளில் ரப்பர் வளையல். இடதுகாலில் ஒரு இரும்பு வளையம். சேலையை முட்டுக்கு மேல் இழுத்து இடுப்பில் செருகியிருந்தாள். விரிந்த கண்களில் தூக்கம். கூர்மையான மூக்குக்குக் கீழே மெலிந்த சிறிய உதடுகளில் எப்போதும் வலியினால் ஏற்பட்ட இழுப்பு இருந்தது. அவள் காளியிடம் கொஞ்சம் நின்னு போக கேட்கலாமா என்று நினைத்தாள். அப்போதுதான் அது நிகழ்ந்தது.

கிழவன் கலியனுக்கு திடீரென்று இழுப்பு கண்டுவிட்டது. கீழே சரிந்து விழப் போனவனை குருவம்மா ஏந்தலாய் பிடித்தாள். காளியும் ஓடிவந்து தூக்கினான். இரண்டு பேருமாய் சேர்ந்து கிழவனை பாதைக்குப் பக்கத்தில் இருந்த மரத்தினடியில் படுக்க வைத்து கிழிந்து கந்தலாகிப் போன கம்பளியால் போர்த்தினார்கள். காளி முன்னால் போய்க் கொண்டிருந்த கழுதையையும், பன்னிக் குட்டிகளையும் ‘ப்ர்ரய்யய்’ என்று சத்தம் கொடுத்து மடக்கினான். கழுதையின் முதுகிலிருந்து சாக்கு மூட்டைகளை இறக்கி வைத்துவிட்டு கலியனுக்கு அருகில் வந்து உட்கார்ந்தார்கள்.

கிழவன் இன்னமும் துடித்துக் கொண்டேயிருந்தான். குருவம்மா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். கலியன் செத்துப் போய்விடுவான் என்று ஏனோ தோன்றியது. அவளுடைய சொந்த தாத்தா அவன். சின்னப் பிள்ளையாய் இருக்கும்போது தினசரி மண்ணாங்கட்டி கடைக்குக் கூட்டிப் போய் சோள பிஸ்கத்து வாங்கிக் கொடுத்த தாத்தா. மீசையை உருவச்சொல்லிக் கொடுத்து அவள் உருவி விடும்போது சந்தோஷமாய் சிரித்த தாத்தா. நேற்று அவர்கள் கிளம்பும்போது என்னமாய் அழுதான். பெரிய வாயில் கோழை வடிய, செத்தாலும் கூடவே வந்து செத்துப் போகிறேன் என்று அழுதான். குருவம்மாவுக்கு கண் கலங்கியது. கண்ணில் கண்ணீர் வந்ததும் கண்ணெல்லாம் எரிய ஆரம்பித்தது. குருவம்மாவுக்கு கண்ணைச் செருகியது. எப்போது தூங்கினாள் என்று அவளுக்கே தெரியாது.

ஏதோ ஒரு கெட்ட சொப்பனம் கண்டு வியர்த்து விறுவிறுத்து கண்ணை முழித்தாள். இப்போது வானம் கசங்க ஆரம்பித்திருந்தது. நட்சத்திரங்கள் மங்கலாகி அழுது வடிந்தன. அங்குமிங்குமாக பறவைகளின் கூப்பாடு கேட்டது. காளி நன்றாக வேட்டியை இழுத்து மூடித் தூங்கிக் கொண்டிருந்தான். அவளுக்குப் பசியும் தாகமும் குடலைத் தின்றது. தூரத்தில் ஏதோ கட்டடம் தெரியவே அவள் சாக்குப் பையிலிருந்து விளிம்பு உடைந்துபோன ஈயச் சொம்பை எடுத்துக்கொண்டு நடந்தாள்.

அது ஒரு அநாதையான ரயில்வே ஸ்டேஷன் கட்டடம். இடிந்து பாழாகியிருந்தது. மனித நடமாட்டமே அத்துப் போயிருந்த அந்த இடத்தில் ஒரு கிணறு இருந்தது. அவள் அதிர்ஷ்டம்தான். அவள் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தாள். தண்ணீர் இருக்கிற இடமே தெரியவில்லை. அந்தக் கிணற்றில் உருளையும், ஓட்டை விழுந்த தகர வாளியும் கிடந்ததைப் பார்த்து, பக்கத்தில் எங்காவது ஊர் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். வாளியை விட்டாள் தூர் தட்டியது. ஏதோ கொஞ்சம் வாளியில் வழித்த மாதிரி சத்தம் கேட்டது. இழுக்கும்போது பிராணன் போகிற மாதிரி 'கீளு கீளு' என்று கத்தியது உருளை, வாளியில் அரைவாசி கூட தண்ணீர் இல்லை. கலங்கலான அந்தத் தண்ணீரை அப்படியே மொண்டு முகத்தில் அடித்தாள். கை நிறைய அள்ளிக் குடித்தாள். மறுபடியும் தண்ணீரை இறைத்து சொம்பில் மொண்டு குடித்தாள். வயிறு ரொம்பிவிட்டது. உடம்பெல்லாம் குளிர்ந்த மாதிரி இருந்தது. ஒரு சொம்பு தண்ணீரையும் கையில் எடுத்துக் கொண்டு அவர்கள் படுத்திருந்த இடத்திற்கு நடந்தாள். அவள் வந்து சேரும்போது காளி எழுந்து சுற்றிச் சுற்றி அவளைத் தேடிக் கொண்டிருந்தான். அவளைப் பார்த்ததும் கோபத்துடன்,

"எங்கடி போயிருந்த சிறுக்கிபுள்ள..."

"அ... ரெண்டு பொரையும் டீயும் வருசத்துக்கும் தாங்குமில்ல... தண்ணியாச்சும் குடிப்போம்னு போனேன்..."

அதைக் கேட்டதும் அவன் முகம் மாறிவிட்டது அவனுக்கும் தாகம்.

"தண்ணி நெறய இருக்குதா..."

"ஏதோ வாய நனைக்கதுக்கு கொஞ்சூண்டு கெடக்குது... என்ன பாவத்துக்கு ஆண்டவன் இப்படி பண்ணுதானோ..."

"தண்ணியக் கொண்டா..."

தண்ணீரை அவன் கையில் கொடுத்துக்கொண்டே குருவம்மா,
"கிழவனை எழுப்பினியா..."

“எழுப்பு எழுப்பு... சாகமாட்டாம கெடந்து உசுர வாங்குது கெழம்...”

காளி சொம்பை வாங்கி முகத்தைக் கழுவினான். வாயைக் கொப்பளிக்காமல் அப்படியே மடக்மடக்கென்று குடித்தான். அவள் கிழவனை மூடியிருந்த கம்பளியை மெல்ல எடுத்துக் கொண்டே,

“கெழவா... ஏ கெழவா...”

கிழவனின் உடம்பில் துடிப்பே இல்லை. உடம்பைத் தொட்டாள் குளிர்ந்திருந்தது. திடீரென மனசில் இனம் புரியாத துக்கம் பரவியது.

“காளி... ஏ... காளி...”

கூப்பிட்டாள், குரல் உடைந்திருந்தது. அவளுடைய கலவரத்தில் அவன் அநேகமாக புரிந்து கொண்டான். ஆனால் ஏதும் புரியாத மாதிரி அசையாமல் நின்றான். அப்புறம் நிதானமாக நடந்து வந்து கிழவனின் நெஞ்சில் கை வைத்தான். நாடியைப் பிடித்துப் பார்த்தான். கிழவனின் கையை அப்படியே விட்டுவிட்டு தலையில் கை வைத்தபடி உட்கார்ந்தான். முதலில் முகம் சற்று மங்கியது. உடனே மூக்கை விடைத்துக்கொண்டு,

“சிறுக்கிப்புள்ள... முதல்லயே சொன்னேன்... அங்கேயே விட்டுருவோம்னு... இப்ப நடுவழியில் செத்துத் தொலைச் சிருக்கான்... என்ன பண்ணறது... எல்லாம் ஒன்னாலதாண்டி, தேவிடியா முண்டை...” என்று எட்டி அவள் செவிட்டில் ஒரு அறை அறைந்தான். அவள் கண்களில் பொறி தட்டியது. எழுந்து தடுமாறிக்கொண்டே,

“தேவடியா மகனே... அடிக்கவாடா செய்யிறே...” அவன் தலைமயிரைப் பிடித்தாள். அவன் அவள் முதுகில் அடித்து காலால் உதைத்தான். அவள் ஒரு கையால் அவன் தலைமயிரையும், இன்னொரு கையால் கொதவளையையும் பிடித்தாள். அவன் அவளை ஒரு உதறு உதறி கீழே தள்ளினான். அவள் சரளையில் விழுந்தாள். அவள் கையில் அஞ்சாறு தலை முடி இருந்தது.

“கொன்னுரு... என்னையும் கொன்னுட்டு நீ போய்... எச்சிலையப் பொறுக்கு... ஒரு வேள கஞ்சி ஊத்த வக்கில்லாத நாயே... உனக்கு என்னத்துக்குடா பெண்டாட்டி... அடிக்கான்... பெரிய மயிரு...”

“கீரை முண்ட... பேசாத... கொதவளைல ஏறி மிதிச்சிருவேன்...” என்று சொல்லிக்கொண்டே ஒரு எத்து எத்தினான். அவள் கோபத்தோடு சுற்றிலும் பார்த்தாள். கையில் கிடைத்த கல்லை எடுத்து எறிந்தாள். அவன் காலில் அடி விழுந்தது. அவன் அப்படியே காலைப் பிடித்துக்

கொண்டு உட்கார்ந்து விட்டான். அவள் அழுது கொண்டே கைமுட்டிலும், பின்னந்தொடையிலும் சிராய்த்திருந்ததை திரும்பத் திரும்ப பார்த்துக் கொண்டிருந்தாள். வாயிலிருந்து எச்சிலைத் தொட்டுத் தடவினாள் குருவம்மா.

வெயில் சுள்ளென்று அடிக்க ஆரம்பித்துவிட்டது. வெக்கையான காற்று வீசியது. கழுதையும் பன்னிக்குட்டிகளும் கொஞ்ச தூரத்தில் திங்க ஏதாச்சும் கெடைக்குமா என்று அலைந்து கொண்டிருந்தன.

காளியும், குருவம்மாவும், ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டனர். பேசவில்லை. கொஞ்ச நேரம் கழித்து அவன்தான்.

“கெழவன இங்கனயே பொதச்சிருவோம்...” அவள் ஒன்றும் சொல்லவில்லை. அவனைக் கூர்ந்து பார்த்தாள். அவன் எழுந்து கிழவன் ஊணிக் கொண்டு வந்திருந்த தொறட்டிக் கம்பால், அந்த வேப்பமரத்துக்குப் பக்கத்திலேயே குழியைத் தோண்ட ஆரம்பித்தான். அப்படியே அவன் தோண்டுவதைப் பார்த்துக் கொண்டிருந்த குருவம்மா, எழுந்து அவன் தோண்டிய இடத்திலிருந்து மண்ணை வாரினாள். ரெண்டு பேருக்கும் வியர்த்து வழிந்தது. எப்படித் தோண்டியும் ரெண்டு அடிக்குமேல் தோண்ட முடியவில்லை. ரெண்டு பேரும் உட்கார்ந்து விட்டார்கள். கிழவனின் முகம் சகிக்க முடியாத வேதனையில் இருந்தது. அவன் எழுந்து கிழவனை தோளோடு சேர்த்துத் தூக்கினான். அவள் காலைப் பிடித்துத் தூக்கினாள். எப்படியோ குழிக்குள் இறக்கி வைத்தார்கள். அந்தக் கிழிந்த கம்பளியைக் கொண்டு மூடினார்கள். மண்ணைத் தள்ளப் போன காளி, திடீரென ஞாபகம் வந்ததுபோல சட்டைப் பையிலிருந்து ரெண்டு சொக்கலால் பீடியை எடுத்தான் அதில் ஒன்றைக் கிழவனின் மீது போட்டுவிட்டு மற்றதைப் பத்திரப்படுத்தினான். மண்ணைத் தள்ளி குழியை மூடினார்கள். காணாததுக்கு அவள் பாதையில் கிடந்த மணலை மடியில் அள்ளிக் கொண்டு வந்தாள். அவன் சமாதி மாதிரி கட்டிவிட்டு ஒரு பெரிய கல்லைத் தேடிப் போனான். அவள் மரத்தடியில் உட்கார்ந்தாள்.

அவன் பெரிய கல்லை புரட்டிக் கொண்டு வந்து சமாதியின் தலைமாட்டில் வைத்தான். அவள் எழுந்து போய் கழுதையையும், பன்னிக் குட்டிகளையும் தேடி மடக்க எழுந்தாள். அவன் மீதியிருந்த அந்த ஒரு பீடியையும் குடித்தான். மறுபடியும் சாக்குமூட்டைகளை கழுதையின் முதுகில் ஏற்றி வைத்த பிறகு,

“போவமா...” என்றாள் குருவம்மா. அவர்கள் மறுபடியும் நடந்தார்கள். கொஞ்ச தூரம் போனதும் அவன் கேட்டான்.

“ரொம்ப பசிக்கிதா... குருவு...”

அவள் பேசவில்லை. தலையசைத்தாள். அவன் அண்டிறாயர் பைக்குள் கையைவிட்டு ஒரு பன்ரொட்டியை எடுத்து அவளிடம் நீட்டிக் கொண்டே,

“சப்பாணி கடையில... எடுத்தேன்...”

அவள் அவனை ஒருவித பரிதாபத்துடன் பார்த்துக் கொண்டே ரொட்டியை ரெண்டாகப் பிய்த்து அவனிடம் ஒரு துண்டை நீட்டினாள். அவன் உடனே வாங்கி திங்க ஆரம்பித்தான் அவள் கேட்டாள்.

“இன்னும் எவ்வளவு தூரம் போகணும் காளி...”

“தெரியல...” என்றான் அவளைப் பார்க்காமல். தூரத்தில் வெறித்தபடி முன்னால் கழுதையும் ரெண்டு பன்னிக்குட்டிகளும் தரையோடு முகத்தை உரசிக் கொண்டே போய்க் கொண்டிருந்தன.

32. அசைவு

அவர் மீண்டும் அறைக்குத் திரும்புவாரென அவன் எதிர்பார்க்கவில்லை. கதவு தட்டப்பட்டபோது சிறிது நேரம் தாமதித்தான். விழிப்பும் உறக்கமுமற்ற ஒருவித மயக்க நிலை. கதவின் ஓசையை மூளை உணர்ந்த பிறகும் எழ மனசில்லை. கதவின் ஓசை சற்று தீவிரமானதும், எழுந்து சென்று தாழ்ப்பாளைத் திறந்தான். அவனிடம் சொல்லிவிட்டுப் பெட்டியை எடுத்துக்கொண்டு போனவர் சிறிது நேரத்துக்குள்ளேயே திரும்பியிருந்தார். என்ன காரணம் என்று தெரியவில்லை. ஒருவேளை ஏதாவது மறந்துவிட்டுப் போயிருக்கலாம். அதை எடுத்துக்கொண்டு போக வந்திருக்கலாம் என்று நினைத்தான் அவன். ஆனால், அவர் எதையும் தவறவிட்டு தேடுபவராக இல்லை. உள்ளே வந்ததும் மீண்டும் அதே அசட்டுச் சிரிப்புடன் பெட்டியைக் கீழே வைத்தார். ஏதாவது சொல்லுவார் என்று எதிர்பார்த்தான். பெட்டியைத் திறந்து கைலியைக் கட்டிக்கொண்டு பாயை விரித்துப்போட்டு கீழே தரையில் உட்கார்ந்தார்.

அவன் மறுபடியும் போய் பெஞ்சில் படுத்துக் கண்களை மூடினான். தனியே இருக்கும்போது இருந்த சுதந்திர உணர்வு இல்லை. எரிச்சல் பொறியாய் மூளைக்குள் கனன்றது. சடாரெனத் திரும்பி அவரைப் பார்த்தான். அவர் சாவகாசமாக உட்கார்ந்து கொண்டு பெட்டியிலிருந்து ஒரு ஆபீஸ் பைலை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தார். அதை அவ்வளவு அக்கறையாகச் செய்தார் என்று சொல்ல முடியாது. அடிக்கடி, அவர் படுத்திருந்த பெஞ்சின் எதிர்ப்புறம் இருந்த ஜன்னலைப் பார்த்தார். அப்படியே அவனைப் பார்க்க சிரத்தை எடுக்காத பாவனையில் அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தார். அவன் இப்போது அவரை நேராகவே பார்த்துக் கொண்டிருந்தான். அவரைப் புரிந்து கொள்ளும் முயற்சியாக கண்களைச் சுருக்கிக்கொண்டு யோசித்தான்.

சற்று முன்னர் தனிமையின் கனத்த பாறையின் கீழ் நசுங்கிக் கொண்டிருந்தான். மூச்சுத் திணறியது. இந்த மாதிரி சமயங்களில் தன்னை நிலைப்படுத்திக் கொள்ள வேறு ஏதாவது செய்ய முனைவது வழக்கம். செய்யது பீடியைப் பற்ற வைத்தான். புகையை இழுத்து விட்டுக் கொண்டே திரும்பியபோது, கொடியில் அவன் கழட்டிப் போட்டிருந்த சட்டை அவனுடைய கேலிச் சித்திரத்தைப் போல ஆடியது.

அது ஆடுவதை உடனே நிறுத்த வேண்டும் என்று நினைத்தான். அந்தத் தவிப்பை அவனால் தாங்க முடியவில்லை. ஆனால், அசையாமல் படுத்திருந்தான். கண்களை நகர்த்தி ஜன்னலைப் பார்த்தான். வெள்ளை

வெளேரென்ற வெளிச்சத்துடன் வானம். மேகங்களில்லை. எந்தச் சலனமுமில்லாத அந்த வானம் அவனுடைய மனசின் சூன்யத்தை ஆழ மாக்கியது. அவனுடைய கசப்பான முந்தைய நாட்களை மறந்துவிட நினைத்தான். வேலையின்றி அவன் படுகிற அவமானங்களை மறந்துவிட நினைத்தான். வீட்டில் வெளியில், அவனைப் புழுவெனப் பார்க்கும் பார்வைகளை ஞாபகத்தின் எல்லைகளிலிருந்து விரட்டிவிட நினைத்தான். போட்ட அப்ளிகேஷன்களும், கட்டிய பணமும், எழுதிய பரீட்சைகளும் அலைந்த அலைச்சல்களையும் அத்தனையையும் மறக்க நினைத்தான். வேலைக்காகப் பணம் கொடுத்து ஏமாந்து போனதை நடக்கவேயில்லை என்று நினைக்க முயற்சி செய்தான்.

கலகலப்பாய், உற்சாகம் கொப்பளிக்க வாழ்க்கையை எதிர்கொள்ள வந்தவன் விரக்தியில், தனிமையுற்று மனிதர்களை விட்டு விலகி ஓடும்படியானதை மறக்க நினைத்தான்.

ஒரு புதிய நாளை ஆரம்பிக்க, தினமும் ஆசைப்பட்டவனுக்கு ஒவ்வொரு புதிய நாளும் மீண்டும் பழைய நாளாகவே ஆனது. இடங்களை முன்னிட்டு மனசு மாறுமா என்று தெரியவில்லை. அப்படித்தான் திருநெல்வேலி ராமகிருஷ்ணனின் அறைக்கு வந்தான். வந்த இடத்தில் தான் அவரைச் சந்திக்க நேர்ந்தது. அறைக்குள் நுழைந்ததும் உருக் குலைந்த அவனைப் பார்த்து அவர் அடைந்த பதற்றமும், பரபரப்பும் அவனுக்கு வெகுநாளைக்குப் பின் மகிழ்ச்சியளித்தது. அவர் கிளம்பி பெட்டியுடன் அறையைவிட்டுப் போனதும் தனக்குத்தானே திருப்தியுடன் புன்னகைத்தான். அந்தப் புன்னகையுடனே கண்ணாடியில் பார்த்தபோது முகம் வக்கிரமாய் இருந்தது. கோணலாய் வாய் இழுத்துக் கொண்டிருந்த மாதிரி. பயந்து போய் சட்டென கண்ணாடியிலிருந்து முகம் திருப்பி பெஞ்சில் படுத்தான்.

அவர் அறைக்குத் திரும்பி வந்ததும், முன்போல பதற்றமோ பரபரப்போ இல்லாமல் சுவாதீனமாய் இருந்ததும் அவனுக்கு ஆச்சரியமளித்தது. ஏன் கோபம் கூட வந்தது. இடையில் என்ன நிகழ்ந்திருக்கும் என்று யோசித்தான். ராமகிருஷ்ணனுக்கு அவனைப் போல நண்பர்களும், அவரைப் போல நண்பர்களும் இருப்பதைப் பற்றி நிறைய யோசனைகள் வந்தன. அந்த யோசனைகளின் வழியே அவரை, ராமகிருஷ்ணனைப் புரிந்து கொள்ள முயற்சி செய்தான்.

இப்போது ஜன்னல் வழியே ஒரு குஞ்சுமேகம் சென்றது. பின்னாலேயே ஒரு பறவை பறந்து கடந்தது. மறுபடியும் மேகங்களின் கூட்டமும், பறவைகளின் கூட்டமும் ஜன்னலில் போய்க் கொண்டிருந்தன. அவனும்

அசைய நினைத்தான். இயக்கமின்றிக் கிடப்பது இறந்து கிடப்பதைப் போலவே இருந்தது. பார்வையை அறைக்குள் சுழல விட்டான். அலமாரியிலிருந்து எறும்புகளின் படைவரிசையொன்று ஜேஜேயென்று ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது. அதையே தொடர்ந்து பார்க்கப் பார்க்க அறையே நகர்ந்து போவதைப் போலிருந்தது. அவன் மட்டும் அசையாத பெரும் பாறையாய் இருப்பதை நினைத்து எரிச்சல் பட்டுத் திரும்பினான்.

அப்போது அவர் அவருடைய சட்டைப் பையிலிருந்து பில்டர் வில்ஸ் சிகரெட் பாக்கெட்டை எடுத்தார். பாக்கெட்டைத் திறந்து ஒரு சிகரெட்டை எடுத்து உதடுகளில் பொருத்திவிட்டு அவனைப் பார்த்து நிமிர்ந்தார். அவன் இன்னமும் திசைமாறாமல், அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். அவர் சிகரெட் பாக்கெட்டை அவனுக்கு நேரே அவன் சற்றும் எதிர்பாராத தருணத்தில் நீட்டினார்.

“சிகரெட் பிடிக்கிறீங்களா...”

அவன் திணறிப் போனான். படுத்திருந்தவன் எழுந்து உட்கார்ந்து வேண்டாமென்பதாய், தலையாட்டிக் கொண்டே கையை நீட்டி ஒரு சிகரெட்டை எடுத்தான். இறுகிய பாறை போலிருந்த அவனுடைய முகத்தில் சில அசைவுகள் தெரிந்தன. அவர் தீப்பெட்டியை உரசிப் பற்ற வைத்துவிட்டு தரையிலிருந்து எழுந்து அவனிடம் வந்து அவனுடைய சிகரெட்டையும் பற்ற வைத்தார். அவருடைய இந்தச் செய்கையினால் நடுங்கிப் போனான். புகையை இழுத்து விட்டுக்கொண்டே அவரைப் பார்த்து சிரிக்கிற மாதிரியான முகபாவத்தை ஏற்படுத்தினான். அவர் மறுபடியும் உட்கார்ந்து அவனைப் பார்த்துப் பிரகாசமாய் சிரித்தார்.

அவன் ஜன்னலைப் பார்த்தான். ஜன்னலில் அடர்த்தியாய் மேகங்கள். மழை வரும்போல கூடு விரையும் தொடர்ச்சியான பறவைகள். இப்போது அவன் திரும்பி அவரைப் பார்த்து உண்மையாகவே சிரித்தான். அவர் சிகரெட் சாம்பலை ஒரு ஓரமாய் தரையில் தட்டிக்கொண்டே அவனிடம் பேச ஆரம்பித்தார். அவன் சிரித்துக்கொண்டே அவரைக் கவனித்தான்.

33.மண்ணாங்கட்டி

கோவிந்தன் அந்த நேரத்தில் மண்ணாங்கட்டியை எதிர் பார்க்கவேயில்லை. பார்த்து வருசங்கள் பல ஆகிவிட்டன. கிட்டத்தட்ட அவனை மறந்துகூட போய்விட்டான். திடீரென பூமியிலிருந்து புரண்டெழுந்த மாதிரி எங்கிருந்து முளைத்தான். பத்து மணி டூட்டிக்கு, அரை மணி நேரம் தாமதமாகி விட்டதென்று வேக வேகமாக கேபின் படியேறினால் உள்ளே மண்ணாங்கட்டி ஜன்னலுக்கு முதுகைக் காண்பித்தவாறு திரும்பி கோவிந்தனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே,

“அய்யா வணக்கமுங்க...” கோவிந்தன் எதிர்பாராத திகைப்பை மறைக்க முயற்சித்துக் கொண்டே,

“வாங்க... வாங்க... மண்ணாங்கட்டி...”

என்று ஒரு வலிந்த சிரிப்பை அவனுக்குக் கொடுத்துவிட்டு அவனுக்கு முன்னால் வேலையிலிருந்த ஸ்டேஷன் மாஸ்டருக்கு முகமன் கூறி அவரை அனுப்பும் முயற்சிகளில் இறங்கினான். அவர் போகும்போது,

“ரோடு ரெண்டு ஆக்குபைடு பை குட்ஸ்டிரெயின்... லீவர்மேன் சாப்பிடப் போயிருக்கான்... அவன் தான் கண்டினியூ பண்றான்... அப்புறம் மண்ணாங்கட்டி காலை ஒம்பது மணியிலிருந்து இங்கதான் ஒங்களப் பாக்கணும்னு நிலையா நிக்கான்... கவனிச்சி அனுப்புங்க...” என்று கேலியான குரலில் சொல்லிவிட்டு கீழிறங்கினார். கோவிந்தன் வேலையை ஒப்புக் கொள்வதற்கான சடங்குகளையெல்லாம் முடித்துவிட்டு திரும்பினான்.

“என்ன... மண்ணாங்கட்டி... எப்படியிருக்கீங்க... வாங்க இப்படி உட்காருங்க...” என்று எதிரே இருந்த ஸ்டூலைக் காட்டினான்.

“இருக்கட்டுங்க... அய்யா எப்படி சவுகரியமா இருக்கீங்களா... வீட்ல அம்மா குழந்தைகளெல்லாம் சவுக்கியமா இருக்காங்களா...”

அவன் பேசுகிற நேரத்தில்தான் கோவிந்தன் அவனை நன்றாக கவனித் தான். மண்ணாங்கட்டி பழைய ஆள் இல்லை. அந்த ஆஜானுபாகுவான உடம்பு உருகி நசுங்கிப் போயிருந்தான்.

“எல்லாம் நல்ல சவுரியம்... ஆமா நீங்க ஏன் இப்படி மாறியிருக்கீங்க...”

இதைக் கேட்டதும் மண்ணாங்கட்டியின் முகபாவமே மாறிவிட்டது. கோவிந்தனின் அன்யோன்யமான குரலும், பழைய நெருக்கமான காலங் களும் மனசில் நிழலாட மண்ணாங்கட்டியின் முகம் ஒரு அழுகைக்கான

ஆயத்தம் போல கோணியது. இதுநாள் வரை யார் இவ்வளவு ஆதரவாய் கேட்டிருக்கிறார்கள். ஆனால் பொங்கிய உணர்ச்சிகளை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான் மண்ணாங்கட்டி. அதுவுந்தவிர கறுத்துச் சுருங்கிய அந்த முகத்தில் இனி அழுவதற்கு என்ன இருக்கிறது. மண்ணாங்கட்டி பிசிறலான குரலில்,

“இருக்கேன்... ஏதோ சாக மாட்டாம...”

கோவிந்தன் எதுவும் சொல்லவில்லை. மண்ணாங்கட்டியின் முகத்திலிருந்த சோகம் அவன் மேலும் பேசுவதைத் தடுத்தது. என்ன பேசுவதென்றே தெரியவில்லை. மண்ணாங்கட்டியும் பழைய நினைவு களில் ஆழ்ந்தவன்போல தலையைக் குனிந்தபடி இருந்தான்.

கோவிந்தனுக்குச் சங்கடமாகிவிட்டது. நிலைமையைச் சுமுகமாக்க வேண்டும். என்ன செய்தாவது என்ன சொல்லியாவது.

“சரி நீங்க சாப்பிட்டாச்சா...”

“ஆச்சுங்க...”

“பொய் சொல்றீங்க...”

“அய்யாகிட்ட எதுக்கு பொய் சொல்றேன்...”

“சரி... காலைல இருந்து ஒரே தலைவலியா இருக்கு... ஒரு டீ வாங்கிட்டு வரீங்களா...”

“சரிங்க...”

கோவிந்தன் சட்டைப் பையிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்தான்.

“நீங்க ஒரு டீ சாப்டுட்டு, எனக்கொண்ணு வாங்கிட்டு வாங்க...”

மண்ணாங்கட்டி தலையசைத்துவிட்டுப் போனான். அவன் நடந்து போவதைப் பார்க்கும்போது பாவமாக இருந்தது. இரண்டு காலும் புத்துக்கால் ஏகப்பட்ட ஒட்டுக்களோடு உள்ள ரப்பர் செருப்பைப் போட்டுக்கொண்டு மெல்ல ஒவ்வொரு காலாக பொத்தி பொத்தி எடுத்து வைத்துப் போய்க் கொண்டிருந்தான் மண்ணாங்கட்டி. கோவிந்தனுக்கு இப்போது டீ ரொம்ப அவசியமில்லைதான். ஆனால் சூழ்நிலையை மாற்ற ஏதாவது செய்தாக வேண்டுமே... மண்ணாங்கட்டி டீ வாங்கிட்டு வந்த பிறகு மறுபடி புதிதாய் பேசலாம். அதோடு மண்ணாங்கட்டியை அந்த நிமிஷம் அசங்க வைக்க ஏதாவது செய்தாக வேண்டும். இல்லையென்றால் அவன் நின்ற விதமும், முகபாவமும், அதிலிருந்த துயரமும் கோவிந்தனை கலக்கிவிடும். மனமிழந்து இருக்கும்போது

இப்படி ஏதாவது கலக்கம் ஏற்பட்டால் உடனே நாடி நரம்பெல்லாம் ஜில்லிட்டுப் போகிற மாதிரி உணர்வு ஏற்படும். இந்த அவஸ்தையைத் தவிர்ப்பதற்காகவே முக்கியமாக மண்ணாங்கட்டியை கண் முன்னாலிருந்து அகற்றினான்.

எப்படியிருந்தவன் இந்த மண்ணாங்கட்டி. கோவிந்தன் டிரான்ஸ்பராகி கடலூர் பக்கமிருந்த ஸ்டேஷனுக்கு விழுப்புரம் கடலூர் பாசஞ்சரில் போய் இறங்கியபோது, ஸ்டேஷனுக்கு வெளியே பாசஞ்சருக்கு மணியடித்துவிட்டு சுடலைமாடனைப்போல நின்றிருந்தான் மண்ணாங்கட்டி. கறுத்த உருண்டு திரண்ட திரேகம். பெரிய கொடுவா மீசை, கத்தை கத்தையாக தலைமயிர் அகன்ற கண்கள். அவனைக் கடந்தபோது கண்களில் கேள்விக்குறியோடு கோவிந்தனைப் பார்த்தபோது கோவிந்தன் பயந்து போனான். இவனையெல்லாம் வைத்துக்கொண்டு எப்படி வேலை வாங்கவோ. ஏற்கனவே டிரெயினிங்கிலேயே ரயிலை ஓட்டுகிற வேலையைவிட இந்த மாதிரி ஆட்களைச் சமாளிக்கிறதுதான் பெரிய வேலை என்று அனுபவசாலிகளான ஸ்டேஷன் மாஸ்டர் வாத்தியார்கள் பயமுறுத்தியிருந்தார்கள். கோவிந்தன் ஸ்டேஷனுக்குள் நுழைந்து அப்போது டூட்டியிலிருந்த ஸ்டேஷன் மாஸ்டரிடம் அறிமுகம் செய்துகொண்டான். அவர் உடனே,

“மண்ணாங்கட்டி... மண்ணாங்கட்டி...”

“என்ன சார்...”

“போய் ரெண்டு டீ வாங்கியா... நம்ப ஸ்டேஷனுக்கு புதுசா ஏயெஸ்ஸெம் வந்திருக்காரு...”

கோவிந்தன் சிநேகமாய் மண்ணாங்கட்டியைப் பார்த்துச் சிரித்தான். ஆனால், மண்ணாங்கட்டி சிரிக்காமல் கையையுயர்த்தி சலாம் வைத்துவிட்டுப் போய்விட்டான். அவன் போனதும், “நல்ல வேலைக்காரன்... மண்ணாங்கட்டி...” என்றார் ஸ்டேஷன் மாஸ்டர்

“கொஞ்சம் முரடோ...”

“அதெல்லாம் ஒண்ணுமில்ல...”

இதுதான் முதல் சந்திப்பு. இதற்கப்புறம் மண்ணாங்கட்டியைப் பற்றிய கதைகளைக் கேட்ட பிறகு ஓரளவு தெரிந்து கொண்டான். இப்படி ஸ்டேஷனில் ஒவ்வொருவரைப் பற்றியும் கதைகள் பல வழங்கி வருவது சகஜம்.

ஒரு மாதத்துக்கு முன்னால்தான் இங்கே வேலை பார்த்த ஸ்டேஷன் மாஸ்டர் ஒருத்தருடன் மண்ணாங்கட்டியின் மனைவி போய்விட்டாள். மனைவி என்று சொல்வது அவ்வளவு சரியில்லை. அவன் சேர்த்து வைத்திருந்தவள். கொஞ்சநாள் முரண்டிக் கொண்டு திரிவான் மண்ணாங்கட்டி. பிறகு எங்கிருந்தாவது இன்னொரு பெண்ணைக் கூட்டிக் கொண்டுவந்து வைத்துக்கொள்வான். ஆனால், எந்தப் பெண்ணும் அவனிடம் கூடியபட்சம் ஒரு வருஷத்துக்கு மேல் தங்கியதில்லை. மற்ற பாயிண்ட்ஸ் மேன்கள் அது அவன் கிரகராசி என்றார்கள். அடிக்கடி சாராயம் குடிக்கிற பழக்கம் மண்ணாங்கட்டிக்கு உண்டு. சில சமயங்களில் மண்ணாங்கட்டியும் அவன் மனைவி என்று சொல்லப்படுபவளும் சேர்ந்து சாராயம் குடித்துவிட்டு ஒருவரையொருவர் கொஞ்சிக் கொண்டும் வைது கொண்டும் ஸ்டேஷனுக்கு முன்னால் வந்து கூத்தடிப்பார்கள்.

இதையெல்லாம் கோவிந்தன் கேட்டபொழுது ரயில்வே கலாசாரமே தனி. உலகத்தோடு சம்பந்தமில்லாதது என்று பயமும் ஆச்சரியமும் திகைப்பும் சேர்ந்து முகத்தை வெறிச்சென்றாக்கியது. எப்போது மண்ணாங்கட்டியைப் பார்த்தாலும் விநோதமான பிராணியைப் போல் பார்த்தான். பட்டும் படாமல் பழகினான். இந்தப் பழக்கம் நெருக்கமானது ஒரு நாள்.

ரயில்வே ஸ்டேஷனில் சம்பள நாள் என்றால் மாசி, பங்குனி கொடை மாதிரி. பங்குனி உத்திரக் கொடை நடக்கிற கோயில் மாதிரி கூட்டம். ஒரு பக்கம் மொபட், மோட்டார் பைக், டாக்ஸி என்று அவரவர் அந்தஸ்தையும் பலத்தையும் காண்பிக்கிற கந்து வட்டி வசூலிக்கும் கடன்காரர்கள். திடுமலாக நாலு பேருடன் சாராய வியாபாரி. யாராவது எங்காவது வைத்திருக்கிற வைப்பாட்டி, இந்த எல்லாப் பிடுங்கல்களுக்கும் பின்னால் ஏதாச்சும் கிடைக்குமா என்ற ஏக்கத்துடன், மெலிந்த சோகையான குழந்தைகளுடன் உண்மையான பெண்டாட்டி. இன்னொரு பக்கம் ஆடறுப்பு வேகமாக நடந்து கொண்டிருக்கும். மொத்தமாகப் பேசி ஆட்டை விலைக்கு வாங்கி அறுத்து பங்கு போட்டுக் கொள்வார்கள். தட்டுச் சீட்டு, ஏலச் சீட்டு என்று ஒரு கூட்டம் அலைமோதும். இத்தனை பேரும் ஒன்று மாற்றி ஒன்றாக ஸ்டேஷனில் குழுமி ஒரு சந்தையின் தோற்றத்தை உருவாக்கி விடுவார்கள். சம்பளத்தை எல்லோருக்கும் பிரித்து எண்ணிக் கொடுத்து கணக்கை டேலி பண்ணுவதற்குள் ஸ்டேஷன் மாஸ்டருக்கு போதும் போதும் என்றாகிவிடும்.

எல்லாம் முடிந்து ஸ்டேஷனைச் சுற்றியும் குப்பையும் கூளமுமாய் காதில்

மிச்சமிருக்கும் இரைச்சல்களுமாய் நாற்காலியில் சாய்ந்த சமயம் மண்ணாங்கட்டி வந்தான் கோவிந்தனிடம்.

“அய்யா...”

“என்ன மண்ணாங்கட்டி...”

“ஊருக்கு எப்ப போறீங்க...”

“லீவு கேட்டிருக்கேன்... கெடச்சதும் போகணும்...”

“ஊர்ல பெரியய்யா, அம்மா எல்லாம் நல்லாயிருக்காகளா...”

“நல்ல சவுக்கியம்...”

“பெரியய்யாவுக்கென்ன விவசாயமா...”

“இல்ல... மில்லில் வேலை பாக்றாங்க...” அவனுடைய இந்த திடீர் விசாரிப்பு முதலில் கோவிந்தனுக்கு விளங்கவில்லை. இதுவரை யாரும் அவனுடைய குடும்பத்தைப் பற்றி விசாரித்ததில்லையாதலால் அவன் இஷ்டத்துடன் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

“காடுகரை இருக்கா அய்யாவுக்கு...”

“இல்ல...”

“அப்ப வீடு வாசல் நெறய்ய இருக்கும்...”

“வீடு வாசலா... வாடகை வீட்லதான் குடியிருக்கோம்...”

மண்ணாங்கட்டியால் நம்ப முடியவில்லை. வீடு வாசலோ காடு கரையோ இல்லாத ஒரு ஸ்டேஷன் மாஸ்டரா! அவன் முகம் சந்தேகமும், அதிசயமுமாய் விரிந்து, சுருங்கியது. கண்களில் ஒருவித சிரிப்புடன்,

“அய்யா தமாஷ் பண்றீங்க... இல்ல...”

“இதில என்ன பொய்யி... நெசந்தான் மண்ணாங்கட்டி...”

கொஞ்ச நேரம் பேசாமலிருந்தான். பிறகு திடீரென்று,

“ஊருக்கு பணம் அனுப்புவீங்களா...” இந்தக் கேள்வியில்தான் விசாரணையின் வெளிச்சம் கோவிந்தனுக்குப் பளீரென்று விளங்கியது.

“பின்ன... அனுப்பாம முடியுமா...”

மறுபடியும் பேசாமலிருந்தான். குரலில் பொய்க்கோபத்துடன்,

“பெரியய்யா அட்ரஸ் கொடுங்கய்யா... நான் லட்டர் போடுதேன்... இங்கே அய்யா ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டு மெலிஞ்சுக்கிட்டே

போறாக... கல்யாணம் முடிச்சு வைக்கிறாப்ல யோசனை இல்லையா... இல்ல இங்க நாங்களே ஒரு நல்ல பொண்ணா பாத்து கட்டி வச்சிறவான்னு கேட்டு ஒரு லெட்டர் போடுதேன்... அப்புறம் என்ன... இங்க வரும்போது எப்படி இருந்தீங்க... இப்ப பாதியா ஆயிட்டீகளே...”

“கலியாணத்துக்கு இப்ப என்ன அவசரம்... என்ன வேணும் மண்ணாங்கட்டிக்கு...”

“ஒண்ணுமில்ல. சம்பளமெல்லாம் வட்டிக்கும் கடனுக்கும் சரியாப் போச்சி... ராத்திரி சாப்பிடக்கூட கைல காசில்ல... ஐயா மனசு வச்சு உதவி பண்ணினா...”

மண்ணாங்கட்டி கேட்ட விதமும், குரலும் அவனை இளக்கியது. ஏதோ சாப்பிட பணம் கேட்கிறான் என்று நினைத்துக்கொண்டு,

“எவ்வளவு வேணும்...”

“பிளப் அட்வான்ஸ் போட்டுருக்கேன்... இருபத்தஞ்சாம் தேதி வந்திரும்னு காஷியர் சொல்றாரு. அதில கண்டிப்பா கொடுத்திருதேன்... ஒரு அய்ந்நூறு ரூபா கொடுங்க... கண்டிப்பா பத்தாம் தேதி கொடுத்திருதேன்...”

கோவிந்தன் முகம் ரூபாயைக் கேட்டதும் சுருங்கிவிட்டது.

“மண்ணாங்கட்டி... ஐநூறெல்லாம் முடியாதுப்பா...”

“அய்யா... வேற யார்ட்டயும் நான் கேட்க மாட்டேன். நீங்க என் ஒடன்பிறப்பு மாதிரி... ஒங்க கால்ல விழுந்து கும்புடுதேன்... இந்தத் தடவையோட கடனையெல்லாம் ஒழிச்சிட்டு நிம்மதியா இருக்கப்போறேன்... தயவு பண்ணுங்கய்யா...”

அழுதுவிடுவான் போலிருந்தது. அவ்வளவு பெரிய உருவம் கூனிக் குறுகி அவன் காலில் விழுவதற்கு யத்தனித்துக் கொண்டிருப்பதையும் பார்த்து வேதனையடைந்து,

“நீ கேக்கிற அமவுண்ட் கண்டிப்பா என்னால முடியாது... வேணும்னா ஒரு நூறு ரூபா தரேன்... ஆனா கண்டிப்பா இருபத்த...சாம் தேதி தந்துரணும்...”

“எம்மேல நம்பிக்கையில்லையாய்யா... கண்டிப்பா கொடுத்திருவேன்... ஒரு எரநூறு ரூபாயாவது கொடுங்க... நீங்கள் இருக்கக் கண்டு கேக்கறேன்... வேற யார்ட்டயும்னா கேக்க மாட்டேன்...”

கோவிந்தனுக்கு இதைக் கேட்க கேட்க பெருமிதமாயிருந்தது.

வேலையில்லாமல் அவன் திரிந்த காலங்களில், சினிமா போவதற்கு, டீ சிகரெட்டுக்கு அவன் பட்ட நொம்பலம், ஒவ்வொருத்தரையாக எதிர்பார்த்தது, சிலரிடம் எல்லோரும் நண்பர்கள்தான் வாய்விட்டு கேட்டு அவமானப்பட்டது. எல்லாம் கண்ணில் தெரிந்தன. கோவிந்தனின் கண்கள் பளிச்சிட்டன. ஆனாலும் அதிக உணர்ச்சி வசப்படவில்லை. மண்ணாங்கட்டிக்கு நூறு ரூபாய்தான் கொடுத்தான்.

அவனுக்கும் மண்ணாங்கட்டிக்கும் நடந்த சம்பாஷணையும், கோவிந்தனின் கைமாத்தும் நடக்கிற நேரம் முழுவதும் வேறு யாரும் ஸ்டேஷனிலோ, சுற்றுப்புறத்திலோ இல்லாமல் போனது அன்றைய விசேஷம்.

ஆனால், மறுநாள் கோவிந்தன் டூட்டிக்கு வந்ததும் ஒரு பாயிண்ட்ஸ்மேன் கேட்டான்.

“சார்ட்ட பணம் நெறய்ய இருந்தா எங்களுக்கும் கொஞ்சம் கொடுக்கிறது...”

“என்ன விஷயம் புன்னைவனம்...”

“மண்ணாங்கட்டிக்கு நூறு ரூபா கொடுத்திருக்கீக போலருக்கே...”

“ஆமா... சம்பளம் பூரா கடங்காரங்க பிடுங்கிட்டாங்க. சாப்பிடக்கூட காசில்லன்னு அழுதான்...”

“நேத்து ஒங்ககிட்ட வாங்கிட்டுப் போயி என்ன செஞ்சிருக்கான் தெரியுமா... பத்துப் பேரை கூட்டிட்டுப் போயி எல்லாருக்கும் சாராயம் வாங்கிக் கொடுத்து குடிச்சிருக்கான். நீங்க அவன்ட்ட கொடுக்க முந்தி ஒரு வார்த்த எங்ககிட்ட யார்ட்டயாவது கேட்டிருக்கலாம்ல. அவன் கடன் வாங்காத ஆளே கிடையாது. அவ்வளவுதான் பட்டை நாமம்தான்...”

இதைக் கேட்கக் கேட்க கோவிந்தனுக்கு ஏமாற்றமும் எரிச்சலும் கோபமும் பொங்கி வந்தன.

“யாராவது முதல்லேயே எங்கிட்ட ஒரு வார்த்த சொன்னீங்களாய்யா...”

“எங்களுக்கென்ன தெரியும் நீங்க இப்படிக் கொடுப்பீங்கன்னு...”

“நாந்தான் ரெயிலுக்குப் புதிசு... என்ன எழவு தெரியிது. இருந்தாலும் ரொம்ப மோசம்...”

“எதுக்கும் நடராஜன் சார் கிட்ட சொல்லி வைங்க. அவர்கிட்டதான் அவன் கொஞ்சம் பயப்படுவான்...”

அன்று இரவுப் பணியில் எக்ஸ்பிரஸ் வண்டிகளும் குட்ஸ் வண்டிகளும் போய் வருகிற இடைவேளை நேரங்களில் மற்றவர்கள் தூங்கி வழிய, அவன் வெளியே கிடந்த சிமெண்ட் பெஞ்சின் குளிர்ச்சியை அநுபவித்துக் கொண்டு எதிரே தெரிந்த வானளாவிய ஆலமரத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். மனசுக்குள் ஏமாற்றத்தின் துக்கம் தாங்க முடியவில்லை. எவ்வளவு சுலபமாய் ஏமாந்துவிட்டான். நூறு ரூபாய் என்பது அவ்வளவு சுலபமாய் தள்ளிவிடக் கூடியதும் அல்ல.

ஆனால், அவன் மட்டுமல்ல எல்லோருமே ஆச்சரியப்படும்படி இருபத்தைந்தாம் தேதி அவன் குவாட்டர்ஸில் தூங்கிக் கொண்டிருக்கும்போது மண்ணாங்கட்டி வந்து எழுப்பி பணத்தைக் கொடுத்துவிட்டுப் போனான். அவனுக்கு சந்தோஷமாயிருந்தது. மற்ற எல்லோரையும் ஏமாற்றுகிற மண்ணாங்கட்டி அவனிடம் சொன்னபடி திருப்பிக் கொடுக்க பிரத்யேகக் காரணம் ஏதும் இருக்குமோ என்று யோசித்தான். ஒன்றும் புலப்படவில்லை. பல விஷயங்கள் வாழ்க்கையில் வெளிப்படையாக எவ்வளவு தேடினாலும் கிடைத்து விடுவதில்லையே. அதற்குப் பிறகு மண்ணாங்கட்டியும் அவனும் நெருங்கிய நண்பர்களாகி விட்டார்கள். கோவிந்தனுக்கு வேண்டிய உதவிகள் அனைத்தும் செய்துகொண்டு அவன் குவார்ட்டர்ஸிலேயே கிடப்பான் மண்ணாங்கட்டி.

கோவிந்தனுக்கு வேறு ஊருக்கு டிரான்ஸ்பர் வந்தபோது எவ்வளவு வருத்தப்பட்டான் மண்ணாங்கட்டி. கொஞ்ச நாளுக்கப்புறம் கோவிந்தன் மண்ணாங்கட்டியை மறந்தே போனான். அப்புறம் பல மாற்றங்கள். பல ஊர்கள், இடையிடையே மண்ணாங்கட்டி தண்ணி போட்டுவிட்டு ஸ்டேஷனில் கலாட்டா பண்ணியது. இன்னொரு முறை கைகாட்டி இறக்குவதற்கு வேண்டிய சாவியை போதையில் எங்கோ தவறவிட இரண்டு எக்ஸ்பிரஸ் வண்டிகளுக்கு அசாதாரணமான காலதாமதம் ஏற்பட்டு அவனை சஸ்பெண்ட் செய்தது. பின்னால் கட்டாய ஓய்வு கொடுத்து அனுப்பியது வரையிலான செய்திகளை அவ்வப்போது கேட்டுத் தெரிந்திருந்தான்.

வெகு நாள் கழித்து இப்போதுதான் பார்க்கிறான். தலை முடியெல்லாம் உதிர்ந்து வற்றிச் சுருங்கி எலும்பும் தோலுமாய் வந்திருந்த மண்ணாங்கட்டியைப் பார்க்கும்போது இன்னும் வாழ்வில் அவன் நிம்மதி பெறவில்லை என்று தெரிந்தது.

இடையில் வந்த டிரெயின்களுக்கு சிக்னல் போட்டு அனுப்பிவிட்டு மறுபடியும் உட்கார்ந்து பழைய ஞாபகச் சரடை எடுக்கும்போது

மண்ணாங்கட்டி படியேறி வரும் சத்தம் கேட்டது. மேலே வந்ததும் கோவிந்தனைப் பார்த்து சிரித்துக்கொண்டே சில நிமிஷங்கள் நின்றான். மூச்சு வாங்கியது. நடுங்கிய விரல்களால் டீயைத் தம்ளரில் ஊற்றிக் கொடுத்தான். அதை வாங்கி உறிஞ்சிக்கொண்டே,

“என்ன மண்ணாங்கட்டி... இப்படி இருக்கீங்க... என்னாச்சி...”

“அய்யா. சீக்கிரம் செத்துப் போயிரலாம்னு இருக்கேன். இன்னும் ஒரு மாசந்தான்...”

முகத்தில் எந்த உணர்ச்சியுமில்லாது மண்ணாங்கட்டி சொன்னதைக் கேட்டபோது அவனுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.

“எனக்கு புரியல, என்ன சொல்றீங்க...”

மண்ணாங்கட்டி பேசவில்லை.

“சரி ஒங்களுக்கு பிரியமில்லன்னா வேண்டாம்.”

“அய்யா என்னத்த சொல்லச் சொல்றீக... செட்டில்மெண்ட் பணம் வந்ததும் ஒரு பொம்பளய சேத்துக்கிட்டேன். அவபேரில் வீடு வாங்கினேன். கையில காசு... சாராயமும் சாப்பாடும் தூக்கமும்தான். திடீர்னு பழைய ஆள் ஒருத்தி வந்தா, அவளுக்கு மிச்சமிருந்த காசைக் கொடுத்தேன். இப்ப ரெண்டு பேரும் சாப்பாடு போட மாட்டேங் கிறாளுவ. பிஞ்ஜின் பணத்தையும் ஆளவச்சி மிரட்டி உருட்டி பாதியைப் பிடுங்கிக்கிறதா... ஏதோ அரைகுறையா தின்னுட்டு... உசிரப் பிடிச்சிட்டிருக்கேன். சீக்கிரமே. இன்னிக்கில்லேன்னா... நாளக்கி செத்துருவேன்...”

“ஏய்யா இப்படி அபசகுனமா பேசற...”

“இல்லீங்கய்யா... உண்மைதான். சில சமயம் எதுக்கு பொறந்தேன்னு யோசிப்பேன். பூமிக்கு பாரமா எதுக்கு இருக்கணும்... நாயி... பன்னி... மாதிரி வாழ்ந்தாச்சு... ம்ஹூம்... சாகப் போற காலத்தில் யோசிச்சி என்ன செய்ய... பொறந்ததிலிருந்து எவ்வளவோ கஷ்டங்களை அநுபவிச்சிட்டேன். எப்படியெல்லாமோ வாழ்ந்து பாத்துட்டேன். ஆனா இன்னமும் வாழ்க்கை எனக்கு லவிக்கல. கடைசிவரை பைத்தியக்கார நாய் மாதிரி துரத்திகிட்டே அலையறேன். இப்பல்லாம் எனக்கு ஒழுங்கா மூச்சுவிட முடியல. கொஞ்சமாச்சும் சாராயம் உடம்பில இருந்துகிட்டே இருந்தாத்தான் அசைய முடியுது... இல்லைன்னா சவம்தான். திடீர்னு அய்யா நெனப்பு வந்தது. பாத்துட்டு போவோம்னு வந்தேன்... நல்லா சௌக்கியமா இருக்கீங்கல்லே. எனக்கு எப்பவும் ஒங்க நெனப்புதான்...

நீங்கதான் என்னை மறந்துட்டீக...”

“அதெல்லாம் ஒண்ணுமில்ல...”

ஏதோ யோசிப்பதுபோல சிறிது நேரம் பேசாமலிருந்தான் மண்ணாங்கட்டி.

“அய்யாகிட்ட ஒரு உதவி...”

அவன் குரலின் குழைவிலும் கெஞ்சலிலும் கோவிந்தன் அவன் என்ன கேட்கப் போகிறான் என்று புரிந்துகொண்டான்.

“என்ன வேணும் மண்ணாங்கட்டி...”

“எனக்கு சின்னத்தை ஒருத்தி காலைல செத்துப் போனா பக்கத்து ஊர்ல. சின்ன வயசில என்னை வளத்தவ அவளுக்கு ஒரு மால சாத்தணும்... கொஞ்சம் பணம் வேணும்...”

“இப்ப ரொம்ப கஷ்டம் மண்ணாங்கட்டி. தேதி கடைசி பாத்தியா.”

“இருக்கட்டும்யா... நீங்க நெனச்சா செய்யலாம்... பிஞ்சின் வாங்கினதும் முதல்ல கொண்டு வந்து கொடுத்துருதேன்... ஒரு அம்பது ரூபா இருந்தா கொடுங்க...”

“என்ட்ட இல்ல மண்ணாங்கட்டி...”

“பாத்தீங்களா... இன்னும் நீங்க நம்பல்ல... கொடுக்க முடியாதுன்னு சொல்லுங்கய்யா... அத விட்டுட்டு ஏன் பொய் சொல்தீக...”

இனி அவனிடம் வாதாடிப் பிரயோசனம் இல்லை என்று உணர்ந்த கோவிந்தன் மாத இறுதி நாட்களுக்கு உதவும் என்று எடுத்து தனியே வைத்திருந்த ஐம்பது ரூபாயை எடுத்து மண்ணாங்கட்டியிடம் கொடுத்தான். அதைப் பார்த்ததும் மண்ணாங்கட்டியின் கண்கள் மின்னின. கையில் வாங்கி மடக்கிக்கொண்டு ஒரே ஒரு தடவை பிஞ்சின் வந்ததும் தந்து விடுகிறேன் என்று சொன்னான். உடனே கோவிந்தனிடம் சொல்லிக்கொண்டு கீழிறங்கிப் போய்விட்டான்.

மறுநாள் இரவுப் பணிக்கு வந்தபோது கூட இருந்த லீவர்மேன் ஸ்டூலில் உட்கார்ந்து வெத்திலை போட்டுக் கொண்டே கோவிந்தனிடம்,

“சார் மனுஷன் இருக்கும்போது எவனும் என்னன்னு கூட கேக்க மாட்டேங்கான்... செத்ததும் பாருங்க... மோளமென்ன... மாலையென்ன... கோடியென்ன... அலங் காரமென்ன... பொணத்துக்கு செலவழிக்கிற காசை உசிரோட இருக்கும்போது செலவழிச்சிருந்தா இன்னும் கொஞ்சம் நாளாச்சும் இருந்திருப்பான்... நம்ப

மண்ணாங்கட்டியத்தான்... சொல்றேன்...”

மண்ணாங்கட்டி என்ற பேரைக் கேட்டதும் கோவிந்தனின் சர்வாங்கமும் நடுங்கி ஒடுங்கியது. முன்னமேயே உணர்ந்து கொண்டது போலத் தோன்றினாலும் உதடசைந்தது.

“மண்ணாங்கட்டிக்கென்ன...”

“சாருக்கு விஷயமே தெரியாதா... மண்ணாங்கட்டிக்கு நேத்து யாரோ பணம் கொடுத்திருக்காங்க... ஏற்கனவே டாக்டர் ஈரக் கொலையே இல்லைன்னு சொல்லியிருக்காரு... அப்படியிருக்கும்போது அவங்கிட்ட போயி எவனோ ஒரு கூறு கெட்டவன் காசைக் கொடுப்பானா... குடிச்சி குடிச்சி உணர்ச்சி வராமலே போய்ச் சேந்துட்டான்...”

கோவிந்தன் எதுவும் சொல்லவில்லை. அன்று வேலை சுரத்தாக இல்லை. பழைய ஞாபகங்களும் முந்தின நாள் நிகழ்ச்சிகளுமாய் மனசில் ஓடிக் கொண்டிருந்தன. முதல் தடவை மண்ணாங்கட்டிக்கு பணம் கொடுத்தபோது சாட்சி இல்லாததுபோல கடைசியாய் கொடுத்தபோதும் இல்லாமற் போனதை நினைத்து ஆச்சரியப்பட்டான். இந்த வாழ்க்கையில் எது வேண்டுமானாலும் நடக்கும். மனிதனைப் பார்த்து வாழ்க்கையும், வாழ்க்கையைப் பார்த்து மனிதனும் பரஸ்பரம் கெக்கலி கொட்டிக்கொண்டே யாத்திரைப்பட வேண்டியதுதான். கோவிந்தன் பெருமூச்சு விட்டான்.

34 அந்நியம்

தாத்தா ரொம்பவும் மாறிவிட்டார். இதை வேலம்மையாச்சி சொன்னபோது நம்பத்தான் வேண்டியிருந்தது. பதினான்கு வயதில் வாக்கப்பட்டு தாத்தாவின் சுகதுக்கங்களை சுமந்து சுமந்து முதுகு வளைந்த வேலம்மை ஆச்சி சொன்னால் சரியாகத்தான் இருக்கும். தாத்தாவின் ஒவ்வொரு முகபாவத்திற்கும், அசைவுகளுக்கும் மிக அபூர்வமான முறையில் அர்த்தம் தெரிந்து வைத்திருந்தாள் ஆச்சி. அவளுடைய உலகத்தில் தாத்தாவைத் தவிர வேறெதேனும் வஸ்துவோ, ஜடமோ உண்டா என்று தெரியவில்லை. தாத்தாவிற்குப் பக்கவாதம் வந்து படுக்கையில் சுணங்கி ஐந்தாறு வருஷங்கள் கழிந்து விட்டன. ஒரு வகையில் தாத்தாவை தன் கைகளுக்குள்ளேயே வைத்திருக்க முடிந்ததில் வேலம்மையாச்சிக்கு பரம திருப்தி. நடமாடிக் கொண்டிருந்தவரையிலும் தாத்தாவின் எந்த நடவடிக்கையையும் ஆச்சியால் கட்டுப்படுத்த முடிந்ததில்லை. ஏன் பதில்கூட பேச முடியாது. ஆறடி உயர ஆகிருதியும், சிவந்த நிறமும், மழுங்க சிரைத்த முகமும், எப்போதும் ஜரிகை வல்லவட்டும் தாத்தாவை நெருங்க விடவில்லை. நாலு அடி உயரமும் கறுத்த நிறமும் திருநெல்வேலி பிராண்ட் எத்துப் பல்லும், குட்டையான தலைமயிரும் கொண்ட வேலம்மை ஆச்சியை எப்படிக் கல்யாணம் முடித்தார் என்று அவர் பிள்ளைகளே கேட்டதுண்டு. ஆச்சிக்கே கூட அந்தப் பெருமிதம் உண்டு. தான் அவருக்கு இணை இல்லை என்ற தாழ்வுணர்ச்சியினால்தான் தாத்தா அம்முவிடம் தொடுப்பு வைத்திருந்தபோது அவள் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. ஆனால், இப்போது இந்த ஒரு வாரமாகவே அவர் போக்கு விசித்திரமாயிருந்தது. போன வாரம் தாத்தாவைப் பார்க்க கொக்கிரகுளம் ஜானகி மெனக்கெட்டு வந்தவள்,

“மாமா... எப்படியிருந்தீக... ஆனமாதிரி... இப்படியாய்ட்டீங் களே... எம் மவராசா ஒங்களக் கொண்டு இப்படிப் போடுமா... கச்சேரிக்கு வரும்போது யாராச்சும் குமாஸ்தான்னு சொல்ல முடியுமா... அதுக்கொரு ஒடை உடுத்தி... அதுக்கொரு நடை நடந்து வருவீகளே... இப்படியாய்ட்டீகளே மாமா...”

என்று சுத்தமாய் ஒரு பாட்டம் கண்ணீர் விட்டுப் போனாள். அன்றைக்குத் தாத்தா சரியாகச் சாப்பிடவேயில்ல. அவருடைய நிலைமையை நினைத்து உள்ளே மருகிக் கொண்டிருந்தாலும் நிதானமானவர்.

இப்போதெல்லாம் வேலம்மையாச்சியை கொஞ்ச நேரம் கண்ணில் காணவில்லையென்றால், “ஏய்... வேலம்ம... வேலம்ம...” என்று கூப்பாடு போட ஆரம்பித்துவிடுவார். வேலம்மையாச்சியும் இந்தப் பிரியத்துக்காகவே, அவருக்கான பணிவிடைகளையும், சிச்ருஷைகளையும் முகஞ்சுளிக்காமல் செய்து வருவதாகத் தோன்றியது. தாத்தாவின் அன்பை மற்றவர்களுக்கும் தெரியவைக்க வேண்டுமென்பதில் அலாதி விருப்பம். இதனால் ஊரிலிருந்து யாராவது தாத்தாவைப் பார்க்க வந்திருக்கிற சமயங்களில்,

“நான் இவுக கூட ஊருக்குப் போறேன்...”

“ஏய் போகாதே... போகாதே...” கையும் உடம்புமாய் தலை யசைப்பார். குழறி குழறிப் பேசும்போது வடியும் வாணீரைத் துடைத்துக்கொள்ள வைத்திருக்கும் துண்டை எடுத்து வீசுவார்.

“கொஞ்ச நேரங்கூட என்னைய விட்டுட்டு தனியா இருக்க முடியாது இவுகளால...” என்று விகற்பமில்லாமல் சொல்லிச் சிரிப்பாள் வேலம்மை ஆச்சி. தாத்தாவும் அப்படித்தான். தாத்தாவின் முன்னால் யாரும் பேரன்மார் கூட ஆச்சியைத் தொடக்கூடாது. மடியில் படுக்கக்கூடாது. அப்படியேதும் அவர் கண்காண நேர்ந்தால் போதும் அவ்வளவுதான். சத்தம் போட்டு விரட்டுவார். வேலம்மை ஆச்சி பொய்யான கோபத்துடன்,

“யாரு... ஒங்க பேரமார்தானே... பெண்டாட்டி இன்னம் பதினாறு வயது கொமரின்னு நெனப்பு...” கேட்பாள். தாத்தா இதைக் கேட்டதும் சிரித்துக்கொண்டே பழைய நினைவுகளில் ஆழ்ந்துவிடுவார்.

தாத்தாவுக்குச் சத்தம் பிடிக்கவில்லை. குழந்தைகள் ஓடிச்சாடி விளையாடுவது, ஆட்டபாட்டம் எல்லாம் அவருக்கு ஆகாது. பல நேரங்களில் இதற்கெல்லாம் குழந்தைகளை வைதிருக்கிறார். இதில் நடுவானுக்குப் பெரிய சடவு. தாத்தா இரண்டு கை விரல்களில் மோதிரங்களும், கேஸ் கட்டுகளுமாய் வீட்டிற்கே வராமல் அலைந்த நாட்களை நினைத்து விட்டாரானால் அவர் கண்களுக்கு முன்னே பெரிய திரை விழுந்ததுபோல என்ன சொன்னாலும், என்ன கேட்டாலும் பதில் வராது. முழுக்க முழுக்க வேற்றாளைப் பார்க்கிற பார்வையுடன் வெறித்துப் பார்ப்பார். அதோடு சரி. திருநெல்வேலியிலிருந்து கோவில்பட்டி வந்து மூன்று வருசங்களாகிவிட்டன. இப்போதும் யாராவது திருநெல்வேலியிலிருந்து வந்து போய்க் கொண்டிருந்தார்கள். அப்படி யார் வந்தாலும் அவர்கள் கையைத் தன் மடிமீது பிரியத்தோடு வைத்துக்கொண்டு சேமலாபங்களை விசாரிப்பார். அவருடைய எல்லா

விசாரிப்புகளும், புஸ்தகக் கடை சிதம்பரம் பிள்ளை, முக்கு வீட்டு கோவிந்தன் நாயுடு, பால்க்கார கோனார் இருப்பார்கள். அவர்கள்தான் அவர் வாழ்வில் சம்பாதித்திருந்த ஆப்த நண்பர்கள். தினமும் இரவு ஆத்துக்கு கால் கழுவப் போகிறவர்கள். இவர்கள் நாலு பேரின் பேச்சையும், சங்கீதத்தையும் கேட்காமல் போக முடியாது. எப்போதும் அவர்களுடன் ஒரு அரைமணி நேரம் பேச தாத்தாவுக்கு விஷயங்கள் இருந்தது. பால்காரக் கோனார் நெஞ்சு வலியால் போய்ச் சேர்ந்துவிட்டார் என்ற தகவல் தெரிந்த அன்று கண்ணீர் வழிந்தது தாத்தாவுக்கு.

தாத்தாவுக்கு அவர் காலத்திய மைனர்களைப்போல பெண்கள் மீது அபாரப் பிரேமை இருந்தது. அவர் நிறைய ஆங்கிலேய, ஆங்கிலோ - இந்திய பெண்மணிகளின் படங்களும், இந்திய சினிமா நடிகைகளின் படங்களும் வைத்திருந்தார். இத்தனைக்கும் நடுவில் ஒரேயொரு படம் மட்டும் பிரேம் பண்ணி இருந்தது. அது அம்முக் குட்டியின் படம். கொல்லத்துக்காரி. திருநெல்வேலிப் பேட்டையில் எல்லோரையும் தன் பின்னால் அலைக்கழித்தவள். கொஞ்சநாள் தாத்தாவுக்கும் வைப்பாட்டியாய் இருந்தாள். பின்னர் பேட்டை மரக்கடை முதலாளிக்குக் கைமாறி விட்டாள். பின்னும் எப்போதாவது தாத்தா அவளைச் சந்திக்காமலிருந்ததில்லை. ஒரு தடவை கொல்லம் போனவள் திரும்பவேயில்லை. விசாரித்தபோது அவள் கொலை செய்யப்பட்ட விபரம் தெரிந்தது. ஆச்சிக்கு இந்த எல்லா விபரமும் தெரிந்துதான் இருந்தது. ஆனால் பக்கத்து வீட்டுப் பெண்களிடமும், தன்னுடைய மக்கமார், மருமக்களிடம் சொல்ல இருந்த தைரியமும், பெருந்தன்மையும் ஆச்சரியப்படும்படியாயிருந்தது. இப்போதும் தாத்தா கோபமாயிருக்கிற சமயங்களிலோ, விரக்தியில் பேசாமலிருக்கிற சமயங்களிலோ,

“எந்தா... அம்முக்குட்டி ஓர்ம வந்தோ...” என்று கேட்டால் போதும் முகம் இளகி புன்னகை சிந்தும். ஒருவகையில் வேலம்மையாச்சியும் அம்முவும்தான் அவர் வாழ்வின் உள்ளீடு எனச் சொல்லும்படி அவர் வெறுங் கூடாயிருந்தார்.

இப்போது இந்த ஒரு வாரமாய் அடிக்கடி புலம்பினார். யார் வீட்டுக்குள்ளே வந்தாலும் “யாரு... யாரு...” என்று பயந்து அலறினார். பேச்சு முன்பிருந்ததைவிட தெளிவில்லாமல் போனது. வெளிக்கு படுத்த இடத்திலேயே சில சமயங்களில் தன்னையறியாமல் இருந்தாற்போல் கத்துவார்.

“சாப்பாடு தயாரா... என்ன பண்ணிக்கிட்டிருக்கே... இவ்வளவு நேரம்...

சாமி காத்துகிட்டிருப்பாக... எவ்வளவு கேசு எழுத வேண்டியிருக்கு...” என்பார். முற்றத்தில் உட்கார்ந்து வாசல் வழி போகிறவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும்போது,

“ஏ வேலம்ம... திருச்செந்தூர் சம்முகம் பிள்ளை போறாரு... கூப்பிடு...”

“அந்த மொரப்ப நாடு அன்ன பாக்கியம் கேசு பைசலாயிடுச்சு இன்னிக்கு வர்றேன்னு சொல்லியிருக்கான்...” என்று மாறி மாறிச் சொல்லி, கொஞ்ச நேரம் மலங்க மலங்க விழித்து உதட்டைப் பிதுக்குவார். மிகச் சில சமயங்களில் குரல் கணீரென்று தெளிவாய் இருக்கும். அதிலும் திருநெல்வேலியைப் பற்றி பேசும்போது குரல் தெளிந்து வந்தது என்று வேலம்மையாச்சி நினைத்தாள். தாமிரபரணித் தண்ணீர் கொஞ்சம் எடுத்து வந்து கொடுக்கணும் என்று கூட கோவிந்தனிடம் சொல்லியிருந்தாள். ஊத்துப்பட்டி சாமியாரிடம் ஜோசியம் கேட்டு வந்தாள்.

திடீரென ஒருநாள் யாரைப் பார்த்தாலும் அவசரமாய் கையேந்த ஆரம்பித்தார்.

“நான் அநாதை... எனக்கு நீ சோறு போடுவியா...” என்று வருகிறவர்களிடம் சொல்லி அழுதார். இப்போது நிறையச் சமயங்களில் அவருக்கு யாருடனும் பேசப் பிடிக்கவில்லை. பரக்க பரக்க விழித்தார். அங்குமிங்கும் சுற்றிச் சுற்றிப் பார்ப்பார். பின், மெதுவாய் படுக்கையில் சாய்ந்து கண் மூடிவிடுவார். அந்த மாதிரி நேரங்களில் ஆச்சிதான். “நல்ல அசதி” என்று சொல்லிச் சமாளிப்பாள். ஆனால், ஆச்சிக்கு மனதுக்குள் கஷ்டமாயிருந்தது.

போனவாரத்தில், முன்பே அவர்களுக்குள் பேசிக்கொண்ட மாதிரி மக்கமார் வந்திருந்தார்கள். பெண் பிள்ளைகளுக்கும் சேர்த்து உயில் எழுதி வைத்ததற்காக, ஒரேயடியாகச் சண்டை போட்டு உண்டு இல்லைன்னு சடைத்துக் கொண்டுபோனார்கள். அவர்கள் உயிலுக்காகப் போட்ட சண்டையில் கூட வேலம்மையாச்சிக்கு அவ்வளவு வருத்தமில்லை. அப்பாவைப் பார்த்து ‘நல்லாருக்கீகளா’ன்னு ஒரு வார்த்தை கேட்பதற்கும், அவருக்கு ஊரிலிருந்து வரும்போது ஏதாவது வாங்கி வரக்கூட மதியில்லாமல் போய்விட்டார்கள். இதை நினைத்து நினைத்துதான் வேலம்மையாச்சி குமுறிவிட்டாள்.

“ஏ ராசா... இந்தப் பாவி மக்களப் பாத்தீகளா... சொத்துக்காக இம்புட்டு சிலுவை இழுத்து சண்டை போட்டுட்டு போறானுகளே... ஒங்கள வந்து ஒரு வார்த்தை ‘சௌக்கியமா’ன்னு கேக்க முடியாமப் போச்சில்ல... அந்த

அளவுக்கு சொத்து கண்ண மறைச்சிருச்சில்ல... நீங்க தெடமா இருந்தா இந்த பயகள் இப்படி பேசிட்டுப் போவானுகளா...” என்று அழுது தீர்த்தாள். தாத்தா அப்போது பேசவில்லை. உத்திரத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். வேலம்மையாச்சியும் அன்று வெகு நேரம் கழித்தே சமையல் வேலைகளைத் தொடங்கினாள்.

அடுப்படியில் சமையல் செய்து கொண்டிருக்கும்போதுதான், யாரோ விம்முகிற சத்தமும், சுவரில் முட்டுகிற சத்தமும் கேட்டது. ஆச்சி பதறிப் போய் ஓடினாள். தாத்தாதான் முகத்தில் கண்ணீர் வழிந்தோட சுவற்றில் முட்டிக் கொண்டி ருந்தார். முகம் விகாரமாகி உடம்பெல்லாம் குலுங்க அவர் அமானுஷ்யமான குரலில், அழ ஆரம்பித்தார். வேலம்மை யாச்சி ஓடிப் போய் அவரைத் தடுத்தாள். அவளுக்கும் கண்ணீர் பொங்கியது.

“அழாதீகய்யா... அழாதீக... போனாப் போறானுக புசைகெட்ட பயக... அழாதீக... ஏ... தங்கராசா...’’ அவர் மேலும் சத்தமாய் அழுதார். வேலம்மையாச்சியின் மடியில் முகம் புதைத்து வாயில் கோழை வடிய ரொம்ப நேரத்துக்குத் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தார்.

35. சிந்தியது

அசப்பில் கணபதி மாதிரியே தெரிந்தது. அந்தச் சுருள்முடி நிமிர்ந்த நடை, முகவெட்டு எல்லாமும் கணபதி போலவே இருந்தது. கணபதியேதான் என்றுகூட நினைத்தாள். 'கணபதி' என்று கூப்பிட்டு விடலாமா என்று வாயெடுத்தாள். உடனே திடீரென மண்டையில் சுரீர் என்று எதுவோ சுண்டியிழுத்த மாதிரி இருந்தது. ஒருவேளை அது கணபதியாகவே இருந்து வந்துவிட்டால், அவளால் என்ன செய்ய முடியும். உள்ளே வா என்று எப்படிச் சொல்ல முடியும். அதோடு இந்தக் கேவலம் எல்லோருக்கும் தெரிந்துவிடாதா. அவளுடைய கணவன் வள்ளி நாயகம் காலையில் வேலைக்குப் போகுமுன்பாக வீட்டை வெளியில் பூட்டிவிட்டுப் போய்விடுவான். திரும்பி அவன் வரும்வரை கதவைத் திறக்க முடியாது. அவள் பின்புற வாசலில் புழங்கிக் கொள்ளலாம். ஆனால் முன்புறம் எவ்வளவுக்கெவ்வளவு ஆள் நடமாட்டம் இருந்ததோ அவ்வளவுக்கவ்வளவு கருவேலஞ்செடி புதர்மண்டி பின்புறம் பயங்கரமாய் இருந்தது. பின்புறம் கதவை அவள் திறந்ததேயில்லை. வீட்டு வேலை முடிந்த பிறகு வாசல் அளிக்கதவில் நின்று வெளியே வேடிக்கை பார்ப்பாள். தெருவில் போகும் சிலர் வெளியே பூட்டிய வீட்டின் உள்ளே நிற்கும் அவளை ஒரு மாதிரியாகத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போவார்கள். அவள் வெளியே அரவமில்லாதபோது உறங்குவாள். எப்போதும் ரேடியோ பாடிக் கொண்டேயிருக்கும். அதுவும் இல்லாதிருந்தால் அவளுக்கு எப்போதோ பைத்தியம் பிடித்திருக்கும்.

இன்று நல்லதொரு உறக்கத்திற்குப் பின்னால் கண் பட்டைகளும் முகமும் உப்பி வீங்கியிருந்தது. அப்படியே வந்து அளிக்கதவில் சாய்ந்து கொண்டு நின்றாள். அப்போதுதான் கணபதியோ என்ற மாதிரி அந்த ஆளைப் பார்த்தாள். ஆனால், அடுத்த நிமிடமே மனம் சுதாரித்துக் கொண்டது. கணபதி பம்பாயில் இருக்கிறான். பள்ளிக்கூடத்தில் அவள் கூடப் படித்த சேக்காளி. ஒரே தெருக்காரன். அவளுக்கு கலியாணம் நிச்சயமான பிறகு அவனுக்கு அதிசயமாய் பம்பாய் வேலைக்கு வந்து சேரச் சொல்லி ஒரு தனியார் கம்பெனியிலிருந்து ஆர்டர் வந்து போனான். போகும்போது கலியாணத்துக்கு இருக்க முடியாமல் போனதுக்கு வருத்தம் தெரிவித்துவிட்டு ஆறு மாதம் கழித்து வரும்போது பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போனான். ஆனால், மூன்று மாதம்தானே ஆகிறது. அதற்குள் எப்படி அவன் வருவான். ஒருவேளை திடீரென்று ஊருக்கு வரும்படி நேர்ந்து, அங்கே அவளுடைய வீட்டில்

போய் விலாசம் வாங்கிக் கொண்டு இங்கே தேடியலைகிறானோ. அவளுக்கு எதையும் நிச்சயமாய் நினைக்க முடியவில்லை. தெருவில் விளக்கும் இல்லை. அவ்வளவு சரியாகத் தெரியவில்லை. அவள் மனம் குழம்பியது. இப்போது முன்பு பார்த்த ஆள், திரும்ப அதே பாதை வழியே அவள் வீட்டைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனான். அவளுக்குக் கொஞ்சம் பயம் கிளர்ந்தது. உடனே உள்ளே போய்விட்டாள். ரேடியோ சத்தத்தைக் கூட்டி வைத்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தாள். கொஞ்ச நேரம் கழித்து எழுந்து வாசலுக்குப் போனாள். இப்போது தெருவில் யாருமே இல்லை. சலிப்பாயிருந்தது.

வள்ளிநாயகம் வேலைக்குப் போகும்போதே அநேகமாக எல்லா வேலைகளும் முடிந்துவிடும். சமையல் செய்து சாப்பாடு கொடுத்து அனுப்பிவிடுவாள். பாத்திரங்கள் விளக்கி எடுப்பதும், துணி துவைப்பதும்தான். அதை அவளிஷ்டம்போல செய்வாள். மற்ற நேரங்களில் பலதும் யோசித்துக் கொண்டே கிடப்பாள். குறிப்பாக இன்னதுதான் என்று கிடையாது. அப்படியே தூங்கிவிடுவாள். தூக்கம் வராதபோது எரிச்சலாக இருக்கும். யாரிடமாவது பேசினால் தேவலாம். தனியே உள்ளேயே வளையவளைய வருவது பயமாய் இருக்கும்.

சின்ன சப்தம் கேட்டால்கூட நடுக்கம் ஏற்படும். அவளை எப்போதும் யாரோ பார்த்துக் கொண்டேயிருப்பதைப் போலவோ, யாரோ எந்த மூலை முடுக்கிலோ ஒளிந்து கொண்டிருப்பதைப் போலவோ தோன்றும். சில நேரம் அவள் நடக்கும்போது கூடவே யாரோ நடப்பதைப்போல அசைவுகளை உணர்ந்தாள். நாடி ஒடுங்கி அப்படியே நின்று விடுவாள். மெல்ல திரும்பிப் பார்ப்பாள். அப்படியும் திருப்தி வராது. உள் அறை, பீரோவிற்குப் பின்னால், கதவுகளுக்குப் பின்னால் என்று பார்த்து விடுவாள். யாரிடமாவது பேசினால் கொஞ்சம் ஆறுதலாய் இருக்கும் என்று தோன்றும். ஆனால் பேச யாரிருக்கிறார்கள். அது புதிதாக வீடுகள் முளைத்துக் கொண்டிருந்த பகுதி. அங்கொன்றும் இங்கொன்றுமாய் எழுந்த வீடுகளில் எல்லாம் ஆள் இருந்ததாகச் சொல்ல முடியாது. பகலில் வீட்டுவேலைகள் நடைபெறும் மும்முரம் தெருவில் களேபரமாய் இருக்கும்.

இருட்ட இருட்ட வண்டுகளின் இரைச்சல், தூரத்துச் சினிமாப் பாட்டு, டிவி. சத்தம் யாராவது தெரு வழியே போகும்போது பேச்சு என்று அபூர்வமாக கேட்கும். அவள் சமயங்களில் தனக்குத்தானே பேசிக் கொண்டாள். தனக்குத் தானே புலம்பினாள். வள்ளிநாயகத்திடம் ஒன்றிரண்டு தடவை சண்டை போட்டாள். வீட்டைப் பூட்டக்

கூடாதென்று. அவன் நிதானமாய், அந்த இடத்திலேயே இரண்டாவதாய் வீடு கட்டியவன் அவன்தான். வீடு கட்டிய பின்தான் கல்யாணம் என்ற வைராக்கியத்தில் இத்தனை நாள் தள்ளிக் கொண்டே போய் இப்போது முடித்திருக்கிறான். இந்த மாதிரி ஏரியாவில் கொலை கொள்ளை நடக்க வாய்ப்புகள் அதிகம். அப்படி இப்படி என்று பயமுறுத்தினான். அதையும் மீறி அவள் முரண்டியபோது "ஏன் யாரையாச்சும் பகல்ல வரச் சொல்லியிருக்கியா?" என்று கேட்டான். அவள் அத்துடன் பேச்சை நிறுத்திக்கொண்டாள்.

பகல் பொழுதையாவது நெட்டித் தள்ளி விடுவாள். சாயந்திரம் வந்தால் அவ்வளவுதான். வெறிபிடித்த மாதிரி ஆகிவிடும். வள்ளி நாயகம் ஒருநாளும் சாயந்திரம் வந்ததில்லை. அவளைக் கோவில், சினிமா என்று எங்கேயும் கூட்டிப்போனதில்லை. வேலை, வேலை விட்டால் வீடு என்றிருந்தான். வேலை முடிந்து எட்டு மணி வாக்கில் வந்ததும் சைக்கிள் மணியடிப்பான். உடனே அவள் வாசலுக்கு வரவேண்டும். ஆனால் அவன் வரும்போது வாசலில் நின்று கொண்டிருக்கக் கூடாது. கதவைத் திறந்து சைக்கிளை உள்ளே தூக்கி வைத்துவிட்டு டிபன் கேரியர் கூடையை அவளிடம் கொடுப்பான். அப்படியே அவளைக் கட்டிப் பிடித்து முத்தமிடுவான். பின்னர் குளிக்கும்போது அவள் கண்டிப்பாய் முதுகு தேய்த்து விட வேண்டும். அப்போதெல்லாம் அசிங்கமாய் ஏதேதோ சொல்லிச் சிரிப்பான்.

அவள் சாப்பிட்டுவிட்டு ஏனங்களை எடுத்து ஒதுங்க வைத்துவிட்டு வந்ததும் அவளைப் பிடித்து படுக்கைக்கு தள்ளுவான். அவள் பேச ஆரம்பிக்கு முன்னமேயே அவன் வேலை ஸ்தலத்தில் பேசிய கதைகள். ஆண் பெண் சம்பந்தப்பட்டவை. இல்லையென்றால் சினிமா நடிக நடிகைகளைப் பற்றிய அந்தரங்கமான சமாசாரங்கள். பேசிக் கொண்டிருக்கும்போதே,

"ஒனக்கு ஏண்டி சின்னதா இருக்கு...

அவளுக்கு எப்படி இருக்கும் தெரியுமா..."

என்று ஒரு நடிகையைச் சொல்லுவான். அவள் அவமானத்தால் குன்னிப் போவாள். உணர்ச்சியற்ற மரக்கட்டை போல கிடப்பாள். அந்த மாதிரி நேரங்களில் அவன் கூட இருப்பதை விட தனிமை மேல் என்று தோன்றும். அவனுடைய ஆட்டபாட்டம் முடிந்ததும் குறட்டை விட்டுக் கொண்டே உறங்கி விடுவான். ஆனால், அவளுக்கு உறக்கம் வராது. இருட்டுக்குள் முழித்துக் கொண்டே கிடப்பாள். பல சமயம் தலையணையில் முகம் புதைத்துக் கொண்டே அழுதிருக்கிறாள்.

படுக்கையின் விளிம்பில் ஒடுங்கிப் போய் விடுவாள். திரும்பி அவனைப் பார்க்கவே பயமாய் இருக்கும்.

அவள் சின்ன வயசிலிருந்தே பெரிய பேச்சுக்காரி. சதா பேசிக் கொண்டே யிருப்பாள். பள்ளிக்கூடத்தில் பாடம் நடத்திக் கொண்டிருந்தாலும்... பக்கத்தில் குசுகுசுவெனப் பேசிக் கொண்டிருப்பாள். அதுவும் கணபதிக்கும் அவளுக்கும் எப்போதும் பேசவும், சச்சரவிடவும் விஷயம் கிடைத்துக் கொண்டேயிருக்கும். அவளால் கணபதிக்கும் கணபதியால் அவளுக்கும் நிறைய தடவைகள் அடி கிடைத்திருக்கிறது. பள்ளிக்கூடம் முடிந்த பிறகு, அவள் படிக்க ஆசைப்பட்டாலும் வீட்டில் வசதியில்லை. கணபதி கல்லூரி போனான். பல பேர் வேறு மாதிரியாகக் கூட நினைத்தார்கள். ஆனால் அவள் மனதில் எந்தவிதமான நினைப்புமில்லை. ஒருவேளை கணபதி மனதில் இருந்ததோ என்னவோ, எப்போதும் பேசிக் கொண்டிருக்கிற அவளை அம்மாதான் அப்படிச் சத்தம் போடுவாள்.

“ஏட்டி இப்படி பேசிப் பேசி போற இடத்தில பேரக் கெடுத்திராத, நாக்கை கொஞ்சம் மடக்கி வை...”

“நல்ல பேரெடுக்கணும்னா நல்லா பேசணும்மா... இல்ல தலையில மொளகா அரச்சி குழம்பு வைச்சிருவாங்க...”

“எல்லாத்துக்கும் பதிலுக்குப் பதிலா... எந்தப் புண்ணியவான் வாரானோ... ஒன்னய மேய்ச்சடக்க...”

“நான் என்ன ஆடா மாடா மேய்க்கறதுக்கு...”

அம்மாவுக்குப் போதும் போதுமென்றாகிவிடும். அதற்கு மேல் பேசமாட்டாள்.

அவள் ராத்திரியில் தீப்பெட்டிக் கட்டு ஒட்டும்போது, பிள்ளைகளைக் கூட்டி வைத்து கதைகள் சொல்லுவாள். வீட்டு முற்றத்தில் எல்லாப் பிள்ளைகளும் ஆளுக்கு ஒரு பலகையும், பசைச் சட்டியும் கொண்டுவந்து வைத்துக் கொண்டு கதை கேட்பார்கள். இதற்காகவே பிள்ளைகள் சீக்கிரமே ராச்சாப்பாட்டுக் கடையை முடித்துவிட்டு,

“நான் கோமக்கா வீட்டில் போய் கட்டு ஒட்டப்போறேன்...” என்று சொல்லிவிட்டு வருவார்கள். அவள் படித்த கதை, கேட்ட கதை என்று மட்டுமல்லாமல் அவளே புதிது புதிதாக கதைகளைப் புனைந்து சொல்லுவாள். எல்லாம் கலியாணத்தோடு போயிற்று. பிள்ளைகள் யாரிடம் போய் கதை கேட்கும்.

இன்று என்னவோ மனம் நிலை கொள்ளவில்லை. சுற்றிச் சுற்றி அலை பாய்ந்தது. ஏக்கம் கூடித் தவித்தது. அவள் ஏதேதோ யோசித்தாள். மத்தியானம் ஒரு ஹேர்பின்னை வைத்து வாசல் பூட்டைத் திறக்க முயற்சித்தாள். எப்படியாவது திறந்து ஊருக்கு ஓடிவிட வேண்டும் என்ற எண்ணம் வலுத்தது. ஆனால், ஊருக்குப் போனாலும் என்ன. அம்மாவுக்கு இப்படி ஒரு பிக்கல் பிடுங்கல் இல்லாத மாப்பிள்ளை. தன்னுடைய மகளின் மீது கொள்ளைப் பிரியம் வைத்திருக்கிற மாப்பிள்ளை கிடைத்ததில் பெருமை. அவள் போனமுறை விருந்துக்குப் போனபோது அம்மாவிடம் அழுதாள்,

“அசடு மாதிரி பேசாத. ஆம்பிளக அப்படித்தான் கொஞ்சம் கோணமாணையாத்தான் இருப்பாக... நீதான் கொஞ்சகொஞ்சமா வழிக்கு கொண்டு வரணும்... இந்த மாதிரி மாப்பிள்ளை கெடைக்க நீ கொடுத்து வச்சிருக்கணும்...” என்றாள்.

இதற்கு மேல் அம்மாவிடம் சொல்ல எதுவுமில்லை; அவளுக்கு அவள் பூட்டைத் திறக்கும் முயற்சியைக் கைவிட்டபோது மனசின் அடியில் அப்படியொரு எண்ணம் வந்தது. முதலில் சாதாரணமாய் ஒதுக்கிவிட்டாள். ஆனால் நேரமாக ஆக... அந்த எண்ணம் வலுப்பெறத் துவங்கியது. உடனே அவளும் அதில் ஆறுதலடைந்து தொடர்ந்து அந்த எண்ணத்தின் வழியே நடந்தாள்.

அது அந்தகார இருளை நோக்கி அவளை இட்டுச் சென்றது. தலையை ஒரு உதறு உதறி அதிலிருந்து விடுபட நினைத்தாள். அவள் வாழவே ஆசைப்பட்டாள். கொஞ்சநேரம் தலைமறைவாய் இருந்த அந்த எண்ணம் மறுபடியும் தண்ணீர்ப் பாம்பு மாதிரி தலை தூக்கியது. அதோடு சாயந்திரம் கணபதியே போல ஒரு ஆளைப் பார்த்தது வேறு மனசில் பலவித யோசனைகளை உண்டு பண்ணியது. பழைய ஞாபகங்கள் பெருகின. திடீரென வீசிய ஈரமான காற்று அவளைப் பரவசப்படுத்தியது. அந்தக் கணத்திலேயே அவளை அந்த எண்ணம் முழுவதுமாய் ஆட்கொண்டது. உள்ளே வந்தவள் அவளுக்குப் பிடித்தமான ஊதா நிற நைலக்ஸ் சேலையை எடுத்து சீலிங் பேனின் ரெக்கை மீது வீசினாள். முதல் தடவை வழுக்கி விழுந்தது. ரெண்டாம் தடவையும் வழுக்கி அப்படியே. மூன்றாம் தடவையும் வழுக்கி விழ அவளுக்கு அது ஒரு விளையாட்டுபோல சிரிப்பாய் வந்தது. நான்காம் தடவை வீசியது சிக்கிக் கொண்டது.

அப்போதுதான் வாசலில் செருப்புச் சத்தம் கேட்டது. அவள் உடனே அவசர அவசரமாக பேனிலிருந்து சேலையை உருவி கொடியில் வீசி

எறிந்துவிட்டு வாசலுக்கு வந்தாள். வாசலில் கணபதி நின்று கொண்டிருந்தான். கதவில் பூட்டு ஹேர்பின் சாவித் துவாரத்தில் தொங்க, திறந்து கிடந்தது. அவள் ஆச்சரியத்தில் வாயடைத்துப் போனாள்.

“என்ன அப்படியே நிக்கற... ஒன் வீட்ட கண்டு பிடிக்கதுக்குள்ளே எவ்வளவு அலைச்சல் தெரியுமா. இதே தெருவழியா ரெண்டு தடவை போயிருக்கேன். அப்பப்பா... என்ன ஊரப்பா இது...” என்று பேசிக் கொண்டே அவனே கதவைத் திறந்து உள்ளே வந்தான். அவள் திடீரென பிரமையிலிருந்து விடுபட்டவள் போல,

“வா... கணபதி ஒன்னத்தான் இத்தன நாளா பார்த்துக்கிட்டிருக்கேன்... எப்ப பம்பாயிலிருந்து வந்தே... வேலை எப்படியிருக்கு... ஊர்ல எல்லாரும் சௌக்கியமா... எங்க அப்பா அம்மா... சுந்தர்... சங்கரி எல்லாரும் சௌகரியமா... ஒங்க வீட்ல எப்படியிருக்காங்க... ஒனக்கு எப்ப கல்யாணம்...”

“போதும்... போதும் ஒன்னொன்னா கேளு. இப்பத்தான் பேசப் படிச்சவ மாதிரி ஒரேயடியா அளக்கிற...” என்றான் சிரித்துக் கொண்டே.

அவ்வளவுதான் அவளுக்கும் அவனுடைய உற்சாகமும் சிரிப்பும் பற்றிக் கொண்டது. வெளியே மழையும் தூறல் போட ஆரம்பித்தது. அவன் அவள் கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும் நிதானமாய் பதில் சொன்னான். அவள் கேட்க நினைத்து கேட்காமல் விட்ட கேள்விகளுக்கும் சேர்த்துப் பதில் சொன்னான். அவளிடம் ஒவ்வொன்றாய் கேட்டான். கணவன் எப்படி, அவள் பொழுதை எப்படிக் கழிக்கிறாள் என்று கேட்டான். அவள் பொங்கி வந்த அழுகையை அடக்கிக்கொண்டே சொன்னவைகளைக் கேட்டு துயரமடைந்தான்.

அப்படியே அவளுக்கு ஆறுதலாய் ஏதோ சொன்னான். அவன் சொன்ன வார்த்தைகள் சாதாரணமானவைதான். ஆனால், அவன் குரலிலிருந்த பாவம் அவளுக்கு மிகுந்த நம்பிக்கையையும், தெம்பையும் தந்தது. அப்படியே அவர்களுடைய பள்ளிக்கூட நாட்கள், வாத்தியார்கள், போட்டிகள், சண்டைச் சடைவுகள் என்று எல்லாவற்றையும் பேசிக் கொண்டார்கள். அவர்களில் அவள்தான் நிறையப் பேசினாள். மனம் விட்டுச் சிரித்தாள். இதுநாள் வரை அவனிடம் பேசத் தயங்கியிருந்த விஷயங்களையும் இப்போது பேசினாள். தனிமையில் அவள் கற்பனை செய்திருந்த, யோசித்திருந்த ஏன் அவள் கணவன் வள்ளிநாயகம் சொன்ன கதைகளில் சிலவற்றைக்கூட அவனிடம் சொன்னாள். அவளுக்கு வருகிற கனவுகளைப் பற்றி, அவன் வருவதற்கு சற்று முன்னர் அவள் செய்யப் போன தற்கொலை முயற்சியைப் பற்றிக்

கூறினாள். அவன் சிரத்தையோடு அவள் பேசுவதையெல்லாம், கேட்டுக் கொண்டேயிருந்தான். முகத்தை அங்கே இங்கே அசைத்தால்கூட அவள் பேச்சு தடைப்பட்டுவிடுமோ என்று அசையாது பதுமை போலிருந்தான். ஒரு மாறாத புன்சிரிப்பு முகத்திலிருந்தது.

இருள் கப்பியது உணர்வுக்கு வர விளக்குப் போடுவதற்காக எழுந்தாள் அவள். அப்போதுதான் வீட்டுக்கு வந்தவனுக்கு சாப்பிட எதுவும் தரவில்லையே என்று உறைத்தது. அவனிடம் சொல்லிவிட்டு அடுக்களைக்குள் போய் காப்பி கலந்து கொண்டு வந்தாள். அவனிடம் காப்பியைக் கொடுக்கும்போது தம்ளரின் விளிம்பு சரிந்து காப்பி அவனுடைய பேண்டிலும் தரையிலும் சிந்திவிட்டது. "அய்யய்யோ..." என்ற அவள் திகைப்புக்கு "பரவால்ல" சிரித்துக்கொண்டே சொல்லித் துடைத்தான்.

"சீக்கிரம் குடி கணபதி... ஆறிடப் போவுது..."

"நம்ப வீட்டுக் காப்பிதான்... எப்படி குடிச்சாலும் நல்லாயிருக்கும்."

"பேச்சிலேயே எல்லாரையும் கவுத்திருவியே..."

"இல்லென்னா ஒங்கிட்ட பொழக்க முடியுமா..." அதைக் கேட்டு அவள் சிரித்தாள். அப்போதுதான் வாசலில் சைக்கிளின் மணிச் சத்தம் இடிச்சப்தம் போல தொடர்ந்து ஒலித்தது. அவளுக்குத் திக்கென்றிருந்தது. அவள் நாற்காலியிலிருந்து எழுந்து வாசலுக்கு வர வள்ளிநாயகம் பூட்டைத் திறந்து கதவைத் தள்ளிக்கொண்டே,

"என்ன பண்ணிக்கிட்ருக்கே... உள்ளே..." கேட்டான். அவளுக்கு அதிர்ச்சியாயிருந்தது. அவன் கொடுத்த டிபன் கேரியரை வாங்கிக்கொண்டு ஒரு குழப்பமான மனநிலையில் உள்ளே நுழைந்தவளுக்கு ஹாலில் யாரும் இல்லாதது இன்னும் ஆச்சரியமாயிருந்தது. ஒன்றும் புரியவில்லை. அவசரமாய் புழக்கடைப் பக்கம் உள் அறை என்று தேடிப் பார்த்தாள். எந்த அரவமும் இல்லை. மீண்டும் ஹாலுக்கு வந்தபோது தரையை உற்றுக் கவனித்தாள், தரையில் காப்பி சிந்திய கறையும், அருகில் காப்பித் தம்ளரும் இருந்தது. வள்ளிநாயகம் பனியனைக் கழட்டிக் கொடியில் போட்டுவிட்டு அவளை நோக்கி வந்தான்.

36. வீடும் வெளியும்

இருண்டு கறுத்த உருவம் முன்னால் நின்று தன் மயிரடர்ந்த கைகளை வீசி அவளைப் பிடிக்க வந்தது. அந்த கடுத்த புளிப்பான வாடை மறுபடியும் அவளைச் சுற்றி வீசியது. குடல் மேலே செருக குபீரென இரத்தம் தலைக்கேறியது. நாச்சியார் அலறினாள். அமானுஷ்ய குரலில் வீறிட்டாள்.

“என்ன விட்ரு... என்ன விட்ரு... ஒண்ணும் செஞ்சிராத...” கண் முழி பிதுங்க கைகளை வீசினாள். அவன் எந்தப் பக்கத்திலிருந்து வருகிறான் என்று தெரியாததுபோல அவளைச் சுற்றிலும் கைகளை வீசி அடித்தாள். பக்கத்தில் இருந்த சாமான்கள் உருண்டன. இதற்குள் சுடலைமுத்துப் பிள்ளை எழுந்து விளக்கைப் போட்டு நாச்சியாரின் அருகில் வந்தார். அவள் அம்மாவும் நாச்சியாரின் தலையைத் தடவிக் கொண்டே, பதட்டத்துடன்,

“என்னம்மா என்ன கெட்ட சொப்பனம் கண்டியா...”

“அங்க பாரு... நிக்கான்... அவந்தான்... எனக்கு பயமாருக்கு... என்னய காப்பாத்துங்க... என்னய காப்பாத்துங்க...”

“யாரு நிக்கா... வீட்டுக்குள்ள கதவடைச்சி இருக்கும்போது எவன் வருவான்... நாச்சியாரு கண்ணத் திறந்து பாரு... பாரு...”

அப்பா நாச்சியாரின் அருகில் போய் கத்தினார். நாச்சியார் பதில் பேசவில்லை. சுவரை வெறித்துக்கொண்டு பல்லை நறநறவெனக் கடித்தாள். கை கால்கள் விரைத்துக்கொள்ள அப்படியே படுக்கையில் சாய்ந்தாள். அம்மா எழுந்து திருநீற்றுப் புரையிலிருந்து திருநீறை எடுத்து நாச்சியாரின் தலையைத் தாங்கிக்கொண்டு குடிக்கக் கொடுத்தாள். உடம்பெல்லாம் வியர்த்தது. அப்படியே கால்களைக் குறுக்கிக்கொண்டு சோர்ந்து போய் உறங்கிவிட்டாள். அம்மா பொங்கி வரும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே விசிறியால் வீசிக் கொண்டிருந்தாள். கலவரத்துடன் சுமதியும் காந்தியும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். இதற்குள் கதவு தட்டப்படும் ஓசை கேட்டு சுடலைமுத்துப் பிள்ளை எழுந்து போனார். வெளியே பக்கத்து வீட்டு சோமுவும் அவன் மனைவியும் நின்று கொண்டிருந்தார்கள். பரமசிவம் அவன் வீட்டு வாசலில் நின்றபடிக்கே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். வளவில் உள்ள எட்டு வீட்டில் நாலைந்து வீடுகளில் விளக்கு எரிந்தது.

“என்ன அண்ணாச்சி. மறுபடியும்...”

“ஏதோ கழுத பயந்துருக்கா... அதையே நெனச்சிகிட்டு இருக்காபோல. அதாம் கூப்பாடு... இப்ப சரியாப் போச்சி... நல்லா தூங்குதா...”

உடனே சோமு மனைவி,

“இதோட நாலைஞ்சி தடவையாச்சி. இப்படியே வச்சிகிட்டுருந்தா எப்படி... வயக்காட்டு எசக்கியம்மன் கோயில்ல போயி மந்திரிச்சிட்டு வரலாம்லே... அக்கா என்ன பண்ணுதாக...”

“உட்கார்ந்திருக்கா... பக்கத்துல உக்காந்து வீசிகிட்டு இருக்கா... நாளைக்கு போக வேண்டியதான்... நான் தன்னால சரியாப் போகும்னு பார்த்தேன்...”

“சத்தம் கேட்டுதான் என்னமோ ஏதோன்னு பதறியடிச்சி வாரோம்...” என்று சொல்லிக் கொண்டே சோமு திரும்பினான்.

அவன் மனைவியும் தலைமுடியை உதறிக் கொண்டை போட்டுக் கொண்டே பின்னால் போனாள். சுடலைமுத்துப் பிள்ளை பெருமூச்சு விட்டுக்கொண்டே வானத்தை நிமிர்ந்து பார்த்தார். நட்சத்திரங்கள் மறைந்து கொண்டிருந்தன. வெளுப்பு தெரிய ஆரம்பித்தது புகை மாதிரி. மணி நாலு இருக்கும். தூரத்தில் பால்க்காரன் சைக்கிள் மணிச்சத்தம் கேட்க ஆரம்பித்தது. எப்போதும் ஐந்து மணிக்கு எழுந்து விடுவார். இன்று இன்னுங் கொஞ்சம் சீக்கிரம் அவ்வளவுதான். வீட்டுக்குள் திரும்பினார். நாச்சியாருக்குப் பக்கத்திலேயே சுப்பு வெறுங்கையைத் தலைக்கு மடக்கி வைத்து உறங்கிவிட்டாள். அம்மாவை அண்டி சுமதியும் காந்தியும் கிடந்தார்கள். உள்ளே அரவமில்லாமல் போய் துண்டை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு கதவை மெதுவாகச் சாத்திவிட்டு ஆத்துக்குக் கிளம்பினார் சுடலைமுத்துப் பிள்ளை.

அந்த எட்டு வீட்டு வளவில் அவருடைய வீடுதான் சிறியது. ரெண்டே தட்டுதான். ஏழு வீடுகளை ஒன்றுபோல கட்டி விட்டு மீதி இருந்த இடத்தைச் சும்மா விடுவானேன்னு கட்டியதுபோல இருக்கும். குறுகிய அடுக்களையும், நீண்ட கோவணத்துணி போன்ற அறையும்தான் வீடு. சுடலைமுத்துப் பிள்ளை இந்த வீட்டுக்கு வந்து பதினேழு பதினெட்டு வருசம் ஆகிறது. நாச்சியார் ஒரு வயசாயிருக்கும்போது மீனாட்சிபுரம் புளியந்தோப்பு தெருவிலிருந்து மாற்றி வந்தார். அப்போது எல்லாமே மாற்றம்தான். அவர் முதலில் வேலை பார்த்த வேலுச் செட்டியார் ஏதோ பேசிவிட்டாரென்று அவரிடம் சொல்லாமல் கொள்ளாமலேயே ஆனா பானா முத்தையா செட்டியாரிடம் வந்து சேர்ந்துவிட்டார். வேலுச்செட்டியாரும் முதலில் அவர் கடைக்கு வேறு ஆள் கணக்கெழுதப்

போட்டு வீறாப்பு காண்பித்தாலும், கணக்கு சோபிக்கவில்லை. சுடலைமுத்துப் பிள்ளையின் நெளிவு சுளிவு வரவில்லை. மறுபடியும் ஆள்விட்டு கூப்பிட்டுவிட்டார். ஆனால் சுடலைமுத்துப் பிளளை, "நல்ல மாட்டுக்கு ஒரு சூடுனு உன் முதலாளிட்ட சொல்லும்வேய்" என்று வந்த ஆளிடம் சொல்லி அனுப்பிவிட்டார். அப்போதுதான் வீடும் மாறி வந்தது. குறுக்குத் துறையில் அவருடைய பால்ய நண்பரும், தூரத்து உறவினருமான வேலாயுதம் பிள்ளையின் வளவில் வந்து குடியேறினார். குடியேறும்போது வாடகை இருபது ரூபாய். இப்போது நூற்றிப் பத்து ரூபாய் கொடுக்கிறார். இன்னும் பதினைந்து சேர்த்து நூற்றிருபத்தைந்தாகக் கேட்கிறார் வேலாயுதம் பிள்ளை. இன்னமும் அதைத் தள்ளிப் போட்டுக் கொண்டேயிருக்கிறார் சுடலைமுத்துப் பிள்ளை. போனமாசம் வாடகை கொடுக்கும்போதும்கூட கடுமையாகப் பேசிவிட்டார் வேலாயுதம் பிள்ளை.

"நம்ம பழைய சேக்காளியாச்சே... நாணயஸ்தன்னு நம்பித்தான் வீட்டை ஒமக்கு விட்டேன். நீரு இப்படி எத்துவாளித்தனம் பண்றதா இருந்தா இப்பவே வேற வீடு பாத்துக்கிடும்... எனக்கு ஆட்சேபணையில்லை. நீரு போனா எரநூறு ரூபா தரதுக்கு ரெடியா இருக்கு ஆளு... ஒம்மகிட்ட நூத்தி இருபத்தைஞ்சு ரூபாய்க்கு நான் தொண்ணார வேண்டிருக்கு... இதான் கடைசி... பின்னால எம்பேர்ல வருத்தப்படாதீரும்..."

சுடலைமுத்துப் பிள்ளை பதிலேதும் சொல்லாமல் எல்லாவற்றுக்கும் ஞானச் சிரிப்பொன்றை வேலாயுதம் பிள்ளையிடம் தந்துவிட்டுப் போனார்.

வேலாயுதம் பிள்ளை சொல்வது உண்மை. வீடு இப்போது காலி பண்ணினால் கூட காலையிலேயே ஆயிரம் ரூபாய் அட்வான்சும், எரநூறு ரூபாய் வாடகையும் தருவதற்கு தயாராய் இருக்கிறார்கள். ஆனால் சுடலை முத்துப் பிள்ளைக்கு நூற்றிருபத்தைந்து ரூபாய்க்கே யோசிக்க வேண்டியதிருக்கிறது. எந்தச் செலவைக் குறைத்து எப்படி வரும்படியைப் பெருக்க தெரியவில்லை. கணக்குப் பிள்ளை உத்தியோகம் என்ன தந்துவிட முடியும். கூன் விழுந்த முதுகினால் அவருடைய நடைதான் மாறிவிட்டது. வாழ்க்கையில் எந்த மாற்றமுமில்லை. எப்போதாவது வெளியூர் போகிற சமயங்களில் ஆசைப்பட்டு வாங்குகிற லாட்டரிச் சீட்டுகளும் இதுவரை அவர் மீது கருணை வைக்கவில்லை.

வீட்டில் சுப்புவும் பிள்ளைகளும் பீடி சுற்றினார்கள். அது பல முக்கிய செலவுகளைச் சரிக்கட்ட உதவியது. நாச்சியார் பள்ளிக்கூடம் முடித்ததும்

ஒரு வருசம் போல் சும்மாயிருந்து விட்டு அவள் கூட்டாளி கூட டவுணுக்குப் போய் டைப்ரைட்டிங் படிக்கிறாள். பிள்ளைகளும் சுப்புவும் நீளமான அந்த அறையில் படுத்துக்கொள்ள, சுடலைமுத்துப் பிள்ளைக்கு எப்பவும் அடுக்களைதான். ராத்திரி கடையடைத்து வர பன்னிரண்டு மணியாகிவிடும். வந்து சுப்பு சொல்லும் வீட்டு விசயங்களைக் கேட்டுக் கொண்டே தண்ணி ஊத்தின சோறைச் சாப்பிட்டுவிட்டு, அடுக்களை நடைப்படியில் தலையணையைப் போட்டு ஜமுக்காளத்தை விரித்து,

“ஙப்பா... ஈசுவரா... ஞானபண்டிதா...” என்று பெருமூச்சு விட்டு படுத்ததும் உறங்கிவிடுவார். அதிகாலையில் எழுந்து ஆற்றுக்குப்போய் குளிக்கும்போது சமூக விசாரங்களைப் பேசிப் பகிர்ந்து கொண்டு நிதானமாக ஏழு மணிக்கு வீட்டுக்கு வந்து அரக்கப்பரக்க எட்டு மணிக்குக் கடை திறக்க ஓடுவார். இப்படித்தான் ஓடிக் கொண்டிருக்கிறது அவருடைய வாழ்க்கைக் கடிகாரம் சீராக. அவரே சொல்வது போல,

“வெள்ளக்காரன் காலத்து சாமான்தாய்யா சாமான்னு சொல்லலாம்... ஒரு கொறை சொல்ல முடியுமா... ஏதாச்சும் ரிப்பேருன்னு உண்டுமா... இந்த வாச்சு கிட்டத்தட்ட முப்பது வருசமா எங்கையில் கெடக்கு, நான் இத முக்கூடல் பாய் ஒருத்தங்கிட்ட வாங்கினேன். அவன் வாங்கி எத்தன வருசமாச்சோ... இன்னம் ஒரு சுணக்கமில்லாம ஓடிட்டிருக்குன்னா பாருங்களேன்...” அந்த வாழ்க்கை இப்போது கொஞ்ச நாளாக மக்கர் பண்ணுகிறது.

நாச்சியார் எப்போதாவது அவளுடைய கூட்டாளி மகா லெட்சுமி இல்லாமல் டைப்படிக்கப் போவாள். என்றாலும் இன்று போல ஆள் நடமாட்டமே இல்லாமல் இருந்ததில்லை. மத்தியானம்தான் டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டில் அதிக கூட்டமில்லாமல் இருந்தது என்பதால் அவர்கள் இரண்டு பேரும் அந்த நேரத்தை எடுத்துக் கொண்டார்கள். இன்றைக்கு என்னவோ வெயில் கொடூரமாயிருந்தது. கொஞ்ச தூரம் நடந்து வருவதற்குள் அவளுக்கு வியர்த்து ஒழுகியது. அவள் எதையும் கவனிக்கவில்லை. விறுவிறுவென்று நடந்தாள். இயல்பிலேயே பயந்த சுபாவம். அம்மாவின் கட்டுப்பாடுகள் வேறு அவளை மிகுந்த தயக்கம் கொள்ள வைத்தது. ஒரு தடவை நிமிர்ந்து சாலையில் யாரும் இல்லை என்பதைப் பார்த்ததும் அவளறியாமல் பயம் முளைத்தது. திரும்பி வீட்டுக்குப் போய்விடலாமா என்று நினைத்தான். ஆனால் அதற்கு மாறாக குனிந்த தலை நிமிராமல் அவள் பாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தாள். திடீரென கண்களை அடைத்த மாதிரி மருதமரத்தின் பின்னாலிருந்து ஒரு ஆள் முன்னால் வந்து நின்றான்.

அவளுக்கு நேரே குறுக்கே ஒரு கணம் என்ன செய்வதென்றே தெரியவில்லை. நிமிர்ந்து பார்த்தாள். நெஞ்சு தடதடவென அடித்தது. அடிவயிறு குழைய ஆரம்பித்து சுண்டி விட்டமாதிரி வலி பரவியது. தடிமனாய் கறுப்பாய் மயிரடர்ந்த உடம்புடன் ஒருவித கிறக்கமான கண்களுடன் அவன் நின்றான். ரெண்டு மூணு நாள் எடுக்காமல் விட்டுப் போன கழனித் தண்ணீர் மாதிரி புளிச்ச வாடை குபிரென்று முகத்தில் வீசியது. அவள் விலகி நடக்க யத்தனித்த போதுதான் அது நடந்தது.

அவன் திடுமென அவளுடைய கையைப் பிடித்திழுத்து கட்டிப் பிடிக்க முயற்சி செய்தான். அவள் அலறினாள். வயிறு கலங்கி வெளிக்கி வந்து விடும்போல இருந்தது. என்ன நடக்கிறது என்றே புரியவில்லை.

“என்ன விட்ரு... என்ன விட்ரு... காப்பாத்துங்க...” என்று கதறினாள். முகம் கோணலாகி கண்களை மூடிக்கொண்டு அவனிடமிருந்து பிடுங்கிக் கொள்ளப் போராடினாள். ஒருகணம் அவள் கன்னத்தில் அவன் மீசையோ உதடோ பட்ட மாதிரி இருந்தது. கையிலிருந்த புத்தகங்கள் எங்கேயென்றே தெரியவில்லை. அவள் உதறினாள். அவன் அவளை வயக்காட்டுப் பக்கமாக இழுத்தான். திடீரென பிடி தளர்கிற மாதிரி இருந்தது. அவனைப் பிடித்து ஒரு தள்ளு தள்ளி விட்டு திரும்பி வந்த பாதையில் கதறிக் கொண்டே ஓடினாள். கண்ணீர் வழிந்து கொண்டே வந்தது. பின்னால் அவன் துரத்தி வருகிற மாதிரி நினைத்துக் கொண்டு ஓடினாள். அப்போதுதான் சாலையில் தோன்றிய ரெண்டொரு பேரும் அவ்வளவு பெரிய பெண் அழுது கொண்டு ஓடுவதைப் பார்த்து ஒரு கணம் தயங்கி நின்றார்கள். அவள் கண்களுக்கு முன்னால் கறுப்பாய் திரை இறங்கிய மாதிரி இருந்தது. எதுவும் தெரியவில்லை. வீடு வந்து சேரும் வரை அவள் தன்னிலையில் இல்லை. வீட்டுக்குள் வந்து அம்மா மீது விழுந்தாள்.

அப்போதுதான் சாப்பிட்டு முடித்து ஏனங்களை அங்கணக் குழியில் ஒழித்துப் போட்டுவிட்டு சற்று கண்ணயரலாம் என்று படுத்தாள் சுப்பு. மேலே வந்து விழுந்த நாச்சியாரைப் பார்த்ததும் பதறிப்போனாள்.

“நாச்சியாரு... என்ன என்ன என்னம்மா...”

நாச்சியாரால் பேசவே முடியவில்லை. உடம்பெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தது. பேச வாய் திறந்த போதெல்லாம் அழுகை பொங்கியது. ஏங்கி ஏங்கி அழுதாள். அம்மாவுக்கும் அழுகை வந்தது. நல்ல வேளை மத்தியான நேரமாதலால் வளவில் எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். நடமாட்டம் இல்லை. ரொம்ப நேரம் கழித்து நடந்ததை அழுதுகொண்டே சொன்னாள் நாச்சியார். கேட்டதும்

அம்மாவுக்கு கோபமும் ஆத்திரமும் பொங்கியது. வாய்க்கு வந்தபடி வைதாள்.

“திமிரெடுத்த பய பேதியில போக... கொள்ளைல போக அவங் குடும்பம் வெளங்காம போக... அவங்கையில பாம்பு பிடுங்க...”

உடனே பக்கத்து வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த சோமுவை எழுப்பி, போய் சுடலைமுத்துப் பிள்ளையைக் கூட்டி வரச் சொன்னாள். ரொம்ப அர்ஜண்ட் ஒரு நடை வந்து உடனே போயிரலாம் என்று சொல்லச் சொன்னாள்.

ஏனெனில் அவ்வளவு சாமானியமாய் சுடலைமுத்துப் பிள்ளை கடையைவிட்டு எழுந்து வருகிறவரில்லை.

ஆனால், சோமு சொன்னதும் சுடலைமுத்துப் பிள்ளை கிளம்பி விட்டார். வீட்டுக்கு வந்ததும் வாசல் கதவை அடைத்துவிட்டு வந்து அவருக்கு விஷயத்தைச் சொன்னாள் சுப்பு. அப்போது எல்லாவற்றையும் கேட்டுவிட்டு,

“அவள் முன்னாடி அந்தப் பயலை பார்த்திருக்காளா..”

“இவுக பேசுதப்பாரு... எவனோ ரவுடிப் பய... ரவுடித்தனம் பண்ணிருக்கான். குறுக்கு விசாரணை பண்ணுதாக பட்டுனு போயி போலீசுல எழுதி வைக்கயதுக்கு இல்லாம...”

“ஆமா நீ அநேயம் தெரிஞ்சவ... போலீசுக்குப் போனாலே இந்தக் கேள்வியெல்லாம் கேப்பான்... அதோட நீ சொல்லுதப்பாத்தா வடக்குத் தெரு பயக மாதிரி தெரியுது... அவங்க எனத்து பெரியாளைப் பாத்து சொல்லி கண்டிக்கச் சொல்வோம்... நாம போலீசுகீலீசுன்னு போனா நாளைப் பின்னயும் வந்து வம்புதும்பு பண்ணுவானுக... நான் கடைய சீக்கிரம் முடிச்சிட்டு வாரேன்... பிள்ளையை பாத்துக்கோ... ஒண்ணும் பயப்பட வேண்டாம்... வளவுல யாருட்டயும் சொல்லாண்டாம் தெரிஞ்சிதா...” என்று நெற்றியைத் தடவிக் கொண்டே சொன்னார். சுப்புவும் அவர் சொன்னதை யோசித்துப் பார்த்து அடங்கினாள். ஆளால் புலம்பிக் கொண்டே இருந்தாள். மறுபடியும் நாச்சியார் சுமூகமாக இரண்டு நாட்களானது. வளவில் கூட,

“என்ன நாச்சியார் ஒரு மாதிரி இருக்கா...” என்று விசாரித்தார்கள். சுப்பு ஏதோ பதில் சொல்லி சமாளித்தாள். அத்துடன் டைப் போவதை நிறுத்தி விட்டாள். வீட்டில் அடிக்கடி சுவரை அல்லது உத்திரத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டே இருந்தாள். கலகலப்பு இல்லை.

ஒரு வாரத்தில் எல்லாம் சரியாகி விடும் போலிருந்தது. ஆனால் அன்று ராத்திரிதான் அலறிக் கூப்பாடு போட்டது. வளவே திரண்டு விட்டது. ஆளுக்கொரு அபிப்ராயம் சொன்னார்கள். அதற்கப்புறம் இந்தப் பத்து நாட்களில் இது நாலாவது தடவை. மறுநாள் சுப்பு நாச்சியாரைக் கூட்டிட்டு எசக்கியம்மன் கோவிலுக்குப் போய் மந்திரிச்சி திருநீறு பூசிவிட்டு வந்தாள். அதற்கப்புறமும் சரியாகவில்லை. பரமசிவம்தான் ஆத்தில் குளித்துக் கொண்டிருக்கும் போதும் சுடலைமுத்துப் பிள்ளையிடம்,

“ஏன் அண்ணாச்சி வச்சிகிட்டே இருக்கீக... இந்த மாதிரி பிரச்னை யெல்லாம் வளரவிடக் கூடாது... பின்னால ஆபத்து... இப்பத்தான் நம்ம ஊர்ல நல்ல டாக்டர்கள் இருக்காங்களே... நீங்க கொண்டு போயி காமிங்க அண்ணாச்சி” என்றான்.

சுடலைமுத்துப் பிள்ளை அந்த மாதச் சம்பளத்துடன் இருநூறு ரூபாய் அட்வான்ஸ் வாங்கிக் கொண்டு நாச்சியாரை மனநல மருத்துவரிடம் கூட்டிக் கொண்டு போனார். அவர் எல்லாவற்றையும் கேட்டார். கேட்டு விட்டு சில ஆலோசனைகளையும் சில மருந்துகளையும் எழுதிக் கொடுத்தார். மருந்து சாப்பிட ஆரம்பித்த பிறகு நாச்சியார் நன்றாகத் தூங்கினாள். நன்றாகச் சாப்பிட்டாள். பத்துப் பதினைந்து நாட்களுக்கு எந்தப் பிரச்சினையுமில்லை. அப்புறம் மறுபடியும் ஆரம்பித்து விட்டது. இப்போது முன்பிருந்ததை விட வேகமாக இருந்தது. எழுந்து ஓட முயற்சி செய்தாள். அடுத்த மாதமும் அட்வான்ஸ் வாங்கிக் கொண்டு மருத்துவரைப் போய் பார்த்தார். அவர்,

“வீடு மாத்திட்டீங்களா...”

“இல்ல சார்...”

“நாந்தான் போன தடவையே சொன்னேன்ல... நல்லா குணமாகிற வரைக்கும் அந்த ஏரியாவுலேயே இருக்கக் கூடாது... வேற வீடு மாத்துங்க... இல்லைன்னா வேற வெளியூர் அனுப்பி வைங்க... வெறும் மருந்து மாத்திரையால மட்டும் கொணமாகாது... என்ன தெரிஞ்சிதா...” என்று சலிப்புடன் சொன்னார்.

உடனே தீவிரமாக வீடு பார்க்க ஆரம்பித்தார் சுடலைமுத்துப் பிள்ளை. பார்க்கிறவர்களிடம், அவர் கடைக்கு வருகிற ரெகுலர் கஸ்டமர்களிடம்,

“அண்ணாச்சி ஒங்க ஏரியாவுல ஒரு நூறு நூத்தம்பதுல ஒரு வீடு இருந்தா பாருங்களேன்... கொஞ்சம் அவசரம்...” என்று சொல்லி வைத்தார். வீடு கிடைப்பது அவ்வளவு சுலபமா.

வீட்டில் நாச்சியார் தூக்க மாத்திரை கொடுத்தாலொழியத் தூங்குவதில்லை. முகமெல்லாம் கறுத்து, கண்களுக்குக் கீழே கறுப்பாய் வளையமிட்டு எலும்பாகிப் போனாள். பகலிலும் இரவிலும் கத்தலும் கூப்பாடும் அதிகமாகி விட்டது. சுப்புவும் சுடலை முத்துப் பிள்ளையும் எல்லாக் கோயில்களுக்கும் நேர்ந்து விட்டார்கள். எல்லா வைத்தியமும் செய்து பார்த்தார்கள். ஒரு நாள் கையில் கிடைத்த சாமான்களைத் தூக்கி ஆட்கள் மேல் எறிகிறாள் என்று அவள் கைகால்களைக் கட்டிப் போட்டிருந்தார்கள். வீட்டில் பிரச்சினை அதிகமானது. அத்தனை வருடங்கள் கழிந்த பிறகு சுடலைமுத்துப் பிள்ளை சுப்புவை அடிக்கவும், சுப்பு சுடலைமுத்துப் பிள்ளையை கையாலாகாதவன் என்று ஏசவும் ஆகிப்போனது.

37. சித்திரக்குள்ளர்களின் கலகம் ஒரு வரலாற்றுக் குறிப்பு

சூரியனின் அதிவிநோத சுழற்சியில் இப்பக்கம் இருந்த பூமியின் மனிதர்கள் வெப்பம் தாளாமல் மீன்களைப்போல வாயைத் திறந்து திறந்து மூடிக் கொண்டிருந்த கோடைக்காலம். காற்றை ஊதி நெருப்பை அணைக்க சித்தம் கொண்டனர் மனிதர்கள். எல்லா வீடுகளிலிருந்தும் மின்விசிறிகள் கீக்கீச் என்ற சப்தத்துடன் காற்றை பெருக்கித் தள்ளின. ஆனால், எல்லாமே வேறுவிதமாய் நடக்கும்படியானது பாட்டையாவால்தான். ஊர் பேரில்லாத பாட்டையா. அவர்தான் இருளின் கயிற்றில் கழுத்து சுருக்கிடப்பட்டிருந்த அந்த நகரத்திற்கு தெற்கே பெருங்கொண்ட மலைகளிலிருந்து இறங்கி பேரப்பிள்ளைகளைப் பார்க்க வந்திருந்தார். கூடவே சிடுசிடுத்த ஆச்சியும்.

நகரம் இரும்பு வலைகளால் பின்னப்பட்ட பெரிய கூண்டாக மாறியிருந்தது. காங்கிரீட் கட்டடங்கள் யாவும் விரக்தியில் வானத்தை நோக்கி விரைத்து நின்றன. சாவின் கருமை சூழ்ந்து மனிதர்கள் தலைகளைத் தோள்களில் புதைத்துக்கொண்டு அரசாங்கத்தின் அச்சுப் பிரதிகளாய் அலைந்தனர். நகரத்திற்குள் சாதாரணமாக அனுமதியின்றி யாரும் நுழையவும் வெளியேறவும் முடியாது. ஆனால், கோடை விடுமுறைக் காலம் மட்டும் அந்த விதிமுறைகள் கொஞ்சம் தளர்த்தப்பட்டன. அப்போதுதான் பாட்டையா வந்திருந்தார். அவரால்தான் விளைந்தது இந்த ஒழுங்கீனம் என்று சரித்திர ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். சித்திரக்குள்ளர்களின் ரகசிய உளவுப் படையினரால் பாட்டையா விலைக்கு வாங்கப்பட்டு மூளைச்சலவை செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டதற்கு வலுவான சான்றாதாரங்கள் அரசாங்கத்தின் கைவசம் இருப்பதாக டெலிவிஷன், ரேடியோ செய்திக் குறிப்பு பேசியது.

பாட்டையா ஊருக்குள் பஸ்ஸில் வந்திறங்கியபோது, பஸ்ஸின் பின்னால் வெளிச்சக் கோடுகள் மிதந்து வந்ததை ஜனங்கள் பார்த்திருக்கிறார்கள். பின்பு ஒருநாள் குழந்தைகள் அதைப் பற்றிக் கேட்டபோது அது அவர்களின் மூதாதையரின் இதயங்கள் எரிந்த தடங்கள். அதுதான் அவரை இங்கே கூட்டி வந்தது என்று கூறினார். பாட்டையா அவருடைய எஞ்சினியர் மகன் வீட்டுக்குத்தான் விருந்தாளியாய் வந்திருந்தார் என்றாலும் நகரத்திலுள்ள குழந்தைகள்

எல்லாம் அவர் பின்னாலேயே அவர் சொல்லும் கதைகளின் வசீகரத்தால் அலைந்தனர்.

பாட்டையாவின் தாடி கால்முட்டு வரை நீளமானது. சித்திரக் குள்ளர்களின் தாடிபோல. வெண்மையான மயிருக்குள்ளே பதுங்கியிருந்த ரகசியங்கள் குழந்தைகளிடம் குசுகுசுக்கும். அந்த குசுகுசுப்பு புரியாத பெரியவர்கள் அதிருப்தியின் நாக்கை சுழட்டி முணுமுணுத்தார்கள். குழந்தைகள் அறியும் அந்த பாஷை. குதூகலத்துடன் அதைக் கேட்டுச் சிரிப்பார்கள். முதலில் தாடி எப்படிப் பேசுகிறது என்று புரியவில்லை. அப்புறம்தான் தாடிக்குள்ளிருந்து சித்திரக்குள்ளர்களின் முகங்கள் தெரிந்தன. பாட்டையாவுடன் ஒளிந்து மறைந்து வந்திருந்தார்கள் அவர்கள். காடு வனாந்திரங்களைச் சுற்றிக் காண்பிப்பார்கள் சித்திரக்குள்ளர்கள். பிள்ளைகள் பாட்டையாவின் வயிற்றில் உட்கார்ந்திருப்பார்கள். பாட்டையா பலமாக மூச்சு இழுத்து விடும்போது பிள்ளைகள் தடுமாறி வனாந்திரத்திற்குள் விழப் பார்ப்பார்கள். அப்போது சித்திரக்குள்ளர்கள்தான் காப்பாற்றுவார்கள். அவர்களுடைய தாடி வளர்ந்து கயிறாகி அவர்களைக் கீழே விழாதபடிக்கு பார்த்துக்கொள்ளும்.

சித்திரக்குள்ளர்கள், தான்தோன்றிச் சுனைகளுக்கும் ஊற்றெடுத்துப் பொங்கும் அருவிகளுக்கும், அநாதியான காட்டுக் கொடிகள், பூக்கள் அடர்ந்த குளங்களுக்கும் கூட்டிப் போவார்கள். நூற்றாண்டுகளாய் சலனமற்றிருக்கும் குளத்தைக் கண்டதும் சித்திரக்குள்ளர்களின் கண்கள் திடீரென மீன்களென குளத்து நீரில் குதித்து நீந்த, குழந்தைகள் சந்தோஷத்தில் கும்மரிச்சம் போட்டன. சித்திரக்குள்ள மீன்கள், மீன்களின் இளவரசியைக் கூட்டிவர மின்னல் வெட்டியது. மின்னலின் வழியே வந்திறங்கிய ராஜகுமாரன், மீன் இளவரசியைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான். எவ்வளவோ முயற்சி செய்தும் விடுவிக்க முடியவில்லை. இளவரசியும் கண்களில் கண்ணீர் பொங்க குழந்தைகளுக்கும் குளத்திலிருந்து வெளிவந்த சித்திரக்குள்ளர்களுக்கும் கையை ஆட்டி விடை கொடுத்துப் பறந்து போனாள். குழந்தைகளுக்கு வருத்தம்னா வருத்தம். அப்போது பெரும்புயலின் கர்ஜனை கேட்டது. பாட்டையாவின் வயிறு மடிந்து உயர்ந்து விட்ட குறட்டை, சித்திரக்குள்ளர்கள் ஏதோ விமானத் தாக்குதல் என்று பதறி வீட்டின் மூலைகளில், சந்து பொந்துகளில், இன்னமும் வெட்டப்படாமல் ஞாபகச் சின்னங்களாக இருந்த மரப்பொந்துகளில் ஓடி ஒளிந்தனர்.

ஆச்சிக்கு இதெல்லாம் பிடிக்காது. அவள் ஒவ்வொரு தடவை வீட்டைப் பெருக்கும்போதும் மூலைகளில் அடைந்து கிடக்கும்

சித்திரக்குள்ளர்களைச் சேர்த்து சுளகில் அள்ளி சாக்கடையில் கொட்டுவாள். அவளுக்கு வீடு சுத்தமாக இருக்க வேண்டும். அநாவசியமாய் எதுவும் இருக்கக் கூடாது. எல்லாம் சரியாக - மிகச் சரியாக இருக்க வேண்டும். அதிலும் ஒட்டுபோட்ட கலர்கலரான சட்டைகளைப் போட்டுக் கொண்டிருக்கும் சித்திரக்குள்ளர்கள் எதுக்கு? அநாவசியம். பிள்ளைகளின் மனசைக் கெடுத்து அவர்களை மந்திரப் பாதைகளில் அழைத்துச் சென்று விடுவார்கள். பாட்டையாவுக்கு என்ன தெரியும்.

ஆனால், ஆச்சி கொட்டிய சாக்கடையில் புழுக்களாக நெளியும் சித்திரக்குள்ளர்கள் என்ன குறளிவித்தை செய்வார்களோ, மறுபடியும் மூலைகளில் காத்திருப்பார்கள் குழந்தைகளுக்காக, லேசாய் சட்டைகளில் சாக்கடைச் சேறு படிந்திருக்கும். மறுபடியும் ஆச்சி பெருக்கும்போது இதே கதைதான். அலுத்துப்போன ஆச்சி சித்திரக்குள்ளர்களை விட்டுவிட்டு பெருக்க ஆரம்பித்தாள். இதற்குப் பிரதியுபகாரமாக ஆச்சிக்குச் சின்ன வயசில் பிரியமான ஆரஞ்சுவில்லை மிட்டாயை மணக்க மணக்கக் கொண்டுவந்து கொடுத்தனர் சித்திரக்குள்ளர்கள்.

சித்திரக்குள்ளர்கள் எங்கே பிறந்து, எப்படி வருகிறார்கள் என்று குழந்தைகளுக்கே தெரியவில்லை. மர்மமான இருளிலிருந்து புறப்பட்டு, விதவிதமான வர்ண ஒளிப்பாதைகளில் வந்திறங்கினார்கள். அவர்களுடைய வாழ்க்கை அநாதி காலந்தொட்டே அலாதியாய் இருந்தது. அரசாங்கத்தின் ஒடுக்குமுறைக் கூடங்களில் தங்கள் கற்பனையை நிரந்தரமாக இழந்த பெரியவர்களுக்கு அது புரியவேயில்லை. எப்போதும்போல புரியாதவைகளை புரியாமலே வைத்திருக்க மிகுந்த வைராக்கியத்துடன், மனசின் கதவுகளைப் பூட்டி சாவிகளைத் தொலைத்துவிட்டனர். ஆனால் குழந்தைகள் அப்படியில்லை. நர்சரி, கான்வெண்டுக்குப் போனாலும், மம்மி டாடி, ட்விங்கிள் ட்விங்கிள் லிட்டில் ஸ்டார், பாபா ப்ளாக்சிப், படிக்கணும் நல்லா படிக்கணும் நல்லா நல்லா படிக்கணும், டாக்டராகணும், எஞ்சினியராகணும், பணம் சம்பாதிக்கணும் என்ற பெரியவர்களின் சுமைகளைத் தாங்கும் கழுதைக் குட்டிகளாக மாறியிருந்தபோதிலும் அவர்களிடம் சித்திரக்குள்ளர்கள் சஞ்சாரிக்க பெரும் வெளியும் தோட்டமும் இருந்தன. பூக்களும் வண்ணத்துப் பூச்சிகளும் பறவைகளும் நிறைந்த தோட்டத்தில் சித்திரக்குள்ளர்களும் வண்ணத்துப் பூச்சிகளானார்கள். குழந்தைகள் கலர் கலரான வண்ணத்துப் பூச்சிகளைப் பிடித்து தங்களிடமிருந்த நூலினால் கட்டி

விளையாண்டார்கள். சித்திரக்குள்ளர்களுக்குச் சந்தோஷம். பூமி முழுவதையும் பூந்தோட்டமும், பறவைகளும், வண்ணத்துப் பூச்சிகளுமாக ஆகவேண்டுமென்ற கனவுகளைக் குழந்தைகளிடம் விதைக்கவே இவ்வளவு காடு வனாந்திரங்களைக் கடந்து வந்து எத்தனையோ அவமதிப்புகளுக்கும், அவமானங்களுக்கும் பிறகும் அவர்கள் குழந்தைகளுடன் இருந்தனர்.

பெற்றோர்கள், சித்திரக்குள்ளர்களைக் கண்டு பயந்ததே இதற்காகத்தான். குழந்தைகளைக் கெடுத்து குட்டிச் சுவராக்கி விடுவார்கள். எதுக்கும் பிரயோஜனமில்லாமல் செய்து விடுவார்கள். இந்த வாழ்க்கையில் வெற்றிகரமாக வாழ்வதற்கு வண்ணத்துப் பூச்சிகளோ, பறவைகளோ, தோட்டமோ, மலைகளோ, நதிகளோ தேவையில்லை என்று நினைத்தார்கள். எல்லாவற்றையும் புத்தகத்தில் பார்த்துக்கொண்டால் போதுமானது. சித்திரக்குள்ளர்களிடம் பழகியதிலிருந்து குழந்தைகள் வீட்டில், தரையில், சுவரில், ரோட்டில் பூக்களின், பறவைகளின், வண்ணத்துப் பூச்சிகளின் படங்களை விதவிதமாய் வரைந்து தள்ளினர். நகர மனிதர்கள் அதிர்ச்சியடைந்தனர். போக்குவரத்து ஸ்தம்பித்துவிட்டது. எவ்வளவோ முயற்சிகள் செய்து குழந்தைகளை இந்தக் கற்பனையிலிருந்து தடுக்க முனைந்தனர். ஆனால், குழந்தைகளும், சித்திரக்குள்ளர்களும் சுவரிலிருந்த பறவைகளோடு பறந்து சித்திரக்குள்ளர்களின் இருப்பிடங்களுக்கே போய் வந்தனர். வண்ணத்துப் பூச்சிகளின் மீதேறி காட்டுமலர்களின் வசீகரமான மணத்தை முகர்ந்துகொண்டு சூரிய ஒளி புகாத பிரதேசங்களுக்குள் பயமின்றி அலைந்தனர். பாறைகள் ஆயிரமாயிரம் வருசங்கள் நிஷ்டையிலிருந்து தன் இறுகிய உறுதியான உடம்பின் சாறாய் பதுக்கி வைத்திருந்த நவரத்தினக் கற்களை குழந்தைகள் கண்டெடுத்தனர். தட்டாங்கல் விளையாடவும், பாண்டி, பல்லாங்குழி விளையாடவும் வைத்துக் கொண்டனர். இரவில் உறங்கும்போது தலையணைக்கடியில் நவரத்தினங்கள், வர்ணக் கனவுகளைத் தந்தன. ஒளிரும் பூமி முழுவதும் மனிதர்களும் குழந்தைகளும் றெக்கைகளோடு அலைந்தனர். மேகங்களிலிருந்து மண்ணிற்கும், மண்ணிலிருந்து மேகங்களுக்கும் பறந்து திரிவதைக் கண்டு, முகத்தில் ஆனந்தப் புன்னகை தோன்றும் குழந்தைகளுக்கு. அந்தப் புன்னகை நகரம் முழுவதையும் ஒளிவெள்ளத்தில் மூழ்கச் செய்வதைக் கண்டு நகர மனிதர்கள் பயந்து நடுங்கி முகம் தெரியாத அரக்கனின் பிடியில் சிக்கியதைப்போல மிரண்டனர்.

குழந்தைகளுக்கோ வீட்டிற்கும் பள்ளிக்கூடத்திற்கும் போகவே

பிடிக்கவில்லை. எப்போதும் சித்திரக்குள்ளர்களின் கம்புக்கூட்டு கதகதப்பிலேயே இருக்க ஆசைப்பட்டனர். சித்திரக்குள்ளர்கள்தான் வற்புறுத்தி அனுப்பி வைத்தனர். எப்போது நினைத்தாலும் அவர்கள் சித்திரக்குள்ளர்களின் வசிப்பிடம் வந்து போக ஒரு மாயக்கம்பளம் தந்து மறைந்தனர். அந்த மாயக் கம்பளத்தில் ஏழுமலை, ஏழுகடல் தாண்டி தங்களுடைய வீடுகளுக்குச் சென்றனர் குழந்தைகள். மாயக்கம்பளத்தை எப்படியோ கண்டுபிடித்த பெரியவர்கள், ஆகா விபரீதம் விளைந்ததென அரசாங்கத்திடம் முறையிட்டனர். அரசாங்கம் ஒரே மாதிரியான போஸ்டாபீஸ் அச்சுமுகமாய் எல்லோர் முகத்திலும் கரிபூசிக் கொண்டிருந்த வேலையை ஒரு கணம் நிறுத்தி முறையீட்டைக் கேட்டது. உடனே டெலிவிஷன், ரேடியோவில் தண்டோரா போடப்பட்டது. சித்திரக்குள்ளர்களைப் பிடித்துத் தருபவர்களுக்கும், கொன்று சாட்சியாக சித்திரக்குள்ளர்களின் தாடியைக் கொண்டு வருபவர்களுக்கும் சன்மானமும் அரசாங்க உத்தியோகமும் தரப்படும். குழந்தைகள் பதறினர். குழந்தைகளின் பதட்டம் கண்டு மகிழ்ந்து கைகொட்டி ஆரவாரித்தனர் பெரியவர்கள். அரசாங்கம், தன் குடிமக்களுக்கு புதிதாக நவீன முறையில் வடிவமைத்த சொன்னபடி சவுக்கை வழங்கியது. குடிமக்களும் புதிய சவுக்கினால் தம் குழந்தைகளை மீண்டும் வசக்கத் தொடங்கினர்.

குழந்தைகளின் அழுகையொலி காடு, மலை, வனாந்திரங்களைத் தாண்டி சித்திரக்குள்ளர்களுக்கு எட்டியது. அவர்கள் உடனே விதவிதமான மலர்கள், வண்ணத்துப் பூச்சிகள், பறவைகள் எல்லாவற்றோடும் வந்து நகரை முற்றுகையிட்டனர். அணுகுண்டு, ஸ்கட், பேட்ரியாட் ஏவுகணைகளைக் கொண்டு போர் புரிந்து வெற்றிகளை ஈட்டியிருந்த பெரியவர்களுக்கு இந்த யுத்தத்தில் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அரசாங்க இயந்திரம் முடிந்தமட்டுக்கும் தன் நகலச்சு உருவங்களை உசுப்பியது. தார்க்குச்சிகளால் குத்தியது. வீராவேச கம்ப்யூட்டர் உரைகளை அச்சிட்டு லட்சக்கணக்கில் விநியோகித்தது. எதுவும் முடியவில்லை. அதிசயமான இசை எங்கும் வியாபிக்க எல்லோரும் வெறுமனே வேடிக்கை பார்க்கும் பொம்மைகளாயினர். சித்திரக்குள்ளர்களை, பறவைகளை, வண்ணத்துப் பூச்சிகளை நில் என்று சொல்லக்கூட நாதியில்லை. குழந்தைகளை பெரியவர்களிடமிருந்தும் நகலச்சுப் பிரதிகள் எடுக்கும் அரசாங்கத்திடமிருந்தும் மீட்டு நகரத்தை விட்டு வெளியேறும் பாதைகளில் ஊர்வலமாய் கூட்டிச் சென்றனர்.

நகரங்களையெல்லாம் தாண்டி இன்னமும் அறியப்படாத வனவனாந்திரங்களுக்குள், அபூர்வ இசை மீட்டும் அருவிகளுக்குள்,

ஆனந்தமான மலைகளுக்குள், பறவைகளுக்குள், வண்ணத்துப் பூச்சிகளுக்குள், பூக்களுக்குள் சித்திரக்குள்ளர்கள், குழந்தைகள் பின்தொடர போய்க் கொண்டிருக்கின்றனர்.

38. வியூகம்

மதுரையம்மாள் சொன்னதைக் கேட்டதும் செண்பகத்துக்கு சட்டென்று கோபம்தான் வந்தது. வீட்டுக்குள்ளே பழைய சேலையை விரித்து படுத்தமானக்கி அம்மாவைப் பார்த்து முறைத்தாள். வாசற்படியில் உட்கார்ந்திருந்த மதுரையம்மாளுக்கு மகளுடைய முகபாவம் இருட்டில் தெரியவில்லை. இப்போதெல்லாம் சாயங்காலமான மாதிரி தெரிவதற்குள்ளேயே ராத்திரி வந்துவிடுகிறது. பேரன்மார் ரெண்டு பேரும் தெருக்காட்டில் கும்மரிச்சம் போட்டுக் கொண்டிருந்த சத்தம் கேட்டது. தான் சொன்னதுக்கு எந்த பதிலும் வராமல் போகவே மறுபடியும் மதுரையம்மாள்,

“என்னட்டி சொல்லுத... வாயேன்... வெயிலுகந்தா வீட்டுக்குப் போயி அந்த துட்டியை கேட்டுட்டு வந்துருவோம்...” என்று சொன்னாள்.

உடனே செண்பகம், “மயிரைக் கேட்க போறா... துட்டி கேக்க போறாளாம்... துட்டி... இப்ப இவ துட்டி கேக்கலைன்னு அவுக சடைச்சிக்கிட்டு அலையுதாக...”

வெடிப்பாய் பேசியதைக் கேட்ட மதுரையம்மாளுக்கு ஒன்றும் புரியவில்லை.

“ஏன்ட்டி, இப்படி கொள்ள போற மாதிரி கத்துற... வேண்டான்னா நாய் மாதிரி கிட...” என்று சொன்ன மதுரையம்மாள் தலைமுடியை அவிழ்த்து ஒரு உதறி உதறி கொண்டை போட்டாள். உள்ளேயிருந்து எந்த சத்தமும் வராததால் வெறும் வாயை மென்றுகொண்டு கைவிரல்களால் தரையைத் தடவித் தடவி தூசி தும்புகளை எடுத்து வெளியே வீசிக் கொண்டிருந்தாள்.

செண்பகத்துக்கு அப்படிப் பேசிய பிறகு எரிச்சல் தணிந்தமாதிரி இருந்தது. யார் யார் மீதோ, எது எதுக்கோ எரிச்சல். அப்புறம் அப்படிப் பேசியிருக்க வேண்டாம் என்று கூட தோன்றியது. ஒருக்களித்துப் படுத்து வாசல் வழியே மங்கிப்போய்க் கொண்டேயிருக்கும் ஒளியைப் பார்த்தவாறே கிடந்தாள். மதுரையம்மாள் எதற்காகத் திடீரென்று வெயிலுகந்தம்மாள் வீட்டுக்குப் போய்வர வேண்டும் என்று சொன்னாள் என்பதும் செண்பகத்துக்குத் தெரியும்.

காலையில் மதுரையம்மாளிடம் அவள் வேலை பார்க்கிற அய்யர் வீட்டம்மாளிடம் ஒரு பத்து ரூபாய் கடனாக வாங்கிக் கொடுக்கச் சொல்லியிருந்தாள் செண்பகம். அம்மா மகளுக்கிடையில் இந்த மாதிரி

கடன் கொடுத்து கடன் வாங்குதல் சகஜமான காரியம்தான். முன்பு அது ஒரு சினிமா பார்ப்பதற்காகவோ அல்லது பிள்ளைகளுக்குத் தின்பண்டம் வாங்குவதற்காகவோ இருக்கும். ஆனால், இப்போது அதுவும் இந்த ஒரு மாதமாய் ஒரு இடத்திலும் தீப்பெட்டியாபீஸ் ஒழுங்காக ஓடவில்லை. ஒரு நாள் திறந்தால் ஒன்பது நாள் மூடிக்கிடக்கிறது. தீப்பெட்டி இறக்குமதி. இயந்திரத் தீப்பெட்டி சரக்கு கொள்முதல் இல்லாமல் கோடவுனில் தேங்கிவிட்டது என்று ஆளுக்கு ஆயிரத்தெட்டு காரணங்களைச் சொன்னார்கள். அவளும் ஒரு நாள் ஊர்வலமெல்லாம்கூட போயிட்டு வந்தாள். அவள் வேலை பார்த்த தங்கலெட்சுமி மேச் ஒர்க்ஸ் அடைத்துப் பதினைந்து நாட்களாகிவிட்டது. செண்பகமும் இந்தா திறந்துவிடும் என்று நம்பியே நாட்களைத் தள்ளியதோடு மட்டுமில்லாமல் இதைச் சொல்லி ஏண்ட இடங்களில் கைமாத்தும் வாங்கிவிட்டாள். இனி வாங்க இடமில்லை.

அவள் புருஷன் மாரியப்பன் தீப்பெட்டியாபீஸ் வேலை இனிமே சரிப்படாதுன்னு சித்தாள் வேலைக்கு கேரளாவுக்குப் போய்விட்டான். அவன் போயும் பத்திருபது நாட்களாகி விட்டது. ஒரு தகவலும் இல்லை. இங்கே வீட்டில் ரெண்டு நாளாக சரியான சமையலோ, சாப்பாடோ இல்லை. அரைவயிறு, குறை வயிறுதான்.

இவள் வீட்டு நிலைமையறிந்து மதுரையம்மாள் அய்யர் வீட்டிலிருந்து கொண்டுவந்து கொடுக்கிற மிச்சமிஞ்சாடிகளை வைத்து பிள்ளைகளின் வயிறு வாடாமல் பார்த்துக் கொண்டாள். மதுரையம்மாளும் சாப்பிட்டாளோ இல்லையோ தெரியவில்லை. யார் தயவும் வேண்டாமென்று தனியே ஒரு சிறிய குச்சி வீட்டில் இருந்தாள் மதுரையம்மாள். நாலு வீடுகளில் வேலை செய்து வாழ்க்கையை நகர்த்திக்கொண்டு வந்தாள். அவளும் இல்லையென்றால் செண்பகத்திற்குக் கஷ்டம்தான். அவளுடன் தீப்பெட்டியாபீஸ் வருகிற சேக்காளிகள் வேறு வேலைகளைப் பார்க்கப் போய்விட்டதாகச் சொன்னார்கள். எப்போது தீப்பெட்டியாபீஸ் திறக்கும் என்று யாருக்கும் தெரியவில்லை. ஆளாளுக்கு ஒரு பதிலும் அந்தப் பதிலுக்கு அவர்களே கேள்வியும் கேட்டுக் கொண்டார்கள்.

செண்பகமும் இந்த வாரம் பார்த்துவிட்டு அம்மாவைப் போலவே எங்காவது வீட்டு வேலை பார்க்கப் போக வேண்டியதுதான் என்று நினைத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு நினைவு தெரிந்து ஒரு நாளும் வீட்டில் வயிறு நிறையச் சாப்பிட்டதில்லை. எப்போதும் கண்டும் காணாமல் சாப்பாடு, பல நேரங்களில் அதுவும் கிடையாது. தன் பிள்ளைகளையாவது பசியிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்று

ரொம்பப் பிரயத்தனப்பட்டாள். மதுரையம்மாள் இன்னிக்கு ஒரு பத்து ரூபாய் வாங்கிட்டு வந்திருந்தால் ஒரு ரெண்டு நாளைக்குச் சமாளித்துவிடலாம். அம்மாவின் மேல் மறுபடியும் ஆத்திரம் வந்தது. பணம் கேட்டுச்சோ இல்லியோ இந்தக் கிழட்டுச் சனியன் என்று மனசுக்குள் வைதுகொண்டே.

“யெம்மா அய்யர் வீட்டுல பணங்கேட்டியா... இல்லைன்னா வேறெங்கியாச்சும் இருந்தா வாங்கிக் கொடுக்கக் கூடாதா?”

“ஏ... கீரை முண்டை கிடைச்சதெல்லாம் ஒங்க வாக்கரிசிக்கிதான கொண்டுவந்து கொட்டுதேன். இன்னமும் நம்பிக்கையில்லையே... ஆச்சியும் அய்யரும் எங்கேயோ ஊர்வழி போயிட்டாக... வீட்ல பிள்ளக மட்டும்தான் இருக்கு... அதான் ஏகதேசம் கெடைக்கிற சோறு வெஞ்சனம்கூட இன்னிக்கி கிடைக்கல...”

அம்மா சொல்லச் சொல்ல செண்பகத்துக்கு அழுகையும் ஏலாமையும் பொங்கியது.

“ஏந்தான் இந்த சென்மமெடுத்து இப்படி சீரழிதேனோ... பொறந்தப்பவே கொன்னு தொலைச்சிருக்கக் கூடாதா... ஏ... பாதகத்தி இப்படி என்னைய கொலமழிய வைச்சுட்டிய...”

“அடச்சீ கூறுகெட்ட மூதி... ஊர்ல உலகத்தில இல்லாத கஷ்டத்தை இவ கண்டுட்டா. வெளக்கு வைச்ச நேரத்தில ஒப்பாரி வைக்கிற... வீடு வெளங்காமப் போயிடும்... நாளக்கி எங்கியாச்சும் பத்து ரூபா புரட்டிக் கொடுத்துட்டு மறுசோலி பாக்கேன்... சரி... சரி... எந்திரிச்சி முகத்தை கழுவிட்டு... இந்த பயகளையும் கூப்பிடு... ஒரு எட்டு போய்ட்டு வந்துருவோம்...” என்று சொல்லிக்கொண்டே எழுந்து மதுரையம்மாள் வீட்டை ஒதுங்க வைக்கத் தொடங்கினாள்.

செண்பகத்திற்கு எழுந்திரிக்கவே மனசில்லை. வழிந்த கண்ணீரை புறங்கையினால் துடைத்தாள். அழுதது கொஞ்சம் ஆறுதலாய் இருந்தது. காலையில் சின்னவன் மீதி வைத்துவிட்டு நீச்சுத் தண்ணியைக் குடித்ததுதான். படுத்தே கிடந்ததில் தலை கிண்ணென்று பாரமாக இருந்தது. அசைக்கவே முடியவில்லை. உடம்பு லேசான மாதிரி கிடந்தது. சேலை இருப்பதே தெரியவில்லை. எழுந்திரிக்க வேண்டும் என்று நினைக்கும்போதே கஷ்டமாக இருந்தது. ஆனால், இன்னுங் கொஞ்ச நேரத்தில் பிள்ளைகள் வந்து விடுவார்கள், பெரியவனுக்கு விபரம் தெரிந்துவிட்டது. அமைதியாக முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு போய் விடுவான். ஆனால், சின்னவன் அழுது

ஆர்ப்பாட்டம் பண்ணி ஊரைக் கூட்டிவிடுவான். அவனுக்குத்தான் அவள் ரொம்ப பயப்பட்டாள்.

பிள்ளைகளின் சின்ன வயிறுகூட நிரப்ப முடியாமல் என்ன வாழ்க்கை. மனசு இத்துப்போய் விட்டது. மதுரையம்மாள் இப்படியெல்லாம் யோசிப்பதே கிடையாது. அவளிடமிருந்து எந்த நேரத்திலும் சோர்வான வார்த்தையையோ, புலம்பலையோ கேட்க முடியாது. எல்லாப் பிரச்சினைகளுக்கும் ரொம்பச் சுளுவான வழியொன்று வைத்திருப்பாள். ஆனால், செண்பகம் சிறு வயசிலிருந்தே எல்லாவற்றுக்கும் நூறு தரம் யோசித்தாள். பிறர் தன்னை தன் குடும்பத்தைச் சார்ந்தவர்களைக் குறைவாகப் பேசும்படி ஆகிவிடக் கூடாது என்பதில் அக்கறையாக இருந்தாள்.

அவள் சிறுபிள்ளையாயிருந்தபோது இதே வெயிலுகந்தம்மாளுடைய வீட்டிற்கு அம்மாவோடு போயிருந்தாள். அப்போது வெயிலுகந்தம்மாளுடைய மூத்த மருமகள் லட்சுமி தனது ஓரகத்தியிடம்,

“மதுரையம்மா வந்தா... சாப்பிடற நேரம் பார்த்துதான் வருவா... சாப்பிட்டுத்தான் போவா...” என்று சொல்லிக் கொண்டிருந்ததைச் செண்பகம் கேட்டுவிட்டாள்.

உடனே வந்து அம்மாவிடம் சொல்லிவிட்டாள். மதுரையம்மாள் அந்த ஏச்சு ஏசினாள். வெயிலுகந்தம்மாள் எவ்வளவோ சமாதானப்படுத்தியும் கேட்கவில்லை. மதுரையம்மாள் வெயிலுகந்தம்மாளுக்கு ஒண்ணுவிட்ட அக்கா என்பதால் மறுபடியும் இருவருக்குமிடையில் உறவு சரியாகிவிட்டது. இப்போது வெயிலுகந்தம்மாளின் மூத்த மருமகனின் தங்கச்சி மாப்பிள்ளை துபாயில் நோய்வாய்ப்பட்டு இறந்து போய் மூன்று மாதங்களாகிவிட்டது. அதைத்தான் போய்க் கேட்டுவிட்டு வருவோம் என்றாள் மதுரையம்மாள். செண்பகத்துக்கு குழப்பமாக இருந்தது.

அவள் எழுந்து உட்கார்ந்து தலைமுடியை உதறி கொண்டை போட்டாள். தரையில் விரித்திருந்த சேலையைச் சுருட்டி எடுத்துக் கொடியில் போட்டாள். எழுந்து நின்றதும் தலை சுற்றுவதுபோல இருந்தாள். சுவரைப் பிடித்தபடியே மெதுவாக அடுக்களையில் இருந்த அங்கணக் குழியில் முகம் அலம்பினாள். முகத்தில் தண்ணீர் பட்டதும், கொஞ்சம் தெளிச்சியாக இருந்தது.

அப்போது ஓவென்று அழுதுகொண்டே சின்னவன் வீட்டுக்குள் ஓடிவந்தான். பின்னாலேயே பெரியவனும் வந்தான்.

அடுக்களையிலிருந்து மதுரையம்மாள்,

“என்னாச்சு... ஏம்ல இந்த அவயம் போடுதீக...”

“அண்ணன் அடிச்சிட்டான்...” என்று அழுதுகொண்டே சொன்னான் சின்னவன். செண்பகம் ஏனென்றுகூட கேட்கவில்லை. சின்னவன் சொல்லி முடித்தவுடனேயே.

“யெம்மா எதுத்துவீட்டு மகேசுகிட்டே பொரி மிட்டாய் பிச்சையெடுக்காம்மா... அவன் உதுத்துப் போடுறத தரையில இருந்து எடுத்து திங்கான்...” என்றான் பெரியவன். அதற்கு மதுரையம்மாள்,

“...அதுக்கு போயி தம்பிய அடிச்சியாக்கும்... இந்த ரோச மயிரிலெல்லாம் ஒண்ணும் கொறச்சலில்லை...” என்று முணங்கினாள்.

செண்பகம் எதுவும் பேசாமல் சீப்பை எடுத்துத் தலைமுடியைச் சீவத் தொடங்கினாள். மறுபடியும் வெளியே விளையாடக் கிளம்பிய பயல்களிடம்,

“ஏல... எங்கயும் போயிராதீக... வாங்க கால் முகம் கழுவி தலையை சீவுங்க... ஒரு இடத்துக்கு போகணும்...”

கத்தினாள் மதுரையம்மாள், திடுக்கிட்ட மாதிரி நின்ற பயல்கள் உடனே உற்சாகமாகிவிட்டனர். செண்பகம் சேலைக் கொசுவத்தை அவிழ்த்து, பாவாடையை இடுப்பில் இறுக்கிக் கட்டி, கொசுவத்தைச் செருகினாள். ஏற்கெனவே ஈர்க்குச்சி உடம்பு இப்போது வயிறே இல்லாத மாதிரி சேலை குடைபிடித்துக் கொண்டிருந்தது.

மதுரையம்மாள் வீட்டைப் பூட்டி சாவியின் நூல் கயிற்றை முந்தானையில் முடிந்து கட்டினாள். இரவு நேரப்பவுடரையும், மினுக்கும் ஜிகினா லைட்டுகளையும் போட்டு நகரம் ஒப்பனை செய்ய ஆரம்பித்திருந்தது. செண்பகம் மிக மெதுவாக நடந்தாள். சின்னவன் அவள் கையைப் பிடித்தபடி வேடிக்கை பார்த்துக்கொண்டே வந்தான்.

வெயிலுகந்தம்மாள் வீடு இருக்கும் தெருவந்தபோது, செண்பகத்தின் நடை தளர்ந்தது. இப்படியே திரும்பிப் போய்விடலாமா என்றுகூட நினைத்தாள். முதன் முதலில் பிச்சை எடுக்கப் போகிற பிச்சைக்காரனின் தயக்கமும், வெட்கமும், துக்கமும், நிராதரவும் கலந்த முகபாவம் தனக்கு இருப்பதாக செண்பகம் நினைத்தாள். மதுரையம்மாளைக் கூப்பிட வேண்டும் என்று நினைத்தாள்.

ஆனால், அதற்குள் மதுரையம்மாள் வெயிலுகந்தம்மாளின் வீட்டுக்குள் பெரியவனுடன் நுழைந்து கொண்டிருந்தாள்.

39. குமாரபுரம் ரயில்வே ஸ்டேஷனில் ஓரிரவு

தன் அறையிலிருந்து வெளியில் வந்து நின்றார் ஸ்டேஷன் மாஸ்டர் நாராயணன். எதிரே இருண்டகாடு, காட்டிலிருந்து கிளம்பிவந்த குளிர்ந்த காற்று நரைத்த அவரது தலைமுடியில் பரவியது. அந்தக் காற்றின் சில்லிப்பை அவர் அனுபவித்தார். நிமிர்ந்து மூச்சை நன்றாக இழுத்துவிட்டார். ஸ்டேஷன் வெளிச்சம் தவிர வேறெங்கும் வெளிச்சத்தைப் பார்க்க முடியவில்லை. இருள் பூசிய வெளி. யாருடைய இசைக் குறிப்புகளுக்கோ ஏற்றமாதிரி பூச்சிகளின் ரீங்காரம் ஒரு சேர்ந்திசையின் சுரம் போல விட்டுவிட்டு ஒலித்துக் கொண்டிருந்தது.

கருங்கும்மென்றிருந்த வானத்தில் நட்சத்திரங்கள் பளிச்சென்று ஜொலித்துக் கொண்டிருந்தன. நாராயணன் நெட்டிமுறித்தார். திடீரென்று மின்சாரம் போய்விட்டது. அடிக்கடி இப்படி நடப்பதுதான். அப்போது வெளியிலுள்ள இருள் இன்னும் பயங்கர அழகுடன் அதிர்ந்து கொண்டேயிருக்கும். சற்று நேரத்திலேயே இருள் தன் குறைவான வெளிச்சத்தைக் கண்களுக்கு வழங்கிவிடும். நாராயணன் திரும்பிப் பார்த்தார். பாயிண்ட்ஸ்மேன் நடராஜன் பெஞ்சில் முடங்கியிருந்தார். பகலைவிட இரவு மட்டும் ஏன் இத்தனை கற்பனைகளையும், பயங்கரங்களையும் கொண்டுவருகிறது? இரவின் பின்னணியில்தானே பல புனைவுகளும் உயிர்களின் ஓய்வும் உறக்கமும் உற்பத்தியின் மூலங்களும் உருவாகின்றன. அதே இரவில் இங்கே குமாரபுரம் ரயில்வே ஸ்டேஷனில் வளைந்து நெளிந்து கிடப்பதெல்லாம் பாம்புகளாகத் தெரியும். பல சமயங்களில் பாம்புகளை அடித்திருக்கிறார்கள். சேடான்களை தேள்களையும், நட்டுவாக்காலிகளையும் அன்றாடம் அடிப்பார்கள். ஒரு தடவை ஸ்டேஷன் அறையில் நட்டநடுவில் ஒரு பாம்பு வந்து படுத்துக் கொண்டது. காட்டின் நடுவில் ஒளி வெள்ளமாகத் தெரிகிற ஸ்டேஷன் அனைத்துப் பூச்சிகளையும், பூச்சிகளைத் தின்பதற்காகப் பாம்புகளையும், பூரான்களையும், தேள்களையும் கண்சிமிட்டி அழைக்கிறது. நரிகளின் ஊளைச்சத்தம் விட்டு விட்டு ஒரு கணத்தில் மிக அருகிலும், மறுகணத்தில் மிகத் தொலைவிலும் கேட்கும். மற்றபடி வேறு எந்தத் தொந்தரவும் கிடையாது. எந்த வண்டியும் நின்று செல்வதற்கான திட்டம் இல்லாததால் பயணிகள் யாரும் வருவதும் கிடையாது. மிக அருகிலுள்ள கிராமமே சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில்தான்.

ஏகாந்தம். ஏகாந்தத்தின் சுருதி கூடி ஒரு நரம்பிசையின் லயத்தைப்போல மெல்லிய அதிர்வு அந்தச் சூழலில் இருக்கும். அங்கே பேசப்படும்

வார்த்தைகள் மிகக் குறைவு. அந்தக் குறைவான வார்த்தைகள் கூட அந்த லயத்தைப் போல இசைவுடன் வெளிவரும். கிழக்கிலிருந்து பரிசுத்தமான குருமலைக் காற்று. கணவாய் வழியாக வரும்போது சற்று வேகமாகவும், குளிர்ந்தும் வீசும். எல்லோரும் இந்த ஸ்டேஷனை தண்டனைக்குரிய ஸ்டேஷனாக நினைத்து பயந்தபோது இந்த ஏகாந்தத்துக்காகவே விரும்பிக் கேட்டு மாறுதல் வாங்கிக்கொண்டு வந்தவர் நாராயணன்.

நாராயணன் இருளின் சாம்பல் நிற வெளியை உற்றுப் பார்த்தார். திரும்பி ஸ்டேஷன் கட்டடத்தைப் பார்த்தார். பெரிய வித்தியாசம் ஒன்றும் தெரியவில்லை. அந்தக் காட்டிலிருந்த எத்தனையோ புதர்க்காடுகளில் இந்த ஸ்டேஷனும் ஒன்று. காட்டின் புதர்களில் வந்து அமர்ந்து செல்லும் எத்தனையோ தவிட்டுக் குருவிகளைப்போல அவரும் இந்தப் புதரில் அமர்ந்துகொண்டு காட்டைப் பார்க்கிறார். அவ்வளவுதான்.

யார் கண்டது இந்தக் காட்டில் என்னென்ன அதிசயங்களும், அற்புதங்களும், பயங்கரங்களும் இருக்கின்றனவோ. நட்சத்திரங்களின் ஒளி எந்த இடையூறுமின்றி இந்தக் காட்டின் மீது இறங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு வேளை அந்த ஒளியின் வழியாக சிறுவயதில் அவர் படித்த கதைகளில் உலவிய தேவதைகள் வந்து காட்டின் நடுவில் இறங்கியிருக்கலாம். அங்கேயுள்ள காட்டு முயல்களோடு விளையாடவும் செய்யலாம். அவர் உதடுகளில் புன்முறுவல் அரும்பியது.

மின்சாரம் உடனடியாக வருவதைப்போல தெரியவில்லை. வருவதாக இருந்தால் இதற்குள் வந்திருக்கவேண்டும். ஒரு சிகரெட் பிடிக்கலாம். அட அதற்கு முன்னால் ஒரு நல்ல தேநீர் குடித்தால் எப்படியிருக்கும். இப்படி நினைத்தவுடனேயே உற்சாகம் பிறந்தது. நடராஜனைக் கூப்பிட்டார். அவர்தூக்கக் கலக்கத்தோடே எழுந்து வந்தார்.

“ஒரு டீ போடுங்க நடராஜன்...”

“கொல்லம் பிளாக்காயிருச்சா... சார்...”

“ஆயிரும்... இன்னும் கொஞ்ச நேரத்தில் பிளாக் ஆயிரும்...”

எப்போதும் பாலும், சர்க்கரையும் தேயிலையும் ஸ்டேஷனில் ஸ்டாக் இருக்கும். எது குறைந்தாலும் டூட்டிக்கு வருகிற ஸ்டேஷன் மாஸ்டர்கள், பாயிண்ட்ஸ்மேன்கள் வாங்கிக் கொண்டுவந்துவிடுவார்கள். நடராஜன் கொட்டாவி விட்டுக்கொண்டே ஸ்டவ் பற்ற வைக்கப் போனார்.

வெளியில் கிடந்த பெஞ்சில் உட்கார்ந்தார் நாராயணன். திடீரென மனம் நிலை கொள்ளாமல் தவித்தது. அதுவரை இருந்த அமைதியில் புயல் வீசியதுபோல, மனசில் குழப்பம். திடீர் திடீரென இப்படி நிகழ்ந்தது. எல்லாம் நேற்றிலிருந்துதான். நண்பர் பாலுவிடமிருந்து வாங்கியிருந்த 'நள்ளிரவில் சுதந்திரம்' படிக்கத் தொடங்கிய பின்னர்தான். மனம் இளகி நெகிழ்ந்தது. கண்களில் அடிக்கடி கண்ணீர் ததும்பி நின்றது. அந்த நேரத்தில் யாராவது தொட்டால் கூட சரசரவென இறங்கிவிடும். அடிக்கடி, "சே... என்ன வாழ்க்கை" என்று கோபப்பட்டார். ஆத்திரப்பட்டார். வருத்தப்பட்டார். புத்தகத்தை மூடிவிட்டு அப்படியே எதிரே வெறித்தபடி உட்கார்ந்துவிடுவார். திடுமென உணர்வு வந்தது போல மீண்டும் படிக்கத் தொடங்குவார். இப்படியெல்லாம் நடக்குமா நடந்திருக்குமா என்ற சந்தேகம் தோன்றிக் கொண்டேயிருந்தது. நடந்திருக்கிறது என்ற ஆதாரபூர்வமான உண்மை பளார் பளாரென்று முகத்திலறைந்தது. இந்த இரவின் அமைதியும் குளிர்மையும்தான் அவருடைய கொந்தளிப்பை சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தது. இப்போதும் கூட இருளுக்குள் கூர்ந்து பார்த்து எதற்கோ விடை தேடிக் கொண்டிருந்தார். மனித மனத்தின் மர்மங்களுக்கான திறவுகோல் இந்தக் காட்டிற்குள்ளேயே கூட இருக்கலாம். அவரை அறியாமலேயே அவர் தன் சட்டைப் பையிலிருந்த வில்ஸ் பில்டர் பாக்கெட்டிலிருந்து சிகரெட்டை எடுத்து உதடுகளில் பொருத்தியபோது,

"சார் இந்தாங்க... டீ... ரொம்பச்சூடா இருக்கு... பாத்துக் குடிங்க..." என்று சொல்லிக் கொடுத்தார் நடராஜன்.

நாராயணனுக்கு தம்ளர் சூட்டைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. வாங்கி அப்படியே பெஞ்சின் மீது வைத்து விட்டு நிமிர்ந்தவருக்கு திக்கென்றது.

அவருக்கெதிரே ஒரு ஆள் நின்று கொண்டிருந்தான். இருளே உருவமாகி வந்ததைப் போல எதிரில் நின்று கையை நீட்டிக் கொண்டிருந்தான். நாராயணன் உண்மையில் பதறிப்போனார். வாய் தன்னையறியாமலே,

"நடராஜன்... நடராஜன்..."

என்று பதட்டத்துடன் அழைத்தது. டீ போட்ட பாத்திரங்களை கழுவிக் கொண்டிருந்த நடராஜன், அவர் குரலில் இருந்த பதட்டத்தை உணர்ந்தவர்போல ஒரு கம்பை எடுத்துக்கொண்டு ஓடி வந்தார். ஒரு வேளை பாம்பைப் பார்த்திருப்பார். அதுதான் கூப்பிடுகிறார் என்று நினைத்துக் கொண்டு வந்தவருக்கு, ஸ்டேஷன்மாஸ்டர் முன்னால் ஒரு ஆள் நிற்பதைப் பார்த்தவுடன் அவரும் அதிர்ந்து போனார். கையில் கம்பு

இருந்த தைரியத்தில்,

“யாருய்யா... நீ...”

என்று கத்தினார். எதிரே நின்றவன் பதில் பேசவில்லை. நீட்டிய கையையும் மடக்கவில்லை. காட்டிலிருந்து கிளம்பி வந்த சித்தர் மாதிரி தலைமுடி அடர்ந்து சடைபிடித்து, நெஞ்சு வரை வளர்ந்த தாடியும், கிழிந்த பேண்ட்டும் போட்டிருந்தான். இருளில் முகம் சரியாகத் தெரியவில்லை. ஆனால் படு கிழம். வற்றி உலர்ந்த சிவந்த திரேகம் அந்த இருளிலும் தெளிவாகத் தெரிந்தது. எண்பது எண்பத்தைந்து வயதிருக்கலாம். நிதானித்த நாராயணனும் உரத்த குரலில்,

“யாருய்யா நீ... எங்கே போகணும்...”

என்று கேட்டார். அதற்கும் அந்த ஆள் பதில் சொல்லவில்லை. எப்படி இவ்வளவு நேரம் நம் கண்களுக்குத் தட்டுப்படவில்லை. அடிக்கடி இந்த மாதிரி மனநிலை பிறழ்ந்தவர்களை ஸ்டேஷனில் பார்க்கலாம். தண்டவாளங்கள் வழியே இரவில் எந்த பயமுமில்லாமல் நடந்து போய்க் கொண்டிருப்பார்கள். நாராயணன் நடராஜனிடம் திரும்பி,

“டீ இருக்கா நடராஜன்...”

“இருக்கு சார்...”

“கொஞ்சம் கொடு இவருக்கு...”

நடராஜன் தண்டவாளங்களுக்கு அருகில் கிடந்த ஒரு பிளாஸ்டிக் டம்ளரை எடுத்து வந்து டீ ஊற்றிக் கொடுத்தார். அந்தக் கிழவர் அதை வாங்கிக்கொண்டு அருகிலிருந்த வேப்பமரத்தடியில் உட்கார்ந்தார். நாராயணன், அவரைப் பார்த்தபடியே பெஞ்சில் உட்கார்ந்து டீயைக் குடித்தார். நடராஜனும் நாராயணனுக்கு அருகில் நின்றுகொண்டு டீயை உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந்தார்.

“இவனை விரட்டி விட்ரணுமப்பா... இவம்பாட்டுக்கு இருந்தமானிக்கி ஏதாச்சும் டிரெயினில் விழுந்தான்னா... அப்புறம் பெறக்கிப் போட்டு நாமதான் காவல் காக்கணும்...”

என்று எல்லோரும் சொல்கிற வசனத்தை நாராயணனும் சொன்னார். நடராஜன் தலையாட்டினார். சட்டென விளக்குகள் எரியவும், அதற்கெனவே காத்திருந்ததுபோல பக்கத்து ஸ்டேஷனிலிருந்து அழைப்பு வரவும் சரியாக இருந்தது. நாராயணன் உள்ளே போனார்.

கொல்லம் வண்டி வருவதற்கு அனுமதி கொடுத்துவிட்டு சிகரெட்டைப்

பற்ற வைத்தார். மேஜையின் மீது 'நள்ளிரவில் சுதந்திரம்' விரிந்து கிடந்தது. மின் விசிறியின் காற்றுக்கும் வெளியிலிருந்து வீசும் காற்றுக்கும் பக்கங்கள் மாறி மாறி புரண்டு கொண்டேயிருந்தன.

அவர் சிகரெட்டை இழுத்து புகையை நெஞ்சு நிறைய நிறைத்து வெளியிட்டார். குடித்த டீக்கும் அந்தக் குளிருக்கும் இதமாக இருந்தது. வெளியில் வந்ததும் இயல்பாகத் திரும்பி அந்த வேப்பமரத்தைப் பார்த்தார். அங்கே அந்தக் கிழவர் இல்லை. மறுபடியும் பதட்டம் தொற்றிக்கொண்டது.

"நடராஜன், இந்த ஆளை எங்கப்பா..."

"தெரியலையே சார்..."

என்று பீடி புகைப்பதற்காக பின்பக்கம் போயிருந்த நடராஜன் சொல்லிக்கொண்டே வந்தார்.

"என்னப்பா தெரியலன்கிறே... பாரு... டார்ச் எடுத்துக்கிட்டு சுத்திகித்திப் பாரு..."

"சரி சார்..."

என்று சொல்லிய நடராஜன் டார்ச்சை எடுக்கப் போனார். நாராயணன் நடந்து சென்று தண்டவாளங்களுக்கருகில் சென்று இரண்டு பக்கங்களிலும் திரும்பித் திரும்பிப் பார்த்தார். எதுவும் தெரியவில்லை. நடராஜன் டார்ச்சை எடுத்துக்கொண்டு ஸ்டேஷனைச் சுற்றிலும் தேடினார்.

இதற்குள் கொல்லம் டிரெயின் அடுத்த ஸ்டேஷனை விட்டு தன் பிரயாணத்தைத் தொடங்கிவிட்டது. பக்கத்து ஸ்டேஷன் மாஸ்டர் கூப்பிட்டுச் சொன்னார். உடனே அந்த வண்டியை அடுத்திருந்த ஸ்டேஷனுக்கு அனுப்பத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்ட நாராயணன், அவற்றை முறையாக செய்து கொல்லம் வண்டியை அனுப்பிய பிறகு மீண்டும் அவர் கவனம் மாறியது. நடராஜன் எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்துவிட்டு அவனைக் காணவில்லை என்றார். மாயமாக வந்தது போலவே மறைந்துவிட்டார் போல. மேஜையிலிருந்த வரலாற்றின் பக்கங்கள் நாராயணனை அழைத்தன. அவர் மறுபடியும் விட்ட இடத்திலிருந்து படிக்க ஆரம்பித்தார்.

சற்று நேரத்திலேயே எழுத்துகள் சேர்ந்து குழம்பி ஒரு சுழலாக மாறியது. அவர் அந்தச் சுழலுக்கு வெளியில் நின்றுகொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். குமாரபுரம் ரயில்வே ஸ்டேஷனை பல வண்டிகள்

கடந்து சென்றன. எப்போது அந்தச் சுழலில் விழுந்தார் என்று அவருக்கே தெரியவில்லை. இப்போது சுழலே மாயமாகி மறைந்து விட்டது. அந்த மறைந்த சுழலின் வெளியில் நாராயணன் நடந்து கொண்டிருந்தார். வட்டவட்ட எழுத்துகளின் சுழல் பாதை வழியே காலத்தின் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தார்.

இப்போது பரபரப்பான ஒரு ரயில்வே பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்தார். பிளாட்பாரம் முழுவதும் அவ்வளவு கூட்டம். அவருடைய சர்வீஸில் இத்தனை கூட்டத்தை அவர் பார்த்ததேயில்லை. அவர் சிரமப்பட்டு கூட்டத்தை விலக்கி ஸ்டேஷன் அறைக்குள் நுழைந்தார். அங்கே அவருடைய ரிலீவர் புறப்படத் தயாராக இருந்தார். அவர் அறையை ஒரு முறை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு,

“சானி... பி... கேர்புள்... நிலைமை நேற்றிரவிலிருந்து கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருக்கிறது... கவனமாக இருங்கள்... எதிலும் தலையிட வேண்டாம்... ஓகே...”

என்று எச்சரித்தார். நாராயணனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஏன் என்னை சானி என்று அழைக்கிறார்? என் பெயர் நாராயணன் அல்லவா. அவருடைய யூனிபார்மிலுள்ள நேம் பேட்ஜை பார்த்தார். கே. சானிசிங் என்றிருந்தது. பதிவேடுகளிலும், அனைத்து பைல்களிலும் கே. சானிசிங் என்றே இருந்தது. அப்போது ஒருவர் ஸ்டேஷன் வாசலில் நின்றுகொண்டு,

“எக்ஸ்கியூஸ்மீ... மிஸ்டர்... சானிசிங்... வென் வில் த டிரெயின்... பிரம் லாகூர் அரைவ் கியர்?”

“சூன்... வெரி... சூன்...”

என்ற சானிசிங் திரும்பி பிளாக் இன்ஸ்ட்ருமென்டைப் பார்த்தார். லாகூரிலிருந்து வருகிற வண்டிக்கு அனுமதி ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருந்ததை அவருடைய ரிலீவர் சொல்லிவிட்டுப் போயிருந்தார். வண்டிக்கு முதல்மணி அடிப்பதற்காக பாயிண்ட்ஸ்மேன் அன்வர் பாட்சாவைத் தேடினார். அவனைக் காணவில்லை.

“அன்வர்... அன்வர்...”

என்று உரக்கக் கூவினார். அன்வர் ஸ்டேஷனுக்குள்ளேயேயிருந்த ஸ்டோர் ரூமிலிருந்து வெளியில் வந்தான். சானிசிங் ஆச்சரியத்துடன்,

“இங்கே என்ன பண்றே... போ... போய் வண்டிக்கு மணியடி...”

“சார்... அமர்சிங் சார்தான் இந்தக் கூட்டமெல்லாம் போகிற வரைக்கும்

நீ ஸ்டோர் ரூமிலேயே இருன்னு சொன்னார்... எல்லா இடத்திலும் கலவரமா இருக்கு... அதனால பத்திரமா இருன்னு சொன்னார் சார்...”

என்று பரிதாபமாகச் சொன்னான் அன்வர். அவன் முகம் வெளுத்திருந்தது, ஆனால் சானிசிங் அதையெல்லாம் கவனிக்கவில்லை.

“யாருய்யா... மடத்தனமா பேசற... இங்க வந்து யாராச்சும் ஏதாவது செய்ய முடியுமா... அதெல்லாம் ஊருக்குள்ளே... இது கவர்ன்மெண்ட் ஆபீஸ்... இன்னும் ரயில்வேயெல்லாம் பிரிட்டிஷ் கண்ட்ரோல்லதான் இருக்கு... ஒண்ணும் பயப்படாதே... நான் இருக்கேன்ல...”

என்றார் சானிசிங். வாயினால் சொல்லிவிட்டாலும் அவருக்குள்ளும் ஒரு பதட்டம் இருக்கத்தான் செய்தது. காலையிலிருந்தே அவர் கேள்விப்படுகிற செய்திகள் எதுவுமே நல்லதாக இல்லை. அரசியலின் சூதில் மக்கள் எல்லோரும் வெட்டுப்பட்டுக் கொண்டிருந்தனர். ஒருவனுக்கோ, ஒரு கூட்டத்துக்கோ இல்லை ஒரு நாட்டிற்கே பைத்தியம் பிடித்துவிட்டால் யார்தான் என்ன செய்ய முடியும்? இதுவரை அவர் கேட்ட செய்திகள் எல்லாம் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம்களைப் பற்றியே இருந்தன. கூட்டம் கூட்டமாக ஆடுமாடுகளை கசாப்புக் கடைகளில் வெட்டுவதைப்போல வெறி பிடித்த கூட்டம் வெட்டி எறிந்து கொண்டிருந்தது. இதுவரையிலும் சகோதரர்களாக இருந்தவர்கள் எப்படி இப்படி குரூரமாக மாறிப்போனார்கள்? மனித மனதின் ஆழ் இருளுக்குள் இருப்பதுதான் என்ன? ஒரு வேளை அன்வர் இன்றைக்கு டூட்டிக்கு வராமல் இருந்திருக்கலாமோ... ச்சே... சே... அப்படியெல்லாம் எதுவும் நடக்காது. அரசு அலுவலகங்களிலோ அதிலும் குறிப்பாக எந்த ரயில்வே ஸ்டேஷன்களிலோ ஏதும் நடந்ததாக இதுவரை செய்தி இல்லையே என்று மனதைத் தேற்றிக்கொண்ட சானிசிங் அடுத்த வேலையைப் பார்க்கப் போனார்.

ஏற்கெனவே பயந்து போயிருந்த அன்வர்பாட்சா குழப்பத்துடன் போய் மணியடித்தான். மணியடித்ததுதான் தாமதம் உடனே டிரெயின் வந்து முன்னால் நிற்பதைப்போல ஒரே களேபரம்... எல்லோரும் பிளாட்பாரத்தின் ஓரத்திற்கு வந்து முட்டிக்கொண்டு நின்றனர். ஒருவரையொருவர் வைது கொண்டும் தள்ளிக் கொண்டும், நெருக்கியடித்துக் கொண்டும் நின்றனர். மூட்டை முடிச்சுகளையும் பிள்ளைகுட்டிகளையும் இழுத்துக்கொண்டு முண்டியடித்தனர்.

இன்று காலையில்தான் இந்தியா பாகிஸ்தான் எல்லைக் கோடுகள் பற்றிய அறிவிப்பு வானொலியில் வந்தது. அதற்கு முன்பே ஏராளமான வதந்திகளுக்கு கத்திகளும், வாள்களும், நாட்டுத் துப்பாக்கிகளும்

முளைத்து அங்கங்கே கலவரங்கள் தொடங்கிவிட்டன. சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்காக டில்லி வந்திருந்த லட்சோபலட்ச மக்களும் கொஞ்சம் கொஞ்சமாக ஊர்திரும்பிக் கொண்டிருந்தனர். லாகூரிலிருந்து அமிர்தசரஸ் வரையுள்ள கிராமங்களிலிருந்து வந்த கூட்டமும், லாகூரையும் கராச்சியையும் பூர்விகமாகக் கொண்ட கூட்டமும் திரண்டுவிட்டது. எதிரும் புதிருமாக மக்களின் மாபெரும் குடிபெயர்வு நடந்து கொண்டிருந்தது.

ஸ்டேஷன் மாஸ்டர் சானிசிங்கின் முகத்தில் மெல்ல குழப்பம் கூடியது, லேசான கலவரமும். அவர் முகத்தைப் பார்த்ததும், அன்வர் கேட்டான்,

“என்ன சார்... என்ன?”

“இல்ல... அமிர்தசரஸ் எக்ஸ்பிரஸ்ஸில் ஆளுக யாரும் இருக்கிற மாதிரியே தெரியலியாம்... வெறும் வண்டி வர்ற மாதிரி தெரியுதுன்னு... பக்கத்து ஸ்டேஷன்ல செல்றாங்க... அதான் ஒண்ணும் புரியல...”

அன்வர் எதுவும் பதில் பேசவில்லை. ஆனால் அவன் முகம் கறுத்துப் போனது.

சில நிமிடங்களில் டிரெயின் வருகிற சத்தம் கேட்டது. ஒரு அவலமான அலறலோடு பிளாட்பாரத்திற்குள் நுழைந்தது. வண்டி வரும்வரை முண்டியடித்துக் கொண்டிருந்த கூட்டம், வண்டி வந்ததும் ரயிலின் அருகில் கூட செல்லவில்லை. பெருங்கூப்பாடு போட்டு சிதறி ஓடியது. கூச்சல்... குழப்பம். பக்கத்து ஸ்டேஷனில் சொல்லியது சரிதான். வந்து நின்ற வண்டியிலிருந்து ஒருவர் கூட இறங்கவில்லை.

சானிசிங்கிற்கு ஆச்சரியமாக இருந்தது. ஆள் இருக்கிற அரவமே தெரியவில்லை. ஆனால் திடீரென ஏதோ ஒரு வாடை பிளாட்பாரம் முழுவதும் பரவியது. அப்போதுதான் சானிசிங் கவனித்தார். ஒவ்வொரு பெட்டியின் வாசலிலிருந்தும் ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. எதிரே இருந்த பெட்டியின் கதவைத் தள்ளித் திறந்தார். உள்ளே பிணங்கள்... பிணங்கள்... ரத்தம் ஓடைமாதிரி ஓடிக் கொண்டிருந்தது. எல்லாப் பெட்டிகளிலும் இதேதான். அந்தக் கோரக் காட்சி... அந்த வாடை... சானி சிங்கிற்கு தலை சுற்றி மயக்கம் வரும் போல இருந்தது. ஓங்கரித்துக் கொண்டு வந்தது. என்ன செய்வதென்றே ஒன்றும் புரியவில்லை.

ஆனால் சில நிமிடங்களிலேயே சுதாரித்துக் கொண்டார். சுற்றுமுற்றும் பார்த்தார். பிளாட்பாரத்தில் யாரும் இல்லை. ஒன்றிரண்டு சீக்கிய இளைஞர்கள் மட்டும் தயக்கத்துடன் தூரத்தில் நின்று கொண்டிருந்தார்கள். சானிசிங் மிகுந்த சிரமத்துடன் ஒரு பெட்டியில்

ஏறினார். உள்ளே கால் வைக்கவே இடமில்லை. இறங்கி ஜன்னல் வழியாகக் கூவினார்,

“யாராவது உயிரோட இருக்கீங்களா? நீங்க பத்திரமான இடத்துக்கு வந்தாச்சு.. யாராவது உயிரோட இருக்கீங்களா?”

என்று கூப்பாடு போட்டுக்கொண்டே மேலும் கீழும் ஓடினார். அப்போது அவரைப் பார்க்க ஒரு பைத்தியக்காரனைப் போல தெரிந்தார். சற்று நேரத்தில் இலேசான முனகல்கள் சில பெட்டிகளிலிருந்து கேட்கத் தொடங்கின. அவர் தூரத்தில் தயங்கி நின்ற சீக்கிய இளைஞர்களை அழைத்து குற்றுயிராய் கிடந்தவர்களை அப்புறப்படுத்தி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகச் சொன்னார்.

எல்லாம் முடிந்தபோது அவரே பிணத்தைப்போல வெளுத்துப் போனார். ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது என்று அவருக்குப் புரியவில்லை. ஒரு கருத்துக்காகவா நம்பிக்கைக்காகவா இத்தனை கொலைகள்; நடைமுறையில் இல்லாத, செயல்படுத்த முடியாத கருதுகோள்களும், யூகங்களும், புனைவுகளும், கற்பனைகளும் மனிதர்களை இப்படி கொடிய காட்டுமிராண்டிகளாக்கிவிடுமா? இல்லை, மனிதர்களுக்குள் எப்போதும் ஒரு காட்டுமிராண்டி இருந்து கொண்டேயிருக்கிறானோ, சரியான சந்தர்ப்பங்கள் அமையும்போது அவன் அந்தக் கொடூரமுகத்தைக் காட்டி விடுகிறானோ, மதத்தின் பெயராலோ, அரசியலின் பெயராலோ தூண்டி விடப்படுகிற அந்த மிருகத்தை அடக்க முடியாமல் எல்லோரும் அதற்குப் பலியாகி விடுகிற கொடுமையை, என்ன சொல்ல... சானிசிங் கண்களை மூடி தலையை கைகளால் தாங்கிக்கொண்டு யோசித்துக் கொண்டிருந்தார். தலை வலித்தது.

அப்போது வெளியே தடதடவென சத்தம் கேட்டது. அவர் நிமிர்ந்து பார்த்தார். ஒரு பத்திருபது சீக்கிய இளைஞர்கள் கையில் கிர்பானுடன் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள்,

“ஸ்ரீசத் அகால்... பழிக்குப் பழி... ரத்தத்திற்கு ரத்தம்...” என்று கூவினார்கள். அவர் ஒன்றும் புரியாமல் விழித்தார்.

“கூப்பிடுங்க... அந்த தாயோளி மவனை...”

“யாரை...”

“அந்த அன்வர் தாயோளியைத்தான்...”

அப்போதுதான் அவருக்கு ஞாபகம் வந்தது. இந்தக் குழப்பத்தில் அவர் அவனை மறந்தேவிட்டார். டிரெயின் வந்ததிலிருந்தே அவர் அவனைப்

பார்க்கவில்லை. எங்கேயாவது ஓடிப்போயிருப்பான் என்று நினைத்தார். அதனால் தைரியமாய்,

“அவன் இங்க இல்லை...” என்றார்.

கூட்டத்திலிருந்த ஒருவன், “இல்ல... உள்ளேதான் இருக்கான்... அவனை காப்பாத்தணும்னு நெனச்சே உன் உயிர் இருக்காது...”

“அவன் இங்க இல்ல... எங்கேயோ ஓடிப் போயிட்டான்...”

உடனே கும்பலிலிருந்து ஒரு நாலுபேர் உள்ளே நுழைந்தார்கள்.

“நாங்க பார்க்கிறோம்...”

அவர் வாயைத் திறப்பதற்குள் ஸ்டேஷனின் ஒவ்வொரு அறையாகச் சென்று தேட ஆரம்பித்தார்கள். ஸ்டோர் ரூமிலிருந்து அன்வர்பாட்சாவை தரதரவென்று இழுத்துக்கொண்டு வந்தார்கள். அவன் கதறிக்கொண்டே வந்தான்,

“அண்ணே... விட்ருங்கண்ணே... விட்ருங்க...”

அதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த சானிசிங் உடனே அந்தக் கும்பலில் தலைவன் மாதிரி இருந்தவனிடம்,

“அவனை விட்ருங்க... ப்ளீஸ்... அவன் சென்ட்ரல் கவர்ண்மெண்ட் எம்ப்ளாயி... ரயில்வே எம்ப்ளாயி... விட்ருங்க... ப்ளீஸ்... இல்லைன்னா... போலிஸை கூப்பிட வேண்டியிருக்கும்...”

என்று சொன்னார். அவர்கள் கொடூரமாகச் சிரித்தார்கள்.

“கவர்ண்மெண்ட்... எங்கேருக்கு கவர்ண்மெண்ட்? ரயில்ல அத்தனை பேரையும் வெட்டிக் கொன்னாங்களே... அப்ப எங்க போச்சு கவர்ண்மெண்ட்...”

என்று கத்தினான். பின்னால் இருந்தவர்களும் வெறிபிடித்தவர்களைப்போல கூச்சலிட்டார்கள். அன்வர் அப்போதே செத்தவனைப்போல ஆகிவிட்டான். சானிசிங்கை ஏறிட்டுப் பார்த்தான். அவன் பார்வையைத் தாங்க முடியவில்லை. அவர்களிடம் மறுபடியும் அவர் கெஞ்சினார். கத்தினார். கூப்பாடு போட்டார். மிரட்டிப் பார்த்தார். இழுபறியாக இருந்த நிலைமையில் கும்பலிலிருந்த ஒருவன் அவரது கழுத்தில் கிர்பானை வைத்துவிட்டான். உடனே மற்றொரு சிங் வந்து தடுத்தான். அவனை பின்னுக்கு இழுத்தான்.

அன்வரை ஸ்டேஷன் அறைக்கு வெளியே இழுத்துச் சென்றனர். மணியடிக்கிற இடத்திற்கு அருகில் அவனை மண்டியிட வைத்தனர்.

அவன் தலையை இங்கேயே பிளாட்பாரத்தில் தொங்கவிட வேண்டும் என்று ஒருவன் கத்தினான்.

சானிசிங் அந்தக் கும்பலிலிருந்த ஒவ்வொருவரிடமும் சென்று கெஞ்சிப்பார்த்தார். ஸ்டேஷனுக்குள் ஓடிச்சென்று பக்கத்து ஸ்டேஷனை அழைத்தார். பதிலில்லை. தொலைபேசியை எடுத்தார் எந்தச் சத்தமுமின்றி அது ஏற்கனவே இறந்து போய் விட்டிருந்தது. கடைசியில் வேகமாக வெளியே வந்தார். அந்தக் கும்பலிடம் சென்று,

“எதுவாக இருந்தாலும் இங்கே வேண்டாம்... ப்ளீஸ்...”

என்று கையெடுத்துக் கும்பிட்டார். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அவர் முகத்தைப் பார்த்தவுடன் என்ன நினைத்தார்களோ அன்வரை இழுத்துக்கொண்டு ஸ்டேஷனுக்கு வெளியே போய்விட்டார்கள். சில விநாடிகளில் அன்வரின் அவலக்குரல் எழுந்து அடங்கியது. சானிசிங்கிற்குத் தலைசுற்றியது. நாற்காலியில் உட்கார்ந்தவுடன் மயங்கி விட்டார்.

மயக்கத்திலேயே என்னென்னவோ காட்சிகள் கண்முன்னே தெரிந்தன. இரண்டு துண்டுகளாய் கிடந்த குழந்தைகள், தலையில்லாத முண்டங்கள், உடலில்லாமல் தனியே கிடந்த தலைகள், துண்டுகளாய் கை கால்கள் என்று என்னவெல்லாமோ கண்முன்னே சுற்றின. அவர் ஜன்னி வந்தவர்போல பிதற்ற ஆரம்பித்தார். யாரையோ கூப்பிட நினைத்தார். அன்வரையா... அன்வர்... அன்வர்... அ... அ... ஆ... உ... வாயைத் திறக்க முடிகிறது.

ஆனால் குரல் எழவில்லை. கண்களை மிகுந்த பிரயத்தனத்துடன் திறந்தார்.

“என்ன சார்... இப்படி புலம்பறீங்க...”

என்று நடராஜன் உசுப்பிக் கொண்டிருந்தான். நாராயணன் கண் விழித்தார். தலையைத் தூக்கி மலங்க மலங்கப் பார்த்தார். எங்கேயிருக்கிறோம். சானிசிங்... எங்கே... வெளியே பொழுது விடிந்துவிட்டது. அவரையே பார்த்துக் கொண்டிருந்த நடராஜனிடம்,

“ரொம்ப புலம்பினேனா...”

என்று கேட்டார்.

“இல்ல சார்... அழுகிற மாதிரி சத்தம் கேட்டுச்சி... அதான் ஏதோ கெட்ட கனவு போலன்னு நெனச்சி எழுப்பி விட்டேன்... இந்தாங்க சார்... டீ... சூடாச் சாப்பிடுங்க...”

என்று சொல்லிக்கொண்டே டீ தம்ளரை அவரிடம் கொடுத்தான். நாராயணன் அதைக் கையில் வாங்கிக்கொண்டு எழுந்தார். மேஜையில் இன்னமும் 'நள்ளிரவில் சுதந்திரம்' விரிந்தபடியே கிடந்தது. அதைப் பார்த்தவுடன் உடலெங்கும் ஒரு சிலிர்ப்பு ஓடியது. வெளியே வந்தார். பறவைகளின் உற்சாகமான குரலிசை. இரவில் கருமை கொண்டிருந்த காடு இப்போது பளீரென்று பச்சைப் பசேலென்றிருந்தது. வானத்தின் நீலத்தோடு சேர்ந்து சிரித்தது. குஞ்சு மேகங்களின் மீது சூரியனின் தங்கநிற ஒளி, சட்டமிட்டு அழகுபடுத்தியது. ஒரு மிடறு குடித்துவிட்டு திரும்பினார் நாராயணன்.

தனக்கு எதிரில் அந்த ஆள் நின்று கொண்டிருந்தார். கையில் பிளாஸ்டிக் டம்ளரை நீட்டிக்கொண்டு நேற்றிரவு இருந்த பாவனையில் நின்று கொண்டிருந்தார். நரைத்த தாடியும் சடைபிடித்த தலையுடன் வெறித்த ஆனால் உறுதியான கண்களுடன் இருந்தார். இரவில் எங்கே போயிருந்தார்... இப்போது அந்தக் கிழவர் எப்படி வந்தார்? எதுவும் புரியவில்லை.

"நடராஜா உன் பிரண்டு வந்திருக்கார் பாரு... டீ... வேணுமாப்பா..."

என்று கேலியாகச் சொன்னார் நாராயணன். திரும்பி அந்தக் கிழவரைப் பார்த்து,

"உம் பேரென்ன? பேரு... பேரு..."

என்று கேட்டார். அதற்குப் பதிலில்லாமல் போகவே, இன்னொரு மடக்கு டீயை உறிஞ்சிக்கொண்டே அவருக்குத் தெரிந்த அரைகுறை இந்தியில் கேட்டுப் பார்க்கலாம் என்று நினைத்தவர்,

"தூ.. நாம் கியாஹை?"

என்று கேட்டார். அந்தக் கிழவரின் உதடுகள் லேசாய் அசைந்தன.

"சானிசிங்... ஸ்டேஷன் மாஸ்டர்... அமிர்தசரஸ்..."

40. வாசனை

இருளின் விரல்கள் நெரிக்கும் அந்த இரவின் நடுச்சாமத்தில் உறங்கிக் கொண்டிருந்த அவன் திடீரென்று ஓலமிட்டுத் துள்ளி எழுந்தான். துள்ளிய வேகத்தில் பின்னால் கைகளை ஊன்றி எதிர்ப்புறச் சுவரில் சாய்ந்து விழுந்தான். உடலெங்கும் மரணத்தின் அதிர்வுகள் ஓடின. நாக்கு வறண்டு போய்விட்டது. அமானுஷ்யமான அவனுடைய மரண ஓலம் இன்னமும் அந்த அறையில் எதிரொலித்துக் கொண்டிருந்தது. முதலில் எதுவும் தெரியவில்லை. கண்களைத் திறந்து அரக்கபரக்கத் தலையைத் திருப்பிப் பார்த்தான். அப்போதுதான் இரவு விளக்கின் மெலிதான வெளிச்சத்தில் அவன் படுத்திருந்த தலையணையருகில் அமர்ந்திருந்த அவளைப் பார்த்தான். அவள்தானா? அவள்தானா? அவனுக்கு மூச்சு வாங்கியது. நம்பிக்கையில்லாமலே மறுபடியும் அவளைப் பார்த்தான். அவள் அவனைப் பார்த்து லேசாய் சிரித்த மாதிரி இருந்தது. அந்தச் சிரிப்பின் ரேகை மறையாமலே,

“என்னாச்சி... ஏன் அலறுனீங்க...?”

என்று கேட்டாள். அப்படியென்றால் உண்மைதானா! அவன் தன்னுடைய கழுத்தில் கையை வைத்துத் தடவிப் பார்த்தான். ஒரு வேளை கனவுதானோ. சில நொடிகளுக்கு முன்னால் அவன் கழுத்தில் கத்தியை வைத்து யாரோ அறுக்க முயற்சி செய்வதைப் போன்ற உள்ளுணர்வில்தான் அவன் பயந்து துள்ளி விழுந்தது. இன்னமும் படபடப்பு அடங்கவில்லை. ஒருவேளை அவள்தான் அவனைக் கொல்ல முயற்சித்திருப்பாளோ. ச்சே... அப்படி இருக்க முடியாது. அது எப்படி நடக்கும். அவள் எப்படி இதற்குத் துணிவாள். ஒரு வேளை அப்படியும் இருக்குமோ. அவளுக்கு அவன் எந்தக் குறையும் வைத்ததில்லை. கொடுமைப்படுத்தியதில்லை. சித்திரவதைகள் செய்ததில்லை. திருமணம் முடித்ததிலிருந்து அவனைப் பொறுத்தவரை ஒரு சிறந்த கணவனாகவே இருந்து வருகிறான். அவளைச் சிரமப்படுத்தாமல் எல்லா விஷயங்களையும் அவனே கவனித்துக் கொள்கிறான். அவளுக்கு மூன்றுவேளை நல்ல சாப்பாடு, விதவிதமான துணிமணி, டி.வி., பிரிட்ஜ், வாஷிங்மெஷின் என்று சகல வசதிகளும் செய்து கொடுத்திருக்கிறான். இதற்கு மேல் என்ன வேண்டும்.

வீட்டு வேலைகளைப் பார்க்க வேண்டியது. சமைத்துக் கொடுத்து அவனை அலுவலகம் அனுப்பியபின் அவளுக்கு என்ன வேலை? ஓய்வாய் டி.வி. பார்க்கவேண்டியதுதான். மத்தியானம் சாப்பிட்டுவிட்டு

தூங்க வேண்டியதுதான். சாயங்காலம் அவன் அலுவலகம் முடிந்து வரும்போது வாங்கி வரும் மல்லிகைப் பூவைத் தலையில் சூடிக்கொள்ள வேண்டியதுதான். இரவிலோ பகலிலோ அவனுக்குத் தேவைப்படும் நேரங்களில் எல்லாம் படுக்கைக்கு வர வேண்டியதுதான். இதைவிட சிறந்த வாழ்க்கை வேறு என்ன இருக்க முடியும்.

கல்யாணத்தின்போது அவள் சாதாரணமான கம்பெனியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுடைய முதல் நிபந்தனையே அந்த வேலையை விடச் சொன்னதுதான். வீட்டில் நிறைய புத்தகங்கள் சேகரித்து வைத்திருந்தாள். அவன் எந்தப் புத்தகத்தையும் கொண்டுவர விடவில்லை. அவளுடைய வீட்டில் அவள்தான் நிர்வாகம் செய்து கொண்டிருந்தாள். அவன் அவளுடைய ஒரு வார்த்தையைக் கூட கேட்டதில்லை. அப்படி ஏதாவது அவள் சொல்வதற்கு முயற்சித்தால் அவன் அவளை முறைக்கிற முறைப்பில் அவள் சர்வமும் ஒடுங்கிவிடுவாள். அவளுக்கு என்ன தெரியும். அவளுக்கும் சேர்த்துத்தான் அவன் யோசிக்கிறானே. அது போதாதா.

அவனுடைய அப்பா அடிக்கடி சொல்வார்,

“பொம்பளைகிட்ட யோசனை கேட்டா... அவ்வளவுதான். நம்பள பொன்னஞ்சட்டி ஆக்கிருவாளுக...”

உண்மையில் அப்பாவும் அப்படித்தான் நடந்துகொண்டார். அவர் முன்னால் ஒரு நாளும் அம்மா பேசி அவன் பார்த்ததில்லை. அதேபோல அப்பாவும் எந்த ஒரு விஷயத்தையும் அம்மாவிடம் சொல்லி அவன் கேட்டதில்லை. எப்போதாவது சில நேரங்களில் அரங்கு வீட்டுக்குள் உட்கார்ந்து அம்மா அழுது கொண்டிருப்பாள் யாருக்கும் தெரியாமல்.

அவன் அப்பாவைப் பார்த்து வளர்ந்தான். அப்பாவின் பேச்சைக் கேட்டு வளர்ந்தான். அப்பா வீட்டுக்குள்ளே நுழைந்தவுடனே வீட்டில் அம்மா, அக்கா, தங்கை எல்லாம் பயந்து நடுங்குவதைப் பார்த்து அவனுக்குள்ளும் ஒரு குரூர ஆசை வளர்ந்து வந்தது; அவனைப் பார்த்தும் அப்படி எல்லோரும் நடுங்க வேண்டுமென்று.

குடும்பத் தலைவனாக இருப்பதிலும் குடும்பத்தைக் கட்டிக் காப்பதிலும் பெருமகிழ்வு கொண்டான். அலுவலகத்தில் அதிகாரிகள் நடப்பதைப்போல குடும்பத்திலும் நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆனாலும் அப்பாவைப் போல அவனால் அவ்வளவு அலட்சியமாக நடந்துகொள்ள முடியவில்லை. இப்பவும் அலுவலகம் கிளம்பும்போது அவள் வாசல் கதவை பூட்டுப் போட்டு பூட்டிய பிறகே

தன்னுடைய மொபெட்டை எடுப்பான்.

இவ்வளவு நாகரிகமாக நடந்துகொள்கிற அவனைக் கொல்ல முயற்சி செய்வாளா என்ன? இருக்காது. ஒரு வேளை பிரமையாக இருக்குமோ. ஆனால் இந்த நேரத்தில் ஏன் அவள் எழுந்து உட்கார்ந்திருந்தாள். அதுவும் அவன் தலைமாட்டில், அவளது வலது கையில் ஆயுதம் ஏதும் வைத்திருக்கிறாளோ, இரவு விளக்கின் மெலிதான வெளிச்சத்தில் அவள் நிழலே மறைத்து கொண்டிருப்பதால் அவளுடைய கைகளில் என்ன இருக்கிறது என்று சரியாகத் தெரியவில்லை.

அவள் பேசுவதே இல்லை. ஒன்றிரண்டு வார்த்தைகளைத் தவிர அதிகம் பேசுவதில்லை. திருமணம் முடிந்த புதிதில் அவள் பேசுவதற்கு முயற்சி செய்தாள். ஆனால் அவன் அவளைப் பேச விடவில்லை.

“அதிகமாக பேசினா எனக்கு பிடிக்காது...”

என்று அடக்கிவிட்டான். அவளும் பேச்சைக் குறைத்துக் கொண்டாள்.

பேசாமலே இருந்து இருந்து மனப் பிறழ்வு ஆகியிருக்குமோ. அவனைக் கொல்வதற்கு எந்த முகாந்திரமும் இல்லையே. அவனுடைய சென்னைக் கிளை அலுவலகத்தில் வேலைபார்க்கும் ஒரு ஊழியரை அவன் மனைவி, தூங்கும்போது அம்மிக்கல்லைத் தலையில் போட்டுக் கொன்றுவிட்டாள் என்று நேற்றுதான் பரபரப்பாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அதற்கு அந்த ஊழியரின் குடிப்பழக்கம்தான் காரணம் என்றும் சொன்னார்கள். ஆனால் இவனுக்கு எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது. அவளை ஒரு தடவை கூட அடித்தது கிடையாது. இதற்கு மேல் ஒரு கணவனிடம் என்ன வேண்டும்.

அவன் ஆசுவாசமாகி மெதுவாகச் சாய்ந்திருந்த சுவரை விட்டு எழுந்து படுக்கைக்கு வந்தான். அவள் ஏன் இன்னும் அந்த இடத்திலேயே உட்கார்ந்திருக்கிறாள். எழுந்து விளக்கைப் போடலாம் இல்லையா... - ஒரு வேளை விளக்கைப் போட்டால் தன் கையிலுள்ள ஆயுதம் தெரிந்துவிடும் என்று யோசிக்கிறாளோ, ஏன்தான் இப்படி கன்னாபின்னாவென்று மனசு அலைந்து திரிகிறதோ, மனசை அமைதிப்படுத்த வேண்டும். அமைதி... அமைதி. அவன் உடல் தளர்ந்தது போல இருந்தது. அப்படியே அவளைப் பார்த்தபடியே படுக்கையில் சாய்ந்தான்.

அவள் இன்னமும் தான் இருந்த இடத்திலிருந்து அசையாமல் நிதானமாக, “என்ன...? கொல்லப் போறேன்னு நெனச்சி பயந்துட்டீங்களா...” என்றாள். அவன் அந்த அறைக்குள் மரணத்தின்

வாசனையை உணர ஆரம்பித்தான்.

41. பிறிதொரு மரணம்

ஒரு கணத்திற்கும் குறைவான நேரத்திலேயே அந்தப் பரிமாற்றம் நடந்துவிட்டது. தேர்ந்த கடத்தலைப் போல விரைவாக.

கிருஷ்ணசாமியை மேனேஜர் தன்னுடைய அறைக்கு வரும்படி பியூன் ராமசாமியிடம் சொல்லியனுப்பியபோதே இது நிச்சயமான மாதிரி இருந்தது. ராமசாமி வழக்கமான சிரிப்புடன் சொன்னதைக் கேட்டு புருவங்களை உயர்த்திய கிருஷ்ணசாமி ஏதோ முன்னுணர்ந்திருக்க வேண்டும். இல்லையென்றால் மேனேஜர் நீட்டிய ஐநூறு ரூபாய் நோட்டை கொஞ்சங்கூட தயங்காமல், வந்ததே இதற்காகத்தான் என்பதுபோல வாங்கிப் பைக்குள் வைத்தது எப்படி? மேனேஜரும் சற்று குழம்பியிருந்திருக்கிறார். அவர் கிருஷ்ணசாமியிடம் இப்படிப் பணம் தருவது இதுவே முதல்முறை. ஏதோ முணுமுணுத்தார் என்று தெரிந்தது.

கிருஷ்ணசாமிக்கு அவை எதுவும் புரியவில்லை அல்லது புரிந்து கொள்ளும் மனநிதானம் அப்போது அவருக்கு இல்லை. கண்பார்க்க கை நீட்டி வாங்கி சட்டைப் பைக்குள் வைத்தது வரை சுவாசம் போல அனிச்சையாகவே நிகழ்ந்தது. ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட கணத்தில் திட்டமிடப்பட்ட விதத்தில் கச்சிதமாக அந்தக் காட்சி அமைந்தது மாதிரி.

மேனேஜர் உதட்டைக் கோணினார். அதை கிருஷ்ணசாமி சிரிப்பு என்று மொழிபெயர்த்துக் கொண்டார். பதிலுக்குச் சிரிக்க வேண்டும் என்று தோன்றவில்லை. அப்படிச் சிரித்தால் மேனேஜரின் தயவினால்தான் இந்த ஐநூறு ரூபாய் கிடைத்த மாதிரி தோன்றிவிடலாம். இல்லை இது அவருடைய நியாயமான உரிமை என்று தோன்றும் விதமாக முகத்தை இறுக்கமாக்கிக்கொண்டு உதடுகளை நன்றி என்று சொல்கிற மாதிரி அசைத்தார். உடனே அதன் அபத்தத்தை உணர்ந்து அப்படியே நிறுத்திக்கொண்டார்.

அட, இதுக்குப் போய் நன்றி சொல்வதா. அவருடைய இருக்கைக்குத் திரும்பிய பின்தான் கிருஷ்ணசாமிக்கு என்ன நடந்தது என்ற முழு உணர்வும் வந்தது.

இதுவரை அணைந்து அமைதியாக இருந்த மூளை திடீரென மின்சார சப்ளை கிடைத்த மாதிரி கர்ராமுர்ரா வென்று சப்தம் போட்டது. ஒரே நேரத்தில் ஏராளமான காட்சி பிம்பங்களுடன் பல குரல்கள் ஒன்றின் மீது ஒன்று ஏறிக்கொண்டு ‘என்னைக் கேள்... என்னைக் கேள்’ என்று குதியாளம் போட்டன. அவரால் என்னவென்று புரிந்து கொள்ளவே முடியவில்லை.

காலையில் வீட்டை விட்டுக் கிளம்பும்போது, மிகத் தெளிந்த மனதுடன், ஒன்றிரண்டு நாட்களுக்குள் கடன் வாங்கும் திட சிந்தையுடன், இல்லாளின் இல்லாமைகளையும் போதாமைகளையும் ஒரு ஞானியின் புன்முறுவலோடு கேட்டு அவற்றுக்குப் பதிலாக ஒன்றிரண்டு வாழ்க்கைத் தத்துவங்களை அவள் மீது உதிர்த்து, அவை அவள் மீது ஊறுவதால் அவளடையும் எரிச்சலைக் கண்டு மகிழ்வுடன் சைக்கிளை எடுத்துக்கொண்டு ரோட்டிற்கு வந்ததும், பையிலிருந்த கோல்டு பிளேக் பில்டர் சிகரெட் பெட்டியிலிருந்து கணேஷ் பீடியை எடுத்து உருட்டி அமுக்கிப் பார்த்து பற்றவைத்துக்கொண்டே நடக்க ஆரம்பித்தார். அப்போதெல்லாம் இப்படியெல்லாம் நடக்கும் என்று யாராவது சொல்லியிருந்தால் உண்மையில் சிரித்திருப்பார்.

ஆனால் உண்மையில் ஆழ்மனதில் இந்தக் காட்சியின் பிம்பம் ஆசையின் விளைவாக வளர்ந்து பரந்திருக்கிறது. மிக நுட்பமான காட்சி விவரணைகள் கூட, ஏற்கனவே பதிவு செய்யப்பட்டது போலவும் அதையே மீண்டும் ஒளிப்படமாக ஓடவிட்டுப் பார்த்த மாதிரியும், கிருஷ்ணசாமிக்குத் தோன்றியது. காலிலிருந்து ஒரு பூச்சி ஊர்வதைப்போல ஒரு உணர்ச்சி மேலேறிக் கொண்டிருந்தது. கைகளில் லேசான நடுக்கம். சட்டைப் பையைத் தடவிப் பார்த்தார். பைக்குள்ளிருந்து அந்த ஐநூறு ரூபாய் எட்டிப்பார்த்தது. அதைப் பார்த்தவுடன் மறுபடியும் மூளைக்குள் விறுவிறுப்பு.

மூத்திரம் முட்டிக்கொண்டு வந்தது. எழுந்து பாத்ரூமிற்குப் போனார். ஒண்ணுக்குப் போனவுடன் ஏதோ பெரிய பாரம் இறங்கிய மாதிரிதான் இருந்தது. 'இவ்வளவுதானா' என்று கூட நினைத்தார். பையிலிருந்து அந்த ஐநூறு ரூபாய் நோட்டை எடுத்து விரித்து முழுசாய்ப் பார்த்தார். எத்தனையோ சம்பளங்களில் எத்தனையோ ஐநூறுரூபாய் நோட்டுகளைப் பார்த்திருந்தாலும் இந்த நோட்டின் ஸ்பரிசம் வேறாக இருந்ததுபோல தோன்றியது. இந்த மாதம் கடன் வாங்கிக் கழிக்க வேண்டியதில்லை. இல்லாளின் ஏச்சு பேச்சுகளிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். குழந்தைகளுக்குக் கூட இன்ப அதிர்ச்சியாய் ஏதாவது வாங்கிக்கொண்டு போகலாம். நண்பர்களுக்கு கசறாமல் டீ, சிகரெட் வாங்கித் தரலாம். எல்லாவற்றையும் விட உண்மையான கோல்டு பிளேக் பில்டர் சிகரெட் பாக்கெட்டில் உண்மையான கோல்டு பிளேக் சிகரெட்டையே வாங்கி வைத்துக் கொண்டு புகைக்கலாம். நெஞ்சின் கீழிருந்து ஒரு புன்னகைக் கீற்று அப்படியே பரவி முகத்தையே வெளிச்சமாக்கியது. அப்போது திடீரென ஒரு உள்ளுணர்வு யாரோ தன்னை உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கிற மாதிரி. சுற்றிலும் பார்த்தார்.

யாருமில்லை. பிரமையோ. ஐநூறு ரூபாய் நோட்டை மடிக்க யத்தனித்தபோதுதான் கவனித்தார். ஐநூறு ரூபாய் நோட்டிலிருந்து காந்தித்தாத்தா பார்த்துக் கொண்டிருந்தார். பொக்கை வாய்ச் சிரிப்பைக் காணோம். வருத்தமா, கோபமா, சோகமா என்று பிரித்துச் சொல்ல முடியாத ஒரு முகம். சுருக்கங்களின் அலையில் கண்கள் இடுங்கி ஒரு வித வெறுப்புடன் அவரை உறுத்து நோக்கின. சல்லென்று அவருக்கு வியர்த்தது. யாரோ பாத்ரூம் கதவைத் திறக்கிற சத்தம் கேட்டு சடாரென காந்தித்தாத்தாவை மடித்துப் பைக்குள் வைத்துக்கொண்டார். இருக்கைக்கு வரும்போது ஏதோ மிகப்பெரிய பாறாங்கல்லைச் சுமப்பது போல மெதுவாக நடந்து வந்தார். அதே நேரம் அவருக்குள் இருந்த ஒரு இனிய நெருக்கமான பிரிக்க முடியாத உயிரைப் போன்ற ஏதோ ஒன்று பிரிந்து போய்விட்டது.

சக்கையைப்போல உட்கார்ந்தார். ஒரே நேரத்தில் மிகக் கனமாகவும், உள்ளீடே இல்லாமல் கூடான மாதிரி பலகீனமாகவும் உணர்ந்தார். வேலையே ஓடவில்லை. அவரது அலுவலகக் கோப்புகளின் ஊர்வலத்தின் முடிவில் ஒப்பந்தக்காரர்கள் தருகிற அன்பளிப்பின் வேதனையைச் சுமந்து கொண்டிருந்தார். இதற்கு முன்பு ஒரு தடவை கூட கைநீட்டியதில்லை. அந்த எண்ணம் இருந்ததாகவும் தெரியவில்லை. ஆனால் இன்று சட்டைப் பைக்குள் ஒரு ஆள்கனம். பை தொங்கியது. அதுவும் அந்தக் கண்கள். அந்த எண்ணமே இல்லையென்று சொல்லமுடியுமா. மனதில் அந்தராத்மாவில் இருளின் துணுக்கு ஒட்டிக் கொண்டிருந்திருக்க வேண்டும். இல்லையென்றால் இப்படி நடக்குமா?

அவருக்குத் தலை சுற்றியது. மதியச் சாப்பாட்டுக்காக எல்லோரும் கலைந்து கொண்டிருந்தார்கள். அவரும் வேண்டா வெறுப்பாகச் சாப்பாட்டுக் கூடையைத் தூக்கியவர் சுப்பிரமணியனின் குரலைக் கேட்டதும், மறுபடி உட்கார்ந்துவிட்டார்.

“என்ன இன்னிக்கு... டல்லா இருக்கீங்க...”

“லேசா தலைவலி...”

“மாத்திரையை போட வேண்டியதுதானே...”

என்று இலவச மருத்துவ ஆலோசனையைச் சொல்லிக் கொண்டே போனார். கிருஷ்ணசாமி சாப்பாட்டுக் கூடையை அப்படியே வைத்துவிட்டு ஸ்டாப் ரூமிற்குப் போனார். யாரும் இல்லை. கதவை அடைத்துவிட்டு பெஞ்சில் படுத்தார். அவருக்குள்ளேயிருந்தே இரண்டு

கண்கள் வெறுப்புமிழும் இரண்டு கண்கள் அவரைப் பார்ப்பது போல தோன்றியது. கண்களை மூடவும் முடியவில்லை. திறக்கவும் முடியவில்லை.

கிருஷ்ணசாமி ஜனநெருக்கடி மிகுந்த சாலையில் வேகவேகமாக நடந்து கொண்டிருந்தார். பின்னாலேயே ஒரு கிழவர் தடியை ஊன்றிக்கொண்டு தொடர்ந்து வந்தார். அவர் பின் தொடர்வதைக் கண்ட கிருஷ்ணசாமி ஓட ஆரம்பித்தார். ஆனால் கிருஷ்ணசாமியின் ஓட்டத்தை அந்தக் கிழவர் தன் சாதாரண நடையிலேயே தாண்டி வந்தார்.

அருகில் வரவரஅந்தக் கிழவரின் முகம் காந்தியின் முகமாக மாறியது. அதே வெறுப்புமிழும் கண்கள். அதைப் பார்க்கச் சகிக்காமல் கிருஷ்ணசாமி பைக்குள்ளிருந்து அந்த ஐநூறு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினார்.

ஆனால் அது அவர் கைகளில் துப்பாக்கியாக மாறியிருந்தது. துப்பாக்கியின் விசையை காந்தியின் முகத்திற்கு நேரே பிடித்துக்கொண்டு அழுத்தினார். பீறிட்டுத் தெறித்த ரத்தம் சட்டையிலும் முகத்திலும் தெறித்தது. காந்தி “அய்யோ” என்றலறி வீழ்ந்தார். அந்தக் குரலின் எதிரொலி அவரைத் தூக்கி வெளியே எறிந்தது. அலறலோடு பெஞ்சிலிருந்து எழுந்தவர் மலங்க மலங்க விழித்தார். வெளியே அலுவலகம் இயங்குகிற சத்தம் கேட்டது. பொங்கி வந்த வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்தார்.

மறுபடியும் மனம் சட்டைப்பைக்குள் சரிந்தது. கை தானாகவே அந்த ஐநூறு ரூபாய் நோட்டை வெளியே எடுத்தது.

அதில் காந்தி படம் இருந்த இடத்தில் துப்பாக்கியால் சுட்ட மாதிரி பெரிய ஓட்டை இருந்தது.

42. பூனை வெளி

அவளுக்குச் சின்ன வயதிலிருந்தே பூனைகளைப் பிடிக்க வில்லை. ஏன் பிடிக்காமல் போனது என்று இதுவரை யோசித்ததுமில்லை. ஒருவேளை அம்மாவிற்குப் பூனைகளைப் பிடித்ததும் ஒரு காரணமாக இருக்கலாம். அம்மா எப்போதும் ஒரு பூனையை வளர்த்துக் கொண்டிருந்தாள். அது எப்போதும் அவள் காலையே சுற்றிக் கொண்டிருக்கும். குழந்தைகளைக்கூட அப்படிக் கொஞ்சியிருப்பாளா என்பது சந்தேகம். அந்த சந்தேகத்திற்கு முட்கள் முளைத்து அப்பாவின் கால்களில் மிதிபட்டு செத்தது ஒரு பூனை. அம்மா அன்று முழுவதும் அழுதாள்.

நல்ல வெள்ளைக் கலரில் லேசான கருந்திட்டுகளோடு பார்க்கும்போதே பட்டுப்போல மெத்துமெத்தென்றிருந்தது அந்தப் பூனை; வாயோரம் ரத்தம் வழிந்து பார்க்கவே அகோரமாய் கிடந்தது. அப்பா அந்தப் பூனையைக் கொன்றபோது அம்மா வீட்டில் இல்லை. சினிமா பார்க்கச் சென்றிருந்தாள். அம்மாவுக்கு எப்போதும் செகண்ட் ஷோ போவதுதான் பிடிக்கும்.

லாரி டிரைவராக இருந்த அப்பா பத்துநாள் கழித்து வண்டியிலிருந்து இறங்கி வீட்டிற்கு வந்திருந்தார். வீட்டில் அம்மா இல்லையென்றதும் அவர் முகம் கறுத்துப் போனது. அப்போதுதான் அந்தப் பூனை அப்பாவின் கால்களுக்கு அருகில் சென்று உரசியது. ஓங்கி ஒரே எத்து. வீட்டுச் சுவரில் மோதும்போது 'மியாவ்' என்ற சத்தம் கேட்டு எழுந்து வந்த அவள் பூனை கிடந்ததைப் பார்த்தாள். அப்பாவைப் பார்த்தாள். எதுவும் சொல்லாமல் திரும்பிச் சென்று படுத்து விட்டாள். ஆனால் தூக்கம் வரவில்லை.

வெகுநேரம் கழித்து அம்மாவின் சிரிப்புச்சத்தம் தெருவில் கேட்டது. சினிமா விட்டு வரும் அந்த நள்ளிரவில், யாருமில்லாத வீதிகளில் நிசப்தத்தின் வெளியை தன் சிரிப்பினால் அதிர வைத்துக்கொண்டே வருவாள் அம்மா.

சினிமா விட்டு அசந்து போகிற கூட்டம் அவளைத் திரும்பிப் பார்த்துக் கொண்டேதான் போவார்கள்.

"யெக்கா மெதுவா சிரிங்க... ஊரே குலுங்குது... பூகம்பம்னு எல்லாரும் வீட்டை விட்டு ஓடி வந்துறப் போறாக..."

என்று கூட வருகிற தெருக்காரப் பொம்பிளைகள் சொல்வார்கள். எல்லோருக்குமே அம்மாவுடன் வருவது பெருமையாய் இருக்கும்.

எப்போதாவது அம்மா யாருக்காவது பயந்திருப்பாளா. அம்மாவைப் பார்க்கப் பார்க்க முதலில் பெருமையாக இருந்தது அவளுக்கு. ஆனால் பூனைகளோடு அவள் வைத்திருந்த சகவாசம்தான் அவளை வெறுக்கும்படி செய்துவிட்டது.

அப்படி என்னதான் கண்டுவிட்டாள் அந்தப் பூனைகளிடம் என்று புரியவில்லை. மடியில் வைத்துக்கொண்டு அதைத் தடவிக் கொடுக்கும்போது அது கண்களைச் செருகிக்கொண்டு கிறக்கமாய் 'மியாவ்' என்று செல்லம் கொஞ்சும். சில சமயம் அம்மாவின் முகத்தை நாக்கினால் நக்கவும் செய்யும். அவளுக்கு அதைப் பார்க்கப் பார்க்க அருவறுப்பாய் இருக்கும்.

அப்பாவுக்கும் இதெல்லாம் பிடிக்கவில்லை. எத்தனையோ முறை அம்மாவிடம் சொல்லிப் பார்த்தார். கேட்கவில்லை அம்மா. பல நேரங்களில் மூடி வைத்திருக்கும் பாலையும் தயிரையும் கொட்டிவிட்டு நக்கிக் குடித்துவிடும். ஏதாவது பாத்திரங்கள் தெரியாத்தனமாகத் திறந்து கிடந்தால் போதும் அதில் உடனே தலையை நுழைத்துவிடும்.

ஒரு சமயம் அப்பா சாப்பிடும்போது குழம்புச் சட்டியிலிருந்து பூனையின் மயிர் ஒன்றை எடுத்தார். அம்மாவிடம் அதைக் காட்டி திட்டியபோது, அம்மா ரொம்ப அலட்சியமாகச் சிரித்துக்கொண்டே ஏதோ சொன்னாள். அதை அவள் வாய்க்குள் முணுமுணுத்த மாதிரிதான் இருந்தது. ஆனால் அப்பாவுக்கு அது கேட்டுவிட்டது. அவ்வளவுதான் உடனே சோற்றுத் தட்டைத் தூக்கி விசிறியடித்து குழம்புச்சட்டியைக் கொட்டிவிட்டார்.

அதிலிருந்து பூனை அவர் கண்களில் பட்டுவிட்டால் போதும். கண்களில் வெறி மின்னும், விரட்டி விரட்டி அடிப்பார். ஒரு தடவை சிறு பையன்களைப்போல ரோட்டில் நின்று கொண்டு பூனையின் மீது கல்லை வீசிக் கொண்டிருந்தார். பூனைகள் லாகவமாகத் தப்பித்து ஓடிவிடும். இதில் விசித்திரம் என்னவென்றால், அம்மா ஒரு தடவை கூட அப்பாவிடம் பூனைக்கு ஆதரவாகப் பேசியதில்லை. அப்பா விரட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருப்பாள்.

ஒவ்வொரு பூனையாக அப்பா விரட்ட விரட்ட புதிதாக எங்கிருந்தோ பூனைகள் வந்து கொண்டேயிருக்கும். அம்மா விரட்டப்பட்ட பூனைகளைத் தேடவும் மாட்டாள். அதைப் பற்றிக் கவலைப்படவும் மாட்டாள். ஆனால் அப்பா லாரிக்குப் போய்விட்டு வந்த நேரங்களில் எல்லாம் வீட்டிலேயே பழியாய்க் கிடந்து பூனைகளை விரட்டிக் கொண்டிருந்தார்.

ஒருநாள் நடு ராத்திரியில் ஒண்ணுக்குப் போவதற்காக அவள் எழுந்தபோது அந்த இருளில் இரண்டு பச்சைக் கண்கள் அவளைப் பார்ப்பதை உணர்ந்தாள். இருளில் ஒளிவீசிய அந்தக் கண்களைப் பார்த்ததும், அடி வயிறு கவ்விக்கொண்டு பயம் கிளர்ந்தது. ஒரு கணம் நிதானித்துப் பார்த்தபோது சற்று தூரத்தில் படுத்திருந்த அம்மாவின் மீது அந்தப் பூனை ஏறி நின்று கொண்டிருந்ததைப் பார்த்தாள். உடனே பயத்தில் அலறிவிட்டாள்.

“அம்மா... அம்மா...”

அவள் அலறலைக் கேட்ட பூனை மெதுவாகக் கீழே இறங்கி அம்மாவின் முதுகுக்குப் பின்னால் பதுங்கியது.

“என்னட்டி... என்ன ஏன் அலர்றே...”

என்ற குரல் கேட்டது. அவள்,

“அம்மா பூனை... பூனை...”

என்று சொன்னதைக் கேட்ட அம்மா அலட்சியமாக

“பூனைதானே... சரி... சரி... படுத்துத் தூங்கு...” என்று சொல்லிவிட்டு திரும்பிப் படுத்துக்கொண்டாள்.

ஆனால் இருளில் ஒளிர்ந்த அந்தப் பச்சைக் கண்களை ரொம்ப நாட்களுக்கு அவளால் மறக்கமுடியவில்லை. அதை நினைக்கும் போதெல்லாம் சிலீரென்று குளிர் நடுக்கும். அந்தச் சம்பவத்திலிருந்து இன்னும் அதிகமாகப் பூனைகளை வெறுக்கத் தொடங்கினாள் அவள்.

அவளுக்குத் திருமணம் முடிந்து இந்த ஊருக்குக் குடி வந்தபோது நிம்மதியாக இருந்தது. இனி பூனைகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. அவள் கணவன் மில்வேலைக்குப் போய்விட்டு நடுச்சாமத்தில் வந்து கதவைத் தட்டுவான். அவள் கண்விழிக்கும் போதெல்லாம் முதலில் அந்தப் பச்சைக் கண்களே தெரிகிற மாதிரி ஒரு பிரமை, விளக்கு எரிந்தவுடன் எல்லாம் சரியாகிவிடும்.

அவன் உள்ளே வந்ததும் முதலில் வீடு முழுவதும் சுற்றிப்பார்ப்பான். கட்டிலுக்கு அடியிலும் பாத்ரூமிலும், கக்கூஸிலும் சென்று பார்ப்பான். அதற்குப் பின்புதான் சட்டையைக் கழட்டுவான். அவளுக்கு அவன் நடவடிக்கைகள் எதுவும் பிடிபடவில்லை. சாப்பிட உட்காரும்போது சாதாரணமாகக் கேட்பதுபோல,

“யாரும் வந்தாங்களா?”

என்று கேட்பான். அவள் இயல்பான குரலில்,

“யாரு வரப் போறா... ஒருத்தரும் வரலே...” என்று பதில் சொல்லும்போது அவள் முகத்தையே உற்றுப் பார்ப்பான்.

படுக்கையில் அவன் உடல்பலத்தையெல்லாம் அவளிடம் காண்பிப்பான். அவள்,

“ஏன் இப்படி நெறுக்கிறீங்க... வலி உயிர் போகுது...”

என்று சொன்னாலும் கேட்கமாட்டான். கொஞ்ச நேரத்திற்கு ஒரு தடவை,

“திருப்தியா இருக்கா... இப்ப திருப்தியா இருக்கா...”

என்று கேட்டுக் கொண்டேயிருப்பான். அவளுக்கு எதுவும் புரியாது. வேறு எதைப் பற்றியும் பேசமாட்டான். அவள் பேச ஆரம்பிக்கும்போது அவன் தூங்கிவிடுவான். தூக்கம் வராமல் இருட்டுக்குள் முழித்துக்கொண்டே கிடப்பாள் அவள். அப்போதும் அந்தப் பச்சைக் கண்கள் இருளுக்குள் அவளை வெறித்துப் பார்த்துக் கொண்டேயிருப்பதைப் போல தோன்றும். திடீரென ஒரு நாள் இரவில் அந்தக் கண்களின் கூர்மையைத் தாங்க முடியாமல் எழுந்து விளக்கைப் போட்டாள். வெளிச்சத்தினால் உசும்பிய அவளுடைய கணவன்,

“என்ன?”

என்று கேட்டான். அவள் வாய் தன்னையறியாமலேயே,

“இல்ல... பூனை மாதிரி இருந்துச்சி...”

என்று சொல்லியதுதான் தாமதம். அவன் தடபுடவென எழுந்து எல்லா அறைகளிலும் பூனையைத் தேட ஆரம்பித்து விட்டான். அவள் சொல்லியும் கேட்கவில்லை. பூட்டிய சன்னல் கதவுகளின் கொக்கிகளை மறுபடியும் ஒரு தடவை திறந்து மூடினான். கதவுகளின் தாழ்ப்பாளைத் திறந்து பூட்டினான். அதற்குப் பின்பு அவள் உறங்கிவிட்டாள். ஆனால் அவன் உறங்கவேயில்லை.

மறுநாளிலிருந்து, வீட்டில் சன்னல் கதவுகளைப் பூட்டியே வைத்திருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டான். வாசல் கதவையும் திறந்து வைக்கச் சம்மதிக்கவில்லை. எல்லாவற்றிற்கும் திரைச்சீலை போட்டான். அதோடு அவன் நடவடிக்கைகளும் மாறிவிட்டன. சினிமாவுக்குப் போவதாகச் சொல்லிவிட்டுப் போவான். திடீரென ஒரு மணி நேரத்தில் வந்து நிற்பான். வந்ததும் வீட்டுக்குள் எதையோ தேடுவதைப்போல ஒரு

சுற்று சுற்றிவிட்டு வருவான். அவள் கேட்டதற்கு

“இல்லை பூனைதான்... உனக்குத் தெரியாமலே வந்திருந்தா. அதான் தேடிப்பாக்கேன்...”

என்று பதில் சொல்வான். அவளது நடவடிக்கைகளை யாரோ கண்காணித்துக் கொண்டேயிருப்பதைப்போல அவளுக்குத் தோன்ற ஆரம்பித்தது. குளிக்கும் போதும், கக்கூஸ் போகும் போதும், தூங்கும் போதும்கூட அவளுக்கு எதுவும் புரியவில்லை.

ஏற்கனவே கடுகடுத்த முகம் அவள் கணவனுக்கு. இப்போது இன்னும் சிறுத்துவிட்டது. அவளிடம் எதுவும் பேசுவதில்லை. அவளை அருகிலிருக்கும் வீடுகளில் சென்று பேசக்கூடாது. வாசல் கதவை அவன் வந்து தட்டினால் தவிர திறக்கக்கூடாது. கதவைத் திறக்காமலேயே பதில் சொல்லி அனுப்பி விட வேண்டும் என்று ஏராளமான கண்டிஷன்களைப் போட்டான்.

அவளைச் சுற்றி தனிமை இருளென அடர்ந்து கிடந்தது. என்ன செய்வதென்றே தெரியாமல் உறங்கியே பொழுதைக் கழித்தாள். இப்போதும் அந்தப் பச்சை நிறக் கண்கள் தெரிந்தன. ஆனால் இப்போது அந்தக் கண்களில் சாந்தம் நிறைந்திருந்தது போலத் தெரிந்தது. அந்தக் கண்களின் வழியே அந்தப் பூனையை கற்பனை செய்து பார்த்தாள்.

கன்னங்கரேலென்ற பூனை இரண்டு கண்களைச் சுற்றிலும் மட்டும் வெள்ளைநிறம். இப்போது அது அழகாக இருந்தது. ‘மியாவ்’ என்ற அதன் குரல் அவளை ஆறுதல் படுத்தியது. முதுகைத் தூக்கிக்கொண்டு வாலை ஒயிலாக ஆட்டியபடி அவள் கால்களை உரசும்போது அவள் மெய்ம்மறந்தாள். அண்ணாந்து பார்த்தபடி தன் சிவந்த வாயைப் பிளந்தபடி ‘மியாவ் மியாவ்’ என்று சுற்றிச் சுற்றி வந்தபோது அவள் மீது கவிந்திருந்த தனிமை கரைந்தது.

திடீரென கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. அவள் திடுக்கிட்டுப் போனாள் பூனையை எப்படி மறைப்பது? பதட்டத்துடன் அவள் எழுந்து கட்டிலிலிருந்த போர்வையினால், அந்தப் பூனையை மூடி மறைத்தாள். ஆனால் அது ‘மியாவ்’ என்று அலறியது. அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

முகமெல்லாம் வியர்க்க அவள் திடுக்கிட்டு முழித்தபோது, சாயங்காலம் இருட்டத் தொடங்கியிருந்தது.

எழுந்து முகம் கழுவி பவுடர் போட்டு பொட்டு வைத்து விளக்கேற்றி விட்டு சூடாக ஒரு டீ குடித்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

சன்னல்கள், கதவுகளை எல்லாம் அடைத்திருந்ததால் புழுக்கமாக இருந்தது. சன்னல் கதவை லேசாய் திறந்து வைக்கலாமா என்று நினைத்தாள். பயமாய் இருந்தது. திடீரென அவள் கணவன் வந்துவிட்டால்... இல்லை இப்போது வர வாய்ப்பில்லை.

வேலை முடிந்து வர நள்ளிரவாகிவிடுமே. மெல்ல எழுந்து போய் சன்னலைத் திறந்தாள். அவள் திறப்பதற்காகவே காத்திருந்ததுபோல எங்கிருந்தோ சாம்பல் நிறத்தில் ஒரு பூனை சன்னலுக்கு வெளியே ஏக்கத்துடன் அவளைப் பார்த்து 'மியாவ்' என்றது. அவள் அதையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வையில் என்ன தெரிந்ததோ அவளைப் பார்த்தபடியே சன்னல் கம்பிகளுக்கிடையே நுழையப் பார்த்தது.

அவள் முதலில் பயந்து சூவென விரட்ட கையை ஓங்க நினைத்தவள் தானாகவே கையைத் தாழ்த்தி பூனையின் தலையைத் தடவிக் கொடுத்தாள்.

பூனை கிறக்கத்துடன் 'மியாவ்' என்றது. அவள் சிரித்தாள். அவளுடைய அம்மா சிரிப்பதைப் போலிருந்தது.

43. புதிர்வழிகளில் சுற்றித்திரியும்

ஒரு நாட்டார் கதை

பூர்வாசிரமம்

உத்தியோகத்தின் காரணமாக, தனிமையின் சிகரத்தில், தானே ராஜா, தானே மந்திரி, தானே சேவகன் என்ற மனநிலையை - காடு, மலை, பாலையென எல்லாத் திணைகளிலும் அமையப் பெற்றுள்ள எத்தனையோ ரயில்வே ஸ்டேஷன்களில் தண்டவாளங்களில் திசையெட்டும் பிரயாணம் செய்கிற மக்களைப் பத்திரமாக அனுப்பி வைக்கிற வேலையைச் செய்து கொண்டிருக்கும், தனிமையின் ஏகாந்த இனிமையை திகட்டத் திகட்ட அருந்தி மயங்கிய கண்களுடனேயே புதிய தரிசனங்களைக் கண்டடையும் எத்தனையோ ஸ்டேஷன் மாஸ்டர்களில் நானும் ஒருவனாக இருந்த காரணமே இந்தக் கதை பிறக்கவும் காரணமானது. பிறந்த பின்பு அது என்னைத் தன் புதிர்வழிகளுக்குள் விழுங்கியும் விட்டது.

எப்போதாவது தடதடவென கடந்து செல்லும் ரயில்களைத் தவிர அங்கே நிலவுகின்ற தனிமையின் இசைலயத்தைக் குலைப்பதற்குக் கடவுள்கூட விரும்பமாட்டார். என் பொழுதுகளில் எப்போதும் புத்தகங்களும் கற்பனைகளும் முண்டியடித்துக் கொண்டு நெருக்கித் தள்ளும். இதை தனிமையின் கொடும் கூற்றிலிருந்து தப்பித்துக்கொள்ளும் பாதுகாப்பான உபாயமாகவும், பிரத்யேகமான என் உலகத்திற்குள் எந்தச் சேதாரமுமின்றி நான் பதுங்கிக்கொள்ள பதுங்குகுழியாகவும் நான் பயன்படுத்திக்கொண்டு, தேவைப்படும்போது தலையை மட்டும் வெளியே நீட்டிக் கொண்டிருந்தேன்.

கோடை வெயிலின் தகதகப்பில் பொசுங்கிக் கொண்டிருந்தது காடு. காடு என்றதும் பெரும் விருட்சங்கள் அடர்ந்த அடர் வனம் என்று நினைத்துக்கொள்ள வேண்டியதில்லை. குத்துச்செடிகளும், கருவை மரங்களும், நீரின்றி உயிர்வாழும் தகவமைப்பைப் பெற்றுள்ள மற்ற தாவரராசிகளும் அங்கங்கே சிதறலாய் தங்களின் இருத்தலைப்பற்றி உணர்த்துகிற வெம் பரப்புதான் இந்தக் காடு. நான் ஸ்டேஷன் வாசலில் நின்றுகொண்டு வெயிலைப் பருகிக்கொண்டே காட்டைத் தியானித்துக் கொண்டிருந்தேன். என் தியானத்திலிருந்தே இந்தக் கதை சொல்லப் பிறந்து வந்ததைப்போல ஆளுயரக் கம்புடன் ஒரு கீதாரிப்பையன் என் எதிரே நின்று இந்த நாட்டார் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தான். அவன் அதை மிகச் சாதாரணமாகத்தான் சொன்னான். எனக்கும்

அப்போது அந்தக் கதை இப்படிப் புதிர்வழிகளுக்குள் அலையப் போகிற கதை என்று தெரியவில்லை. அவனும் சொல்லி முடித்துவிட்டு வந்த வேலை முடிந்ததென்று போய்விட்டான். அந்தக் கதையை என்னிடம் கொண்டு வந்து சேர்த்துவிட்டால் போதும்; மற்றதை நான் பார்த்துக் கொள்வேன் என்று நினைத்திருந்தவன் போல "சரி சார்... போய்ட்டு வாரேன்..." என்று ஒரு வணக்கம் வைத்துவிட்டுச் சென்றுவிட்டான்.

இந்தக் கதைக்கு இன்னும் கொஞ்சம் சுவாரசியம் கூட்ட, அந்தப் பையனை அதற்கு முன்னும் பின்னும் பார்க்கவேயில்லையென்று எழுதி ஒரு அமானுஷ்யத் தன்மையைக் கொடுக்கலாம் என்று நினைத்தேன்.

ஏற்கனவே அந்தப் பையன் சொன்ன கதையே சுற்றிக் கொண்டிருக்கும் போது, அந்தப் பையனையும் புதிர்வழியில் சிக்க வைக்க வேண்டுமா என்று நண்பர்கள் கேட்டதும் நான் அதன் விபரீதத்தை உணர்ந்து கொண்டேன். ஒரு நண்பர் கேலியாக,

"அப்புறம் போர்ஹேயை கூட்டிட்டு வரணும்ப்பா... அவர்தான் இந்த புதிர் வழிகளைப் பற்றி நன்றாக தெரிந்த ஒரே எழுத்தாளர்..."

என்று சொல்லிச் சிரித்தார்.

எனக்கு உடனே புதிர் வழிகளைப் பற்றிய அறிவு வேறு, புதிர்வழிகளில் அலைகிற அநுபவம் வேறு என்று தோன்றியது.

புதிர்வழிகளை உருவாக்கி மற்றவர்களை அலைய விடுகிற எழுத்தாளர்களும், தான் உருவாக்கிய புதிர் வழிகளில் தானே சிக்கிக்கொண்டு வெளியேற வழி தெரியாமல் அதிலேயே சுற்றிச் சுற்றிவந்து கதறுகிற எழுத்தாளர்களும் இருக்கிறார்களே என்று தோன்றியது. அந்த இளம் கீதாரி சொன்ன நாட்டார் கதையை என் நண்பர்களிடம் சொல்ல ஆரம்பித்தேன்.

ஒரு குலதெய்வத்தின் கதை

அந்தப் பிரதேசத்து கீதாரிகளின் இனத்திலேயே அவ்வளவு அழகாகப் பிறந்தவள் ஆட்டம்மாதான். தூவெள்ளை வெள்ளாட்டுக்குட்டி மாதிரி அழகுன்னா அப்படியொரு அழகு. அதிலும் சுழி பாய்ந்த மாதிரி ஒரு சிறு கறுப்பு மரு இடது கண்ணுக்குக் கீழே இருந்து எல்லோரையும் ஒரு சுண்டு சுண்டியது. கீதாரிகள் அவளை அவ்வளவு பிரியமாக வளர்த்தார்கள். ஆட்டுப்பால் கொடுக்க அவரவர்கள் நான் நீ என்று போட்டி போட்டார்கள். ஆட்டம்மாவுக்கு தன்னுடைய அப்பா அம்மா யார் என்றுகூட தெரியாது. அந்த அளவுக்கு ஆள் மாற்றி ஆள் அவளைப் போற்றி வளர்த்து வந்தார்கள். ஆட்டம்மா கொமராகி ஒரு ஆறுமாதம்

கழிந்திருக்கும். அது ஒரு கடும்கோடை.

காடு கரைகளில் பச்சைப்பரப்பே இல்லை. எங்கும் கருகிய வாடை வீசியது. எல்லோரும் கிடையைத் தூரா தொலைவுகளுக்கு மாற்றிக் கொண்டேயிருந்தார்கள். ஆடுகளுக்கு வெக்கைநோய் வந்துவிடக் கூடாதே என்று பரிதவித்தார்கள். குடிநீருக்காக பல மைல் தூரம் கடந்து போய் வந்தார்கள். காடுமலை வெயில் கோடையென்று ஆட்டம்மாவையும் கூட்டிக்கொண்டே அலைந்ததில் அவளுக்கு அம்மை நோய் வந்துவிட்டது. இனி ஆடுகளை வைத்து தாமரிக்க முடியாது என்று மனம் தளர்ந்தவர்கள் ஆடுகளைப் பத்திக்கொண்டு சந்தைக்குப் போய்விட்டார்கள்.

மிச்சமீதி ஆடுகளை பத்திக்கொண்டு போகும்போது அனலாகக் காய்ச்சலடித்த ஆட்டம்மாவை வேப்பமர நிழலில் வேப்பிலைப் படுக்கையில் படுக்க வைத்து பஞ்சாரத்தால் மூடி வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். சாயந்திரம் திரும்பி வந்து பஞ்சாரத்தைத் திறந்து பார்த்தால் ஆட்டம்மா சாமியாகி விட்டாள். குய்யோ முறையோ என்று அழுகை... ஓலம்... என்ன அழுது என்ன செய்ய. சாமியாகி விட்டவளைத் திரும்பக் கூப்பிட்டால் வருவாளா. அங்கேயே அவளுக்கு ஒரு கோயில் கட்டிக் கும்பிட்டு அந்தப் பகுதியை விட்டே கீதாரிகள் புறப்பட்டு விட்டார்கள்.

இதில் உள்ள விசேசம் என்னவென்றால் அதற்குப் பின்பு அந்தக் கோயிலுக்கு எந்தக் கீதாரிக் குடும்பமும் போய் கும்பிடுவதில்லை. ஆனால் தலைப்பிள்ளைக்கு ஆட்டம்மன் என்றோ ஆட்டப்பன் என்றோ பெயர் சூட்டுவார்கள். அந்தக் கோயில் கொடையை நடத்துவது வேறு சாதிக்காரர்கள். கீதாரிகள் அந்தக் கொடை விழாவிற்குப் பணம் கொடுப்பதோடு சரி போகமாட்டார்கள். யாராவது தெரியாத்தனமாக அந்தக் கோயில் கொடைக்குப் போய் விட்டாலோ, நம்ம குலதெய்வம் இருக்கிற ஊர்தானே என்று கீதாரிகள் யாராவது போய் அந்த ஊரில் குடியிருந்தாலோ, அவ்வளவுதான். ஆட்டம்மனுக்கு வெளம் வந்துவிடும். எப்படியாவது அவர்களை விரட்டிவிடுவாள். ஏன் தெரியுமா? கீதாரிகளை யாராவது அவமானப்படுத்தினால் ஆட்டம்மனுக்கு பொறுக்காது. ரௌத்ரம் பொங்கிவிடும். உடனே எந்த ரூபத்திலாவது தன்னைக் காட்டி கீதாரிகளை விரட்டி அவர்களுடைய மானம் காப்பாள்.

இப்படித்தான் சுமார் அம்பது வருடங்களுக்கு முன்னால் ஆட்டம்மன் கோயில் இருந்த ஊருக்குச் சென்று குடியிருந்த ஒரு கீதாரிக் குடும்பத்திற்கு போன முதல் வாரத்திலேயே, நடுராத்தியில் வீட்டின் ஒரு

பக்கச் சுவரை யாருக்கும் பாதகமில்லாமல் விழவைத்துத் தன்னைக் காட்டினாள். மறுநாளே அவர்கள் அந்த ஊரைக் காலி பண்ணிவிட்டுப் போய்விட்டார்கள். இந்த எச்சரிக்கையை அலட்சியம் செய்த இன்னொரு கீதாரிக்குடும்பத்தில் தலைப்பிள்ளைகள் தவறிக் கொண்டேயிருந்தன. அவர்களும் ஆட்டம்மனின் மகிமையை உணர்ந்து வெளியேறினார்கள். அதற்குப் பின்பு அந்த ஊரில் கீதாரிகள் யாரும் குடியேறவில்லை. அதே போல அங்கேயிருந்து பிடிமண் எடுத்து வெறெங்கும் கோயில் கட்டப்படவுமில்லை.

இந்தக் கதையைச் சொல்லி முடித்தவுடன் இந்தக் கதையின் புதிர் வழிகள் உங்களுக்கும் புலப்படுகிறதா என்று கேட்டேன். நண்பர்கள் பேசாமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். நானும் அவர்களுடைய பொறுமையைச் சோதிக்க விரும்பவில்லை.

ஆட்டம்மன் கோயிலுக்கு யாரும் போகவும் மாட்டார்கள். அந்த ஊரில் கீதாரிகள் யாரும் குடியிருக்கவும் முடியாது. ஆட்டம்மனுக்கு வேறு எங்கும் கோயில் கிடையாது. ஆனால் அதுதான் கீதாரிகளின் குலதெய்வம். கீதாரிகளை யாரும் புண்படுத்தவோ அவமானப்படுத்தவோ செய்தால் ஆட்டம்மனுக்குப் பிடிக்காது. அதனால் தன்னுடைய எல்லைக்குள் எந்தக் கீதாரியையும் இருக்க விடுவதில்லை. விரட்டிவிடுவாள். கீதாரிகளைப் புண்படுத்தியவர்களையோ அவமானப்படுத்தியவர்களையோ ஆட்டம்மன் எதுவும் செய்வதில்லை. தன் இனமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகத் தன் மக்களையே விரட்டி விடுவாள் ஆட்டம்மன். அதேபோல யாரும் இங்கே வந்து என்னைக் கும்பிட வேண்டியதில்லை. உங்களுக்கு வேண்டியதெல்லாம் கிடைக்க நான் வழி செய்வேன் என்று யாராவது வயதான கிழவி மேல் பிரசன்னமாகிக் குறி சொல்வாள் ஆட்டம்மன்.

நான் நிறுத்தியவுடன் கொஞ்சமும் இதை நம்பாத மாதிரி எல்லோரும் என்னையே பார்த்தனர். ஒரு வேளை இட்டுக்கட்டி ஏதேனும் சரடு திரிக்கிறேனோ என்ற சந்தேகத்தின் வால் அவர்களுடைய கண்களில் ஆடியதை நான் பார்த்தேன். ஆனால் எனக்குப் பெருத்த நிம்மதி. பெருஞ்சுமையை இறக்கி வைத்த மாதிரி.

இதோ புதிர் வழிகளை அவர்களுக்கு முன்னால் விரித்து விட்டேன். அதனுள்ளே நுழைவதும் விலகிச் செல்வதும் அவர்கள் விருப்பம்.

புதிர்வழி ஒன்று

கதையைக் கேட்டுக் கொண்டிருந்த அப்பணசாமி ஏதோ கேட்க வந்தவர்போல வாயைத் திறந்தார். பின்பு தலையாட்டிக்கொண்டே அமைதியாக தரையையே பார்த்துக் கொண்டிருந்தார். சிகரெட் புகையை ஆழ்ந்து இழுத்த சாரதி மெலிதான புன்னகையைச் சிந்தினார். மனக்குறளி குதியாட்டம் போட்டது.

நான் நினைத்தபடியே இவர்கள் இரண்டு பேரும் ஆட்டம்மனின் புதிர்வழிகளுக்குள் நுழைவதற்குத் தயாராகி விட்டார்கள். நான் மட்டும் தனியே அலைந்து கொண்டிருக்க முடியுமா.

சில கணநேர அமைதிக்குப் பின் அப்பணசாமி பேச ஆரம்பித்தார். இந்தக் கதை சற்று புதிரானது. கதையின் திருப்புமுனையே கடைசியாகச் சொல்லப்பட்ட விஷயம்தான். தன் மக்களுக்குப் பாதிப்பென்றால் எதிரிகளைப் பழிவாங்குவதுதான் இயல்பு. ஆனால் இங்கே தன் மக்களையே பழி வாங்குவதுபோல ஆட்டம்மன் நடந்து கொள்வது விசித்திரமாக இருக்கிறது.

மேலே இளம் கீதாரி சொன்னதாக நீங்கள் சொன்ன கதை பல விசித்திரமான புனைவுகளுக்கான சாத்தியங்களை நம் முன்னால் விரித்திருக்கிறது. சாத்தியங்களின் வழியே பயணம் செய்தால் புதிய அனுபவங்களைப் பெறலாம் என்று நினைக்கிறேன்.

ஆட்டம்மா அழகியென்பதையும் நாடோடி வாழ்க்கை வாழ்கிற கீதாரிகள் அந்தந்த கிராமத்து மக்களின் தயவையும் அனுசரணையையும் வேண்டி அவர்களை அண்டியே வாழ்ந்து வந்தார்கள் என்பதையும் இந்தப் புனைவின் சாத்தியத்திற்குள் இணைக்கும்போது ஆட்டம்மன் கதை சற்றே புரண்டு எழுகிறது.

கீதாரிகள் கிடைபோட்டிருந்த கிராமத்திலுள்ள எல்லா சாதி இளைஞர்களின் கண்களையும் பறித்துக் கொண்டிருந்தாள் ஆட்டம்மா. அவள் தனிமையில் இருந்த நேரத்தில் ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த இளைஞன் / இளைஞர்கள் அவளைப் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சிக்கும்போது அவள் தற்கொலை செய்துகொண்டாள் அல்லது கொலை செய்யப்பட்டாள். திரும்பி வந்த கீதாரிகள் இந்தக் கொடுமையைக் கண்டு பொங்கினாலும் போதிய ஆள்பலமோ தைரியமோ இல்லாததால் ஆட்டம்மாவை அங்கேயே புதைத்துவிட்டு அவர்களுடைய புவியியல் வரைபடத்திலிருந்து அந்த ஊரை அழித்துவிட்டார்கள்.

கொடுமை செய்த சாதியினர் அகாலமாய் இறந்துபட்ட பெண்ணின்

பெருங்கோபத்தை நினைத்து பயந்து ஆட்டம்மாவுக்கு அங்கேயே கோயில் கட்டி கும்பிட்டார்கள். அந்தக் கோயிலுக்கு அவர்களே கொடை நடத்தினார்கள். கீதாரிகளோ அந்த சாதியினர் இருக்கிற பக்கமே போகக்கூடாது என்று இரத்த பரம்பரை வழியாக ஆட்டம்மன் பற்றிய புனைவுகளைச் சொல்லிச் சொல்லி வந்திருக்கலாம். இது ஒரு அனுமானம்தான். சாரதி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டுவிட்டு அப்பண சாமி அமைதியாக கவிந்து வரும் இருளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

புதிர்வழி இரண்டு

அப்பணசாமி சொன்னதையெல்லாம் சிகரெட் புகைத்தபடியே கேட்டுக் கொண்டிருந்த சாரதி தொண்டையைச் செருமிக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

நான் இன்னொரு வழியே இந்தப் புதிர்வழியில் நுழையப் பார்க்கிறேன். ஆட்டம்மாவுக்கும் வேறு சாதியைச் சேர்ந்த இளைஞனுக்கும் காதல், இரண்டு சாதிக்காரர்களுக்கும் இது பிடிக்கவில்லை. காதலர்களைக் கண்டிக்கிறார்கள். இருவரும் அழியாக் காதலைச் செதுக்கிக் கொண்டிருந்தார்கள். இதற்குப் பின்பு இந்த புதிர்வழி இரண்டாகக் கிளை பிரிவதைத் தவிர்க்க என்னால் முடியவில்லை.

(அ) ஆட்டம்மாவின் காதல் காரணமாக இரண்டு சாதிக்காரர்களும் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். அதில் அதிக பாதிப்பு கீதாரிகளுக்குத்தான். தன்னால் தன் இனமக்களும் அவர்களது செல்வமும் அழிவது கண்டு மனம் பொறுக்காமல் ஆட்டம்மா தற்கொலை செய்து கொண்டாள். அந்த தற்கொலைக்குப் பின்பு கீதாரிகள் அந்த ஊரை விட்டு காலி பண்ணி வந்தபிறகும் நினைவின் அடுக்குகளிலிருந்து அந்த ஊரின் ஞாபகத்தை அழிக்க சில புனைவுகளைப் புனைந்தார்கள். அதேபோல அந்தக் கன்னித் தெய்வத்தின் கோபம் தங்கள் மீது விழுந்துவிடக் கூடாதென்று பயந்த மற்ற சாதியினர் கோயில் கட்டி கும்பிட்டனர்.

(ஆ) ஆட்டம்மாவின் காதலால் தங்களுடைய சாதிப் பெருமை குலைவதாக நினைத்த இளைஞனின் சாதிக்காரர்கள் அவர்கள் இருவரும் ரகசியமாகச் சந்திக்கும்போது இருவரையும் கொலை செய்துவிடுகிறார்கள். இதனால் கீதாரிகளுடன் ஒரு சிறிய யுத்தமே நடக்கிறது. யுத்தத்தில் கீதாரிகள் உயிர்தப்பிப் பின்வாங்குகிறார்கள். அதற்குப்பின் வழக்கப்படி கொலையுண்ட பெண்ணைத் தெய்வமாக்கி வழிபடுகின்றனர்.

இரண்டு சாதிக்காரர்களும் சந்திக்காமலிருக்க ஆட்டம்மனைச் சாக்காக வைத்து புனைவுகளைக் கட்டி எழுப்பினர் கீதாரிகள். நாளா வட்டத்தில் பகை முடிந்து போனாலும் புனைவு நிலை கொண்டு விட்டது. அந்தப் புனைவின் வழியே தங்கள் முந்தைய வரலாற்றை மீண்டும் மீண்டும் புத்துருவாக்கம் செய்து வருகின்றனர் கீதாரிகள்.

நண்பர் ஒரு புதிர்வழிக்குள் சென்று வந்த ஆனந்தத்துடன் எங்களைப் பார்த்துச் சிரித்தார். அப்பணசாமி "வாங்க டீ சாப்பிடலாம்" என்றவுடன் மூன்றுபேரும் எழுந்து நடந்தோம். அப்போது சாரதி,

"என்ன ஸ்டேஷன் மாஸ்டரய்யா... நீங்க ஒண்ணும் சொல்ல மாட்டீங்கீக. சும்மா சொல்லுங்க... போர்ஹே ஒண்ணும் கோவிச்சிக்கிட மாட்டார்..."

என்றார் சிரித்தபடி.

புதிர்வழி மூன்று

நாங்கள் மூவரும் டீ குடித்து முடிக்கும் வரை எதுவும் பேசவில்லை. அவர்கள் இரண்டுபேரும் என்னிடமிருந்து எதையோ எதிர்பார்க்கிற மாதிரி இருந்தது. வேறுவழியின்றி நானும் ஒரு புதிர்வழிக்குள் பயணம் செய்தேன். கீதாரிகளின் நாடோடி வாழ்க்கையில் இப்படி ஒரு இக்கட்டை சந்தித்ததேயில்லை. ஆட்டம்மாவை எப்படியோ பார்த்து அவள்மீது ஆசை கொண்ட அந்தப் பாளையத்து ராஜா அல்லது ஜமீன்தார் அல்லது பண்ணையார் அல்லது நாட்டாமை அவளை அரண்மனைக்கு அனுப்பி வைக்கச் சொன்னார். எத்தனையோ காமக் கிழத்திகளில் ஒருத்தியாக தங்கள் குலமகளும் இருக்கவா என்று கீதாரிகள் மனம் புழுங்கினர். கீதாரிகளின் தலைவன் கண்கலங்க ஒரு வழி சொன்னான். எல்லோரும் கண்ணீர் வடித்தனர். ஆனால் வேறு வழியில்லை.

ஒரு நாள் அமாவாசை இரவில் ஆட்டம்மாவைக் கன்னித் தெய்வமாக்கி விட்டு அந்த ஊரை விட்டே தப்பித்துச் சென்றுவிட்டார்கள். விஷயம் தெரிந்த ராஜா அந்தக் கன்னித் தெய்வத்திற்கு கோயில் கட்டி கும்பிட்டார். தன் குலமக்களையும் கும்பிட்டு வருமாறு பணித்தார். அதற்குப் பின்பு அந்த ஊருக்குள் நல்லது பொல்லது எது நடந்தாலும் அது அந்த ஆட்டம்மனால்தான் என்ற புனைவுகளில் புதிர்வழிகளை அந்த ஊர் மக்களே விரித்துக்கொண்டு போனார்கள்.

கீதாரிகளும் முதலில் இந்த ஊரின் சங்காத்தமே வேண்டாம் என்று சில நிகழ்வுகளை இட்டுக் கட்டி ஆட்டம்மன் சார்ந்த புனைவாக மாற்றி

வைத்தார்கள். அதனாலேயே தன் மக்களை தன் எல்லைக்கு அப்பால் விரட்டும் தெய்வத்தைக் காண முடிகிறது.

சாரதி என்னைப் பார்த்துத் திரும்பி,

“இதற்கு ஒரு முடிவே இல்லையா? இப்படியே ஆளுக்காள் இந்தக் கதையை புதிது புதிதாய் புனைந்து கொண்டிருக்க வேண்டியதுதானா?”

என்று கேட்டார். அதற்கு அப்பணசாமி,

“ஏன் இறுதியான அல்லது உண்மையான கதையை நோக்கிப்போக ஆசைப்படுகிறீர்கள். உண்மையில் அறிவாளிகள்தான் உண்மையைத் தேடி பின்னால் ஓடிக் கொண்டிருப்பார்கள். ஆனால் சாதாரண உழைப்பாளி மக்களுக்கு உண்மையை விட உன்னதமான ஒன்று காத்துக் கொண்டிருக்கிறது. அதுதான் வாழ்க்கை. அந்த வாழ்வனுபவங்களினூடாக தங்கள் வரலாற்றை நினைவுபடுத்தவும், பாதுகாக்கவும், தங்களுடைய ஆன்மிக, பண்பாட்டுத் தேவைகளை அவர்களே உருவாக்கிய புனைவின் மூலம் உருவான தெய்வத்தின் மூலம் நிறைவேற்றவும், முடிந்தால் நிகழ்காலத் தேவைகளுக்காய் அந்தத் தெய்வங்களையே புனைவின் புதிர்வழிகளில் அலைய விடவும் செய்கிறார்கள். அதனால்தான் நாட்டார் தெய்வங்களைப் பற்றிய புனைவின் எல்லைகளை யாராலும் கற்பனை செய்ய முடிவதில்லை.”

மூச்சுவிடாமல் பேசிக் கொண்டிருந்தார். எனக்கும் அவருடைய விளக்கம் சரிதான் என்று பட்டது.

ஒரு கனத்த அமைதி எங்களுக்கு நடுவில் ஏற்கனவே வந்து சேர்ந்திருந்ததை உணர்ந்தேன்.

நாங்கள் பிரியும் நேரமும் இடமும் வந்தது.

மௌனமாக கைகளால் சைகை செய்துகொண்டே பிரிந்து சென்றோம். எங்கள் ஒவ்வொருவர் கூடவும் ஒரு நாட்டார் கதை தன் பயணத்தை மீண்டும் துவங்கியிருந்தது.

44. அடி

பஸ்ஸிலிருந்து இறங்கி, ஏதோ தன் தாயைப் பார்க்கிற மகிழ்ச்சி ததும்ப சுற்றுமுற்றும் பார்த்தான் நெல்லையப்பன். ஒவ்வொரு அடியையும் நிதானமாக எடுத்து வைத்து சாவதானமாக நடந்தான். அவனுக்கு மிக அருகில் ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் மழலையொலி கேட்கிறதோ, ஒரு கணம் புளகாங்கித உணர்வு பொங்கியது. போக்குவரத்தின் இரைச்சலும், நகரின் சத்தங்களும் எல்லாவற்றையும் விழுங்கிவிடும் பகாசுரனின் ஒற்றைக் குரலாக ஒலித்தது.

இந்தப் பிரயாணம் கூட தள்ளிப் போக வேண்டியதுதான். புறப்படுகிற வரையில் முத்துலட்சுமிக்கு அனுப்பி வைக்க மனமில்லை. குழந்தைக்கு உடம்பு சரியில்லை. தாலுகா ஆபீஸ் போய் வாக்காளர் அடையாள அட்டைக்கான புகைப்படம் எடுக்க வேண்டும். தன்னால் தனியாக இருக்க முடியாது என்று என்னவெல்லாமோ சொல்லிப் பார்த்தாள். பின்னால் கம்பெனியில் லீவு கிடைக்காதென்று, அவன்தான் பிடிவாதமாய் கிடைத்த இந்த சந்தர்ப்பத்தின் விரலை விடாமல் பற்றிக்கொண்டு பஸ் ஏறிவிட்டான்.

இத்தனைக்கும் நெருங்கிய சொந்தமில்லை. ஒன்றுவிட்ட சித்தப்பாவின் மகள் திருமணம். உறவினர்கள் அனைவருமே எல்லா விசேசங்களுக்கும் பத்திரிகை அனுப்பத்தான் செய்கிறார்கள். அவன்தான் எதிலும் கலந்துகொள்ளாமல் தவிர்த்துவிடுவான். ஒவ்வொரு முறையும் அவன் திருப்பூரிலிருந்து வந்து போக முடியுமா? நினைத்த நேரமெல்லாம் லீவு கிடைக்குமா? ஆனால் இந்த மூன்று மாதங்களாகவே சிறுவயது ஞாபகங்கள் ஊற்று போல பொங்கிக் கொண்டேயிருந்தது. அதற்கு ஒரு காரணம் அவன் வேலை பார்க்கும் கம்பெனியிலேயே குறுக்குத் துறை சுப்பிரமணியன் மூன்று மாதங்களுக்கு முன் வந்து சேர்ந்திருந்தான். அவனிடம் ஊரைப் பற்றிப் பேசப்பேச அது அவனை பால்ய காலத்திற்குள் சிறகடிக்கவும், தாமிரபரணிக்குள் துள்ளிக் குதிக்கவும் வைத்தது. அவன் எப்போதும் ஊரைப் பற்றியும், பழைய நண்பர்களைப் பற்றியும், பழைய சம்பவங்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்த முத்து லட்சுமி கூட,

“என்ன ஐயாவுக்கு நெல்லைச் சீமை நெனப்பு நெதசரி வருது... வேறெதும் சங்கதியா...”

என்று கிண்டல் செய்தாள். எவ்வளவோ விஷயங்கள் இருக்கத்தான் செய்தன. எல்லாவற்றையும் சொல்லி விளங்கவைக்க முடியுமா இல்லை

சொல்லில் விளக்க முடியுமா. ஆற்றுக்குப் போகிற வழியில் இருந்த அக்ரகாரத்தில் அவனது பால்ய கால சிநேகிதி கோதையை மறக்க முடியுமா. தாத்தாவும் ஆச்சியும் கொடிகட்டிப் பறந்த சிந்துபூந்துறை வீட்டைத்தான் மறக்கமுடியுமா. சாமியை, பாலுவை, உலகநாதனை, மாடசாமியை மறக்க முடியுமா.

எந்தத் தயக்கமோ கூச்சமோ இல்லாமல் ஏதோ தினசரி அலுவலகம் சென்றுவிட்டு வீடு திரும்புவதைப்போல பெரியதட்டாக் குடித்தெருவை நோக்கி நடந்து கொண்டிருந்தான். புதிய கட்டடங்களோ, பெரிய பெரிய விளம்பரங்களோ, நெரிசல் மிகுந்த போக்குவரத்தோ கூட அவனுக்கு எந்த வித்தியாசமான உணர்வையும் ஏற்படுத்தவில்லை. அங்கே முக்கில் டீக்கடையில் இருந்த மாஸ்டர் அண்ணாச்சி கூட அவனை அடையாளம் கண்டு சிரித்தமாதிரி இருந்தது. அவன் இந்த ஊர்க்காரன்தானே. தாமிரபரணியில் முங்காச்சல் போடாதவன் இந்த ஊரில் இருப்பானா. அவனும், சாமியும், உலகநாதனும் இன்னநேரம் என்று கிடையாது. எப்போது நினைத்தாலும் ஆற்றுக்குப் போய் குளிப்பார்கள். தடுமன் பிடித்தாலும் சரி. மூக்கில் சளி பச்சையாய் புல்லாக்கு போட்டுக் கொண்டிருந்தாலும் சரி. அம்மாவின் திட்டுகளும், அடித்தொடை கிள்ளல்களும் அவர்கள் ஆற்றுக்குப் போவதை நிறுத்தமுடிந்ததில்லை.

கள்ளன் போலீஸ், கண்ணாமூச்சி, கத்திச்சண்டை மல்லுக்கட்டு எல்லாமும் ஆற்றுக்குள்தான். அப்படித்தான் ஒரு தடவை அவனும் சாமியும் மல்லுக்கட்டும்போது சாமி வசமாக கழுத்தில் கிட்டிப்பிடி போட்டு தண்ணீருக்குள் அமுக்கி விட்டான். மூச்சுத் திணறி வாயை வாயைத் திறந்து நிறையத் தண்ணீரைக் குடித்துவிட்டான். கண்களைக் கட்டிக் கொண்டு வந்துவிட்டது. கை கால்கள் துடிக்கின்றன. அவன் போராட போராட சாமி விளையாட்டே குறியாய் மேலும் இறுக்குகிறான்.

திடீரென யாரோ கூப்பாடு போடுகிற சத்தம் கேட்டது. உடனே சாமியின் கால்களிலிருந்து கழுத்து விடுபட்டது. தண்ணீரிலிருந்து வெளியே வந்து வாய் வழியாகவும் மூக்கு வழியாகவும் ஓங்கரித்து வெளியேறியது தண்ணீர். தாறுமாறாய் மூச்சு வாங்கியது. அவன் உடனே சாமிகூட சண்டை பேசாதே என்று சொல்லிவிட்டான். ஆனால் எப்படியோ அம்மாவுக்குத் தெரிந்துவிட்டது. உடனே நெல்லையப்பனிடம் விசாரித்தாள். அம்மா அடிக்கத்தான் போகிறாள் என்று பயந்ததற்கு மாறாக அவனைக் கூப்பிட்டு தன் மடி மீது உட்கார வைத்துக்கொண்டு,

“பயப்படக்கூடாதுடா... ஆறு என்னசெய்யும்... எல்லாம் அவ பிள்ளைகதானே. நம்ம உடம்புல ஓடுற ரத்தமே அந்த தண்ணிதானே... நாம இந்த உயிர் வேண்டாம்னு நெனச்சு உதறினாலொழிய அவளா எதுவும் செய்யமாட்டா...”

என்று சொன்னாள். அப்போது பேசும் குரல் அம்மாவின் குரல் போலவே இல்லை. எங்கிருந்தோ ஆழ்ந்த அமைதியிலிருந்து கிளம்பி வந்ததைப் போலிருந்தது. அப்போது அவனுக்கு அதொன்றும் புரியவில்லை.

ஆனால் தாத்தா முதலில் பின்பு கொஞ்சநாளிலேயே ஆச்சி என்று கருப்பந்துறைக்குப் போய் சாம்பலாகி தாமிரபரணியில் கரைந்த பிறகு திருநெல்வேலியில் ஒன்றுமில்லாமல் போய்விட்டது. வாழ்க்கையின் சுழிகளில் சிக்கி எங்கெங்கேயோ அலைக்கழிக்கப்பட்டு, திருப்பூரில் கரையொதுங்கினான். அவ்வப்போது சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது திருநெல்வேலி வரவும் ஆற்றில் ஒன்றுக்கு இரண்டு தடவையாய் குளிக்கவும் ஆரெம்கேவி ஜவுளிக்கடையில் வேலை பார்க்கிற உலகநாதனைப் பார்த்து பழைய நண்பர்களைப் பற்றி பேசவும் தவறுவதில்லை.

அப்படி ஒரு தடவை மாமாவின் வீட்டுக்கு வந்திருந்த சமயம், இரவில் ஆற்றுப்பக்கம் நடந்தான். அன்று பௌர்ணமி. ஆற்றுமணல் அத்தனை ஒளியுடன் மின்னிக் கொண்டிருந்தது. நிலவின் ஒளியில் அந்தப் பிரதேசமே கனவு மயக்கத்தில் ஆழ்ந்திருந்தது. அவன் காலடிச்சத்தம் கூட அந்த மோன நிலையைக் கலைத்துவிடுமோ என்று பயந்தான்.

ஆற்றின் கரையை நெருங்க நெருங்க பகலில் முணுமுணுவென்று ஓடிக் கொண்டிருக்கிற நீரின் ஒலி இப்போது அருவியின் பேரோசையாய் கேட்டது. அதைக் கேட்டதும் அவன் முதலில் திடுக்கிட்டுப் போனான். அந்தப் பேரோசை வேறெங்கிருந்தோ வானிலிருந்து இறங்கி வருவதைப்போல இருந்தது.

பகலில் பார்க்கும்போது இருந்த தோற்றத்திற்கும், இரவில் அதன் பிரம்மாண்டமான ஆகிருதிக்கும் சம்பந்தமில்லாமல் இருந்தது. வேறு ஒரு பிறவியைப்போல. திரும்பிவிடலாமா என்று யோசித்தான். பேராச்சி, இசக்கி என்று படித்துறை சாமிகள் வேறு ஞாபகத்துக்கு வந்து கொண்டேயிருந்தன. தூரத்தில் தீயின் ஒளி. கருப்பந்துறையாக இருக்க வேண்டும். யாரோ ஒருவர் இந்த வாழ்க்கையின் அல்லல்களுக்கு முடிவுரை எழுதிப் போய்விட்டார்போல, மனசின் ஓரத்தில் பயம் கவ்வ மெல்ல கண்களை ஒரு தடவை நன்றாக மூடித்திறந்தான். மூச்சை நன்றாக இழுத்து உள்ளே நிறைத்தான்.

மெல்லிய குளிர்ந்த காற்று உடலெங்கும் உள்ளும்புறமும் நிறைந்தது. நிதானமாக, ஒவ்வொரு இடமாக உற்றுப் பார்த்தான். எல்லாம் பகலில் அவன் விளையாடிய இடங்கள்தான். அதோ அந்தப் பாறையில்தான் இன்று காலையில் துணிதுவைத்துக் குளித்தான். அந்தப் பாறை இப்போது பெரிய மலையைப்போல கண்களை மறைக்கிறது. ஒரு கணம் அவனுடைய பயத்தைக் கண்டு அவனுக்கே சிரிப்பு வந்தது. வெள்ளி இழைகளைப்போல தண்ணீர் நிலவின் ஒளியில் ஒன்றுக்கொன்று நூற்றுப் பின்னிக்கொண்டு ஓடியது. மீன்கள் சளப்சளப் என்று துள்ளிவிழும்போது மின்னலின் துளியொன்று தவ்விக் குதிப்பதைப்போல இருந்தது. பகலில் சொல்ல முடியாத ரகசியங்களையெல்லாம் இரவுக்குள் சொல்லி முடித்து விட வேண்டும் என்பதுபோல பேசிக் கொண்டேயிருந்தது ஆறு. அந்தக் குரலின் குழைவு அவன் மனசில் ஆனந்தத்தை நிறைத்தது.

அவன் ஆற்றில் காலை வைத்தான். ஒரு குழந்தையின் சிரிப்பொலி கேட்டது. அவன் கால்களில் மோதிய நீரின் சிரிப்பு. அவன் மெதுவாக நீருக்குள் கால்களை அளைந்தபடி அருகில் இருந்த பாறை மீது ஏறி உட்கார்ந்தான். அமைதி, பேரமைதி ஆற்றின் உரத்த சத்தம் மட்டும்தான். ஒரு அருவி தரை தொட்டு சிதறுவதைப்போல, வயதான பெரியவர்களின் குழறல் பேச்சுபோல, குழந்தைகளின் மழலைப் பிதற்றலைப்போல, ஆற்றிலுள்ள எல்லா மீன்களும் ஒரே குரலில் பாடிக் கொண்டிருப்பதைப்போல. அந்த சத்தத்தை எப்படி யோசித்தாலும் அப்படியே தோன்றியது. ஆனால் எதைப் போலவும் இல்லை அந்த சத்தம். அவன் அந்தப் பாறை மீது படுத்தான்.

கண்கள் நிறைய வானம். அப்படியே வானம் முழுவதும் அவன் மீது மட்டும் கவிந்த மாதிரி. கீழே அவனும் இந்த ஆறும், அதன் ஓசையும் மட்டும்தான். வேறு எதுவும் சாசுவதமில்லை. அவர்கள் இன்று நேற்றல்ல. ஆண்டாண்டு காலமாக இதே மாதிரி ஒருவருக்குள் ஒருவராக இருந்து கொண்டேயிருக்கிறார்கள். ஆறுதான் அவனை மனிதனாக்கியது. நாகரீகத்தைக் கற்றுக் கொடுத்தது. காட்டுமிராண்டிகளாக கிழங்கு கனிகளைத் தின்றுகொண்டு அலைந்து திரிந்தவன் ஆற்றின் மடியில்தான் தன்னை உணர்ந்தான்.

இப்போது அவன் பாறையின் மீது இருக்கிறானா அல்லது பாறையின் கீழ் இருக்கிறானா. பாறை கூட மெத்தென்ற உணர்வைத் தரமுடியுமா. ஆற்றின் உரைவீச்சை அவன் கேட்டுக் கொண்டிருக்கிறானா அல்லது ஆற்றினுள்ளே அமிழ்ந்து அதனிடம் உரையாடிக் கொண்டிருக்கிறானா... ஆறு பேசிக் கொண்டிருப்பதெல்லாம்

அவனுக்காகத்தானா. அவனுக்குள்ளேயும் ஆற்றின் பேரொலி கேட்கிறதே. இதெல்லாம் கனவா மயக்கமா. இல்லை தரிசனமா. ஆறு தன் விசுவரூபத்தை இன்று அவனுக்குக் காட்டிவிட்டதா. அதன் மடியில் தன்னை மறந்த மயக்கத்தில் வீழ்ந்து கிடந்தான். அப்போது மனசில் ஏற்பட்ட நிறைவு அதன் பிறகு வாழ்வின் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்படவில்லை. தூரத்திலிருந்து அவன் பெயரைச் சொல்லி யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது. உடனே தூக்கம் முழித்த மாதிரி காட்சியே மாறிவிட்டது. அவனைத் தேடி அவன் மாமா வந்து கொண்டிருந்தார்.

தாமிரபரணியை நினைக்கும் ஒவ்வொரு முறையும் இந்தத் தரிசனத்தின் நிழல் மனசில் படரும். உடனே ஒரு பரவச உணர்வு தோன்றும். அந்த உணர்வினைத் தேடியே தாமிரபரணியின் நினைவும் அடிக்கடி வரும்.

சித்தப்பாவின் மகள் திருமணத்தன்று காலையில் எல்லோருடனும் போய் ஆற்றில் குளித்துவிட்டு வந்தான். ஆறு பரிதாபமாய் ஒடுங்கி அந்திமக் காலத்தில் வற்றிச் சுருங்கிப் போன வயதான ஒரு ஆச்சியைப்போல இருந்தது. பல இடங்களில் ஆறாகவே ஓடாமல் ஒரு குட்டையைப் போல் தேங்கிக் கிடந்தது. பச்சைப் பசேல் என்று. ஒரு கவிச்சி வாடையுடன், வாயில் வைத்தால் ஒமட்டிக் கொண்டு வந்தது. எங்கே போனது ஆற்றின் வெள்ளி நிறம்? ஆனால் இதையெல்லாம் உற்றுக் கவனிக்கவோ யோசிக்கவோ நேரமில்லை. ஆட்களோடு ஆட்களாக அவசர அவசரமாகக் குளித்துக் கிளம்பிவிட்டான். வேறு யாருக்கும் வித்தியாசமாய் எதுவும் தோன்றவில்லைபோல. இது இப்படித்தான் என்கிற மாதிரி சாதாரணமாய் இருந்தார்கள்.

கல்யாணம் முடிந்து பொண்ணு மாப்பிள்ளை மறுவீட்டுக்கு மாப்பிள்ளையின் ஊரான கடையநல்லூருக்குப் போய்விட்டார்கள். மறுநாள் காலையில் அவன் ஊருக்குப் புறப்படுவதாக அவர்களிடம் சொல்லிக்கொண்டான். பூர்ணகலா தியேட்டரில் ஒரு சினிமா பார்த்தான். நகரத்தின் செயற்கையான ஒளி வெள்ளத்தின் வெக்கையும் புழுதியும் சேர்ந்து கசகசத்தது. ஜங்சனிலுள்ள நடைமேடை இட்லிக்கடையில் பழுத்த ஆச்சியின் கையினால் இட்லி தோசை வாங்கிச் சாப்பிட்டான். குடிக்க வைத்த தண்ணீர் கசந்தது.

“என்ன ஆத்துத் தண்ணியில்லையா... ஆச்சி...”

“ஆத்துத் தண்ணிதான் இந்த லட்சணத்துல இருக்கு...”

அவன் எதுவும் பேசவில்லை. சாப்பிட்டு முடித்துவிட்டு சிந்து பூந்துறை வழியாக ஆற்றை நோக்கி நடந்தான்.

தெருவிலிருந்து ஆற்றின் கரையில் இறங்கினான். நகரத்தின் வெளிச்சம் எதிரொளித்தது. மணலே இல்லை. இறுகிய தரையாக இருந்தது ஆறு. முன்பு ஒரு காலத்தில் மணல் இருந்ததற்கான அடையாளமே போல அங்கங்கே திட்டுத்திட்டாய் மணல் சிதறிக் கிடந்தது. ஆற்றுக்குள்ளே நடக்க நடக்க வளர்பிறை நிலவின் ஒளி மெல்லிசாக படர்ந்திருந்தது தெரிந்தது. வேலிக்கருவை மரங்கள் அடர்ந்திருந்தன. அவன் எதையும் கவனிக்கவில்லை. அவனுக்குள் அதே பழைய பரவச உணர்வு குமிழியிட்டது. ஆற்றைத் தேடி ஆற்றுக்குள்ளேயே ரொம்ப தூரம் நடந்து விட்டான். ஆற்று நீரின் குசுகுசுப்பு கூட கேட்கவில்லை.

திடீரென அவனுக்கு முன்னால் ஒருவன் வந்துநின்றான். எங்கிருந்து வந்தான். எப்படி வந்தான் என்று தெரியவில்லை. அவன் திடுக்கிட்டுப் போனான். இருளைப் போர்வையாய்ப் போர்த்தியிருந்தான். முகம் சரியாகத் தெரியவில்லை. வந்தவன், அவனைப் பார்த்து,

“என்ன?”

என்றான். அந்தக் குரலின் உறுதி குடலை அறுத்தது. ஏதோ ஒரு அசட்டுத்தைரியத்தில் அவனும்,

“என்ன?”

என்றான். ஏதோ அவன் கேட்ட கேள்விக்குப் பதில் கிடைத்து விட்டதைப்போல வேகமாக அந்த இருள் உருவம் சென்று விட்டது. அப்போதுதான் கவனித்தான் அந்த உருவத்தின் கையில் ஒரு ஆளுயரக் கம்பு இருந்தது.

ஆற்றின் நீரருகில் ஒரு பெரிய பாறையில் சென்று உட்கார்ந்தான். ஆற்றை உற்றுப்பார்த்தான். தண்ணீர் ஓடுவதே தெரியவில்லை. ஒரு சாக்கடை ஓடுகிறபோது கேட்கிற சத்தத்திற்கு மேல் எதுவும் கேட்கவில்லை. க்ளக் க்ளக் என்று நீண்ட இடைவெளி விட்டு கேட்டுக் கொண்டேயிருந்தது. பாறையின் கீழே இறங்கி இறங்கி தண்ணீரைத் தொடுவதற்காகக் கால்களைத் தொங்க விட்டான். இப்போது பாதத்தைத் தொட்டுக்கொண்டு தண்ணீர் ஓடியது. உறைந்த பனியைப்போல இறுகி ஓடியது தண்ணீர். அவன் அரைகுறை இருளில் எதிரே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது அவன் காலை யாரோ வெடுக்கென்று பிடித்திழுப்பதுபோல இருந்தது. தன்னிச்சையாகவே கால்களை உயரே இழுத்துக் கொண்டான். மீன்கடி மாதிரி தெரியவில்லை. அப்படியே உட்கார்ந்துகொண்டு தண்ணீரை உற்றுப் பார்த்தான். வித்தியாசமாய்

எதுவும் தெரியவில்லை. மீன்களாய்தான் இருக்கும்.

மறுபடியும் தயங்கித் தயங்கி கால்களைத் தொங்கவிட்டான். என்ன ஆயிற்று? கலகலத்து சளசளவென்று பேசிக் கொண்டேயிருந்த ஆறு எங்கே?

அமைதியான சவஊர்வலம்போல கனத்து ஓடிக் கொண்டிருக்கிறதே. இங்கேயுள்ள காற்றும் இருளும் கனத்து ஆளை அமுக்குகிற மாதிரி இருக்கிறதே. இதைப் பார்ப்பதற்காகவா இவ்வளவு கஷ்டப்பட்டு வந்தோம் என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே மீண்டும் இரண்டு கால்களையும் யாரோ பிடித்திழுப்பதுபோல இருந்தது. அவன் கைகளால் பாறையை அப்படியே பற்றிக் கொண்டான். ஆனாலும் ஒருத்தர் அல்ல பத்திருபது பேர் சேர்ந்து இழுப்பதைப்போல இருந்தது. அவன் நிலை தடுமாறி தண்ணீருக்குள் விழுந்தான்.

பயத்தில் குரல் எழும்பவில்லை. அப்போதுதான் கவனித்தான். அவனைச் சுற்றிலும் பல முகங்கள். எல்லாம் வாயை வாயைத் திறந்து மூச்சு விட முடியாமல் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருந்தன. தண்ணீருக்குள்ளிருந்து குரல்கள் கதறின. பெண்கள் குழந்தைகளின் அழுகை.

“ஐயா என்ன விட்டுடுங்க... அடிக்காதீங்க...”

“நீச்சல் தெரியாது... என்னைய காப்பாத்துங்க...”

“ஐயோ எம்பிள்ள... எம்பிள்ள...”

மடார் மடாரென்று தண்ணீரில் கம்பால் அடிக்கிற சத்தம் கேட்டது. “ஐயோ அப்பா... அம்மா... என்னய காப்பாத்துங்க...” என்ற குரல்கள் தெளிவாகக் கேட்டன. கைக்குழந்தையை அணைத்தபடி முங்கிக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் கைகள் கடைசியாய் தண்ணீருக்குள் துழாவிக் கொண்டிருந்தன. குழந்தை எப்போதோ தன் கடைசி மூச்சை விட்டிருந்தது. தலையில் விழுந்த அடியால் முகம் முழுவதும் ரத்தம் வழிய முங்குவதும் எழுவதுமாக இருந்து மெல்ல மூழ்கியது.

மரண ஓலங்களும், கூச்சலும், கூப்பாடும், இடைவிடாமல் கம்பால் தண்ணீரில் அடிக்கிற சத்தமும் கேட்டுக் கொண்டேயிருந்தன.

ஒவ்வொரு பிணமாகத் தண்ணீரில் மிதந்தது. அந்த முகங்கள்... அதிலிருந்த மரண வேதனை.

அந்த வேதனையின் உச்சத்தில் இரத்தம் உறைந்து இறுகிய உதடுகள். அந்த உதடுகளின் பிளவிலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த

கேள்விகள். அவனுக்குத் தாங்க முடியவில்லை. வேர்த்துக் கொட்டியது.

தண்ணீரிலிருந்து வெளியே வந்தான். சுற்று முற்றும் பார்த்தான். யாரும் இல்லை. எல்லாமே விசித்திரமான காட்சிபோல இருந்தது. நிமிர்ந்து பார்த்தான். பாலத்தின் மீது நகரம் வழக்கம்போல இயங்கிக் கொண்டிருந்தது. மனதில் பெரிய பாறை நசுக்குவது போலிருந்தது. எழுந்து போய் விடலாம் என்று நினைத்தான். கைகளிலும், கால்களிலும் உள்ள தண்ணீர் காயாமல் ஈரப்பிசுபிசுப்பாய் இருந்தது. இரத்தக் கவிச்சி வாடை அடித்தது.

அவன் திரும்பி நடக்கத் தொடங்கினான். அப்படித் திரும்பும்போதுதான் கவனித்தான். அவனுக்குப் பின்னால் அந்த இருள் போர்த்தியவன் கையிலிருந்து கம்பை ஓங்கி அவனை அடிக்கத் தயாராய் நின்று கொண்டிருந்தான். அவ்வளவுதான். ஐயோ என்றலறியபடி ஆற்றிலிருந்து ஓட ஆரம்பித்தான். கண்மண் தெரியாமல் ஓடி தெருவில் ஏறுகிற சமயம் முதுகில் ஒரு அடி விழுந்தது. 'யம்மா' என்று துடித்து கீழே விழுந்து திரும்பிப் பார்த்தான். பின்னால் ஒருவரும் இல்லை. தூரத்தில்தான் அந்த இருளைப் போர்த்தியவன் நின்று கொண்டிருந்தான். கம்பை ஓங்கியபடியே.

உண்மையிலேயே பயந்து போனான். இரண்டு தெரு கடந்து வந்த பிறகுதான், சுயநினைவு வந்தது. நடந்ததெல்லாம் கண்முன்னே ஓடியது. அவனுக்கு எதுவும் புரியவில்லை, என்னதான் இந்த ஊரில் நடந்து கொண்டிருக்கிறது என்றும் தெரியவில்லை. முதுகில் விழுந்த அடி விண்விண்ணென்று தெறித்தது. சட்டையைக் கழட்டி முதுகை விரல்களால் தடவிப் பார்த்தான். ஒரு கம்பின் தடம் பதிந்து தடிப்பு விழுந்திருந்தது. தொட முடியவில்லை. அப்போது எதிரே சட்டை போடாமல், கழுத்தில் துண்டை வல்லவட்டாக போட்டுக்கொண்டு வந்தார் ஒருவர். அவர்,

"என்ன தம்பி... ரொம்ப வலிக்குதா? பாலத்துக்கு கீழே கடைசியில் சு.ர.ந.வே. காந்திமதி அண்ணாச்சி கடையில் நூறு அல்வா வாங்கிச் சாப்பிடுங்க... எல்லாம் மறந்திரும்... சரியாப் போயிரும்... கொஞ்சம் மிச்சரும் ஓசிக்கு தருவாரு... கொஞ்சநாள்ல மரத்தும் போகும்... அப்புறம் தழும்பு மட்டும்தான் இருக்கும்... இங்க பாருங்க..."

என்று தன் முதுகைக் காட்டினார். அவர் முதுகிலும் கம்பின் தடம் பதிந்த தழும்பு கிடந்தது.

"கவலைப்படாதீக... தம்பி... ஊரில எல்லாப் பயலுக முதுகிலயும் இந்தத்

தடம் கெடக்கு... அதனால பொண்ணுகிண்ணு கெடைக்காமப் போயிருமோன்னு பயப்படாதீக...” என்று சொன்னவர் தன் ஹாஸ்யத்தைத் தானே ரசித்தவர்போல சிரித்துக்கொண்டே போய்விட்டார்.

அவனுக்குக் காய்ச்சல் வந்துவிடும்போல முதுகில் வலித்தது.

45. இது ஒரு ரவிச்சந்திரனின் கதை (சுகந்தியின் கதையும் கூட)

இதோ இரவு ஒரு மணிக்கு தன் வீட்டு வாசல் முன்பு நிற்கக்கூட முடியாமல் போதையில் தடுமாறிக்கொண்டு, “சுகந்தி” என்று குழறிக்குழறி தன் மனைவியைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கும் இந்த ரவிச்சந்திரனை கதைசொல்லி உங்களுக்கு அறிமுகப்படுத்த விரும்புகிறார்.

நாற்பது வயதான ரவிச்சந்திரன் தன்னை ஒரு கிரிமினல் என்று எல்லோரிடமும் சொல்லிக்கொள்வதில் பெருமையடைபவன். மரியாதைக்குறைவாக ரவிச்சந்திரனை அழைக்க வேண்டும் என்று கதை சொல்லி நினைக்கவில்லை. கதை சொல்லியைவிட ஏழு வயது சிறியவன் என்ற முறையிலேயே இந்த உரிமையை எடுத்துக்கொள்ள அனுமதிக்குமாறு அவர் உங்களைக் கேட்டுக் கொள்கிறார். ரெவினியூ டிபார்ட்மெண்டில் குமாஸ்தா உத்தியோகம் பார்ப்பதாகச் சொன்னாலும் அவன் நாள் முழுவதும் இருப்பது சூதாட்ட விடுதிகளில்தான். சுற்றிலுமிருக்கிற எல்லா மனமகிழ்மன்றத்திலும் அவன் வருகை புரிந்து பல நாட்கள், சில நேரம் பல வாரங்கள் கூட குடியிருந்திருக்கிறான். இதுநாள்வரை அவனுடைய மனைவி குழந்தைகளை மட்டும்தான் சூதில் பணயம் வைக்கவில்லை. இதனால் தன்னை தர்மரை விட உத்தமன் என்றும் சொல்லிக்கொள்வான். ரவிச்சந்திரன் இல்லையென்றால் சூதிற்கும் மதுவுக்கும் வாழ்வே கிடையாது.

சாதாரணமான உயரமும் மென்மையான முகமும் கொண்ட அவன் யாருடனும் மிகச்சுலபமாக பழகிவிடுவான். சூரியனுக்குக் கீழே உள்ள எல்லா விஷயங்களைப் பற்றியும் பேசுவான். தன்நுட்பமான மதியினால் எல்லோரையும் வசியம் செய்யவும், அவர்களை அவனுடைய திட்டங்களுக்குப் பயன்படுத்தவும் செய்வான் ரவிச்சந்திரன். அவனுடைய அத்துமீறல்கள், அவன் அவர்களை அநியாயமாகப் பயன்படுத்துவது எல்லாம் தெரிந்தாலும் அவனுக்கு எதிரே அவனை மீறியோ எதிர்த்தோ எதுவும் பேசமாட்டார்கள். அப்படி ஒரு வசீகரமான மொழி ஆளுமையும் உடல்மொழியும் கொண்டிருந்தான். ஏனென்றால் இந்தக் கதைசொல்லியே பலமுறை விருப்பமின்றியே அவனுடைய விருப்பத்திற்கேற்ப நடந்து கொண்டிருக்கிறார். நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பதை கதைசொல்லி முன் உணர்ந்தே இதையும் குறிப்பிட விரும்புகிறார்.

ஏற்கனவே நீங்கள் இந்தக் கதைசொல்லியைப்போல ஏமாந்திருந்தாலோ அல்லது கடன் கொடுத்திருந்தாலோ அதற்கு கதைசொல்லி பொறுப்பாக முடியாது என்பதை அறிவிக்க விரும்புகிறார். ஆனால் ஒருவேளை அவனிடம் ஏமாந்த பணத்தை வசூலிப்பதற்காக நீங்கள் அவனைத் தேடிக் கொண்டிருந்தால் அதற்கு வேண்டுமானால் இந்தப் பிரதியின் வழியாக உதவ முடியும். அதற்கு நீங்களும் இந்தப் பிரதியினுள்ளே கதைசொல்லியின் வரிகளூடே அலைய வேண்டும். அப்படி அலையும்போது வேண்டுமானால் நீங்களும் அவனும் சந்திக்கிற சந்தர்ப்பங்களை ஏற்படுத்த வாய்ப்பிருக்கிறது. ஆனால் அதனாலெல்லாம் அவனிடமிருந்து கொடுத்த கடனை வாங்கிவிடலாம் என்று தப்புக் கணக்கு போடக் கூடாது. அதே நேரம் நம்பிக்கையிழக்கவும் கூடாது என்று கதைசொல்லி சொல்வதைக் கேட்டு நீங்கள் குழம்பிப் போய்விடக் கூடாது. ஏனென்றால் கதைசொல்லியே கொஞ்சம் குழம்பித்தான் போயிருக்கிறார்.

ஒரு வேளை நீங்கள் இந்தப் பிரதிக்குள் வர விரும்பாமலேயே அவனைப் பற்றி தெரிந்துகொள்ள ஆசையுள்ளவரானால் அதற்கும் கதைசொல்லியிடம் பதில் இருக்கிறது. ஆனால் அந்தப் பதில் உங்களுக்கு அவ்வளவு உவப்பானதாக இல்லாமல் இருக்கலாம், என்று கதைசொல்லி உங்களிடம் முன்னெச்சரிக்கையாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறார்.

ரவிச்சந்திரன் கடன் வாங்குவதில் மட்டுமல்லாமல் யாரைப் போல் வேண்டுமானாலும் கையெழுத்து போடும் வல்லமை உள்ளவன். பெங்களூரில் இவனால் வசியப்படுத்தப்பட்ட ஒரு வங்கி மேலாளர் இவனுடன் சேர்ந்து காசோலை மோசடி செய்ய முயற்சித்து போலீஸில் மாட்டிக்கொண்டார். அரசு உத்தியோகத்திலிருப்பவர்களிடம் உள்ள மிகப் பிரதானமான பலகீனம் அவனுக்குத் தெரியும். எவ்வளவுதான் சம்பளம் கிடைத்தாலும், சரி. இனாமாக, அன்பளிப்பாக, லஞ்சமாக ஒரு ரூபாய் கிடைத்தால் போதும் அவர்களுடைய மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது. இது ஏதோ கதைசொல்லியின் மிகைப்படுத்தல் என்று நினைக்க வேண்டாம். ரவிச்சந்திரனே கதைசொல்லியிடம் சொல்லிய விவகாரங்கள்தான் இவை.

ரவிச்சந்திரன் நான்குமுறை போலீஸில் சிக்கியிருக்கிறான். இரண்டு முறை கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு ஜெயிலுக்குப் போயிருக்கிறான். ஆனால் எல்லாமே சில மணிநேரங்கள் அல்லது சில நாட்கள் அவ்வளவுதான். இதுவரை எந்தப்போலீசும் அவனை ஒரு அடி கூட அடித்ததில்லை. உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா. இதே

போல்தான் கதைசொல்லிக்கும் இருந்தது.

நீதி வழுவாத நம் நீதித்துறையிலுள்ள ஒரு நீதிபதிக்கு ஐம்பத்தியாறு அங்குல திரை கொண்ட தொலைக்காட்சிப் பெட்டியை அன்பளிப்பாகக் கொடுத்து, ஒரு முன்னெச்சரிக்கை சான்றிதழ் வாங்கி வைத்திருந்தான். அதில் நூறு ரூபாய் அன்பளிப்பாக கொடுத்துப் பெற்ற மருத்துவச் சான்றிதழும் இணைந்திருக்கும். அவை இரண்டும் அவன் ஒரு இதய நோயாளியென்றும், உடல் ரீதியான எந்தத் துன்புறுத்தலும் கூடாது என்றும் முரசறைந்து கொண்டேயிருந்தன.

ஆச்சரியமாக இருக்கிறதல்லவா. இப்படித்தான் அவன் அனைத்துப் புகார்களிலிருந்தும் வழக்குகளிலிருந்தும் தப்பித்துக் கொண்டேயிருந்தான். பெரும்பாலான அவனுடைய வாழ்க்கை சூதாட்ட விடுதிக்குள்தான் கழிந்தது. ஒருமுறை உள்ளே சென்றால் குறைந்தது மூன்று நாள் தங்கியிருப்பான். குறையக்குறைய போதை ஏற்றிக்கொண்டே விளையாடுவார்கள். அவனும் தோற்போ ஜெயிப்போ எல்லாப் பணத்தையும் அங்கேயேதான் சூறை விடுவான். திடீர் திடீரென்று உடம்பில் கொஞ்சம் தினவு எடுத்தால் ஞாபகம் வந்த மாதிரி வீட்டுக்கு வருவான்.

இதையெல்லாம் வாசித்தவுடன் அவன் மனைவியையும் குழந்தைகளையும் பற்றிய உங்கள் யோசனையை கதைசொல்லி வரவேற்கிறார்.

வங்கியில் வேலை பார்க்கும் சுகந்தி திருமணம் முடிந்த புதிதில் கண்ணுக்கே தெரியாமல் விரித்து வைத்திருக்கிற வசிய வலைக்குள் அப்பாவியாய் விழுந்து தன்னுடைய சம்பளம் முழுவதையும் அவனிடம் கொடுத்தாள். ஒரு குழந்தையும் அவனுக்காக அவள் வாங்கிய சில லட்சங்கள் கடனும் மீந்தபோதுதான் சுதாரித்தாள். கையில் வாங்கும் சம்பளத்தை முடிந்தவரை குறைத்துக்கொண்டு எல்லாவித சேம பாதுகாப்பு நிதித்திட்டங்களிலும் பணத்தைச் சேமித்தாள். அவனுடைய ஸ்டைலிலேயே பொய்களை, புனைவுகளையும் கற்றுக்கொண்டு அவனை ஏமாற்றினாள். போதையேறி திடீர்திடீரென்று வீடு திரும்பும் கணவனின் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாவதை மட்டும் தவிர்க்க முடியவில்லை. நீங்கள் என்ன கேட்க வருகிறீர்கள் என்று புரிகிறது. கதைசொல்லியும் இந்த மாதிரியான கேள்விகளை இந்தப் புனைவில் எழுப்ப விரும்பியவர்தான். இப்படி ஒரு வாழ்க்கை வாழ்வதைவிட விவாகரத்து செய்து கொள்ளலாமே என்று.

சுகந்தியும் சில காலம் முன்புவரை விவாகரத்திற்கான முயற்சி

எடுத்தவள்தான். அவளுடைய குடும்பத்தினர் அந்த முயற்சிகளை, அவளால் தனித்து வாழ முடியாது என்றும் சமூகம் குரூரமானது என்றும் அறுதப் பழசான அம்புகளெய்தி விவாகரத்து முயற்சிகளை வீழ்த்தினர். அவளும் எத்தனை சுழல்களில் சிக்கி எதிர்நீச்சல் போடமுடியும் என்று கொஞ்சம் தயங்கிவிட்டாள். அதனால் பல நேரங்களில் ரவிச்சந்திரன் சந்தர்ப்பவசத்தாலோ அல்லது அசந்தர்ப்பமாகவோ இறந்து போக எல்லாக் கடவுள்களிடமும் பிரார்த்தனை செய்தாள். பிரார்த்தனை எந்தக் கடவுளின் காதிற்கும் எட்டவில்லை என்பது வேறு விஷயம்.

ஓ... சரி... சரி, இன்னும் வாசலிலேயே நின்று தள்ளாடிக் கொண்டிருக்கும் ரவிச்சந்திரனை நினைவுபடுத்துகிறீர்களா. உண்மைதான். கதைசொல்லியின் நிகழ்கால போதம் கொஞ்சம் பலவீனமானதுதான். அதற்காக அவரைக் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறார் அவர்.

இன்றும் திடீரென தினவெடுத்து பெண்ணுடல் ஞாபகம் வந்ததும்தான் சூதாட்ட விடுதியிலிருந்து கிளம்பி வந்திருந்தான் ரவிச்சந்திரன். ஐந்து நிமிடக் கூவலுக்குப் பின் முன்வாசல் விளக்கு எரிந்தது. சுகந்தி கதவைத் திறக்கவா வேண்டாமா என்று யோசித்தாள். அழுது அழுது வீங்கியிருந்தது அவள் முகம். இன்றைக்கு அவள் பட்ட அவமானம். அவனுக்குக் கடன் கொடுத்த இரண்டு பேர் வந்து கடனுக்கு ஈடாக அவளை வரச் சொல்லி அடாவடித்தனம் செய்தனர். அவளுடைய ஆவேசம், ஆக்ரோஷம் எல்லாவற்றையும் அவர்கள் அலட்சியம் செய்தனர்.

அக்கம் பக்கம் இருந்தவர்களின் உதவியினால்தான் இன்று அவள் மானம் பிழைத்தது. ஆளுக்காள்... அவளிடம் யோசனை சொன்னார்கள். பச்சாதாபப்பட்டார்கள். அவள் யாரிடமும் எதுவும் பேசவில்லை. மேலும் மேலும் அழுது கொண்டேயிருந்தாள். அழ அழ மனசில் ஒரு வைராக்யம் உறுதியாகிக்கொண்டே வந்தது. இனி உயிர் வாழ வேண்டாம். எதைப் பற்றியும் கவலையில்லை. எங்கு திரும்பினாலும் முட்டிய மாதிரி இருக்கிற இந்த வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற வழி அவளுக்குப் புலப்பட்டுவிட்டதுபோலத் தோன்றியது.

கடிதங்களைத் தனித்தனியே அவளுடைய பெற்றோருக்கு, போலீஸிற்கு, வங்கி மேலாளருக்கு எழுதி முடித்தாள். ஒரு நயா பைசாகூட ரவிச்சந்திரனுக்குச் சென்றுவிடக்கூடாது என்று கவனமாக எழுதி வைத்திருந்தாள். எழுதி முடித்ததுமே ஏதோ எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்த மாதிரியான ஒரு உணர்வு தோன்றியது.

இந்த இடத்தில் நீங்கள் பதற்றத்துடன் கைகளை நீட்டி என்ன கேட்க விரும்புகிறீர்கள் என்று ஏற்கனவே தனக்குத் தெரியும் என்பதை கதைசொல்லி உங்களிடம் சொல்லிக் கொள்கிறார். ஏன் சுகந்தியை இந்த அகோரமான முடிவை நோக்கி இழுத்துச் செல்கிறீர்கள். இப்படியே அவள் குழந்தைகளை அழைத்துக்கொண்டு எங்காவது ஓடிப்போனால்கூட பிழைத்துக் கொள்ளலாமே. வாழ்வதற்காகத்தானே வாழ்க்கை. நீங்களும் இப்படி கோழைத்தனமான முடிவெடுக்க உங்கள் புனைவின் மூலம் மெனக்கெடுகிறீர்களே...

இப்படியெல்லாம் கதைசொல்லியை நீங்கள் கேட்க விரும்புகிறீர்கள் இல்லையா.

இதற்குக் கதைசொல்லி சொல்ல விரும்புவது என்னவென்றால், இன்னமும் நமது வீட்டுப் பெண்களுக்கு அந்த மனோபலம் வரவில்லை. படிப்பு, வேலை, சம்பாத்தியம், புத்திசாலித்தனம் இவையெல்லாம் இருந்தாலும் நமது நாட்டுப் பெண்களை இரண்டாயிரத்து ஐநூறு வருடங்களுக்கு முன்பிருந்தே ஆணுடைய அதிகார பீடத்தின் கீழ் பலியாடுகளாய், வாழ்வின் லட்சியமே ஆணை அண்டி வாழ்வது என்கிற மாதிரியான எண்ணங்களையும், கற்பு, பெண்மை, மாதரசி, பெண்ணரசி, கற்புக்கரசி, தெய்வநிலை என்று ஏராளமான கான்செப்ட்டுகளை பொய்யான புனைவுகள் மூலம் உருவாக்கி மூளைச்சலவை செய்த மாஸ்டர் பிரெய்ன் கொண்ட மனு என்கிற பிரகிருதி மனிதகுல வரலாற்றில் ஒரு கறையாகிவிட்டான்.

இந்த சதிவலைக்குள் சிக்கிய பெண்கள் தங்கள் வாழ்வுரிமை இழந்து தவிக்கிறார்கள். இந்த வலையைக் கையில் வைத்துக் கொண்டு ஒவ்வொரு ஆணும் மனுவின் மறு உருவமாக அலைகிறான். இதில் பெரிய வேடிக்கை ஆண்கள் தங்களுடைய கொள்கை பரப்பு செயலாளர்களாக பெண்களையே நியமித்திருக்கிறார்கள்.

எனவேதான் பிரச்சினைகளை எதிர்கொண்டு வாழ்கிற தைரியம் இல்லாமல் தங்கள் வாழ்வினை முடித்துக் கொள்வதன் மூலம் பிரச்சினைகளை தங்கள் வரை இல்லாமல் ஆக்கிவிடலாம் என்று நினைக்கிற பெண்களில் சுகந்தியும் ஒருத்தி.

சரி... சரி... இந்த உரைவீச்சினால் நீங்கள் முகம் சுளிப்பதைக் கதைசொல்லி உணர்ந்துவிட்டார். அதோடு கதையை இறுதிவரை படிக்குமாறும் அவர் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறார்.

குழந்தைகள் சாப்பிட்டு படுத்தபின்பு அவளுக்கு மிகவும் பிடித்த நீலநிற

பொடிக்கட்டம் போட்ட காட்டன் சாரியை எடுத்துப் பிரித்து, மின்விசிறியில் போட்டுச் சுற்றி சுருக்கு முடிச்சு போட்டு கழுத்தில் மாட்டுவதற்கு தோதுவாக்கி, கழுத்திலும் மாட்டிப் பார்த்தாள். பின்பு அப்படியே தரையில் சுவரோடு சாய்ந்து உட்கார்ந்தாள். ஆயாசமாக இருந்தது. உடலில் சக்தியே இல்லாத மாதிரி எதையோ யோசித்தாள். ஆனால் என்ன யோசித்தாள் என்று அவளுக்கே தெரியாது. இருந்திருந்தாற்போல எழுந்து பீரோவிலிருந்து போட்டோ ஆல்பங்களை எடுத்து அங்குமிங்குமாய் புரட்டிப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். ஆல்பங்களைப் பார்க்கப் பார்க்க ஏக்கம் கூடியது. ஒரு கணம், தான் தவறான முடிவெடுக்கிறோமோ என்றுகூட தோன்றியது. வேறு ஏதேனும் வழியிருக்கிறதா என்றுகூட யோசித்தாள். காலை எழுந்தவுடன் குழந்தைகள் அம்மா என்று கூப்பிடும்போது... நினைத்தவுடன் கண்ணீர் பொங்கி வழிந்தது. அப்படியே ஆல்பங்களை வைத்துவிட்டு எழுந்து சென்று ஹாலில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தைகளின் முகத்தைப் பார்த்தாள். அருகில் அமர்ந்து அவர்களின் நெற்றியிலும் கன்னத்திலும் முத்தமிட்டாள். அப்படியே அசங்காமல் சிறிது நேரம் அந்தக் குழந்தைகளையே பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போதுதான் கதவைத்தட்டுகிற அந்த சத்தம் கேட்டது.

அவன் குரலைக் கேட்டதுமே கொஞ்சம் இளகியிருந்த மனம் கல்லாய் இறுகியது. தட்டட்டும் கொஞ்ச நேரம் என்று பேசாமலிருந்தாள். அவனுடைய குரலிலும், தட்டலிலும் வேகம் கூடிய பிறகே எழுந்து கதவைத் திறந்தாள். அவன் தடுமாறிக்கொண்டே உள்ளே நுழைந்தான். அவள் திரும்பி அவனுக்கு வழிவிட்டு வாசல் கதவை பூட்டித் திரும்புவதற்குள் அந்த இடைவழியில் அவளை மறித்து நின்றுகொண்டு விகாரமாய் பல்லை இளித்தான். அவளுக்கு இரத்தம் தலைக்கேறியது. அவனை வேகமாகத் தள்ளிக் கொண்டு படுக்கையறைக்குள் நுழைந்து, அவன் பின்னால் வருவதற்குள்ளாகவே கதவைச் சாத்தி தாழ்ப்பாளிட்டாள். அவன் நாக்குழறிக் கொண்டே,

“கதவைத் திற... சுகி... கதவைத் திற சுகி...” என்று கூப்பிட்டான். அவன் இடைவெளி விட்ட நேரத்தில் உள்ளேயிருந்து அழும் சத்தம் கேட்டது. அவன் கொஞ்சம் நிதானமடைந்து, சாவித்துவாரத்தின் வழியாகப் பார்த்தான். எல்லாவற்றையும்.

அதிர்ந்து போன அவன் அப்படியே உட்கார்ந்துவிட்டான். என்ன செய்வதென்றே தெரியவில்லை. பலகீனமாய் சிலமுறை,

“வேண்டாம் சுகி... கதவைத்திற... வேண்டாம் சுகி...”

என்று கூப்பிட்டுக் கொண்டேயிருந்தான். அப்படியே எவ்வளவு நேரம் போயிற்று என்று தெரியவில்லை. இரவின் விசித்திரமான மாயா உலகத்தில்தான் மனதின் அத்தனை புதிர்களும், சுழல்களும், மர்மங்களும் அவிழ்கின்றன. புதிய புதிர்களும் வாழ்வின் கொடிகளிலிருந்து மொக்கு விட ஆரம்பிக்கின்றன. விந்தையான உணர்வுகள் தங்களுடைய விந்தையான செயல்களுக்கு இரவையே தேர்ந்தெடுக்கின்றன. ஏன் என்று யாருக்குத் தெரியும்?

நீங்கள் பொறுமையிழந்து கொண்டிருப்பது தெரிகிறது. கதையின் முக்கியமான திருப்பத்தில் இத்தகைய தத்துவ விசாரங்கள் தேவையா என்று கேட்கிறீர்கள். கதை சொல்லியை நீங்கள் நினைப்பதற்கும் ஒரு தருணம் வேண்டுமல்லவா, என்று கதைசொல்லி நினைக்கிறார். அவ்வளவுதான். இதோ விடிந்துவிட்டது.

அழைப்பு மணியின் ஓசை வெகுநேரமாக ஒலித்துக் கொண்டிருந்தது. முழிப்பு தட்டியது சுகந்திக்கு. கண்களைத் திறந்தாள். தூக்குக் கயிறாகத் தொங்கிய சேலை அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது. அப்போது அடித்த அழைப்புமணியின் ஓசை இப்போது நினைவுக்கு வந்தது. அவள் எழுந்து படுக்கையறைக் கதவைத் திறந்தாள். அங்கே வேட்டியில் தூக்கு மாட்டி ரவிச்சந்திரன் தொங்கிக் கொண்டிருந்தான். அவள் இதைச் சற்றும் எதிர்பார்க்கவேயில்லை.

நீண்ட பெருமூச்சு விட்டாள். பின்பு அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்து தொங்கிக் கொண்டிருந்த அவனைப் பார்த்தபடியே தன் சிந்தனைகளை ஒழுங்குபடுத்த ஆரம்பித்தாள்.

பலர் அதிருப்தியுடன் கதைசொல்லியிடம் முறையிடலாம். இந்த முடிவு யதார்த்தமாக இல்லையே என்று முணுமுணுக்கலாம். அவர்களுக்கு கதைசொல்லி சொல்வது வாழ்க்கையே யதார்த்தமாக இல்லையே என்றுதான். மேலும் இந்த விதமாக அதிருப்தி தெரிவிப்பவர்கள் ஒருவேளை ரவிச்சந்திரனுக்கு கடன் கொடுத்தவர்களாக இருக்கலாம் என்றும் சந்தேகப்படுகிறார். இருந்தாலும் புனைவுகளின் புதிர்வழிகளில் இரண்டு விதமான சாத்தியங்களை வாசகர் முன்னால் வைக்க முடிவு செய்கிறார் கதைசொல்லி.

அழைப்பு மணியின் நீண்ட ஓசைதான் ரவிச்சந்திரனை எழுப்பியது. எழுந்தவுடனே மூளையில் பொறி தட்டிய மாதிரி நேற்று இரவு பார்த்த அந்தக் காட்சி. உடனே படுக்கையறை கதவின் சாவித்துவாரத்தின் வழியே பார்த்தான். சுகந்தியின் உடல் நீலநிற காட்டன் சேலையில் தொங்கிக் கொண்டிருந்தது. அவன் மூளை சுறுசுறுப்படைந்தது.

அடுத்ததாக என்ன செய்ய வேண்டும் என்று சில நிமிடங்கள் யோசித்தான். பின்பு தொலைபேசியை நோக்கிச் சென்றான்.

போலீஸ் விசாரணையை அவனுடைய பாணியில் எப்படி சுமூகமாக முடிக்க வேண்டுமோ அப்படி முடித்துக் கொண்டான். வயிற்றுவலி தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொள்வதாக சுகந்தி எழுதிய மாதிரி ஒரு கடிதம் தயாரித்து அதில் சுகந்தியின் வாழ்க்கையையும், மரணத்தையும் ஒளித்து வைத்தான். குழந்தைகளை சுகந்தியின் பெற்றோர் அழைத்துக்கொண்டு போய்விட்டனர்.

மீண்டும் ரவிச்சந்திரன் சூதாட்ட விடுதிகளில் அலைந்தான். இப்போது உடல் தினவெடுக்கும்போது எங்கேயாவது பாலியல் தொழிலாளியைத் தேடிப் போவது வாடிக்கையாகி விட்டது. என்றாலும் அவனுக்கென்று ஒரு வீடு அங்கே ஒரு பெண் உடல் அவனுக்காகக் காத்திருக்க வேண்டும் என்று நினைத்தான். அவனைப் பற்றி நன்றாக விசாரித்துத் தெரிந்துகொண்ட பிறகும் அவனிடம் பெண்ணைத் தள்ளி விட தயாராக இருந்தனர் பல பேர்.

சிம்பிளாய் திருமணம் முடிந்த சில நாட்களிலேயே அவனுக்குக் காய்ச்சல், இருமல் என்று உடல்நிலை சரியில்லை. சாதாரண மருத்துவர்களின் எந்தப் பிரயத்தனங்களுக்கும் நோய் மசியவில்லை. ஒரு மருத்துவரின் சந்தேகத்தினால், அவனுக்கு முற்றிய ஹெச்.ஐ.வி. கிருமிகளினால் பாதிப்பு ஏற்பட்டிருந்தது தெரியவந்தது. அவன் அதையும் அவனுடைய வீரச் செயல்களுக்குக் கிடைத்த கௌரவப் பட்டம்போல எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு திரிந்தான். இந்தக் கதைசொல்லியைப் பார்த்தபோதுகூட, “நாளைக்கு ராத்திரி 11 மணிக்கு பொதிகை பாருங்க சார்... எய்ட்ஸ் பற்றி பேட்டி கொடுக்கிறேன்...”

என்று சிரித்தபடியே சொன்னான். ஆனால் எல்லாம் இரண்டு மாதம்தான். திடீரென ஒரு பத்து நாட்களாக அவனைப் பார்க்க முடியவில்லை. விசாரித்தபோது ஒரு வாரம் முன்புதான் பொது மருத்துவமனையில் இறந்து போய்விட்டான் என்று இந்தக் கதைசொல்லிக்குத் தெரியவந்தது.

இந்த முடிவிலும் கதைசொல்லி பாரபட்சமாக நடந்திருப்பதாக நீங்கள் நினைத்தால் கதைசொல்லி ஒரு ரகசியத்தை உங்களிடம் பகிர்ந்துகொள்ள விழைகிறார்.

அவரும் ரவிச்சந்திரனுக்கு நூறுரூபாய் கடன் கொடுத்திருக்கிறார் உங்களைப் போலவே. அதனால் எப்படியாவது அவனை உயிரோடு

உலவ விடவேண்டும் என்றுதான் அவரும் ஆசைப்பட்டார். அவன் உயிரோடு இருந்தால் என்றாவது ஒருநாள் கொடுத்த கடனை அவனிடமிருந்து வாங்கிவிடலாம் என்று பேராசைகூட இருந்தது. ஆனால் எதுவும் செய்ய முடியவில்லை. கதைசொல்லியின் கையை மீறிவிட்டது விஷயம். ரவிச்சந்திரன் தன் வழியை தானே தேர்ந்தெடுத்துக் கொண்டதால் அதைக் கதைசொல்லியால் தடுக்க இயலவில்லை என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறார்.

46. அண்டாகா கசும்...

அபூகா குசும்...

நேற்றிலிருந்து அடிவயிறு கனத்து தொங்கியது. ஏதோ ஒரு சுமை நிரந்தரமாய் தங்கிவிட்டதைப்போல இருந்தது. ஒரு மரத்துப் போன உணர்வு. இரவில் படுத்திருக்கும்போது வயிற்றைத் தடவிப் பார்த்தான். தசைகளால் உருவாக்கப் பட்டதைப்போலத் தெரியவில்லை. இளக்கமே இல்லாமல், உணர்ச்சியேயின்றி கிண்ணெண்றிருந்தது. தட்டினால் மரத்தில் கொட்டுவதைப்போல 'டொக் டொக்'கென்று சத்தம் கேட்டது. அவன் பயந்து போனான். உயிர்ப்பயம் ஒருவித வினோத வலியை உடலில் கிளர்த்தியது. அந்த வலி மேல்வயிற்றில் வந்து மையம் கொண்டு விட்டது. ஆனால் தொப்புளுக்குக் கீழே எந்த அணக்கமும் இல்லை. அப்படியே கல்லைக் கட்டித் தொங்க விட்டமாதிரி. சாப்பிடுகிற சாப்பாடு எங்கேதான் போகிறதோ என்னதான் ஆகிறதோ, ஆனால் சிறுகச் சிறுக இன்னொரு மாற்றமும் நிகழ்ந்துகொண்டு வருவதை அவன் கவனித்துக் கொண்டிருந்தான். பசி தன் வேகத்தை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டே வந்தது.

இதையெல்லாம் வாசிக்கும் உங்களுக்கு என்ன காரணம் என்று தெரிந்திருக்கும். மலச்சிக்கல்தானேய்யா என்று ஒரு வார்த்தையால் போட்டுத் தாக்குகிற உங்களைப் போன்றவர் அல்ல என்னிடம் இந்தக் கதையைச் சொன்ன நண்பர். இது போன்ற விஷயங்களை மூன்றாவது மனிதரிடம் சொல்லுவதில் மிகுந்த கூச்சமுடையவராக இருந்தார். அவர் கதை சொல்லும் பீடிகையைக் கண்டு நானும் உங்களைப் போலவே குழம்பிப் போனேன். ஏதோ மிகக் கொடிய வியாதி பீடித்த இளைஞரைப் பற்றிய கதை இது என்றுதான் நினைத்தேன். ஆனால் அவர் முழுவதுமாகச் சொல்லி முடித்த பிறகு அவர் மீது அனுதாபம் வந்தது. உங்களைப் போலவே, அவர் சொல்லச் சொல்ல ஒருவித அலட்சியமும் லேசான சிரிப்பும் முதலில் தோன்றினாலும், நானே அவருடைய இடத்திலிருந்து இன்னொருவருக்குக் கதை சொல்லிக் கொண்டு வருவதைப்போல உணர்ந்தேன்.

விழுப்புரத்திலிருந்து விருத்தாசலத்திற்கு என்னுடைய பணியின் காரணமாக அன்றாடம் ரயிலில் பிரயாணம் செய்கிற பயணியான நான், என்ன காரணத்தாலோ என் எதிரேயிருந்த இருக்கையில் சன்னலோரம் உட்கார்ந்து வந்துகொண்டிருந்த என்னுடைய கதை சொல்லியிடம், "சென்னையிலிருந்து வர்றீங்களா?" என்று கேட்கப் போய் எங்களுடைய

உரையாடலும் இந்தக் கதையும் பிறந்து நீங்கள் வாசிக்கும்படி வளர்ந்துகொண்டே வந்தது. வேதனை தீர்ந்த மலர்ச்சியோடும், உற்சாகம் பொங்கும் முகத்தோடும் என்னிடமும் என் மூலம் உங்களிடமும் சொல்லிக்கொண்டு வருகிறார் என் நண்பரான கதைசொல்லி.

பத்து நாட்களாகி விட்டது, அவன் மலம் கழித்து. இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும். இது ஒரு மலச்சிக்கல் கதை என்று. சற்று முகத்தைக் கூட சுளிப்பீர்கள். மலம் கழிப்பது உயிரினங்களின் மிக அத்யாவசியமான செயல்பாடுகளில் ஒன்று என்பதை இரண்டுநாள் மலம் போகாமல் முக்கி முக்கி வயிற்றுத் தசைகள் இறுக குதவாயைக் கிழித்துக் கொண்டு ரத்தம் சொட்டச் சொட்ட வெளிக்கிருந்து முடிந்த பின்பும் நடக்க முடியாமல் உட்கார முடியாமல் கடுகடுப்பு தோன்றி கண்களுக்கு முன்னால் தெரிகிறவரையெல்லாம் கடித்துக் குதறிவிடலாம் போல கோபமும் எரிச்சலும் பொங்க அலைந்தவர்களுக்கும், அலைந்து கொண்டிருப்பவர்களுக்கும் தெரியும் தினசரி மலம் கழிப்பதின் அருமையைப் பற்றி. உங்களுக்கு எங்கே தெரியப் போகிறது? சரி கதைக்கு வருவோம்.

ஒரு ஆளுக்கு மலச்சிக்கல் என்றாலே இத்தனை எரிச்சலும் கோபமும் கிளம்புகிறது என்றால் ஒரு நகரத்திற்கே அதுவும் மாநகரத்திற்கே மலச்சிக்கல் என்றால் எப்படியிருக்கும். யோசித்துப் பாருங்கள். திருநெல்வேலியிலிருந்து சென்னைக்கு வேலை தேடி வந்த உலகநாதனுக்கு முதலில் அப்படித்தான். வந்து ஒரு வாரத்தில் சென்னையில் அவனுக்கு நேர்ந்த அனுபவங்கள் ஒவ்வொன்றும் அப்படித்தான் இருந்தன. பரபரப்பும், பொறுமையின்மையும், அலட்சியமும், கோபமும், படபடப்பும், எரிச்சலும் எல்லோர் முகத்திலும் அஞ்சலக முத்திரைபோல குத்தப்பட்டிருந்தது. முக்கி வெளிக்கிருக்கும்போது இரத்தம் தேங்கிய சுளித்த முகம் அப்படியே நிரந்தரமாய் தங்கிவிட்டது போன்ற முகத்துடனே ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கூட திரிந்தார்கள். இன்னமும் முழுமையாகக் காலியாகாத மலப்பைகளைச் சுமந்துகொண்டு எப்போது சந்தர்ப்பம் கிடைத்தாலும் அங்கே மலம் கழிக்கும் ஆவலுடன் அதை அடக்கிக் கொண்டே சாலைகளில் அலைந்து கொண்டிருப்பதாக அவன் நினைத்தான். ஆனால் உலகநாதனுக்கே அப்படியொரு நிலைமை அதுவும் சென்னை வந்து ஒரு மாதத்திற்குள் வந்து விடும் என்று நினைத்துக்கூட பார்த்ததில்லை.

வேலையில்லாத பிரம்மச்சாரிகளின் எத்தனையோ புகலிடங்களில்

ஒன்றான ஆர். கே. மேன்சனில் தங்கியிருந்த திருநெல்வேலி நண்பர் பரமுவின் தயவில்தான் சென்னை வந்ததிலிருந்து இருப்பிடம் பற்றிய கவலையின்றி இருந்தான். ஆனால் அதுவும் தலைமறைவு வாழ்க்கை போலத்தான். இந்த வார்த்தைகள் எல்லாம் அவனுடைய மொழி அகராதியில் கிடையாது. தினசரிப் பத்திரிகைகளில் குற்றவாளிகள் தலை மறைவு என்ற செய்திகளைப் படித்ததோடு சரி. அப்போதும் அது முழுமையாகப் புரிந்ததில்லை. ஆனால் சென்னைக்கு வந்தவுடன் புரிந்துவிட்டது. இ.பி.கோ.வின் எந்தப் பிரிவிலும் எந்தக் குற்றமும் புரியாத அவன் ஆர்.கே. மேன்சனின் சொந்தக்காரியான மூக்குமாமிக்குப் பயந்து தலைமறைவாய் அலைய வேண்டியதாயிற்று.

பரமுதான் எப்படியாவது ஒரு மாதம் தாக்குப் பிடித்தால் போதும், அதற்குள் வேலை கிடைத்து தலைமறைவு வாழ்க்கையிலிருந்து விடுதலையடைந்து சுதந்திரக் காற்றைச் சுவாசித்தபடி அதே மேன்சனிலோ அல்லது வேறு மேன்சன்களிலோ தங்கி சென்னை சாம்ராஜ்யத்தை ஆண்டு வரலாம் என்று ரகசிய சதியாலோசனை நடத்தி, கொரில்லா முறையில் மறைந்து தாக்கி மறைந்து முற்றுகைப் போர் நடத்தும் வழிமுறைகளையும் சொல்லியும் கொடுத்தான்.

அதன்படியே மேன்சனில் யாரும் எழுந்திரிப்பதற்கு முன்பே குறிப்பாக மூக்குமாமி எழுந்திரிப்பதற்கு முன்பே எழுந்து எல்லாவிதமான காலைக்கடன்களை கொடுத்து முடித்துவிட்டு மேன்சனை விட்டு வெளியேறிவிட வேண்டும். திரும்ப இருட்டிய பிறகு முகமறியா இருளில் வந்து அறையினுள்ளே முடங்கிவிட வேண்டும்.

மூக்குமாமியிடம் மாட்டிக்கொண்டால் அவ்வளவுதான். கொடையான கொடை கொடுத்து அவனை மட்டுமல்ல பரமுவையும் வெளியேற்றி விடுவாள். காலையில் ஆறுமணிக்குமேல் ஏழுமணிக்குள் எப்போது வேண்டுமானாலும் அந்த மேன்சனுக்குக் கீழ்ப்புறத்திலுள்ள ஒண்டுக் குடித்தனத்திலிருந்து எப்போது வேண்டுமானாலும் பிரத்யட்சமாவாள்.

வெளியே வந்து கக்கூஸ், பாத்ரூம் போகிற இடைவழியில் உள்ள திண்ணையில் தன் பெருத்து தொள தொளப்பான உடலைச் சரிய விடுவாள். அப்படியே மேன்சனின் அறைகளிலிருந்து காலைக் கடன்களைக் கழிக்க வந்து செல்பவர்களை தன் புரையேறிய கண்களால் முறைத்துப் பார்த்துக் கொண்டேயிருப்பாள். திடீரென உரத்த குரலில், தண்ணீரை அதிகம் செலவழிக்காதே என்று ஆரம்பித்து பல ஆக்ஞைகளைக் காற்றில் விடுவாள்.

அந்தக் காற்றின் புளித்த வாடை கண்டு விலகிக்கொண்டு

போய்விடுவார்கள் மேன்சன்வாசிகள்.

யாராவது தெரியாத்தனமாக பரிச்சயம் கருதி வழங்குகிற புன்னகைகளை வாங்கிக் கொள்ளமாட்டாள். உடனே தன் மாராப்பை இழுத்து விட்டுக்கொண்டே "இங்கே என்ன இளிப்பு... போவியா உன் வேலையை பாத்துகிட்டு..."

என்று கூப்பாடு போடுவாள். சிரித்தவனுக்கு ஏண்டா சிரித்தோம் என்று ஆகிவிடும். அதேபோல யாராவது ஏதாவது கோரிக்கைகளோ வேண்டுகோள்களோ அவளுக்கு முன்னால் வைத்தால், அவளுடைய பாரியான கால்களால் அதைக் குறிபார்த்து அவர்கள் முகத்திலேயே எத்திவிடுவாள். அவர்கள் அந்தத் தாக்குதலிலிருந்து தப்பித்துச் செல்வது துர்பலமே.

ஒரு வேளை மூக்குமாமிக்கு யார் பேரிலாவது சந்தேகம் வந்துவிட்டால் போதும். அந்த ஆளைக் கூப்பிட்டு குறுக்கு விசாரணை செய்து அவளுக்குத் திருப்தியானால்தான் விடுவாள். அல்லது மாட்டிக்கொண்டவரை ஜாமீன் எடுக்க அவருடைய பக்கத்து அறைக்காரர்கள்தான் வரவேண்டும். சில வேளைகளில் பாத்ரூம் பக்கமும் கக்கூஸ் பக்கமும் கூட ஒரு கிழட்டு யானையைப்போல உலா வருவாள். கக்கூஸிலிருந்து ஏதாவது புகை வந்ததோ... நாற வசவுதான்.

சென்னை வந்த முதல் வாரம் எந்தப் பிரச்சினையுமில்லை. அதற்குள் ஊர்ப்பக்கமிருந்து வந்திருந்த வேறு மேன்சன்களில் தங்கியிருந்த வேறு சில நண்பர்களும் அறிமுகமாகி விட்டனர். அதனால் சென்னை மாநகரத்தின் வாழ்வியல் நடைமுறைத் தந்திரங்களை ஒவ்வொன்றாய் கற்றுக்கொள்ள ஆரம்பித்தான். ஆனால் வினை வேறு விதமாய் வந்துவிட்டது.

எல்லோரையும் போல ஞாயிற்றுக்கிழமையன்று மூக்கு மாமியும் விடுமுறை எடுத்துக் கொள்வாள். ஏனென்றால் ஞாயிற்றுக்கிழமையன்று இஷ்டம்போல எழுந்து இஷ்டம் போல தங்களுடைய காரியாதிகளைச் செய்பவர்கள் இந்தப் பிரம்மச்சாரிகள். அதோடு சனிக்கிழமை இரவு விதவிதமான களியாட்டங்களில் மூழ்கி தங்களுடைய இடம்பெயர்தலின் துயரத்தை ஆற்றிவிட்டு வருபவர்களாகவும், நித்திரையின் சகல பரிணாமப் படிநிலைகளிலும் சஞ்சாரித்துக்கொண்டு இருப்பவர்களாதலால், பெரிய மனது பண்ணி ஞாயிறு மட்டும் மூக்குமாமி தன்னுடைய மேலாண்மையை மூக்கணாங்கயிறு போட்டு ஒண்டுக் குடித்தனத்திற்குள் அடக்கி வைத்திருப்பாள். திங்கள்கிழமை காலையில் அது வெகு உக்கிரமாய் பாயும் என்பது வேறு விஷயம்.

அப்படியான ஒரு திங்கள்கிழமையில் நடந்த விபத்துதான் இந்தக் கதைக்கே மூலகாரணம். முந்தினநாள் இரவு நடுச்சாமம் கழிந்த பிறகு நண்பனின் காதல் சோகத்தைக் கேட்பதற்காகக் குடித்த பீரின் அசதியில் சற்று கூடுதலாக உறங்கிவிட்டான்.

திடுக்கிட்டு விழித்து அவசர அவசரமாகக் காலைக் கடன்களைக் கழிக்க ஓடினான். இருள் பிரிந்து கொண்டிருந்த நேரம். அங்கேயிருந்த இரண்டு கக்கூஸ்களில் ஒன்றிலிருந்து சிகரெட்புகை குப்குப்பென்று வெளியேறிக் கொண்டிருந்தது. காலியாக இருந்த மற்றொன்றில் அவன் நுழைந்தான்.

உட்கார்ந்து முக்கிக் கொண்டிருக்கும்போது டமார் டமார் என்று அவனுடைய கக்கூஸ் கதவு தட்டப்படுகிற சத்தமும், அதே போல பக்கத்துக் கக்கூஸ் கதவு தட்டப்படுகிற சத்தமும் கேட்டது. அதோடு மூக்குமாமியின் கிழட்டுக்குரல்,

“யாருடாது... உள்ளேயிருந்து பீடி குடிக்கிறது... வெளியே வாங்கடா... இன்னிக்கு... உண்டு இல்லைன்னு பார்க்கிறேன்...”

என்று கர்ஜித்தது. அதைக் கேட்டதும் சர்வமும் ஒடுங்கி விட்டது உலகநாதனுக்கு. வெளிக்கிருக்கும் உணர்வே சட்டென்று கரண்ட் ஆப் ஆனமாதிரி மரத்துப் போய்விட்டது. பயத்தில் உடம்பு லேசாய் நடுங்கியது. ஏதோ சர்ரென்று உள்ளே போய் தொண்டையை அடைத்த மாதிரி ஒரு உணர்வு. அதோடு மறுபடியும் ஒரு தடவை கக்கூஸ் கதவை ஓங்கி ஒரு தட்டு தட்டிவிட்டு,

“வெளியே வாங்கடா... யாருன்னு காட்டறேன்... பேமானி...”

என்று கத்திக்கொண்டே போனாள். இப்போது உலகநாதனுக்கு எப்படி கக்கூஸை விட்டு வெளியேறுவது என்று தெரியவில்லை. ஆய் போகிற எண்ணமே அற்றுப் போய்விட்டது. அந்த ராட்சசி வழியில் இருந்தால் அவ்வளவுதான். ரொம்பநேரம் குத்தவைத்து உட்கார்ந்திருந்ததால் முட்டு ரெண்டும் கடுகடுவென்றிருந்தது. மெல்ல எழுந்து நின்றான். இப்போது எந்தச் சத்தமும் இல்லை.

சிறிது நேரம் கக்கூஸ் சுவரையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் வாழ்க்கையில் இப்படியொரு இக்கட்டு வந்து சேரும் என்று எதிர்பார்க்கவில்லை. கொலைக் குற்றவாளி கூட கையில் அரிவாளுடன் சிரித்தபடி போஸ் கொடுக்கிற காலத்தில் வெளிக்கிருப்பதை ஒரு மாபெரும் குற்றமாக நினைத்து இப்படிக் கக்கூஸிலேயே பதுங்கும்படி ஆகிவிட்டதே. எல்லாம் அந்தப் பரமுவின் பாழாய்ப் போன காதலினால் வந்த வினை என்று சபித்துக்

கொண்டிருந்தான்.

மேன்சன்வாசிகள் எழுந்து நடமாடும் ஓசையும், பல்துலக்கி வாய் கொப்பளிக்கும் ஓசையும் கேட்டது. திரைப்பட மெட்டுகளின் விசில் ஓசையும் கேட்டது. இவ்வளவு சுதந்திர உணர்வு இருக்கிறதென்றால் மூக்குமாமி அங்கே இல்லை என்று அர்த்தம். நைசாகக் கதவைத் திறந்து வெளியே வந்தவன், ஏற்கனவே பல் துலக்க வந்த இரண்டு பேரோடு ஒண்டிக் கொண்டு பரமுவின் அறைக்குப் போய் உடனே வெளியே கிளம்பிவிட்டான். மறுநாள் வேறு ஒரு நண்பரின் அறைக்குச் சென்று சிரமபரிகாரங்களைச் செய்துகொண்டான். மறுநாள் இன்னொரு நண்பரின் அறைக்குச் சென்றான். இப்படியே வேலை கிடைக்கும் வரை ஓட்டிவிடலாம் போலிருக்கிறதே என்றுகூட சந்தோஷப்பட்டான்.

மூன்று நாட்கள் கழிந்தபிறகு காலையில் அடிவயிற்றில் லேசான குத்தல் வலி. அப்போதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது மூன்று நாட்களாக வெளிக்கி போகவில்லை. இந்த ஞாபகம் வந்ததும் வலி அதிகரித்தது. ஆய் போனால் சரியாகிவிடும் என்று நினைத்தான். ஆனால் வெளிக்கி போகிற உணர்வே இல்லை. உடனே வெளியே போய் டபுள் ஸ்டிராங்காய் ஒரு காப்பியும் ஒரு வில்ஸ் பில்டரும் வாங்கிக் குடித்தான். குடித்து முடித்ததும் வந்து கக்கூஸில் உட்கார்ந்து பார்த்தான். டர்புர்ரென்று குசு போனது. அவ்வளவுதான். அதோடு வலியும் நின்றுவிட்டது. முக்கி முக்கிப் பார்த்தான். ஒன்றும் பிரயோசனமில்லை. சரி வலியாவது நின்றதே என்று ஆறுதலோடு எழுந்து வந்து விட்டான்.

அன்று இரவு அவன் தங்கியிருந்த அறை நண்பரிடம் தயங்கித்தயங்கி மெதுவாக விஷயத்தைச் சொன்னான். அவர் உடனே கொஞ்சமும் தயங்காமல்,

“இதெல்லாம் இங்க சாதாரண சப்பை மேட்டர்... ரெண்டு பர்கோலக்ஸ் வாங்கிப் போடு... காலைல பிச்சிக்கும்பா...”

என்றார். உடனே உலகநாதனுக்கு பெருத்த நிம்மதி ஏற்பட்டது. அன்று இரவே இரண்டு பர்கோலக்ஸ் மாத்திரைகளை வாங்கிப் போட்டான். மறுநாள் எந்த மாற்றமுமில்லாமல் காலை வந்து கழிந்தது. அன்று அலைய வேண்டிய இடங்களுக்கெல்லாம் அலைந்துவிட்டு சித்த வைத்தியக் கடைக்குப் போய் பேதிமருந்து வாங்கிச் சாப்பிட்டான். கொடுக்கும்போது மருத்துவரும் கடைக்காரருமாக டூ இன் ஒன் வேலை பார்த்தவர், ரொம்ப பவர்புல்லான மருந்து இது என்றும், ஒரு வேளை பேதி நிற்காமல் போய்க் கொண்டேயிருந்தால் என்னென்ன பிரயோகங்கள் செய்து பேதியை நிறுத்த வேண்டும் என்றும்

அறிவுறுத்தினார். ஆனால் மறுநாள் எந்தப் பிரயோகங்களையும், பரீட்சித்துப் பார்க்கும் வாய்ப்பை அவனுக்குத் தராமலேயே அந்த பவர்புல்லான பேதி மருந்து வயிற்றுக்குள்ளாகவே சமாதியாகி விட்டது.

அவனது வயிற்றுக்குள் என்னதான் நடந்து கொண்டிருக்கிறதென்று தெரியவில்லை. கை வைத்தியமாக விளக்கெண்ணெய் குடித்துப் பார்த்தான். கண்களில் நீர்வழிய காரம் தின்றான். காலை மாலை இரண்டு வேளைகளிலும் கக்கூசுக்குத் தவறாமல் சென்று குறைந்தது அரைமணி நேரமாவது உட்கார்ந்து முக்கிமுக்கிப் பார்த்தான். ஏதோ சீல் வைத்து அடைத்து முத்திரை குத்தின மாதிரி சிறு அசைவும் இல்லை. ஏற்கனவே அவனுக்குள் வேர் விட்டிருந்த பயம் இப்போது கிளை விட ஆரம்பித்திருந்தது. நண்பர்கள் என்றில்லை, முன்பின் அறிமுகமின்றி முதல் முறையாக கேள்விப்படுகிறவர்கள் கூட இந்த நிலைமையின் பின் விளைவுகள் பற்றி அதிபயங்கரக் கற்பனைத் திறனோடு பேசினார்கள். உலகத்திலுள்ள அத்தனை நாடுகளிலிருந்தும் அவர்கள் எவ்வெப்போதோ படித்திருந்த கேட்டிருந்த செய்திகளை ரெபரன்ஸாக எடுத்துக் கூறினார்கள். இதனால் சென்னை மாநகர மேன்சன்வாசிகளுக்கு நல்ல கற்பனைத்திறன் வளர்ந்தது.

இப்போதெல்லாம் அவனைப் பார்த்தவுடன்,

“என்ன இன்னிக்காவது ஆச்சா?”

என்று கேட்பதை எல்லோரும் வாடிக்கையாகக் கொண்டனர். பல சமயம் பதிலைக் கூட எதிர்பார்ப்பதில்லை. உலகநாதனுக்கு தன்னுடைய உடற்கூறு இயக்கத்தில் ஏற்பட்டுள்ள, இந்த மாறுமையை சீர்படுத்த பல்வேறு வழிமுறைகளைக் கைக்கொண்டும் பயனில்லை. இந்தக் குகை திறக்க எந்த மந்திரச் சொற்களை உச்சாடனம் செய்ய வேண்டும் என்றும் தெரியவில்லை.

அண்டாகா கசும் அபூகா குசும் திறந்திடு சீசே என்று எல்லாவிதமான மருந்துகளையும் அவன் வயிற்றுக்குள்ளே அனுப்பி வைக்க அதுவோ அண்டாகா கசும் அபூகா குசும் திறக்கமாட்டேன் மூசே என்று எல்லாவற்றையும் புதையல் போல தன்னுள்ளே சேர்த்து வைத்துக்கொண்டது. பீயை அடைகாக்கிற இந்த பூதத்தை அழிக்க அவன் யார் என்ன சொன்னாலும் செய்து பார்த்தான்.

கடைசியாக அரசு மருத்துவமனைக்குப் போய் மருத்துவரிடம் விஷயத்தைச் சொன்னான். அவர் வியப்பு கலந்த கேலியுடன்,

“என்னது. பத்து நாளாச்சா...” சிரித்தார்.

பின்பு இனிமா கொடுக்கும்படி அங்கிருந்த நர்சிடம் சொன்னார். நாற்றத்தின் கடலில் எல்லோரையும் மூழ்கடித்துக் கொண்டிருக்கும் ஆசுபத்திரி கக்கூஸிற்கு அருகிலேயே அவனுக்கு ஒரு பாயைக் கொடுத்து, இனிமா குழாயைக் குண்டியில் செருகினார்கள். இனிமா தண்ணீர் முழுவதும் இறங்கியதும் குழாயை உருவிக் கொண்டு போய் விட்டார்கள்.

ஒரு பத்து நிமிடம் கழிந்ததும் வயிறு லேசாக கடமுடா என்று சத்தம் கொடுத்தது. உடனே அருகேயிருந்த கக்கூஸிற்கு ஏழுகடல் தாண்டி உள்ளே போய் முன்னெச்சரிக்கையாய் உட்கார்ந்து கொண்டான். முக்கினால் உள்ளே போயிருந்த இனிமா தண்ணீர் மட்டும்தான் வெளியேறியது. வேறு எந்த அற்புதமும் நிகழவில்லை.

அவன் மருத்துவர் முன் மறுபடியும் நின்றான்.

அவர் கொடுத்த மருந்துக்கு மடங்காத அவனைக் குற்றவாளியைப்போல பார்த்தார். பின்பு எல்லாப் பரிசோதனைக் கூடங்களுக்கும், இந்த உசுப்பிராணியை ஆராய்ச்சி செய்யும்படி கட்டளையிட்டு சீட்டு எழுதிக் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்டு வருகிற வழியில் தீர்க்கதரிசிபோல மற்றுமொரு நோயாளி அவனிடம்,

“தம்பி இங்கே இருந்தே... மலக்குடலை அறுத்து ஒரு டியூப்பைப் போட்டு விட்டுருவாங்க... அப்புறம் வாழ்க்கை முச்சூடும் கக்கூஸா அலைய வேண்டியதுதான்...”

என்று முன் உரைத்தார். அதைக் கற்பனை செய்யும்போது பீப்பையைச் சுமந்துகொண்டே அலைகிற தோற்றமும் நாற்றமும் தோன்றியது. உடனே மருத்துவமனையிலிருந்து தப்பித்துச் சென்றான். அவசர அவசரமாக ஒரு இருநூறு ரூபாய் பரமுவிடம் கடன் வாங்கிக்கொண்டு,

“இருக்கமோ சாகறமோ... ஊருக்குப் போய்டுவோம்...” என்று தனக்குள் சொல்லிக்கொண்டே ஊருக்குப் போவதற்கு ரயில் ஏறினான்.

கதை முடிந்துவிட்டதா என்று நானும் என்னுடைய கதை சொல்லி நண்பரிடம் கேட்க வாயெடுத்தேன். என் முகத்தை சில விநாடிகள் மௌனமாக பார்த்துக்கொண்டு இருந்தார். பின்பு மீண்டும் தொடர்ந்தார்.

அவன் ரயிலில் ஏறி உட்கார்ந்ததிலிருந்து பலவிதமான கற்பனைகள். குறிப்பாக மரணம் பற்றிய பயம். ஒரு வேளை இறந்து போனால் இது ஒரு விநோதமான மரணமாக அல்லவா மனித மரண வரலாற்றுப் பதிவேடுகளில் பதிவாகும். வெளிக்குப் போகாமல் ஒருவன் செத்தான்.

ஆனால் அவன் செத்த பிறகு துட்டி வீட்டில் யாராலும் இருக்க முடியவில்லை. ஒரே பீநாத்தம். பிணத்தை எரிக்கும் சுடலைத் தொழிலாளி பீநாத்தம் தாங்காமல் இடுகாட்டிலிருந்து ஓட்டம். இப்படி செத்தபிறகும் பீப்புகழோடு நெடுங்காலம் வாழவேண்டியிருக்குமே என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அவனது இருக்கையில் கூனிக் குறுகி உட்கார்ந்துகொண்டு -வெளியே நகரத்தின் கோரமான புண்களைப் போன்று சிறிதும் பெரிதுமான கட்டடங்கள், எல்லாவற்றிலும் காமத்தைப் பணயமாக வைத்து பொருட்களை வியாபாரம் செய்யும் பிரம்மாண்டமான விளம்பர ஹோர்டிங்குகள், பூச்சிகளைப் போல, புழுக்களைப் போல நெளிந்து செல்லும் மனித யந்திரங்கள் என்று பார்த்துக்கொண்டே வந்தவனுக்கு அயர்ச்சியாக இருந்தது. உடல் இறுக்கமாகி விட்டது. உறுப்புகள் ஒவ்வொன்றும் அடைத்து மூடிக் கொண்டனவோ என்று நினைத்தான். கிறக்கத்தில் தலையைப் பின்னுக்கு சாய்த்தான். கண்களை மூடினான். எவ்வளவு நேரம் கழிந்தது என்றே தெரியவில்லை.

திடீரென்று, "அப்பாடா இப்பதான் நல்ல காத்தே வருது... தாம்பரம் தாண்டினாத்தான் நிம்மதியா மூச்சு விடமுடியும்..." என்ற குரல் ஒரு அசரீரியைப்போல அவனுக்குள் இறங்கியது. அவன் கண்களைத் திறந்தான்.

இதுவரை உறுத்தலாகத் தெரிந்த நகரத்தின் சுவடுகள் மறைந்து வயல்வெளிகள், கட்டாந்தரைகள், பொட்டல் காடுகளைக் கடந்து சென்று கொண்டிருந்தது ரயில். அப்போதுதான் அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. அவனுடைய அடிவயிற்றில் ஏதோ இளக்கம் கொடுத்த மாதிரி லேசான வலியுடன் ஒரு உணர்ச்சி கிளர்ந்தது.

அவன் அருகிலிருந்தவரிடம் ஏர் பேக்கைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு கக்கூஸிற்குப்போய் உட்கார்ந்தான். அவ்வளவுதான். என்ன ஆனந்தம்... என்ன ஆனந்தம்... ஒரு அரை மணி நேரமாவது உட்கார்ந்திருந்து எல்லாவற்றையும் வெளியேற்றினான். அப்படிக்கூட சொல்ல முடியாது. எல்லாம் தானாக வெளியேறியது. ஒரு புதிய மனிதனாக அகமும் முகமும் மகிழ்ச்சி பொங்க வெளியே வந்தான்.

இதைச் சொல்லும்போதே என்னுடைய கதைசொல்லியின் முகத்தில் தாண்டவமாடிய மகிழ்ச்சியைப் பார்க்க வேண்டும். அப்போதே புரிந்துவிட்டது. இந்த மாயாஜாலம் எப்படி நிகழ்ந்திருக்கும் என்று. விருத்தாசலத்திற்குள் ரயில் நுழைந்து கொண்டிருந்தது. நான் என்னுடைய கதைசொல்லியிடம் கை குலுக்கி வாழ்த்துகளைச்

சொல்லிவிட்டு இருக்கையிலிருந்து எழுந்தேன்.

47. ஒரு விளக்கும் இரண்டு கண்களும்

சூசிகை அல்லது முன்னுரை

பழைய புத்தகக் கடையில் புத்தகங்களைத் தேடுகிற பழக்கம் எனக்குக் கிடையாது. ஆனால் அந்தப் புத்தகக் கடைகளைத் தாண்டும் போதெல்லாம் ஆவலுடன் பார்த்துக்கொண்டே நகர்ந்து விடுவேன். அப்படிப்பட்ட எனக்கு அபூர்வமாக ஒரு புத்தகம் கிடைத்தது. முன்பின் அட்டைகளின்றி எழுதிய எழுத்தாளர் பெயருமின்றி, பழுப்பு நிறம் அடர்ந்து ஒடிந்து நொறுங்குகிற பக்கங்களைக்கொண்ட ஒரு ஆங்கிலப் புத்தகம். அந்தப் புத்தகம் என்னை ஈர்த்ததற்கான காரணமே அதன் வயதுதான். இன்னும் சிறிது காலத்தில் தானே இயற்கை எய்திவிடப் போகிற அந்தப் புத்தகத்தின் கடைசி வாசகனாக நான் இருந்துவிட்டுப் போகிறேன். வாங்கும்போது புத்தகக் கடைக்காரன் கொஞ்சம் விசித்திரமாகப் பார்த்தமாதிரி இருந்தது. எனக்கு எப்போதுமே நிறைய விசித்திரங்களைக் கற்பனை செய்துகொள்ளும் பழக்கம் இயற்கையாக உண்டு. புத்தகத்தைப் பதவிசாக கொண்டுவந்து படிக்க ஆரம்பித்தேன்.

அந்த இரவு என் வாழ்வில் மறக்க முடியாத இரவாகி விட்டது. ஒரு பிரளய காலத்தையே அந்த இரவில் நான் சந்தித்தேன். தலைமுடி கலைந்து அழுது சிவந்த கண்களுடன், தூக்கமில்லாத முகத்துடனும் காலையில் என் அறையிலிருந்து வெளியே வரும்போது என் மனைவி,

“என்ன பேய் பிடிச்சமாதிரி வர்றீங்க...”

என்றாள். உண்மையில் அந்த எழுத்துப் பேய் என்னைப் பிடித்துக்கொண்டது. இரண்டு நாட்களாய் யாரிடமும் பேசவில்லை. என்னைப் பிடித்த பேயின் நிலை இன்னும் ஸ்திரமாயிற்று. அதன் சேட்டைகள் ஆரம்பித்தன. அந்தச் சேட்டையின் விளைவாக, அந்தப் புத்தகத்திலிருந்த கதைகளை மொழிபெயர்க்கத் தொடங்கினேன். ஏதோ ஒரு கதையில் ஒரு கதாபாத்திரம் தன்னை எழுத்தாளன் என்று சொல்லிக் கொள்கிறது. தன்னுடைய பெயரையும் சைலேந்திர சாட்டர்ஜி என்றும் அறிமுகப்படுத்துகிறது. என் உள்ளுணர்வின் மீதுள்ள நம்பிக்கையில் நானும் இந்தக் கதைகளை எழுதியவர் அவரே என்று முடிவு செய்துகொண்டேன். கதைகள் எழுதப்பட்ட வருடம் எதுவும் அதில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் எழுதப்பட்டுள்ள கதைகளின் பின்புலம் அநேகமாக 1950களில் வெளிவந்திருக்கலாம் என்று தோன்ற வைத்தது.

ஐம்பத்தைந்து வருடங்களைத் தாண்டிய பிறகும் அந்தக் கதைகளின்

துடிப்பை இதோ இப்போது மொழி பெயர்க்கும்போது உணர்கிறேன். இரத்தக் கவிச்சி வாடையுடன், மனதில் மிகப்பெரிய குற்றவுணர்ச்சியை ஏற்படுத்திய கதைகள். கை விரல்கள் பிசுபிசுக்கின்றன. கதைகள் உருவ அமைதியில் சற்று குறைவானவை. ஆனால் கொந்தளிக்கும் உணர்ச்சிகளைக் கொட்டி வடிக்கும்போது உருவ அமைதி, அழகியல் உணர்வு என்றா வகை பிரிக்க முடியும். ஆனால் அந்தக் கதைகளை நான் வாசிக்கும்போது ஒரு வாசகர் மனதில் அவை என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்தன. அதிலிருந்து 'இரண்டு கண்கள்' என்ற ஒரு கதையை நீங்கள் வாசிப்பதற்காக மொழிபெயர்த்துள்ளேன். அந்தப் பிசாசை உங்களிடமும் தொற்ற வைக்க முயற்சித்திருக்கிறேன். வாசித்துப் பாருங்கள்.

இரண்டு கண்கள்

பனியினால் திரையிட்டு மங்கிய கண்ணாடி சன்னல் வழியே மால் வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஆனி. வெளியே எதுவும் தெரியவில்லை. தலைக்குல்லாவை நன்றாக இழுத்து காதுகளை மூடிக்கொண்டாள். சிம்லாவின் குளிர்காலம் மிகப் பிரசித்தி பெற்றது. ஐந்து நிமிடங்களுக்கு முன்புதான் ஒரு பெக் விஸ்கி சாப்பிட்டிருந்தாள். இன்னும் கதகதப்பு வரவில்லை. மூக்குக் கண்ணாடியை எடுத்து அடிக்கடி துடைத்துக் கொண்டாள். அதில்தான் பனி திரையிட்ட மாதிரி இருந்தது. மால் வீதியின் எல்லா வீடுகளும் இருளில் மூழ்கி குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தன. எல்லோரும் கம்பளிகளுக்குள் புதைந்து வெகுநேரமாகிவிட்டது. குளிர்கால நடன விருந்து ஆங்கிலேய அதிகாரிகளுக்கு மிகவும் பிடித்த விஷயம். டோங்கா வண்டிகளில் இரவு வந்ததும் வந்திறங்கிக் கொண்டேயிருக்கும் ஆங்கிலேய சீமாட்டிகளும், இந்திய வேலைக்காரர்களால் பணிவுடன் பரிமாறப்படும் எம்பயர் விஸ்கியும் அங்கே பெரும் உவகையையும் பெருங்களிப்பையும் உருவாக்கிவிடும்.

அந்த இரவா இது?

ஆனால் டோங்கா வண்டிகளின் சத்தமோ, இசையோ கேட்கவில்லையே.

வேறு ஏதாவது சத்தம் கேட்கிறதா? இரண்டு கைகளினால் காதுகளைச் சேர்த்துக் குவித்துக் கேட்டுப் பார்த்தாள் ஆனி. வயதான அந்தக் கண்களிலிருந்து அதிகக் கூர்மையைக் கொண்டுவர முயற்சி செய்தாள். வெளியே வீதியில் யாராவது நடமாடுகிறார்களா? உற்றுப் பார்த்தாள். எதுவும் தெரியவில்லை. உயர்ந்த பிர் மரங்களின் வழியே சிம்லாவின்

பனிக்காற்று உஸ்... உஸ்... என்று ஒலி எழுப்பி எச்சரித்துக் கொண்டேயிருந்தது.

இருண்ட வானத்தில் நிறைந்திருந்த நட்சத்திரங்களும் பனித்திரை மூடியிருந்ததுபோல மங்கலாய் இருந்தன. ஆனால் ஆனிக்குத் திருப்தியில்லை. தன் மூக்குக் கண்ணாடியை மாற்ற வேண்டும் என்று நினைத்துக்கொண்டாள். அதே போல காதிலுள்ள மெஷினுக்கும் புதிய பாட்டரிகள் போட வேண்டும் என்று நினைத்தாள். இப்படியே ஒவ்வொரு மாதமும் புதிய புதிய கண்ணாடிகளை மாற்றிக்கொண்டும், ஒவ்வொரு வாரமும் புதிய பாட்டரிகளை மாற்றிக்கொண்டும் இருந்தாள். ஆனாலும் ஆனியின் மனம் சமாதானமடையவில்லை. வெளியே மிகப் பெரிய கலவரம் நடந்து கொண்டிருக்கிறது. அவளால்தான் அதைப் பார்க்க முடியவில்லை. அந்த சத்தங்கள் கேட்பதைப் போலிருந்தது. கொலைவெறிக் கூச்சல். மரணத்தின் விளிம்பிலிருந்து அலறல்கள்! காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள்... வேண்டாம்... வேண்டாம்... விட்டு விடுங்கள்... ஐய்யோ... கடவுளே... என்ற கதறல்கள் அவளுக்குக் கேட்டுக் கொண்டேயிருந்தன.

ஒவ்வொரு அலறலுக்கும் அவள் திடுக்கிட்டு தன் சாய்வு நாற்காலியிலிருந்து துள்ளி எழுவாள். சன்னல் அருகே சென்று பார்ப்பாள். எதுவும் தெரியவில்லை. அவள் முணுமுணுப்பாள்.

“அந்தக் கொடியவர்கள் வருவார்கள்... மறுபடியும் வருவார்கள்...”

ஒரு சில நிமிடங்களில் மீண்டும் அந்தக் கூச்சல், கொலைவெறிக் கூச்சல், கைகளில் கத்தி, வாள், சுத்தியல், ஹாக்கிமட்டை இன்னும் வேறு ஏதேதோ ஆயுதங்களோடு ஓடும் கும்பல் அவள் கண்ணுக்கு முன்பாகத் தோன்றியது. அவள் பயந்து நடுங்கினாள். இதயம் வேகமாகத் துடித்தது. வயிற்றைப் பிசைந்து வலித்தது. மலம் கழிக்கவும் சிறுநீர் கழிக்கவும் முட்டிக்கொண்டு வந்தது. மெதுவாக எழுந்து அருகிலிருந்த டார்ச்சை எடுத்துக்கொண்டு கழிப்பறை நோக்கி சிறிய அடிகளாய் எடுத்து வைத்து மெல்ல நடந்தாள். இப்படியே இரவு முழுவதும் விழித்திருந்தாள்.

விடியும் வேளையில் தன்னையறியாமலேயே உறங்கிவிட்டாள். சில சமயம் சாய்வு நாற்காலியில், சில சமயம் தரையில், சில சமயம் சமையலறையின் மூலையில். பகலில் யாரையும் அவள் பார்க்கவுமில்லை. அவளையும் யாரும் பார்க்கவுமில்லை. வாரம் ஒரு முறை ரகசியக் காற்றுபோல வந்து போகும் ஆங்கிலோ இந்தியக் கனவானால் அவளுடைய அன்றாடத் தேவைகள் நிறைவேற்றப்பட்டன.

1947ஆம் ஆண்டில் சர் சிரில் ராட் கிளிஃப் இந்திய பாகிஸ்தான் எல்லைக் கோடுகளைக் கிழித்துக் கொண்டிருந்தார். இந்தியாவைப் பற்றி எதுவுமே தெரியாத இந்த பருத்த ஆங்கிலேய வழக்கறிஞர், தான் வரையும் கோடு இந்திய நிலப்பரப்பில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்று உணர முடியாதவராக இருந்தார். அவரது பென்சில் கூறுபோட்டது நிலப்பரப்பை மட்டுமல்ல என்பதை மிக மிகத் தாமதமாகவே தெரிந்துகொண்டார். அப்போது யாராலும் எதுவும் செய்யமுடியவில்லை.

அவர் வரைந்த எல்லைக் கோடுகளின் பிளவுகளிலிருந்து பிறந்த அரக்கர்கள் நாட்டைச் சூறையாடினார்கள். ஒரு நாடு முழுவதும் கோட்டி பிடித்து அலைந்த நாட்கள். அப்போது எந்த மதத்தின் எந்தக் கடவுளும் அவதாரம் எடுத்து, அரக்கர்களை அழிக்கவில்லை. தன் வாழ்வில் தேசம் என்றால் என்னவென்றோ, விடுதலை என்றால் என்னவென்றோ, பிரிவினை என்றால் என்னவென்றோ அறியாத லட்சக்கணக்கான அப்பாவி இந்துக்களின், முஸ்லிம்களின், சீக்கியர்களின் உயிரைக் காப்பாற்ற எந்தக் கடவுளும் வரவில்லை. கசாப்புக் கடையில் கொல்லப்படுகிற மிருகங்களைவிட கேவலமாய் படுகொலை செய்யப்பட்டனர் மனிதர்கள். வீடுகள், தெருக்கள், வீதிகள், சாலைகள், சாக்கடைகள், குப்பைமேடுகள் எங்கு பார்த்தாலும் பிணங்கள். கை, கால்கள் வெட்டப்பட்டவை. குடல் குந்தாணியெல்லாம் வெளியே வந்தவை. கண்கள் தோண்டப்பட்டவை, உடைந்த மண்டையின் வெளியே மூளை உருக்குலைந்து கிடந்தவை, பிறப்புறுப்புகள் சிதைக்கப்பட்டவை. அப்பப்பா...

லட்சக்கணக்கான கடவுளர்களும், முப்பத்தி முக்கோடி தேவர்களும், தேவதூதர்களும், முனிவர்களும், குருக்களும் உள்ள இந்தியத் துணைக் கண்டத்தில், அதற்கு அதிகமாக இவர்களையே நம்பியிருந்த ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் படுகொலை செய்யப்பட்டனர்.

தாங்கள் இதுவரை வணங்கி வந்த எந்தக் கடவுளும், தங்களது உயிர்போகும் அந்த வேளையில் கூட பிரசன்னமாகிக் காப்பாற்ற வரவில்லை என்பதை உயிர் பிரியும் கடைசி நொடிகளிலேயே இறந்தவர்கள் உணர்ந்தார்கள். அதைவிட ஒவ்வொருவரும் இந்தப் படுகொலைகளை தங்கள் கடவுளரின் பெயரைச் சொல்லியே செய்தனர் என்பது ஒரு விசித்திரமான முரணாகவே மனித நாகரிக வரலாற்றில் இருந்து வருகிறது.

1947 ஆகஸ்ட் 18ஆம் தேதி வானொலியில் எல்லைக் கோடுகளைப்

பற்றிய சிறப்புச் செய்தி வாசிக்கப்பட்டபோது சாண்ட்விச்சையும், முந்திரியுடன் வறுக்கப்பட்ட சில்லி சிக்கன் துண்டுகளையும், அழகாக நறுக்கி வைக்கப்பட்டிருந்த ஆப்பிள் பழத்துண்டுகளையும் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் ஆனி. அப்போது மால் வீதி தன்னுடைய மதிய நேர செல்லத் தூக்கத்துக்குத் தயாராகிக் கொண்டிருந்தது. மாலை நேர நடன விருந்துகளில் புத்துணர்ச்சியுடன் கலந்துகொள்ள வேண்டுமல்லவா.

ஆனிக்கு அவர்கள் வீட்டுச் சமையல்காரன் இக்பால்தான் செய்தியைக் கொண்டுவந்தான். அப்போது மாலை நான்கு மணியிருக்கும். "நகரத்தில் ஒரே குழப்பமாக இருக்கிறது. அநேகமாக நடனவிருந்துகள் ரத்தாகிவிடும். மேடம் ஆனி, வெளியே எங்கேயும் நீங்கள் போக வேண்டாம். நான் போய் என் குடும்பத்தாரை பத்திரமான இடத்தில் விட்டு விட்டு உடனே வந்து விடுகிறேன்" என்று சொன்னான். ஆனியை அவன் பொறுப்பில் விட்டு விட்டு அவளுடைய மாமா ஸ்டேன்போர்டு கல்கத்தா வரை சென்றிருந்தார். இக்பால் சொன்னதைக் கேட்ட ஆனி அலட்சியமாகச் சிரித்தாள்,

"இங்கே ஒரு பிரச்சினையும் வராது... ஏன் அவரவர்கள்... அமைதியாக அந்தந்த பிரதேசத்தில் இருக்க வேண்டியதுதானே... இல்லையென்றால் விரும்பிய பிரதேசத்திற்கு போய்விட வேண்டியதுதானே. எதற்கு குழப்பம்...?"

என்று கேட்டாள் ஆனி. இதைக் கேட்ட இக்பால் சிரித்தான்.

"மேடம் இன்னும் ஒரு ஆயிரம் வருடம் நீங்க இங்கே இருந்தாலும் உங்களால் இந்தியாவை புரிந்துகொள்ள முடியாது... எங்களுடைய அரசியல் தலைவர்களாலேயே புரிந்துகொள்ள முடியவில்லையே..."

என்று சொன்னான். அவன் குரலில் இருந்த அழுத்தம் ஆனியை அமைதிப்படுத்தியது.

"சரி... போய்ட்டு சீக்கிரம் வா..."

"சரி மேடம்... எதுக்கும் முன்னால் கதவை பூட்டிவிட்டு போகிறேன்... நான் வருவதற்குள் ஏதாவது பிரச்சினையென்றால் பின் கதவு வழியாக தப்பித்து விடுங்கள்... கையில் துப்பாக்கியை வைத்துக்கொள்ளுங்கள்..."

என்று சொல்லிவிட்டு அவளுடைய மாமாவின் கைத்துப்பாக்கியை எடுத்து அவள் கையில் கொடுத்தான். அவள் முகத்தில் பயம் படர ஆரம்பித்துவிட்டது.

"ஏய்... நீ... ரொம்ப பயமுறுத்துகிறாய்... எங்களுக்கு எதற்கு ஆபத்து

வரப்போகிறது?”

“இல்லை... எச்சரிக்கிறேன் மேடம்... எச்சரிக்கையாக இருப்பது நல்லதுதானே... ஏனென்றால் மக்களுக்கு பைத்தியம் எப்போது பிடிக்கும் என்று யாராலும் சொல்ல முடியாது... பைத்தியங்களுக்கு தாங்கள் என்ன செய்கிறோம் என்று புரிந்துகொள்ள முடியாதே...”

என்று சொல்லிவிட்டு விறுவிறுவென்று வெளியேறினான் இக்பால்,

வெளியே பூட்டு பூட்டப்படும் சத்தம் கேட்டது. சில பறவைகளின் மெலிதான கூவல்களைத் தவிர வேறு சத்தம் எதுவும் ஆனிக்குக் கேட்கவில்லை. எப்போதும் போல பிர் மரங்களின் காற்று கானம் இசைத்தது. இந்தக் காற்றின் சத்தத்தைக் கேட்கும் போதெல்லாம் அவளுக்கு பீத்தோவனின் ‘த விண்ட்’ இசைக்கோவை நினைவுக்கு வரும். ஆனால் இப்போது அந்தக் காற்றின் ஒலி வித்தியாசமாய் ஒலிக்கிறதோ.

அவள் சன்னல் வழியே வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். வெறுமையாக இருந்தது. வானொலியைத் திருப்பினாள். ஹிந்துஸ்தானி இசை ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. வானொலியை அணைத்துவிட்டு படுக்கையில் படுத்தாள். மெல்ல கண்கள் அயரும் நேரம் பெரும் கூச்சல், குலை நடுங்க வைக்கும் கூச்சல் கேட்டது. ஆனி திடுக்கிட்டு துள்ளி எழுந்தாள். ஓடிச் சென்று திறந்து கிடந்த சன்னல்களை அடைத்தாள். சில விநாடிகளில் அந்தச் சத்தம் தூரமாகிக் கொண்டே போனது.

ஆனிக்கு அச்சம் வளர்ந்தது. கைகள் நடுங்க ஆரம்பித்தன. தனியாக இருக்கிறோம் என்பதே இன்னும் பயத்தைக் கொடுத்தது. கைத் துப்பாக்கியை எடுத்து படுக்கையில் பக்கத்தில் வைத்துக்கொண்டாள். மீண்டும் அமைதி. எதுவுமே நடக்காதது மாதிரி. இதோ இன்னும் சிறிது நேரத்தில் அவள் நடனவிருந்துக்கான ஆடைகளை அணிந்துகொண்டு புறப்படப் போகிறாள். எதுவுமில்லை. பயப்படும்படி எதுவுமில்லை.

ஆனால் மீண்டும் அந்தச் சத்தம், கூச்சல், ஏராளமான மனிதர்களின் காலடிச் சத்தம். ஆனி கையில் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு வரவேற்பறையிலிருந்து முன் வராந்தாவுக்கு வந்தாள். இருட்டத் தொடங்கி இருந்தது. ஆனியின் வீட்டு வாசலுக்கு முன்னால்தான் ஒரு கும்பலும் கூச்சலும்.

“ஜெய் காளி... விடாதே அவனை... கொல்லு...”

என்ற கத்தல்கள். அதையும் தாண்டிய ஒரு கதறல்.

“விட்ருங்க அண்ணே... நாம அண்ணந்தம்பிங்க... என்னைய விட்ருங்க அண்ணே...”

கேட்டது. ஆனிக்கு அது மிகவும் பரிச்சயமான குரல். கதறலால் அந்தக் குரல் கொஞ்சம் பிசிறடித்திருந்தது... ஆனால் அந்தக் குரல்... இக்பால்... இக்பால்... அவனுடையதுதான். ஆனிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அந்த இருளுக்குள் எல்லோருமே கோட்டுருவங்களாகவே தெரிந்தனர். யார் எங்கிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அப்போது திடீரென்று ஒரு குழந்தையின் அழுகுரல் ஓங்கிக் கேட்டது.

“ஐயோ என்... குழந்தை... என் குழந்தை...”

என்ற இக்பாலின் கூக்குரலைக் கேட்டதும் ஆனிக்கு இதயமே வெடித்துவிடும்போல அதிர்ந்தது. போனமாதம் ஆனியின் வீட்டிற்கு அவனுடைய ஆறுவயது மகள் நூர்ஜஹானைக் கூட்டிக்கொண்டு வந்திருந்தான். துறுதுறுவென்று இருந்த குழந்தையுடன் விளையாடியதில் ஆனிக்கு அன்று முழுவதும் பொழுது போனதே தெரியவில்லை. அடிக்கடி அழைத்துவரச் சொல்லியிருந்தாள். அவளா... அவளா... உடனே வேகமாக பின் வாசல் கதவைத் திறந்து வெளியே வந்தாள். ஆனால் காலம் கடந்துவிட்டது. உயிர் போகிற அலறல் கத்தியாய் ஆனியின் உயிருக்குள் இறங்கியது. வெறிகொண்ட அந்த கும்பல்,

“ஜெய் காளி... ஜெய்!”

என்று வெற்றிக் களிப்புடன் கூவிக்கொண்டு அடுத்த இரையைத் தேடி ஓடியது. அப்படியே அசையாமல் உறைந்து போய்விட்டாள். திடுமென உணர்ச்சி வந்ததுபோல கையிலிருந்த துப்பாக்கியால் கன்னாபின்னாவென்று சுட்டுக்கொண்டே வாசலை நோக்கி ஓடினாள். யாரும் இல்லை அங்கே. வாசல் இரும்புக் கதவின் முன்னால் இரத்தம் பீறிட இக்பாலின் உடல், வெட்டப்பட்ட தலை ஒரு நரம்பின் தொடர்பினால் விடுபடாமல் உடலோடு கிடந்தது. முகம் வானத்தை வெறித்தபடியிருக்க, பாதி திறந்த கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் இன்னமும் காயாமலிருந்தது.

இன்னமும் கழுத்திலிருந்து சொட்டிக் கொண்டிருந்த ரத்தத்தில் ஆனி வீட்டின் முன் வாசல் பூட்டுக்கான சாவி முங்கிக் கொண்டிருந்தது. பக்கத்தில் இக்பாலின் குழந்தை நூரும் ரத்த சகதியில். பார்க்க முடியவில்லை. முகத்தை மூடிக் கொண்டாள். அவளுக்கு தலை

சுற்றியது. ஓங்கரித்துக் கொண்டு வந்தது. அப்படியே திரும்பி வீட்டுக்குள் ஓடினாள். பின் வாசல் வழியாக உள்ளே சென்று எல்லாக் கதவுகளையும் அடைத்துத் தாழ்ப்பாளிட்டாள்.

கைகளில் பிடித்த துப்பாக்கியுடன், சன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்தாள் இரவு முழுவதும். அங்கங்கே தீயின் பிழம்புகள் கொளுந்து விட்டெரிந்தன.

புகைமண்டலங்கள் மேகங்களாய் ஊர்ந்து சென்றன. அவ்வப்போது கூச்சல் கேட்டுக்கொண்டேயிருந்தது. ஆனி வெறித்துப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். விடிந்தபோது தன்னையுமறியாமல் அப்படியே உறங்கிவிட்டாள்.

அன்றிலிருந்து அவள் வாழ்க்கை மாறிவிட்டது.

ஆங்கிலேயர்கள் எல்லோரும் நாட்டை விட்டுப் போய் விட்டாலும் அவள் போகவில்லை.

இக்பாலின் பூட்டு அவளை வெளியே விடவில்லை.

தலை துண்டிக்கப்பட்ட இக்பாலின் முகத்தில் வழிந்த கண்ணீர் இன்னமும் ஆனியின் கண்ணுக்குள்ளேயே இருந்தது. எத்தனையோ முறை அவளது உறவினர்கள் வற்புறுத்தி அழைத்தும் அவள் இங்கிலாந்து செல்லவில்லை.

லேசான மனப்பிறழ்வு நோயும் அவளை பீடித்திருந்தது. அதனால் அவளை இங்கேயே தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் விட்டுவிட்டார்கள்.

சிம்லாவில் எல்லோரும் ஆனியை சூனியக்காரி என்று சொல்லத் துவங்கியிருக்கிறார்கள். அந்த வீட்டில் சூரியன் மறைந்து இருள் பரவிய பின்பே அவள் நடமாட்டம் ஆரம்பிக்கிறது. அந்த நடமாட்டத்தின் அறிகுறியாக ஒரு விளக்கு எரிகிறது.

அந்த விளக்கின் வெளிச்சத்தில் மால் வீதியை வெறித்துக் கொண்டிருக்கும் இரண்டு ஆங்கிலேயக் கண்கள்.

இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள எல்லா மதக் கடவுளர்களின், முப்பத்தி முக்கோடி தேவர்களின், தேவதூதர்களின், கையாலாகாத்தனத்திற்கு சாட்சியாய் அந்தக் கண்கள்...

48. ஊழி

அண்ணாச்சி நீங்களாச்சும் இதை என்னன்னு கேக்கக் கூடாதா. பாவிப்பயலுக இந்த அடி அடிச்சிருக்கானுவெளெ. குடிச்சமனுசங்கிட்டே இவங்களுக்கு என்ன பேச்சு வேண்டிக் கெடக்கு. குடிவெறியில அப்படி இப்படி பேச்சு வரத்தான் செய்யும். அதுக்காக இப்படியா கண்ணுமண்ணு தெரியாம போட்டு அடிக்கிறது... நீங்கல்லாம் பெரிய மனுசன்தானே... அப்பவே என்னன்னு கேக்கக்கூடாதா. அவருக்கு ஒண்ணு ஆயிடிச்சின்னா நான் மூணுபிள்ளைகளை வச்சிகிட்டு என்ன பண்ணுவேன்?

வாங்கின பணத்தைத் திருப்பிக் கொடுக்கலைன்னா... அதுக்கு என்ன அடிமானம் வேண்டியிருக்கு... மூக்கந்தண்டைய ஒடைச்சிருக்கானுக... கையைத் திருப்பிவிட்ருக்கானுகளே... அந்தக் கை இருந்தாத்தானே கொடுத்த கடம் திரும்ப வரும்னு ஓர்மை இருக்கா அவனுகளுக்கு... அறுதப் பயலுக... அண்ணாச்சி நீங்களும் வேடிக்கை பாத்துகிட்டு இருந்திருக்கீகளே... கொஞ்சம் என்ன ஏதுன்னு கேக்கப்படாதா... யாரும் கேக்க நாதியில்லைன்னுதானே இம்புட்டு பேருக்கு நடுவில போட்டு அடிச்சிருக்கானுக... அவனுக வெளங்குவானுகளா... அவனுக கைல பாம்பு புடுங்க...

அண்ணாச்சி போனமாசம் நாலுபேரை வைச்சி பஞ்சாயத்து பண்ணி வட்டிப் பணத்தை வாங்கினீகளே... அப்ப என்னெல்லாம் சொன்னீக... எந்தம்பி மாதிரின்னு சொன்னீகளே... அந்த மனுசன் அடிபட்டு ரத்தம் கொட்டிக் கிடக்கும்போது, நீங்களும் ஆளோடு ஆளா நின்னு சிரிச்சிட்டு வேடிக்கை பாத்துகிட்டு இருந்திருக்கீகளே... உங்களுக்கே இது நல்லாருக்கா... நாங்க இந்த ஊருக்கு வந்ததிலிருந்து ஒங்ககிட்டே பணம் வாங்கிட்டு எவ்வளவு வட்டி கொடுத்திருப்போம்... எவ்வளவு மொதல திருப்பிக் கொடுத்திருக்கோம்... நீங்க ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம்ல... ஏண்டா அடிக்கீகன்னு... அவருக்கு ஒண்ணு ஆயிடிச்சின்னா நான் மூணு பிள்ளைகளை வைச்சிகிட்டு என்ன பண்ணுவேன்...

எங்களுக்கு நாதியில்லன்னு மட்டும் நெனக்காதீங்க. தகவல் சொன்னா ஊரிலிருந்து எங்க மக்க மனுசாள் திரண்டு வந்திரும். அப்புறம் உண்டு இல்லைன்னு ஆயிரும்... இந்தத் துப்பு கெட்ட மனுசன்... ஒழைச்சி ஒழைச்சி என்னத்த கண்டாரு... கடனையும் வட்டியையும் அடைக்கத்தான் சரியாருக்கு... அரைவயிறும்... கால்வயிறும் கஞ்சிய குடிச்சிட்டு கெடக்கோம். அந்த வெறியில எதாச்சிம் இடக்குமடக்கா

பேசியிருப்பாரு. குடிச்ச மனுசங்கிட்ட எப்படி அனுசரிச்சிப் போணும்னு தெரிய வேண்டாம். அதுக்காக இப்படியா போட்டு சக்கையா அடிக்கிறது. அண்ணாச்சி நீங்களே வந்து பாருங்க. நீங்க இருந்துமா இப்படி நடக்க விட்டீக...

இந்த ஊரை விட்டுத் தொலையலாம்னாலும் முடிய மாட்டேங்கு... கடனைக் கொடுத்து தீந்த பாடுமில்லை... வாழ்ந்த பாடுமில்லை... அன்னக்கி பஞ்சாயத்துல என்ன சொன்னீக... கடனைக் கொடுத்திட்டு ஊரைக் காலி பண்றதானா பண்ணிக்கலாம்னு சொன்னீகளே... இப்ப இந்த அடி அடிச்சிருக்கானுகளே... எந்திரிச்சி வேலைக்குப் போறதுக்கே பத்து நாளாவுமே... நாங்க எப்படி கடனை அடைக்கிறது. அய்யோ... எந்தெய்வமே... ஒனக்கு கண்ணில்லையா... இந்த அநியாயத்தை என்னன்னு கேக்கமாட்டியா... அவனுக கையில புத்து மொளைக்க... அண்ணாச்சி எனக்கு ஆத்தாமையெல்லாம், எப்படி உங்களுக்கு இந்த அக்கிரமத்தைப் பாத்துகிட்டிருக்க மனசு வந்திச்சி அப்புடின்னுதான்... மத்ததெல்லாம் சட்டமா பேசுதியளே... மனுசத்தன்மை கூடவா இல்லாமப் போச்சி...

ஒங்களுக்குத் தெரியாதா... இந்த ஊருக்கு வந்ததும் ஒங்களைத்தான முதல்ல பாத்தோம். அப்ப என்ன சொன்னீக. நானாச்சி கருப்பா. பொழைக்க வந்தவுகளை நாங்க காப்பாத்துவோம்னு சொன்னீகளே. யாவுகமிருக்கா. இப்ப இப்பிடி நட்டாத்துல விட்டுட்டீக... நீங்கள்ல முத ஆளா நின்னு கேட்டிருக்கணும். ஏதாயிருந்தாலும் நீங்க அதட்டிப் பேசி சமாதானம் பண்ணியிருக்கலாம்ல.

ஒங்க பேச்சை இதுவரைக்கும் மீறியிருக்கமா... நீங்க வரச் சொன்ன நேரத்துக்கெல்லாம் வந்து எவ்வளவு பாடு பாத்துக் கொடுத்திருப்போம்... எங்க சோலியக்கூட போட்டுப்புட்டு ஒங்ககிட்ட காவல் கெடந்தோமே. உங்களுக்கு அந்த நன்றியில்லையே அண்ணாச்சி.

பெரிய மனுசன்னா சொல்ற மாதிரியில்ல நடக்கணும். துட்டு சமாச்சாரத்தில மட்டும் பைசா சுத்தமா கணக்கு பாக்கீகளே... அவுக எம்புட்டு நடை நடந்திருப்பாக... எவ்வள ஒழைப்பு ஒழைச்சிருப்பாக. அதெல்லாம் நெனச்சிப் பாத்திருந்தா இப்படி சும்மா இருந்திருப்பீகளா. ஒரு ஆளை அத்தனை தடிமாட்டுப் பசங்களும் போட்டு உதைச்சிருக்கானுகளே. அவனுக வீடு வெளங்குமா. நான் வயிறெரிஞ்சி கொடுக்கிற சாபம் சும்மா விட்டுருமா.

அண்ணாச்சி நாங்க எளிய சாதிதான். கூலி வேலை செய்ற கூட்டம்தான்... எங்கள அடிச்சாலும் கொன்னாலும் யாரும் கேக்க

வரமாட்டாங்கங்கிற தைரியம்தானே அண்ணாச்சி, அவனுகள இப்படி அடிக்கச் சொல்லியிருக்கு... நீங்களும் பேசாம இருந்திருக்கீக... என்ன வேணாலும் செய்யலாம்னா நெனச்சீங்க... எங்க பொறுமைக்கும் எல்லை உண்டு அண்ணாச்சி... இன்னக்கி நாங்க நாதியத்து இருக்கோம்... இப்படியே காலம் பூரா இருந்திரமாட்டோம். அப்பங்கூட இப்படி மிருகத்தனமா நடக்க மாட்டோம். கொஞ்சங்கூட ஈவிரக்கம் இல்லாம ஒரு மனுசன அதுவும் குடிச்சிட்டு நெதானமில்லாத மனுசன இப்படி அடிக்கிறவனுக... அரக்கனுகதான்... அவனுக கட்டைல போற நாளும் வராமயா போயிரும். எஞ்சொல்லும் பலிக்காமயா போயிரும்... அவருக்கு ஏதாவது ஒண்ணு ஆயிருச்சின்னா மூணு பிள்ளைகளை வச்சிகிட்டு நான் என்ன பண்ணுவேன்?

நீங்க ஆயிரந்தான் சொல்லுங்க... எனக்கு சமானமில்ல. நீங்க இருந்தும் இப்படி ஒரு காரியம் நடக்க விட்ருக்கீகளே... பின்ன என்ன பெரிய மனுசன்னு பேரு.. ஒங்கள மல போல நம்பியிருந்தோமே... இப்படி துரோகம் பண்ணிட்டீங்களே. அப்படியே அவரு நாலு வார்த்தை தப்பா பேசிட்டாதான் என்ன... நாயா ஓடி செருப்பா தேஞ்சிருக்காரே... கொஞ்சம் பொறுத்துக்கக் கூடாதா.

அதுக்காக இப்படி வங்கொடுமையா... ஒங்க சம்மதமில்லாம இங்க ஒரு பய அவரு மேல கையை வச்சிருப்பானா. எப்படியும் அவரைக் கொன்னுறலாம்னு பாத்துட்டீக... கொல்லுங்க... என்னய எம்பிள்ளைகள எல்லோரையும் கொல்லுங்க.

ரத்தவெறி பிடிச்சவனுகளா... நீங்க நல்லாருக்க மாட்டீக... புழு வச்சி சாவீங்கடா... எங்க ரத்தத்தையெல்லாம் உறிஞ்சிகிட்டு எங்கள இக்கதிக்கு ஆக்குன நீங்க உருப்படுவீகளா... ஒங்க வீட்ல தீப்பிடிக்க... ஒங்க கையில புத்து மொளக்கெ... ஒங்க வீடு வெளங்காமப் போக... ஒங்க கை காலு வெளங்காம போக... எஞ்சாபம் ஒங்களச் சும்மா விடாதுடா... நான் தூத்துன மண்ணு ஒங்க நெஞ்ச அடைக்குமுடா...

ஏலேய்... அவருக்கு ஏதாவது ஒண்ணு ஆச்சின்னா ஒங்கள நான் சும்மா விடமாட்டேன்டா... சும்மா விடமாட்டேன்.